

# தாகமாயிருக்கிறேன்...

திருப்பாடுகளின் புனித வார வழிபாட்டுக் கையேடு





கலப்பை ஊடகப் பணியகம்

அருட்தந்தை தே. செல்வரத்தினம்



கலப்பை
ஊடகப்பணியகம்
தென்மண்டலம், தூத்துக்குடி மறைமாவட்டம்



ஆயர் திருநிலைப்பாட்டுப் பணிவாழ்வில் நான்காம் ஆண்டில்
அடியெடுத்து வைக்கும் தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர்

**மேதகு அ. ஸ்டீபன் ஆண்டகை**

அவர்களுக்கு உரித்தாக்குகின்றோம்



5



6



7



8



4





9



3



10



2



11



1



14



13



12

# தாகமாயிருக்கிறேன்...



திருப்பாடுகளின் புனித வார வழிபாட்டுக் கையேடு

கலப்பை
ஊடகப் பணியகம்
தென்மண்டலம், தூத்துக்குடி மறைமாவட்டம்

## நூல் விபரம்

| | | |
|---|---|---|
| **நூல்** | : | **தாகமாயிருக்கிறேன்** |
| **நூல் வகை** | : | ஆன்மீகம் (புனித வார வழிபாட்டுக் கையேடு) |
| **தொகுப்பாசிரியர்** | : | **அருட்தந்தை தே. செல்வரத்தினம்** |
| **வெளியீடு** | : | கலப்பை ஊடகப் பணியகம் |
| **படிகள்** | : | 2000 |
| **பக்கம்** | : | 296 |
| **வடிவமைப்பு** | : | கலப்பை ஊடகப் பணியகம் |
| **அச்சிட்டோர்** | : | சாலமோன் கிராஃபிக்ஸ், சிவகாசி |
| **உரிமை** | : | **அருட்தந்தை தே. செல்வரத்தினம்**<br>செயலர், கலப்பை ஊடகப் பணியகம் |
| **ஆசியுரை** | : | **மேதகு ஆயர் அ. ஸ்டீபன்** |
| **விலை** | : | **ரூ.100/-** |
| **தொடர்புக்கு** | : | **அருட்தந்தை தே. செல்வரத்தினம்**<br>செயலர், கலப்பை ஊடகப் பணியகம்<br>தென் மண்டலம், தூத்துக்குடி மறைமாவட்டம்.<br>புனித லூசியா திருத்தலம், அணைக்கரை<br>திருநெல்வேலி மாவட்டம் - 627 654<br>+ 91 75 48 89 11 56, + 91 63 79 71 07 09 |

கலப்பை
ஊடகப் பணியகம்
தென்மண்டலம், தூத்துக்குடி மறைமாவட்டம்

**மேதகு ஆயர் அ. ஸ்டீபன்**
**தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர்**
**ஆயர் இல்லம், 82 கிரேட் காட்டன் சாலை**
**தூத்துக்குடி 628 001**

# ஆயரின் ஆசியுரை

**எனதருமை இறைச் சொந்தங்களே!**

'ஆண்டவரே தேவரீர் வருமளவும் உமது இறப்பை அறிக்கையிடுகிறோம் உமது உயிர்ப்பையும் எடுத்துரைக்கின்றோம்' என்பது ஒவ்வொரு நாளும் திருப்பலியில் நாம் அறிக்கையிடுகின்ற நம்பிக்கைக் கூற்று. திருப்பலிக் கொண்டாட்டத்தின் உன்னதம் இதுவே. இந்த நம்பிக்கையை உயிரோட்டமுள்ளதாக்க, வேரோட்டம் உள்ளதாக உருவாக்கிக் கொள்ள திருப்பலிக் கையேடு தேவைப்படுகிறது. திருவழிபாடு கிறித்தவ வாழ்வில் முதன்மை பெறுகிறது. குறிப்பாக, இயேசுவின் இறப்பு – உயிர்ப்பு மறை உண்மைகளை எடுத்தியம்பும் இறையருளின் காலமாகிய இக்காலத்தில், நாம் கடந்து வந்த பாதையை கவனத்தோடு திரும்பிப் பார்க்கவும், கிறித்துவின் பாடுகளில் உள்ளத்தால் ஒன்றிக்கவும், உணர்வுபெற்ற பிள்ளைகளாய் உயிர்த்த ஆண்டவரைக் கண்டு கொள்ளவும் இந்நூல் மிகவும் பயனளிப்பதாக அமையும் என்பது திண்ணம். 'தொடக்கமுதல் இருந்த வாழ்வளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம்; கண்ணால் கண்டோம்; உற்று நோக்கினோம்; கையால் தொட்டுணர்ந்தோம். வெளிப்படுத்தப்பட்ட அந்த வாழ்வை நாங்கள் கண்டோம். அதற்குச் சான்று பகர்கிறோம்' (1 யோவான் 1:1,2) என்ற திருத்தூதர் யோவானின் சொற்களின்படி, அவர் குரலைக் கேட்க, அவர் உருவைக் காண, அவரை உற்று நோக்க, அவரைத் தொட்டு உணர, அவராகவே வாழ **தாகமாயிருக்கிறேன்** என்னும் இந்நூல் உதவி செய்யும் என்பதே எனது ஆழ்ந்த நம்பிக்கை.

இந்நூலைக் கருத்தாங்கி உருக்கொடுத்திருக்கும் தூத்துக்குடி தென்மண்டலத்தில் ஆர்வத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் **கலப்பை** கலைத்தொடர்பகத்தின் பணியை மிகவே பாராட்டுகிறேன். இவ்வருள் பணியகத்தின் இயக்குநர் **அருட்தந்தை தே. செல்வரத்தினம்** அவர்களையும் உளமாரப் பாராட்டுகிறேன். தென்மண்டலத்தில் பிறப்பெடுத்திருக்கும் இக்குழந்தை தமிழகத் திருஅவையின் கரங்களில் தவழவிருக்கின்றது என்பதை எண்ணி இறும்பூது அடைகின்றது என் நெஞ்சம்.

**அன்புடன் ஆசீரளிக்கும்**

+ Stephen

**மேதகு ஆயர் அ. ஸ்டீபன்**

அருட்தந்தை. தே.செல்வரத்தினம்

செயலர், கலப்பை ஊடகப் பணிக்குழு
மாதா தொலைக்காட்சி , தென் மண்டலம்
தூத்துக்குடி மறைமாவட்டம்

+ 91 63 79 71 07 09 www.thekalappaimedia.com + 91 75 48 89 11 56

24.02.2022

**இறை இயேசுவில் இனியவர்களே!**

கலப்பை ஊடகப் பணியகம் சார்பாக உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் வாழ்த்துகள். **தாகமாயிருக்கிறேன்** என்ற தலைப்பைத் தாங்கியுள்ள புனித வார திருவழிபாட்டுக் கையேட்டின் வழியாக மீண்டும் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

திருவழிபாட்டுக் காலத்தின் தவக்காலத்தில் அடியெடுத்து வைக்கிறோம். தவக்காலம் என்பது அருளின் காலமாக கத்தோலிக்க நம்பிக்கையில் சிறப்பிக்கப்படுகின்றது. இது கத்தோலிக்கராகிய நாம் அனைவரும் அறிந்து ஏற்றுக்கொள்கின்ற மறை உண்மையாகவும் இருக்கின்றது. மனமாற்றத்தின் வழியாக கடவுளின் அருளைப் பெறமுடியும் என்பது இயேசு காட்டுகின்ற வழிநின்று (மாற்கு 1:15) திரு அவை நமக்கு கற்றுக் கொடுக்கும் படிப்பினை.

மனமாற்றம் என்பது வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒருவர் பின்பற்ற வேண்டியிருப்பதாயினும், ஏன் தவக்காலத்தில் மட்டும் ஒருவருடைய மனமாற்றத்திற்கு சிறப்பிடம் கொடுக்கின்றோம் என்பதன் உண்மையை நாம் தெரிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். தவக்காலம் இயேசுவின் பாடுகளைப் பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்பைக் கொடுக்கின்றது. இயேசுவின் பாடுகளோடு நம்முடைய பாவங்களையும் இணைத்து சிந்திக்கின்றோம். மாந்த குலத்தின் பாவங்களுக்காக இறைமகன் இயேசு பாடுகளைச் சந்தித்தார். எனவே 'இயேசு என்னுடைய பாவங்களை கழுவுவதற்காக இரத்தம் சிந்தினார். நான் எவ்வாறு இயேசுவின் விலை மதிப்பில்லாத இரத்தத்தை எனக்கு ஆதாயமாக்கிக் கொள்கிறேன்' என்ற சிந்தனையை இந்த தவக்காலத்தில் உள்வாங்குகிறோம். இயேசுவின் பாடுகளை ஆதாயமாக்கி கொள்ளவேண்டும் என்ற முனைப்போடு முயற்சி செய்யும் பொழுது மனம் மாறிய வாழ்க்கை வாழ தொடங்குகிறோம்.

இறைவேண்டல் செய்தல், உதவி செய்தல், ஒறுத்தலில் ஈடுபடுதல் வழியாக நம் உறவு வாழ்வில் ஒரு மாற்றத்தைக் காணமுடியும் என்ற வழியையும் தவக்காலம் நமக்கு சுட்டிக்காட்டுகின்றது. நம்முடைய பலவீனங்களினால், பாவங்களினால் நாம் கடவுளோடு கொண்டுள்ள

உறவிலும் (இறைவேண்டல்) பிறரோடு கொண்டுள்ள உறவிலும் (உதவி), நம்மோடு கொண்டுள்ள உறவிலும் (ஒறுத்தல்) சந்தித்த இழப்புகள் ஏராளம். அத்தகைய இழப்புகளுக்கு காரணமான நம்முடைய பாவங்களையும். உலகின் பாவங்களைப் போக்குகின்ற இயேசுவின் பாடுகளையும் முன்னிருத்தி சிந்திக்கின்றோம். இழந்தவைகளைத் திரும்பப் பெறுகிறோம். இயேசு கிறித்து வழியாக கடவுள் வழங்கும் அருள் நம்முள் குடிகொள்கிறது. தவக்காலம் அருளின் காலமாக பிறப்பெடுக்கிறது.

தவக்காலத்தின் வழிபாடுகளுக்கு சிறப்பிடம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள **தாகமாயிருக்கிறேன்** புனித வார வழிபாட்டுக் கையேடு உங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். வாசித்து பயன்பெறுங்கள்.

இந்த நூல் உருவாக்க உதவியாக இருந்த நண்பர் குருக்களுக்கும் அச்சுப்பணியில் உதவியாக இருந்த பணியாளர்களுக்கும் உளங்கனிந்த நன்றி.

## படைப்பு வழி உதவியவர்கள்

அருட்தந்தை தேவராஜன், அருட்தந்தை ஜெபநாதன்
அருட்தந்தை மைக்கிள் செகதீசு, அருட்தந்தை ஆரோக்கியராஜ்
அருட்தந்தை ஜெகன், அருட்தந்தை சகாயராஜ் வல்தாரிஸ்
அருட்தந்தை டைட்டசு மோகன், அருட்தந்தை தாமஸ் ரோஜர்
அருட்தந்தை அருள் பிரபாகர், அருட்தந்தை ஜோசப் ஸ்டார்லின்
அருட்தந்தை சேசுராஜ், அருட்தந்தை அற்புத சேவியர்

## தொகுப்பதற்கு உதவியவர்கள்

அருட்தந்தை சவரிராஜ் பி.சா. திருத்தொண்டர் ஜோதி மணி
சோனியா, மெர்சியா, விஜயரத்தினம், லெஸ்லின், சிசிலி

## அச்சுப் பணியில் உதவியவர்கள்

தட்டச்சு : திருமதி ஆக்னஸ், திருமதி சத்யா
வடிவமைப்பு : அருட்தந்தை தே. செல்வரத்தினம்
திருத்தம் : திரு. வளன் அரசு அச்சு : திரு. அருள் ஃபெலிக்ஸ்

**தவக்காலம் அருளின் காலமாக அமைய உங்களுக்காக வேண்டுகிறேன்.**

**அருட்தந்தை தே. செல்வரத்தினம்**
செயலர், கலப்பை ஊடகப் பணிக்குழு
தென் மண்டலம், தூத்துக்குடி மறைமாவட்டம்.

# பொருளடக்கம்

1. ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு ............ 007

2. ஆண்டவரின் இறுதி உணவு விழா – புனித வியாழன்.... 052

3. ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி ...................... 074

4. ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு ............ 106

5. சிலுவைப் பாதையில் பங்கேற்கும் முறை .................... 152

6. சிலுவைப் பாதைப் பாடல்கள் ................................ 154

7. சிலுவைப் பாதை ................................................

1. இணைந்து பயணிக்கும் வாழ்வின் பாதை ................. 159

அருட்தந்தை ஆரோக்கியராஜ்

2. நம் முன்னேற்றத்தின் பாதை – சிலுவைப் பாதை ........... 176

அருட்தந்தை மைக்கிள் செகதீசு

3. மீட்பின் சிகரம் – சிலுவைப் பாதை ........................... 191

அருட்தந்தை ஏ. தேவராஜன்

4. மழலை மொழியில் – சிலுவைப் பாதை ..................... 207

அருட்தந்தை சேசுராஜ்

5. இளைஞர்களின் பாதையில் சிலுவைப் பாடுகள் ........... 222

அருட்தந்தை ஜெபநாதன்

6. புது வாழ்வின் பாதை – சிலுவைப் பாதை .................. 238

அருட்தந்தை அற்புத சேவியர்

7. உண்மையின் உர்வலம் – சிலுவைப் பாதை ............... 253

அருட்தந்தை ஜெகன்

8. வாருங்கள் நாமும் செல்வோம் – சிலுவைப் பாதை ........ 268

அருட்தந்தை டைட்டசு மோகன்

9. குடும்ப உறவை வளப்படுத்தும் சிலுவைப் பாதை .......... 282

அருட்தந்தை சகாயராஜ் வல்தாரிஸ்

# 1. ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு



1. குருத்தோலை மந்திரிப்பு
2. குருத்தோலைப் பவனி
3. இறைவாக்கு வழிபாடு
4. நற்கருணை வழிபாடு

**01.** கிறிஸ்து ஆண்டவர் தமது பாஸ்கா மறைநிகழ்வை நிறைவு செய்ய எருசலேமுக்குள் நுழைந்ததைத் திரு அவை இன்று நினைவுகூருகின்றது. எனவே, ஆண்டவரின் இத்தகைய நுழைவு எல்லாத் திருப்பலிகளிலும் நினைவுகூரப்படும். முக்கிய திருப்பலிக்குமுன் பவனி அல்லது சிறப்பான வருகைச் சடங்கினாலும், மற்றத் திருப்பலிகளுக்குமுன் சாதாரண வருகைச் சடங்கினாலும் இது கொண்டாடப்படும். மக்கள் பெருமளவில் பங்கேற்கும் ஒரிரு திருப்பலிகளுக்கு முன்னும் பவனி இன்றிச் சிறப்பான வருகை வழிபாட்டை நடத்தலாம்.

பவனியோ சிறப்பான வருகையோ நடைபெறாத இடங்களில் அங்கு மெசியாவின் வருகை, ஆண்டவரின் பாடுகள் ஆகியவை பற்றிய இறைவார்த்தை வழிபாட்டையும் சனிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமை மாலைத்திருப்புகழையும் நேரத்திற்கு ஏற்றவாறு கொண்டாடுவது விரும்பத்தக்கது.

## எருசலேமுக்குள் ஆண்டவரின் நுழைவை நினைவுகூர்தல்

### முதல் வகை : பவனி

**02.** பொருத்தமான நேரத்தில் மக்கள் கோவிலுக்கு வெளியே ஒரு சிற்றாலயத்தில் அல்லது தகுந்த இடத்தில் கூடுவார்கள். வெளியிலிருந்து கோவிலை நோக்கிப் பவனி செல்லும் நம்பிக்கையாளர் தம் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்திருப்பர்.

**03.** அருள்பணியாளரும் திருத்தொண்டரும் திருப்பலிக்கான சிவப்பு நிறத் திருவுடையை அணிந்து மற்றப் பணியாளர்கள் புடைசூழ மக்கள் கூடியுள்ள இடத்துக்கு வருவர். அருள்பணியாளர் திருப்பலி உடைக்குப் பதிலாக "திருப்போர்வை" அணியலாம். பவனி முடிந்தவுடன் அதைக் கழற்றிவிட்டுத் திருப்பலி உடையை அணிந்துகொள்வார்.

### பொது முன்னுரை

எருசலேம் நகரப் பெரியோர்கள் போர்வைகளையும், துணிகளையும் தரையில் விரித்து தங்களின் கைகளில் குருத்து ஓலைகளையும் ஒலிவக் கிளைகளையும் உயர்த்திப் பிடிக்கிறார்கள். எபியேரயக் குழந்தைகள் தங்களின் கைகளில் ஒலிவக் கிளைகளை ஏந்தி "தாவீதின் மகனுக்கு ஓசன்னா" என்றும் பாடுகிறார்கள். சீடர்கள் மற்றும் நம்பிக்கை கொண்டோர் புடைசூழ கழுதையின் மீது ஏறி இயேசு வெற்றி வீரராய் எருசலேம் நகருக்குள் நுழைகிறார். இம்மாபெரும் வரலாற்று நிகழ்வை இன்றைய நாளில் நாம் நினைவுகூர்ந்து கொண்டாடுகிறோம்.

அடிமைச் சமூகமான இஸ்ரயேல் மக்கள் அனைவரின் உள்ளத்திலும் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. தங்களை அடிமைப்படுத்தியிருக்கும் உரோமைப் பேரரசை வீழ்த்துவதற்கும், தங்களை அடிமைப்படுத்துவோருக்குத் துணைபுரியும் இனத் துரோகிகளை அழித்து வீழ்த்துவதற்கும் தாவீதைப் போன்ற ஒரு மெசியா தோன்றுவார் என்பதுதான் அந்த எதிர்பார்ப்பு. எதிர்நோக்கியிருக்கும் பாஸ்கா விழாவில் அவர்களுடைய எதிர்பார்ப்பு நிறைவேறும் என்று நம்பினர். எனவே தான் இந்த வெற்றி ஆர்ப்பரிப்பு. போர்வைகளை விரித்து வரவேற்றது, ஒலிவக் கிளைகள் அல்லது குருத்து ஓலைகளை கைகளில் ஏந்தியது, தாவீதின் மகனுக்கு ஓசான்னா என்று பாடியது, கழுதையின் மீது இயேசுவின் பவனி அத்தனையும் அரசியல் மெசியாவுக்கான எதிர்பார்ப்பின் அடையாளங்கள்தான். ஆனால் இயேசு தன்னை துன்புறும் மெசியாவாக அடையாப்படுத்துகிறார். எனவேதான் இன்று நாம் வாசிக்க இருக்கும் முதல் வாசகம் துன்புறும் ஊழியனைக் குறித்தும், என் இறைவா ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர் என்று பாடும் திருப்பாடல் ஆழ்துயரில் இருக்கும் நம்பிக்கையாளரின் உள்ளக் குமுறலையும், நற்செய்தியாக இயேசுவின் பாடுகளின் வரலாறும் கொடுக்கப்பட்டுள்ளன.

வரலாற்றில் நிகழ்ந்த மாற்றமெல்லாம் மக்கள் புரட்சியால் விளைந்தது. தன் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பு ஆகியவற்றின் மூலம் இயேசு மக்களின் மனதில் புதிய புரட்சி விதையை விதைக்கிறார். இன்று நாம் நமது கைகளில்

ஏந்த இருக்கும் குருத்தோலை நாம் இறையரசின் புரட்சி விதைகள் என்பதை நமக்கு நினைவுபடுத்துகின்றது. இச்சமூகத்தின் தீய நீரோட்டத்திலிருந்து எதிர்நீச்சலடித்து இயேசு காட்டிய புரட்சி வழியில் நடப்போம். இறையரசை இம்மண்ணில் மலரச் செய்வோம்.

**04.** இதற்கிடையில் கீழ்க்கண்ட பல்லவி அல்லது மற்றொரு பொருத்தமான பாடல் பாடப்படும்.

**பல்லவி - மத்தேயு 21:9**

தாவிதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால்
வருகிறவர் ஆசி பெற்றவரே! இஸ்ரயேலின் அரசரே,
உன்னதங்களிலே ஓசன்னா! உன்னதங்களிலே ஓசன்னா!

**05.** பின்னர் அருள் பணியாளரும் நம்பிக்கையாளரும் சிலுவை அடையாளம் வரையும் பொழுது, அருள்பணியாளர் "தந்தை, மகன்,தூய ஆவியாரின் பெயராலே" என சொல்கின்றார். பின்னர் அருள்பணியாளர் வழக்கம் போல மக்களை வாழ்த்துகின்ற இந்நாள் கொண்டாட்டத்தை அனைவரும் அறிந்து, அதில் ஈடுபாட்டுடன் பங்கெடுக்க இவ்வார்த்தைகளால் சிற்றுரையாக நம்பிக்கையாளருக்கு அழைப்பு விடுக்கின்றார்.

***அன்புமிக்க சகோதர சகோதரிகளே...***

தவக் காலத் தொடக்கத்திலிருந்தே, தவ முயற்சிகளாலும் பிறர் அன்புப் பணிகளாலும் நம் இதயங்களைத் தயாரித்தபின் இன்று நாம் ஒன்று கூடியுள்ளோம். இதனால் நம் ஆண்டவருடைய பாஸ்கா மறைநிகழ்வை, அதாவது ஆண்டவருடைய திருப்பாடுகளையும் உயிர்ப்பையும் உலகளாவிய திரு அவையோடு சேர்ந்து அறிவிக்கின்றோம். இப்பாஸ்கா மறைநிகழ்வை நிறைவேற்றவே அவர் தம் நகரான எருசலேமுக்குள் நுழைந்தார். எனவே மீட்பு அளிக்கும் இந்த நுழைவை நாம் முழு நம்பிக்கையுடனும் இறைப்பற்றுடனும் நினைவில் கொண்டு, ஆண்டவரைப் பின்செல்வோம். அவருடைய அருளினால் சிலுவையின் பங்கேற்பாளர்களாக மாறி, அவருடைய உயிர்ப்பிலும் வாழ்விலும் நாம் பங்குபெறுவோமாக.

## 01 குருத்தோலை மந்திரிப்பு

**06.** சிற்றுரைக்குப் பின் அருள் பணியாளர் தம் கைகளை விரித்து, கீழுள்ள மன்றாட்டுகளுள் ஒன்றைச் சொல்கின்றார்:

***மன்றாடுவோமாக***

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, இக்குருத்தோலைகளை உமது ஆசியால் புனிதப்படுத்தியருளும் அதனால் கிறிஸ்து அரசரை அக்களிப்புடன் பின்பற்றும் நாங்கள் அவர் வழியாக நிலையான எருசலேமுக்குள் வந்து சேர ஆற்றல் பெறுவோமாக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**பதில் :** ஆமென்.

**அல்லது**

**மன்றாடுவோமாக**

இறைவா, உம்மை எதிர்நோக்கியிருப்போரின் நம்பிக்கையை வளர்த்து உம்மை வேண்டுவோரின் மன்றாட்டுகளைக் கனிவுடன் கேட்டருளும் அதனால் வெற்றி வீரரான கிறிஸ்துவின் திருமுன் இன்று குருத்தோலைகளை ஏந்தி வருகின்ற நாங்கள் அவர் வழியாக நற்செயல்களின் பயன்களை உமக்கு அளிப்போமாக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**பதில் :** ஆமென்.

**அருள்பணியாளர் அமைதியாகக் குருத்தோலைகள் மீது புனித நீரைத் தெளிக்கின்றார்.**

**07.** ஆண்டவரின் நுழைவு பற்றிய நற்செய்தியை நான்கு நற்செய்திகளுள் ஒன்றிலிருந்து திருத்தொண்டரோ, அவர் இல்லையெனில் அருள்பணியாளரோ பறைசாற்றுகின்றார். தேவைக்கு ஏற்பத் தூபம் பயன்படுத்தப்படலாம்.

**முதல் ஆண்டு**

**மத்தேயு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 21:1-11**

இயேசு தம் சீடரோடு எருசலேமை நெருங்கிச் சென்று ஒலிவ மலை அருகிலிருந்த பெத்பகு என்னும் ஊரை அடைந்தபோது இரு சீடர்களை அனுப்பி,"நீங்கள் உங்களுக்கு எதிரே இருக்கும் ஊருக்குள் செல்லுங்கள். சென்ற உடனே அங்கே கட்டிவைக்கப்பட்டிருக்கிற ஒரு கழுதையையும், அதனோடு ஒரு குட்டியையும் காண்பீர்கள். அவற்றை அவிழ்த்து என்னிடம் கொண்டு வாருங்கள். யாராவது உங்களிடம் ஏதேனும் சொன்னால், 'இவை ஆண்டவருக்குத் தேவை' எனச் சொல்லுங்கள். உடனே அவர் அவற்றை அனுப்பிவிடுவார்" என்றார். "மகள் சீயோனிடம் சொல்லுங்கள்: இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார் அவர் எளிமையுள்ளவர்; கழுதையின்மேல் ஏறி வருகிறார்; கழுதைக்குட்டியின்மேல் அமர்ந்து வருகிறார்" என்று இறைவாக்கு உரைத்தது நிறைவேற இவ்வாறு நிகழ்ந்தது. சீடர்கள் போய் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே செய்தார்கள். அவர்கள் கழுதையையும் குட்டியையும் ஓட்டிக் கொண்டுவந்து, அவற்றின்மேல் தங்கள் மேலுடைகளைப் போட்டு, இயேசுவை அமரச் செய்தார்கள். பெருந்திரளான மக்கள் தங்கள் மேலுடைகளை வழியில் விரித்தார்கள். வேறு சிலர் மரங்களிலிருந்து கிளைகளை வெட்டி வழியில் பரப்பினர். அவருக்கு முன்னேயும் பின்னேயும் சென்ற கூட்டத்தினர், "தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசி பெற்றவர்! உன்னதத்தில் ஓசன்னா!" என்று சொல்லி ஆர்ப்பரித்தனர். அவர் எருசலேமுக்குள் சென்றபோது நகரம் முழுவதும் பரபரப்படைய, "இவர் யார்?" என்னும் கேள்வி எழுந்தது. அதற்குக் கூட்டத்தினர்,"இவர் இறைவாக்கினர் இயேசு; கலிலேயாவிலுள்ள நாசரேத்தைச் சேர்ந்தவர்" என்று பதிலளித்தனர். ஆண்டவரின் அருள்வாக்கு.

### இரண்டாம் ஆண்டு

**மாற்கு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 11:1-10**

இயேசு தம் சீடரோடு ஒலிவ மலை அருகிலுள்ள பெத்பகு, பெத்தானியா என்னும் ஊர்களுக்கு வந்து, எருசலேமை நெருங்கியபொழுது இரு சீடர்களை அனுப்பி, "உங்களுக்கு எதிரே இருக்கும் ஊருக்குள் போங்கள்; அதில் நுழைந்தவுடன், இதுவரை யாரும் அமராத ஒரு கழுதைக்குட்டி கட்டிவைக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள். யாராவது உங்களிடம், 'ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?' என்று கேட்டால், 'இது ஆண்டவருக்குத் தேவை, இதை அவர் உடனே திருப்பி இங்கு அனுப்பி விடுவார்' எனச் சொல்லுங்கள்" என்றார். அவர்கள் சென்று ஒரு வீட்டு வாயிலுக்கு வெளியே, தெருவில் ஒரு கழுதைக்குட்டியைக் கட்டிவைத்திருப்பதைக் கண்டு, அதை அவிழ்த்துக் கொண்டிருக்கையில், அங்கே நின்றுகொண்டிருந்த சிலர் அவர்களிடம், "என்ன செய்கிறீர்கள்? கழுதைக் குட்டியையா அவிழ்க்கிறீர்கள்?" என்று கேட்டனர். அவர்கள் இயேசு தங்களுக்குக் கூறியபடியே சொல்ல, அங்கு நின்றவர்களும் போகவிட்டனர். பிறகு அக்கழுதைக்குட்டியை இயேசுவிடம் கொண்டுவந்து, அதன்மேல் தங்கள் மேலுடைகளைப் போட, அவர் அதன் மீது அமர்ந்தார். பலர் தங்கள் மேலுடைகளையும், வேறு சிலர் வயல்வெளிகளில் வெட்டிய இலை தழைகளையும் வழியில் பரப்பினர். முன்னேயும் பின்னேயும் சென்றவர்கள், "ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் ஆசி பெற்றவர்! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு ஆசி பெற்றதே! உன்னதத்தில் ஓசன்னா!" என்று ஆர்ப்பரித்தனர். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**அல்லது**

**யோவான் எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 12:12-16**

அக்காலத்தில், திருவிழாவுக்குப் பெருந்திரளாய் வந்திருந்த மக்கள் இயேசு எருசலேமுக்கு வருகிறார் என்று கேள்வியுற்று, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு எதிர்கொண்டுபோய், "ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவரும் இஸ்ரயேலின் அரசருமானவரும் ஆசி பெற்றவர்!" என்று சொல்லி ஆர்ப்பரித்தனர். இயேசு ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதன்மேல் ஏறி அமர்ந்தார். "மகளே சீயோன், அஞ்சாதே! இதோ உன் அரசர் வருகிறார்; கழுதைக் குட்டியின்மேல் ஏறி வருகிறார்" என்று மறைநூலில் எழுதியுள்ளதற்கேற்ப அவர் இவ்வாறு செய்தார். அந்நேரத்தில் அவருடைய சீடர்கள் இச்செயல்களின் பொருளைப் புரிந்து கொள்ளவில்லை. அவரைப் பற்றி மறைநூலில் எழுதப்பட்டிருந்தவாறே இவையனைத்தும் நிகழ்ந்தன என்பது இயேசு மாட்சி பெற்ற பிறகே அவர்கள் நினைவுக்கு வந்தது.

**ஆண்டவரின் அருள்வாக்கு.**

### மூன்றாம் ஆண்டு

**லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 19:28-40**

அக்காலத்தில் இயேசு முன்பாகவே எருசலேமுக்குப் புறப்பட்டுச் சென்றார். ஒலிவம் என வழங்கப்படும் மலை அருகிலுள்ள பெத்பகு,

பெத்தானியா என்ற ஊர்களை அவர் நெருங்கி வந்தபோது இரு சீடர்களை அனுப்பினார். அப்போது அவர் அவர்களிடம், "எதிரே இருக்கும் ஊருக்குள் போங்கள்; அதில் நுழைந்ததும், இதுவரை யாரும் அமராத ஒரு கழுதைக்குட்டி கட்டி வைக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள். யாராவது உங்களிடம், 'ஏன் அவிழ்க்கிறீர்கள்?' என்று கேட்டால், 'இது ஆண்டவருக்குத் தேவை' எனச் சொல்லுங்கள்" என்றார். அனுப்பப்பட்டவர்கள் சென்று அவர் தங்களுக்குச் சொன்னவாறே இருக்கக் கண்டார்கள். அவர்கள் அதை அவிழ்த்துக் கொண்டிருந்தபோது கழுதையின் உரிமையாளர்கள்,"கழுதையை ஏன் அவிழ்க்கிறீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள்,"இது ஆண்டவருக்குத் தேவை" என்றார்கள். பின்பு அதை இயேசுவிடம் ஓட்டி வந்தார்கள்; அக்கழுதையின்மேல் தங்கள் மேலுடைகளைப் போட்டு, இயேசுவை அதன்மேல் ஏறச் செய்தார்கள். அவர் போய்க் கொண்டிருந்தபோது அவர்கள் தங்கள் மேலுடைகளை வழியில் விரித்துக்கொண்டே சென்றார்கள். இயேசு ஒலிவ மலைச் சரிவை நெருங்கினார். அப்போது திரண்டிருந்த சீடர் அனைவரும் தாங்கள் கண்ட அனைத்து வகை செயல்களுக்காகவும் உரத்த குரலில் மகிழ்ச்சியோடு கடவுளைப் புகழத் தொடங்கினர்:

"ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் ஆசி பெற்றவர்!
விண்ணகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக!" என்றனர்.

அப்போது கூட்டத்தில் இருந்த பரிசேயர்களுள் சிலர் அவரை நோக்கி,"போதகரே, உம் சீடர்களைக் கடிந்துகொள்ளும்" என்றனர். அதற்கு அவர் மறுமொழியாக,"இவர்கள் பேசாதிருந்தால் கற்களே கத்தும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**08.** நற்செய்திக்குப்பின் சுருக்கமான மறையுரை ஆற்றலாம். பவனியைத் தொடங்க அருள்பணியாளர் அல்லது திருத்தொண்டர் அல்லது பொதுநிலைப் பணியாளர் கீழுள்ளவாறு அல்லது இவை போன்ற வார்த்தைகளால் அழைப்பு விடுக்கின்றார்:

## 02 குருத்தோலைப் பவனி

### குருத்தோலைப் பவனி முன்னுரை

இவ்வுலகில் வாழும் மனிதர்களாகிய நாம் அனைவருமே பயணிகள். ஒரு இடத்தில் நம் பயணத்தைத் தொடங்கி பல இடங்களில் தொடர்ந்து பயணித்து, மீண்டும் தொடங்கிய இடத்திலே இப்பயணத்தை நிறைவு செய்கிறோம். இது வாழ்வின் பயணம். கல்வி, வேலை, உழைப்பு, பொழுதுபோக்கு, பக்தி முயற்சி, இலவசங்கள் பெற என வாழ்வுக்கான பயணமும் ஏராளம். அரசியல் அதிகாரத்தைப் பெற வெற்று வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் வீசி, போலியாகக் கைகளைக் கூப்பி நம்மை அடிமைப்படுத்த வரும் அரசியல் பயணங்கள் இன்றைய எதார்த்தம். இன்று நாம் செல்ல இருக்கும் பயணம் ஒரு நினைவு பயணம். தன் வாழ்வை நமக்காக இழந்து, நமக்கு வாழ்வு கொடுத்த இறைமகன் இயேசுவின் பாடுகளின் பயணத்தை நினைவு கூர்ந்து பயணம் செய்ய இருக்கிறோம்.

இறைத்தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற தன்னை முற்றிலும் தாழ்த்திய இறைமகன் இயேசுவைப் போல் உயர்ந்த இலட்சியம் கொண்டு நம்மைத் தாழ்த்தி இறையரசை இம்மண்ணில் மலரச் செய்ய நாம் பயணம் மேறகொள்ள இருக்கிறோம். எனவே வீண் பேச்சுகளுக்கு இடம் கொடாமல் நானும் இறையரசின் கருவி என்னும் நம்பிக்கையோடு இப்பவனியில் கலந்து கொள்வோம்.

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவைப் புகழ்ந்து, ஆர்ப்பரித்த மக்கள் திரளைப் போன்று நாமும் புறப்படுவோம்.

அனைவரும் பதிலுரைக்கின்றனர்: கிறிஸ்துவின் பெயரால் ஆமென்.

**09.** திருப்பலி கொண்டாடப்படும் கோவிலை நோக்கிப் பவனி தொடங்குகின்றது. தூபம் பயன்படுத்தினால் புகையும் கலத்துடன் தூபப் பணியாளர் முன்செல்ல, எரியும் திரிகளைத் தாங்கும் இரு பணியாளர்களிடையே அந்தந்த இடத்தின் வழக்கத்துக்கு ஏற்பக் குருத்தோலைகளால் அணிசெய்யப்பட்ட சிலுவையைத் தாங்கிய பீடத் துணைவரோ பிற பணியாளரோ முன் செல்கின்றனர். அவர்களை அடுத்து நற்செய்தி வாசக நூலைத் தாங்கிய திருத்தொண்டர், பிற பணியாளர்கள், அருள்பணியாளர் ஆகியோருக்குப்பின் குருத்தோலை ஏந்திய நம்பிக்கையாளர் அனைவரும் பின்தொடர்கின்றனர்.

பவனியின்போது, பாடகர் குழுவும் மக்களும் கீழ்க்கண்ட அல்லது கிறிஸ்து அரசரைப் புகழ்ந்தேத்தும் வேறு பொருத்தமான பாடல்களைப் பாடுகின்றனர்.

### பல்லவி 1

எபிரேயர்களின் சிறுவர் குழாம் ஒலிவக்கிளைகளைப்
பிடித்தவராய் உன்னதங்களிலே
ஓசன்னா என்று முழங்கி ஆர்ப்பரித்து
ஆண்டவரை எதிர் கொண்டனரே.

தேவைக்கு ஏற்ப, இப்பல்லவியைத் திருப்பாடலின்
அடிகளுக்கு இடையே பாடலாம்.

### திருப்பாடல் 24

மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை;
நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்.
ஏனெனில், கடல்கள் மீது அதற்கு அடித்தளமிட்டவர் அவரே;
ஆறுகள் மீது அதை நிலைநாட்டினவரும் அவரே. **பல்லவி**

ஆண்டவரது மலையில் ஏறக் கூடியவர் யார்?
அவரது திருத்தலத்தில் நிற்கக்கூடியவர் யார்?

கறைபடாத கைகளும் மாசற்ற இதயமும் உடையவர்;
பொய்யானவற்றை நோக்கித் தம் ஆன்மாவை உயர்த்தாதவர்;
வஞ்சக நெஞ்சோடு ஆணையிட்டுக் கூறாதவர். **பல்லவி**

இவரே ஆண்டவரிடம் ஆசி பெறுவார்;
தம் மீட்பராம் கடவுளிடமிருந்து நேர்மையாளர் எனத் தீர்ப்புப் பெறுவார்.
அவரை நாடுவோரின் தலைமுறையினர் இவர்களே;
யாக்கோபின் கடவுளது முகத்தைத் தேடுவோர் இவர்களே. **பல்லவி**

வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்;
தொன்மைமிகு கதவுகளே, உயர்ந்து நில்லுங்கள்;
மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்.
மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?
வலிமையும் ஆற்றலும் கொண்ட ஆண்டவர் இவரே!
இவரே போரில் வல்லவரான ஆண்டவர். **பல்லவி**

வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்;
தொன்மைமிகு கதவுகளே, உயர்ந்து நில்லுங்கள்;
மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்.
மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?
படைகளின் ஆண்டவர் இவர்; மாட்சிமிகு மன்னர் இவரே. **பல்லவி**

## பல்லவி 2

எபிரேயர்களின் சிறுவர் குழாம் வழியில் மேலுடைகள்
விரித்தவராய் உன்னதங்களிலே
ஓசன்னா ஆண்டவர் பெயரால் வருகிறவர்
ஆ - - - - சி பெற்றவரே! என் று முழங்கி ஆர்ப்பரித்தார்.

**தேவைக்கு ஏற்ப, இப்பல்லவியைத் திருப்பாடலின் அடிகளுக்கு இடையே பாடலாம்.**

## திருப்பாடல் 47

மக்களினங்களே, களிப்புடன் கைகொட்டுங்கள்;
அக்களிப்புடன் கடவுளுக்குக் குரலெழுப்பி ஆர்ப்பரியுங்கள்.
ஏனெனில் உன்னதராகிய ஆண்டவர் அஞ்சுதற்கு உரியவர்;
உலகனைத்தின் மாவேந்தர் அவரே. **பல்லவி**

வேற்று மக்களை நமக்கு அடிபணியச் செய்தவர்;
அன்னிய நாடுகளை நம் தாள் பணிய வைத்தார்.
நம் உரிமைச் சொத்தை அவர் நமக்குத் தேர்ந்தளித்தார்;
அது அவர் அன்புகூரும் யாக்கோபின் மாட்சி ஆகும்.
ஆரவார ஒலியிடையே ஏறிச் செல்கின்றார் கடவுள்;
எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர். **பல்லவி**

பாடுங்கள்; கடவுளுக்குப் புகழ் பாடுங்கள்;
பாடுங்கள், நம் அரசருக்குப் புகழ் பாடுங்கள்.
ஏனெனில், கடவுளே அனைத்துலகின் வேந்தர்;
ஞானத்தோடு பாடுங்கள். **பல்லவி**

கடவுள் பிற இனத்தார்மீது ஆட்சி செய்கின்றார்;
அவர் தம் திரு அரியணையில் வீற்றிருக்கின்றார்.
மக்களினங்களின் தலைவர்கள் ஆபிரகாமின் கடவுளுடைய
மக்களோடு ஒன்றுகூடுவர்;
ஏனெனில் மண்ணுலகின் மன்னர் அனைவரும் கடவுளுக்கு உரியவர்;
கடவுளே அனைத்துக்கும் மேலானவர். **பல்லவி**

## கிறிஸ்து அரசருக்குப் பாடல்

**பா. குழு** : கிறிஸ்து அரசே!
மீட்பரே! மாட்சி, வணக்கம், புகழ் உமக்கே;
எழிலார் சிறுவர் திரள் உமக் கு
அன்புடன் பாடினர்: ஓசன்னா!

**எல்.** : கிறிஸ்து அரசே . . .
**பா. குழு** : இஸ்ரயேலின் அரசர் நீர்,
தாவீதின் புகழ்சேர் புதல்வர் நீர்
ஆ - - சி பெற்ற அரசே நீர்
ஆண்டவர் பெயரால் வருகின்றீர்.

**எல்.** : கிறிஸ்து அரசே! . ...
**பா. குழு** : வானோர் அணிகள் அத்தனையும்
உன்னதங்களிலே உமைப் புகழ்க;
அழிவுறும் மனிதரும் படைப்பனைத்தும்
யாவும் ஒன்றாய்ப் புகழ்ந்திடுமே.

**எல்.** : கிறிஸ்து அரசே! ..
**பா. குழு** : எபிரேயர்களின் மக்கள் திரள்
குருத்துகள் ஏந்தி எதிர்கொண்டார்
வேண்டலும் காணிக்கையும் பாடலும்
கொண்டு உம்மிடம் இதோ வருகின்றோம்.

**எல்.** : கிறிஸ்து அரசே! ...
**பா. குழு** : பாடுகள் படுமுன் உமக்கவர் தம்
வாழ்த்துக் கடனைச் செலுத்தினரே;
ஆட்சி செய்திடும் உமக்கின்றே
யாம் இதோ இன்னிசை எழுப்புகின்றோம்.

**எல்.** : கிறிஸ்து அரசே! . . .

**பா. குழு** : அவர்தம் இறைப்பற்றினை ஏற்றீரே,
நலமார் அரசே, கனிவுடை அரசே,
நல்லன எல்லாம் ஏற்கும் நீர்
எங்கள் இறைப்பற்றையும் ஏற்பீரே.

**எல்.** : கிறிஸ்து அரசே! ....

**ஆயிரக் கணக்கான வருடங்களாய் எம்**
ஆண்டவரே உம்மை எதிர்பார்த்தோம்
இஸ்ராயேல் ஜனங்களை ஆளவரும் – எம்
இயேசு இரட்சகரே எழுந்தருளும்
ஓசான்னா தாவீதின் புதல்வா
ஓசான்னா ஓசான்னா ஓசான்னா

1. மாமரி வயிற்றினில் பிறந்தவரே – மா
முனி சூசை கரங்களில் வளர்ந்தவரே
மானிடர் குலத்தினில் உதித்தவரே – எம்
மன்னவரே எழுந்தருள்வீரே – ஓசான்னா

2. அற்புத யோர்தானில் தீட்சை பெற்றீர் – மா
அருள் தபோதனரால் புகழப்பட்டீர்
ஆகாயங்களை நீர் திறக்க விட்டீர் – உம்
ஆதி பிதாவிடம் பதவி பெற்றீர் – ஓசான்னா

3. தாவீது அரசரின் புத்திரரே – ஓர்
தெய்வீக முடியோடு வந்தவரே
தருமர் எனப் புகழ் அடைந்தவரே – எம்
தேவனே தேவனே எழுவீரே – ஓசான்னா

4. கானான் மணத்தினில் அழைக்கப்பட்டீர் – நீர்
கலங்கினவர்கள் பேரில் இரக்கப்பட்டீர்
கொண்டு வரச் சொன்னீர் சுத்தத் தண்ணீர் – அதைக்
கந்த ரசமாக்கிப் பெயரடைந்தீர் – ஓசான்னா

5. புவியினில் புரிந்தீர் புண்ணியங்கள் – எம்
புத்தியில் புகுத்தினீர் அருள்மொழிகள்
பக்தியில் சேர்த்தீர் பல சீடர்கள் – மா
பவனியோடு வாரீர் படைத்தவரே – ஓசான்னா

6. மரித்தவர்கள் அநேகர் உயிர்பெற்றார் – ஒரு
மனமுடைந்த விதவை மகன் அடைந்தார்
மரிமதலேன் சகோதரன் பெற்றார் – எம்
மனுக்குலம் இரட்சிக்க வந்தவரே – ஓசான்னா

7. குருடர்கள் பலர் உயிர் பெற்றார் – முடம்
கூன் செவிடர் பலர் சுகம் பெற்றார்
குஷ்டர் அதிகமே நலம் பெற்றார் – எம்
கடவுளே எம்மோடே வாரும் நீர் – ஓசான்னா

8. யூதேயா நாட்டினில் புகழ் பெற்றீர் – எம்
யூதர் ராஜரென்று முடிபெற்றீர்
எருசலேம் நகர்தனில் களிப்புற்றீர் – எம்
இயேசு அரசரே அரசாள்வீர் – ஓசான்னா

9. பாவிகளைத் தேடி வந்தவரே – எம்
பாவங்கள் பொறுக்க வல்லவரே
பாடுகள் பட்டு உழைத்தவரே – எம்
பராபரனே உட்செல்வீரே – ஓசான்னா

10. கோவேறு குட்டியை ஆசனமாய் – எம்
குழந்தைகள் துணியே பஞ்சணையாய்
கிளைகளே உமது ஜெய கொடியாய் – எம்
கர்த்தரே சீக்கிரம் நடப்பீரே – ஓசான்னா

11. உலகமே உமது அரிய வேலை – எம்
உயிருமே உமது மா புதுமை
உலகத்தை ஆண்டு வருபவரே – எம்
உலகரசே உள்ளே புகுவீரே – ஓசான்னா

**10.** பவனி கோவிலுக்குள் நுழைகையில் கீழுள்ள பதிலுரைப் பாடலையோ ஆண்டவரின் நுழைவைப் பற்றிய வேறு பாடலையோ பாடலாம்.

**முதல்.** : ஆண்டவர் புனித நகரத்தில்
நுழைகையில் எபிரேயச் சிறுவர் குழாம்
உயிர்த்தெழுதலை அறிவித்தவராய்

**பதில்.** : குருத்து மடல்களை ஏந்தி நின்று
"உன்னதங்களிலே ஓசன்னா!"
என்று மகிழ்வுடன் ஆர்ப்பரித்தார்.

**முதல்.** : எருசலேம் நகருக்கு இயேசு வருவதைக் கேட்ட
மக்களெல்லாம் அவரை எதிர் கொண்டழைத்தனரே.

**பதில்.** : குருத்து மடல்களை . . .

**11.** அருள் பணியாளர் பீடத்தை அடைந்ததும் அதற்கு வணக்கம் செலுத்தியபின், தேவைக்கு ஏற்பத் தூபம் காட்டலாம், பின்னர் தம்

இருக்கைக்குச் சென்று "திருப்போர்வை" அணிந்திருந்தால் அதை அகற்றிவிட்டு திருப்பலி உடை அணிகின்றார். திருப்பலியில் தொடக்கத் திருச்சடங்குகளை, தேவைக்கு ஏற்ப,"ஆண்டவரே, இரக்கமாயிரும்" தவிர்த்து விட்டு, திருப்பலியின் திருக்குழும மன்றாட்டைச் சொல்கின்றார். அதன்பின் திருப்பலி தொடர்கின்றது.

## இரண்டாம் வகை - சிறப்பு வருகை

**12.** கோவிலுக்கு வெளியே பவனி நடத்த முடியாதெனில், அந்நாளின் முக்கிய திருப்பலிக்குமுன் கோவிலுக்கு உள்ளேயே சிறப்பு வருகையை நடத்தி ஆண்டவரின் நுழைவைக் கொண்டாடலாம்.

**13.** நம்பிக்கையாளர் கோவில் வாயில்முன் அல்லது கோவிலுக்குள் குருத்தோலைகளைக் கைகளில் ஏந்திக் கூடி நிற்கின்றனர். அருள்பணியாளரும் பிற பணியாளர்களும் நம்பிக்கையாளரின் படிநிகராளியர் சிலரும் திருப்பீட முற்றத்துக்கு வெளியே பெரும்பான்மையோர் பார்க்கக்கூடிய பொருத்தமான இடத்திற்கு வருகின்றனர்.

**14.** அருள்பணியாளர் மேற்கூறிய இடத்துக்கு வரும்போது,"தாவீதின் மகனுக்கு ஓசன்னா"என்னும் பல்லவி அல்லது வேறு பொருத்தமான பாடல் பாடப்படும். பின் குருத்தோலைகளைப் புனிதப்படுத்துதலும், ஆண்டவர் எருசலேமுக்குள் நுழைந்ததைப் பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றலும் (எண். 5முதல் 7 வரை குறிப்பிட்டுள்ளவாறு) நடைபெறும். நற்செய்திக்குப்பின் அருள் பணியாளரும் பிற பணியாளர்களும் நம்பிக்கையாளரின் பிரதிநிதிகளும் சிறப்பான விதத்தில்கோவிலின் வழியாகத் திருப்பீட முற்றத்துக்குப் வரிசையாகச் செல்கின்றனர். அப்பொழுது "ஆண்டவர் புனித நகரத்தில்" என்னும் பதிலுரைப் பாடல் (எண் 10) அல்லது பொருத்தமான வேறு பாடல் பாடப்படும்.

**15.** பீடத்தை அடைந்ததும், அருள்பணியாளர் அதற்கு வணக்கம் செலுத்திவிட்டு, தமது இருக்கைக்குச் செல்கின்றார். திருப்பலியின் தொடக்கத் திருச்சடங்குகளை, தேவைக்கு ஏற்ப -"ஆண்டவரே இரக்கமாயிரும்"தவிர்த்துவிட்டு - திருக்குழும மன்றாட்டைச் சொல்கின்றார். அதன்பின் திருப்பலி வழக்கம் போலத் தொடர்ந்து நடைபெறும்.

## மூன்றாம் வகை - சாதாரண வருகை

**16.** இந்த ஞாயிற்றுக்கிழமையில் சிறப்பு வருகை நடைபெறாத மற்றத்திருப்பலிகளிலெல்லாம் சாதாரண வருகையை நடத்துவதன் வழியாக, ஆண்டவருடைய எருசலேம் நுழைவு நினைவுகூரப்படும்.

**17.** அருள்பணியாளர் பீடத்துக்கு வரும்போது வருகைப் பல்லவி திருப்பாடலுடன் (எண் 18) பாடப்படும் அல்லது அதே கருத்துள்ள வேறு பாடலைப் பாடலாம். அருள்பணியாளர் பீடத்தை அடைந்தபின் அதை வணங்கி, தமது இருக்கைக்குச் சென்று, இறைமக்களை வாழ்த்துகின்றார். அதன்பின் திருப்பலி வழக்கம் போலத் தொடர்கின்றது.

வருகைப் பாடல் பாட முடியாத மற்றத் திருப்பலிகளில் அருள்பணியாளர் பீடத்தை அடைந்ததும், அதை வணங்கிய பின் இறைமக்களை வாழ்த்துகின்றார். பின் வருகைப் பல்லவியை வாசித்து வழக்கம் போலத் திருப்பலியைத் தொடங்குகின்றார்.

**18.** வருகைப் பல்லவி காண்: யோவா 12:1,12-13; திபா 24:3-10

பாஸ்கா விழாவுக்கு ஆறு நாள் இருக்கையில்
ஆண்டவர் எருசலேம் நகருக்குள் வருகையில்
சிறுவர் அவரை எதிர்கொண்டனரே;
கைகளில் குருத்தோலை தாங்கி, அவர்கள்
பெருங்குரல் எழுப்பி ஆர்ப்பரித்தனரே:

உன்னதங்களிலே ஓசன்னா!
இரக்கப் பெருக்குடன் வருகின்ற நீர், ஆசி பெற்றவரே!

வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்
தொன்மைமிகு கதவுகளே, உயர்ந்து நில்லுங்கள்;
மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்.
மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?
படைகளின் ஆண்டவரே இவர் இவரே மாட்சிமிகு மன்னர்:

உன்னதங்களிலே ஓசன்னா!
இரக்கப் பெருக்குடன் வருகின்ற நீர், ஆசி பெற்றவரே!

## திருப்பலி தொடர்கிறது

**19.** பவனி அல்லது சிறப்பு வருகைக்குப்பின் அருள்பணியாளர் திருக்குழும மன்றாட்டைச் சொல்லித் திருப்பலியைத் தொடர்கின்றார்.

**20.** **திருக்குழும மன்றாட்டு**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, தாழ்மையின் எடுத்துக்காட்டை மனித இனம் பின்பற்ற, எங்கள் மீட்பரை மனித உடல் எடுக்கவும் சிலுவையை ஏற்றுக்கொள்ளவும் செய்தீரே; அதனால் நாங்கள் அவரது பொறுமையைக் கற்றுக்கொண்டு அவரது உயிர்ப்பில் பங்கேற்கத் தகுதி பெறுமாறு எங்களுக்குக் கனிவாய் அருள்வீராக. உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

# 03 இறைவாக்கு வழிபாடு

## முதல் வாசக முன்னுரை

நம்முடைய உணர்வுகள், அசைவுகள் ஒவ்வொன்றையும் அறிந்து செயல்படுகிறவர்தான் நம்முடைய கடவுள். கற்பாறையாகிய அவர் நமக்கு அரணாக இருக்கின்றார். எதிரிகள் கையிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறார் என்று கூறும் முதல் வாசகத்திற்கு செவிகொடுத்து நம்மையே அவருடைய பாதத்தில் ஒப்படைப்போம்.

## எசாயா 50: 4-7

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார்; காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார்; கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார். ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார். நான் கிளர்ந்தெழவில்லை. விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார்; நான் அவமானம் அடையேன்; என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன்; இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன்.

## திருப்பாடல் 22:7-8, 16-17, 18-19, 23-24
### பல்லவி : என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்.

என்னைப் பார்ப்போர் எல்லோரும் என்னை ஏளனம் செய்கின்றனர்
உதட்டைப் பிதுக்கித் தலை அசைத்து
ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தானே அவர் இவனை மீட்கட்டும்
தாம் அன்புகூர்ந்த இவனை அவர் விடுவிக்கட்டும் என்கின்றனர் - பல்லவி

தீமை செய்வோரின் கூட்டம் என்னை வளைத்துக் கொண்டது
நாய்கள் என அவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்
என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்
என் எலும்புகளை யெல்லாம் நான் எண்ணிவிடலாம் - பல்லவி

என் ஆடைகளைத் தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர்
என் உடையின் மேல் சீட்டுப்போடுகிறனர்
நீரோ ஆண்டவரே என்னை விட்டுத் தொலையில் போய் விடாதேயும்
என் வலிமையே எனக்கு துணை செய்ய விரைந்து வாரும் - பல்லவி

உமது பெயரை என் சகோதரருக்கு அறிவிப்பேன்
சபை நடுவே உம்மைப் புகழ்ந்து பாடுவேன்
ஆண்டவருக்கு அஞ்சுவோரே அவரைப் புகழுங்கள்
யாக்கோபின் மரபினரே அனைவரும் அவரை மாட்ச்சிமைப்படுத்துங்கள்
இஸ்ரயேல் மரபினரே அனைவரும் அவரைப் பணியுங்கள் - பல்லவி

### இரண்டாம் வாசக முன்னுரை

இறைமகன் இயேசு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதையே உணவாகக் கொண்டு வாழ்ந்தார். தந்தையும் மகனின் கீழ்ப்படிதல் மிகுந்த வாழ்க்கையைக் கண்டு அவரைப் பெருமைப்படுத்துகிறார் என்ற உண்மையை தூய பவுல் அடிகளார் எடுத்துரைக்கிறார். நாமும் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டும் என்ற மனநிலையோடு வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### பிலிப்பியர் 2: 6-11

கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். ஆகவே இயேசுவின் பெயருக்கு விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர்; தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக 'இயேசு கிறிஸ்து ஆண்டவர்' என எல்லா நாவுமே அறிக்கையிடும்.

### நற்செய்திக்கு முன் வசனம் : பிலிப்பியர் 2:8-9

கிறிஸ்து சாவை ஏற்கும் அளவுக்கு,
அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக்
கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.
எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி
எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

**21.** எரியும் திரிகளும் தூபமும் இன்றி, வாழ்த்துரை கூறாமலும் திருநூலில் சிலுவை அடையாளம் வரையாமலும் ஆண்டவருடைய பாடுகளின் வரலாறு வாசிக்கப்படும். திருத்தொண்டர் அல்லது - அவர் இல்லை எனில் - அருள்பணியாளர் அதை வாசிக்கின்றார். வாசகர்களும் அதை வாசிக்கலாம்; ஆனால் கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கூடியமட்டும் அருள்பணியாளரே வாசிக்க வேண்டும்.

பாடுகளின் வரலாற்றைப் பாடுமுன், திருத்தொண்டர்கள் மட்டும் மற்றத் திருப்பலிகளில் நற்செய்திக்குமுன் செய்வது போல் அருள்பணியாளரிடம் ஆசி பெறுவார்கள். மற்ற வாசகர்கள் இவ்வாறு செய்வதில்லை.

**முதல் ஆண்டு**

## மத்தேயு எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 26 : 14 - 27 : 66

**விரி.உ** : பன்னிருவருள் ஒருவனாகிய யூதாசு இஸ்காரியோத்து தலைமைக் குருவிடம் வந்து,

**யூதாசு** : இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?

**விரி.உ** : என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குக் கொடுத்தார்கள். அதுமுதல் அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான். புளிப்பற்ற அப்ப விழாவின் முதல் நாளில் சீடர்கள் இயேசுவை அணுகி வந்து,

**சீடர்.** : நீர் பாஸ்கா விருந்துண்ண நாங்கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?

**விரி.உ** : என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம்,

**இயேசு** : நீங்கள் புறப்பட்டு நகருக்குள் சென்று இன்னாரிடம் போய், எனது நேரம் நெருங்கி வந்து விட்டது; என் சீடர்களோடு உம் வீட்டில் பாஸ்கா கொண்டாடப் போகிறேன் எனப் போதகர் கூறுகிறார் எனச் சொல்லுங்கள்

**விரி.உ** : என்றார். இயேசு தங்களுக்குப் பணித்த படியே சீடர்கள் செயல்பட்டுப் பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். மாலை வேளையானதும் அவர் பன்னிருவரோடும் பந்தியில் அமர்ந்தார். அவர்கள் உண்டுகொண்டிருந்த பொழுது அவர்,

**இயேசு** : உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் வருத்தமுற்றவர்களாய்,

**சீடர்.** : ஆண்டவரே, அது நானோ?

**விரி.உ** : என ஒவ்வொருவரும் அவரிடம் கேட்கத் தொடங்கினார்கள். அதற்கு அவர்,

**இயேசு** : என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான். மானிட மகன், தம்மைப் பற்றி மறைநூலில் எழுதியுள்ளபடியே போகிறார். ஆனால், ஐயோ! அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குக் கேடு; அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும்

**விரி.உ** : என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும்

**யூதாசு** : ரபி, நானோ?

**விரி.உ** : என அவரிடம் கேட்க இயேசு,

**இயேசு** : நீயே சொல்லிவிட்டாய்

**விரி.உ** : என்றார். அவர்கள் உணவருந்திக்கொண்டிருந்தபொழுது, இயேசு அப்பத்தை எடுத்துக் கடவுளைப் போற்றி, அதைப் பிட்டுச் சீடருக்குக் கொடுத்து,

**இயேசு** : இதைப் பெற்று உண்ணுங்கள் இது எனது உடல்

**விரி.உ** : என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து,

**இயேசு** : இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள்; ஏனெனில், இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் என் தந்தையின் ஆட்சி வரும் அந்நாளில்தான் நான் உங்களோடு திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பேன்; அதுவரை குடிக்கமாட்டேன் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். அவர்கள் புகழ்ப் பாடல் பாடிவிட்டு ஒலிவ மலைக்குச் சென்றார்கள். அதன்பின்பு இயேசு அவர்களிடம்,

**இயேசு** : இன்றிரவு நீங்கள் அனைவரும் என்னை விட்டு ஓடிப்போவீர்கள். ஏனெனில் ஆயரை வெட்டுவேன், அப்போது மந்தையிலுள்ள ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று மறைநூலில் எழுதியுள்ளது. நான் உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு உங்களுக்கு முன்பே கலிலேயாவுக்குப் போவேன்

**விரி.உ** : என்றார். அதற்குப் பேதுரு அவரிடம்,

**பேதுரு** : எல்லாரும் உம்மை விட்டு ஓடிப் போய்விட்டாலும் நான் ஒரு போதும் ஓடிப்போக மாட்டேன்

**விரி.உ** : என்றார். இயேசு அவரிடம்,

**இயேசு** : இன்றிரவில் சேவல் கூவுமுன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். பேதுரு அவரிடம்,

**பேதுரு** : நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்

**விரி.உ** : என்றார். அவ்வாறே சீடர்கள் அனைவரும் சொன்னார்கள். பின்னர் இயேசு சீடர்களுடன் கெத்சமனி என்னும் இடத்திற்கு வந்தார். அவர்,

**இயேசு** : நான் அங்கே போய் இறைவனிடம் வேண்டும்வரை இங்கே அமர்ந்திருங்கள்

**விரி.உ** : என்று அவர்களிடம் கூறி, பேதுருவையும் செபதேயுவின் மக்கள் இருவரையும் தம்முடன் கூட்டிச் சென்றார். அப்போது அவர் துயரமும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார். அவர்,

**இயேசு** : எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது. நீங்கள் என்னோடு இங்கேயே தங்கி விழித்திருங்கள்"

**விரி.உ** : என்று அவர்களிடம் கூறினார். பிறகு அவர் சற்று அப்பால் சென்று முகங்குப்புற விழுந்து,

**இயேசு** : என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னை விட்டு அகலட்டும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப் படியே நிகழட்டும்

**விரி.உ** : என்று கூறி இறைவனிடம் வேண்டினார். அதன் பின்பு அவர் சீடர்களிடம் வந்து அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பேதுருவிடம்,

**இயேசு** : ஒரு மணி நேரம்கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வமுடையதுதான் ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்

**விரி.உ** : என்றார். மீண்டும் சென்று,

**இயேசு** : என் தந்தையே, நான் குடித்தாலன்றி இத்துன்பக்கிண்ணம் அகல முடியாதென்றால், உமது திருவுளப்படியே ஆகட்டும்

**விரி.உ** : என்று இரண்டாம் முறையாக இறைவனிடம் வேண்டினார். அவர் திரும்பவும் வந்தபோது சீடர்கள் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களுடைய கண்கள் தூக்கக் கலக்கமாய் இருந்தன. அவர் அவர்களை விட்டு மீண்டும் சென்று மறுபடியும் அதே வார்த்தைகளைச் சொல்லி மூன்றாம் முறையாக இறைவனிடம் வேண்டினார். பிறகு சீடர்களிடம் வந்து,

**இயேசு** : இன்னும் உறங்கி ஓய்வெடுக்கிறீர்களா? பாருங்கள், நேரம் நெருங்கி வந்து விட்டது. மானிட மகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படுகிறார். எழுந்திருங்கள், போவோம். இதோ! என்னைக் காட்டிக்கொடுப்பவன் நெருங்கி வந்து விட்டான்

**விரி.உ** : என்று கூறினார். இயேசு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது பன்னிருவருள் ஒருவனாகிய யூதாசு அங்கு வந்தான். அவனோடு குருக்களும் மக்களின் மூப்பர்களும் அனுப்பிய பெருங்கூட்டம் வாள்களோடும் தடிகளோடும் வந்தது. அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவன், "நான் ஒருவரை முத்தமிடுவேன். அவர்தாம் இயேசு; அவரைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று

அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். அவன் நேராக இயேசுவிடம் சென்று,

**யூதாசு** : ரபி வாழ்க

**விரி.உ** : எனக் கூறிக்கொண்டே அவரை முத்தமிட்டான். இயேசு அவனிடம்,

**இயேசு** : தோழா, எதற்காக வந்தாய்?

**விரி.உ** : என்று கேட்டார். அப்பொழுது அவர்கள் இயேசுவை அணுகி, அவரைப் பற்றிப்பிடித்துக் கைதுசெய்தனர். உடனே இயேசுவோடு இருந்தவருள் ஒருவர் தமது கையை நீட்டி வாளை உருவித் தலைமைக் குரவின் பணியாளரைத் தாக்கி அவருடைய காதைத் துண்டித்தார். அப்பொழுது இயேசு அவரிடம்,

**இயேசு** : உனது வாளை அதன் உறையில் திரும்பப் போடு. ஏனெனில், வாளை எடுப்போர் அனைவரும் வாளால் அழிந்து போவர். நான் என் தந்தையின் துணையை வேண்ட முடியாதென்றா நினைத்தாய்? நான் வேண்டினால் அவர் பன்னிரு பெரும் படைப் பிரிவுகளுக்கு மேற்பட்ட வானதூதரை எனக்கு அனுப்பி வைப்பாரே. அப்படியானால்; இவ்வாறு நிகழவேண்டும் என்ற மறைநூல் வாக்குகள் எவ்வாறு நிறைவேறும்?

**விரி.உ** : என்றார். அவ்வேளையில் இயேசு மக்கள் கூட்டத்தைப் பார்த்து,

**இயேசு** : கள்வனைப் பிடிக்க வருவதுபோல் வாள்களோடும் தடிகளோடும் என்னைக் கைதுசெய்ய வந்தது ஏன்? நான் நாள்தோறும் கோவிலில் அமர்ந்து கற்பித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே! இறைவாக்கினர் எழுதியவை நிறைவேறவே இவையனைத்தும் நிகழ்கின்றன

**விரி.உ** : என்றார். அப்பொழுது சீடர்களெல்லாரும் அவரை விட்டுவிட்டுத் தப்பி ஓடினார்கள். இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைத் தலைமைக் குரு கயபாவிடம் கூட்டிச்சென்றார்கள். அங்கே மறைநூல் அறிஞரும், மூப்பர்களும் கூடி வந்தார்கள். பேதுரு தொலைவில் அவரைப் பின்தொடர்ந்து தலைமைக் குருவின் வீட்டு முற்றம்வரை வந்து வழக்கின் முடிவைப்பற்றித் தெரிந்து கொள்வதற்காக உள்ளே நுழைந்து காவலரோடு உட்கார்ந்திருந்தார். தலைமைக் குருக்களும், தலைமைச் சங்கத்தார் அனைவரும் இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்க அவருக்கு எதிராகப் பொய்ச் சாட்சி தேடினர். பல பொய்ச் சாட்சிகள் முன்வந்தும் ஏற்ற சாட்சி கிடைக்கவில்லை. இறுதியாக இருவர் முன்வந்தனர். அவர்கள்,

**இருவர்** : இவன் கடவுளுடைய திருக்கோவிலை இடித்து அதை மூன்று நாளில் கட்டியெழுப்ப என்னால் முடியும் என்றான்

**விரி.உ** : என்று கூறினார்கள். அப்பொழுது தலைமைக் குரு எழுந்து அவரிடம்,

**த. குரு** : இவர்கள் உனக்கு எதிராகக் கூறும் சான்றுக்கு மறுமொழி கூறமாட்டாயா?

**விரி.உ** : என்று கேட்டார். ஆனால் இயேசு பேசாதிருந்தார். மேலும் தலைமைக் குரு அவரிடம்,

**த. குரு** : நீ கடவுளின் மகனாகிய மெசியாவா? வாழும் கடவுளின் பெயரால் ஆணையிட்டுச் சொல்லுமாறு உன்னிடம் கேட்கிறேன்

**விரி.உ** : என்றார். அதற்கு இயேசு,

**இயேசு** : நீரே சொல்லுகிறீர் மானிட மகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பதையும் வான மேகங்கள் மீது வருவதையும் இதுமுதல் நீங்கள் காண்பீர்கள் என உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். உடனே தலைமைக் குரு தம் மேலுடையை கிழித்துக்கொண்டு,

**த. குரு** : இவன் கடவுளைப் பழித்துரைத்தான். இன்னும் நமக்குச் சான்றுகள் தேவையா? இதோ, இப்பொழுது நீங்களே பழிப்புரையைக் கேட்டீர்களே. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**விரி.உ** : என்று கேட்டார். அதற்கு அவர்கள்,

**மக்கள்** : இவன் சாக வேண்டியவன்

**விரி.உ** : எனப் பதிலளித்தார்கள். பின்பு அவருடைய முகத்தில் துப்பி அவரைக் கையால் குத்தினார்கள். மேலும் சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து,

**மக்கள்** : இறைவாக்கினர் மெசியாவே, உன்னை அடித்தது யார்? சொல்

**விரி.உ** : என்று கேட்டனர். பேதுரு வெளியே முற்றத்தில் உட்கார்ந்திருந்தார். பணிப்பெண் ஒருவர் அவரிடம் வந்து,

**ப.பெ.** : நீயும் கலிலேயனாகிய இயேசுவோடு இருந்தவன் தானே

**விரி.உ** : என்றார். அவரோ,

**பேதுரு** : நீர் சொல்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை

**விரி.உ** : என்று அவர்கள் அனைவர் முன்னிலையிலும் மறுதலித்தார். அவர் வெளியே வாயிலருகே சென்றபோது வேறொரு பணிப்பெண் அவரைக் கண்டு,

**ப.பெ.** : இவன் நாசரேத்து இயேசுவோடு இருந்தவன்

**விரி.உ** : என்று அங்கிருந்தோரிடம் சொன்னார். ஆனால் பேதுரு,

**பேதுரு** : இம்மனிதனை எனக்குத் தெரியாது

**விரி.உ** : என ஆணையிட்டு மீண்டும் மறுதலித்தார். சற்று நேரத்திற்குப்பின் அங்கே நின்றவர்கள் பேதுருவிடம் வந்து,

**சிலர்** : உண்மையாகவே நீயும் அவர்களைச் சேர்ந்தவனே; ஏனெனில் உன் பேச்சே உன்னை யாரென்று காட்டிக்கொடுக்கிறது

**விரி.உ** : என்று கூறினார்கள். அப்பொழுது அவர்,

**பேதுரு** : இந்த மனிதனை எனக்குத் தெரியாது

**விரி.உ** : என்று சொல்லிச் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார். உடனே சேவல் கூவிற்று. அப்பொழுது, சேவல் கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய் என்று இயேசு கூறியதைப் பேதுரு நினைவுகூர்ந்து வெளியே சென்று மனம் நொந்து அழுதார். பொழுது விடிந்ததும் தலைமைக் குருக்கள், மக்களின் மூப்பர்கள் யாவரும் இயேசுவைக் கொல்ல அவருக்கு எதிராக ஆலோசனை செய்தனர். அவரைக் கட்டி இழுத்துச் சென்று ஆளுநன் பிலாத்திடம் ஒப்புவித்தனர். அதன்பின் இயேசு தண்டனைத் தீர்ப்பு அடைந்ததைக் கண்டபோது அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசு மனம் வருந்தி தலைமைக் குருக்களிடமும் மூப்பர்களிடமும் முப்பது வெள்ளிக் காசுகளையும் திருப்பிக் கொண்டு வந்து,

**யூதாஸ்** : பழிபாவமில்லாதவரைக் காட்டிக்கொடுத்துப் பாவம் செய்தேன்

**விரி.உ** : என்றான். அதற்கு அவர்கள்,

**குரு, மூ.** : அதைப்பற்றி எங்களுக்கென்ன? நீயே பார்த்துக்கொள்

**விரி.உ** : என்றார்கள். அதன் பின்பு, அவன் அந்த வெள்ளிக் காசுகளைக் கோவிலில் எறிந்துவிட்டுப் புறப்பட்டுப் போய்த் தூக்குப் போட்டுக் கொண்டான். தலைமைக் குருக்கள் வெள்ளிக் காசுகளை எடுத்து,

**த. குரு** : இது இரத்தத்திற்கான விலையாதலால் இதைக் கோவில் காணிக்கைப் பெட்டியில் போடுவது முறை அல்ல

**விரி.உ** : என்று சொல்லி, கலந்தாலோசித்து, அன்னியரை அடக்கம் செய்ய அவற்றைக் கொண்டு குயவன் நிலத்தை வாங்கினார்கள். இதனால்தான் அந்நிலம் இரத்த நிலம் என இன்றுவரை அழைக்கப்படுகிறது. இஸ்ரயேல் மக்களால் விலைமதிக்கப்பட்டவருடைய விலையான முப்பது வெள்ளிக்காசுகளையும் கையிலெடுத்து ஆண்டவர் எனக்குப் பணித்தபடியே அதைக் குயவன் நிலத்திற்குக் கொடுத்தார்கள் என்று இறைவாக்கினர் எரேமியா உரைத்தது அப்பொழுது

நிறைவேறியது. இயேசு ஆளுநன் பிலாத்து முன்னிலையில் நின்று கொண்டிருந்தார். ஆளுநன் அவரை நோக்கி,

**பிலா.** : நீ யூதரின் அரசனா?

**விரி.உ** : என்று கேட்டான். அதற்கு இயேசு,

**இயேசு** : அவ்வாறு நீர் சொல்கிறீர்

**விரி.உ** : என்று கூறினார். மேலும் தலைமைக் குருக்களும் மூப்பர்களும் அவர்மீதும் குற்றம் சுமத்தியபோது அவர் மறுமொழி எதுவும் கூறவில்லை. பின்பு பிலாத்து அவரிடம்,

**பிலா.** : உனக்கு எதிராக எத்தனையோ சான்றுகள் கூறுகிறார்களே, உனக்குக் கேட்கவில்லையா?

**விரி.உ** : என்றான். அவரோ ஒரு சொல்கூட அவனுக்கு மறுமொழியாகக் கூறவில்லை. ஆகவே ஆளுநன் மிகவும் வியப்புற்றான். மக்கள் விரும்பிக் கேட்கும் ஒரு கைதியை அவர்களுக்காக, விழாவின் போது ஆளுநன் விடுதலை செய்வது வழக்கம். அந்நாளில் பரபா என்னும் பேர்போன கைதி ஒருவன் இருந்தான். மக்கள் ஒன்றுகூடி வந்திருந்தபோது பிலாத்து அவர்களிடம்,

**பிலா.** : நான் யாரை விடுதலை செய்யவேண்டும் என விரும்புகிறீர்கள்? பரபாவையா? அல்லது மெசியா என்னும் இயேசுவையா?

**விரி.உ** : என்று கேட்டான். ஏனெனில் அவர்கள் பொறாமையால்தான் இயேசுவைத் தன்னிடம் ஒப்புவித்திருந்தார்கள் என்பது அவனுக்குத் தெரியும். பிலாத்து நடுவர் இருக்கைமீது அமர்த்திருந்தபொழுது அவனுடைய மனைவி அவனிடம் ஆளனுப்பி,

**பிலா.ம.** : அந்த நேர்மையாளரின் வழக்கில் நீர் தலையிட வேண்டாம். ஏனெனில் அவர்பொருட்டு இன்று கனவில் மிகவும் துன்புற்றேன்

**விரி.உ** : என்று கூறினார். ஆனால் தலைமைக் குருக்களும் மூப்பர்களும் பரபாவை விடுதலை செய்யக் கேட்கவும் இயேசுவைத் தீர்த்துக்கட்டவும் கூட்டத்தினரைத் தூண்டி விட்டார்கள். ஆளுநன் அவர்களைப் பார்த்து,

**பிலா.** : இவ்விருவரில் யாரை விடுதலை செய்யவேண்டும்? உங்கள் விருப்பம் என்ன?

**விரி.உ** : எனக் கேட்டான். அதற்கு அவர்கள்

**மக்கள்** : பரபாவை

**விரி.உ** : என்றார்கள். பிலாத்து அவர்களிடம்,

**பிலா.** : அப்படியானால் மெசியா என்னும் இயேசுவை நான் என்ன செய்ய

வேண்டும்?

**விரி.உ** : என்று கேட்டான். அனைவரும்,

**மக்கள்** : சிலுவையில் அறையும்

**விரி.உ** : என்று பதிலளித்தனர். அதற்கு அவன்,

**பிலா.** : இவன் செய்த குற்றம் என்ன?

**விரி.உ** : என்று கேட்டான். அவர்களோ,

**மக்கள்** : சிலுவையில் அறையும்

**விரி.உ** : என்று இன்னும் உரக்கக் கத்தினார்கள். பிலாத்து தன் முயற்சியால் பயனேதும் ஏற்படவில்லை, மாறாகக் கலகமே உருவாகிறது என்று கண்டு, கூட்டத்தினரின் முன்னிலையில் தண்ணீரை எடுத்து,

**பிலா.** : இவனது இரத்தப்பழியில் எனக்குப் பங்கில்லை. நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்

**விரி.உ** : என்று கூறித் தன் கைகளைக் கழுவினான். அதற்கு மக்கள் அனைவரும்,

**மக்கள்** : இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் விழட்டும்

**விரி.உ** : என்று பதில் கூறினர். அப்போது அவர் பரபாவை அவர்கள் விருப்பத்திற்கிணங்க விடுதலை செய்தான்; இயேசுவைக் கசையால் அடித்துச் சிலுவையில் அறையுமாறு ஒப்புவித்தான். ஆளுநனின் படைவீரர் இயேசுவை ஆளுநன் மாளிகைக்குக் கூட்டிச் சென்று அங்கிருந்த படைப்பிரிவினர் அனைவரையும் அவர்முன் ஒன்று கூட்டினர்; அவருடைய ஆடைகளை உரிந்து, கருஞ்சிவப்பு நிறமுள்ள தளர் அங்கியை அவருக்கு அணிவித்தனர். அவர்கள் ஒரு முள்முடி பின்னி அவரது தலையின்மேல் வைத்து, அவருடைய வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர்முன் முழந்தாள்படியிட்டு,

**படை.** : யூதரின் அரசரே, வாழ்க!

**விரி.உ** : என்று சொல்லி ஏளனம் செய்தனர் அவர்மேல் துப்பி, அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர்; அவரை ஏளனம் செய்தபின், அவர்மேல் இருந்த தளர் அங்கியைக் கழற்றிவிட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக இழுத்துச் சென்றனர். அவர்கள் வெளியே சென்ற போது சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்ற பெயருடைய ஒருவரைக் கண்டார்கள்; இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். மண்டையோட்டு இடம் என்று பொருள்படும் கொல்கொதாவுக்கு

வந்தார்கள் இயேசுவுக்குக் கசப்பு கலந்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதைச் சுவை பார்த்தபின் குடிக்க விரும்பவில்லை. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு குலுக்கல் முறையில் அவருடைய ஆடைகளைப் பங்கிட்டுக்கொண்டார்கள்; பின்பு அங்கே உட்கார்ந்து காவல் காத்தார்கள்; அவரது தலைக்கு மேல் அவரது மரணதண்டனைக்கான காரணத்தை எழுதி வைத்தார்கள். அதில் இவன் யூதரின் அரசனாகிய இயேசு என்று எழுதப்பட்டிருந்தது. அதன்பின் அவருடைய வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக இரு கள்வர்களை அவருடன் சிலுவைகளில் அறைந்தார்கள். அவ்வழியே சென்றவர்கள் தங்கள் தலைகளை அசைத்து,

**மக்கள்** : கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே, உன்னையே விடுவித்துக்கொள். நீ இறைமகன் என்றால் சிலுவையிலிருந்து இறங்கி வா

**விரி.உ** : என்று அவரைப் பழித்துரைத்தார்கள். அவ்வாறே தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்களுடனும் மூப்பர்களுடனும் சேர்ந்து அவரை ஏளனம் செய்தனர். அவர்கள்,

**ம.அ,மு.** : பிறரை விடுவித்தான்; தன்னையே விடுவிக்க இயலவில்லை. இவன் இஸ்ரயேலுக்கு அரசனாம்! இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும். அப்பொழுது நாங்கள் இவனை நம்புவோம். கடவுளிடம் இவன் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தானாம்! அவர் விரும்பினால் இப்போது இவனை விடுவிக்கட்டும். நான் இறைமகன் என்றானே!

**விரி.உ** : என்று கூறினார்கள். அவ்வாறே, அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வர்களும் அவரை இகழ்ந்தார்கள். நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. மூன்று மணியளவில் இயேசு,

**இயேசு** : ஏலி, ஏலி லெமா சபக்தானி? அதாவது, என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?

**விரி.உ** : என்று உரத்த குரலில் கத்தினார். அங்கே நின்று கொண்டிருந்தவர்களுள் சிலர் அதைக் கேட்டு,

**சிலர்** : இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்

**விரி.உ** : என்றனர். உடனே அவர்களுள் ஒருவர் ஓடிச் சென்று, கடற்பஞ்சை எடுத்து, புளித்த திராட்சை இரசத்தில் தோய்த்து அதைக் கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தார். மற்றவர்களோ,

**மற்ற.** : பொறு, எலியா வந்து இவனை விடுவிப்பாரா என்று பார்ப்போம்

**விரி.உ** : என்றார்கள். இயேசு மீண்டும் உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார்.

அனைவரும் முழந்தாளிட்டு சிறிது நேரம் அமைதியாக மன்றாடுவோம்.

**விரி.உ** : அதே நேரத்தில் திருக்கோவிலின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது; நிலம் நடுங்கியது! பாறைகள் பிளந்தன. கல்லறைகள் திறந்தன; இறந்த இறைமக்கள் பலரின் உடல்கள் உயிருடன் எழுப்பப்பட்டன. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு இவர்கள் கல்லறைகளிலிருந்து வெளியே வந்து எருசலேம் திருநகரத்திற்குச் சென்று பலருக்குத் தோன்றினார்கள். நூற்றுவர் தலைவரும் அவரோடு இயேசுவைக் காவல் காத்தவர்களும் நிலநடுக்கத்தையும் நிகழ்ந்தயாவற்றையும் கண்டு மிகவும் அஞ்சி,

**காவ.** : இவர் உண்மையாகவே இறைமகன்

**விரி.உ** : என்றார்கள். கலிலேயாவிலிருந்து இயேசுவைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்து வந்த பல பெண்களும் அங்கிருந்தார்கள். அவர்கள் தொலையில் நின்று உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடையே மகதலா மரியாவும் யாக்கோபு, யோசேப்பு ஆகியோரின் தாய் மரியாவும் செபதேயுவின் மக்களுடைய தாயும் இருந்தார்கள். மாலை வேளையானதும் அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்னும் பெயர் கொண்ட செல்வர் ஒருவர் அங்கே வந்தார். அவரும் இயேசுவுக்குச் சீடராய் இருந்தார். அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். பிலாத்தும் அதைக் கொடுத்துவிடக் கட்டளையிட்டான். யோசேப்பு அவ்வுடலைப் பெற்று, தூய்மையான மெல்லிய துணியால் சுற்றி, தமக்கெனப் பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் கொண்டுபோய் வைத்தார்; அதன் வாயிலில் ஒரு பெருங்கல்லை உருட்டி வைத்துவிட்டுப் போனார். அப்பொழுது மகதலா மரியாவும் வேறோரு மரியாவும் அங்கே கல்லறைக்கு எதிரே உட்கார்ந்திருந்தனர். மறுநாள், அதாவது ஆயத்த நாளுக்கு அடுத்த நாள், தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் பிலாத்திடம் கூடி வந்தார்கள். அவர்கள்,

**த.குரு,ப** : ஐயா, அந்த எத்தன் உயிருடன் இருந்தபொழுது மூன்று நாளுக்குப் பின்பு நான் உயிருடன் எழுப்பப்படுவேன் என்று சொன்னது எங்களுக்கு நினைவிலிருக்கிறது. ஆகையால் மூன்று நாள்வரை கல்லறையைக் கருத்தாய்க் காவல் செய்யக் கட்டளையிடும். இல்லையெனில் அவருடைய சீடர்கள் ஒருவேளை வந்து அவன் உடலைத் திருடிச் சென்றுவிட்டு, இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார் என்று மக்களிடம் சொல்ல நேரிடும். அப்பொழுது முந்தின ஏமாற்று வேலையைவிடப் பிந்தினது மிகுந்த கேடு விளைவிக்கும்

**விரி.உ** : என்றனர். அதற்குப் பிலாத்து அவர்களிடம்,

**பிலா.** : உங்களிடம் காவல் வீரர்கள் இருக்கிறார்கள். நீங்களே போய் உங்களுக்குத் தெரிந்தபடி கருத்தாய்க் காவல் செய்யுங்கள்

**விரி.உ** : என்றார். அவர்கள் போய்க் கல்லறையை மூடியிருந்த கல்லுக்கு முத்திரையிட்டு, காவல் வீரரைக் கொண்டு கருத்தாய்க் காவல் செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

---

**இரண்டாம் ஆண்டு**

## தூய மாற்கு எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 14 : 1 - 15 : 47

**விரி.உ** : பாஸ்கா என்னும் புளிப்பற்ற அப்ப விழா நிகழ இன்னும் இரண்டு நாள்கள் இருந்தன. தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞரும் இயேசுவை எவ்வாறு சூழ்ச்சியாய்ப் பிடித்துக் கொலை செய்யலாம் என்று வழிதேடிக் கொண்டிருந்தனர் ஆயினும், விழாவின்போது வேண்டாம் ஒரு வேளை மக்களிடையே கலகம் ஏற்படக்கூடும் என்று நினைத்தனர். இயேசு, பெத்தானியாவில் தொழு நோயாளர் சீமோன் இல்லத்தில் இருந்தார். அங்கே பந்தியில் அமர்ந்திருந்தபோது இலாமிச்சை நறுமணத் தைலம் கொண்ட படிகச் சிமிழுடன் பெண் ஒருவர் வந்தார். அந்தத் தைலம் கலப்பற்றது, விலையுயர்ந்தது. அவர் அப்படிகச் சிமிழை உடைத்து இயேசுவின் தலையில் ஊற்றினார். ஆனால் அங்கிருந்த சிலர் கோபமடைந்து,

**யூதர்** : இந்தத் தைலத்தை இவ்வாறு வீணாக்குவதேன்? இதை முந்நூறு தெனாரியத்துக்கும் மேலாக விற்று ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே,

**விரி.உ** : என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர். அப்பெண் மீதும் சீறி எழுந்தனர். இயேசு அவர்களிடம்,

**இயேசு** : அவரை விடுங்கள். ஏன் அவருக்குத் தொல்லை கொடுக்கிறீர்கள்? அவர் எனக்குச் செய்தது முறையான செயலே. ஏனெனில் ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கின்றார்கள். நீங்கள் விரும்பும்போதெல்லாம் அவர்களுக்கு நன்மை செய்யமுடியும். ஆனால் நான் எப்போதும் உங்களோடு இருக்கப்போவதில்லை. இவர் தம்மால் இயன்றதைச் செய்தார். என் அடக்கத்திற்காக இவர் முன்னதாகவே என் உடலுக்குத் தைலம் பூசிவிட்டார். உலகம் முழுவதும் எங்கெல்லாம் நற்செய்தி அறிவிக்கப்படுமோ அங்கெல்லாம் இவர் செய்ததும் எடுத்துக் கூறப்படும் இவரும் நினைவு கூறப்படுவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்று கூறினார். பன்னிருவருள் ஒருவனாகிய யூதாசு

இஸ்காரியோத்து இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் நோக்கத்தோடு தலைமைக் குருக்களிடம் சென்றான். அவர்கள் அதை அறிந்து மகிழ்ச்சியுற்று அவனுக்குப் பணம் கொடுப்பதாக வாக்களித்தனர். அவனும் அவரை எப்படிக் காட்டிக்கொடுக்கலாம் என்று வாய்ப்புத் தேடிக்கொண்டிருந்தான். புளிப்பற்ற அப்ப விழாவின் முதல் நாள் வந்தது. பாஸ்கா ஆட்டுக்குட்டியைப் பலியிடும் அந்நாளிலே இயேசுவின் சீடர்,

**சீடர்.** : நீர் பாஸ்கா விருந்துண்ண நாங்கள் எங்கே சென்று ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?

**விரி.உ** : என்று கேட்டார்கள். அவர் பின்வருமாறு கூறி, தம் சீடருள் இருவரை அனுப்பினார்;

**இயேசு** : நீங்கள் புறப்பட்டு நகருக்குள் செல்லுங்கள். மண்குடத்தில் தண்ணீர் சுமந்துகொண்டு ஓர் ஆள் உங்களுக்கு எதிரே வருவார். அவர் பின்னே செல்லுங்கள். அவர் எந்த வீட்டுக்குச் செல்கிறாரோ, அந்த வீட்டின் உரிமையாளரிடம், நான் என் சீடர்களோடு பாஸ்கா விருந்து உண்பதற்கான என் அறை எங்கே? என்று போதகர் கேட்கச் சொன்னார்" எனக் கூறுங்கள். அவர் மேல்மாடியில் ஒரு பெரிய அறையைக் காட்டுவார். அது தேவையான வசதிகளோடு தயார் நிலையில் இருக்கும். அங்கே நமக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

**விரி.உ** : சீடர்கள் சென்று, நகரை அடைந்து, தங்களுக்கு அவர் சொல்லியவாறே அனைத்தையும் கண்டு பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். மாலை வேளையானதும் இயேசு பன்னிருவரோடு வந்தார். அவர்கள் பந்தியில் அமர்ந்து உண்டு கொண்டிருந்தபொழுது இயேசு,

**இயேசு** : என்னோடு உண்ணும் உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். அவர்கள் வருத்தமுற்று, ஒருவர் பின் ஒருவராக,

**சீடர்.** : நானோ? நானோ?

**விரி.உ** : என்று அவரிடம் கேட்கத் தொடங்கினார்கள். அதற்கு அவர்,

**இயேசு** : அவன் பன்னிருவருள் ஒருவன் என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவன். மானிடமகன் தம்மைப் பற்றி மறைநூலில் எழுதியுள்ளவாறே போகிறார். ஆனால் ஐயோ! அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குக் கேடு! அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாய் இருந்திருக்கும்

**விரி.உ** : என்றார். அவர்கள் உண்டுகொண்டிருந்தபொழுது அவர்

அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து,

**இயேசு** : இதைப் பெற்றுக்கொள்ளுங்கள் இது எனது உடல்

**விரி.உ** : என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார். அனைவரும் அதிலிருந்து பருகினர். அப்பொழுது அவர் அவர்களிடம்,

**இயேசு** : இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் இறையாட்சி வரும் அந்நாளில்தான் நான் திராட்சைப்பழ இரசத்தைக் குடிப்பேன்; அதுவரை ஒருபோதும் குடிக்க மாட்டேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். அவர்கள் புகழ்ப்பாடல் பாடிவிட்டு ஒலிவமலைக்குச் சென்றார்கள். இயேசு அவர்களிடம்,

**இயேசு** : நீங்கள் அனைவரும் ஓடிப்போவீர்கள். ஏனெனில், ஆயரை வெட்டுவேன்; அப்போது ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆனால் நான் உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு உங்களுக்குமுன்பே கலிலேயாவுக்குப் போவேன்

**விரி.உ** : என்றார். பேதுரு அவரிடம்,

**பேதுரு** : எல்லாரும் ஓடிப்போய்விட்டாலும் நான் அவ்வாறு செய்யமாட்டேன்

**விரி.உ** : என்றார். இயேசு அவரிடம்,

**இயேசு** : இன்றிரவில் சேவல் இருமுறை கூவுமுன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என உனக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். அவரோ,

**பேதுரு** : நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்

**விரி.உ** : என்று மிக அழுத்தமாகச் சொன்னார். அப்படியே அவர்கள் அனைவரும் சொன்னார்கள். பின்னர் இயேசுவும் சீடர்களும் கெத்சமனி என்னும் பெயர் கொண்ட ஓர் இடத்திற்கு வந்தார்கள். அங்கே அவர் தம் சீடரிடம்,

**இயேசு** : நான் இறைவனிடம் வேண்டும்வரை நீங்கள் இங்கே அமர்ந்திருங்கள்

**விரி.உ** : என்று கூறி, பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரைத் தம்முடன் கூட்டிச் சென்றார். அப்போது அவர் திகிலும் மனக்கலக்கமும் அடையத் தொடங்கினார். அவர்,

**இயேசு** : எனது உள்ளம் சாவுவருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது; நீங்கள் இங்கேயே தங்கி விழித்திருங்கள்

**விரி.உ** : என்று அவர்களிடம் கூறினார். சற்று அப்பால் சென்று தரையில் விழுந்து, முடியுமானால் அந்த நேரம் தம்மைவிட்டு விலகுமாறு இறைவனிடம் வேண்டினார்.

**இயேசு** : அப்பா, தந்தையே எல்லாம் உம்மால் இயலும். இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும்

**விரி.உ** : என்று கூறினார். அதன்பின்பு அவர் வந்து அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு பேதுருவிடம்,

**இயேசு** : சீமோனே, உறங்கிக் கொண்டா இருக்கிறாய்? ஒரு மணிநேரம் விழித்திருக்க உனக்கு வலுவில்லையா? உங்கள் மனம் ஆர்வம் உடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது. எனவே சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்

**விரி.உ** : என்றார். அவர் மீண்டும் சென்று அதே வார்த்தைகளைச் சொல்லி இறைவனிடம் வேண்டினார். அவர் திரும்பவும் வந்தபோது அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களுடைய கண்கள் தூக்கக் கலக்கமாய் இருந்தன. அவருக்கு என்ன மறுமொழி கூறுவது என்றே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர் மூன்றாம் முறை வந்து அவர்களை நோக்கி,

**இயேசு** : இன்னும் உறங்கி ஓய்வெடுக்கிறீர்களா? போதும், நேரம் வந்துவிட்டது. மானிடமகன் பாவிகளின் கையில் ஒப்புவிக்கப்படப் போகிறார். எழுந்திருங்கள், போவோம்.இதோ, என்னைக் காட்டிக் கொடுப்பவன் நெருங்கி வந்துவிட்டான்

**விரி.உ** : என்று கூறினார். இயேசு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது பன்னிருவருள் ஒருவனான யூதாசு வந்தான். அவனோடு தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர், மூப்பர் ஆகியோர் அனுப்பிய மக்கள் கூட்டம் வாள்களோடும், தடிகளோடும் வந்தது. அவரைக் காட்டிக்கொடுக்கவிருந்தவன்,

**யூதாசு** : நான் ஒருவரை முத்தமிடுவேன். அவர்தாம் இயேசு, அவரைப் பிடித்துக் காவலோடு கொண்டு போங்கள்

**விரி.உ** : என்று அவர்களுக்கு அடையாளம் சொல்லியிருந்தான். அவன் வந்ததும் உடனடியாக அவரை அணுகி,

**யூதாசு** : ரபி

**விரி.உ** : எனக் கூறிக்கொண்டே அவரை முத்தமிட்டான். அவர்களும்

அவரைப் பற்றிப் பிடித்துக் கைது செய்தனர். அருகில் நின்று கொண்டிருந்தவர்களுள் ஒருவர் தம் வாளை உருவி, தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி அவருடைய காதைத் துண்டித்தார். இயேசு அவர்களைப் பார்த்து,

**இயேசு** : கள்வனைப் பிடிக்க வருவது போல வாள்களோடும் தடிகளோடும் என்னைக் கைது செய்ய வந்தது ஏன்? நான் நாள்தோறும் கோவிலில் கற்பித்துக் கொண்டு உங்களோடு இருந்தேன். நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே! ஆனால் மறைநூலில் எழுதப்பட்டுள்ளவை நிறைவேற வேண்டும்

**விரி.உ** : என்றார். அப்பொழுது சீடர் அனைவரும் அவரை விட்டுவிட்டுத் தப்பி ஓடினர். இளைஞர் ஒருவர் தம் வெறும் உடம்பின் மீது ஒரு நார்ப்பட்டுத் துணியைப் போர்த்திக் கொண்டு அவர் பின்னே சென்றார்; அவரைப் பிடித்தார்கள். ஆனால் அவர் துணியை விட்டு விட்டு ஆடையன்றித் தப்பி ஓடினார். அவர்கள் இயேசுவைத் தலைமைக் குருவிடம் கூட்டிச் சென்றார்கள். எல்லாத் தலைமைக் குருக்களும் மூப்பர்களும் மறைநூல் அறிஞர்களும் ஒன்று கூடினார்கள். பேதுரு தொலையில் அவரைப் பின்தொடர்ந்தார். தலைமைக் குருவின் வீட்டு உள்முற்றம் வரை வந்து காவலரோடு உட்கார்ந்து நெருப்பின் அருகே அவர் குளிர்காய்ந்து கொண்டிருந்தார். தலைமைக் குருக்களும் தலைமைச் சங்கத்தார் அனைவரும் இயேசுவுக்கு மரண தண்டனை விதிக்க அவருக்கு எதிராகச் சான்று தேடினார்கள். ஆனால் ஒன்றும் கிடைக்கவில்லை. பலர் அவருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொன்னார்கள். ஆனால் அச்சான்றுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தன. சிலர் எழுந்து,

**சிலர்** : மனித கையால் கட்டப்பட்ட இந்தத் திருக்கோவிலை இடித்து விட்டுக் கையால் கட்டப்படாத வேறொன்றை மூன்று நாளில் நான் கட்டி எழுப்புவேன் என்று இவன் சொல்லக் கேட்டோம்

**விரி.உ** : என்று அவருக்கு எதிராகப் பொய்ச் சான்று கூறினர். அப்படியும் அவர்களுடைய சான்று ஒத்துவரவில்லை. அப்பொழுது தலைமைக் குரு எழுந்து அவர்களின் நடுவே நின்று,

**த. குரு** : இவர்கள் உனக்கு எதிராகக் கூறும் சான்றுக்கு மறுமொழி ஒன்றும் கூற மாட்டாயா?

**விரி.உ** : என்று இயேசுவைக் கேட்டார். ஆனால் அவர் பேசாதிருந்தார். மறுமொழி ஒன்றும் அவர் கூறவில்லை. மீண்டும் தலைமைக் குரு,

**த. குரு** : போற்றுதற்குரிய கடவுளின் மகனாகிய மெசியா நீதானோ?

**விரி.உ** : என்று அவரைக் கேட்டார். அதற்கு இயேசு,

**இயேசு** : நானே அவர்; மேலும் மானிடமகன் வல்லவராம் கடவுளின்

| | | |
|---|---|---|
| | | வலப்புறத்தில் வீற்றிருப்பதையும் வானமேகங்கள் சூழ வருவதையும் காண்பீர்கள் |
| **விரி.உ** | : | என்றார். தலைமைக் குருவோ தம் அங்கியைக் கிழித்துக்கொண்டு, |
| **த.குரு** | : | இன்னும் நமக்குச் சான்றுகள் தேவையா? இவன் கடவுளைப் பழித்துரைத்ததைக் கேட்டீர்களே; உங்களுக்கு என்ன தோன்றுகிறது? |
| **விரி.உ** | : | என்று கேட்க, அவர்கள் அனைவரும், |
| **எல்.** | : | இவன் சாக வேண்டியவன் |
| **விரி.உ** | : | என்று தீர்மானித்தார்கள். பின்பு சிலர் அவர்மேல் துப்பவும், அவர் முகத்தை மூடி அவரைக் கையால் குத்தி, |
| **ப.வீரர்** | : | இறைவாக்கினனே, யார் எனச் சொல் |
| **விரி.உ** | : | என்று கேட்கவும் தொடங்கினர். காவலரும் அவரைக் கன்னத்தில் அறைந்தனர். அப்பொழுது பேதுரு கீழே முற்றத்தில் இருக்க, தலைமைக் குருவின் பணிப் பெண் ஒருவர் வந்து, பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருக்கக் கண்டு அவரைக் கூர்ந்து நோக்கி, |
| **ப.பெ.** | : | நீயும் இந்த நாசரேத்து இயேசுவோடு இருந்தவன்தானே |
| **விரி.உ** | : | என்றார். அவரோ, |
| **பேதுரு** | : | நீர் சொல்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை, புரியவுமில்லை |
| **விரி.உ** | : | என்று மறுதலித்து, வெளி முற்றத்திற்குச் சென்றார். அப்பொழுது சேவல் கூவிற்று. அந்தப் பணிப்பெண் அவரைக் கண்டு சூழ இருந்தவர்களிடம், |
| **ப.பெ.** | : | இவனும் அவர்களைச் சேர்ந்தவன்தான் |
| **விரி.உ** | : | என்று மீண்டும் கூறத் தொடங்கினார். அவர் மீண்டும் மறுதலித்தார். சற்று நேரத்திற்குப்பின் சூழ இருந்தவர்களும், |
| **எல்.** | : | உண்மையாகவே நீ அவர்களைச் சேர்ந்தவனே. ஏனெனில் நீ ஒரு கலிலேயன் |
| **விரி.உ** | : | என்று மீண்டும் பேதுருவிடம் கூறினார்கள். அவரோ, |
| **பேதுரு** | : | நீங்கள் குறிப்பிடுகின்ற இந்த மனிதனை எனக்குத் தெரியாது |
| **விரி.உ** | : | என்று சொல்லிச் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார். உடனே இரண்டாம் முறை சேவல் கூவிற்று. அப்பொழுது,சேவல் |

இருமுறை கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய் என்று இயேசு தமக்குக் கூறிய சொற்களைப் பேதுரு நினைவு கூர்ந்து மனம் உடைந்து அழுதார். பொழுது விடிந்ததும் மூப்பரோடும் மறைநூல் அறிஞரோடும் தலைமைச் சங்கத்தார் அனைவரோடும் தலைமைக் குருக்கள் ஆலோசனை செய்து, இயேசுவைக் கட்டி இழுத்துச் சென்று பிலாத்திடம் ஒப்புவித்தனர். பிலாத்து அவரை நோக்கி,

**பிலா.** : நீ யூதரின் அரசனா?

**விரி.உ** : என்று கேட்க அவர்,

**இயேசு** : அவ்வாறு நீர் சொல்கிறீர்

**விரி.உ** : என்று பதில் கூறினார். தலைமைக் குருக்கள் அவர்மீது பல குற்றங்களைச் சுமத்தினார்கள். மீண்டும் பிலாத்து,

**பிலா.** : நீ பதில் ஒன்றும் சொல்ல மாட்டாயா? உன் மீது இத்தனை குற்றங்களைச் சுமத்துகிறார்களே!

**விரி.உ** : என்று அவரிடம் கேட்டான். இயேசுவோ எப்பதிலும் கூறவில்லை. ஆகவே பிலாத்து வியப்புற்றான். விழாவின்போது மக்கள் கேட்டுக் கொள்ளும் ஒரு கைதியை அவர்களுக்காகப் பிலாத்து விடுதலை செய்வதுண்டு. பரபா என்னும் கைதி ஒருவன் இருந்தான். ஒரு கலகத்தில் கொலை செய்த கலகக்காரரோடு பிடிபட்டவன் அவன். மக்கள் கூட்டம் வந்து, வழக்கமாய்ச் செய்வதுபோல ஒரு கைதியை விடுதலை செய்யுமாறு பிலாத்துவை வேண்டத் தொடங்கியது. அதற்குப் பிலாத்து,

**பிலா.** : யூதரின் அரசரை உங்களுக்காக நான் விடுதலை செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களா?

**விரி.உ** : என்று கேட்டான். ஏனெனில் தலைமைக் குருக்கள் பொறாமையால்தான் அவரை ஒப்புவித்திருந்தார்கள் என்று அவன் உணர்ந்திருந்தான். ஆனால் தலைமைக் குருக்கள் தங்களுக்குப் பரபாவையே அவன் விடுதலை செய்ய வேண்டுமெனக் கேட்குமாறு கூட்டத்தினரைத் தூண்டிவிட்டார்கள். பிலாத்து மீண்டும் அவர்களைப் பார்த்து,

**பிலா.** : அப்படியானால் நீங்கள் யூதரின் அரசர் என்று குறிப்பிடும் இவனை நான் என்ன செய்ய வேண்டும்?

**விரி.உ** : என்று கேட்டான். அவர்கள்,

**எல்.** : அவனைச் சிலுவையில் அறையும்

**விரி.உ** : என்று மீண்டும் கத்தினார்கள். அதற்குப் பிலாத்து,

**பிலா.** : இவன் செய்த குற்றம் என்ன?

**விரி.உ** : என்று கேட்க, அவர்கள்,

**எல்.** : அவனைச் சிலுவையில் அறையும்

**விரி.உ** : என்று இன்னும் உரக்கக் கத்தினார்கள். ஆகவே பிலாத்து கூட்டத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் பரபாவை விடுதலை செய்து, இயேசுவைக் கசையால் அடித்து, சிலுவையில் அறையுமாறு ஒப்புவித்தான். பிறகு படைவீரர் அவரை ஆளுநர் மாளிகையின் முற்றத்திற்கு இழுத்துக்கொண்டு போய்ப் படைப்பிரிவினர் அனைவரையும் கூட்டினர்; அவருக்குச் செந்நிற ஆடையை உடுத்தினர்; ஒரு முள் முடி பின்னி அவருக்குச் சூட்டி,

**வீரர்** : யூதரின் அரசே வாழ்க!

**விரி.உ** : என்று அவரை வாழ்த்தத் தொடங்கினர்; மேலும் கோலால் அவர் தலையில் அடித்து, அவர்மீது துப்பி, முழந்தாள்படியிட்டு அவரை வணங்கினர்; அவரை ஏளனம் செய்த பின் செந்நிற ஆடையைக் கழற்றி விட்டு அவருடைய ஆடைகளை அணிவித்து அவரைச் சிலுவையில் அறைவதற்காக வெளியே கூட்டிச் சென்றனர். அப்பொழுது அலக்சாந்தர், ரூபு ஆகியோரின் தந்தையான சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்து கொண்டிருந்தார். படைவீரர்கள் இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி அவரைக் கட்டாயப்படுத்தினார்கள். அவர்கள் மண்டைஓட்டு இடம் எனப்பொருள்படும் கொல்கொதா வுக்கு இயேசுவைக் கொண்டு சென்றார்கள் அங்கே அவருக்கு வெள்ளைப் போளம் கலந்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தார்கள். ஆனால் அவர் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை. பிறகு அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; குலுக்கல் முறையில் யாருக்கு எது என்று பார்த்து அவருடைய ஆடைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள். அவரைச் சிலுவையில் அறைந்தபோது காலை ஒன்பது மணி. அவரது மரண தண்டனைக்கான காரணத்தை அறிவிக்க யூதரின் அரசன் என்று அவர்கள் எழுதிவைத்தார்கள்; அவருடைய வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக, இரு கள்வர்களை அவருடன் சிலுவைகளில் அறைந்தார்கள். அவ்வழியே சென்றவர்கள் தங்கள் தலைகளை அசைத்து,

**சிலர்** : ஆகா, திருக்கோவிலை இடித்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே, சிலுவையிலிருந்து இறங்கி உன்னையே விடுவித்துக்கொள்

**விரி.உ** : என்று அவரைப் பழித்துரைத்தார்கள். அவ்வாறே தலைமைக் குருக்கள் மறைநூல் அறிஞர்களுடன் சேர்ந்து அவரை ஏளனம் செய்து, பிறரை விடுவித்தான், தன்னையே விடுவிக்க முடியவில்லை என்று தங்களிடையே பேசிக்கொண்டார்கள். அவர்கள்,

**த. குரு** : இஸ்ரயேலின் அரசனாகிய மெசியா இப்போது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும் அப்போது நாங்கள் கண்டு நம்புவோம்

**விரி.உ** : என்றார்கள்.அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருந்தவர்களும் அவரை இகழ்ந்தார்கள். நண்பகல் வந்தபொழுது நாடெங்கும் இருள் உண்டாயிற்று. பிற்பகல் மூன்று மணிவரை அது நீடித்தது. பிற்பகல் மூன்று மணிக்கு இயேசு,

**இயேசு** : எலோயி, எலோயி, லெமா சபக்தானி?

**விரி.உ** : என்று உரக்கக் கத்தினார். என் இறைவா, என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்? என்பது அதற்குப் பொருள். சூழ நின்று கொண்டிருந்தவர்களுள் சிலர் அதைக்கேட்டு,

**சிலர்** : இதோ! எலியாவைக் கூப்பிடுகிறான்

**விரி.உ** : என்றனர். அப்பொழுது அவர்களுள் ஒருவர் ஓடிச்சென்று கடற்பஞ்சை எடுத்து, புளித்த திராட்சை இரசத்தில் தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி, அவருக்குக் குடிக்கக் கொடுத்துக்கொண்டே,

**ஒருவர்** : பொறுங்கள், எலியா இவனைக் கீழே இறக்க வருவாரா, பார்ப்போம்

**விரி.உ** : என்றார். இயேசுவோ உரக்கக் கத்தி உயிர் துறந்தார்.

**அனைவரும் முழந்தாளிட்டு சிறிது நேரம் அமைதியாக மன்றாடுவோம்.**

**விரி.உ** : அப்பொழுது திருக்கோவிலின் திரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது. அவருக்கு எதிரே நின்றுகொண்டிருந்த நூற்றுவர் தலைவர், அவர் இவ்வாறு உயிர் துறந்ததைக் கண்டு,

**நூ. த.** : இம்மனிதர் உண்மையாகவே இறைமகன்

**விரி.உ** : என்றார். பெண்கள் சிலரும் தொலையில் நின்று உற்று நோக்கிக்கொண்டிருந்தனர். அவர்களுள் மகதலா மரியாவும் சின்ன யாக்கோபு, யோசே ஆகியோரின் தாயாகிய மரியாவும், சலோமி என்பவரும் இருந்தனர். இயேசு கலிலேயாவில் இருந்த போது அவர்கள் அவரைப் பின்பற்றி அவருக்குப் பணிவிடை செய்து வந்தவர்கள். அவருடன் எருசலேமுக்கு வந்திருந்த வேறுபல பெண்களும் அங்கே இருந்தார்கள். இதற்குள் மாலை வேளையாகிவிட்டது. அன்று ஓய்வுநாளுக்கு முந்திய ஆயத்த நாளாக இருந்தபடியால், அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் துணிவுடன் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். அவர் மதிப்புக்குரிய தலைமைச் சங்க உறுப்பினர். அவரும் இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தவர். ஏற்கெனவே இயேசு இறந்துவிட்டதைக் குறித்துப் பிலாத்து வியப்படைந்து, நூற்றுவர் தலைவரை அழைத்து,

**பிலா.** : அவன் இதற்குள் இறந்து விட்டானா?

**விரி.உ** : என்று கேட்டான். நூற்றுவர் தலைவரிடமிருந்து கேட்டு அறிந்ததும் உடலை அவன் யோசேப்பிடம் அளித்தான். யோசேப்பு மெல்லிய துணி ஒன்றை வாங்கி வந்து, இயேசுவின் உடலை இறக்கித் துணியால் சுற்றிப் பாறையில் வெட்டப்பட்டிருந்த கல்லறையில் கொண்டு வைத்தார்; அதன் வாயிலில் ஒரு கல்லை உருட்டி வைத்தார். அவரை எங்கே வைத்தனர் என்பதை மகதலா மரியாவும் யோசேப்பின் தாய் மரியாவும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

---

**மூன்றாம் ஆண்டு**

## தூய லூக்கா எழுதியபடி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் 22 : 14 - 23 : 56

**விரி.உ** : நேரம் ஆனதும் இயேசு திருத்தூதரோடு பந்தியில் அமர்ந்தார். அப்போது இயேசு அவர்களை நோக்கி,

**இயேசு** : நான் துன்பங்கள் படுமுன் உங்களோடு இந்தப் பாஸ்கா விருந்தை உண்பதற்கு மிக மிக ஆவலாய் இருந்தேன். ஏனெனில் இறையாட்சியில் இது நிறைவேறும்வரை இதை நான் உண்ணமாட்டேன் என்று உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களிடம்,

**இயேசு** : இதைப் பெற்று உங்களுக்குள்ளே பகிர்ந்துகொள்ளுங்கள். ஏனெனில், இது முதல் இறையாட்சி வரும்வரை, திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பதில்லை என நான் உங்களுக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து,

**இயேசு** : இது உங்களுக்காகக் கொடுக்கப்படும் எனது உடல். என் நினைவாக இதை செய்யுங்கள்

**விரி.உ** : என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து,

**இயேசு** : இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. என்னைக் காட்டிக்கொடுப்பவன் இதோ, என்னோடு பந்தியில் அமர்ந்திருக்கிறான். மானிடமகன் தமக்கென்று

குறிக்கப்பட்டபடியே போகிறார், ஆனால் ஐயோ! அவரைக் காட்டிக்கொடுக்கிறவனுக்குக் கேடு

**விரி.உ** : என்றார். அப்பொழுது அவர்கள்,

**சீடர்.** : நம்மில் இச்செயலைச் செய்யப் போகிறவர் யார்

**விரி.உ** : என்று தங்களுக்குள்ளே கேட்கத் தொடங்கினார்கள். மேலும் தங்களுக்குள்ளே பெரியவராக எண்ணப்பட வேண்டியவர் யார் என்ற விவாதம் அவர்களிடையே எழுந்தது. இயேசு அவர்களிடம்,

**இயேசு** : பிற இனத்தவரின் அரசர்கள் மக்களை அடக்கி ஆளுகின்றார்கள்; அதிகாரம் காட்டுகின்றவர்கள் நன்மை செய்பவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். ஆனால் நீங்கள் அப்படிச் செய்யலாகாது. உங்களுள் பெரியவர் சிறியவராகவும் ஆட்சிபுரிபவர் தொண்டு புரிபவராகவும் மாற வேண்டும். யார் பெரியவர்? பந்தியில் அமர்ந்திருப்பவரா? அல்லது பணிவிடை புரிபவரா? பந்தியில் அமர்ந்திருப்பவர் அல்லவா? நான் உங்கள் நடுவே பணிவிடை புரிபவனாக இருக்கிறேன். நான் சோதிக்கப்படும்போது என்னோடு இருந்தவர்கள் நீங்களே. என் தந்தை எனக்கு ஆட்சியுரிமை கொடுத்திருப்பது போல நானும் உங்களுக்குக் கொடுக்கிறேன். ஆகவே என் ஆட்சி வரும்போது நீங்கள் என்னோடு பந்தியில் அமர்ந்து உண்டு குடிப்பீர்கள்; இஸ்ரயேலின் பன்னிரு குலத்தவருக்கும் தீர்ப்பு வழங்க அரியணையில் அமர்வீர்கள். "சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைப்போல் உங்களைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால் நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன். நீ மனந்திரும்பியபின் உன் சகோதரர்களை உறுதிப்படுத்து"

**விரி.உ** : என்றார். அதற்கு பேதுரு,

**பேதுரு** : ஆண்டவரே, உம்மோடு சிறையிடப்படுவதற்கும் ஏன், சாவதற்கும் நான் ஆயத்தமாய் உள்ளேன்

**விரி.உ** : என்றார். இயேசு அவரிடம்,

**இயேசு** : பேதுருவே, இன்றிரவு, என்னைத் தெரியாது என மும்முறை நீ மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உனக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். இயேசு சீடர்களிடம்,

**இயேசு** : நான் உங்களைப் பணப்பையோ வேறுபையோ மிதியடியோ எதுவுமில்லாமல் அனுப்பியபோது, உங்களுக்கு ஏதாவது குறை இருந்ததா?

**விரி.உ** : என்று கேட்டார். அவர்கள்,

**சீடர்.** : ஒரு குறையும் இருந்ததில்லை

**விரி.உ** : என்றார்கள். அவர் அவர்களிடம்,

**இயேசு** : ஆனால், இப்பொழுது பணப்பை உடையவர் அதை எடுத்துக் கொள்ளட்டும்; வேறு பை உடையவரும் அவ்வாறே செய்யட்டும். வாள் இல்லாதவர் தம் மேலுடையை விற்று வாள் வாங்கிக் கொள்ளட்டும். ஏனெனில் நான் உங்களுக்குச் சொல்கிறேன்; கொடியவருள் ஒருவராகக் கருதப்பட்டார் என்று மறைநூலில் எழுதப்பட்டுள்ளது என் வாழ்வில் நிறைவேற வேண்டும். என்னைப் பற்றியவை எல்லாம் நிறைவேறி வருகின்றன

**விரி.உ** : என்றார். அவர்கள்

**சீடர்.** : ஆண்டவரே, இதோ! இங்கே இரு வாள்கள் உள்ளன

**விரி.உ** : என்றார்கள். இயேசு அவர்களிடம்,

**இயேசு** : போதும்

**விரி.உ** : என்றார். இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தம் வழக்கப்படி ஒலிவ மலைக்குச் சென்றார். சீடர்களும் அவரைப் பின் தொடர்ந்தார்கள். அந்த இடத்தை அடைந்ததும் அவர் அவர்களிடம்,

**இயேசு** : சோதனைக்கு உட்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள்,

**விரி.உ** : என்றார். பிறகு அவர் அவர்களை விட்டுக் கல்லெறிதூரம் விலகிச் சென்று, முழந்தாள்படியிட்டு, இறைவனிடம் வேண்டினார்:

**இயேசு** : தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும் என் விருப்பப்படி அல்ல; உம் விருப்பப்படியே நிகழட்டும்

**விரி.உ** : என்று கூறினார். அப்போது விண்ணகத்திலிருந்து ஒரு தூதர் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார். அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே, உருக்கமாய் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். அவரது வியர்வை பெரும் இரத்தத் துளிகளைப் போலத் தரையில் விழுந்தது. அவர் இறைவேண்டலை முடித்துவிட்டு எழுந்து சீடர்களிடம் வந்தபோது அவர்கள் துயரத்தால் சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களிடம்,

**இயேசு** : என்ன, உறங்கிக் கொண்டா இருக்கிறீர்கள்? சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்

**விரி.உ** : என்றார். இயேசு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, இதோ! மக்கள் கூட்டமாய் வந்தனர். பன்னிருவருள் ஒருவனான யூதாசு என்பவன் அவர்களுக்குமுன் வந்து அவரை முத்தமிட நெருங்கினான். இயேசு அவனிடம்,

**இயேசு** : யூதாசே, முத்தமிட்டா மானிட மகனைக் காட்டிக் கொடுக்கப் போகிறாய்?

**விரி.உ** : என்றார். அவரைச் சூழ நின்றவர்கள் நிகழப்போவதை உணர்ந்து,

**சீடர்.** : ஆண்டவரே, வாளால் வெட்டலாமா?

**விரி.உ** : என்று கேட்டார்கள். அப்பொழுது அவர்களுள் ஒருவர் தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி அவருடைய வலக் காதைத் துண்டித்தார். இயேசு அவர்களைப் பார்த்து,

**இயேசு** : விடுங்கள், போதும்

**விரி.உ** : என்று கூறி அவருடைய காதைத் தொட்டு நலமாக்கினார். அவர் தம்மிடம் வந்த தலைமைக் குருக்களையும் கோவில் காவல் தலைவர்களையும் மூப்பர்களையும் பார்த்து,

**இயேசு** : ஒரு கள்வனைப் பிடிக்க வருவதுபோல நீங்கள் வாள்களோடும், தடிகளோடும் வந்தது ஏன்? நான் நாள்தோறும் கோவிலில் உங்களோடு இருந்தும் நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே. ஆனால் இது உங்களுடைய நேரம்; இப்போது இருள் அதிகாரம் செலுத்துகிறது

**விரி.உ** : என்றார். பின்னர் அவர்கள் இயேசுவைக் கைதுசெய்து இழுத்துச் சென்று தலைமைக் குருவின் வீட்டுக்குக் கொண்டு போனார்கள் பேதுரு தொலையில் அவரைப் பின்தொடர்ந்தார். வீட்டு உள்முற்றத்தின் நடுவில் நெருப்பு மூட்டி, அதைச் சுற்றி அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பேதுருவும் அவர்களோடு இருந்தார். அப்போது பணிப்பெண் ஒருவர் நெருப்பின் அருகில் அவர் அமர்ந்திருப்பதைக் கண்டு, அவரை உற்றுப்பார்த்து,

**பணி.** : இவனும் அவனோடு இருந்தவன்

**விரி.உ** : என்றார். அவரோ,

**பேதுரு** : அம்மா, அவரை எனக்குத் தெரியாது

**விரி.உ** : என்று மறுதலித்தார். சிறிது நேரத்திற்குப்பின் அவரைக் கண்ட வேறு ஒருவர்,

**ஒருவர்** : நீயும் அவர்களைச் சேர்ந்தவன்தான்

**விரி.உ** : என்றார். பேதுரு,

**பேதுரு** : இல்லையப்பா

**விரி.உ** : என்றார். ஏறக்குறைய ஒரு மணிநேரத்திற்குப்பின்பு மற்றொருவர்,

**ஒருவர்** : உண்மையாகவே இவனும் அவனோடு இருந்தான் இவனும் கலிலேயன்தான்

**விரி.உ** : என்று வலியுறுத்திக் கூறினார். பேதுருவோ,

**பேதுரு** : நீர் குறிப்பிடுபவரை எனக்குத் தெரியாது

**விரி.உ** : என்றார். உடனேயே, அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தபோதே, சேவல் கூவிற்று. ஆண்டவர் திரும்பி, பேதுருவைக் கூர்ந்து நோக்கினார் இன்று சேவல் கூவு முன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய் என்று ஆண்டவர் தமக்குக் கூறியதைப் பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே சென்று மனம் நொந்து அழுதார். இயேசுவைப் பிடித்துவைத்திருந்தவர்கள் அவரை ஏளனம் செய்து நையப்புடைத்தார்கள். அவரது முகத்தை மூடி,

**படை.** : உன்னை அடித்தவர் யார்? இறைவாக்கினனே, சொல்

**விரி.உ** : என்று கேட்டார்கள். இன்னும் பலவாறு அவரைப் பழித்துரைத்தார்கள். பொழுது விடிந்ததும் மக்களின் மூப்பர்களும் தலைமைக்குருக்களும் மறைநூல் அறிஞர்களும் கூடிவந்தார்கள்; இயேசுவை இழுத்துச் சென்று தங்கள் மூப்பர் சங்கத்தின்முன் நிறுத்தினார்கள். அவர்கள்,

**மூ,த.கு.** : நீ மெசியா தானா? எங்களிடம் சொல்

**விரி.உ** : என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம்,

**இயேசு** : நான் உங்களிடம் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள் நான் உங்களிடம் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டீர்கள். இதுமுதல் மானிடமகன் வல்லவராம் கடவுளின் வலப்புறத்தில் வீற்றிருப்பார்

**விரி.உ** : என்றார். அதற்கு அவர்கள் அனைவரும்,

**மூ,த.கு.** : அப்படியானால் நீ இறைமகனா?

**விரி.உ** : என்று கேட்டனர். அவரோ,

**இயேசு** : நான் இறைமகன் என நீங்களே சொல்லுகிறீர்கள்

**விரி.உ** : என்று அவர்களுக்குச் சொன்னார். அதற்கு அவர்கள்,

**மூ,த.கு.** : இன்னும் நமக்குச் சான்றுகள் தேவையா? இவன் வாயிலிருந்து நாமே கேட்டோமே

**விரி.உ** : என்றார்கள். திரண்டிருந்த மக்கள் அனைவரும் எழுந்து இயேசுவைப் பிலாத்தின்முன் கொண்டு சென்றனர்.

**மக்கள்** : இவன் நம் மக்கள் சீரழியக் காரணமாக இருக்கிறான்; சீசருக்குக் கப்பம் கட்டக்கூடாது என்கிறான்; தானே மெசியாவாகிய அரசன் என்று சொல்லிக் கொள்கிறான். இவற்றையெல்லாம் நாங்களே கேட்டோம்

**விரி.உ** : என்று அவர்கள் இயேசுவின் மேல் குற்றம் சுமத்தத் தொடங்கினார்கள். பிலாத்து அவரை நோக்கி,

**பிலா.** : நீ யூதரின் அரசனா?

**விரி.உ** : என்று கேட்க, அவர்,

**இயேசு** : அவ்வாறு நீர் சொல்கிறீர்

**விரி.உ** : என்று பதில் கூறினார். பிலாத்து தலைமைக் குருக்களையும் மக்கள் கூட்டத்தையும் பார்த்து,

**பிலா.** : இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை

**விரி.உ** : என்று கூறினான். ஆனால் அவர்கள்,

**மக்கள்** : இவன் கலிலேயா தொடங்கி யூதேயா வரை இவ்விடம் முழுவதிலும் மக்களுக்குக் கற்பித்து அவர்களைத் தூண்டிவிடுகிறான்

**விரி.உ** : என்று வலியுறுத்திக் கூறினார்கள். இதைக் கேட்ட பிலாத்து,

**பிலா.** : இவன் கலிலேயனா?

**விரி.உ** : என்று கேட்டான்; அவர் ஏரோதுவின் அதிகாரத்திற்கு உட்பட்டவர் என்று அவன் அறிந்து, அப்போது எருசலேமிலிருந்த ஏரோதிடம் அவரை அனுப்பினான். இயேசுவைக் கண்ட ஏரோது மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்; ஏனெனில், அவரைக் குறித்துக் கேள்விப்பட்டு அவரைக் காண நெடுங்காலமாய் விருப்பமாய் இருந்தான்; அவர் அரும் அடையாளம் ஏதாவது செய்வதைக் காணலாம் என்றும் நெடுங்காலமாய் எதிர்பார்த்திருந்தான். அவன் அவரிடம் பல கேள்விகள் கேட்டான். ஆனால் அவர் அவனுக்குப் பதில் எதுவும் கூறவில்லை. அங்கு நின்ற தலைமைக் குருக்களும் மறைநூல் அறிஞர்களும் அவர்மேல் மிகுதியான குற்றம் சுமத்திக் கொண்டிருந்தார்கள். ஏரோது தன் படைவீரரோடு அவரை இகழ்ந்து ஏளனம் செய்து, பளபளப்பான ஆடையை அவருக்கு உடுத்தி அவரைப் பிலாத்திடம் திருப்பி அனுப்பினான். அதுவரை ஒருவருக்கு ஒருவர் பகைவராய் இருந்த ஏரோதும் பிலாத்தும் அன்று நண்பர்களாயினர். பிலாத்து தலைமைக் குருக்களையும் ஆட்சியாளர்களையும் மக்களையும் ஒன்றாக வரவழைத்தான். அவர்களை நோக்கி,

**பிலா.** : மக்கள் சீரழியக் காரணமாய் இருக்கிறான் என்று இவனை என்னிடம் கொண்டு வந்தீர்களே; இதோ, நான் உங்கள் முன்னிலையில் விசாரித்தும் நீங்கள் சுமத்துகிற எந்தக் குற்றத்தையும் இவனிடத்தில் காணவில்லை. ஏரோதும் குற்றம் எதுவும் காணவில்லை ஆகவே, அவர் இவனை நம்மிடம் திருப்பி அனுப்பியுள்ளார். மரண தண்டனைக்குரிய யாதொன்றையும்

இவன் செய்யவில்லை என்பது தெளிவு. எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்

**விரி.உ** : என்றான். விழாவின்போது அவர்களுக்கென ஒரு கைதியை விடுவிக்க வேண்டிய கட்டாயம் அவனுக்கு இருந்தது. திரண்டிருந்த மக்கள் அனைவரும்,

**மக்கள்** : இவன் ஒழிக! பரபாவை எங்களுக்கென விடுதலை செய்யும்

**விரி.உ** : என்று கத்தினர். பரபா நகரில் நடந்த ஒரு கலகத்தில் ஈடுபட்டு கொலை செய்தற்காக சிறையிலிடப்பட்டவன். பிலாத்து இயேசுவை விடுதலை செய்ய விரும்பி மீண்டும் அவர்களைக் கூப்பிட்டுப் பேசினான். ஆனால் அவர்கள்,

**மக்கள்** : அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்

**விரி.உ** : என்று கத்தினார்கள். மூன்றாம் முறையாக அவன் அவர்களை நோக்கி,

**பிலா.** : இவன் செய்த குற்றம் என்ன? மரண தண்டனைக்குரிய குற்றம் ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை. எனவே இவனைத் தண்டித்து விடுதலை செய்வேன்

**விரி.உ** : என்றான். அவர்கள் அவரைச் சிலுவையில் அறைய வேண்டுமென்று உரத்த குரலில் வற்புறுத்திக் கேட்டார்கள். அவர்கள் குரலே வென்றது. அவர்கள் கேட்டபடியே பிலாத்து தீர்ப்பு அளித்தான். கலகத்தில் ஈடுபட்டு கொலை செய்ததற்காகச் சிறையிலிடப்பட்டிருந்தவனை அவர்கள் கேட்டுக் கொண்டபடியே அவன் விடுதலை செய்தான்; இயேசுவை அவர்கள் விருப்பப்படி செய்ய விட்டுவிட்டான். அவர்கள் இயேசுவை இழுத்துச் சென்றுகொண்டிருந்தபோது சிரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப்பின் அதைச் சுமந்து கொண்டுபோகச் செய்தார்கள். பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி,

**இயேசு** : எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். ஏனெனில் இதோ, ஒரு காலம் வரும். அப்போது 'மலடிகள் பேறுபெற்றோர்' என்றும் 'பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறு பெற்றோர்' என்றும் சொல்வார்கள். அப்போது அவர்கள் மலைகளைப் பார்த்து, 'எங்கள் மேல் விழுங்கள்' எனவும் குன்றுகளைப் பார்த்து, 'எங்களை மூடிக்கொள்ளுங்கள்' எனவும் சொல்வார்கள். பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால் பட்ட மரத்துக்கு என்னதான்

செய்யமாட்டார்கள்!

**விரி.உ** : என்றார். வேறு இரண்டு குற்றவாளிகளையும் மரணதண்டனைக்காக அவர்கள் அவரோடு கொண்டுசென்றார்கள். மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்ததும் அங்கே அவரையும் வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக அக்குற்றவாளிகளையும் அவர்கள் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்போது இயேசு,

**இயேசு** : தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை

**விரி.உ** : என்று சொன்னார். அவர்கள் அவருடைய ஆடைகளைக் குலுக்கல் முறையில் பங்கிட்டுக் கொண்டார்கள். மக்கள் இவற்றைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஆட்சியாளர்கள்,

**ஆட்சி.** : பிறரை விடுவித்தான்; இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும்

**விரி.உ** : என்று கேலிசெய்தார்கள். படைவீரர் அவரிடம் வந்து புளித்த திராட்சை இரசத்தைக் கொடுத்து,

**படை.** : நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்

**விரி.உ** : என்று எள்ளி நகையாடினர். இவன் யூதரின் அரசன் என்று அவரது சிலுவையின் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்தது. சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன்,

**குற்ற** : நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று

**விரி.உ** : என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால் மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு,

**குற்ற** : கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!

**விரி.உ** : என்று பதிலுரைத்தான். பின்பு அவன்,

**குற்ற** : இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்

**விரி.உ** : என்றான். அதற்கு இயேசு அவனிடம்,

**இயேசு** : நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்

**விரி.உ** : என்றார். ஏறக்குறைய நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. கதிரவன் ஒளி கொடுக்கவில்லை. திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது.

**இயேசு** : தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்

**விரி.உ** : என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்.

அனைவரும் முழந்தாளிட்டு சிறிது நேரம் அமைதியாக மன்றாடுவோம்.

**விரி.உ** : இதைக் கண்ட நூற்றுவர் தலைவர்,

**நூ.த.** : இவர் உண்மையாகவே நேர்மையாளர்

**விரி.உ** : என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார். இக்காட்சியைக் காணக் கூடிவந்திருந்த மக்கள் அனைவரும் நிகழ்ந்தவற்றைக் கண்டு, மார்பில் அடித்துக் கொண்டு திரும்பிச் சென்றனர். அவருக்கு அறிமுகமான அனைவரும், கலிலேயாவிலிருந்து அவரைப் பின்பற்றி வந்திருந்த பெண்களும் தொலையிலிருந்து இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யோசேப்பு என்னும் பெயருடைய ஒருவர் இருந்தார். அவர் தலைமைச் சங்க உறுப்பினர், நல்லவர், நேர்மையாளர். தலைமைச் சங்கத்தாரின் திட்டத்துக்கும் செயலுக்கும் இணங்காத அவர் யூதேயாவிலுள்ள அரிமத்தியா ஊரைச் சேர்ந்தவர் இறையாட்சியின் வருகைக்காகக் காத்திருந்தவர். அவர் பிலாத்திடம் போய் இயேசுவின் உடலைக் கேட்டார். அவர் அவரது உடலை இறக்கி, மெல்லிய துணியால் சுற்றிப் பாறையில் குடைந்திருந்த கல்லறையில் வைத்தார். அதற்கு முன்பு யாரையும் அதில் அடக்கம் செய்ததில்லை. அன்று ஆயத்த நாள்; ஓய்வுநாளின் தொடக்கம். கலிலேயாவிலிருந்து அவரோடு வந்திருந்த பெண்கள் பின்தொடர்ந்து சென்று கல்லறையைக் கண்டார்கள்; அவருடைய உடலை வைத்த விதத்தைப் பார்த்து விட்டு, திரும்பிப் போய் நறுமணப் பொருள்களையும் நறுமணத் தைலத்தையும் ஆயத்தம் செய்தார்கள். கட்டளைப்படி, அவர்கள் ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

**22.** பாடுகளின் வரலாற்றுக்குப்பின் தேவைக்கு ஏற்பச் சுருக்கமான மறையுரை இடம் பெறலாம். சிறிது நேரம் அமைதியும் இடம் பெறலாம். நம்பிக்கை அறிக்கையும், பொது மன்றாட்டும் சொல்லப்படும்.

## 04 நற்கருணை வழிபாடு

### 23. காணிக்கை மீது மன்றாட்டு

ஆண்டவரே, உம் ஒரே திருமகனின் பாடுகளால் நீர் எம்மீது கொண்டுள்ள இரக்கம் நெருங்கி வருவதாக; எங்கள் செயல்களால் தகுதியற்றவர்கள் ஆயினும் இந்த ஒரே பலியின் ஆற்றலால் உமது இரக்கத்தை முன்கூட்டியே நாங்கள் கண்டுணர்வோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

### 24. தொடக்கவுரை : ஆண்டவருடைய பாடுகள்

முு. மொ. : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக
பதில் : உம் ஆன்மாவோடும் இருப்பாராக
மு. மொ. : இதயங்களை மேலே எழுப்புங்கள்
பதில் : ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்
மு. மொ. : நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்
பதில் : அது தகுதியும் நீதியும் ஆனதே

ஆண்டவரே, தூயவரான தந்தையே,
என்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக
எந்நாளும் எவ்விடத்திலும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துவது
மெய்யாகவே தகுதியும் நீதியும் ஆகும்;
எங்கள் கடமையும் மீட்புக்கு உரிய செயலும் ஆகும்.

மாசற்ற கிறிஸ்து பாவிகளுக்காகப் பாடுபடவும்
தீயோரின் மீட்புக்காக அநீதியாகத் தீர்ப்பிடப்படவும் திருவுளமானார்.
அவரது இறப்பு எங்கள் பாவங்களைப் போக்கியது;
அவரது உயிர்த்தெழுதல் எங்களை உமக்கு ஏற்புடையவர்கள் ஆக்கியது.

ஆகவே நாங்கள் வானதூதர் அனைவரோடும் சேர்ந்து
உம்மைப் புகழ்ந்து போற்றி, அக்களித்துக் கொண்டாடி,
ஆர்ப்பரித்துச் சொல்வதாவது: தூயவர்... தூயவர்... தூயவர்...

### 25. திருவிருந்துப் பல்லவி மத் 26:42

தந்தையே, நான் குடித்தால் அன்றி இத்துன்பக் கிண்ணம் அகல முடியாதென்றால், உமது திருவுளப்படியே ஆகட்டும்.

## 26. திருவிருந்துக்குப் பின் மன்றாட்டு

ஆண்டவரே, புனிதக் கொடைகளால் நிறைவு பெற்ற நாங்கள் உம்மைப் பணிவுடன் வேண்டுகின்றோம்: அதனால் நாங்கள் நம்புவதை உம் திருமகனின் இறப்பினால் எதிர்நோக்கியிருக்கச் செய்த நீர் நாங்கள் நாடுவதை அவரது உயிர்ப்பினால் வந்தடையச் செய்வீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 27. மக்கள் மீது மன்றாட்டு

ஆண்டவரே, உம்முடைய இந்தக் குடும்பத்துக்காக எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து துன்புறுத்துவோருக்குத் தம்மைக் கையளிக்கவும் சிலுவையின் கொடுமையைத் தாங்கிக்கொள்ளவும் தயங்கவில்லை; நீர் இக்குடும்பத்தைக் கண்ணோக்கி அருள்புரிவீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.



# உ. புனித வாரம் - வியாழன்

## ஆண்டவருடைய இரவு விருந்து



**01.** ஆண்டவருடைய இரவு விருந்துத் திருப்பலி மாலை வேளையில் வசதியான நேரத்தில் இறைமக்கள் அனைவருடைய முழுமையான பங்கேற்புடன் கொண்டாடப்படும். அதில் அருட்பணியாளர்கள; பணியாளர்கள் அனைவரும் தத்தம் பணிகளை நிறைவேற்றுவார்கள்.

**02.** இன்று கிறிஸ்மா எண்ணெய்த் திருப்பலியில் ஏற்கெனவே கூட்டுத்திருப்பலி நிறைவேற்றி இருந்தாலும் அல்லது நம்பிக்கையாளர் நலனுக்காக வேறொரு திருப்பலி கொண்டாட வேண்டியிருந்தாலும் அருள் பணியாளர்கள் அனைவரும் மீண்டும் கூட்டுத்திருப்பலி நிறைவேற்றலாம்.

**03.** அருள்பணி நலனைக் கருதி, கோவில்களிலோ சிற்றாலயங்களிலோ மாலையில் (அவசரத் தேவையானால்) மற்றொரு திருப்பலி ஒப்புக்கொடுக்க ஆயர் அனுமதி வழங்கலாம். ஆனால் மாலைத் திருப்பலியில் பங்கேற்க இயலாத நம்பிக்கையாளருக்காக மட்டும் காலையில் திருப்பலி நிறைவேற்ற அனுமதி தரலாம். எனினும், இத்தகைய கொண்டாட்டங்கள் தனிப்பட்ட ஒரு சிலரின் அல்லது தனிப்பட்ட சிறிய குழுக்களின் வசதிக்காக அமையாமலும் மாலையில் நடக்கும் திருப்பலிக்கு ஊறு விளைவிக்காமலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**04.** திருப்பலியில் மட்டும் நம்பிக்கையாளருக்கு நற்கருணை வழங்கலாம். நோயாளிகளுக்கு இந்நாளில் எந்த நேரத்திலும் நற்கருணை வழங்கலாம்.

**05.** இந்நாளின் இயல்புக்கு ஏற்றவாறு பீடம் மலர்களால் எளிமையாக அணிசெய்யப்படலாம். நற்கருணைப் பேழை முழுவதும் வெறுமையாய் இருக்க வேண்டும். ஆனால் இன்றும் மறு நாளும் அருள்பணியாளர்களுக்கும் மக்களுக்கும் போதிய அளவு அப்பங்கள் இதே திருப்பலியில் அர்ச்சிக்கப்பட வேண்டும்.

## 01 தொடக்கச் சடங்கு

**முன்னுரை**

ஆண்டவரின் இறுதி இராவுணவை நினைவுகூறும் இந்த மாலைத் திருப்பலியானது தொடக்கச் சடங்கு, இறைவாக்கு வழிபாடு, பாதம் கழுவும் சடங்கு, நற்கருணை வழிபாடு, நற்கருணைப் பவனி ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. எல்லாம் வல்ல கடவுள் தம் ஒரே மகனை இவ்வுலகிற்கு அனுப்பி, தம் மகனை சிலுவைச் சாவுக்கு கையளிக்கிறார். இதன் வழியாக, தாம் இவ்வுலகின் மீது அளவில்லாத அன்பு கொண்டுள்ளார் என்பதையும் இயேசு கிறிஸ்துவில் மகிமை பொருந்திய மணிமகுடமான தாழ்ச்சியையும் இன்றைய வழிபாடு வழியாக நாம் நினைவு கூர்கிறோம். கடவுள் தமது பேரிரக்கத்தாலும் பேராற்றலாலும் இஸ்ரயேல் மக்களை பாரவோன் அடிமைத்தன, ஆதிக்க நெறியிலிருந்து மீட்டதை நினைவு கூர்கிறோம். அழிந்துபோகும் இவ்வுடல் இன்பம், இவ்வுலக இன்பம் இவற்றின் பிடியிலிருந்து கடந்து, அழியாத வாழ்வைத் தரும் கிறிஸ்துவின் விலைமதிப்பில்லா திரு உடல், திரு இரத்தம் இவற்றின் மீது நாம் வைக்கும் நம்பிக்கையை பலப்படுத்துவோம். பாஸ்கா என்றால் கடத்தல் என்பது பொருள். இயேசுவின் இராவுணவான பாஸ்கா விழாவை நினைவுகூறும் இந்த நாளில், நமது வாழ்வில் இறையன்பை உணரத் தடையாக உள்ள தன்னலம், ஆணவம், பழிக்குப்பழி வாங்குதல், வன்முறையில் ஈடுபடுதல், அறமற்ற வாழ்க்கை முறை இவற்றிலிருந்து வெளியேறி இயேசுவின் தூய அன்பு, நம்பிக்கை, சமாதானம், மன்னிப்பு போன்ற நற்பண்புகளுக்குக் கடந்து செல்வோம். கடவுள் நம்மீதும் இந்த உலகின் மீதும் கொண்டுள்ள மாறாத அன்பையும் அவர் ஏற்படுத்திய அன்பின் உடன்படிக்கையையும் நினைவு கூர்ந்து இவ்வழிபாட்டில் இறைப்பற்றுடன் பங்கெடுப்போம்.

**06.** வருகைப் பல்லவி காண். கலா 6:14

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையில்தான் நாம் பெருமை பாராட்ட வேண்டும்; அவரிலேதான் நமக்கு மீட்பும் வாழ்வும் உயிர்த்தெழுதலும் உண்டு; அவர் வழியாகவே நாம் மீட்கப்பெற்றோம்; விடுதலை அடைந்தோம்.

**07.** "உன்னதங்களிலே" பாடப்படும் அப்பொழுது மணிகள் ஒலிக்கும். இது முதல் பாஸ்கா திருவிழிப்பில் "உன்னதங்களிலே" பாடும்வரை மணிகள் ஒலிக்காது. ஆனால் தல ஆயர், தேக்கு ஏற்ப, மாற்று விதிகளைத் தரலாம். அதே சமயத்தில் இசைப் பெட்டியும் பிற இசைக் கருவிகளும் பாடலைத் தொடரத் தேவையான அளவுக்கு மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

**08.** திருக்குழும மன்றாட்டு

இறைவா, உம் திருமகன் சாவுக்குத் தம்மைக் கையளிக்கும் வேளையில் நிலைத்து நிற்கும் அன்பின் புதிய பலியையும் திருவிருந்தையும் தமது திரு அவைக்கு அளித்தார்; அதனால் இப்புனிதமிக்க திரு உணவில் அடிக்கடி பங்குகொள்ளும் நாங்கள் இத்துணை மேலான மறைநிகழ்விலிருந்து அன்பின் முழுமையையும் வாழ்வின் நிறைவையும் பெற்றுக்கொள்ள அருள்புரிவீராக. உம்மோடு.

## 02 இறைவாக்கு வழிபாடு

### முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகம் விடுதலைப் பயண நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. பாஸ்கா விழா கொண்டாடும்போது ஆட்டுக்குட்டியை அடித்து அதைப் பகிர்ந்து உண்ண வேண்டும் என்று கூறப்படுகிறது. மேலும் அடிமைத்தன நிலையிலிருந்து மீட்கப்பட்டு, புதுவாழ்வு பெற்று, உரிமையோடும் மனித மாண்போடும் இறைவனால் இஸ்ரயேல் மக்கள் நடத்தப்பட்டனர் என்று கூறும் இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிமடுப்போம்.

### முதல் வாசகம்

**விடுதலைப் பயணம் 12: 1-8, 11-14**

எகிப்து நாட்டில் ஆண்டவர் மோசேக்கும் ஆரோனுக்கும் பின்வருமாறு கூறினார்: உங்களுக்கு மாதங்களில் தலையாயது இம்மாதமே! ஆண்டில் உங்களுக்கு முதல் மாதமும் இதுவே! இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பு முழுவதற்கும் நீங்கள் அறிவியுங்கள்: அவர்கள் இம்மாதம் பத்தாம் நாள், குடும்பத்துக்கு ஓர் ஆடு, வீட்டிற்கு ஓர் ஆடு என்று தேர்ந்தெடுத்துக் கொள்ளட்டும். ஓர் ஆட்டினை உண்ண ஒரு வீட்டில் போதிய ஆள்கள் இல்லையெனில், உண்போரின் எண்ணிக்கைக்கும் உண்ணும் அளவுக்கும் ஏற்ப அண்டை வீட்டாரைச் சேர்த்துக்கொள்ளட்டும். ஆடு குறைபாடற்றதாக, கிடாயாக, ஒரு வயது குட்டியாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுப்பது வெள்ளாடாகவோ செம்மறியாடாகவோ இருக்கலாம். இம்மாதம் பதினான்காம் நாள்வரை அதை வைத்துப் பேணுங்கள். அந்நாள் மாலை மங்கும் வேளையில் இஸ்ரயேல் மக்கள் கூட்டமைப்பின் அனைத்துச் சபையும் அதை வெட்ட வேண்டும். இரத்தத்தில் சிறிதளவு எடுத்து, உண்ணும் வீடுகளின் இரு கதவு நிலைகளிலும், மேல் சட்டத்திலும் பூச வேண்டும். இறைச்சியை அந்த இரவிலேயே உண்ண வேண்டும். நெருப்பில் அதனை வாட்டி, புளிப்பற்ற அப்பத்தோடும் கசப்புக் கீரையோடும் உண்ண வேண்டும். நீங்கள் அதனை உண்ணும் முறையாவது: இடையில் கச்சை கட்டி, கால்களில் காலணி அணிந்து, கையில் கோல் பிடித்து, விரைவாக உண்ணுங்கள்.

இது 'ஆண்டவரின் பாஸ்கா'. ஏனெனில், நான் இன்றிரவிலேயே எகிப்து நாடெங்கும் கடந்து சென்று, எகிப்து நாட்டில் மனிதர் தொடங்கி விலங்குவரை அனைத்து ஆண்பால் தலைப்பிறப்பையும் சாகடிப்பேன். எகிப்தின் தெய்வங்கள் அனைத்தின்மேலும் நான் தீர்ப்பிடுவேன். நானே ஆண்டவர்! இரத்தம் நீங்கள் இருக்கும் வீடுகளில் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். நான் இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்து செல்வேன். எகிப்து நாட்டில் நான் அவர்களைச் சாகடிக்கும்போது, கொல்லும் கொள்ளை நோய் எதுவும் உங்கள் மேல் வராது. இந்நாள் உங்களுக்கு ஒரு நினைவு நாளாக விளங்கும். இதனை ஆண்டவரின் விழாவாக நீங்கள் தலைமுறைதோறும் கொண்டாடுங்கள். இந்த விழா உங்களுக்கு நிலையான நியமமாக இருப்பதாக!

## திருப்பாடல் 116: 12-13. 15-16. 17-18 (பல்லவி: 1 கொரி 10: 16)
## பல்லவி : கடவுளைப் போற்றிக் கிண்ணத்தில் பருகுதல் கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்வதே.

12 ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான்
அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்? 13 மீட்பின் கிண்ணத்தைக் கையில்
எடுத்து, ஆண்டவரது பெயரைத் தொழுவேன். - பல்லவி

15 ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக
மதிப்புக்குரியது. 16 ஆண்டவரே! நான் உண்மையாகவே உம் ஊழியன்; நான்
உம் பணியாள்; உம் அடியாளின் மகன்; என் கட்டுகளை நீர் அவிழ்த்து விட்டீர்.
- பல்லவி

17 நான் உமக்கு நன்றிப் பலி செலுத்துவேன்; ஆண்டவராகிய உம்
பெயரைத் தொழுவேன்; 18 இப்பொழுதே உம் மக்கள் அனைவரின்
முன்னிலையில் ஆண்டவரே! உமக்கு என் பொருத்தனைகளை
நிறைவேற்றுவேன். - பல்லவி

### இரண்டாம் வாசக முன்னுரை
இறைமகன் இயேசுவின் இறப்பிற்கு சான்று பகர நாம் ஒவ்வொருவருமே கடமைப் பட்டிருக்கிறோம். இயேசுவின் திரு உடலை உண்டு திரு இரத்தத்தை பருகும்போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும் வரை அறிக்கையிடுகின்றோம் என்று கூறும் தூய பவுலடிகளாரின் வார்த்தைக்குச் செவி கொடுத்து இயேசுவின் இறப்பிற்குச் சான்று பகர்வோம்.

## இரண்டாம் வாசகம்

### 1 கொரிந்தியர் 11: 23-26
சகோதரர் சகோதரிகளே, ஆண்டவரிடமிருந்து நான் எதைப் பெற்றுக்கொண்டேனோ அதையே உங்களிடம் ஒப்படைக்கிறேன். அதாவது, ஆண்டவராகிய இயேசு காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இரவில், அப்பத்தை எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, "இது உங்களுக்கான என் உடல். இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அப்படியே உணவு அருந்தியபின் கிண்ணத்தையும் எடுத்து, "இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை. நீங்கள் இதிலிருந்து பருகும் போதெல்லாம் என் நினைவாக இவ்வாறு செய்யுங்கள்" என்றார். ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் ஆண்டவருடைய சாவை அவர் வரும்வரை அறிவிக்கிறீர்கள்.

### நற்செய்திக்கு முன் வசனம் : யோவா 13: 34
'ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்னும் புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள், என்கிறார் ஆண்டவர்.

## நற்செய்தி வாசகம்

### யோவான் 13: 1-15

பாஸ்கா விழா தொடங்க இருந்தது. தாம் இவ்வுலகத்தை விட்டுத் தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது என்பதை இயேசு அறிந்திருந்தார். உலகில் வாழ்ந்த தமக்குரியோர்மேல் அன்பு கொண்டிருந்த அவர் அவர்கள்மேல் இறுதிவரையும் அன்பு செலுத்தினார். இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் எண்ணத்தை அலகை சீமோனின் மகனாகிய யூதாசு இஸ்காரியோத்தின் உள்ளத்தில் எழச் செய்திருந்தது. இரவுணவு வேளையில், தந்தை அனைத்தையும் தம் கையில் ஒப்படைத்துள்ளார் என்பதையும் தாம் கடவுளிடமிருந்து வந்ததுபோல் அவரிடமே திரும்பச் செல்ல வேண்டும் என்பதையும் அறிந்தவராய், இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம் மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு, ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டார். பின்னர் ஒரு குவளையில் தண்ணீர் எடுத்துச் சீடர்களுடைய காலடிகளைக் கழுவி இடுப்பில் கட்டியிருந்த துண்டால் துடைக்கத் தொடங்கினார்.

சீமோன் பேதுருவிடம் இயேசு வந்தபோது அவர், "ஆண்டவரே, நீரா என் காலடிகளைக் கழுவப் போகிறீர்?" என்று கேட்டார். இயேசு மறுமொழியாக, "நான் செய்வது இன்னதென்று இப்போது உனக்குப் புரியாது; பின்னரே புரிந்துகொள்வாய்" என்றார். பேதுரு அவரிடம், "நீர் என் காலடிகளைக் கழுவ விடவேமாட்டேன்" என்றார். இயேசு அவரைப் பார்த்து, "நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கு இல்லை" என்றார். அப்போது சீமோன் பேதுரு, "அப்படியானால் ஆண்டவரே, என் காலடிகளை மட்டும் அல்ல, என் கைகளையும் தலையையும்கூடக் கழுவும்" என்றார். இயேசு அவரிடம், "குளித்துவிட்டவர் தம் காலடிகளை மட்டும் கழுவினால் போதும். அவர் தூய்மையாகிவிடுவார். நீங்களும் தூய்மையாய் இருக்கிறீர்கள். ஆனாலும் அனைவரும் தூய்மையாய் இல்லை" என்றார். தம்மைக் காட்டிக் கொடுப்பவன் எவன் என்று அவருக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தது. எனவேதான் 'உங்களுள் அனைவரும் தூய்மையாய் இல்லை' என்றார்.

அவர்களுடைய காலடிகளைக் கழுவியபின் இயேசு தம் மேலுடையை அணிந்துகொண்டு மீண்டும் பந்தியில் அமர்ந்து அவர்களிடம் கூறியது: "நான் உங்களுக்குச் செய்தது என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா? நீங்கள் என்னைப் 'போதகர்' என்றும் 'ஆண்டவர்' என்றும் அழைக்கிறீர்கள். நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே. நான் போதகர்தான், ஆண்டவர்தான். ஆகவே ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்ததுபோல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" என்றார்.

**09.** நற்செய்திப் பறைசாற்றலுக்குப்பின் அருள்பணியாளர் மறையுரை நிகழ்த்துகின்றார். இத்திருப்பலியில் நினைவுகூரப்படுகின்ற ஆற்றல்மிகு மறைநிகழ்வுகள் - அதாவது தூய நற்கருணை, அருள்பணியாளர் திருநிலை, சகோதர அன்பு பற்றிய ஆண்டவருடைய கட்டளை - பற்றி விளக்குகின்றார்.

## 03 காலடிகளைக் கழுவுதல்

**முன்னுரை**

இயேசு சீடர்களின் பாதங்களை கழுவினார். இதனால் தனது அன்பு நிறைந்த தாழ்ச்சியின் குணத்தை வெளிப்படுத்தினார். அதுபோன்று, இப்போது குருவானவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பாதங்களைக் கழுவுவதன் வழியாக இயேசுவின் தாழ்ச்சி நிறை அன்பை வெளிப்படுத்துகிறார்; தன்னுடைய உண்மையான முழுமையான பணிவாழ்வின் பொருளையும் நோக்கத்தையும் உலகறியச் செய்கிறார். அத்தோடு, நிலையான நிறைவான தூய்மையான அன்பையும் வெளிப்படுத்துகிறார். பாதம் கழுவும் செயலானது, இயேசுவின் சிலுவையோடும் சிலுவையின் பொருள் அடங்கிய தியாகத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

சிலுவை என்பது இயேசு கிறிஸ்து தன்னையே வெறுமையாக்குகின்ற தன்மையையும், கடவுளுக்குக் கீழ்ப்படிந்து சாவையும் ஏற்கும் அளவுக்கு இதயத்தில் தாழ்ச்சி கொண்டிருப்பதையும் குறிக்கின்றது. அதுபோல, பாதம் கழுவுதல் என்பது கடவுளின் எல்லையில்லா கருணையையும், இயேசுவின் விவரிக்கமுடியா நிபந்தனையற்ற அன்பையும் குறிக்கின்றது. இயேசுவைப் போன்று நாமும் கொடுக்கும் குணமும், இழுக்கும் துணிவும், தாங்கும் வலிமையும் பெற வேண்டி இந்த பாதம் கழுவும் சடங்கில் இறைப்பற்றுடன் பங்கெடுப்போம்.

**10.** மறையுரை முடிந்தபின், அருள்பணி நலனை முன்னிட்டுக் காலடிகளைக் கழுவும் சடங்கை நடத்தலாம்.

**11.** இறைமக்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோரை வசதியான இடத்தில் தயார் செய்யப்பட்ட இருக்கைகளுக்குப் பணியாளர்கள் அழைத்து வருகின்றார்கள். பின்னர் அருள்பணியாளர் (தேவையானால், திருப்பலி மேலுடையை அகற்றிவிட்டு) அவர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று, பணியாளர் துணையோடு காலடிகளின் மீது தண்ணீர் ஊற்றித் துடைக்கின்றார்.

**12.** இதற்கிடையில் பின்வரும் பாடல்களோ வேறு பொருத்தமான பாடல்களோ பாடப்படும்.

**பல்லவி 1** — **காண். யோவான் 13:4, 5, 15**

பாஸ்கா உணவினை அருந்திட சீடரோடு இயேசு வந்து
பந்தியிலே அமர்ந்திருந்தார்
தம் மேலாடை களைந்து இடுப்பினில் துண்டைக் கட்டி
சீடரிடம் எழுந்து வந்தார்

குவளையில் தண்ணீர் மொண்டு சீடர்களின் பாதம் தொட்டு

கழுவியே துடைத்து விட்டார்
பணி வாழ்வின் பெருமை சொன்னார்

சீமோன் பேதுருவை நாடி வந்து பாதங்களைக் கழுவிட
இயேசு வந்த நேரத்திலே
பேதுருவோ பாதங்களை இயேசுவிடம் காட்டாது
உரிமையில் கடிந்து கொண்டார்
என்னுடைய பாதங்களை என் ஆண்டவர் கழுவுவதா
ஒருபோதும் அனுமதியேன் ஒரு காலும் சம்மதியேன்

நான் செய்வது இன்னதென்று இப்போது புரியாது
பின்னரே புரிந்து கொள்வாய்
உன் பாதம் கழுவிட அனுமதியாவிடில்
என்னோடு பங்கில்லை
ஆண்டவரே போதகரே என் கால்களை மட்டுமல்ல
என் கைகளை தலையையுமே முழுவதும் கழுவி விடும்
முழுவதும் குளித்தவன் கால் மட்டும் கழுவினால்
போதுமென்று அறியாயோ ?
நான் செய்வதன் பொருள் என்னவென்று உமக்கு
இந்நேரம் புரியாதோ ?

நான் ஆண்டவர் போதகர் தான் முன் மாதிரி காட்டுகிறேன்
நீங்கள் ஒருவர் ஒருவரது பாதங்களைக் கழுவுங்கள்
இயேசு சொன்ன வார்த்தைகளை மனதில் இருத்தி
நாமும் வாழ்ந்திடுவோம்
பிறர் பணி செய்து வாழ்வதே நம் வாழ்வின் கடமை
சீடரின் தகுதியென்போம் (2) - 3

ஆண்டவர் பந்தியிலிருந்து எழுந்த பின்னர்
குவளை ஒன்றில் தண்ணீர் எடுத்து,
சீடர்களின் காலடிகளைக் கழுவத் தொடங்கினார்.
இந்த முன்மாதிரியைச் சீடர்களுக்கு விட்டுச் சென்றார்.

**பல்லவி 2** **காண். யோவான் 13:12, 13, 15**

இயேசு தம் சீடர்களோடு இரவு விருந்து அருந்தியபின்
அவர்களுடைய காலடிகளைக் கழுவி, அவர்களிடம் கூறினார்:
ஆண்டவரும் போதகருமான நான் உங்களுக்குச் செய்தது
என்னவென்று உங்களுக்குப் புரிந்ததா?
நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு
நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன்.

**பல்லவி 3** **காண். யோவான் 13:6, 7, 8**

"ஆண்டவரே, நீரா என் காலடிகளைக் கழுவப்போகிறீர்?

அதற்கு இயேசு: "நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால்
என்னோடு உனக்குப் பங்கு இல்லை" என்றார்.

**முன்மொழி :** எனவே சீமோன் பேதுருவிடம் அவர் வந்தபோது
பேதுரு அவரை நோக்கிக் கூறினார்:
- "ஆண்டவரே, நீரா என் காலடிகளைக் கழுவப்போகிறீர்?"

**முன்மொழி :** "நான் செய்வது இன்னதென்று இப்போது உனக்குப் புரியாது,
பின்னரே புரிந்து கொள்வாய்."
- "ஆண்டவரே, நீரா என் காலடிகளைக் கழுவப்போகிறீர்?"

**பல்லவி 4** **காண். யோவான் 13:14**

ஆண்டவரும் போதகருமான நானே
உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால்,
நீங்களும் மற்றவருடைய காலடிகளைக் கழுவக்
கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

**பல்லவி 5** **காண். யோவான் 13:35**

நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து
நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்.

**முன்மொழி :** இயேசு தம் சீடருக்குக் கூறினார்:
நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து
நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்.

**பல்லவி 6** **காண். யோவான் 13:34**

புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்:
நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போலவே
நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்
என்கிறார் ஆண்டவர்.

**பல்லவி 7** **காண். 1 கொரிந்தியர் 13:13**

உங்களிடம் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு
இம்மூன்றும் நிலையாய் உள்ளன.
இவற்றுள் அன்பே தலைசிறந்தது.

**முன்மொழி :** இப்போது நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு
இம்மூன்றும் நிலையாய் உள்ளன.
இவற்றுள் அன்பே தலைசிறந்தது.
- உங்களிடம் நம்பிக்கை.

**13.** காலடிகளைக் கழுவிய பின் அருள் பணியாளர் தம் கைகளைக் கழுவித் துடைக்கின்றார். மேலுடையை மீண்டும் அணிந்துகொண்டு தமது இருக்கைக்கு வருகின்றார். அங்கிருந்து பொது மன்றாட்டை வழிநடத்துகின்றார். "நம்பிக்கை அறிக்கை" சொல்லப்படுவதில்லை.

## 04 நற்கருணை வழிபாடு

**முன்னுரை**

மனிதர்கள் உயிர் வாழ அடிப்படை தேவையாக இருப்பது உணவும் தண்ணீரும். அத்தகைய உணவுக்கும் நீருக்கும் இயேசு கிறிஸ்து புதிய பொருள் கொடுக்கிறார். இயேசு தன்னையே அப்பத்தோடும் இரசத்தோடும் அடையாளப்படுத்திக் கொள்கிறார். உணவும் நீரும் மண்ணில் உயிர் வாழ அடித்தளமாக இருப்பது போல, இயேசுவின் உடலும் இரத்தமும் விண்ணில் நிலைவாழ்வு பெற, மகிமையான வாழ்வு வாழ அடித்தளமாகிறது. நற்கருணை வழியாக மனிதன், இறைவன் தரும் மேன்மைமிக்க, தெய்வீகமான, உன்னதமான வாழ்வைப் பெறுகிறான். மெய்யான அன்பைத் தரும் அருமருந்தாகிய, அறியாமையில் திரியும் மனிதருக்கு பாதை காட்டும் ஒளி விளக்காகிய, தூக்கியெறியப்பட்ட ஒதுக்கி தள்ளப்பட்ட எளிய மனிதர்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஒளியாகிய கிறிஸ்து மீது நம்பிக்கையில் வளர வரம் வேண்டி இந்த நற்கருணை வழிபாட்டில் இறைப்பற்றுடன் பங்கெடுப்போம்.

**14.** நற்கருணை வழிபாட்டின் தொடக்கத்தில் அப்ப, இரசத்துடன் ஏழை மக்களுக்குப் பயன்படும் காணிக்கைகளைக் கொண்டுவரும் இறைமக்களின் பவனி இடம் பெறலாம்.

**பவனியின்போது கீழுள்ள அல்லது வேறு பொருத்தமான பாடல் பாடப்படும்.**

**பல்லவி :** உண்மை அன்பு எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்

**சரணம் :** கிறிஸ்துவின் அன்பு நம்மை எல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே – **பல்லவி**

வாழும் இறைவனுக்கு அஞ்சிடுவோம்
அவருக்கு அன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே நாம்
ஒருவரை ஒருவர் அன்புசெய்வோம் – **பல்லவி**

எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனத்தில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே – **பல்லவி**

தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் மறைந்திடுக
நமது நடுவில் நம் இறைவன்
கிறிஸ்து ஆண்டவர் இருந்திடுக – பல்லவி

பேறுபெற்றோரின் கூட்டத்திலே
நாமும் ஒன்றாய்ச் சேர்ந்து மனம்
மகிழ்ந்து கிறிஸ்து இறைவா, நின்
மாட்ச்சி திருமுகம் காண்போமே – பல்லவி

முடிவில்லாமல் என்றென்றும்
ஊழிக் காலம் அனைத்திற்கும்
அளவில்லாத மாண்புடைய
பேரானந்தம் இதுவேயாம் - ஆமென்.

## திருப்பலி நூலில் உள்ள வார்த்தைகள்

பல்லவி : உண்மையான அன்பு எங்குள்ளதோ
அங்கே கடவுள் இருக்கின்றார்.

முன்மொழி : கிறிஸ்துவின் அன்பு நம்மை
ஒன்றாய்ச் சேர்த்ததுவே.
அகமகிழ்வோம், அவரில் அக்களிப்போம்;
அஞ்சுவோம் வாழும் கடவுளை அன்பு செய்வோம்;
உண்மை உள்ளத்தோடு நாம் அன்பு செய்வோம்.

பல்லவி : உண்மையான அன்பு எங்குள்ளதோ
அங்கே கடவுள் இருக்கின்றார்.

முன்மொழி : எனவே, நாம் அனைவரும்
ஒன்றாய்க் கூடுவோம்;
நமது மனதில் பிளவுபடாமல் இருக்க
விழிப்பாய் இருப்போம்.
தீய சச்சரவுகள் ஒழிக பிணக்குகள் மறைக!
இறைவன் கிறிஸ்து நம்மிடையே இருந்திடுக.

பல்லவி : உண்மையான அன்பு எங்குள்ளதோ
அங்கே கடவுள் இருக்கின்றார்.

முன்மொழி : நாங்களும் ஒன்றாய்ப் புனிதருடன், கிறிஸ்து இறைவா,
மாட்சிமிகு உமது முகத்தைக் காண்போம்.
அளவில்லா மாண்புடைய மகிழ்வு
என்றென்றும் நிலைத்திருப்பதாக. ஆமென்.

**15.** காணிக்கைமீது மன்றாட்டு

ஆண்டவரே, எப்பொழுதெல்லாம் இப்பலியின் நினைவு கொண்டாடப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் எங்கள் மீட்பின் செயல் நிறைவேற்றப்படுகின்றது; எனவே நாங்கள் இம்மறைநிகழ்வுகளில் தகுதியுடன் பங்கேற்க எங்களுக்கு அருள்புரிவீராக. எங்கள்.

**16.** தொடக்கவுரை: கிறிஸ்துவின் பலியும் அருளடையாளமும்.

**தூய்மைமிகு நற்கருணையின் தொடக்கவுரை 1 (பக் 544)**

**முன்மொழி :** ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
**பதில் :** உம் ஆன்மாவோடும் இருப்பாராக.
**முன்மொழி :** இதயங்களை மேலே எழுப்புங்கள்.
**பதில் :** ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.
**முன்மொழி :** நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.
**பதில் :** அது தகுதியும் நீதியும் ஆனதே.

ஆண்டவரே, தூயவரான தந்தையே, என்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக, எந்நாளும் எவ்விடத்திலும் நாங்கள் உமக்கு நன்றி செலுத்துவது மெய்யாகவே தகுதியும் நீதியும் ஆகும் எங்கள் கடமையும் மீட்புக்கு உரிய செயலும் ஆகும். என்றுமுள்ள மெய்யான குருவாகிய அவர் நிலையான பலிமுறையை ஏற்படுத்தினார் மீட்பு அளிக்கும் பலிப்பொருளாக முதன்முதல் தம்மையே உமக்கு ஒப்புக்கொடுத்து,

தம் நினைவாக நாங்களும் பலி செலுத்த வேண்டுமென்று கற்பித்தார். எங்களுக்காகப் பலியான அவருடைய திரு உடலை உண்ணும்போதெல்லாம் நாங்கள் வலிமை பெறுகின்றோம். அவர் எங்களுக்காகச் சிந்திய திரு இரத்தத்தைப் பருகும்போதெல்லாம் நாங்கள் கழுவப்பட்டுத் தூய்மை அடைகின்றோம்.

ஆகவே வானதூதர், முதன்மை வானதூதரோடும், அரியணையில் அமர்வோர், தலைமை தாங்குவோரோடும் வான்படைகளின் அணிகள் அனைத்தோடும் சேர்ந்து நாங்கள் உமது மாட்சியைப் புகழ்ந்து பாடி முடிவின்றிச் சொல்வதாவது:

தூயவர்... தூயவர்... தூயவர்...

**17.** உரோமை (முதல்) நற்கருணை மன்றாட்டைப் பயன்படுத்தும்போது அதற்கு உரிய "உம்முடைய புனிதர் அனைவருடனும். . .", "ஆகவே ஆண்டவரே, உம் ஊழியர்களாகிய. ...", "அவர் தாம் பாடுபடுவதற்கு. .." என்னும் மூன்று மன்றாட்டுகள் சொல்லப்படும்.

**18.** அருள்பணியாளர் தம் கைகளை விரித்துச் சொல்கின்றார்:

C: கனிவுமிக்க தந்தையே,
இக்கொடைகளையும் எங்கள் காணிக்கைகளையும்
புனித, மாசற்ற பலிப்பொருள்களையும்

அவர் தம் கைகளைக் குவித்துச் சொல்கின்றார்:

நீர் ஏற்று

அப்பத்தின் மீதும் திருக்கிண்ணத்தின் மீதும் ஒரு முறை சிலுவை அடையாளம் வரைந்து சொல்கின்றார்:

ஆசி வழங்கிட
உம் திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்து வழியாக
உம்மைத் தாழ்மையுடன் இறைஞ்சி மன்றாடுகின்றோம்.

அவர் தம் கைகளை விரித்துத் தொடர்கின்றார்:

உமது புனித கத்தோலிக்கத் திரு அவைக்காக
இவற்றை நாங்கள் முதலில் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம்
உலகெங்கும் அதற்கு அமைதியும் பாதுகாப்பும் ஒற்றுமையும் அளித்து
அதனை வழிநடத்தியருளும்.
உம் அடியாராகிய எங்கள் திருத்தந்தை (பெயர்) . . . க்காகவும்
எங்கள் ஆயர் (பெயர்) . . . க்காகவும்
உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் படிப்பினை எண் 149-இல் குறிப்பிட்டுள்ளவாறு இணையுதவி ஆயர் அல்லது துணை ஆயரின் பெயர்களையும் இங்குச் சொல்லலாம்
திருத்தூதர் வழிவரும் உண்மையான கத்தோலிக்க நம்பிக்கையைக்
கடைப்பிடிப்போர் அனைவருக்காகவும்
இக்காணிக்கைகளை ஒப்புக்கொடுக்கின்றோம்.

**19.** வாழ்வோர் நினைவு

C1: ஆண்டவரே, உம் அடியார்களாகிய (பெயர்) . . . , (பெயர்) ...
ஆகியோரையும் நினைவுகூர்ந்தருளும்.

அருள்பணியாளர் தம் கைகளைக் குவித்து, யார் யாருக்காக மன்றாட விரும்புகின்றாரோ அவர்களுக்காகச் சிறிது நேரம் வேண்டுகின்றார். பின்னர் தம் கைகளை விரித்துக் தொடர்கின்றார்:

மேலும் இங்கே கூடியிருக்கும் அனைவரையும் நினைவுகூர்ந்தருளும்.
உம்மீது இவர்கள் கொண்டிருக்கும்
நம்பிக்கையையும் இறைப்பற்றையும் நீர் அறிவீர்.
இவர்களுக்காக நாங்கள் இவற்றை

உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம்.
இவர்களும் தமக்காகவும் தம்மவருக்காகவும்
இப்புகழ்ச்சிப் பலியை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றார்கள்.
தங்களுடைய ஆன்மாக்களின் மீட்புக்காகவும்
தாங்கள் எதிர்நோக்கியிருக்கும் நலவாழ்வுக்காகவும் பாதுகாப்புக்காகவும்
என்றும் வாழ்பவரும் உயிருள்ளவரும் உண்மையுள்ளவருமான
கடவுளாகிய உமக்கு
இவர்கள் தங்கள் பொருத்தனைகளைச் செலுத்துகின்றார்கள்.

## 20. புனிதர் நினைவு:

C2: உம்முடைய புனிதர் அனைவருடனும் உறவு கொண்டுள்ள நாங்கள்
எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து
எங்களுக்காகக் கையளிக்கப்பட்ட
தூய்மைமிகு நாளைக் கொண்டாடுகின்றோம்.
முதன்முதலாக, இறைவனும் எங்கள் ஆண்டவருமாகிய
அதே இயேசு கிறிஸ்துவின் தாயும்
என்றும் கன்னியுமான மாட்சிமிக்க மரியாவையும்
அதே கன்னியின் கணவரான புனித யோசேப்பையும்
திருத்தூதர்களும் மறைச்சாட்சியருமான
பேதுரு, பவுல், அந்திரேயா,
(யாக்கோபு, யோவான், தோமா, யாக்கோபு, பிலிப்பு, பர்த்தலமேயு, மத்தேயு,
சீமோன், ததேயு: லீனஸ், கிளீட்டஸ், கிளமெண்ட், சிக்ஸ்துஸ்,
கொர்னேலியுஸ், சிப்பிரியான், லாரன்ஸ், கிரிசோகொனுஸ்,
ஜான், பால், கோஸ்மாஸ், தமியான்) ஆகியோரையும்
வணக்கத்துடன் நினைவுகூருகின்றோம்.
இவர்களுடைய பேறு பயன்களாலும் வேண்டல்களாலும்
நாங்கள் யாவற்றிலும் உமது உதவி பெற்றுக் காக்கப்படுமாறு அருள்புரியும்.
(எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக. ஆமென்.)

## 21. அவர் தம் கைகளை விரித்துத் தொடர்கின்றார்:

C: ஆகவே ஆண்டவரே, உம் ஊழியர்களாகிய நாங்களும்
உமது குடும்பம் முழுவதும்
இக்காணிக்கையை உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம்.
எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து
தம் உடலையும் இரத்தத்தையும் தம் சீடர்களுக்குக் கையளித்து,
அவற்றின் மறைபொருளைக் கொண்டாடுமாறு பணித்த இந்த நாளில்
இக்காணிக்கையை மன நிறைவோடு ஏற்றருள
உம்மை வேண்டுகின்றோம்:
எங்கள் வாழ்நாள்களில் உமது அமைதியைத் தந்தருளும்.

மேலும் நிலையான அழிவிலிருந்து எங்களைக் காத்து,
உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட மந்தையில் சேர்த்தருளும்.

அவர் தம் கைகளைக் குவிக்கின்றார்.
(எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக. ஆமென்.)

**22.** பலிப்பொருள்கள் மீது அவர் தம் கைகளை விரித்துச் சொல்கின்றார்:

CC: இறைவா, இக்காணிக்கையைப் புனிதப்படுத்தி,
உமக்கு உரிமையுடையதாகவும் தகுதியுடையதாகவும்
உமக்கு ஏற்புடையதாகவும் உகந்ததாகவும் இருக்கச் செய்தருளும்.
இவ்வாறு உம் அன்புத் திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய
இயேசு கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் இது மாறுவதாக.

அவர் தம் கைகளைக் குவிக்கின்றார்.

**23.** பின்வரும் வாய்பாடுகளில் ஆண்டவரின் வார்த்தைகளை அவற்றின் பொருளுக்கு ஏற்ப அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டும்.
அவர் எங்கள் மீட்புக்காகவும் அனைவருடைய மீட்புக்காகவும்
தாம் பாடுபடுவதற்கு முந்திய நாள், அதாவது இன்று,

அவர் அப்பத்தை எடுத்து, பீடத்துக்கு மேல் சற்று உயர்த்திப் பிடித்துக்கொண்டு தொடர்கின்றார்:
வணக்கத்துக்கு உரிய தம் திருக் கைகளில் அப்பத்தை எடுத்து,

அவர் தம் கண்களை உயர்த்துகின்றார்.
வான்நோக்கிக் கண்களை உயர்த்தி,
எல்லாம் வல்ல இறைவனும் தம் தந்தையுமாகிய உமக்கு நன்றி செலுத்தி,
ஆசி வழங்கி, அப்பத்தைப் பிட்டுத்
தம் சீடர்களுக்கு அளித்துக் கூறியதாவது:

அவர் சிறிது குனிந்து சொல்கின்றார்:
அனைவரும் இதிலிருந்து பெற்று உண்ணுங்கள்;
ஏனெனில் இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் உடல்.

அவர் அர்ச்சிக்கப்பட்ட அப்பத்தை உயர்த்தி மக்களுக்குக் காட்டிய பின் அதைத் திரு அப்பத் தட்டின் மீது வைத்துவிட்டு, முழங்காலிட்டு வணங்குகின்றார்.

**24.** அதன்பின் அவர் தொடர்கின்றார்:
அவ்வண்ணமே, இரவு விருந்து அருந்தியபின்,

அவர் திருக்கிண்ணத்தை எடுத்துப் பீடத்துக்குமேல் சற்று உயர்த்திப் பிடித்துக்கொண்டு சொல்கின்றார்:
எழில்மிகு இக்கிண்ணத்தை
வணக்கத்துக்கு உரிய தம் திருக் கைகளில் எடுத்து,
மீண்டும் உமக்கு நன்றி செலுத்தி, ஆசி வழங்கி,
தம் சீடர்களுக்கு அளித்து அவர் கூறியதாவது:

அவர் சிறிது குனிந்து சொல்கின்றார்:
அனைவரும் இதிலிருந்து பெற்றுப் பருகுங்கள்;
ஏனெனில் இது புதிய, நிலையான
உடன்படிக்கைக்கு உரிய என் இரத்தத்தின் கிண்ணம்.
இது பாவ மன்னிப்புக்கென்று
உங்களுக்காகவும் பலருக்காகவும் சிந்தப்படும்.
இதை என் நினைவாகச் செய்யுங்கள்.

அவர் திருக்கிண்ணத்தை உயர்த்தி மக்களுக்குக் காட்டிய பின், அதைத் திருமேனித் துகில்மீது வைத்துவிட்டு, முழங்காலிட்டு வணங்குகின்றார்.

**25.** அதன் பின் அவர் சொல்கின்றார்:

C: நம்பிக்கையின் மறைபொருள்.

மக்கள் ஆர்ப்பரித்துத் தொடர்கின்றார்கள்:
ஆண்டவரே, நீர் வருமளவும்
உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம்.
உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.

அல்லது

ஆண்டவரே, நாங்கள் இந்த அப்பத்தை உண்டு
கிண்ணத்திலிருந்து பருகும்போதெல்லாம்
நீர் வரும்வரை உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம்.

அல்லது

உலகின் மீட்பரே, எங்களை மீட்டருளும்.
உம் சிலுவையினாலும் உயிர்ப்பினாலும்
எங்களுக்கு விடுதலை அளித்தவர் நீரே.

**26.** அதன்பின், அருள்பணியாளர் தம் கைகளை விரித்துச் சொல்கின்றார்:

CC: ஆகவே ஆண்டவரே,
உம் திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய கிறிஸ்துவின்
புனிதமிக்க பாடுகளையும்
இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தெழுந்ததையும்
அவரது மாட்சிக்கு உரிய விண்ணேற்றத்தையும்
உம் ஊழியர்களும் உம் புனித மக்களுமாகிய
நாங்கள் நினைவுகூருகின்றோம்.
நீர் எங்களுக்கு வழங்கியுள்ள கொடைகளிலிருந்து
நிலைவாழ்வு தரும் புனித அப்பத்தையும்
முடிவில்லா மீட்பு அளிக்கும் திருக்கிண்ணத்தையும்

தூய, புனித, மாசற்ற பலிப்பொருளாக
மாண்புக்கு உரிய உமக்கு நாங்கள் ஒப்புக்கொடுக்கின்றோம்.

**27.** இவற்றை இரக்கத்துடனும் கனிவுடனும் கண்ணோக்கியருளும்.
நீதிமானாகிய உம் ஊழியன் ஆபேலின் காணிக்கைகளையும்
எங்கள் நம்பிக்கையின் தந்தை ஆபிரகாமின் பலியையும்
உம்முடைய தலைமைக் குரு மெல்கிசேதேக்
உமக்கு அளித்த காணிக்கைகளையும்
நீர் உளம் கனிந்து ஏற்றுக்கொண்டது போல,
இவற்றையும் புனிதப் பலியாகவும்
மாசற்ற பலிப்பொருளாகவும் ஏற்றுக்கொள்ளும்.

**28.** அவர் தம் கைகளைக் குவித்து, சிறிது குனிந்து தொடர்கின்றார்:
எல்லாம் வல்ல இறைவா,
உம்முடைய வானதூதர் தம் திருக் கைகளால் இப்பலிப்பொருள்களை
மாண்புக்கு உரிய உமது விண்ணகத் திருப்பீடத்துக்கு
எடுத்துச் செல்ல வேண்டும் என
உம்மைப் பணிந்து வேண்டுகின்றோம்.
இத்திருப் பீடத்திலிருந்து உம்முடைய திருமகனின்
புனிதமிக்க உடலையும் இரத்தத்தையும் பெறுகின்ற
நாங்கள் அனைவரும்,

அவர் நிமிர்ந்து நின்று, தம்மீது சிலுவை அடையாளமிட்டுச் சொல்கின்றார்:
எல்லா விண்ணக ஆசியையும் அருளையும்
நிறைவாகப் பெற்றுக்கொள்ளச் செய்தருளும்.

அவர் தம் கைகளைக் குவிக்கின்றார்.
(எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக. ஆமென்.)

**29.** இறந்தோர் நினைவு
அவர் தம் கைகளை விரித்துச் சொல்கின்றார்:

C3: ஆண்டவரே, நம்பிக்கையின் அடையாளத்தோடு
எங்களுக்கு முன் சென்று அமைதியில் துயில்கொள்ளும்
(பெயர்) ... , (பெயர்) ... ஆகிய உம் அடியார்களையும் நினைவுகூர்ந்தருளும்.

அருள்பணியாளர் தம் கைகளைக் குவித்து, யார் யாருக்காக மன்றாட விரும்புகின்றாரோ அவர்களுக்காகச் சிறிது நேரம் வேண்டுகின்றார். பின்னர் தம் கைகளை விரித்துத் தொடர்கின்றார்:

ஆண்டவரே, இவர்களுக்கும் கிறிஸ்துவில் இளைப்பாறும் அனைவருக்கும்
ஆறுதலும் ஒளியும் அமைதியும் நிறைந்த இடத்தை
ஈந்திட வேண்டும் என இறைஞ்சி மன்றாடுகின்றோம்.

அவர் தம் கைகளைக் குவிக்கின்றார்.
(எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக. ஆமென்.)

**30.** அவர் வலக் கையால் தம் நெஞ்சைத் தட்டிச் சொல்கின்றார்:

C4: பாவிகளாகிய உம் அடியார்கள் நாங்களும்
அவர் தம் கைகளை விரித்துத் தொடர்கின்றார்:
உமது பேரிரக்கத்தை எதிர்நோக்கி இருக்கின்றோம்.
உம்முடைய திருத்தூதர்களும் மறைச்சாட்சியருமாகிய
திருமுழுக்கு யோவான், ஸ்தேவான், மத்தியா, பர்னபா,
(இஞ்ஞாசியார், அலெக்சாண்டர், மார்சலீனுஸ், பீட்டர்,
பெலிசிட்டி, பெர்பேத்துவா, ஆகத்தா, லூசி,
ஆக்னஸ், செசிலியா, அனஸ்தாசியா) ஆகியோருடனும்
உம் புனிதர் அனைவருடனும் எங்களுக்கும் பங்களித்தருளும்.

எங்கள் தகுதியை முன்னிட்டு அன்று,
மாறாக உமது மிகுதியான மன்னிப்பால்
அப்புனிதர்களோடு நாங்களும் தோழமை கொள்ள
அவர் தம் கைகளைக் குவிக்கின்றார்.
எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**31.** மேலும் அவர் தொடர்கின்றார்:

C: இவர் வழியாகவே, ஆண்டவரே,
நீர் இவற்றை எல்லாம் எப்போதும் நல்லவையாக்கி,
புனிதப்படுத்தி, உய்வித்து, ஆசி அளித்து எங்களுக்கு வழங்குகின்றீர்.

**32.** அவர் திருக்கிண்ணத்தையும் திரு அப்பம் உள்ள தட்டையும் எடுத்து, இரண்டையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டு சொல்கின்றார்:

இவர் வழியாக, இவரோடு, இவரில்,
எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையே,
தூய ஆவியாரின் ஒன்றிப்பில்
எல்லாப் புகழும் மாட்சியும்
என்றென்றும் உமக்கு உரியதே.
மக்கள் ஆர்ப்பரிக்கின்றார்கள்: ஆமென்.

**33.** வீடுகளில் நற்கருணை வாங்கவிருக்கும் நோயாளிகளுக்காக, திருத்தொண்டருக்கு அல்லது பீடத்துணைவருக்கு அல்லது பிற சிறப்புரிமைத் திருப்பணியாளருக்குப் பொருத்தமான நேரத்தில் அருள் பணியாளர் திருப்பீடத்திலிருந்து நற்கருணையை ஒப்படைக்கின்றார்.

**34.** திருவிருந்துப் பல்லவி 1 கொரி 11:24-25

"இவ்வுடல் உங்களுக்காகக் கையளிக்கப்படும்; புதிய உடன்படிக்கையின் இந்தக் கிண்ணம் என் இரத்தத்தால் நிலைப்படுத்தப்படுகிறது. நீங்கள் இதிலிருந்து பருகும்போதெல்லாம் என் நினைவாக இதைச்செய்யுங்கள்" என்கிறார் ஆண்டவர்.

**35.** நற்கருணை வழங்கிய பின், மறு நாளுக்கான திரு அப்பத்தைக் கொண்ட நற்கருணைக் கலம் பீடத்தின்மீது வைக்கப்படும். அருள்பணியாளர் நின்றுகொண்டு திருவிருந்துக்குப்பின் மன்றாட்டைச் சொல்கின்றார்.

**36.** திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா,
எங்களுக்கு அருள்புரிவீராக;
உம் திருமகனின் இரவு விருந்தினால்
இவ்வுலகில் ஊட்டம் பெறும் நாங்கள்
என்றென்றும் நிறைவு அடையத் தகுதி பெறுவோமாக. எங்கள்.

## 05 நற்கருணை இடமாற்றப் பவனி

**முன்னுரை**

திருச்சபையின் அடித்தளமும், ஆதாரமும், மனித வாழ்வின் நம்பிக்கையும், ஆன்ம உணவுமாகிய நற்கருணை இயேசு கிறிஸ்துவின் தெய்வீக இயல்பை பிரதிபலிக்கிறது. நற்கருணை, கடவுள் தரும் வாழ்வைத் தருகிறது. நற்கருணை நமக்கு உணர்த்துவது: கிறிஸ்து தன்னையே பலிப்பொருளாக, உணவாகத் தந்து மீட்பு அருளியது போல, நாமும் ஒருவர் மன்னிப்பும் மீட்பும் பெற நம்மையே கையளிப்போம். ஆலயம் வருவது கடவுளை வழிபடவும், இறைவார்த்தையைக் கேட்பதற்கும் என்றில்லாமல், இயேசுவின் பாடுகளிலும் உயிர்ப்பிலும் நம்மை இணைத்துக் கொள்ளவே. உயிர்த்த இயேசு வீற்றிருக்கும் இந்த நற்கருணை நம் கவலை போக்கி நல்வாழ்வு தரும் என்ற நம்பிக்கையோடு இப்பவனியிலும் அதன்பின் நடைபெறும் ஆராதனை வழிபாட்டிலும் இறைப்பற்றோடு கலந்துகொள்வோம்.

**37.** திருவிருந்துக்குப்பின் மன்றாட்டைச் சொன்ன பிறகு அருள்பணியாளர் பீடத்துக்கு முன் நின்று தூபக் கலத்தில் சாம்பிராணியிட்டுப் புனிதப்படுத்தி, முழங்காலிட்டு, தூய்மைமிகு நற்கருணைக்கு மும்முறை தூபம் காட்டுகின்றார். பின் வெண் தோள் துகில் அணி எழுந்து, நற்கருணைக் கலத்தைக் கையில் எடுத்து, அதை அத்துகிலின் இருமுனைகளால் மூடிக்கொள்கின்றார்.

**38.** எரியும் திரிகளுடனும் தூபத்துடனும் தூய்மைமிகு நற்கருணை பவனியாகக் கொண்டு செல்லப்படும். கோவிலின் ஒரு பகுதியில் இதற்கென்று தயார் செய்யப்பட்டுள்ள மாற்று இடத்துக்கோ, தகுதியான விதத்தில் அணிசெய்யப்பட்டுள்ள வேறொரு சிற்றாலயத்துக்கோ கோவிலின் வழியாக

நற்கருணை கொண்டு செல்லப்படுகின்றது. எரியும் திரிகளோடு உள்ள மற்ற இரு பணியாளர்கள் நடுவில் திருச்சிலுவை ஏந்திய பொது ஒரு நிலைப் பணியாளர் முன்னின்று வழிநடத்துகின்றார். எரியும் திரிகளைக் கொண்டிருப்போர் பின்தொடர்வர். புகையும் தூபக் கலத்தை ஏந்தி நிற்பவர் தூய்மைமிகு நற்கருணையைக் கொண்டு செல்லும் அருள்பணியாளர் முன் செல்வார். அவ்வேளையில் "பாடுவாய் என் நாவே" (இறுதி இரு பத்திகள் தவிர) அல்லது வேறு நற்கருணைப் பாடல் பாடப்படுகின்றது.

### திவ்ய நற்கருணையை இடம் மாற்றம் செய்யும்போது

பாடுவாய் என் நாவே மாண்புமிக்க உடலின் மறைபொருளை
பாரின் அரசர் சீருயர்ந்த வயிற்றுதித்த கனியவர் தம்
புதலத்தை மீட்கச் சிந்தும் விலைமதிப்பில்லா துயர்ந்த
தூய இரத்த மறைபொருளை எந்தன் நாவே பாடுவாயே

அவர் நமக்காய் அளிக்கப்படவே மாசில்லாத கன்னி நின்று
நமக்கென்றே பிறக்கலானார் அவனி மீதில் அவர் வதிந்து
அரிய தூய வார்த்தையான வித்து அதனை விதைத்த பின்னர்
உலக வாழ்வின் நாளை மிகவே வியக்கும் முறையில் முடிக்கலானார்

இறுதி உணவை அருந்த இரவில் சகோதரர்கள் யாவரோடும்
அவர் அமர்ந்து நியமனத்தின் உணவை உண்டு நியமனங்கள்
அனைத்தும் நிறைவு பெற்ற பின்னர் பன்னிரண்டு சீடருக்குத்
தம்மைத்தாமே தூய உணவாய்த் தம் கையாலே அருளினாரே

ஊன் உருவான வார்த்தையானவர் வார்த்தையாலே உண்மை அப்பம்
அதனை உடலாய் ஆக்கினாரே இரசமும் கிறிஸ்து இரத்தமாகும்
மாற்றம் இது நம் மனித அறிவை முற்றிலும் கடந்த தெனினும்
நேர்மையுள்ளம் உறுதிகோள்ள மெய் விசுவாசம் ஒன்றே போதும்

மாண்புயர் இவ்வருள் அடையாளத்தை தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம்
பழைய நியம முறைகள் அனைத்தும் இனி மறைந்து முடிவு பெறுக
புதிய நியம முறைகள் வருக புலன்களாலே மனிதன் இதனை
அறிய இயலாக் குறைகள் நீக்க மறை நம்பிக்கையின் உதவி பெறுக

தந்தை அவர்க்கும் மகன் அவர்க்கும் புகழ்ச்சியோடு வெற்றியார்ப்பும்
மீட்பின் பெருமை மாட்சிமையோடு வலிமை வாழ்த்து யாவும் ஆக
இருவரிடமாய் வருகின்றவராம் தூய ஆவியானவர்க்கும்
அளவில்லாத சம புகழ்ச்சி என்றுமே உண்டாகுக -ஆமென்.

**39.** நற்ருணை வைக்கப்படும் இடத்தைப் பவனி அடைந்ததும் அருள்பணியாளர் - தேவையானால் திருத்தொண்டரின் உதவியுடன் - நற்கருணைப் பேழைக்குள் நற்கருணைக் கலத்தை வைக்கின்றார். அதன் கதவு திறந்திருக்கும். பின் அவர் தூபக் கலத்துக்குள் சாம்பிராணி இடுகின்றார். முழங்காலிட்டு தூய்மைமிகு நற்கருணைக்குத் தூபம்

இடுகின்றார். அப்பொழுது "மாண்புயர" அல்லது வேறு நற்கருணைப் பாடல் பாடப்படும். பிறகு திருத்தொண்டர் அல்லது அருள்பணியாளரே நற்கருணைப் பேழையின் கதவை மூடுகின்றார்.

## நற்கருணை ஆராதனை

நிலையான புகழுக்குரிய தூய இறை நன்மைக்கே,
எல்லா காலமும், தொழுகையும் புகழும் போற்றியும் மாட்சியும்
உண்டாகக் கடவது.

**40.** சிறிது நேரம் அமைதியாக வழிபட்ட பிறகு அருள்பணியாளரும் பணியாளரும் முழங்காலிட்டு வணங்கியபின், திருப்பொருள் அறைக்குச் செல்கின்றனர்.

**41.** பின் பொருத்தமான நேரத்தில் பீடம் வெறுமையாக்கப்பட்டு, கூடு மானால், சிலுவைகள் எல்லாம் கோவிலிலிருந்து அகற்றப்படும். அகற்ற முடியாத சிலுவைகளைத் திரையிட்டு மறைப்பது பொருத்தம் ஆகும்.

**42.** ஆண்டவருடைய இரவு விருந்துத் திருப்பலியில் பங்கெடுத்தவர்கள் மாலைத் திருப்புகழ் சொல்வதில்லை.

**43.** அந்தந்த இடத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இரவு நேரத்தில் பொருத்தமான நேர அளவு குறித்து தூய்மைமிகு நற்கருணை முன் ஆராதனையைத் தொடர நம்பிக்கையாளர் அழைக்கப்படுகின்றனர். ஆனால் நள்ளிரவுக்குப்பின் எந்தவித ஆடம்பரமும் இன்றி ஆராதனை நடைபெற வேண்டும்.

**44.** வரும் வெள்ளிக்கிழமை அன்று ஆண்டவருடைய திருப்பாடுகளின் கொண்டாட்டம் அதே கோவிலில் இடம்பெறவில்லை எனில் திருப்பலி வழக்கம் போல நிறைவடைகின்றது. தூய்மைமிகு நற்கருணை, நற்கருணைப் பேழையில் வைக்கப்படுகின்றது.

## பெரிய வியாழன் பாடல்கள்

### 01. நாம் ஆசீர்வதிக்கும் கிண்ணம்
கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்வதன்றோ!

1. ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும்
நான் என்ன கைம்மாறு செய்வேன்!
மீட்புக்காக நன்றி கூறிக் கிண்ணத்தைக் கையில் எடுத்து
ஆண்டவருடைய திருப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுவேன்

2. ஆண்டவர் தம் அடியாரின் மரணம்

அவருடைய பார்வையில் மிக மதிப்புக்குரியது
ஆண்டவரே நான் உம் அடியேன், உம் அடியாரின் மகன்,
என் கட்டுகளை நீர் அவிழ்த்து விட்டீர்

3. புகழ்ச்சிப் பலியை உமக்குச் செலுத்துவேன்
ஆண்டவருடைய திருப்பெயரைக் கூவி அழைப்பேன்
ஆண்டவருடைய மக்கள் அனைவரிடையேயும்
அவருக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்

## 02 புதியதோர் கட்டளை உங்களுக்குத் தருகின்றேன்

உங்களுக்கு நான் அன்பு செய்தது போலவே
நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்
என்றுரைக்கின்றார் எம் பெருமான் இயேசு

## 03. அன்பும் நட்பும் எங்குள்ளதோ

அங்கே இறைவன் இருக்கின்றார்

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் – யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே

2. சீவிய தேவனுக் கஞ்சிடுவோம் அவருக்கன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத் துடனேயாம் ஒருவரை ஒருவர் நேசிப்போம்

3. எனவே ஒன்றாய் நாமெல்லாம் வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல் விழிப்பாய் இருந்து கொள்வோமே

4. தீய சச்சரவுகள் ஒழிந்திடுக பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன் கிறிஸ்து நாதர் இருந்திடுக

5. முக்தி அடைந்தோர் கூட்டத்தில் நாமும் ஒன்றாய்ச் சேர்ந்து மனம்
மகிழ்ந்து கிறிஸ்து இறைவா நின் மகிமை வதனம் காண்போமே

6. முடிவில்லாமல் என்றென்றும் நித்திய காலம் அனைத்திற்கும்
அளவில்லாத மாண்புடைய பேரானந்தம் இதுவேயாம்

## 04. ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது

அதற்கு இயேசு நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை என்றார்.
சீமோன் இராயப்பரிடம் அவர் வரவே
இராயப்பர் அவரை நோக்கிச் சொன்னது :
“ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?”

அதற்கு இயேசு : “நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை” என்றார்.
“நான் செய்வது இன்னதென்று உனக்கு
இப்போது தெரியாது பின்னரே விளங்கும்”
“ஆண்டவரே நீரோ என் பாதங்களைக் கழுவுவது?”
அதற்கு இயேசு : “நான் உன் பாதங்களைக் கழுவாவிடில்
உனக்கு என்னோடு பங்கில்லை” என்றார்

## 05. பாதங்களை கழுவினார் இயேசு - 2

இயேசு பாதங்களைக் கழுவினார் பன்னிரு சீடரைப் பந்தியிலமர்த்தி
தன்னிரு கைகளில் தண்ணீர் கொண்டு

1. தான் என்ற குணத்தால் தனதென்ற மனத்தால்
தலைக்கனம் மீறிட இடமளிக்காமல் – 2
வாக்கிலும் செயலிலும் தாழ்ச்சியைக் கொண்டு – 2
நோக்கிலும் வாழ்விலும் உயர்வோம் என்று(ணர்த்த) – 2

2. பணிவிடை பெறவே வரவில்லை நானும்
பணிவிடை புரியவே உம்மிடை வந்தேன் – 2
என்றவர் சொன்ன வார்த்தையின் படியே – 2
இன்றவர் தான் ஒரு ஊழியர் போல

## 06. ஒவ்வொரு பகிர்வும் புனித வியாழனாம்

ஒவ்வொரு பலியும் புனித வெள்ளியாம்
ஒவ்வொரு பணியும் உயிர்ப்பின் ஞாயிறாம்
ஒவ்வொரு மனிதரும் இன்னொரு இயேசுவாம்
அந்த இயேசுவை உணவாய் உண்போம்
இந்தப் பாரினில் அவராய் வாழ்வோம்

1 இருப்பதைப் பகிர்வதில் பெறுகின்ற இன்பம் எதிலும் இல்லையே
இழப்பதை வாழ்வென ஏற்றிடும் இலட்சியம் இறுதியில் வெல்லுமே
வீதியில் வாடும் நேரிய மனங்கள் நீதியில் நிலைத்திடுமே
நமை இழப்போம் பின்பு உயிர்ப்போம்
நாளைய உலகின் விடியலாகவே

2 பாதங்கள் கழுவிய பணிவிடைச் செயலே வேதமாய் ஆனதே
புரட்சியை ஒடுக்கிய சிலுவைக் கொலையே புனிதமாய் நிலைத்ததே
இயேசுவின் பலியும் இறப்பும் உயிர்ப்பும் இறையன்பின் சாட்சிகளே
இதை உணர்வோம் நமைப் பகிர்வோம்
இயேசுவின் கொள்கைகள் நம்மில் வாழவே

# 3. ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி




**01.** மிகப் பழமையான மரபுப் படி , திரு அவை இன்றும் நாளையும் ஒப்புரவு, நோயில்பூசுதல் ஆகிய அருளடையாளங்களைத் தவிர மற்ற அருளடையாளங்களை எச்சூழலிலும் கொண்டாடுவதில்லை.

**02.** இந்நாளில் ஆண்டவருடைய பாடுகளின் கொண்டாட்டத்தின் போது மட்டும்தான் நம்பிக்கையாளருக்கு நற்கருணை வழங்கப்படும். இக்கொண்டாட்டத்தில் பங்குபெற இயலாத நோயாளிகளுக்கு இந்நாளின் எந்நேரத்திலும் நற்கருணை வழங்கலாம்.

**03.** சிலுவை, திரிகள், பீடத் துகில் ஆகிய அனைத்தும் அகற்றப்பட்டு, பீடம் முழுவதும் வெறுமையாக இருக்கும்.

## ஆண்டவருடைய பாடுகளின் கொண்டாட்டம்

**04.** இன்று பிற்பகலில் குறிப்பாக மூன்று மணி அளவில் பாடுகளின் வழிபாடு நடைபெறும். மக்களின் அருள் பணி நலன் கருதித் தேவைக்கு ஏற்ப, இதற்குப் பிந்திய நேரத்தையும் தேர்ந்துகொள்ளலாம். ஆண்டவருடைய பாடுகளின் கொண்டாட்டம் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கும்: இறைவாக்கு வழிபாடு, திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து.

**05.** திருப்பலிக்கு உரிய சிவப்பு நிற உடைகள் அணிந்து அருள் பணியாளரும் திருத்தொண்டர் இருந்தால், அவரும் அமைதியுடன் பீடத்தின் முன் வந்து, பீடத்துக்கு வணக்கம் செலுத்தி, முகம் குப்புற விழுவார்கள் அல்லது பொருத்தமானால் முழங்கால் பணிந்து சிறிது நேரம் அமைதியாக மன்றாடுவார்கள்; மற்ற அனைவரும் முழங்காலில் இருப்பர்.

**06.** பின் அருள்பணியாளர் பணியாளர்களுடன் தமது இருக்கைக்குச் செல்கின்றார். அங்கு அருள் பணியாளர் மக்களை நோக்கி நின்று, தம் கைகளை விரித்துக் கீழுள்ள மன்றாட்டுகளுள் ஒன்றை "மன்றாடுவோமாக" எனும் அழைப்புச் சொல்லைத் தவிர்த்துவிட்டுச் சொல்கின்றார்:

ஆண்டவரே, உம் திருமகன் கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தி, உம் அடியார்களுக்காகப் பாஸ்கா மறைநிகழ்வை ஏற்படுத்தினார்; உமது இரக்கத்தை நினைவுகூர்ந்து நிலையான பாதுகாப்பால் அவர்களைப் புனிதப்படுத்துவீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**பதில் :** ஆமென்.

**அல்லது**

இறைவா, பழைய பாவத்தின் விளைவாக எல்லாத் தலைமுறைக்கும் தொடர்ந்த சாவை எங்கள் ஆண்டவரும் உம் திருமகனுமாகிய கிறிஸ்துவின் பாடுகளால் அழித்தீர்; இவ்வுலக மனிதரின் சாயலை இயற்கையின் நியதியால் பெற்றுள்ளது போல நாங்கள் அவருக்கு ஏற்றவர்களாய் இருப்பதால் விண்ணகத்தின் சாயலை உமது அருளின் புனிதத்தால் பெற்றுக்கொள்ள அருள்புரிவீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

**முன்னுரை**

மூவொரு இறைவனின் மூன்றாவது ஆளாக
அன்பு என்ற மூன்றெழுத்துக்காக
உயிர் என்ற மூன்றெழுத்தை துறந்து
வெற்றி என்ற மூன்றெழுத்தைப் பெற்று
சிலுவை என்ற அடையாளச்சின்னத்தை வழங்கியவர்
இயேசு என்ற மூன்றெழுத்து நாயகன்.

முடிந்தது மூன்றாண்டு பயணம் சிலுவையோடு என்றே நினைத்தார்கள். ஆனால் தொடர்ந்தது திருப்பாடுகளின் விடுதலைப்பயணம் சிலுவையோடு என்பதை மறந்தார்கள்.

தொடரும் இத்திருப்பாடுகளின் திருச்சடங்கு இறைவார்த்தை வழிபாடு, திருச்சிலுவை ஆராதனை, திருவிருந்து என மூன்று பகுதிகளைக் கொண்டது. தன் திருப்பாடுகளின் இரத்தத்தால் நம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்திய நாளை நினைவிற் கொண்டு இறைவனின் பாடுகளுக்காகவும் நம் பாவங்களுக்காகவும் மனவருத்தத்தை வெளிப்படுத்தும் விதமாக இயேசு கெத்சமெனியில் முகம்குப்புற படுத்துக்கிடந்ததைப் போல அருட்பணியாளர் பீடம் முன்பாக முகம்குப்புற படுத்துக்கிடக்கிறார். அவரோடு இணைந்து நாம் ஆண்டவரின் திருப்பாடுகளில் பங்கேற்போம்.

## 01 இறைவாக்கு வழிபாடு

**07.** பின்னர் அனைவரும் அமர்ந்திருக்க, எசாயா இறைவாக்கினரின் நூலிலிருந்து (52:13 - 53:12)முதல் வாசகமும் அதற்கு உரிய திருப்பாடலும் வாசிக்கப்படும்.

**08.** எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து (4:14-16; 5:7-9) இரண்டாம் வாசகம் தொடரும். பிறகு நற்செய்திக்கு முன் வசனம் பாடப்படும்.

**09.** பிறகு முந்திய ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது போல, யோவான் எழுதியபடி ஆண்டவருடைய பாடுகளின் வரலாறு(18:1-19:42) வாசிக்கப்படும்.

**முதல் வாசக முன்னுரை**

துன்புறும் ஊழியனின் பாடுகளையும் துயரங்களையும் வருணிக்கும் இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகள் இயேசுவின் துன்பங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது. மேலும் நம் பாவங்களை அவரே சுமப்பார் என்றும், அரசர்களும் அவரைப் புரிந்து கொள்வார்கள் எனறும் நாம் உணரமுடிகின்றது. நாமும் நம் ஆண்டவரை நன்கு புரிந்து கொண்டு அவரைப் பின்பற்றி வாழ தெளிந்த உள்ளத்துடன் இவ்வாசகத்திற்கு செவிசாய்ப்போம்.

## முதல் வாசகம்

### எசாயா 52: 13 – 53:12

இதோ, என் ஊழியர் சிறப்படைவார்; அவர் மேன்மைப்படுத்தப்பட்டு, உயர்த்தப்பட்டு, பெரிதும் மாட்சியுறுவார். அவரைக் கண்ட பலர் திகைப்புற்றனர்; அவரது தோற்றம் பெரிதும் உருக்குலைந்ததால் மனித சாயலே அவருக்கு இல்லாதிருந்தது; மானிடரின் உருவமே அவருக்கு இல்லை. அவ்வாறே, அவர் பல பிற இனத்தாரை அதிர்ச்சிக்குள்ளாக்குவர்; அரசர்களும் அவரை முன்னிட்டு வாய்பொத்தி நிற்பர்; ஏனெனில் தங்களுக்குச் சொல்லப்படாததை அவர்கள் காண்பர்; தாங்கள் கேள்விப்படாததை அவர்கள் புரிந்துகொள்வர். நாங்கள் அறிவித்ததை நம்பியவர் யார்?

ஆண்டவரின் ஆற்றல் யாருக்கு வெளிப்படுத்தப்பட்டது? இளந்தளிர்போலும் வறண்ட நில வேர்போலும் ஆண்டவர் முன்னிலையில் அவர் வளர்ந்தார்; நாம் பார்ப்பதற்கேற்ற அமைப்போ அவருக்கில்லை; நாம் விரும்பத்தக்க தோற்றமும் அவருக்கில்லை. அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார்; நோயுற்று நலிந்தார்; காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார்; அவர் இழிவுபடுத்தப்பட்டார்; அவரை நாம் மதிக்கவில்லை. மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கிக்கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்துகொண்டார்; நாமோ அவர் கடவுளால் வதைக்கப்பட்டு நொறுக்கப்பட்டவர் என்றும் சிறுமைப் படுத்தப்பட்டவர் என்றும் எண்ணினோம்.

அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். ஆடுகளைப்போல நாம் அனைவரும் வழிதவறி அலைந்தோம்; நாம் எல்லாரும் நம் வழியே நடந்தோம்; ஆண்டவரோ நம் அனைவரின் தீச்செயல்களையும் அவர்மேல் சுமத்தினார். அவர் ஒடுக்கப்பட்டார்; சிறுமைப்படுத்தப்பட்டார்; ஆயினும், அவர் தம் வாயைத் திறக்கவில்லை; அடிப்பதற்கு இழுத்துச்செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார்.

அவர் கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு, இழுத்துச் செல்லப்பட்டார்; அவருக்கு நேர்ந்ததைப்பற்றி அக்கறை கொண்டவர் யார்? ஏனெனில், வாழ்வோர் உலகினின்று அவர் அகற்றப்பட்டார்; என் மக்களின் குற்றத்தை முன்னிட்டுக் கொலையுண்டார். வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை; வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை; ஆயினும், தீயவரிடையே அவருக்குக் கல்லறை அமைத்தார்கள்; செத்தபோது அவர் செல்வரோடு இருந்தார்.

அவரை நொறுக்கவும் நோயால் வதைக்கவும் ஆண்டவர் திருவுளம் கொண்டார்; அவர் தம் உயிரைக் குற்றநீக்கப் பலியாகத் தந்தார்; எனவே, தம் வழிமரபு கண்டு நீடு வாழ்வார்; ஆண்டவரின் திருவுளம் அவர் கையில் சிறப்புறும். அவர் தம் துன்ப வாழ்வின் பயனைக் கண்டு நிறைவடைவார்; நேரியவராகிய என் ஊழியர் தம் அறிவால் பலரை நேர்மையாளராக்குவார்; அவர்களின் தீச்செயல்களைத் தாமே சுமந்துகொள்வார்.

ஆதலால், நான் அவருக்கு மதிப்பு மிக்கவரிடையே சிறப்பளிப்பேன்; அவரும் வலியவரோடு கொள்ளைப் பொருளைப் பங்கிடுவார்; ஏனெனில், அவர் தம்மையே சாவுக்குக் கையளித்தார்; கொடியவருள் ஒருவராகக் கருதப்பட்டார்; ஆயினும் பலரின் பாவத்தைச் சுமந்தார்; கொடியோருக்காகப் பரிந்து பேசினார். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**திருப்பாடல் 31:1,5. 11-12, 14-15. 16,24 (பல்லவி : லூக் 23:46)**
**பல்லவி : "தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்."**

1 ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்; நான் ஒருபோதும் வெட்கமடைய விடாதேயும்; உமது நீதிக்கேற்ப என்னை விடுவித்தருளும். 5 உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்; வாக்குப் பிறழாத இறைவனாகிய ஆண்டவரே, நீர் என்னை மீட்டருளினீர். - **பல்லவி**

11 என் பகைவர் அனைவரின் இகழ்ச்சிக்கு உள்ளானேன்; என்னை அடுத்திருப்போரின் பேரிழிவுக்கு ஆளானேன்; என் நண்பர்களுக்குப் பேரச்சம் வருவித்தேன்; என்னைத் தெருவில் பார்ப்போர் என்னிடமிருந்து விலகி ஓடுகின்றனர். 12 இறந்தோர்போல் நினைவினின்று நான் அகற்றப்பட்டேன்; உடைந்துபோன மட்கலம்போல் ஆனேன். - **பல்லவி**

14 ஆண்டவரே, நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன்; 'நீரே என் கடவுள்' என்று சொன்னேன். 15 என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது; என் எதிரிகளின் கையினின்றும் என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும் என்னை விடுவித்தருளும். - **பல்லவி**

16 உமது முகத்தின் ஒளி அடியேன்மீது வீசும்படி செய்யும்; உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும். 24 ஆண்டவருக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே, நீங்கள் அனைவரும் உள்ளத்தில் வலிமையும் உறுதியும் கொண்டிருங்கள். - **பல்லவி**

### இரண்டாம் வாசக முன்னுரை

தன்னையே பலியிட தலைமைக் குருவாம் இயேசு தரணியிலே அவதரித்து தன்னையே தாழ்த்தி சிலுவையை ஏற்றுக்கொண்டார். பாவம் இல்லையென்றாலும் பாவிகள் மனந்திரும்பி மீட்புப் பெறவே இவையனைத்தையும் செய்தார். தொடரும் சிலுவைகளுக்கு மீட்பு அளிக்கக் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொடுத்துள்ளார். கீழ்ப்படிதல் வழியாக மீட்பின் அருளைப் பெற்றுக்கொள்ள இவ்வாசகத்தைக் கேட்போம்.

## இரண்டாம் வாசகம்

**எபிரேயர் 4: 14-16; 5: 7-9**

வானங்களைக் கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக்கொள்வோமாக! ஏனெனில், நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட்ட இயலாதவர் அல்ல; மாறாக, எல்லா வகையிலும் நம்மைப்போலச் சோதிக்கப்பட்டவர்; எனினும் பாவம் செய்யாதவர். எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள்நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக.

அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டினார். அவர் கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை முன்னிட்டு, கடவுள் அவருக்குச் செவிசாய்த்தார். அவர் இறைமகனாய் இருந்தும், துன்பங்கள் வழியே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். அவர் நிறைவுள்ளவராகி, தமக்குக் கீழ்ப்படிவோர் அனைவரும் என்றென்றும் மீட்படையக் காரணமானார். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**நற்செய்திக்கு முன் வசனம் : பிலிப்பியர் 2:8-9**

கிறிஸ்து சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

**நற்செய்தி வாசக முன்னுரை**

கல்லாக இருக்கின்ற நமது உள்ளம் இயேசுவின் திருப்பாடுகளைக் கேட்டு உணர்வுள்ள இதயமாக மாற வேண்டும். இயேசுவின் பாடுகள் எனக்காக என்ற உணர்வோடு ஒவ்வொருவரும் இயேசுவின் பாடுகளை தமதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற மனநிலையோடு தூய யோவான் எழுதிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பாடுகளுக்கு செவிகொடுப்போம்.

## நற்செய்தி வாசகம்

குருத்து ஞாயிறன்று நடைபெற்றதுபோல, ஆண்டவருடைய திருப்பாடுகளின் வரலாறு, எரியும் திரிகளும் தூபமும் இன்றி, வாழ்த்துரை கூறாமலும் திருநூலில் சிலுவை அடையாளம் வரையாமலும் வாசிக்கப்படும். (காண்க: திருப்பலிப் புத்தகம், பக்கம் 275, எண் 21)

## யோவான் எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 18:1 – 19:42

**விரி.உ** : புனித யோவான் எழுதியபடி யேசுவின் திருப்பாடுகள்:

**விரி.உ** : இயேசு தம் சீடர்களோடு கெதரோன் என்னும் நீரோடையைக் கடந்து சென்றார். அங்கே ஒரு தோட்டம் இருந்தது. தம் சீடர்களோடு இயேசு அதில் நுழைந்தார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்கு அந்த இடம் தெரியும். ஏனெனில், இயேசுவும் அவருடைய சீடர்களும் அடிக்கடி அங்குக் கூடுவர். படைப் பிரிவினரையும் தலைமைக் குருக்களும் பரிசேயரும் அனுப்பிய காவலர்களையும் கூட்டிக் கொண்டு யூதாசு விளக்குகளோடும் பந்தங்களோடும் படைக்கலங்களோடும் அங்கே வந்தான். தமக்கு நிகழப் போகிற அனைத்தையும் இயேசு அறிந்து அவர்கள்முன் சென்று,

**இயேசு** : யாரைத் தேடுகிறீர்கள்?

**விரி.உ** : என்று கேட்டார். அவர்கள் மறுமொழியாக,

**மக்கள்** : நாசரேத்து இயேசுவைத் தேடுகிறோம்

**விரி.உ** : என்றார்கள். இயேசு,

**இயேசு** : நான்தான்

**விரி.உ** : என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களோடு நின்றுகொண்டிருந்தான். நான்தான் என்று இயேசு அவர்களிடம் சொன்னதும் அவர்கள் பின்வாங்கித் தரையில் விழுந்தார்கள்.

**இயேசு** : யாரைத் தேடுகிறீர்கள்?

**விரி.உ** : என்று இயேசு மீண்டும் அவர்களிடம் கேட்டார். அவர்கள்,

**மக்கள்** : நாசரேத்து இயேசுவைத் தேடுகிறோம்

**விரி.உ** : என்றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து,

**இயேசு** : நான்தான் என்று உங்களிடம் சொன்னேனே. நீங்கள் என்னைத் தேடுகிறீர்கள் என்றால் இவர்களைப் போகவிடுங்கள்

**விரி.உ** : என்றார். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுள் எவரையும் நான் இழந்து விடவில்லை என்று அவரே கூறியிருந்தது இவ்வாறு நிறைவேறியது. சீமோன் பேதுருவிடம் ஒரு வாள் இருந்தது. அவர்

அதை உருவித் தலைமைக் குருவின் பணியாளரைத் தாக்கி அவரது வலக்காதை வெட்டினார். அப்பணியாளரின் பெயர் மால்கு. இயேசு பேதுருவிடம்,

**இயேசு** : வாளை உறையில் போடு. தந்தை எனக்கு அளித்த துன்பக் கிண்ணத்திலிருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ?

**விரி.உ** : என்றார். படைப்பிரிவினரும் ஆயிரத்தவர் தலைவரும் யூதர்களின் காவலர்களும் இயேசுவைப் பிடித்துக் கட்டி, முதலில் அவரை அன்னாவிடம் கொண்டுசென்றார்கள். ஏனெனில் அந்த ஆண்டில் தலைமைக் குருவாய் இருந்த கயபாவுக்கு அவர் மாமனார். இந்தக் கயபாதான், ஒருவர் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்று யூதர்களுக்கு ஆலோசனை கூறியவர். சீமோன் பேதுருவும் மற்றொரு சீடரும் இயேசுவைப் பின்தொடர்ந்து வந்தனர். அந்தச் சீடர் தலைமைக் குருவுக்கு அறிமுகமானவர்; ஆகவே இயேசுவுடன் தலைமைக் குருவின் மாளிகை முற்றத்தில் நுழைந்தார். பேதுரு வெளியில் வாயிலருகே நின்று கொண்டிருந்தார். அப்போது தலைமைக் குருவுக்கு அறிமுகமாயிருந்த அந்தச் சீடர் வெளியே வந்து, வாயில் காவலரிடம் சொல்லிப் பேதுருவை உள்ளே கூட்டிச் சென்றார். வாயில் காவல் செய்த அப்பணிப்பெண் பேதுருவிடம்,

**ப.பெ.** : நீயும் இம்மனிதனுடைய சீடருள் ஒருவன் தானே?

**விரி.உ** : என்று கேட்டார். பேதுரு,

**பேதுரு** : இல்லை

**விரி.உ** : என்றார். அப்போது குளிராய் இருந்ததால் பணியாளர்களும் காவலர்களும் கரியினால் தீமூட்டி அங்கே நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். பேதுருவும் சென்று அவர்களோடு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்.

தலைமைக் குரு இயேசுவின் சீடர்களைப்பற்றியும் அவருடைய போதனையைப்பற்றியும் அவரிடம் கேட்டார். இயேசு அவரைப் பார்த்து,

**இயேசு** : நான் உலகறிய வெளிப்படையாய்ப் பேசினேன். யூதர் அனைவரும் கூடிவரும் தொழுகைக் கூடங்களிலும் கோவிலிலும்தான் எப்போதும் கற்பித்து வந்தேன். நான் மறைவாக எதையும் பேசியதில்லை. ஏன் என்னிடம் கேட்கிறீர்? நான் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் கேட்டுப்பாரும். நான் என்ன சொன்னேன் என அவர்களுக்குத் தெரியுமே

**விரி.உ** : என்றார். அவர் இப்படிச் சொன்னதால் அங்கு நின்று கொண்டிருந்த காவலருள் ஒருவர்,

**காவலர்** : தலைமைக் குருவுக்கு இப்படியா பதில் கூறுகிறாய்?

**விரி.உ** : என்று சொல்லி இயேசுவின் கன்னத்தில் அறைந்தார். இயேசு அவரிடம்,

**இயேசு** : நான் தவறாகப் பேசியிருந்தால் தவறு என்னவெனக் காட்டும். சரியாகப் பேசியிருந்தால் ஏன் என்னை அடிக்கிறீர்?

**விரி.உ** : என்று கேட்டார். அதன்பின் அன்னா அவரைக் கட்டப்பட்ட நிலையில் தலைமைக் குரு கயபாவிடம் அனுப்பினார். சீமோன் பேதுரு அங்கு நின்று குளிர் காய்ந்து கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்தவர்கள் அவரிடம்,

**மக்கள்** : நீயும் அவனுடைய சீடர்களுள் ஒருவன் தானே

**விரி.உ** : என்று கேட்டனர். அவர்

**பேதுரு** : இல்லை

**விரி.உ** : என்று மறுதலித்தார். தலைமைக் குருவின் பணியாளருள் ஒருவர்,

**பணி.** : நான் உன்னைத் தோட்டத்தில் அவரோடு பார்க்கவில்லையா?

**விரி.உ** : என்று கேட்டார். பேதுருவால் காது வெட்டப்பட்டவருக்கு இவர் உறவினர். பேதுரு மீண்டும் மறுதலித்தார். உடனே சேவல் கூவிற்று. அதன்பின் அவர்கள் கயபாவிடமிருந்து ஆளுநர் மாளிகைக்கு இயேசுவைக் கொண்டு சென்றார்கள். அப்போது விடியற்காலம். பாஸ்கா உணவை உண்ணுமுன் தீட்டுப் படாமலிருக்க ஆளுநர் மாளிகையில் அவர்கள் நுழையவில்லை. எனவே பிலாத்து வெளியே அவர்களிடம் வந்து,

**பிலா.** : நீங்கள் இந்த ஆளுக்கு எதிராகக் கூறும் குற்றச்சாட்டு என்ன?

**விரி.உ** : என்று கேட்டார். அதற்கு அவர்கள்,

**மக்கள்** : இவன் குற்றம் செய்யாதிருந்தால் இவனை நாங்கள் உம்மிடம் ஒப்புவித்திருக்க மாட்டோம்

**விரி.உ** : என்றார்கள். பிலாத்து அவர்களிடம்,

**பிலா.** : நீங்கள் இவனைக் கொண்டுபோய் உங்கள் சட்டப்படி இவனுக்குத் தீர்ப்பு வழங்குங்கள்

**விரி.உ** : என்றார். யூதர்கள் அவரிடம்,

**மக்கள்** : சட்டப் படி நாங்கள் யாருக்கும் மரண தண்டனை விதிக்க முடியாது

**விரி.உ** : என்றார்கள். இவ்வாறு, தாம் எப்படிப்பட்ட சாவுக்கு உட்படப் போகிறார் என்பதைக் குறிப்பிட்டு இயேசு கூறியிருந்ததை நிறைவேறச் செய்தார்கள். பிலாத்து மீண்டும் ஆளுநர் மாளிகைக்குள் சென்று இயேசுவைக் கூப்பிட்டு, அவரிடம்,

**பிலா.** : நீ யூதரின் அரசனா?

**விரி.உ** : என்று கேட்டான். இயேசு மறுமொழியாக,

**இயேசு** : நீராக இதைக் கேட்கிறீரா? அல்லது மற்றவர்கள் என்னைப்பற்றி உம்மிடம் சொன்னதை வைத்துக் கேட்கிறீரா?

**விரி.உ** : என்று கேட்டார். அதற்கு பிலாத்து,

**பிலா.** : நான் ஒரு யூதனா, என்ன? உன் இனத்தவரும் தலைமைக் குருக்களும் தானே உன்னை என்னிடம் ஒப்புவித்தார்கள். நீ என்ன செய்தாய்?

**விரி.உ** : என்று கேட்டான். இயேசு மறுமொழியாக,

**இயேசு** : எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல. அது இவ்வுலக ஆட்சி போன்றதாய் இருந்திருந்தால் நான் யூதர்களிடம் காட்டிக் கொடுக்கப்படாதவாறு என் காவலர்கள் போராடியிருப்பார்கள். ஆனால் என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல

**விரி.உ** : என்றார். பிலாத்து அவரிடம்,

**பிலா.** : அப்படியானால் நீ அரசன்தானோ?

**விரி.உ** : என்று கேட்டான். அதற்கு இயேசு,

**இயேசு** : அரசன் என்று நீர் சொல்கிறீர். உண்மையை எடுத்துரைப்பதே என் பணி. இதற்காகவே நான் பிறந்தேன்; இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர்

**விரி.உ** : என்றார். பிலாத்து அவரிடம்,

**பிலா.** : உண்மையா? அது என்ன?

**விரி.உ** : என்று கேட்டார். இப்படி கேட்டபின் பிலாத்து மீண்டும் யூதரிடம் சென்று,

**பிலா.** : இவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லையே

**விரி.உ** : என்றான். மேலும்,

**பிலா.** : பாஸ்கா விழாவின்போது உங்கள் விருப்பப்படி ஒரு கைதியை விடுதலை செய்யும் வழக்கம் உண்டே! யூதரின் அரசனாகிய இவனை நான் விடுதலை செய்யட்டுமா? உங்கள் விருப்பம் என்ன?

**விரி.உ** : என்று கேட்டான். அதற்கு அவர்கள்,

**மக்கள்** : இவன் வேண்டாம். பரபாவையே விடுதலை செய்யும்

**விரி.உ** : என்று மீண்டும் கத்தினார்கள். அந்தப் பரபா ஒரு கள்வன்.

**விரி.உ** : பின்னர் பிலாத்து இயேசுவைச் சாட்டையால் அடிக்கச் செய்தான். வீரர்கள் ஒரு முள்முடி பின்னி அவர் தலையின்மேல் வைத்து, செந்நிற மேலுடையை அவருக்கு அணிவித்தார்கள். அவரிடம் வந்து,

**மக்கள்** : யூதரின் அரசே வாழ்க!

**விரி.உ** : என்று சொல்லி அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள். பிலாத்து மீண்டும் வெளியே வந்து அவர்களிடம்,

**பிலா.** : அவனை நான் உங்கள்முன் வெளியே கூட்டிவருகிறேன், பாருங்கள். அவனிடம் நான் குற்றம் ஒன்றும் காணவில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்

**விரி.உ** : என்றான். இயேசு முள் முடியும் செந்நிற மேலுடையும் அணிந்தவராய் வெளியே வந்தார். பிலாத்து அவர்களிடம்,

**பிலா.** : இதோ! மனிதன்

**விரி.உ** : என்றான். அவரைக் கண்டதும் தலைமைக் குருக்களும் காவலர்களும்,

**மக்கள்** : சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்

**விரி.உ** : என்று கத்தினார்கள். பிலாத்து அவர்களிடம்,

**பிலா.** : நீங்களே இவனைக் கொண்டு போய்ச் சிலுவையில் அறையுங்கள். இவனிடம் குற்றம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை

**விரி.உ** : என்றான். யூதர்கள் அவரைப் பார்த்து,

**மக்கள்** : எங்களுக்கு ஒரு சட்டம் உண்டு. அச்சட்டத்தின்படி இவன் சாகவேண்டும். ஏனெனில் இவன் தன்னையே இறைமகன் என உரிமைகொண்டாடுகிறான்

**விரி.உ** : என்றனர். பிலாத்து இதைக் கேட்டதும் இன்னும் மிகுதியாக அஞ்சினான். அவன் மீண்டும் ஆளுநர் மாளிகைக்குச் சென்று இயேசுவிடம்,

**பிலா.** : நீ எங்கிருந்து வந்தவன்?

**விரி.உ** : என்று கேட்டான். ஆனால் இயேசு அவனுக்குப் பதில் கூறவில்லை. அப்போது பிலாத்து,

**பிலா.** : என்னோடு பேசமாட்டாயா? உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு, உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு என்பது உனக்குத் தெரியாதா?

**விரி.உ** : என்றான். இயேசு மறுமொழியாக,

**இயேசு** : மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என் மேல் எந்த அதிகாரமும் இராது. ஆகவே என்னை உம்மிடம் ஒப்புவித்தவன்தான் பெரும் பாவம் செய்தவன்

**விரி.உ** : என்றார். அதுமுதல் பிலாத்து அவரை விடுவிக்க வழிதேடினான். ஆனால் யூதர்கள்,

**மக்கள்** : நீர் இவனை விடுவித்தால் சீசருடைய நண்பராய் இருக்க முடியாது. தம்மையே அரசராக்கிக் கொள்ளும் எவரும் சீசருக்கு எதிரி

**விரி.உ** : என்றார்கள். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் பிலாத்து இயேசுவை வெளியே கூட்டி வந்தான். கல்தளம் என்னும் இடத்தில் இருந்த நடுவர் இருக்கை மீது அமர்ந்தான். அந்த

இடத்திற்கு எபிரேய மொழியில் கபதா என்பது பெயர். அன்று பாஸ்கா விழாவுக்கு ஏற்பாடு செய்யும் நாள். ஏறக்குறைய நண்பகல் வேளை. பிலாத்து யூதர்களிடம்,

**பிலா.** : இதோ, உங்கள் அரசன்!

**விரி.உ** : என்றான். அவர்கள்,

**மக்கள்** : ஒழிக! ஒழிக! அவனைச் சிலுவையில் அறையும்

**விரி.உ** : என்று கத்தினார்கள். பிலாத்து அவர்களிடம்,

**பிலா.** : உங்கள் அரசனை நான் சிலுவையில் அறையவேண்டும் என்கிறீர்களா?

**விரி.உ** : என்று கேட்டான். அதற்குக் தலைமைக் குருக்கள்,

**த.குரு** : எங்களுக்குச் சீசரைத் தவிர வேறுஅரசர் இல்லை

**விரி.உ** : என்றார்கள். அப்போது பிலாத்து அவரைச் சிலுவையில் அறையுமாறு அவர்களிடம் ஒப்புவித்தான். அவர்கள் இயேசுவைத் தம் பொறுப்பில் ஏற்றுக்கொண்டார்கள். இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு மண்டை ஓட்டு இடம் என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் கொல்கொதா என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள்; அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து குற்ற அறிக்கை ஒன்று எழுதி அதைச் சிலுவையின் மீது வைத்தான். அதில் "நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்" என்று எழுதியிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்துக்கு அருகில் இருந்ததால் யூதருள் பலர் இந்தக் குற்ற அறிக்கையை வாசித்தனர். அது எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. யூதரின் தலைமைக் குருக்கள் பிலாத்திடம்,

**குரு.** : 'யூதரின் அரசன்' என்று எழுத வேண்டாம்; மாறாக, 'யூதரின் அரசன் நான்' என்று அவனே சொல்லிக் கொண்டதாக எழுதும்

**விரி.உ** : என்று கேட்டுக்கொண்டார்கள். பிலாத்து அவர்களைப் பார்த்து,

**பிலா.** : நான் எழுதியது எழுதியதே

**விரி.உ** : என்றான்.

**விரி.உ** : இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர் அவருடைய மேலுடைகளை நான்கு பாகமாகப் பிரித்து ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொண்டார்கள். அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டனர். அந்த அங்கி மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி,

**ப.வீரர்** : அதைக் கிழிக்க வேண்டாம். அது யாருக்குக் கிடைக்கும் என்று பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்

**விரி.உ** : என்றார்கள். என் ஆடைகளைத் தங்களுக்குள் பகிர்ந்து என் உடைமீது சீட்டுப் போட்டார்கள் என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது. சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம்,

**இயேசு** : அம்மா, இவரே உம் மகன்

**விரி.உ** : என்றார். பின்னர் தம் சீடரிடம்,

**இயேசு** : இவரே உம் தாய்

**விரி.உ** : என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார். இதன்பின், அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை அறிந்த இயேசு,

**இயேசு** : தாகமாய் இருக்கிறது

**விரி.உ** : என்றார். மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறவே இவ்வாறு சொன்னார். அங்கே ஒரு பாத்திரம் நிறையப்புளித்த திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து ஈசோப்புத் தண்டில் பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள். அந்த இரசத்தைக் குடித்ததும் இயேசு,

**இயேசு** : எல்லாம் நிறைவேறிற்று

**விரி.உ** : என்று கூறித் தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்.

**அனைவரும் முழந்தாளிட்டு அமைதியாக மன்றாடுவோம்**

**விரி.உ** : அன்று பாஸ்கா விழாவுக்கு ஏற்பாடு செய்யும் நாள். அடுத்த நாள்

ஒய்வு நாளாகவும் பெருநாளாகவும் இருந்தது. எனவே அன்று சிலுவையில் உடல்கள் தொங்கலாகா என்பதற்காகக் கால்களை முறித்துச் சடலங்களை எடுத்துவிடுமாறு யூதர்கள் பிலாத்திடம் கேட்டுக்கொண்டார்கள். ஆகவே படைவீரர் வந்து இயேசுவோடு சிலுவையில் அறையப் பட்டிருந்தவருள் ஒருவனுடைய கால்களை முதலில் முறித்தார்கள்; பின்னர் மற்றவனுடைய கால்களையும் முறித்தார்கள். பின்பு அவர்கள் இயேசுவிடம் வந்தார்கள். அவர் ஏற்கெனவே இறந்து போயிருந்ததைக் கண்டு அவருடைய கால்களை முறிக்கவில்லை. ஆனால் படைவீரருள் ஒருவர் இயேசுவின் விலாவை ஈட்டியால் குத்தினார். உடனே இரத்தமும் தண்ணீரும் வடிந்தன. இதை நேரில் கண்டவரே இதற்குச் சாட்சி. அவரது சான்று உண்மையானதே. அவர் உண்மையையே கூறுகிறார் என்பது அவருக்குத் தெரியும். நீங்களும் நம்ப வேண்டும் என்பதற்காகவே அவர் இதைக் கூறுகிறார். "எந்த எலும்பும் முறிபடாது" என்னும் மறைநூல் வாக்கு இவ்வாறு நிறைவேறியது. மேலும் "தாங்கள் ஊடுருவக் குத்தியவரை உற்றுநோக்குவார்கள்" என்றும் மறைநூல் கூறுகிறது. அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இயேசுவின் சீடர்களுள் ஒருவர்; யூதருக்கு அஞ்சியதால் தம்மைச் சீடர் என்று வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாதவர். அவர் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டுபோகப் பிலாத்திடம் அனுமதி கேட்டார். பிலாத்தும் அனுமதி கொடுத்தான். யோசேப்பு வந்து இயேசுவின் சடலத்தை எடுத்துக்கொண்டு போனார். முன்பு ஒருமுறை இரவில் இயேசுவிடம் வந்த நிக்கதேம் என்பவரும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வெள்ளைப்போளமும் சந்தனத் தூளும் கலந்து ஏறக்குறைய முப்பது கிலோ கிராம் கொண்டுவந்தார். அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடத்தில் ஒருதோட்டம் இருந்தது. அங்கே புதிய கல்லறை ஒன்று இருந்தது. அதில் அதுவரை யாரும் அடக்கம் செய்யப்படவில்லை. அன்று பாஸ்கா விழாவுக்கு ஆயத்த நாளாய் இருந்ததாலும் அக்கல்லறை அருகில் இருந்ததாலும் அவர்கள் இயேசுவை அதில் அடக்கம் செய்தார்கள்.

**10.** ஆண்டவருடைய பாடுகளின் வாசகத்துக்குப் பிறகு அருள்பணியாளர் சுருக்கமாக மறையுரை ஆற்றுகின்றார். அதன் இறுதியில் சிறிது நேரம் அமைதியாக மன்றாட அருள்பணியாளர் மக்களை அழைக்கலாம்.

## பொது மன்றாட்டு

**11.** இறைவாக்கு வழிபாடு பொது மன்றாட்டுடன் முடிவடையும். அது நடைபெறும் முறையாவது : திருத்தொண்டர் அல்லது - அவர் இல்லை எனில் - ஒரு பொது நிலைப் பணியாளர் வாசக மேடையில் நின்றுகொண்டு, பின்வரும் மன்றாட்டின் கருததை அறிவிக்கின்றார். அனைவரும் சிறிது நேரம் அமைதியாக மன்றாடுகின்றனர். பின் அருள் பணியாளர் தம் இருக்கையில் அல்லது தேவையானால் பீடத்துக்கு அருகில் நின்றுகொண்டு, தம் கைகளை விரித்து மன்றாட்டைச் சொல்கின்றார்.

இம்மன்றாட்டின் முழு நேரமும் அல்லது ஒரு பகுதியின்போது மக்கள் முழங்காலில் இருக்கலாம் அல்லது நிற்கலாம்.

**12.** அருள் பணியாளரின் மன்றாட்டுக்குமுன், மரபுப்படி, இறைமக்களுக்குத் திருத்தொண்டர்: “முழங்காலிடுவோம்” - “எழுந்திருங்கள்” எனும் அழைப்பு விடுக்கலாம். எல்லாரும் முழங்காலிடும்போது சிறிது நேரம் அமைதியாக மன்றாடுகின்றனர்.

**13.** அருள்பணியாளரின் மன்றாட்டைத் தொடங்கத் தேவையான மற்றக் கருத்துகளை ஆயர் பேரவைகள் வழங்கலாம். மன்றாட்டு எளிமையான இராகத்தில் பாடப்படுகின்றது; அல்லது அழைப்புகள் “முழங்காலிடுவோம்” - “எழுந்திருங்கள்” எனச் சொல்லும்பொழுது அவை ஆடம்பரமாகப் பாடப்படும்.

**முன்னுரை**

பிறருக்காக செபிப்பது என்பது கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் தவிர்க்க முடியாத செயல்பாடாக இருக்கின்றது. ஒவ்வொரு நாளும் நம்முடைய செபங்களில் பலருடைய தேவைகளை முன்னிறுத்தி செபித்தாலும், இன்று நம்முடைய தாய்த் திருஅவையோடு இணைந்து பல்வேறு தேவைகளுக்காக செபிக்கின்றோம். நாம் பிறருக்காக செபிக்கின்றபோது நம்முடைய செபங்களும் வல்லமைமிக்க செபங்களாக மாறும் என்ற நம்பிக்கையோடு நம்மையே ஈடுபடுத்தி மன்றாடுவோம்.

I. **புனித திரு அவைக்காக**

அன்பு மிக்க சகோதர சகோதரிகளே, இறைவனின் புனிதத் திரு அவைக்காக மன்றாடுவோம்: நம் இறைவனும் ஆண்டவருமானவர் உலகெங்கும் திரு அவைக்கு அமைதியும் ஒற்றுமையும் பாதுகாப்பும் அளித்துக் காக்க வேண்டும் எனவும், நாம் கலக்கம் இன்றி, அமைதியான வாழ்வு நடத்தி எல்லாம் வல்ல இறைத் தந்தையை மாட்சிப்படுத்த நமக்கு அருள்புரிய வேண்டும் எனவும் மன்றாடுவோமாக.

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
கிறிஸ்துவில் உமது மாட்சியை
மக்கள் இனங்களுக்கெல்லாம் வெளிப்படுத்தினீர்;
உம்முடைய இரக்கத்தின் செயல்களை நீர் பாதுகாப்பதால்
உலகெங்கும் பரவியிருக்கும் திரு அவை,
உறுதியான நம்பிக்கையுடன் உமது பெயரை
அறிக்கையிடுவதில் நிலைத்திருக்கச் செய்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

II. **திருத்தந்தைக்காக**

நம் புனிதத் திருத்தந்தை (பெயர்) .... க்காக மன்றாடுவோம்: தலைமை ஆயர் நிலைக்கு அவரைத் தேர்ந்தெடுத்த நம் இறைவனும் ஆண்டவருமானவர் எவ்வகைத் தீங்கும் இன்றி அவரைப் பேணிக்காப்பாராக. அதனால் அவர் இறைவனின் புனித மக்களை வழிநடத்தித் தம்முடைய புனிதத் திரு அவையை வளம் பெறச் செய்ய வேண்டும் என மன்றாடுவோமாக.

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
உமது திட்டப்படியே அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளன;
அதனால் உமது அதிகாரத்தால் ஆளப்படும் கிறிஸ்தவ மக்களாகிய
எங்கள் வேண்டலைப் பரிவிரக்கத்துடன் கண்ணோக்கியருளும்:
திருத்தந்தையின் தலைமையின்கீழ் நாங்கள் நம்பிக்கையில் வளரும்படி
அவரைப் பரிவுடன் காத்தருள்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

III. **திருநிலைப் பணியாளர்களுக்காக**

நம் ஆயர் (பெயர்)... க்காகவும், திரு அவையில் உள்ள எல்லா ஆயர்கள், உரோமைத் திருப்பலி நூலின் பொதுப் படிப்பினை எண் 149-இல் குறிப்பிட்டுள்ளவாறு இணையுதவி ஆயர் அல்லது துணை ஆயரின் பெயர்களையும் இங்குச் சொல்லலாம்
அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், நம்பிக்கையாளர் ஆகிய அனைவருக்காகவும் மன்றாடுவோமாக:

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
உம்முடைய ஆவியாரால் திரு அவை முழுவதும்
அர்ச்சிக்கப்பெற்று, ஆளப்படுகின்றது;
உம்முடைய திருநிலைப் பணியாளர்கள் அனைவருக்காகவும்
நாங்கள் செய்யும் வேண்டலைக் கேட்டருளும்:
அதனால் எல்லா நிலையினரும் உமது அருள்கொடையால்
உமக்கு உண்மையுடன் ஊழியம் புரிவார்களாக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

IV. **கிறிஸ்தவ புகுமுக நிலையினருக்காக**

கிறிஸ்தவப் புகுமுகநிலையினருக்காகவும் மன்றாடுவோம்: அதனால்

நம் இறைவனும் ஆண்டவருமானவர் தமது இரக்கத்தைப் பொழிந்து அவர்களுடைய இதயங்களின் செவிகளைத் திறந்து விடுவாராக; இவ்வாறு அவர்கள், புதுப் பிறப்பு அளிக்கும் திருமுழுக்கினால், தங்கள் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு அடைந்து, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றிணைய வேண்டும் என மன்றாடுவோமாக.

அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
புதிய மக்களைச் சேர்த்துத் திரு அவை என்றும் வளம் பெறச் செய்கின்றீர்;
கிறிஸ்தவப் புகுமுகநிலையினரிடம்
நம்பிக்கையும் அறிவும் வளரச் செய்தருளும்:
அதனால் அவர்கள் திருமுழுக்குத் தண்ணீரால் புதுப் பிறப்பு அடைந்து,
தேர்ந்துகொள்ளப்பட்ட உம்முடைய மக்களின் திருக்கூட்டத்தில்
சேர்த்துக்கொள்ளப்படுவார்களாக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

V. **கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக**

கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டுள்ள நம் சகோதரர் சகோதரிகள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்: நம் இறைவனும் ஆண்டவருமானவர் அவர்களை உண்மையின் பாதையில் வழிநடத்தித் தமது ஒரே திரு அவையில் கூட்டிச் சேர்த்துக் காத்தருள வேண்டும் என மன்றாடுவோமாக.

அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
சிதறுண்டவர்களை ஒன்றுசேர்ப்பவரும்
ஒருங்கிணைந்தவற்றைப் பேணிக் காப்பவரும் நீரே
உம் திருமகனின் மந்தையைக் கனிவுடன் கண்ணோக்கியருளும்:
இவ்வாறு ஒரே திருமுழுக்கினால் தூய்மைப்படுத்திய அவர்களை
நம்பிக்கையின் முழுமையால் இணைத்து,
அன்பின் பிணைப்பால் ஒன்றுசேர்ப்பீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

VI. **யூத மக்களுக்காக**

யூத மக்களுக்காகவும் மன்றாடுவோம்: முற்காலத்தில் அவர்களோடு பேசிய நம் இறைவனாகிய ஆண்டவர், தமது பெயரின் மீதுள்ள அன்பிலும் தமது உடன்படிக்கைமீதுள்ள நம்பிக்கையிலும் அவர்களை வளர்ச்சி அடையச் செய்தருள வேண்டும் என மன்றாடுவோமாக.

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிமரபினருக்கும்
நீர் உம் வாக்குறுதிகளை வழங்கியுள்ளீர்;
அதனால் முதன்முதலாக நீர் தேர்ந்து கொண்ட இம்மக்கள்
உமது மீட்பின் நிறைவைப் பெற்றுக்கொள்ள
உமது திரு அவையின் வேண்டலுக்குக் கனிவாய்ச் செவிசாய்ப்பீராக. எங்கள்,

**பதில் :** ஆமென்.

## VII. கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளாதவர்களுக்காக

கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளாதவர்களுக்காகவும் மன்றாடுவோம்:
தூய ஆவியாரின் ஒளியைப் பெற்று, அவர்களும் மீட்புப் பாதைக்கு
வந்துசேர வேண்டும் என மன்றாடுவோமாக:

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத மக்கள்
உம் திருமுன் நேர்மையான இதயத்தோடு நடந்து,
உண்மையைக் கண்டடைவார்களாக.
நாங்களும் ஒருவர் மற்றவர் மீது எப்போதும் அன்பு கொள்வதாலும்
உமது வாழ்வின் மறையுண்மையை
மேன்மேலும் புரிந்து கொள்வதில் ஆவல் கொள்வதாலும்
உமது அன்பை இவ்வுலகில் மிகத் தெளிவாகக் காட்டும்
சாட்சிகளாய் விளங்கச் செய்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

## VIII. கடவுளை நம்பாதவர்களுக்காக

கடவுளைக் கண்டறிய முடியாது என்பவர்களுக்காகவும் மன்றாடுவோம:
அவர்கள் நேர்மையான இதயத்தோடு நன்னெறியில் வாழ்ந்து,
கடவுளைக் கண்டடையுமாறு மன்றாடுவோமாக:

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
மனிதர் அனைவரும் எப்போதும் உம்மையே விரும்பித் தேடவும்,
உம்மைக் கண்டடைவதால் அமைதி பெறவுமே நீர் அவர்களைப் படைத்தீர்;
அதனால் இவ்வுலகில் ஏற்படும் எல்லாவிதத்
தீங்கு விளைவிக்கும் இடையூறுகளுக்கு நடுவிலும்
அவர்கள் அனைவரும் உமது பரிவிரக்கத்தின் அறிகுறிகளையும்,

உம்மை நம்புவோர் ஆற்றும்
நற்செயல்களின் சான்றுகளையும் கண்டுணர்வார்களாக;
இவ்வாறு உம்மையே தங்களின் ஒரே மெய்யான கடவுள் எனவும்
மக்களின் தந்தை எனவும் மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளச் செய்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

IX. **நாடுகளை ஆள்வோருக்காக**

நாடுகளை ஆளும் அனைவருக்காகவும் மன்றாடுவோம்: நம் இறைவனும் ஆண்டவருமானவர் தமது திருவுளப்படி உண்மையான அமைதியும் உரி மை வாழ்வும் அவர்கள் பெறும்பொருட்டு, அவர்களுடைய மனங்களையும் இதயங்களையும் வழிநடத்த வேண்டும் என மன்றாடுவோமாக:

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
மனிதரின் இதயங்களும் அவர்களின் உரிமைகளும் உம் கையில் உள்ளன;
உலகெங்கும் மக்களின் வளமான வாழ்வும் அமைதியின் உறுதிப்பாடும்
சமய உரிமையும் உமது கொடையால் நிலைபெறுமாறு
எங்களை ஆள்வோரைக் கனிவுடன் கண்ணோக்குவீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

X. **துன்புறுவோருக்காக**

அன்பு மிக்க சகோதர சகோதரிகளே, துன்புறும் அனைவருக்காகவும் எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளிடம் மன்றாடுவோம்: தவறுகள் அனைத்திலிருந்தும் உலகைத் தூய்மைப்படுத்தவும் பிணிகள் நீங்கி, பஞ்சம் ஒழியவும் சிறைகள் திறக்கப்பட்டுத் தளைகள் தகர்க்கப்படவும் வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும் பயணம் செய்வோர் நலமாக வீடு திரும்பவும் நோயுற்றோர் நலம் பெறவும் இறக்கின்றவர்கள் மீட்புப் பெறவும் வேண்டும் என மன்றாடுவோமாக.

**அமைதியான மன்றாட்டு. பின்பு அருள்பணியாளர் சொல்கிறார்:**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா,
துயருறுவோருக்கு ஆறுதலும் வருந்துவோருக்குத் திடனும் நீரே;
எத்தகைய துன்ப வேளையிலும்
உம்மை நோக்கிக் கூவி அழைப்போரின் வேண்டல்கள்
உம் திருமுன் வருவனவாக:
அதனால் தங்கள் தேவைகளில் நீர் இரக்கத்துடன் துணைபுரிவதைக் கண்டு
அவர்கள் எல்லாரும் மகிழ்வார்களாக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

## 02 திருச்சிலுவை ஆராதனை

**14.** பொது மன்றாட்டு முடிந்தபின், திருச்சிலுவைச் சிறப்பு ஆராதனை நடைபெறும். திருச்சிலுவையைக் காட்ட இரு வகைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பொருத்தமான ஒன்றை, மக்களின் அருள் பணி நலனுக்கு ஏற்றவாறு தேர்ந்து கொள்ளலாம்.

### முதல் வகை : திருச்சிலுவையை உயர்த்திக் காட்டுதல்

**15.** பணியாளர்களோடு அல்லது தகுதியான மற்றொரு பணியாளரோடு திருத்தொண்டர் திருப்பொருள் அறைக்குச் செல்கின்றார். அங்கிருந்து எரியும் திரிகள் ஏந்திய இரு பணியாளர்களோடு அவர் ஊதா நிறத் துகிலால் மூடப்பட்ட சிலுவையை ஏந்தி, கோவில் வழியாகத் திருப்பீட முற்றத்தின் நடுப்பகுதிக்குப் பவனியாக வருகின்றார்.

பீடத்தின் முன் மக்களை நோக்கி நிற்கும் அருள்பணியாளர் சிலுவையைப் பெற்றுக்கொள்கின்றார். அதன் உச்சியிலிருந்து துகிலைச் சிறிது அகற்றி, அதை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, "திருச்சிலுவை மரம் இதோ" எனும் பாடலைத் தொடங்குகின்றார். பின்வரும் சொற்களைத் திருத்தொண்டர் அல்லது தேவையானால் பாடகர் குழு அவருடன் பாடுகின்றார்கள். மக்கள் எல்லாரும், "வருவீர் ஆராதிப்போம்" எனப் பதிலுரைக்கின்றார்கள். பாடல் முடிந்ததும் அருள்பணியாளர் சிலுவையைச் சற்று உயர்த்திப் பிடித்துக்கொண்டு நிற்க, அனைவரும் முழங்காலிட்டுப் பணிந்து, சிறிது நேரம் அமைதியாக வணங்குகின்றார்கள்.

திருச்சிலுவை மரம் இதோ! இதிலேதான்
தொங்கியது உலகத்தின் மீட்பு.

**பதில் :** வருவீர் ஆராதிப்போம்.

பின் அருள்பணியாளர் சிலுவையின் வலக் கையில் உள்ள துகிலை அகற்றி, மீண்டும் அதை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, "திருச்சிலுவை மரம் இதோ" எனப் பாடுகின்றார். மற்ற அனைத்தும் முன்பு போல நடைபெறும்.

இறுதியாக, அருள்பணியாளர் சிலுவையின் துகிலை முற்றிலும் அகற்றிவிட்டு, சிலுவையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, "திருச்சிலுவை மரம் இதோ" என மூன்றாம் முறை பாடுகின்றார். மற்றவை முன்பு போல நடைபெறும்.

### மற்றொரு வகை

**16.** பணியாளர்களோடு அல்லது தகுதியான பணியாளர் ஒருவரோடு

அருள்பணியாளரோ திருத்தொண்டரோ கோவிலின் தலைவாயிலுக்குச் செல்கின்றார். அங்கே மூடப்படாத சிலுவையைப் பெற்றுக்கொள்கின்றார். பணியாளர்கள் எரியும் திரிகளைப் பிடித்துக் கொள்கின்றனர். அங்கிருந்து பவனி கோவில் வழியாகப் பீடத்துக்கு வருகின்றது. வாயில் அருகே, கோவிலின் நடுவில், திருப்பீட முற்றத்துக்குமுன் ஆகிய மூன்று இடங் களில் சிலுவை தாங்குவோர் நின்று சிலுவையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, "திருச்சிலுவை மரம் இதோ" எனப் பாட, இதற்குப் பதிலுரையாக எல்லாரும், "வருவீர் ஆராதிப்போம்" எனப் பாடுகின்றனர். முன்பு கூறியபடி ஒவ்வொரு பதிலுரைக்குப் பின்னும் எல்லாரும் முழங்காலிட்டுப் பணிந்து, சிறிது நேரம் அமைதியாக வணங்குகின்றனர்.

### முன்னுரை

; இன்றைய வழிபாட்டின் இரண்டாவது பகுதியான திருச்சிலுவை ஆராதனை இப்பொழுது தொடங்குகிறது. சிலுவை மரம் இரண்டு மரத்துண்டுகளின் இணைப்பு அல்ல இழந்துபோன இறை மனித உறவின் மீட்பு பிணைப்பு. இது தொடக்க நூல் புத்தகம் பிரிவு 3இல் 3ஆம் இறைமொழியில் கூறப்பட்ட தோட்டத்தின் நடுவில் உள்ள சாவைக் கொடுக்கும் மரமல்ல இரண்டு கள்வர்களின் நடுவில் வீற்றிருந்து வருவோர் போவோரையும் தன்னை உற்று நோக்குவோரையும் இருகைகளையும் நீட்டி அரவணைத்து அன்பு செய்யும் இயேசுவுக்கு தலையோடு உடலையும் சாய்க்க இடமளித்த வாழ்வளிக்கும் மரம். துன்பத்தில் பிறர் சாய்ந்து கொள்ள நம் உடலை கையளிக்கிறோமோ அப்பொழுது நாமும் இந்த வாழ்வளிக்கும் மரத்தில் பங்குகொள்கிறோம். நீதிமொழிகள் புத்தகம் 15ஆம் பிரிவில் 4ஆம் இறைமொழி சாந்தப்படுத்தும் சொல் வாழ்வளிக்கும் மரம் போன்றது என்பது போல சாந்தமும் சமாதானமும் கொண்ட மக்களாகவும் சாந்தமான வார்த்தைகளை சொல்லும் மக்களாகவும் வாழ்வை சுட்டிக்காட்டும் திருச்சிலுவையாக நாம் ஒவ்வொருவரும் மாற வேண்டும் என்ற மனநிலையோடு இந்த ஆராதனையில் பங்கு பெறுவோம்.

## திருச்சிலுவை ஆராதனை

**17.** பின்பு, எரியும் திரிகள் தாங்கிய இரு பணியாளர்களோடு கூடிவர, அருள்பணியாளர் அல்லது திருத்தொண்டர் சிலுவையைத் திருப்பீட முற்றத்தின் வாயிலுக்கு அல்லது வேறு வசதியான இடத்துக்குக் கொண்டு செல்கின்றார். அதை அங்கே கிடத்துகின்றார் அல்லது பணியாளர்கள் பிடித்துக்கொள்ளக் கொடுக்கின்றார். சிலுவையின் இரு புறமும் திரிகள் வைக்கப்படும்.

**18.** சூழ்நிலைக்கு ஏற்றவாறு திருப்பலி உடையையும் காலணிகளையும் கழற்றிவிட்டு, தலைமை ஏற்கும் அருள்பணியாளர் மட்டும் சிலுவைக்கு ஆராதனை செலுத்த முதலில் வருகின்றார். பின் திருப்பணியாளர், பொதுநிலைப் பணியாளர்கள், நம்பிக்கையாளர் ஆகியோர் பவனியாக வந்து சிலுவைக்கு ஆராதனை செலுத்திச் செல்கின்றனர்: முழங்காலிட்டுப் பணிந்தோ, இடத்துக்கு ஏற்ப வேறு வகையிலோ - எ.கா.: சிலுவையை முத்தி செய்தல்.

**19.** ஒரே ஒரு சிலுவைதான் ஆராதனைக்கு வைக்கப்படும். பெருங்கூட்டத்தின் காரணமாக ஒவ்வொருவரும் தனித்தனியே ஆராதனை செலுத்த முடியாதெனில், திருப்பணியாளர்களும் நம்பிக்கையாளர்களுள் ஒரு சிலரும் ஆராதனை செய்தபின் அருள்பணியாளர் சிலுவையை எடுத்துப் பீடத்தின் முன்பாக நடுவில் நின்றுகொண்டு, சில வார்த்தைகள் சொலலி அனைவரையும் ஆராதனை செய்ய அழைக்கின்றார். அவர் சிலுவையைச் சிறிது நேரம் உயர்த்திப் பிடித்துக்கொண்டிருக்க, எல்லாரும் அமைதியாக ஆராதனை செலுத்துகின்றனர்.

**20.** திருச்சிலுவை ஆராதனை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, "ஆண்டவரே, யாம்", எனும் பல்லவி, முறைப்பாடுகள், "நம்பிக்கை தரும் சிலுவையே" எனும் பாடல் அல்லது வேறு பொருத்தமான பாடல்கள் பாடப்படும். அப்போது ஆராதனை செலுத்தி முடித்தவர்கள் எல்லாரும் அமர்ந்திருப்பர்.

### திருச்சிலுவை பாடல்கள்

**1, 2** : முன்மொழி
ஆண்டவரே, யாம் உமது திருச்சிலுவையினை வணங்குகின்றோம்; உமது புனித உயிர்ப்பையும் புகழ்கின்றோம், மாட்சிப்படுத்துகின்றோம் ; ஏனெனில் ஆண்டவரே, இம்மரத்தின் வழியாக இவ்வுலகம் அனைத்துக்கும் மகிழ்ச்சி வந்ததே!
காண். திபா 66:2

**1** : கடவுள்! நம்மீது இரங்குவாராக! நமக்கு ஆசி வழங்குவாராக!
அவரது முகம் நம்மீது ஒளி வீசுவதாக! நம்மீது இரங்குவதாக!

**1, 2** : முன்மொழி மீண்டும் பாடப்படும்: ஆண்டவரே, யாம்.

### முறைப்பாடுகள்

பாடகர் குழுவின் ஒரு பகுதியினர் பாடவேண்டியதை 1 எனவும், மற்றொரு பகுதியினர் பாடவேண்டியதை 2 எனவும், இரு பகுதியினரும் சேர்ந்து பாடவேண்டியதை 1, 2 எனவும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. சில வாக்கியங்கள் இரு பாடகர்களாலும் பாடப்படலாம்.

I

**1, 2** : என் மக்கள் இனமே, நான் உனக்கு
என்ன செய்தேன், சொல்;
எதிலே உனக்குத் துயர் தந்தேன்?
எனக்குப் பதில் நீ கூறிடுவாய்.

1 : எகிப்து நாட்டிலிருந்து உன்னை மீட்டுக்கொண்டு வந்தேனே;
அதனாலோ உன் மீட்பருக்குச் சிலுவை மரத்தை நீ தயாரித்தாய்.

1 : Hagios O Theos (ஹாகியோஸ் ஒ தேயோஸ்).

2 : தூயவரான இறைவா.

1 : Hagios O Ischyros (ஹாகியோஸ் ஒ இஸ்க்கிரோஸ்).

2 : தூயவரான வல்லவரே.

1 : Hagios Athanatos, eleison himals (ஹாகியோஸ் அத்தானத்தோஸ், எலய்ஸோன் ஹிமாஸ்).

2 : சாவைக் கடந்த தூயவரே, எங்கள் மீது இரங்குவீர்.

1, 2 : நாற்பது ஆண்டுகள் நான் உன்னைப் பாலைநிலத்தில் வழிநடத்தி
உனக்கு மன்னா உணவூட்டி வளமிகு நாட்டினுள் கொண்டுவந்தேனே:
அதனாலோ உன் மீட்பருக்குச் சிலுவை மரத்தை நீ தயாரித்தாய்.

1 : Hagios O Theos (ஹாகியோஸ் ஒ தேயோஸ்).

2 : தூயவரான இறைவா.

1 : Hagios O Ischyros (ஹாகியோஸ் ஒ இஸ்க்கிரோஸ்).

2 : தூயவரான வல்லவரே.

1 : Hagios Athanatos, eleison himas (ஹாகியோஸ் அத்தானத்தோஸ், எலய்ஸோன் ஹிமாஸ்).

2 : சாவைக் கடந்த தூயவரே, எங்கள் மீது இரங்குவீர்.

1, 2 : இதற்குமேல் நான் உனக்கு என்ன செய்திருக்க வேண்டும்?
எதனைச் செய்யத் தவறிவிட்டேன்?
நான் தேர்ந்தெடுத்த அழகுமிகு திராட்சைச் செடியாக நட்டேனே:
எனக்கு நீ மிகக் கசப்பாய்த் திகழ்ந்தாயே;
தாகம் தீர்க்க நீ எனக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தாயே;
உன்றன் மீட்பர் விலாவினை நீ ஈட்டிகொண்டு துளைத்தாயே!

1 : Higios O Theos (ஹாகியோஸ் ஒ தேயோஸ்).

2 : தூயவரான இறைவா.

1 : Hagios O Ischyros (ஹாகியோஸ் ஒ இஸ்க்கிரோஸ்).

2 : தூயவரான வல்லவரே.

1 : Hagios Athanatos, eleison himas (ஹாகியோஸ் அத்தானத்தோஸ், எலய்ஸோன் ஹிமாஸ்).

2 : சாவைக் கடந்த தூயவரே, எங்கள் மீது இரங்குவீர்.

பா. குழு : உன்னை முன்னிட்டு நான் எகிப்தை அதன் தலைச்சன் பிள்ளைகளோடு சாட்டையால் அடித்தேனே;
நீயோ என்னைச் சாட்டையால் வதைக்கக் கையளித்தாய்.

1, 2 : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே, நான் உனக்கு என்ன செய்தேன், சொல்;
எதிலே உனக்குத் துயர் தந்தேன்? எனக்குப் பதில் நீ கூறிடுவாய்.

பா. குழு : பாரவோனைச் செங்கடலில் ஆழ்த்தி,
எகிப்தினின்று உன்னை விடுவித்தேன்;
நீயோ என்னைத் தலைமைக் குருக்களிடத்தில் கையளித்தாய்!

1, 2 : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

பா. குழு : நானே உனக்கு முன்பாகக் கடலைத் திறந்தேன்;
நீயோ எனது விலாவை ஓர் ஈட்டியினால் திறந்தாயே!

1, 2 : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

பா. குழு : மேகத் தூணில் உனக்குமுன் நான் சென்றேனே;
நீயோ பிலாத்தின் முற்றத்துக்கு என்னை இழுத்துச் சென்றாயே!

1, 2 : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

பா. குழு : பாலைநிலத்தில் மன்னாவால் நான் உன்னை உண்பித்தேனே;
நீயோ என் கன்னத்தில் அறைந்து என்னைச் சாட்டையால் அடித்தாயே!

1, 2 : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

**பா. குழு** : உன் தாகத்தைத் தணிக்க, நலம் தரும் நீரைப் பாறையினின்று உனக்குத் தந்தேனே;
நீயோ கசப்பும் புளிப்பும் கலந்த பானத்தை எனக்குத் தந்தாயே!

**1, 2** : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

**பா. குழு** : கானான் அரசரை உனக்காக நான் அடித்து நொறுக்கினேனே;
நீயோ நாணல் தடி கொண்டு எனது தலையில் அடித்தாயே!

**1, 2** : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

**பா. குழு** : அரசர்க்கு உரிய செங்கோலை உனக்கு நான் தந்தேனே;
நீயோ என் தலைக்கு முள்முடியைத் தந்தாயே!

**1, 2** : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

**பா. குழு** : உன்னை மிகுந்த ஆற்றலோடு சிறந்த நிலைக்கு உயர்த்தினேனே;
நீயோ என்னைச் சிலுவையெனும் தூக்குமரத்தில் தொங்க வைத்தாயே!

**1, 2** : மீண்டும் பாடுவர்:
என் மக்கள் இனமே.

## பாடல்

**எல்.** : நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?
இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

**பா. குழு** : மாட்சிமிக்க போரின் வெற்றி விருதை நாவே பாடுவாய்;
உலக மீட்பர் பலியாகி வென்ற வகையைக் கூறியே,
சிலுவை அடையாளத்தைப் புகழ்ந்து, வெற்றி முழக்கம் செய்திடுவாய்.

**எல்.** : நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

**பா. குழு** : தீமையான கனியைத் தின்று சாவிலே விழுந்த நம்
முதல் பெற்றோரின் குற்றத் தீங்கைக் கண்டு நொந்த இறைவனார்
மரத்தால் வந்த தீங்கை நீக்க மரத்தை அன்றே குறித்தனர்.

**எல்.** : இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

**பா. குழு** : வஞ்சகன் செய் சூழ்ச்சி அனைத்தையும் சூழ்ச்சியால் மேற்கொள்ளவும்
பகைவன் செய்த கேட்டினின்று நன்மை விளையச் செய்யவும்
வேண்டுமென்று நமது மீட்பின் ஒழுங்கில் குறித்து இருந்தது.

**எல்.** : நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

**பா. குழு** : எனவே புனிதக் கால நிறைவில் இறைத்தந்தை மைந்தனை
விண்ணில் நின்று அனுப்பலானார்; அன்னை கன்னி வயிற்றினில்,
உடல் எடுத்துப் பிறந்தாரே மண்ணகத்தைப் படைத்தவர்.

**எல்.** : இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

**பா. குழு** : இடுக்கமான தீவனத் தொட்டியிலே கிடந்து குழந்தை அழுகின்றார்;
அவரது உடலைத் துகிலில் பொதிந்து சுற்றிவைத்துக் கன்னித்தாய்,
அவர்தம் கையும் காலும் கச்சையாலே பிணைக்கின்றார்.

**எல்.** : நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

**பா. குழு** : முப்பதாண்டு முடிந்த பின்னர் உடலின் வாழ்வு நிறைவுற
மீட்பர் தாமாய் உளம் கனிந்து பாடுபடத் தம்மையளித்தார்;
சிலுவை மரத்தில் பலியாகிடவே செம்மறி உயர்த்தப்படலானார்.

**எல்.** : இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

**பா. குழு** : கசந்த காடி அருந்திச் சோர்ந்து, முட்கள்,ஈட்டி, ஆணிகள்
மென்மை உடலைத் துளைத்ததாலே செந்நீர் பெருகிப் பாயவே,
விண்ணும் மண்ணும், கடலும் உலகும் அதனால் தூய்மை ஆயின.

**எல்.** : நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

**பா. குழு** : வளர்ந்த மரமே, உன் கிளை தாழ்த்தி, விறைத்த உடலைத் தளர்த்துவாய்;
இயற்கை உனக்கு ஈந்த வைரம் இளகி, மென்மையாகி நீ
உயர்ந்த வானின் அரசர் உடலின் வருத்தம் தணித்துத் தாங்குவாய்.

**எல்.** : இனிய சுமையை இனிய ஆணியால் இனிது தாங்கும் மரமே நீ!

**பா. குழு** : மரமே, நீயே உலகின் விலையைத் தாங்கத் தகுதியாயினை!
செம்மறியின் குருதி உன்மேல் பாய்ந்து தோய்ந்ததாதலால்
புயலில் தவிக்கும் உலகிற்கெல்லாம் புகலிடம் நீ, படகும் நீ!

**எல்.** : நம்பிக்கை தரும் சிலுவையே, நீ மரத்துள் சிறந்த மரமாவாய்;
உன்னைப் போன்று தழை, பூ, கனியை எந்தக் காவும் தந்திடுமோ?

**இறுதி அடியை ஒருபோதும் விடலாகாது:**

**எல்.** : தூய மூவொரு கடவுளுக்கு முடிவில்லா மாட்சியே!
தந்தையும் மகனும் தூய ஆவியாரும் சரிசமப் புகழ் பெறுகவே;
அவர்தம் அன்பின் அருளாலே நம்மைக் காத்து மீட்கின்றார். ஆமென்.

**ஆணி கொண்ட உன் காயங்களை**
அன்புடன் முத்தி செய்கின்றேன் – 2
பாவத்தால் உம்மைக் கொன்றேனே – 2
ஆயனே என்னை மன்னியும் – 2

1. வலது கையின் காயமே – 2
அழகு நிறைந்த இரத்தினமே
அன்புடன் முத்தி செய்கின்றேன்

2. இடது கரத்தின் காயமே – 2
கடவுளின் திரு அன்புருவே – அன்புடன்...

3. வலது பாதக் காயமே – 2
பலன் மிகத் தரும் நற்கனியே – அன்புடன்...

4. இடது பாதக் காயமே – 2
திடம் மிகத் தரும் தேனமுதே – அன்புடன்...

5. திருவிலாவின் காயமே – 2
அருள் சொரிந்திடும் ஆலயமே – அன்புடன்...

**பாடுகள் நீர் பட்டபோது பாய்ந்து ஓடிய இரத்தம்**
கோடிப் பாவம் தீர்த்து மோட்சம் கொள்ளுவிக்க வல்லதே

1. கெட்டுப் போனோம் பாவியானோம் கிருபை செய்யும் நாதனே
மட்டிலாக் கருணை என் மேல் வைத்திரங்கும் யேசுவே – கெட்டுப்

2. துஷ்ட யூதர் தூணினோடு தூய கைகள் கட்டியே
கஷ்டமாய் அடித்த போது காய்ந்த செந்நீர் எத்துணை – கெட்டுப்

3. சென்னிமேற் கொடிய யூதர் சேர்த்து வைத்த முள்முடி
தன்னால் வடிந்த ரத்தத்தினால் சர்வ பாவம் நீங்குமே – கெட்டுப்

4. ஐந்து காயத்தால் வடிந்த அரிய இரத்தத்தினால்
மிஞ்சும் எங்கள் பாவம் தீர்க்க வேண்டுகிறோம் இயேசுவே – கெட்டு

குறிப்பிட்ட இடம் அல்லது சிறப்பான மரபுகள் இவற்றுக்கு ஏற்ப, அருள்பணி நலனுக்குப் பொருத்தமானதாக இருந்தால் உரோமைப் படிக்கீதத்தில் காணப்படுவதுபோன்ற "மைந்தனார் சிலுவை" (Stabat Mater) என்னும் பாடலோ புனித கன்னி மரியாவின் இரக்கத்தை நினைவுபடுத்தும் வேறு பொருத்தமான பாடலோ பாடப்படலாம்.

**21.** ஆராதனை முடிவுற்றபின் திருத்தொண்டர் அல்லது பணியாளர் ஒருவர் திருச் சிலுவையைப் பீடத்தில் வைக்கும் பொருட்டு எடுத்துச் செல்கின்றார். பீடத்தைச் சுற்றியோ பீடத்தின் மேலோ திருச்சிலுவை அருகிலோ எரியும் திரிகள் வைக்கப்படுகின்றன.

## 03 திருவிருந்து

### முன்னுரை

இன்றைய திருவழிபாட்டின் மூன்றாம் பகுதியான திருவிருந்துப் பகுதி இப்பொழுது தொடங்குகிறது. திருவிருந்தில் பங்கு பெறுதல் என்பது இயேசுவின் பாடுகளிலும் உயிர்ப்பிலும் நாம் பங்குபெறுகிறோம் என்ற நம்பிக்கையை உள்ளடக்கியிருக்கிறது. மேலும் பழைய ஏற்பாட்டின்படி பலியாக்கப்பட்ட செம்மறியின் உடலை உண்ணுதல் பலியை ஏற்றுக்கொண்ட இறைவனோடு உறவு கொள்வதாகும். இங்கு இயேசுவே தம்மை பலியாக்கி நமக்கு உணவாகத் தந்து நம்மை இறைவனோடும் சக மனிதர்களோடும் ஒப்புரவாக கொடுக்கும் அழைப்பாகும். இந்த அழைப்பை ஏற்று ஆண்டவரின் இந்த திருவிருந்தில் பங்கு பெறுவோம்.

**22.** பீடத்தின் மீது ஒரு துகில் விரிக்கப்படுகின்றது. திருமேனித் துகிலும் திருப்பலி நூலும் வைக்கப்படுகின்றன. பின் திருத்தொண்டர் அல்லது - அவர் இல்லை எனில் - அருள்பணியாளர் தாமே தோள் துகில் அணிந்து, தூயமைமிகு நற்கருணையை அது வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து பீடத்துக்குக் குறுகிய வழியாகக் கொண்டு வருகின்றார். அப்பொழுது அனைவரும் அமைதியாக நின்றுகொண்டிருப்பர். இரு பணியாளர்கள் எரியும் திரிகளை நற்கருணையோடு கொண்டுவந்து விளக்குத் தண்டுகளைப் பீடத்தின் அருகிலோ அதன்மீதோ வைக்கின்றனர்.

திருத்தொண்டர் இருந்தால், அவர் தூய்மைமிகு நற்கருணையைப் பீடத்தின்மீது வைத்து, நற்கருணைக் கலத்தைத் திறக்கின்றார். அருள்பணியாளர் பீடத்துக்கு வந்து தாழ்ந்து பணிந்து வணங்குகின்றார்.

**23.** பின் அருள்பணியாளர் தம் கைகளைக் குவித்து, தெளிவான குரலில் சொல்கின்றார்:

மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு,
இறைப் படிப்பினையால் பயிற்சி பெற்ற நாம் துணிந்து சொல்வோம்:

அருள் பணியாளர் தம் கைகளை விரித்துச் சொல்கின்றார். அனைவரும் தொடர்கின்றனர்:

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக!
உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல,
மண்ணுலகிலும் நிறைவேறுக!
எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும்.
எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை
நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும்.
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.
தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும்.

**24.** அருள்பணியாளர் மட்டும் தம் கைகளை விரித்துத் தொடர்கின்றார்:

ஆண்டவரே! தீமை அனைத்திலிருந்தும் எங்களை விடுவித்து,
எங்கள் வாழ்நாளில் அமைதியைக் கனிவுடன் அருள
உம்மை மன்றாடுகின்றோம்.
உமது இரக்கத்தின் உதவியால்,
நாங்கள் பாவத்திலிருந்து எப்போதும் விடுதலை பெற்று,
யாதொரு கலக்கமும் இன்றி நலமாய் இருப்போமாக.
நாங்கள் எதிர்நோக்கியிருக்கும் பேரின்பத்துக்காகவும்
எம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்காகவும் காத்திருக்கின்றோம்.

அவர் தம் கைகளைக் குவிக்கின்றார்.
மக்கள் ஆர்ப்பரித்து மன்றாட்டை நிறைவு செய்கின்றனர்:

ஏனெனில் ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.

**25.** பின் அருள்பணியாளர் தம் கைகளைக் குவித்து அமைந்த குரலில் சொல்கின்றார்:

ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே,
நான் உட்கொள்ளும் உம் திரு உடலும் திரு இரத்தமும்
என்னை நீதித் தீர்ப்புக்கும் தண்டனைக்கும் உள்ளாக்காமல்,
உமது பரிவிரக்கத்தால் என் மனதுக்கும் உடலுக்கும்
பாதுகாப்பாகவும் நலம் அளிக்கும் அருமருந்தாகவும் இருப்பனவாக.

**26.** முழங்காலிட்டு வணங்கிய பின், அவர் திரு அப்பம் ஒன்றைக் கையில் எடுத்து, நற்கருணைக் கலத்தின் மீது சற்று உயர்த்திப் பிடித்துக்கொண்டு, மக்களை நோக்கி தெளிவான குரலில் சொல்கின்றார்:
இதோ, இறைவனின் செம்மறி,
இதோ, உலகின் பாவங்களைப் போக்குபவர்.
செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பெற்றோர் பேறுபெற்றோர்.

மக்களோடு சேர்ந்து ஒரு முறை சொல்கின்றார்:

ஆண்டவரே, நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன்;
ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும்; என் ஆன்மா நலம் அடையும்.

**27.** அருள்பணியாளர் பலிப்பீடத்தின் பக்கம் திரும்பி நின்றுகொண்டு, அமைந்த குரலில் சொல்கின்றார்:

கிறிஸ்துவின் திரு உடல் என்னைக் காப்பதாக.

**28.** பின் அவர் மக்களுக்கு நற்கருணை வழங்குவார். அப்பொழுது திபா 21 அல்லது பொருத்தமான வேறொரு பாடல் பாடப்படலாம்.

**29.** நற்கருணை வழங்கிய பின், திருத்தொண்டர் அல்லது வேறொரு பொருத்தமான திருப்பணியாளர் நற்கருணைக் கலத்தைக் கோவிலுக்கு வெளியே தகுதியான இடத்துக்குக் கொண்டு போய் வைப்பார் அல்லது - வேறு வழி இல்லை எனில் - அது நற்கருணைப் பேழையில் வைக்கப்படுகின்றது.

**30.** பின் அருள்பணியாளர் "மன்றாடுவோமாக" எனச் சொல்கின்றார். தேவைக்கு ஏற்பச் சிறிது நேரம் அமைதியாக மன்றாடியபின், அவர் திருவிருந்துக்குப்பின் மன்றாட்டைச் சொல்கின்றார்:

**மன்றாடுவோமாக**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, உம்முடைய கிறிஸ்துவின் பாடுகளினாலும் புனித இறப்பினாலும் உயிர்ப்பினாலும் எங்களை மீட்டருளினீர்; உமது இரக்கத்தால் நீர் ஆற்றிய இம்மீட்புச் செயல் எங்களில் நிலைத்திருக்கச் செய்தருளும்: இவ்வாறு இம்மறைபொருளில் பங்கேற்பதன் வழியாக முடிவில்லா இறைப்பற்றுடன் வாழ்வோமாக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

**31.** பிரியாவிடை கூறத் திருத்தொண்டர், அல்லது - அவர் இல்லை எனில் - அருள் பணியாளரே "இறை ஆசிக்காகத் தலை வணங்குவோமாக" என அழைப்பு விடுக்கின்றார்.

பின் அருள்பணியாளர் மக்களை நோக்கி நின்றவாறு, அவர்கள்மீது தம் கைகளை விரித்து, பின்வரும் மன்றாட்டைச் சொல்கின்றார்:

ஆண்டவரே,
தங்களது உயிர்ப்பின் நம்பிக்கையில்
உம் திருமகனின் சாவை நினைவுகூர்ந்துள்ள உம் மக்கள்மீது
உமது ஆசி நிறைவாய் இறங்கிட உம்மை வேண்டுகின்றோம்:
அவர்களுக்கு மன்னிப்பு கிடைப்பதாக;

அவர்கள் ஆறுதல் அடைவார்களாக;
புனித நம்பிக்கை வளர்வதாக;
நிலையான மீட்பு உறுதி பெறுவதாக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

**32.** எல்லாரும் சிலுவைக்கு முழங்காலிட்டு ஆராதனை செலுத்தியபின் அமைதியாகக் கலைந்து செல்கின்றனர்.

**33.** கொண்டாட்டத்துக்குப் பிறகு பீடம் வெறுமையாக்கப்படுகின்றது. ஆனால் இரண்டு அல்லது நான்கு மெழுகுதிரித் தண்டுகளோடு பீடத்தின்மேல் சிலுவை இருக்கும்.

**34.** இச்சிறப்புத் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்தவர்கள் மாலைத் திருப்புகழைச் சொல்வதில்லை.



# 4. ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு

## புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு



திருவழிபாட்டு ஆண்டின் பொதுவிதிமுறை எண் இருபத்தி ஒன்று (21) கூறுகிறது: "ஆண்டவர் உயிர்த்தெழுந்த புனித இரவில் நடக்கும் திருவிழிப்பில், திருச்சபை கிறிஸ்துவின் உயிர்ப்பை விழித்திருந்து எதிர்பார்த்து, அதை அருளடையாளங்கள் வழியாக கொண்டாடுகிறது. ஆகவே, இத்திருவிழிப்பு இரவு நேரத்தில் கொண்டாடப்பட வேண்டும். அதாவது அதை இரவு பிறந்த பின்னரே தொடங்கலாம். ஞாயிறு காலைப் பொழுது புலர்வதற்கு முன் முடிக்கவேண்டும்."

பாஸ்கா திருவிழிப்பின் இறையியலை உரோமைத் திருப்பலி நூல் கீழ்க்கண்டவாறு அழகாக விவரிக்கின்றது: "தொன்றுதொட்டே இவ்விரவு ஆண்டவருடைய வருகைக்காகத் திருவிழிப்பு காக்கும் இரவாக இருந்து வந்துள்ளது (விப 12:42). இந்த இரவில் மக்கள் அனைவரும், நற்செய்தி அறிவுரைப்படி (லூக் 12:35) எரியும் விளக்குகளுடன் ஆண்டவர் எப்பொழுது வருவார் என காத்திருப்போர் மனநிலையில் இருப்பார்கள். இவ்வாறு ஆண்டவர் வந்ததும், மக்கள் விழித்திருக்கக் கண்டு, அவர்களைப் பந்தியில் அமர்த்துவார்".

## பொது முன்னுரை

நீ யூதர்களின் அரசனானால் உன்னை நீயே காப்பாற்றிக் கொள் என்று எள்ளி நகையாடியவர்களுக்கு, தான் யூதர்களுக்கு மட்டுமல்ல இந்த உலகத்திற்கே அரசர் என்று, தன் உயிர்ப்பின் மூலம் நிரூபித்திருக்கிறார் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து. மாபெரும் திருவிழாவாம் இயேசுவின் உயிர்ப்பு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுவதற்காக இந்த இரவில், நம் ஆலயத்தின் முகப்பில் கூடி இருக்கிறோம். சாவுக்கும் வாழ்வுக்கும் இடையேயான போராட்டத்தில், எங்கே சாவு வெற்றி பெற்று விட்டதோ? என்று நம்பிக்கை இழந்து கொண்டிருந்த நேரத்தில், சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? என்று, சாவுக்கே சாவு மணி அடித்து, இந்த மனித குலத்தை மீட்ட வெற்றி வீரராக இயேசு உயிர்த்தெழுந்த இரவு தான் இந்த புனித மிக்க இரவு. வாழ்வில் நமக்கு ஏற்படும் துன்பங்களும் துயரங்களும் நிலையற்றவை. அவற்றிற்கு உறுதியாக முடிவு உண்டு என்பதையே உயிர்ப்பு விழா நமக்கு உதாரணமாக காட்டுகிறது. அந்த உயிர்ப்பு நம்பிக்கையோடு நம் வாழ்க்கையின் எந்த சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றலை பெற இவ்வழிபாட்டில் பக்தியோடு பங்கெடுப்போம்.

இன்றைய வழிபாடு நான்கு பகுதிகளைக் கொண்டது.

1. **திரு ஒளி வழிபாடு**
2. **இறைவாக்கு வழிபாடு**
3. **திருமுழுக்கு வழிபாடு**
4. **நற்கருணை வழிபாடு**

**01.** மிகத் தொன்மையான மரபுப்படி இவ்விரவு ஆண்டவருக்காகத் திருவிழிப்புக் கொண்டாடும் இரவாக இருந்து வந்துள்ளது (விப 12:42). அன்று நற்செய்தியின் அறிவுரைப்படி (லூக் 12:35-37) எரியும் விளக்குகளைக் கைகளில் ஏந்தி நம்பிக்கையாளர் ஆண்டவர் எப்பொழுது வருவார் எனக் காத்திருப்போரைப் போன்று இருப்பார்கள். இவ்வாறு, அவர் வந்ததும், அவர்கள் விழித்திருக்கக் கண்டு அவர்களைத் தம் பந்தியில் அமர்த்துவார்.

**02.** "இத்திருவிழிப்பைக் கொண்டாடும் முறையாவது:

**முதல் பகுதி :** திரு ஒளி வழிபாடும் பாஸ்கா புகழுரையும்

**இரண்டாம் பகுதி :** வார்த்தை வழிபாடு. ஆண்டவராகிய கடவுள் தொடக்கத்திலிருந்தே தம் மக்களுக்குப் புரிந்துள்ள அரும்பெரும் செயல்களைப் புனிதத் திரு அவை சிந்தித்து, அவரது வார்த்தையிலும் வாக்குறுதிகளிலும் நம்பிக்கை கொள்ள முனைகின்றது.

**மூன்றாம் பகுதி :** திருமுழுக்கு வழிபாடு. விடியல் நெருங்கி வர, திரு அவையின் புது உறுப்பினர் திருமுழுக்கினால் புதுப் பிறப்பு அடைவர்

**நான்காம் பகுதி :** நற்கருணை வழிபாடு. ஆண்டவர் தம் இறப்பினாலும் உயிர்பினாலும் முன்னேற்பாடு செய்த திருவிருந்தில், அவர் மீண்டும் வரும்வரை பங்குகொள்ளத் திரு அவை அழைக்கப்படுகின்றது.

**03.** பாஸ்கா திருவிழிப்பு முழுவதும் இரவிலேயே கொண்டாடப்பட வேண்டும் எனவே அதை இரவுக்குமுன் தொடங்கக் கூடாது. ஞாயிறு விடியுமுன் முடிக்க வேண்டும்.

**04.** திருவிழிப்புத் திருப்பலியை நள்ளிரவுக்கு முன்னரே ஒப்புக்கொடுத்தாலும், அது ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு திருப்பலி ஆகும்.

**05.** இவ்விரவுத் திருப்பலியில் பங்கெடுத்தவர்கள், பகலில் நடைபெறும் திருப்பலியிலும் நற்கருணை உட்கொள்ளலாம். தனியாகவோ கூட்டாகவோ இவ்விரவுத் திருப்பலியை நிறைவேற்றிய அருள்பணியாளர் பகலில் தனியாகவோ கூட்டாகவோ இரண்டாவது திருப்பலி நிறைவேற்றலாம். பாஸ்கா திருவிழிப்புக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்தவர்கள் வாசகத் திருப்புகழ்மாலையில் பங்குபெறுவதில்லை.

**06.** அருள் பணியாளரும் திருத்தொண்டரும் திருப்பலிக்கான வெண்ணிறத் திருவுடைகளை அணிவர்.

**07.** திருவிழிப்பில் பங்கெடுக்கும் அனைவரும் மெழுகுதிரிகளை வைத்திருக்க வகை செய்ய வேண்டும். கோவிலில் உள்ள விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டிருக்கும்.

## 01 திரு ஒளி வழிபாடு

### தீயையும் பாஸ்கா திரியையும் புனிதப்படுத்துதல்

**08.** கோவிலுக்கு வெளியே வசதியான இடத்தில் தீ தயாராய் இருக்கும். இறைமக்கள் அங்கே கூடியிருப்பார்கள். பணியாளர் ஒருவர் பாஸ்கா திரியைக் கொண்டு வருவார். அங்குப் பவனிக்க, சிலுவையையும் எரியும் திரிகளையும் கொண்டு வருவதில்லை.

கோவிலுக்கு வெளியே தீயைப் பற்ற வைக்க முடியாது எனில் கீழே எண் 13ல் உள்ளபடி திருச்சடங்கை நடத்தலாம்.

**09.** "தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே" என்று அருள் பணியாளர் சொல்கின்றபொழுது, அவரும் நம்பிக்கையாளரும் தங்கள்மீது சிலுவை அடையாளம் வரைந்து கொள்கின்றனர். அருள்பணியாளர் கூடியுள்ள இறைமக்களை வழக்கம் போல் வாழ்த்தி, கீழுள்ளவாறு அல்லது இது போன்று சுருக்கமாகத் திருவிழிப்பைப் பற்றி அறிவுரை கூறுவார்:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சாவிலிருந்து வாழ்வுக்குக் கடந்து சென்ற புனிதமிக்க இவ்விரவில் திரு அவை

உலகெங்கும் பரந்து வாழும் தன் மக்களை விழித்திருக்கவும் மன்றாடவும் ஒன்றுகூடுமாறு அழைக்கின்றது. இவ்வாறு இறைவார்த்தையைக் கேட்டும் அவருடைய மறைநிகழ்வுகளைக் கொண்டாடியும் அவருடைய பாஸ்காவை நாம் நினைவுகூர்ந்தால், சாவின் மீது அவர் கொண்ட வெற்றியில் நாமும் பங்குபெறுவோம், அவரோடு இறைவனில் வாழ்வோம் என்னும் எதிர்நோக்கைக் கொண்டிருப்போம்.

**10.** பின் அருள்பணியாளர் தம் கைகளை விரித்துத்தீயின் மீது ஆசி வழங்கிச் சொல்கின்றார்:

**மன்றாடுவோமாக**

இறைவா, உம் திருமகன் வழியாக, நம்பிக்கையாளர் மீது உமது மாட்சியின் பேரொளி சுடர்ந்திடச் செய்தீரே; இப்புதுத் தீயைப் புனிதப்படுத்தியருளும்; இவ்வாறு இப்பாஸ்கா திருவிழா வழியாக விண்ணகத்தின் மீது கொண்ட ஆவலால் நாங்கள் பற்றியெரிவோமாக; அதனால் தூய்மையான உள்ளத்தோடு முடிவில்லா மாட்சியின் விழாவுக்கு வந்து சேரும் வலிமை பெறுவோம்" எங்கள்.

**பதில் :** ஆமென்.

**11.** புதுத் தீயைப் புனிதப்படுத்தியபின் பணியாளர்களுள் ஒருவர் பாஸ்கா திரியை அருள்பணியாளரிடம் கொண்டுவர, அருள்பணியாளர் எழுத்தாணி கொண்டு அதில் சிலுவை அடையாளம் வரைகின்றார் பின், சிலுவைக்கு மேல் "ஆல்பா" என்னும் கிரேக்க எழுத்துக்கு இணையான "அ" எனும் தமிழ் எழுத்தையும் சிலுவைக்குக் கீழே "ஒமேகா" என்னும் கிரேக்க எழுத்துக்கு இணையான "ன" எனும் தமிழ் எழுத்தையும் எழுதுகின்றார். சிலுவையின் நான் பக்கங்களிலும், நிகழும் ஆண்டின் நான்கு எண்களையும் குறிக்கின்றார். அப்பொழுது அவர் சொல்கின்றார்:

1. **கிறிஸ்து நேற்றும் இன்றும்**
   சிலுவையின் நேர்க்கோட்டை வரைகின்றார்.
2. **முதலும் முடிவும்**
   சிலுவையின் குருக்குக் கோட்டை வரைகின்றார்.
3. **'அ' கரமும்**
   நேர்க்கோட்டுக்கு மேல் 'அ' என்னும் எழுத்தை எழுதுகின்றார்.
4. **'ன' கரமும்**
   நேர்க்கோட்டுக்கு கீழ் 'ன' என்னும் எழுத்தை எழுதுகின்றார்.
5. **நேரங்கள் அவருடையன**
   நிகழும் ஆண்டின் முதல் எண்ணை சிலுவையின் இடப்பக்க மேற்பகுதியில் குறிக்கின்றார்.
6. **காலங்களும் அவருடையன**
   நிகழும் ஆண்டின் இரண்டாம் எண்ணை சிலுவையின் வலப்பக்க மேற்பகுதியில் குறிக்கின்றார்.

7. மாட்சியும் ஆட்சியும் அவருக்கே
நிகழும் ஆண்டின் மூன்றாம் எண்ணை சிலுவையின் இடப்பக்க கீழ்ப்பகுதியில் குறிக்கின்றார்.

8. என்றென்றும் எக்காலமுமே – ஆமென்
நிகழும் ஆண்டின் நான்காம் எண்ணை சிலுவையின் வலப்பக்க கீழ்ப்பகுதியில் குறிக்கின்றார்.

**12.** சிலுவை அடையாளத்தையும் எழுத்து, எண் குறிகளையும் இவ்வாறு பாஸ்கா திரியின்மீது வரைந்தபின், அதில் ஐந்து சாம்பிராணி மணிகளைச் சிலுவை வடிவில் பதிக்கலாம். அப்பொழுது அவர் சொல்கின்றார்:

1. தம்முடைய தூய
2. மாட்சிக்கு உரிய கைகளினால்
3. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து
4. நம்மைக் கண்காணித்துப்
5. பேணிக்காப்பாராக. ஆமென்

**13.** பெரும் இடையூறுகளால் தீயைப் பற்றவைக்க இயலாது எனில் தீயைப் புனிதப்படுத்தும் திருச்சடங்கைச் சூழ்நிலைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம். வழக்கம் போல மக்கள் கோவிலில் கூடியிருக்க, அருள்பணியாளரும் பிற பணியாளரும் பாஸ்கா திரியுடன் கோவிலின் வாயிலுக்கு வருவார்கள். மக்கள் இயன்றவரை அருள்பணியாளரை நோக்கித் திரும்பி நிற்பார்கள்.

எண் 9ல் குறிப்பிட்டுள்ளபடி அருள்பணியாளர் மக்களை வாழ்த்தி, அறிவுரை கூறுகின்றார்: பின் மேல் காணும் 10–13களில் உள்ளவாறு தீயானது புனிதப்படுத்தப்பட்டு மெழுகுதிரியில் ஏற்றப்டுகிறது.

**14.** அருள்பணியாளர் புதுத் தீயிலிருந்து பாஸ்கா திரியைப் பற்றவைத்துச் சொல்கின்றார்:

மாட்சியுடன் உயிர்த்தெழும் கிறிஸ்துவின் ஒளி
இதயத்திலும் மனதிலும் இருள் அகற்றுவதாக.

மேற்சொன்னவற்றைப் பொறுத்தவரையில் மக்களின் பண்பாட்டுக்கு ஏற்ப ஆயர் பேரவைகள் மிகப் பொருத்தமான வேறு திருச்சடங்குகளைப் பயன்படுத்தப் பணிக்கலாம்.

### பாஸ்கா திரி பவனி

**15.** திரி ஏற்றப்பட்டவுடன், பணியாளர்களுள் ஒருவர் எரிந்து கொண்டிருக்கும் தீக் கங்குகளைத் தீயிலிருந்து எடுத்துத் தூபக் கலத்தில் இடுகின்றார்.

அருள்பணியாளர் வழக்கம் போல அதனுள் சாம்பிராணி இடுகின்றார். திருத்தொண்டர் அல்லது - அவர் இல்லை எனில் - தகுதியான வேறொரு பணியாளர் பாஸ்கா திரியை எடுத்துக் கொள்கின்றார். பவனி தொடங்குகின்றது. தூபக் கலத்தை ஏந்தி இருப்பவர் பாஸ்கா திரியை ஏந்திச் செல்லும் திருத்தொண்டரின் அல்லது வேறொரு பணியாளரின்முன் புகையும் தூபக் கலத்துடன் செல்கின்றார். அவர்களை அருள் பணியாளர் ஏற்றப்படாத திரிகளை வைத்திருக்கும் பணியாளர்களுடனும் மக்களுடனும் பின்தொடர்கின்றார். பின் திருத்தொண்டர், கோவில் வாயிலில் நின்று பாஸ்கா திரியை எடுத்து உயர்த்திப் பிடித்துக்கொண்டு பாடுகின்றார்:

கிறிஸ்துவின் ஒளி இதோ!

எல்லாரும் பதிலுரைக்கின்றனர் : இறைவனுக்கு நன்றி.

அருள்பணியாளர் தமது மெழுகுத்திரியைப் பாஸ்கா திரியிலிருந்து பற்ற வைக்கின்றார்.

**16.** கோவிலின் நடுப் பகுதிக்கு வந்து நின்று, மெழுகுதிரியை உயர்த்திப் பிடித்துக் கொண்டு மீண்டும் பாடுகின்றார்:

கிறிஸ்துவின் ஒளி இதோ!

எல்லாரும் பதிலுரைக்கின்றனர் : இறைவனுக்கு நன்றி.

அனைவரும் தத்தம் திரிகளைப் பாஸ்கா திரியிலிருந்து பற்ற வைக்கின்றார்.

**17.** திருத்தொண்டர் பீடத்தின் முன் வந்ததும், மக்களை நோக்கித் திரும்பி நின்றுகொண்டு மெழுகுதிரியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு மூன்றாம் முறையாகப் பாடுகின்றார்:

கிறிஸ்துவின் ஒளி இதோ!

எல்லாரும் பதிலுரைக்கின்றனர் : இறைவனுக்கு நன்றி.

பின் திருத்தொண்டர் வாசக மேடையின் அருகில் அல்லது திருப்பீட முற்றத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள பெரிய விளக்குத் தண்டின்மீது பாஸ்கா திரியை வைக்கின்றார். பீடத்தின் மேலுள்ள மெழுகுதிரிகள் தவிர, கோவில் விளக்குகள் எரியவிடப்படுகின்றன.

## பாஸ்காப் புகழுரை

**18.** பீடத்தை அடைந்ததும் அருள் பணியாளர் தம் இருக்கைக்குச் சென்று தம் கையில் உள்ள மெழுகுதிரியைப் பணியாளரிடம் கொடுத்து விட்டு, பின்பு

தூபத்தை பயன்படுத்தினால், திருப்பலியில் நற்செய்திக்குமுன் செய்வது போல, தூபக் கலத்து, சாம்பிராணி இட்டு அதற்கு ஆசி வழங்குகின்றார். திருத்தொண்டர், "தந்தையே, உம் ஆசி வழங்கும்" எனக் கூறி அருள்பணியாளரிடம் ஆசி வேண்டுகின்றார். அருள்பணியாளர் தாழ்ந்த குரலில் பின்வருமாறு சொல்லி ஆசி வழங்குகின்றார்:

தமது பாஸ்காவின் புகழுரையைத் தகுதியுடனும் முறையாகவும் நீர் அறிவிக்குமாறு, ஆண்டவர் உம் இதயத்திலும் உதடுகளிலும் இருப்பாராக. தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.

திருத்தொண்டர் பதிலுரைக்கின்றார்: ஆமென்.

திருத்தொண்டர் அல்லாதவர் பாஸ்கா புகழுரையைப் பாடினால், இந்த ஆசியுரை விடப்படும்.

**19.** திருத்தொண்டர் திருப்பலி நூலுக்கும் பாஸ்கா திரிக்கும் தூபம் இட்டு, வாசக மேடையில் நின்றுகொண்டு பாஸ்கா புகழுரையைப் பாடுகின்றார். அப்பொழுது அனைவரும் எரியும் திரிகளைத் தம் கைகளில் ஏந்தி நிற்பர்.

தேவையானால், திருத்தொண்டர் இல்லாதபோது திருப்பலிக்குத் தலைமை ஏற்பவரோ கூட்டுத்திருப்பலித் திருப்பணியாளருள் ஒருவரோ பாஸ்கா புகழுரையைப் பாடலாம். பொதுநிலையினருள் பாடகர் ஒருவர் பாஸ்கா புகழுரையைப் பாடலாம் அப்படியெனில் "எனவே, இத்திருவிளக்கின்" எனும் சொற்களிலிருந்து "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" எனும் வாழ்த்துரைவரை உள்ள பகுதியை விட்டுவிட வேண்டும்.

பாஸ்கா புகழுரையின் குறுகிய பாடத்தையும் பாடலாம்.

## பாஸ்காப் புகழுரை : நீண்ட பாடம்

### பாஸ்கா புகழுரை முன்னுரை

இறைவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இறைவாக்கினர்கள் வழியாக, தான் அறிவித்த இறைவாக்குகளை, ஓர் எழுத்து மாறாமல் வரலாற்றிலேயே நடத்திக் காட்டி, தான் வாக்குறுதி மாறாதவர் என்பதை இந்த உலகிற்கு உணர்த்தியவர். அந்த மீட்பின் வரலாறு, கேட்பவரின் உள்ளத்தை உருக்கும் வார்த்தைகளில் வடிக்கப்பட்டு பாஸ்கா புகழுரையாக பாடப்படுகிறது. வரலாற்றில் மட்டுமல்ல, நிகழ்கால நம் வாழ்விலும் நம்மோடு இருந்து, நம்மை தன் கரத்தில் தாங்கி வழிநடத்தும் நம் அன்பு இறைவனின் மாபெரும் செயல்களையும் அற்புதங்களையும் இப்போது நாம் நினைவுகூர்ந்து அவரைப் போற்றி புகழ்வது நம் அனைவரின் கடமையாகும். அந்த மீட்பின் வரலாற்றில் நாம் கடந்து வந்த பாதையை பக்தியோடு திரும்பிப் பார்ப்போம்.

விண்ணகத் தூதர் அணி மகிழ்வதாக;
இப்புனித நிகழ்வில் பெருமகிழ்ச்சி பொங்குவதாக;
மாபெரும் மன்னரது வெற்றிக்காக
எக்காளம் தொனித்து மீட்பை அறிவிப்பதாக.

இப்பெரும் சுடர்களால் ஒளிவீசப்பெற்று,
இவ்வுலகம் பெருமகிழ்ச்சி கொள்வதாக:
முடிவில்லா மன்னரது பேரொளியால்
உலகெல்லாம் துலங்கி, தன்னைச் சூழ்ந்த
இருள் அனைத்தும், ஒழிந்ததென உணர்வதாக.

இப்பெரும் சுடர்களால் அழகுபெற்று
அன்னையாம் திரு அவையும் களிகூர்வதாக.
எனவே மக்கள் அனைவரின் பேரொலியால்,
இக்கோவில் எதிரொலித்து முழங்குவதாக.

(எனவே, இத்திருவிளக்கின் வியத்தகு ஒளியைச்
சூழ்ந்து நிற்கும் அன்புமிக்க சகோதர, சகோதரிகளே,
உங்களை வேண்டுகின்றேன். என்னுடன் சேர்ந்து,
எல்லாம் வல்ல இறைவனின் இரக்கத்தை இறைஞ்சுவீர்களாக.

தகுதியற்ற அடியேனைத் திருப்பணியாளருள் சேர்த்திட
அருள்கூர்ந்த இறைவன்தாமே
திருவிளக்கின் பேரொளியை என் மீது வீசி,
இத்திரியின் புகழ்சாற்றச் செய்வாராக.)

(**மு.மொ** : ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.
**பதில்** : உம் ஆன்மாவோடும் இருப்பாராக.)
**மு.மொ** : இதயங்களை மேலே எழுப்புங்கள்.
**பதில்** : ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.
**மு.மொ** : நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.
**பதில்** : அது தகுதியும் நீதியும் ஆனதே.

கண்ணுக்குப் புலப்படாத
இறைவனாகிய எல்லாம் வல்ல தந்தையையும்,
அவருடைய ஒரே மகனாகிய
நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும்
இதயப் பற்றுதலோடும் முழு மனதோடும் வாயாரப் பாடிப் புகழ்வது
மெய்யாகவே தகுதியும் நீதியும் ஆகும்.
ஆதாமினால் வந்த கடனைக்
கிறிஸ்துவே என்றுமுள்ள தந்தைக்கு நமது பெயரால் செலுத்தி,
பாவத்துக்கு உரிய கடன்சீட்டைத்
தாம் சிந்திய திரு இரத்தத்தால் அழித்துவிட்டார்.

ஏனெனில் பாஸ்கா விழா இதுவே:

இதில், மெய்யான செம்மறியாகிய கிறிஸ்து கொலையுண்டார்;
அவரது இரத்தத்தால் நம்பிக்கையாளரின் கதவு நிலைகள்
அர்ச்சிக்கப்படுகின்றன.

முற்காலத்தில் எம் முன்னோரான இஸ்ரயேல் மக்களை
நீர் எகிப்திலிருந்து விடுவித்து அவர்கள் கால் நனையாமல்
செங்கடலைக் கடக்கச் செய்தது இந்த இரவிலேதான்.

நெருப்புத் தூணின் வெளிச்சத்தால்
பாவத்தின் இருளை அகற்றிய இரவு இதுவே.
பூவுலகெங்கும் இன்று கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டவர்களை
உலகின் தீய வழியிலிருந்தும் பாவ இருளிலிருந்தும் பிரித்து,
அருள்வாழ்வில் மீண்டும் சேர்த்துத் தூயவராக்கியதும்
இந்த இரவேதான்.

சாவின் தளைகளைத் தகர்த்தெறிந்து,
கிறிஸ்து பாதாளத்திலிருந்து வெற்றி வீரராய் எழுந்ததும்
இந்த இரவிலேதான்.
ஏனெனில் இத்தகைய மீட்பின் பயனை யாம் பெறாவிடில்,
பிறந்ததால் எப்பயனும் இல்லையே.

நீர் எம்மீது அருள்கூர்ந்து காட்டிய பரிவிரக்கம்
எத்துணை வியப்புக்கு உரியது!
அடிமையை மீட்குமாறு மகனையே கையளித்த
அளவில்லா அன்புப் பெருக்கே!

ஓ ஆதாமின் பாவமே! உன்னை அழிக்கக்
கிறிஸ்துவின் சாவு திண்ணமாய்த் தேவைப்பட்டது!
இத்துணை மாண்புமிக்க மீட்பரை அடைந்ததால்
பேறுபெற்ற குற்றமே!

ஓ மெய்யாகவே பேறுபெற்ற இரவே!
பாதாளத்திலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழுந்த
காலமும் நேரமும் அறிய நீ மட்டுமே பேறுபெற்றாய்!

இரவு பகல் போல் ஒளிபெறும் நாள் மகிழ்வுற இரவும் ஒளிதரும்
என எழுதியுள்ளது இந்த இரவைக் குறித்தே.
ஆகவே புனிதப்படுத்தும் இவ்விரவின் திருநிகழ்ச்சி
தீமையை ஒழிக்கின்றது, குற்றங்களைக் கழுவிப் போக்குகின்றது;
தவறினோருக்கு மாசின்மையையும்

துயருற்றோருக்கு மகிழ்ச்சியையும் அளிக்கின்றது;
பகைமையை விரட்டுகின்றது, ஆணவத்தை அடக்குகின்றது;
மன ஒற்றுமையை உருவாக்குகின்றது.

ஆகவே தூய தந்தையே, அருள்பொழியும் இவ்விரவில்
நாங்கள் உமது புகழ்ச்சிக்காக அளிக்கும் மாலைப் பலியை ஏற்றருளும்;
தேனீக்களின் உழைப்பாலான மெழுகிலிருந்து உருவான இத்திரியைப்
புனிதத் திரு அவை தன் பணியாளரின் கையால்
மிகச் சிறப்புடன் உமக்கு ஒப்புக்கொடுத்து
மாலைப் பலி செலுத்துகின்றது.

இறைவனின் மாட்சிக்காகச் செந்தழலாய்ச் சுடர்விட்டெரியும்
இந்த நெருப்புத் தூணின் பெருமையை அறிந்திருக்கின்றோம்:
இத்தீயிலிருந்து பல விளக்குகளை ஏற்ற,
தன் ஒளியிலிருந்து பங்கு கொடுத்தாலும், அது குறைவுபடுவதில்லை;
ஏனெனில் தாய்த் தேனீ தந்த மெழுகு உருகுவதால்
உயர்மதிப்புள்ள தீ வளர்க்கப்படுகின்றது.

விண்ணுக்கு உரியவை மண்ணுக்கு உரியவையோடும்
கடவுளுக்கு உரியவை மனிதருக்கு உரியவையோடும் இணைந்தது
மெய்யாகவே பேறுபெற்ற இந்த இரவிலேதான்!

எனவே ஆண்டவரே, உம்மை வேண்டுகின்றோம்:
உமது பெயரின் மாட்சிக்காக நேர்ந்தளிக்கப்பட்ட இந்த மெழுகுதிரி,
இவ்விரவின் இருளை ஒழிக்குமாறு,
குறைவுபடாமல் நின்று எரிவதாக.
இது இனிமைதரும் நறுமணமாக ஏற்கப்பட்டு,
விண்ணக விளக்குகளுடன் கலந்து கொள்வதாக.

விடிவெள்ளி எழும்போதும் இது சுடர்விட்டு எரிவதாக.
ஒருபோதும் மறையாத இந்த விடிவெள்ளி
உம் திருமகன் கிறிஸ்துவேதான்;
பாதாளத்திலிருந்து திரும்பி வந்து,
மனித இனத்தின் மீது அமைதியுடன் ஒளி வீசி,
என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்றவர் அவரே.

**பதில்:** ஆமென்.

## 01 இறைவாக்கு வழிபாடு

**20.** திருவிழிப்புகளுக்கெல்லாம் அன்னையாகிய இத்திருவிழிப்பில் பழைய ஏற்பாட்டிலிருந்து ஏழும் புதிய ஏற்பாட்டிலிருந்து (திருமுகம், நற்செய்தி என) இரண்டும் ஆக மொத்தம் ஒன்பது வாசகங்கள் இடம்பெறுகின்றன. நீண்ட நேரம் நிகழும் திருவிழிப் பின் தன்மையை வெளிப்படுத்தும் வண்ணம், இயன்றவரை வாசகங்கள் அனைத்தும் வாசிக்கப்பட வேண்டும்.

**21.** மத்திய அருள் பணிச் சூழலை முன்னிட்டுப் பழைய ஏற்பாட்டு வாசதங்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் ஆனால் இறைவாக்கு வாசகம் இத்திருவிழிப்பின் மிக இன்றியமையாப் பகுதி என் பதை எப்பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டும். பழைய எம்பாட்டிலிருந்து (திருச்சட்டம், இறைவாக்குப் பகுதிகளிலிருந்து) அவற்றுக்கு உரிய பதிலுரைத் திருப்பாடல்களும் பாடப்பட வேண்டும் மூன்று வாசகங்களாவது வாசிக்கப்பட வேண்டும். விடுதலைப் பயணம் 14-ஆம் பிரிவிலிருந்து எடுக்கப்படும் வாசகத்தையும் அதற்கு உரிய சிறு பாடலையும் ஒருபோதும் விட்டுவிடலாகாது.

**22.** அனைவரும் மெழுகுதிரிகளை அணைத்துவிட்டு அமர்ந்திருப்பர். வாசகங்களைத் தொடங்கும் முன் அருள் பணியாளர் கீழுள்ளவாறு அல்லது இது போன்று மக்களுக்கு அறிவுரை கூறுகின்றார்:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இத்திருவிழிப்பைச் சிறப்புடன் தொடங்கியுள்ள நாம், அமைதியான இதயத்தோடு இப்போது இறைவார்த்தையைக் கேட்போமாக: கடந்த காலங்களில் கடவுள் தம் மக்களை எவ்வாறு மீட்டார் என்றும், இறுதியாகத் தம் திருமகனை நமக்கு மீட்பராக அனுப்பினார் என்றும் சிந்திப்போமாக. மேலும் விடுதலை அளிக்கும் இந்தப் பாஸ்கா நிகழ்வினால் மீட்பின் நிறைவுக்கு நம் இறைவன் நம்மை இட்டுச்செல்வாராக.

### உயிர்ப்பு விழா திருப்பலி வாசகங்கள்

திருவிழிப்புகளுக்கெல்லாம் அன்னையாகிய இத்திருவிழிப்பில் பழைய ஏற்பாட்டிலிருந்து ஏழும், புதிய ஏற்பாட்டிலிருந்து (திருமுகம், நற்செய்தி என) இரண்டும் ஆக ஒன்பது வாசகங்கள் இடம் பெறுகின்றன.

மக்களின் பொது நன்மைக்குத் தேவையானால், பழைய ஏற்பாட்டு வாசகங்களைக் குறைக்கலாம் ஆனால் இறைவாக்கு வாசகம் இத்திருவிழிப்பின் மிக முக்கியமான பகுதி என்பதை எப்பொழுதும் கருத்தில் கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டிலிருந்து மூன்று வாசகங்களாவது வாசிக்கவேண்டும்: மிகவும் முக்கியமான காரணங்களுக்காக இதை இரண்டாக்கலாம். ஆனால் யாத்திராகமம் 14ஆம் அதிகாரத்தை ஒருபோதும் விட்டுவிடலாகாது.

**23.** பின் வாசகங்கள் தொடரும். வாசகர் வாசகமேடைக்குச் சென்று முதல் வாசகத்தை அறிக்கையிடுவார். அடுத்து, திருப்பாடல் முதல்வர் அல்லது பாடகர் ஒருவர் திருப்பாடலைப் பாட, மக்கள் பதிலுரையைப் பாடுவார்கள். அது முடிந்தபின் எல்லாரும் எழுந்து நிற்க, அருள்பணியாளர் "மன்றாடுவோமாக" எனச் சொல்லி அழைப்பார் அனைவரும் சிறிது நேரம் அமைதியாக மன்றாடிய பின், அருள் பணியாளர் அவ்வாசகத்துக்கு உரிய மன்றாட்டைச் சொல்லுவார். பதிலுரைத் திருப்பாடலுக்குப் பதிலாக, சிறிது நேர அமைதி மன்றாட்டு இடம் பெறலாம். அப்படியானால், "மன்றாடுவோமாக" எனும் அழைப்புக்குப்பின் அமைதி தேவை இல்லை.

**ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா இரவுத் திருப்பலி வாசகங்கள்**

திருவிழிப்புகளுக்கெல்லாம் அன்னையாகிய இத்திருவிழிப்பில் பழைய ஏற்பாட்டிலிருந்து ஏழும், புதிய ஏற்பாட்டிலிருந்து (திருமுகம், நற்செய்தி என) இரண்டும் ஆக ஒன்பது வாசகங்கள் இடம் பெறுகின்றன.

மக்களின் பொது நன்மைக்குத் தேவையானால், பழைய ஏற்பாட்டு வாசகங்களைக் குறைக்கலாம் ஆனால் இறைவாக்கு வாசகம் இத்திருவிழிப்பின் மிக முக்கியமான பகுதி என்பதை எப்பொழுதும் கருத்தில் கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டிலிருந்து மூன்று வாசகங்களாவது வாசிக்கவேண்டும்: மிகவும் முக்கியமான காரணங்களுக்காக இதை இரண்டாக்கலாம். ஆனால் யாத்திராகமம் 14ஆம் அதிகாரத்தை ஒருபோதும் விட்டுவிடலாகாது.

அனைவரும் திரிகளை அணைத்துவிட்டு அமர்ந்திருப்பர். வாசகங்களைத் தொடங்குமுன் குரு கீழுள்ளவாறு அல்லது அதுபோன்று மக்களுக்கு அறிவுரை கூறுவார்:

அன்புச் சகோதரர்களே சகோதரிகளே, இத்திருவிழிப்பைச் சிறப்புடன் தொடங்கிய நாம், அமைந்த உள்ளத்தோடு இறைவாக்கினைக் கேட்போமாக: கடந்த காலங்களில் கடவுள் தம் மக்களை எவ்வாறு வழிநடத்திக் காத்து வந்தார் என்றும், இறுதியாகத் தம் திருமகனை நம் மீட்பராக அனுப்பினார் என்றும் சிந்திப்போமாக. மேலும், இறைவன் பாஸ்கா வழியாக ஆற்றிய மீட்புப் பணியை முழுமையாக்கிட வேண்டுவோமாக.

பின்னர் வாசகங்கள் தொடரும் வாசகர் வாசகமேடைக்குச் சென்று முதல் வாசகத்தை அறிக்கையிடுவார். அடுத்து சங்கீத முதல்வர் அல்லது பாடகர் ஒருவர் சங்கீத அடிகளைப் பாட, இறைமக்கள் பதிலுரையைப் பாடுவார்கள். அது முடிந்தபின் எல்லாரும் எழுந்து நிற்க, குரு செபிப்போமாக (மன்றாடுவோமாக) என்று சொல்லி அழைப்பார்: அனைவரும் சிறிது நேரம் மௌனமாகச் செபித்தபின், குரு சபை மன்றாட்டைச் சொல்லுவார்.

பதிலுரைச் சங்கீதத்திற்குப் பதிலாக அமைதியான செபம் இடம் பெறலாம். அப்படியானால் மன்றாடுவோமாக என்னும் அழைப்புக்குப்பின் அமைதி தேவையில்லை.

## 24. முதல் வாசகம் - கடவுளின் படைப்பு

### முதல் வாசக முன்னுரை

மனிதர் மீது கடவுள் வைத்திருக்கிற உயர்ந்த அன்பின் வெளிப்பாடு தான், அவனை தனது சாயலாகப் படைத்து, இந்த உலகத்தை அவனது பராமரிப்பிலேயே விடுகிற பாசத்தைக் காட்டியது. ஆம், ஒன்றுமில்லாமையிலிருந்து ஒரே ஒரு வார்த்தை கொண்டு இந்த உலகத்தைப் படைக்க முடிந்த இறைவனுக்கு அதைப் பராமரிப்பதும் கடினமான செயல்

அல்ல. ஆனாலும் மனிதர் மீது வைத்திருந்த ஆழமான அன்பினால், அவன்பால் கொண்டிருந்த தீராத நம்பிக்கையினால், இந்த உலகை பாதுகாக்கும் பொறுப்பை மனுக்குலத்திற்கு கொடுத்தார். இறைவனின் உன்னதமான அன்புக்கு நாம் தகுதியற்றவர்கள் என்பதன் வெளி அடையாளம்தான் இயற்கையை சிதைத்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கும் நம்முடைய செயல்பாடுகள். நம்மை விடாது துரத்தி வரும் தொற்று நோய்கள். இனியாவது விழித்துக் கொள்வோம். இயற்கையைக் காக்க சூளுரைப்போம். இறை அன்பின் தூதுவர்களாய் இயற்கை அன்னையின் பிள்ளைகளாய் வாழ உறுதி எடுப்போம்.

## முதல் வாசகம்

### தொடக்க நூல் 1: 1-2:2

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள், "ஒளி தோன்றுக!" என்றார். ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார். கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். கடவுள் ஒளிக்குப் "பகல்" என்றும் இருளுக்கு "இரவு" என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது.

அப்பொழுது கடவுள், "நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்" என்றார். கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் வானத்திற்கு "விண்ணுலகம்" என்று பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது.

அப்பொழுது கடவுள், "விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக!" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு "நிலம்" என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் "கடல்" என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது கடவுள், "புற்பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும், கனி தரும் பழமரங்களையும் அந்த அந்த இனத்தின்படியே நிலம் விளைவிக்கட்டும்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. புற்பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் அந்த அந்த இனத்தின் படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்டார். மாலையும், காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது.

அப்பொழுது கடவுள், "பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப் பதற்கும் காலங்கள், நாள்கள், ஆண்டுகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கும் விண்விரிவினில் ஒளிப்பிழம்புகள் தோன்றுக! அவை மண்ணுலகிற்கு ஒளி தர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் இருபெரும் ஒளிப் பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய

ஒளிப்பிழம்பையும் மற்றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார். கடவுள் மண்ணுலகிற்கு ஒளிதர விண்ணுலக வானத்தில் அவற்றை அமைத்தார் பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் அவற்றை அமைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார். மாலையும் காலையும் நிறைவுற்று நான்காம் நாள் முடிந்தது.

அப்பொழுது கடவுள், "திரளான உயிரினங்களைத் தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்திற்கு மேலே பறவைகள் பறப்பனவாக!" என்றார். இவ்வாறு, கடலின் பெரும் பாம்புகளையும், திரள் திரளாக நீரில் நீந்திவாழும் உயிரினங்களையும், இறக்கையுள்ள எல்லாவிதப் பறவைகளையும் அவ்வவற்றின் இனத்தின்படி கடவுள் படைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார். கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்" என்றுரைத்தார். மாலையும் காலையும் நிறைவுற்று, ஐந்தாம் நாள் முடிந்தது.

அப்பொழுது கடவுள், "கால்நடைகள், ஊர்வன, காட்டுவிலங்குகள் ஆகியவற்றை அவ்வவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக" என்றார். கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவ்வவற்றின் இனத்தின்படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும் வானத்துப் பறவைகளையும் கால்நடைகளையும் மண்ணுலகு முழுவதையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார்.

கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார். அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன் இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது.

விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின. மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

ஆண்டவரின் அருள்வாக்கு.

## அல்லது

### தொடக்க நூல் 1: 1, 26-32அ

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தார். அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவை களையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.

கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார். அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன் இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. **ஆண்டவரின் அருள்வாக்கு.**

### திருப்பாடல் 104:1-2அ, 5-6. 10,12. 13-14. 24, 35உ (பல்லவி : 30)

**பல்லவி : ஆண்டவரே! உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.**

1என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் கடவுளாகிய ஆண்டவரே!
நீர் எத்துணை மேன்மைமிக்கவர்! நீர் மாண்பையும் மாட்சியையும்
அணிந்துள்ளவர். 2 பேரொளியை ஆடையென அணிந்துள்ளவர். - **பல்லவி**

5நீவிர் பூவுலகை அதன் அடித்தளத்தின்மீது நிலைநாட்டினீர் அது
என்றென்றும் அசைவுறாது. 6அதனை ஆழ்கடல் ஆடையென மூடியிருந்தது;
மலைகளுக்கும் மேலாக நீர்த்திரள் நின்றது. - **பல்லவி**

10பள்ளத்தாக்குகளில் நீரூற்றுகள் சுரக்கச் செய்கின்றீர் அவை
மலைகளிடையே பாய்ந்தோடும். 12நீரூற்றுகளின் அருகில் வானத்துப்
பறவைகள் கூடுகட்டிக் கொள்கின்றன. அவை மரக்கிளைகளினின்று
இன்னிசை இசைக்கின்றன. - **பல்லவி**

13உம் மேலறைகளினின்று மலைகளுக்கு நீர் பாய்ச்சுகின்றீர்; உம்
செயல்களின் பணியால் பூவுலகம் நிறைவடைகின்றது.
14கால்நடைகளுக்கெனப் புல்லை முளைக்கச் செய்கின்றீர்; மானிடருக்கெனப்
பயிர்வகைகளை வளரச் செய்கின்றீர். - **பல்லவி**

24ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை! நீர்
அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர் பூவுலகம் உம் படைப்புகளால்
நிறைந்துள்ளது. 35என் உயிரே! நீ ஆண்டவரைப் போற்றிடு! - **பல்லவி**

**அல்லது**

**திருப்பாடல் 33:4-5. 6-7. 12-13. 20, 22 (பல்லவி : 5ஆ)**
**பல்லவி : ஆண்டவருடைய பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது.**

4ஆண்டவரின் வாக்கு நேர்மையானது; அவருடைய செயல்கள் எல்லாம்
நம்பிக்கைக்கு உரியவை. 5அவர் நீதியையும் நேர்மையையும் விரும்புகின்றார்;
அவரது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது. - **பல்லவி**
6ஆண்டவரது வாக்கினால் வானங்கள் உண்டாயின; அவரது
சொல்லின் ஆற்றலால் வான் கோள்கள் எல்லாம் உருவாயின. 7அவர்
கடல்நீரைக் குவியல்போல் சேர்த்து வைத்தார். அந்நீரை ஆழ் நிலவறைகளில்
சேமித்து வைத்தார். - **பல்லவி**
12ஆண்டவரைத் தன் கடவுளாகக் கொண்ட இனம் பேறுபெற்றது; அவர்
தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறு பெற்றோர்.
13வானினின்று ஆண்டவர் பார்க்கின்றார். மானிடர் அனைவரையும்
காண்கின்றார். - **பல்லவி**
20நாம் ஆண்டவரை நம்பியிருக்கின்றோம். அவரே நமக்குத் துணையும்
கேடயமும் ஆவார். 22உம்மையே நாங்கள் நம்பியிருப்பதால், உமது பேரன்பு
எங்கள் மீது இருப்பதாக! - **பல்லவி**

முதல் வாசகம் – பதிலுரைப் பாடலுக்குப் பின்

**மன்றாடுவோமாக**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, உம்முடைய செயல்கள் அனைத்தையும் நீர் வியப்புக்கு உரிய வகையில் சீர்படுத்துகின்றீர்; தொடக்கத்தில் நீர் உலகத்தைப் படைத்தது மாபெரும் செயலே; இறுதி நாள்களில் எங்கள் பாஸ்காவாகிய கிறிஸ்து பலியானார் என்பது அதைவிட மாபெரும் செயல் ஆகும்: மீட்பு அடைந்த உம் மக்கள் இதைக் கண்டுணரச் செய்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**பதில் :** ஆமென்.

**அல்லது**

**மன்றாடுவோமாக**

இறைவா, மனிதரை வியத்தகு முறையில் படைத்தீர், அதனினும் வியத்தகு முறையில் மீட்டருளினீர்; நாங்கள் மெய்யறிவுடன் பாவ நாட்டங்களை உறுதியாய் எதிர்த்து நின்று முடிவில்லா மகிழ்ச்சிக்கு வந்து சேரும் தகுதி பெற அருள்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

# 25. இரண்டாம் வாசகம் - ஆபிரகாமின் பலி

## இரண்டாம் வாசக முன்னுரை

விசுவாசம் என்பது வெறும் நம்பிக்கையோடு நின்று விடுவது அல்ல. அது நம்பிக்கை, செயல்பாடு என்னும் இரு பரிமாணங்களைக் கொண்டது. எனவே தான் யாக்கோபு தன் திருமுகத்தில், உயிரில்லாத உடல் போல செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே என்ற கடினமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். உண்மையான விசுவாசத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு தந்தை ஆபிரகாம். அவருடைய விசுவாசம் வெறும் நம்பிக்கையோடு நின்று விடவில்லை. மாறாக, வாழ்வில் செயல்படுத்தி முழுமைப்படுத்தினார். எனவேதான் அவர் விசுவாசத்தின் தந்தை. அவர் வாழ்ந்து காட்டிய விசுவாச வாழ்வை கருத்தூன்றிக் கேட்போம். நம் விசுவாசம் செயல் வடிவம் பெற தொடர்ந்து முயல்வோம்.

## இரண்டாம் வாசகம்

### தொடக்க நூல் 22: 1-18

கடவுள் ஆபிரகாமைச் சோதித்தார். அவர் அவரை நோக்கி, ஆபிரகாம்! என, அவரும் "இதோ! அடியேன்" என்றார். அவர், "உன் மகனை, நீ அன்புகூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு, மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரி பலியாக அவனை நீ பலியிட வேண்டும்" என்றார்.

அவ்வாறே ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தமது கழுதைக்குச் சேணமிட்டு, தம் வேலைக்காரருள் இருவரையும் தம் மகன் ஈசாக்கையும் அழைத்துக்கொண்டு, எரி பலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை வெட்டியபின், கடவுள் தமக்குக் குறிப்பிட்டிருந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

மூன்றாம் நாள் ஆபிரகாம் கண்களை உயர்த்தி அந்த இடத்தைத் தூரத்திலிருந்து பார்த்தார். உடனே ஆபிரகாம் தம் வேலைக்காரர்களை நோக்கி, "நீங்கள் கழுதையோடு இங்கேயே காத்திருங்கள். நானும், பையனும் அவ்விடம் சென்று வழிபாடு செய்தபின் உங்களிடம் திரும்பி வருவோம்" என்றார்.

பின் ஆபிரகாம் எரிபலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை எடுத்துத் தம் மகன் ஈசாக்கின்மீது வைத்தார். நெருப்பையும் கத்தியையும் தம் கையில் எடுத்துக்கொண்டார். இவ்வாறு இருவரும் சேர்ந்து சென்றனர். அப்பொழுது, ஈசாக்கு தன் தந்தையாகிய ஆபிரகாமை நோக்கி, "அப்பா!" என, அவர், "என்ன? மகனே!" என்று கேட்டார். அதற்கு அவன், "இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன. எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?" என்று வினவினான். அதற்கு ஆபிரகாம், "எரிபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பொறுத்தமட்டில், கடவுளே பார்த்துக்கொள்வார் மகனே" என்றார். இருவரும் சேர்ந்து தொடர்ந்து நடந்தனர்.

ஆபிரகாமுக்குக் கடவுள் குறிப்பிட்டுச் சொல்லிய இடத்தை அவர்கள் அடைந்தனர். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்து அதன்மேல் விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டி, பீடத்தின்மீதிருந்த விறகுக் கட்டைகளின்மேல் கிடத்தினார். ஆபிரகாம் தம் மகனை வெட்டுமாறு தம் கையை நீட்டிக் கத்தியைக் கையில் எடுத்தார். அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்திலிருந்து "ஆபிரகாம்! ஆபிரகாம்!" என்று கூப்பிட, அவர் "இதோ! அடியேன்" என்றார். அவர், "பையன்மேல் கை வைக்காதே; அவனுக்கு எதுவும் செய்யாதே; உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்துகொண்டேன்" என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை உயர்த்திப் பார்த்தார். இதோ, முட்செடியில் கொம்பு மாட்டிக்கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாயைக் கண்டார். உடனே ஆபிரகாம் அங்குச் சென்று அந்தக் கிடாயைப் பிடித்து தம் மகனுக்குப் பதிலாக எரி பலியாக்கினார். எனவே, ஆபிரகாம் அந்த இடத்திற்கு "யாவேயிரே" என்று பெயரிட்டார். ஆதலால்தான் "மலையில் ஆண்டவர் பார்த்துக்கொள்வார்" என்று இன்றுவரை வழங்கி வருகிறது.

ஆண்டவரின் தூதர் ஆபிரகாமை வானத்திலிருந்து மீண்டும் அழைத்து, "ஆண்டவர் கூறுவது இதுவே! நான் என்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உன் ஒரே மகனை எனக்குப் பலியிடத் தயங்காமல் நீ இவ்வாறு செய்தாய். ஆதலால் நான் உன்மீது உண்மையாகவே ஆசி பொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழி மரபைப் பலுகிப் பெருகச் செய்வேன். உன் வழிமரபினர் தம் பகைவர்களின் வாயிலை உரிமையாக்கிக் கொள்வர். மேலும், நீ என் குரலுக்குச் செவிகொடுத்ததனால் உலகின் அனைத்து இனத்தவரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர்" என்றார். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**அல்லது**

## தொடக்க நூல் 22: 1-2, 9அ, 10-13, 15-18

கடவுள் ஆபிரகாமைச் சோதித்தார். அவர் அவரை நோக்கி, ஆபிரகாம்! என, அவரும் "இதோ! அடியேன்" என்றார். அவர், "உன் மகனை, நீ அன்புகூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு, மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரிபலியாக அவனை நீ பலியிட வேண்டும்" என்றார்.

ஆபிரகாமுக்குக் கடவுள் குறிப்பிட்டுச் சொல்லிய இடத்தை அவர்கள் அடைந்தனர். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்து அதன்மேல் விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்தார். ஆபிரகாம் தம் மகனை வெட்டுமாறு தம் கையை நீட்டிக் கத்தியைக் கையிலெடுத்தார். அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்திலிருந்து "ஆபிரகாம்! ஆபிரகாம்!" என்று கூப்பிட, அவர் "இதோ! அடியேன்" என்றார். அவர், "பையன்மேல் கை வைக்காதே; அவனுக்கு எதுவும் செய்யாதே; உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது

நான் அறிந்துகொண்டேன்" என்றார். அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை உயர்த்திப் பார்த்தார். இதோ, முட்செடியில் கொம்பு மாட்டிக்கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாயைக் கண்டார். உடனே ஆபிரகாம் அங்குச் சென்று அந்தக் கிடாயைப் பிடித்து தம் மகனுக்குப் பதிலாக எரி பலியாக்கினார்.

ஆண்டவரின் தூதர் ஆபிரகாமை வானத்தினின்று மீண்டும் அழைத்து, "ஆண்டவர் கூறுவது இதுவே! நான் என்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உன் ஒரே மகனை எனக்குப் பலியிடத் தயங்காமல் நீ இவ்வாறு செய்தாய். ஆதலால் நான் உன்மீது உண்மையாகவே ஆசி பொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழிமரபைப் பலுகிப் பெருகச் செய்வேன். உன் வழிமரபினர் தம் பகைவர்களின் வாயிலை உரிமையாக்கிக் கொள்வர். மேலும், நீ என் குரலுக்குச் செவிகொடுத்ததனால் உலகின் அனைத்து இனத்தவரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர்" என்றார். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

## திருப்பாடல் 16:5,8. 9-10. 11 (பல்லவி : 1)

**பல்லவி : இறைவா, என்னைக் காத்தருளும் உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன். திருச்சிலுவையை உயர்த்திக் காட்டுதல்**

5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து; அவரே என் கிண்ணம்;எனக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே; 8 ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன். அவர் என் வலப்பக்கம் உள்ளார் எனவே, நான் அசைவுறேன். - **பல்லவி**

9 என் இதயம் அக்களிக்கின்றது; என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றது;என் உடலும் பாதுகாப்பில் நிலைத்திருக்கும். 10 ஏனெனில், என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்கமாட்டீர்; உம் அன்பனைப் படுகுழியைக் காணவிடமாட்டீர். - **பல்லவி**

11 வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்; உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு; உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு. - **பல்லவி**

இரண்டாம் வாசகம் – பதிலுரைப் பாடலுக்குப் பின்

**மன்றாடுவோமாக**

இறைவா, நம்பிக்கையாளரின் உன்னதத் தந்தையே, உமது வாக்குறுதியால் நீர் சொந்த மக்களாக்கிக் கொண்டவர்களை உலகம் முழுவதிலும் பெருகச் செய்தீர்; உம் ஊழியராகிய ஆபிரகாம் அனைத்துலக மக்களின் தந்தையாவார் எனும் உமது உறுதிமொழியை நீர் வாக்களித்தபடி பாஸ்கா மறைபொருளின் வழியாக நிறைவேற்றினார்: உம் மக்கள் உமது அழைப்பின் அருளைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெறுவார்களாக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

# 26. மூன்றாம் வாசகம் - செங்கடலைக் கடத்தல்

## மூன்றாம் வாசகம் முன்னுரை

ஆண்டவரைத் தேடுவோர்க்கு எந்த நன்மையும் குறைவுபடாது என்ற திருப்பாடல் ஆசிரியரின் பட்டறிவு வரிகளை இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையில் நாம் பார்க்கிறோம். வாழ்வே முடிந்துவிட்டது என்று நம்பிக்கை இழந்துபோகிற தருணத்திலும், நம்பிக்கையோடு இருந்தால் கடவுளின் வல்லமை நம்மை வழிநடத்தும் என்பதற்கு இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கை பாடம் நமக்கெல்லாம் இறை உணர்வைத் தரும் பாடம். இறைவனை நம்புவோர் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை. வாழ்வோ, சாவோ, வேதனையோ, வெற்றிச் செயலோ, இன்பமோ, துன்பமோ எது நடந்தாலும் இறைவனைப் பற்றிக் கொள்வோம். அவரிடம் நம்மை ஒப்படைப்போம். நேரிய வழியில் அவர் நம்மை வழிநடத்துவார்.

## மூன்றாம் வாசகம்

### விடுதலைப் பயணம் 14: 15-15:1

அந்நாள்களில் ஆண்டவர் மோசேயை நோக்கி, "ஏன் என்னை நோக்கி அழவேண்டும்? முன்னோக்கிச் செல்லும்படி இஸ்ரயேல் மக்களிடம் சொல். கோலை உயர்த்திப் பிடித்தவாறு உன் கையைக் கடல்மேல் நீட்டி அதனைப் பிரித்துவிடு. இஸ்ரயேல் மக்கள் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து செல்வார்கள். நான் எகிப்தியரின் மனத்தைக் கடினப்படுத்துவேன். அவர்கள் இஸ்ரயேலரைப் பின்தொடர்ந்து செல்வார்கள். அப்போது பார்வோனையும் அவனுடைய படைகள், தேர்கள், குதிரை வீரர்கள் அனைவரையும் வென்று நான் மாட்சியுறுவேன். பார்வோனையும் அவன் தேர்களையும் குதிரை வீரர்கள் அனைவரையும் வென்று நான் மாட்சியுறும்போது, "நானே ஆண்டவர்!" என்று எகிப்தியர் உணர்ந்து கொள்வர்" என்றார். இஸ்ரயேல் அணிவகுப்புக்கு முன் சென்றுகொண்டிருந்த இறைத்தூதர் அவர்களுக்குப் பின் வந்து நின்றார். மேகத்தூணும் இடம்பெயர்ந்து முன் பக்கத்திலிருந்து அவர்களுக்குப் பின்பக்கம் வந்து நின்றுகொண்டது. அது எகிப்தியரின் அணிவகுப்புக்கும்

இஸ்ரயேலரின் அணிவகுப்புக்கும் இடையே சென்றுகொண்டிருந்தது. அந்த மேகம் எகிப்தியருக்கு இருளாகவும் இஸ்ரயேலருக்கு இரவில் ஒளியாகவும் அமைந்தது. இதனால் இரவில் எந்நேரத்திலும் அவர்கள் இவர்களை நெருங்கவில்லை.

மோசே தம் கையைக் கடல்மேல் நீட்டவே, ஆண்டவர் கீழைக் காற்றை இரவு முழுவதும் வன்மையாக வீசச்செய்து கடலைப் பின்வாங்க வைத்து உலர்ந்த தரையாக்கினார். நீர்த்திரள் பிரிக்கப்பட்டது. வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் உள்ள நீர்த்திரள் அவர்களுக்குச் சுவராக விளங்க, இஸ்ரயேல் மக்கள் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். எகிப்தியர் அவர்களைத் துரத்திச் சென்றனர். பார்வோனின் குதிரைகள், தேர்கள், குதிரை வீரர்கள் அனைவரும் அவர்களுக்குப் பின்னால் நடுக்கடல் வரை சென்றனர். பொழுது புலரும் முன், நெருப்பும் மேகமுமான தூணிலிருந்து ஆண்டவர் எகிப்தியரின் அணிவகுப்புகளைப் பார்த்து அந்த எகிப்திய

அணிவகுப்புகளை நிலைகுலையச் செய்தார். அவர்களுடைய தேர்களின் சக்கரங்களை அவர் புதைந்து போகச் செய்ததால், தேரோட்டுவது அவர்களுக்குக் கடினமாயிற்று. அப்போது எகிப்தியர், "இஸ்ரயேலரிடமிருந்து நாம் ஓடிச் சென்றுவிடுவோம். ஏனெனில், ஆண்டவர் தாமே அவர்கள் சார்பாக நின்று எகிப்தியராகிய நமக்கு எதிராகப் போரிடுகிறார்" என்றனர்.

ஆண்டவர் மோசேயை நோக்கி, "நீர்த்திரள் எகிப்தியர் மேலும் அவர்கள் தேர்கள், குதிரை வீரர் அனைவர் மேலும் திரும்பி வரச் செய்வதற்காக உன் கையைக் கடல்மேல் நீட்டு" என்றார். மோசே தம் கையைக் கடல்மேல் நீட்டவே, காலையில் விடியும் நேரத்தில் கடல் தன் முன்னைய நிலைக்குத் திரும்பி வந்தது. அதற்கு எதிர்ப்பட அஞ்சி, எகிப்தியர்கள் விரைந்தோடுகையில் ஆண்டவர் எகிப்தியரை நடுக்கடலில் அமிழ்த்தினார். திரும்பி வந்த நீர்த்திரள் தேர்கள், குதிரை வீரர்கள் மற்றும் கடலுக்குள் துரத்திச் சென்ற பார்வோனின் படைகள் அனைவரையும் மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவன்கூடத் தப்பவில்லை. ஆனால் இஸ்ரயேல் மக்கள் கடலின் உலர்ந்த தரையில் நடந்து சென்றனர். நீர்த்திரள் வலப்புறமும் இடப்புறமும் அவர்களுக்குச் சுவராக நின்றது.

இவ்வாறு ஆண்டவர் அந்நாளில் எகிப்தியர் பிடியினின்று இஸ்ரயேலருக்கு விடுதலை அளித்தார். கடற்கரையில் எகிப்தியர் செத்துக் கிடப்பதை இஸ்ரயேலர் கண்டனர். எகிப்தியருக்கு எதிராக ஆண்டவர் கைவன்மை காட்டிச் செயல் புரிந்ததை உணர்ந்து ஆண்டவர்மீது மக்கள் அச்சம் கொண்டனர். மேலும் அவர்கள் ஆண்டவரிடமும் அவர் அடியார் மோசேயிடமும் நம்பிக்கை வைத்தனர்.அப்போது மோசேயும் இஸ்ரயேல் மக்களும் ஆண்டவரைப் புகழ்ந்தேத்திப் பாடிய பாடல் வருமாறு: **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**விடுதலைப்பயணம் 15:1-2. 3-4. 5-6. 17-18 (பல்லவி : 1அ)**
**பல்லவி : ஆண்டவருக்கு நான் புகழ் பாடுவேன் ஏனெனில் மாட்சியுடன் வெற்றி பெற்றார்.**

1 ஆண்டவருக்கு நான் புகழ் பாடுவேன்: ஏனெனில், அவர் மாட்சியுடன்
வெற்றி பெற்றார்; குதிரையையும், குதிரை வீரனையும் கடலுக்குள்
அமிழ்த்திவிட்டார். 2 ஆண்டவரே என் ஆற்றல்; என் பாடல். அவரே என்
விடுதலை; என் கடவுள். அவரை நான் புகழ்ந்தேத்துவேன். அவரே என்
மூதாதையரின் கடவுள் அவரை நான் ஏத்திப்போற்றுவேன். - **பல்லவி**
3 போரில் வல்லவர் ஆண்டவர் 'ஆண்டவர்' என்பது அவர் பெயராம்.
4 பார்வோனின் தேர்களையும் படையையும் அவர் கடலில் தள்ளிவிட்டார்.
அவனுடைய சிறந்த படைத்தலைவர்கள் செங்கடலில் அமிழ்த்தப்பட்டனர். - **பல்லவி**
5 ஆழங்களில் அவர்கள் கல்லைப்போல் மூழ்கிப் போயினர். ஆழங்கள்
அவர்களை மூடிக்கொண்டன. 6 ஆண்டவரே, உம் வலக்கை வலிமையில்
மாண்புற்றது; ஆண்டவரே, உமது வலக்கை பகைவரைச் சிதறடிக்கின்றது. - **பல்லவி**

[17]ஆண்டவரே, எம் தலைவரே! நீர் ஏற்படுத்திய உமது உறைவிடமும், உம் கைகள் உருவாக்கிய திருத்தலமும் அமைந்துள்ள உம் உரிமைச் சொத்தான மலைக்கு அவர்களைக் கொண்டு சென்று நிலைநாட்டினீர். [18]ஆண்டவர் என்றென்றும் அரசாள்வார். - **பல்லவி**

மூன்றாம் வாசகம் – பதிலுரைப் பாடலுக்குப் பின்

**மன்றாடுவோமாக**

இறைவா, நீர் முற்காலத்தில் ஆற்றிய அருஞ்செயல்கள் எங்கள் காலத்திலும் தொடர்வதை உணர்கின்றோம்: உமது வலக் கையின் ஆற்றலால் ஓர் இனத்தாரைப் பார்வோனின் கொடுமையிலிருந்து விடுவித்தீர்; அவ்வாறே புதுப் பிறப்பு அளிக்கும் நீரினால் பிற இனத்தாருக்கு மீட்பு அளித்து வருகின்றீர்; எனவே உலக மாந்தர் அனைவரும் உமது அருளினால் ஆபிரகாமின் மக்களாகி, இஸ்ரயேல் இனத்தாருக்கு உரிய மேன்மையின் முழுமையை அடையச் செய்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

**அல்லது**

**மன்றாடுவோமாக**

இறைவா, முற்காலத்தில் நிறைவேற்றிய அருஞ்செயல்களைப் புதிய உடன்படிக்கையின் ஒளியால் தெளிவுபடுத்தினீர்: இவ்வாறு திருமுழுக்கு நீரின் சாயலாகச் செங்கடல் விளங்கவும் அடிமைத்தளையிலிருந்து மீட்கப்பெற்ற மக்கள் கிறிஸ்தவ மக்களின் முன்னடையாளமாகத் திகழவும் செய்தீர்; இஸ்ரயேல் மக்கள் பெற்ற சிறப்பு உரிமையை எல்லா மக்கள் இனத்தாரும் நம்பிக்கையால் பெற்றுக்கொண்டு உம் தூய ஆவியார் வழியாகப் புதுப் பிறப்பு அடையச் செய்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

## 27. நான்காம் வாசகம் - புதிய எருசலேம்

**நான்காம் வாசகம் முன்னுரை**

இறைவன் நம்மோடு இருக்கின்றபோது நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. நமக்கு எதிராக எழுகிற துன்பங்கள் கடலலை போல் சீறி எழுந்தாலும், வாழ்வின் சோகங்கள் புயலாக நம்மை தாக்கினாலும், அன்றாட நிகழ்வுகள் சுமையால் நம்மை அழுத்தினாலும் நாம் பயப்படத் தேவையில்லை. ஏனெனில் இறைவன் நம்மைத் தள்ளாட விடமாட்டார். நம் கால்கள் சோர்ந்து போக விடமாட்டார். நம்மைத் தாங்கிப் பிடிக்கும் தேவனவர். அவரிலே நாம் இணைந்திருந்தால் எதுவும் நம்மை அழித்து விட முடியாது. அந்த இறை ஒன்றிப்பு வரம் நமக்கு இனிதே கிடைத்திட, அதன் வழிகளைக் கேட்டு பயன் பெறுவோம்.

## நான்காம் வாசகம்

**எசாயா 54:5 – 14**

ஆண்டவர் கூறுவது: உன்னை உருவாக்கியவரே உன் கணவர், 'படைகளின் ஆண்டவர்' என்பது அவர்தம் பெயராம். இஸ்ரயேலின் தூயவரே உன் மீட்பர் 'உலக முழுமைக்கும் கடவுள்' என அவர் அழைக்கப்படுகின்றார். ஏனெனில், கைவிடப்பட்டு மனமுடைந்துபோன துணைவிபோலும், தள்ளப்பட்ட இளம் மனைவி போலும் இருக்கும் உன்னை ஆண்டவர் அழைத்துள்ளார், என்கிறார் உன் கடவுள். நொடிப்பொழுதே நான் உன்னைக் கைவிட்டேன் ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக்கொள்வேன். பொங்கியெழும் சீற்றத்தால் இமைப்பொழுதே என் முகத்தை உனக்கு மறைத்தேன்; ஆயினும் என்றும் உள்ள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன், என்கிறார் ஆண்டவர்.

எனக்கு இது நோவாவின் நாள்களில் நடந்ததுபோல் உள்ளது; நோவாவின் காலத்துப் பெருவெள்ளம் இனி மண்ணுலகின்மேல் பாய்ந்து வராது என்று நான் ஆணையிட்டேன்; அவ்வாறே உன்மீதும் சீற்றம் அடையமாட்டேன் என்றும், உன்னைக் கண்டிக்கமாட்டேன் என்றும் ஆணையிட்டுக் கூறியுள்ளேன். மலைகள் நிலை சாயினும் குன்றுகள் இடம் பெயரினும் உன்மீது நான் கொண்ட பேரன்போ நிலை சாயாது; என் சமாதான உடன்படிக்கையோ அசைவுறாது, என்கிறார் உனக்கு இரக்கம் காட்டும் ஆண்டவர்.

துயருற்றவளே, சூறைக்காற்றால் அலைக்கழிக்கப்பட்டவளே, ஆறுதல் பெறாது தவிப்பவளே, இதோ, மாணிக்கக் கற்களால் உன் அடித்தளத்தை அமைப்பேன், நீலக் கற்களால் உன் நிலைக்களத்தை நிறுவுவேன். உன் கால்மாடங்களைச் சிவப்புக் கற்களாலும் உன் வாயில்களைப் பளிங்குக் கற்களாலும் உன் மதில்கள் அனைத்தையும் விலையுயர்ந்த கற்களாலும் கட்டுவேன். உன் குழந்தைகள் அனைவருக்கும் ஆண்டவர்தாமே கற்றுத்தருவார; உன் பிள்ளைகள் நிறைவாழ்வு பெற்றுச் சிறப்புறுவர். நேர்மையில் நீ நிலைநாட்டப்படுவாய்; ஒடுக்கப்பட்ட நிலை உன்னைவிட்டு அகன்றுபோம்; நீ அஞ்சாதே! திகில் உன்னை அணுகாது.

ஆண்டவரின் அருள்வாக்கு.

### திருப்பாடல் 30:1,3. 4-5. 10,11அ, 12ஆ (பல்லவி : 1அ)
### பல்லவி : ஆண்டவரே!, உம்மைப் புகழ்வேன் ஏனெனில் என்னைக் கைதூக்கிவிட்டீர்.

1 ஆண்டவரே, உம்மை ஏத்திப் புகழ்வேன்; ஏனெனில், நீர் என்னைக்
கைதூக்கிவிட்டீர்; என்னைக் கண்டு என் பகைவர் மகிழ நீர் விடவில்லை.
3 ஆண்டவரே, நீர் என்னைப் பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர்;
சாவுக்குழியில் இறங்கிய எனது உயிரைக் காத்தீர். - பல்லவி
4 இறையன்பரே, ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள். தூயவராம் அவரை
நினைந்து நன்றி கூறுங்கள். 5 அவரது சினம் ஒரு நொடிப் பொழுதுதான்

இருக்கும். அவரது கருணையோ வாழ்நாள் முழுதும் நீடிக்கும். மாலையில் அழுகை; காலையிலோ ஆர்ப்பரிப்பு. - **பல்லவி**

10 ஆண்டவரே, எனக்குச் செவிசாயும்; என்மீது இரங்கும் ஆண்டவரே, எனக்குத் துணையாய் இரும். 11 நீர் என் புலம்பலைக் களிநடனமாக மாற்றிவிட்டீர்; 12 என் கடவுளாகிய ஆண்டவரே, உமக்கு என்றென்றும் நன்றி செலுத்துவேன். - **பல்லவி**

### நான்காம் வாசகம் – பதிலுரைப் பாடலுக்குப் பின்

**மன்றாடுவோமாக**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, உமது பெயரின் மாட்சிக்காக, எங்கள் மூதாதையரது நம்பிக்கையின் பொருட்டு நீர் வாக்களித்ததையும் உம் பிள்ளைகளாக ஏற்றுக்கொண்ட உமது வாக்குறுதியின் மக்களுடைய எண்ணிக்கையையும் நீர் பெருகச் செய்தருளும்; அதனால் எங்கள் முற்காலப் புனிதர்கள் ஐயமின்றி எதிர்பார்த்திருந்தவை அனைத்தும் எங்களில் நிறைவேறி வருவதை நாங்கள் கண்டுணரச் செய்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

## 28. ஐந்தாம் வாசகம் - அனைவருக்கும் கொடையாக அருளும் மீட்பு

**ஐந்தாம் வாசக முன்னுரை**

ஆண்டவர் இரக்கம் உள்ளவர்; கருணை மிக்கவர்; மன்னிக்க காத்துக் கொண்டிருக்கிறவர். இறைவனுடைய திரு முன்னிலையிலிருந்து நாம் விலகிச் சென்றாலும், நன்றி மறந்தாலும், அன்பை உணர மறுத்தாலும், செய்த தவறை உணர்ந்து தாயாக தந்தையாக இருக்கும் நம் அன்பு இறைவனிடம் திரும்பி, திருந்தி வருகிறபொழுது நம்மை பாசத்தோடு தன் குழந்தைகளாய் அணைத்துக் கொள்பவர் நம் இறைவன். இறைவன் நம்மிடம் விரும்புவது எல்லாம் அவருடைய பிள்ளைகளாய் இருக்க வேண்டும், அவருடைய குரலுக்குச் செவிகொடுக்க வேண்டும் என்பது தான். இறைவனின் எண்ணப்படி வாழ்கிற அருள் வேண்டுவோம்.

### ஐந்தாம் வாசகம்

**எசாயா 55:1-11**

ஆண்டவர் கூறுவது: தாகமாய் இருப்பவர்களே, நீங்கள் அனைவரும் நீர்நிலைகளுக்கு வாருங்கள்; கையில் பணமில்லாதவர்களே, நீங்களும் வாருங்கள்; தானியத்தை வாங்கி உண்ணுங்கள், வாருங்கள், காசு பணமின்றித் திராட்சை இரசமும் பாலும் வாங்குங்கள். உணவாக இல்லாத ஒன்றிற்காக நீங்கள் ஏன் பணத்தைச் செலவிடுகின்றீர்கள்? நிறைவுதராத ஒன்றிற்காய் ஏன் உங்கள் உழைப்பை வீணாக்குகிறீர்கள்? எனக்குக் கவனமாய்ச் செவி கொடுங்கள்; நல்லுணவை உண்ணுங்கள்; கொழுத்ததை உண்டு மகிழுங்கள்.

எனக்குச் செவிகொடுங்கள், என்னிடம் வாருங்கள் கேளுங்கள் அப்பொழுது நீங்கள் வாழ்வடைவீர்கள். நான் உங்களுடன் ஓர் என்றுமுள உடன்படிக்கையைச் செய்துகொள்வேன்; தாவீதுக்கு நான் காட்டிய மாறாத பேரன்பை உங்களுக்கும் காட்டுவேன். நான் அவனை மக்களினங்களுக்குச் சாட்சியாகவும், வேற்றினங்களுக்குத் தலைவராகவும் தளபதியாகவும் ஏற்படுத்தினேன். இதோ, நீ அறியாத பிற இன மக்களை அழைப்பாய் உன் கடவுளாகிய ஆண்டவரை, இஸ்ரயேலின் தூயவரை முன்னிட்டு, உன்னை அறியாத பிற இனத்தார் உன்னிடம் ஓடிவருவர். ஏனெனில், அவர் உன்னை மேன்மைப்படுத்தியுள்ளார்.

ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரைத் தேடுங்கள் அவர் அண்மையில் இருக்கும்போதே அவரை நோக்கி மன்றாடுங்கள். கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக; அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும் அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்; அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும் ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர். என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல, உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல, என்கிறார் ஆண்டவர். மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.

மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன; அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை. **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**எசாயா 12:2-3. 4ஆ 9இ. 5-6 (பல்லவி : 3)**
**பல்லவி : மீட்பருளும் ஊற்றுகளிலிருந்து அகமகிழ்வோடு தண்ணீர் முகந்துகொள்வீர்கள்.**

2இறைவன் என் மீட்பர், அவர்மேல் நம்பிக்கை வைக்கிறேன், நான்
அஞ்சமாட்டேன். ஆண்டவரே என் ஆற்றல், அவரையே பாடுவேன், என் மீட்பும்
அவரே. 3மீட்பருளும் ஊற்றுகளிலிருந்து நீங்கள் அகமகிழ்வோடு தண்ணீர்
முகந்துகொள்வீர்கள். - **பல்லவி**
4ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்.அவர் திருப்பெயரைப்
போற்றுங்கள்; மக்களினங்களிடையே அவர் செயல்களை அறிவியுங்கள்;
அவர் திருப்பெயர் உயர்க எனப் பறைசாற்றுங்கள். - **பல்லவி**
5ஆண்டவருக்குப் புகழ்ப்பா அமைத்துப் பாடுங்கள்; ஏனெனில் அவர்
மாட்சியுறும் செயல்களைப் புரிந்துள்ளார். அனைத்துலகும் இதை
அறிந்துகொள்வதாக. 6சீயோனில் குடியிருப்போரே! ஆர்ப்பரித்து
அக்களியுங்கள். இஸ்ரயேலின் தூயவர் உங்களிடையே சிறந்து
விளங்குகின்றார். - **பல்லவி**

ஐந்தாம் வாசகம் – பதிலுரைப் பாடலுக்குப் பின்

**மன்றாடுவோமாக**

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, உலகின் ஒரே எதிர்நோக்கு நீரே. இக்காலத்தில் நாங்கள் கொண்டாடும் மறைநிகழ்வுகளை உம் இறைவாக்கினர்களின் வழியாக முன்னறிவித்தீர்; இன்றைய காலங்களின் மறைநிகழ்வையும் வெளிப்படுத்தினீர்; உமது தூண்டுதலால் அன்றி உம் நம்பிக்கையாளரின் எந்த விதமான நற்பண்பும் வளம் பெறாது என்பதால், உம் மக்களில் இறை ஆவல்களைக் கனிவுடன் பெருகச் செய்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

## 29. ஆறாம் வாசகம் - ஞானத்தின் ஊற்று

**ஆறாம் வாசக முன்னுரை**

ஞானம் இறைவனின் மாபெரும் கொடை. கடவுளின் வழியில் நாம் நடக்க ஞானம் நம்மை அறிவுறுத்துகிறது. ஞானம் அறிவுறுத்துகிற வழியில் நாம் நடந்தால் அது மகிழ்வான வாழ்விற்கு தேவையான எல்லாவித செல்வங்களையும் தருகிறது. ஞானத்தை புறந்தள்ளிவிட்டு கடவுளையும் அவரது சட்டத்தையும் புறந்தள்ளியதுதான் இஸ்ரயேல் மக்களின் அடிமை வாழ்வுக்கு அடிப்படைக் காரணம். உண்மை ஞானமாகிய திருச்சட்டத்தை கடைப்பிடித்தால் அவர்களுக்கு இறைவன் மீண்டும் வாழ்வு தருவார் என்பது தான் இந்த நூல் ஆசிரியர் இஸ்ரயேல் மக்களுக்குத் தருகிற அறிவுரை. இந்த அறிவுரை இஸ்ரயேல் மக்களுக்கு மட்டுமல்ல; பாவ வாழ்வில் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிற அனைவருக்கும்தான். இறைவனின் சட்டமாகிய அன்பை நம் வாழ்வில் கடைப்பிடித்து ஞானம் காட்டுகிற வழியில் நடந்து செல்வோம். இறைவனின் வாக்கே நம் பாதையின் விளக்கு.

### ஆறாம் வாசகம்

**பாரூக்கு 3:9–15, 32 – 4:4**

இஸ்ரயேலே, வாழ்வுதரும் கட்டளைகளைக் கேள்; செவிசாய்த்து ஞானத்தைக் கற்றுக்கொள். இஸ்ரயேலே, நீ உன் பகைவரின் நாட்டில் இருப்பது ஏன்? வேற்று நாட்டில் நீ முதுமை அடைந்து வருவது ஏன்? இறந்தவர்களோடு உன்னையே தீட்டுப்படுத்திக் கொண்டது ஏன்? பாதாளத்திற்குச் செல்வோருடன் வைத்து நீயும் எண்ணப்படுவது ஏன்? ஞானத்தின் ஊற்றை நீ கைவிட்டாய். கடவுளின் வழியில் நீ நடந்திருந்தால், என்றென்றும் நீ அமைதியில் வாழ்ந்திருப்பாய். அறிவுத்திறன் எங்கே இருக்கிறது, ஆற்றல் எங்கே இருக்கிறது, அறிவுக்கூர்மை எங்கே இருக்கிறது எனக் கற்றுக்கொள். இதனால் நீண்ட ஆயுளும் வாழ்வும் எங்கே உள்ளன, கண்களுக்கு ஒளியும் அமைதியும் எங்கே உள்ளன எனவும் நீ அறிந்து கொள்வாய். ஞானத்தின் உறைவிடத்தைக் கண்டுபிடித்தவர் யார்? அதன் கருவூலங்களுக்குள் நுழைந்தவர் யார்?

ஆனால் எல்லாம் அறிபவர் ஞானத்தை அறிகின்றார்; தம் அறிவுக்கூர்மையால் அதைக் கண்டடைந்தார்; மண்ணுலகை எக்காலத்துக்கும் நிலைநாட்டினார்; அதைக் கால்நடைகளால் நிரப்பினார். அவர் ஒளியை அனுப்பினார்; அதுவும் சென்றது. அதைத் திரும்ப அழைத்தார்; அதுவும் நடுக்கத்துடன் அவருக்குப் பணிந்தது. விண்மீன்கள் தமக்குக் குறிக்கப்பட்ட இடங்களில் நின்று ஒளிவீசி மகிழ்ந்தன. அவர் அவற்றை அழைத்தார் அவை, "இதோ, உள்ளோம்" என்றன; தங்களைப் படைத்தவருக்காக மகிழ்ச்சியோடு ஒளிவீசின.

இவரே நம் கடவுள், இவருக்கு இணையானவர் எவரும் இலர். மெய்யறிவின் வழி முழுவதும் கண்டவர் இவரே; தம் அடியார் யாக்கோபுக்கும், தாம் அன்புகூர்ந்த மகன் இஸ்ரயேலுக்கும் மெய்யறிவை ஈந்தவரும் இவரே. அதன் பின்னர் ஞானம் மண்ணுலகில் தோன்றிற்று; மனிதர் நடுவே குடிகொண்டது. ஞானமே கடவுளுடைய கட்டளைகள் அடங்கிய நூல்; என்றும் நிலைக்கக்கூடிய திருச்சட்டம். அதைக் கடைப்பிடிப்போர் அனைவரும் வாழ்வர்; அதைக் கைவிடுவோர் உயிரிழப்பர்.

யாக்கோபே, திரும்பி வா; ஞானத்தை ஏற்றுக்கொள் அதன் ஒளியில் சீர்மையை நோக்கி நட. உனது மாட்சியை மற்றவருக்கு விட்டுக்கொடாதே; உன் சிறப்புரிமைகளை வேற்று மக்களினத்தாரிடம் இழந்துவிடாதே. இஸ்ரயேலே, நாம் பேறுபெற்றோர்; ஏனெனில் கடவுளுக்கு உகந்தது எது என்பதை நாம் அறிவோம். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**திருப்பாடல் 19:7. 8. 9. 10 (பல்லவி : யோவா 6:68)**
**பல்லவி : ஆண்டவரே! நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன.**

7 ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது; அது புத்துயிர் அளிக்கின்றது. ஆண்டவரின் ஒழுங்குமுறை நம்பத்தக்கது; எளியவருக்கு அது ஞானம் அளிக்கின்றது. - **பல்லவி**
8 ஆண்டவரின் நியமங்கள் சரியானவை; அவை இதயத்தை மகிழ்விக்கின்றன. ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை; அவை கண்களை ஒளிர்விக்கின்றன. - **பல்லவி**
9 ஆண்டவரைப் பற்றிய அச்சம் தூயது; அது எந்நாளும் நிலைத்திருக்கும். ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை; அவை முற்றிலும் நீதியானவை. - **பல்லவி**
10 அவை பொன்னினும், பசும் பொன்னினும் மேலாக விலைமிக்கவை; தேனினும், தேனடையினின்று சிந்தும் தெளி தேனினும் இனிமையானவை. - **பல்லவி**

ஆறாம் வாசகம் – பதிலுரைப் பாடலுக்குப் பின்

**மன்றாடுவோமாக**

இறைவா, உமது திரு அவையை என்றும் வளரச் செய்கின்றீர்;

திருமுழுக்குத் தண்ணீரால் கழுவப்பெறும் மக்களை நீர் இடையறாது பராமரித்துக் காத்தருள்வீராக. எங்கள்.

**பதில் :** ஆமென்.

## 30. ஏழாம் வாசகம் - புதிய இதயமும் புதிய ஆவியும்

### ஏழாம் வாசக முன்னுரை

புதிய வாழ்வுக்கு இறைவன் நமக்கு அழைப்பு விடுக்கிறார். புதிய வாழ்வு என்பது நமது சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் தூய ஆவியில் புதுப்பிக்கின்ற வாழ்வு. வாழ்வின் தோல்விகள், வெறுப்புகள், வைராக்கியங்கள் அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு அன்பினாலும் மன்னிப்பினாலும் சாந்த குணத்தாலும் நிரப்பப்படுகிற வாழ்வு. நம்முடைய கல்லான இதயத்தை எடுத்துவிட்டு கனிவான இதயத்தைப் பொருத்தக்கூடிய வாழ்வு. அத்தகைய வாழ்வைத் திறந்த உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ள இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

### ஏழாம் வாசகம்

### எசேக்கியேல் 36:16-17அ, 18-28

ஆண்டவரின் வாக்கு எனக்கு அருளப்பட்டது: மானிடா! இஸ்ரயேல் மக்கள் தங்கள் நாட்டில் வாழ்கையில் அவர்கள் தங்கள் நடத்தையாலும் செயல்களாலும் அதைத் தீட்டுப்படுத்தினார்கள். எனவே, நான் என் சினத்தை அவர்கள்மேல் கொட்டினேன். ஏனெனில் அவர்கள் அந்த நாட்டில் இரத்தம் சிந்தி, அதனைத் தெய்வச் சிலைகளால் தீட்டுப்படுத்தினர். நான் அவர்களை வேற்றினத்தாரிடையே சிதறடித்தேன். அவர்கள் நாடுகளெங்கும் சிதறுண்டு போயினர். அவர்களின் நடத்தைக்கேற்பவும், செயல்களுக்கேற்பவும் அவர்களுக்குத் தீர்ப்பிட்டேன். வேற்றினத்தாரிடையே அவர்கள் எங்குச் சென்றாலும் என் திருப்பெயரைத் தீட்டுப்படுத்தினர். ஏனெனில் அவர்களைக் குறித்து ‘இவர்கள் ஆண்டவரின் மக்களாக இருப்பினும், அவரின் நாட்டைவிட்டுப் போகவேண்டியதாயிற்று’ என்று கூறப்பட்டது. இஸ்ரயேல் வீட்டார் சென்ற வேற்றினத்தாரிடையே தீட்டுப்படுத்திய என் திருப்பெயரைக் குறித்து நான் கவலை கொண்டேன். எனவே இஸ்ரயேல் வீட்டாருக்குச் சொல்: தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே! இஸ்ரயேல் வீட்டாரே, நான் இவ்விதம் செயலாற்றுவது உங்களை முன்னிட்டு அல்ல. மாறாக, நீங்கள் சென்ற இடங்களில் வேற்றினத்தாரிடையே தீட்டுப்படுத்திய என் திருப்பெயரை முன்னிட்டே இவ்விதம் செயலாற்றுகிறேன். நீங்கள் வேற்றினத்தாரிடையே தீட்டுப்படுத்திய என் மாபெரும் பெயரை நான் புனிதப்படுத்துவேன். அப்போது உங்கள் வழியாய் அவர்கள் கண்முன்னே என் தூய்மையை நிலைநாட்டும்போது நானே ஆண்டவர் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள் என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.

நான் உங்களை வேற்றினத்தாரிடமிருந்து அழைத்து, பல நாடுகளிடையே கூட்டிச்சேர்த்து, உங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பக்

கொணர்வேன். நான் தூய நீரை உங்கள்மேல் தெளிப்பேன். நீங்கள் உங்கள் எல்லா அழுக்கிலிருந்தும் தூய்மையாவீர்கள் உங்கள் எல்லாச் சிலைவழிபாட்டுத் தீட்டையும் அகற்றுவேன். நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன். புதிய ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன்.

உங்கள் உடலிலிருந்து கல்லாலான இதயத்தை எடுத்துவிட்டு, சதையாலான இதயத்தைப் பொருத்துவேன். என் ஆவியை உங்களுக்குள் புகுத்துவேன். என் நியமங்களைக் கடைப்பிடிக்கவும் என் நீதிநெறிகளைக் கவனமாய்ச் செயல்படுத்தவும் செய்வேன். நான் உங்கள் முன்னோருக்குக் கொடுத்த நாட்டில் நீங்கள் வாழ்வீர்கள். அப்போது என் மக்களாய் இருப்பீர்கள். நான் உங்கள் கடவுளாய் இருப்பேன். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

**திருப்பாடல் 42:2,4அஇ; 43: 3.4 (பல்லவி : 42:1)**
**பல்லவி : கடவுளே! என் நெஞ்சம் கலைமான் போல**
**உமக்காக ஏங்கித் தவிக்கின்றது.**

2 என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது; எப்பொழுது நான் கடவுள் முன்னிலையில் வந்து நிற்கப்போகின்றேன்? 4 மக்கள் கூட்டத்தோடு சேர்ந்து பவனியாகக் கடவுளின் இல்லத்திற்குச் சென்றேனே! ஆர்ப்பரிப்பும் நன்றிப் பாடல்களும் முழங்க விழாக்கூட்டத்தில் நடந்தேனே! - **பல்லவி**

3 உம் ஒளியையும் உண்மையையும் அனுப்பியருளும்; அவை என்னை வழி நடத்தி, உமது திருமலைக்கும் உமது உறைவிடத்திற்கும் கொண்டுபோய்ச் சேர்க்கும். - **பல்லவி**

4 அப்பொழுது, நான் கடவுளின் பீடம் செல்வேன்; என் மன மகிழ்ச்சியாகிய இறைவனிடம் செல்வேன்; கடவுளே! என் கடவுளே! யாழிசைத்து ஆர்ப்பரித்து உம்மைப் புகழ்ந்திடுவேன். - **பல்லவி**

இத்திருவிழிப்பின்போது திருமுழுக்கு நடைபெறுமானால், ஐந்தாம் வாசகத்துக்குப் பின்னர் வரும் பதிலுரைப் பாடலைப் பயன்படுத்தவும். (காண்க: பக்கம் 432). அல்லது திருப்பாடல் 51ஐப் பயன்படுத்தவும்.

ஏழாம் வாசகம், தியானப் பாடலுக்குப் பின்

**மன்றாடுவோமாக**

இறைவா, என்றும் மாறாத ஆற்றலும் நிலையான ஒளியுமானவரே, வியத்தகு அருளடையாளமாகிய திரு அவை முழுவதையும் கனிவுடன் கண்ணோக்கியருளும்: முடிவில்லா ஏற்பாட்டின்படி மனிதரை மீட்கும் அதன் பணி அமைதியுடன் நிறைவேறச் செய்தருளும்; வீழ்ச்சியுற்றவை எழுச்சி அடைவதையும் பழமையானவை புதுப்பிக்கப்பெறுவதையும் கிறிஸ்துவில் தொடங்கிய அனைத்தும் அவர் வழியாகவே முழுமை அடைவதையும் உலகம் கண்டுணர்வதாக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**பதில் :** ஆமென்.

**31.** பழைய ஏற்பாட்டிலிருந்து இறுதி வாசகமும் அதற்கு உரிய பதிலுரைத்திருப்பாடலும் மன்றாட்டும் முடிந்தபின், பீடத்தில் திரிகள் பற்ற வைக்கப்படும். அருள்பணியாளர் "உன்னதங்களிலே" எனும் பாடலைத் தொடங்க, எல்லாரும் தொடர்ந்து பாடுவர். அப்பொழுது அந்தந்த இடத்தின் வழக்கப்படி மணிகள் ஒலிக்கும்.

## உன்னதங்களிலே (பாடல்)

உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக.
உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி உண்டாகுக.
புகழ்கின்றோம் யாம் உம்மையே வாழ்த்துகின்றோம் இறைவனே.
உமக்கு ஆராதனை புரிந்து உம்மை மாட்சிப் படுத்துகின்றோம் யாம்.
உமது மேலான மாட்சியின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம்.
ஆண்டவராகிய இறைவனே இணையில்லாத விண்ணரசே.
ஆற்றல் அனைத்தும் கொண்டு இலங்கும் வல்ல தந்தை இறைவனே.
ஒரே மகனாக உதித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறைவனே.
ஆண்டவராகிய இறைவனே இறைவனின் திருச் செம்மறியே.
தந்தையினின்று என்றென்றுமாக உதித்த இறைவன் மகனே நீர்.
உலகின் பாவம் போக்குபவரே நீர் எம் மீது இரங்குவீர்.
உலகின் பாவம் போக்குபவரே எங்கள் மன்றாட்டை ஏற்றருள்வீர்.
தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே, நீர் எம் மீது இரங்குவீர்.
ஏனெனில் இயேசு கிறிஸ்துவே, நீர் ஒருவரே தூயவர்!
நீர் ஒருவரே ஆண்டவர்! நீர் ஒருவரே உன்னதர்!
தூய ஆவியோடு தந்தை இறைவனின் மாட்சியில் இருப்பவர் நீரே.
ஆமென்.

## உன்னதங்களிலே

உன்னதங்களிலே கடவுளுக்கு மாட்சி உண்டாகுக.
உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி ஆகுக.
உம்மைப் புகழ்கின்றோம் உம்மை வாழ்த்துகின்றோம்.
உம்மை ஆராதிக்கின்றோம். உம்மை மாட்சிப்படுத்துகின்றோம்.
உமது மேலான மாட்சியின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம்,
ஆண்டவராகிய இறைவா, வானுலக அரசரே
எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா
ஒரே மகனாய் உதித்த ஆண்டவரே இயேசு கிறிஸ்துவே
ஆண்டவராகிய இறைவா, இறைவனின் செம்மறியே
தந்தையின் திருமகனே, உலகின் பாவங்களைப் போக்குபவரே,
எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள் மன்றாட்டை ஏற்றருளும்,
தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும்.
ஏனெனில் இயேசு கிறிஸ்துவே, நீர் ஒருவரே தூயவர்,
நீர் ஒருவரே ஆண்டவர், நீர் ஒருவரே உன்னதர்.
தூய ஆவியாரோடு, தந்தையாகிய இறைவனின் மாட்சியில்
இருப்பவர் நீரே - ஆமென்

**32.** பாடல் முடிந்தபின், அருள்பணியாளர் வழக்கம் போலத் திருக்குழும மன்றாட்டைச் சொல்கின்றார்:

**மன்றாடுவோமாக**

இறைவா, புனிதமிக்க இந்த இரவை ஆண்டவருடைய உயிர்ப்பின் மாட்சியால் ஒளிர்விக்கின்றீர்; உமது திரு அவையில் அனைவரும் உம் சொந்த மக்கள் எனும் மனப்பாங்கைத் தூண்டி எழுப்பியருளும்: அதனால் நாங்கள் உடலிலும் மனதிலும் புதுப்பிக்கப்பெற்று உமக்குத் தூய்மையான ஊழியம் புரிவோமாக. உம்மோடு.

**பதில் :** ஆமென்.

## 33. திருத்தூதரின் திருமுகத்திலிருந்து வாசகம்

**எட்டாம் வாசக முன்னுரை**

கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நம்பிக்கையே இயேசுவின் உயிர்ப்பு தான். கோழைகளாக இருந்த சீடர்களைத் துணிவுள்ளவர்களாக மாற்றியது நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு. இறப்போடு வாழ்வு முடிந்துவிட்டது என்ற சாபத்தை உடைத்தெறிந்தது கிறிஸ்துவின் உயிர்ப்பு. பாவம் என்னும் படுகுழியில் விழுந்து கிடந்த மனுக்குலத்தைத் தூக்கியெடுத்து புதிய வாழ்வு கொடுத்தது இந்த உயிர்ப்பு. இயேசுவின் உயிர்ப்பு தரும் புதிய வாழ்வை நாம் உணர்வோம். நம்மையே மாற்றிக்கொண்டு உயிர்த்த இயேசுவில் புதிய மனிதர்களாய் மாறுவோம்.

**உரோமையர் 6:3-11**

சகோதரர் சகோதரிகளே, திருமுழுக்கினால் கிறிஸ்து இயேசுவோடு இணைந்திருக்கும் நாம் அனைவரும் அவருடைய சாவிலும் அவரோடு இணைந்திருக்கிறோம் என்பது உங்களுக்கு தெரியாதா? இறந்த கிறிஸ்துவை மாட்சிமிகு தந்தை உயிர்த்தெழச் செய்தார். அவ்வாறு நாமும் புதுவாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாய் அவரோடு அடக்கம் செய்யப்பட்டோம்.

அவர் இறந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து இறந்தோமெனில், அவர் உயிர்த்தெழுந்ததுபோலவே நாமும் அவரோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம். நாம் இனிமேல் பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி, நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப் பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்துபோகும். இது நமக்குத் தெரியும். ஏனெனில் இறந்தோர் பாவத்தினின்று விடுதலை பெற்றுவிட்டனர் அன்றோ?

கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின், அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை. இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்து இனிமேல் இறக்கமாட்டார்; இனி அவர் சாவின் ஆட்சிக்கு உட்பட்டவர் அல்ல என நாம் அறிந்திருக்கிறோம். அவர் இறந்தார் பாவத்தை ஒழிக்க ஒரே ஒரு

முறை இறந்தார். இப்போது அவர் வாழ்கிறார்; அவர் கடவுளுக்காகவே வாழ்கிறார். அவ்வாறே, நீங்களும் பாவ வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்தவர்கள்; கிறிஸ்து இயேசுவோடு இணைந்து கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக்கொள்ளுங்கள்.

ஆண்டவரின் அருள்வாக்கு.

**திருப்பாடல் 118:1-2. 16அஆ-17. 22-23**
**பல்லவி : அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா**

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்
என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.
2 'என்றென்றும் உள்ளது அவரது
பேரன்பு' என இஸ்ரயேல் மக்கள் சாற்றுவார்களாக! - **பல்லவி**
16 ஆண்டவரது வலக்கை உயர்ந்தோங்கி உள்ளது; ஆண்டவரது
வலக்கை வலிமையாய்ச் செயலாற்றியுள்ளது.
17 நான் இறந்தொழியேன் உயிர்
வாழ்வேன். ஆண்டவரின் செயல்களை விரித்துரைப்பேன். - **பல்லவி**
22 கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று!
23 ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது! நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று! -
**பல்லவி**

**34.** திருமுக வாசகத்துக்குப்பின் அனைவரும் எழுந்து நிற்க, அருள் பணியாளர் ஆடம்பரமாக "அல்லேலூயா" எனப் பாடுகின்றார் ஒவ்வொரு முறையும் குரலை உயர்த்தி மும்முறை பாடுகின்றார். மக்கள் எல்லாரும் அதைத் திரும்பப் பாடுகின்றார்கள். தேவையானால் திருப்பாடல் முதல்வரே "அல்லேலூயா" பாடலைத் தொடங்கலாம்.

அதன்பின் திருப்பாடல் முதல்வர் அல்லது பாடகர் ஒருவர் திபா 117-ஐப் பாட, எல்லாரும் "அல்லேலூயா" எனப் பதிலுரைத்துப் பாடுகின்றனர்.

**பல்லவி** அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

சரணம்

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள், ஏனெனில் அவர் நல்லவர்:
என்றென்றும் உள்ளது அவரது இரக்கம். "என்றென்றும் உள்ளது
அவரது இரக்கம்" என்று இஸ்ரயேல் இனத்தவர் சாற்றுவார்களாக.
**பல்லவி** அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

ஆண்டவரது வலக்கரம் என்னை நிலைநிறுத்தியது;
ஆண்டவரது வலக்கரம் வலிமையாய்ச் செயலாற்றியது.
இறந்தொழியேன், உயிர்வாழ்வேன்:
ஆண்டவருடைய அருஞ்செயல்களைப் பறைசாற்றுவேன்.
**பல்லவி** அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

வீடு கட்டுவோர் புறக்கணித்த கல்லே வீட்டுக்கு மூலைக்கல் ஆயிற்று:

ஆண்டவர் செயலிது; நம் கண்களுக்கு வியப்பாய் உள்ளது
**பல்லவி** அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா

அருள்பணியாளர் வழக்கம் போலத் தூபக் கலத்தில் சாம்பிராணி இடுகின்றார். திருத்தொண்டருக்கு ஆசி வழங்குகின்றார்.

**35.** எரியும் திரிகளை நற்செய்திக்குப் பயன்படுத்துவதில்லை. தூபம் காட்டலாம்.

## நற்செய்தி வாசகம்

**முதல் ஆண்டு**

**மத்தேயு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 28:1-10**

ஓய்வுநாளுக்குப்பின் வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் மகதலா மரியாவும் வேறொரு மரியாவும் கல்லறையைப் பார்க்கச் சென்றார்கள். திடீரென ஒரு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆண்டவரின் தூதர் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்து கல்லறையை மூடியிருந்த கல்லைப் புரட்டி அதன்மேல் உட்கார்ந்தார். அவருடைய தோற்றம் மின்னல் போன்றும் அவருடைய ஆடை உறைபனி வெண்மை போன்றும் இருந்தது. அவரைக் கண்ட அச்சத்தால் காவல் வீரர் நடுக்கமுற்றுச் செத்தவர் போலாயினர்.

அப்பொழுது வானதூதர் அப்பெண்களைப் பார்த்து, "நீங்கள் அஞ்சாதீர்கள்; சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என எனக்குத் தெரியும். அவர் இங்கே இல்லை; அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார். அவரை வைத்த இடத்தை வந்து பாருங்கள். நீங்கள் விரைந்து சென்று, 'இறந்த அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்' எனச் சீடருக்குக் கூறுங்கள். உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார். அங்கே நீங்கள் அவரைக் காண்பீர்கள். இப்பொழுதே நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன்" என்றார்.

அவர்களும் கல்லறையை விட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்சமுற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சியுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி, அவர் காலடிகளைப் பற்றிக்கொண்டு, பணிந்து நின்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம், "அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள்" என்றார். ஆண்டவரின் அருள்வாக்கு.

**இரண்டாம் ஆண்டு**

**மாற்கு எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 16:1-7**

ஓய்வுநாள் முடிந்ததும் மகதலா மரியா, யாக்கோபின் தாய் மரியா,

சலோமி ஆகியோர் அவரது உடலில் பூசுவதற்கென்று நறுமணப் பொருள்கள் வாங்கினர். வாரத்தின் முதல் நாள் காலையிலேயே கதிரவன் எழும் வேளையில் அவர்கள் கல்லறைக்குச் சென்றார்கள். "கல்லறை வாயிலிலிருந்து கல்லை நமக்கு யார் புரட்டுவார்?" என்று அவர்கள் ஒருவரோடு ஒருவர் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் நிமிர்ந்து உற்று நோக்கிய பொழுது, கல் புரட்டப் பட்டிருப்பதைக் கண்டார்கள். அது பெரியதொரு கல்.

பிறகு அவர்கள் கல்லறைக்குள் சென்றபோது, வெண்தொங்கல் ஆடை அணிந்த இளைஞர் ஒருவர் வலப்புறம் அமர்ந்திருக்கக் கண்டு திகிலுற்றார்கள். அவர் அவர்களிடம், "திகிலுற வேண்டாம்; சிலுவையில் அறையப்பட்ட நாசரேத்து இயேசுவைத் தேடுகிறீர்கள் அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்; அவர் இங்கே இல்லை; இதோ, அவரை வைத்த இடம். நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள். பேதுருவிடமும் மற்றச் சீடரிடமும், 'உங்களுக்கு முன்பாக அவர் கலிலேயாவுக்குப் போய்க்கொண்டிருக்கிறார் அவர் உங்களுக்குச் சொன்னது போலவே அவரை அங்கே காண்பீர்கள்' எனச் சொல்லுங்கள்" என்றார். **ஆண்டவரின் அருள்வாக்கு.**

### மூன்றாம் ஆண்டு

**லூக்கா எழுதிய தூய நற்செய்தியிலிருந்து வாசகம் 24:1-12**

வாரத்தின் முதல் நாள் விடியற்காலையிலேயே தாங்கள் ஆயத்தம் செய்திருந்த நறுமணப் பொருள்களை எடுத்துக்கொண்டு அப்பெண்கள் கல்லறைக்குச் சென்றார்கள்; கல்லறை வாயிலிலிருந்து கல் புரட்டப்பட்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் உள்ளே நுழைந்தபோது அங்கே ஆண்டவர் இயேசுவின் உடலைக் காணவில்லை.

அதைக்குறித்து அவர்கள் குழப்பமுற்றார்கள். அப்போது திடீரென, மின்னலைப்போன்று ஒளிவீசும் ஆடை அணிந்த இருவர் அவர்களுக்குத் தோன்றினர். இதனால் அப்பெண்கள் அச்சமுற்றுத் தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் அப்பெண்களை நோக்கி, "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார். கலிலேயாவில் இருக்கும்போது அவர் உங்களுக்குச் சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். மானிட மகன் பாவிகள் கையில் ஒப்புவிக்கப்பட்டுச் சிலுவையில் அறையப்பட வேண்டும்; மூன்றாம் நாளில் உயிர்த்தெழ வேண்டும் என்று சொன்னாரே" என்றார்கள்.

அப்போது அவர்கள் அவருடைய வார்த்தைகளை நினைவில் கொண்டு, கல்லறையை விட்டுத் திரும்பிப்போய், இவை அனைத்தையும் பதினொருவருக்கும் மற்ற அனைவருக்கும் அறிவித்தார்கள். அவர்கள் மகதலா மரியா, யோவன்னா, யாக்கோபின் தாய் மரியா என்பவர்களும் அவர்களோடு இருந்த வேறு சில பெண்களும் ஆவர். அவர்கள் நிகழ்ந்தவற்றைத் திருத்தூதர்களுக்குக் கூறினார்கள். அவர்கள் கூற்று வெறும் பிதற்றலாகத் தோன்றியதால் திருத்தூதர்கள் அவர்களை நம்பவில்லை.

ஆனால் பேதுரு எழுந்து கல்லறைக்கு ஓடினார். அங்கு அவர் குனிந்து பார்த்தபோது, உடலைச் சுற்றியிருந்த துணிகளை மட்டுமே கண்டார்; நிகழ்ந்ததைக் குறித்துத் தமக்குள் வியப்புற்றவராய்த் திரும்பிச் சென்றார்.

ஆண்டவரின் அருள்வாக்கு.

**36.** நற்செய்திக்குப்பின் மறையுரையைச் சுருக்கமாக ஆற்றலாம். மறையுரையை விட்டுவிடக்கூடாது.

## 03 திருமுழுக்கு வழிபாடு

### திருமுழுக்கு வழிபாடு முன்னுரை

அருள்அடையாளம் என்பது இறை அருளை நாம் இயல்பாக பெற்றுக் கொள்ள உதவும் வாய்க்கால். முதல் பெற்றோரின் கீழ்ப்படியாமையால் தொடக்கத்தில் நாம் இழந்த நல்வாழ்வை திருமுழுக்கு அருள்அடையாளம் நமக்கு மீண்டும் பெற்றுத் தருகிறது. இறைவனில் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட இந்த உன்னத வாழ்வை வழங்கும் இந்த அருள்அடையாளம், அன்பாக நம் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டி இந்த வழிபாட்டில் இறைப்பற்றோடு பங்கெடுப்போம்.

**37.** மறையுரைக்குப்பின் திருமுழுக்கு வழிபாடு தொடரும். இறைமக்கள் எல்லாரும் எளிதாகப் பார்க்கக்கூடிய இடத்தில் திருமுழுக்குத் தொட்டி இருந்தால், அருள்பணியாளர் பணியாளரோடு அங்குச் செல்கின்றார்; இல்லை எனில், தண்ணீர் நிறைந்த பாத்திரம் ஒன்று திருப்பீட முற்றத்தில் வைக்கப்படும்.

**38.** திருமுழுக்குப் பெறவேண்டியவர்கள் இருந்தால், அவர்கள் அழைக்கப்படுவார்கள். அவர்களை ஞானப் பெற்றோர் திருக்கூட்டத்தின் முன் நிறுத்துவர் அல்லது சிறு குழந்தைகளின் பெற்றோரும் அவர்களின் ஞானப் பெற்றோரும் அவர்களை எடுத்து வருவர்.

**39.** திருமுழுக்குத் தொட்டி அல்லது திருமுழுக்கு இடம் நோக்கிய பவனி பின்வருமாறு நடைபெறும். பணியாளர் ஒருவர் பாஸ்கா திரியுடன் முன் செல்ல, திருமுழுக்குப் பெறுபவரும் அவர்களுடைய ஞானப் பெற்றோரும் பிற பணியாளர்களும் திருத்தொண்டரும் அருள்பணியாளரும் பின்தொடர்கின்றனர். பவனியின்போது புனிதர் மன்றாட்டுமாலை பாடப்படும். மன்றாட்டுமாலை முடிவில் அருள்பணியாளர் அறிவுரை கூறுகின்றார்.

**40.** திருமுழுக்கு வழிபாடு திருப்பீட முற்றத்தில் நடைபெறும் எனில், அருள்பணியாளர் உடனே பின்வருமாறு அல்லது இது போன்ற வார்த்தைகளால் தொடக்க அறிவுரை கூறுவார்:

### திருமுழுக்குப் பெறவேண்டியவர் இருந்தால்:

அன்புமிக்கவர்களே, நம் சகோதரர் சகோதரிகளுக்குப் புனித எதிர்நோக்கு உண்டாக நமது ஒருமித்த வேண்டலினால் துணை புரிவோமாக. அதனால் புதுப் பிறப்பு அளிக்கும் ஊற்றை நோக்கிச் செல்லும் இவர்களுக்கு எல்லாம் வல்ல தந்தை இரக்கத்துடன் தமது உதவி அனைத்தையும் அளிப்பாராக.

### திருமுழுக்குப் பெறவேண்டியவர் இல்லை எனினும், திருமுழுக்குத் தொட்டியைப் புனிதப்படுத்த வேண்டியிருந்தால்:

அன்பு மிக்கவர்களே, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் அருள் இந்தத் தொட்டியின் மீது இறங்கியருள மன்றாடுவோமாக: இதிலிருந்து புதுப் பிறப்பு அடைவோர் கிறிஸ்துவில் உரிமைப் பேறு பெற்ற மக்களோடு சேர்த்துக்கொள்ளப்படுவார்களாக.

**41.** இரு பாடகர் மன்றாட்டுமாலையைப் பாட (பாஸ்கா காலம் ஆனதால்) அனைவரும் எழுந்து நின்று பதில் பாடுவர்.

திருமுழுக்குத் தொட்டிக்கு நீண்ட பவனியாகப் போக வேண்டுமானால், பவனியின் போது மன்றாட்டுமாலை பாடப்படும் அப்படியானால், திருமுழுக்குப் பெறவேண்டியவர் பவனி தொடங்கும் முன் அழைக்கப்படுவர். பவனியில் முதலாவது பாஸ்கா திரி கொண்டு போகப்படும்; பின் திருமுழுக்குப் பெறுவோர் ஞானப் பெற்றோருடன் செல்ல, பணியாளரும் திருத்தொண்டரும் அருள்பணியாளரும் பின்தொடர்வர். நீரைப் புனிதப் படுத்தும் முன் அறிவுரை வழங்கப்படும்.

**42.** திருமுழுக்குப் பெறுவோர் இல்லையென்றாலோ திருமுழுக்குத் தொட்டி புனிதப் படுத்தல் இல்லையென்றாலோ, மன்றாட்டுமாலையை விட்டுவிட்டு உடனே தண்ணீர் புனிதப்படுத்தப்படும் (எண் 54).

### புனிதர்களின் மன்றாட்டுமாலை முன்னுரை

புனிதர்கள் இறைவனுடைய ஆசீரை நிறைவாகப் பெற்றுக் கொண்டவர்கள். தங்களின் சான்று பகர்ந்த வாழ்வால், இறைவனிடமிருந்து நமக்குத் தேவையான அருளைப் பெற்றுத்தர ஆற்றலைப் பெற்றவர்கள். மற்றவர்களுக்கு இறைவனின் அன்பையும், ஆறுதலையும் எடுத்துச் செல்லும் கருவிகளாக இருந்தவர்கள். அதற்காக எத்தகைய தியாகத்தையும் செய்வதற்குத் தயாரானவர்கள். இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதற்காக தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஒப்படைத்தவர்கள். நமக்கு வழிகாட்டிகளாக இருந்து, நாம் இறைவன்பால் பற்று கொண்டு வாழ தொடர் உதவியை, தங்கள் செபத்தாலும், பரிந்துரையாலும் இன்னும் தந்து கொண்டிருக்கிறவர்கள். அத்தகைய இறையாற்றல் நிரம்பிய புனிதர்களின் பரிந்துரை வேண்டி மன்றாடுவோம்.

**43.** புனிதர் சிலரின் பெயர்களை, சிறப்பாகக் கோவிலின் பாதுகாவலர், ஒரு தலத்தின் பாதுகாவலர், திருமுழுக்குப் பெறுவோரின் பெயர் கொண்ட புனிதர் ஆகியோர் பெயர்களை மன்றாட்டு மாலையில் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆண்டவரே, இரக்கமாயிரும்.
ஆண்டவரே, இரக்கமாயிரும்
. கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.
கிறிஸ்துவே, இரக்கமாயிரும்
ஆண்டவரே, இரக்கமாயிரும்.
ஆண்டவரே, இரக்கமாயிரும்.

புனித மரியே, இறைவனின் தாயே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித மிக்கேலே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
இறைவனின் புனித தூதர்களே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
புனிதத் திருமுழுக்கு யோவானே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித யோசேப்பே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
புனித பேதுருவே, புனித பவுலே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்
புனித அந்திரேயாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித யோவானே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித மகதலா மரியாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித ஸ்தேவானே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித அந்தியோக்கு இஞ்ஞாசியாரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித லாரன்ஸே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித பெர்பேத்துவா, புனித பெலிசிட்டியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
புனித ஆக்னஸே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித கிரகோரியே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித அகுஸ்தினே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித அத்தனாசியுஸே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித பேசிலே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித மார்ட்டினே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித பெனடிக்டே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித பிரான்சிஸே, புனித தோமினிக்கே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.
புனித பிரான்சிஸ் சவேரியாரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.
புனித வியான்னி மரிய ஜானே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித சியன்னா கத்தரீனே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
புனித அவிலா தெரேசே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
இறைவனின் எல்லாப் புனிதரே, புனிதையரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

கனிவு கூர்ந்து, எங்களை மீட்டருளும் ஆண்டவரே.
தீமை அனைத்திலுமிருந்து, எங்களை மீட்டருளும் ஆண்டவரே.
பாவம் அனைத்திலுமிருந்து, எங்களை மீட்டருளும் ஆண்டவரே.
முடிவில்லாச் சாவிலிருந்து, எங்களை மீட்டருளும் ஆண்டவரே.
உமது மனித உடலேற்பினாலே, எங்களை மீட்டருளும் ஆண்டவரே.

உமது இறப்பினாலே, உயிர்ப்பினாலே, எங்களை மீட்டருளும் ஆண்டவரே.
தூய ஆவியாரின் வருகையினாலே, எங்களை மீட்டருளும் ஆண்டவரே.

பாவிகளாகிய நாங்கள் உம்மை மன்றாடுகின்றோம்
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திருமுழுக்குப் பெறவேண்டியவர் இருந்தால்

தேர்ந்து கொள்ளப்பெற்ற இவர்கள் திருமுழுக்கின் அருளினால்
புதப் பிறப்பு அடையச் செய்தருள வேண்டும் என
உம்மை மன்றாடுகின்றோம் - எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திருமுழுக்குப் பெறவேண்டியவர் இல்லையென்றால்

உம் மக்களுக்குப் புதுப் பிறப்பு அளிக்கும் இந்த நீரூற்றை
உமது அருளினால் புனிதமாக்க வேண்டும் என
உம்மை மன்றாடுகின்றோம் - எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாழும் கடவுளின் திருமகனாகிய இயேசுவே,
உம்மை மன்றாடுகின்றோம் - எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ் துவே, எங்களுக்குச் செவி சாய்த் தருளும்.
கிறிஸ் துவே, க னி வாய்ச் செவி சாய்த் தருளும்.

திருமுழுக்குப் பெறுவோர் அங்கு இருந்தால், அருள்பணியாளர் தம் கைகளை விரித்துப் பின்வரும் மன்றாட்டைச் சொல்வார்:

என்றென்றுமுள்ள எல்லாம் வல்ல இறைவா, திருமுழுக்கின் ஊற்று உமக்கு ஈன்றெடுக்கும் மக்களைப் புதிய மக்களாக மீண்டும் படைக்க உமது பேரிரக்கத்தின் அருளடையாளங்களில் நீர் உடனிருப்பீராக; மனிதரை உம் பிள்ளைகளாக்கும் ஆவியாரை அனுப்புவீராக: இவ்வாறு எளியவராகிய நாங்கள் செய்யவேண்டிய திருப்பணி உமது ஆற்றலால் நிறை பயன் தருவதாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
**பதில் :** ஆமென்.

## திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசி வழங்குதல்

### திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசி வழங்குதல் முன்னுரை

தண்ணீர் வாழ்வின் அடையாளமாக இருக்கிறது. அது நமக்கு வாழ்வைத் தருகிறது. இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து மீட்கப்பட்டுப் பாலை வனத்திலிருந்து அழைத்து வரப்பட்டபோது நாவு வறண்டு தாகத்தால் சோர்வுற்று இருந்தபோது இறைவன் அவர்களுக்கு தண்ணீர் பருக கொடுத்து புதிய வாழ்வைக் கொடுக்கிறார். கானாவூர் திருமணத்திலே திராட்சை ரசம் தீர்ந்து, திருமண வீட்டார் கலங்கிய சமயத்திலே இயேசு தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றி அவர்களின் கலக்கத்தைப் போக்குகிறார். வாழ்வின் அடையாளமாக, இறையருளின் வாய்க்காலாக இருக்கக்கூடிய இந்தத் தண்ணீர் இறை அருளால் நிரப்பப்பட இப்போது இறைவனை மன்றாடுவோம்.

**44.** பின் அருள்பணியாளர் தம் கைகளை விரித்துப் பின்வரும் மன்றாட்டைச் சொல்லி திருமுழுக்குத் தண்ணீருக்கு ஆசி வழங்குகின்றார்:

இறைவா, அருளடையாளங்கள் வியத்தகு முறையில் பயனளிக்கக்
கண்ணுக்குப் புலப்படாத வலிமையால் செயலாற்றுகின்றீர்:
திருமுழுக்கின் அருளைக் குறித்துக்காட்டப்
படைப்புப் பொருளாகிய தண்ணீரைப் பல வகையில் தயார் செய்தீர்;

இறைவா, தண்ணீருக்குப் புனிதப்படுத்தும் ஆற்றலை அளிக்குமாறு
உலகின் தொடக்கத்திலேயே உமது ஆவியார் அதன் மீது
அசைவாடிக்கொண்டிருந்தார்; இறைவா, பெரும் வெள்ளத்தினைப்
புதுப் பிறப்பின் அடையாள மாக்கி, மறைபொருளாகிய அதே தண்ணீரால்
குற்றங்கள் முடிவுறவும் நற்பண்புகள் தொடங்கவும் செய்தீர்;

இறைவா, பார்வோனின் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்ற
ஆபிரகாமின் மக்கள் செங்கடலைக் கால் நனையாமல் கடக்கச் செய்து,
திருமுழுக்குப் பெற்ற மக்களுக்கு முன்னடையாளமாக இருக்கச் செய்தீர்;
இறைவா, உம் திருமகன் யோர்தான் நீரில் யோவானால் திருமுழுக்குப் பெற்று,
தூய ஆவியாரால் அருள்பொழிவு செய்யப்பட்டார்;

சிலுவையில் அவர் தொங்கியபொழுது, தமது விலாவிலிருந்து
இரத்தத்தோடு தண்ணீரையும் வழிந்தோடச் செய்தார்;
தமது உயிர்ப்புக்குப்பின் 'நீங்கள் போய் எல்லா மக்களினத்தாருக்கும்
கற்பித்து தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரால் அவர்களுக்குத்
திருமுழுக்குக் கொடுங்கள்' என்று சீடர்களுக்குக் கட்டளையிட்டார்;

உமது திரு அவையைக் கண்ணோக்கி, அதற்குத் திருமுழுக்கின்
ஊற்றினைத் திறந்தருளும்; இந்தத் தண்ணீர் உம் ஒரே திருமகனின்
அருளைத் தூய ஆவியாரினின்று பெற்றுக்கொள்ளச் செய்தருளும்;
இவ்வாறு உமது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்
திருமுழுக்கு அருளடையாளத்தினால் பழைய பாவ அழுக்கெல்லாம்
கழுவப்பெற்று, தண்ணீராலும் தூய ஆவியாராலும் புதுப் பிறப்பு
அடைந்து எழும் தகுதி பெறுவார்களாக.

அருள்பணியாளர் தேவைக்கு ஏற்பப் பாஸ்கா திரியை ஒரு முறை அல்லது மும்முறை தண்ணீரில் இறக்கிச் சொல்வதாவது:

ஆண்டவரே, இந்தத் தொட்டியில் உள்ள தண்ணீர் முழுவதிலும்
தூய ஆவியாரின் ஆற்றல் உம் திருமகன் வழியாக இறங்க
உம்மை வேண்டுகின்றோம்.

திரியைத் தண்ணீரில் வைத்துப் பிடித்துக்கொண்டு சொல்வதாவது:

இவ்வாறு திருமுழுக்கினால் கிறிஸ்துவுடன் இறந்து அடக்கம் செய்யப்பட்ட

அனைவரும் அவரோடு வாழ்வுக்கு உயிர்த்தெழுவார்களாக.
உம்மோடு தூய ஆவியாரின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து, ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

**பதில் :** ஆமென்.

**45.** பின் தண்ணீரிலிருந்து திரி அகற்றப்படும். அப்பொழுது மக்கள் கீழுள்ளவாறு ஆர்ப்பரிக்கின்றனர்:

நீரூற்றுகளே, ஆண்டவரை வாழ்த்துங்கள்,
என்றென்றும் அவரைப் புகழ்ந்தேத்துங்கள்.

**48.** திருமுழுக்குத் தண்ணீரைப் புனிதப்படுத்தியதை அடுத்து, மக்களின் ஆர்ப்பரிப்புக்குப் பிறகு, அருள்பணியாளர் நின்று கொண்டு வயது வந்தோரிடமும் குழந்தைகளின் பெற்றோர் அல்லது ஞானப் பெற்றோரிடமும் சாத்தானை விட்டுவிடும் அறிக்கையை வெளிப்படுத்தும் பொருட்டு உரோமைத் திருச்சடங்கு நூலில் உள்ள சடங்குமுறைகளுக்கு ஏற்பக் குறிக்கப்பட்ட கேள்விகளைக் கேட்கின்றார்.

வயதுவந்தோரைத் திருமுழுக்குக்காகத் தயார் செய்யும் எண்ணெயால் பூசுதல் முன்னரே நடைபெறவில்லை எனில், உடன் தயாரிப்புச் சடங்காக இது இந்நேரத்தில் நடைபெறும்.

**49.** பின் அருள் பணியாளர் நம்பிக்கை பற்றி வயது வந்தோரிடம் தனித்தனியாக வினவுகின்றார். குழந்தைகள் திருமுழுக்குப் பெற இருந்தால், குறிப்பிட்ட சடங்குமுறைகளின்படி அருள்பணியாளர் பெற்றோரிடமும் ஞானப் பெற்றோரிடமும் நம்பிக்கை அறிக்கைக்கான மூன்று கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்கின்றார்.

இவ்விரவில் பலர் திருமுழுக்குப் பெறவேண்டி இருந்தால், இச்சடங்கைப் பின்வருமாறு நடத்தலாம். திருமுழுக்குப் பெறுவோர், அவருடைய பெற்றோர், ஞானப் பெற்றோர் ஆகியோரின் பதிலுரைக்குப் பிறகு, அருள்பணியாளர் அங்கு இருப்போர் அனைவரிடமும் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்கும்படி வினவுகின்றார்.

**50.** கேள்விகள் கேட்டபின், தேர்ந்தெடுக்கப்பட்ட வயதுவந்தோருக்கும் குழந்தைகளுக்கும் அருள்பணியாளர் திருமுழுக்கு வழங்குகின்றார்.

**51.** திருமுழுக்குக்குப் பிறகு அருள்பணியாளர் குழந்தைகளைக் கிறிஸ்மா எண்ணெயால் அருள்பொழிவு செய்கின்றார். வயது வந்தோராயினும் குழந்தைகளாயினும் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெண்ணாடை அணிவிக்கின்றார். பின் அருள்பணியாளர் அல்லது திருத்தொண்டர் பாஸ்கா திரியைப் பணியாளரின் கையிலிருந்து பெறுகின்றார். புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்களின் மெழுகுதிரிகள் அதிலிருந்து ஏற்றப்படுகின்றன. குழந்தைகளுக்கான 'எப்பேத்தா' சடங்கு விட்டுவிடப்படும்.

**52.** திருமுழுக்குச் சடங்குகள் அனைத்தும் திருப்பீட முற்றத்தில் நடைபெறாதபொழுது ஏற்கெனவே வரையறுக்கப்பட்டது போலப் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள். ஞானப் பெற்றோர் அல்லது பெற்றோர் எரியும் மெழுகுதிரிகளோடு திருப்பீட முற்றம் நோக்கிப் பவனியாகத் திரும்பிச் செல்வர். பவனியின்போது "கோவிலின் வலப்புறமிருந்து" எனும் திருமுழுக்குப் பாடல் அல்லது தகுந்ததொரு பாடல் பாடப்படும் (எண் 56).

**53.** வயதுவந்தோர் திருமுழுக்குப் பெற்றிருந்தால் ஆயர் அல்லது ஆயர் இல்லாதபோது திருமுழுக்கு வழங்கிய அருள்பணியாளர் ஆயர் திருச்சடங்கு நூலில் அல்லது - உரோமைத் திருச்சடங்கு நூலில் குறிப்பிட்டுள்ளவாறு திருப்பீட முற்றத்தில் அவர்களுக்கு உடனே உறுதிப் பூசுதல் அருளடையாளத்தை வழங்குவார்.

### தண்ணீருக்கு ஆசியளித்தல் முன்னுரை

திருப்பலியில் சாதாரண கோதுமை அப்பம் இயேசுவின் திருவுடலாக மாறுகிறது. திராட்சை இரசம் இயேசுவின் இரத்தமாக மாறுகிறது. இந்த மாற்றம் வார்த்தைகளினால் அல்ல, இறைவனின் வல்லமையினால் நிகழ்கிறது. அதே இறை வல்லமை தான், இந்த சாதாரண தண்ணீரை தீர்த்தமாக மாற்றுகிறது. இறைவனின் ஆசிபெற்ற இந்தத் தூயநீர் தெளிக்கப்படும் இடமெல்லாம் இறை வல்லமை நிரம்பவும், நோய் நொடிகள் ஒழிந்து, தீமையின் ஆதிக்கம் அழிந்து, மக்கள் புனிதமான மனநிலையைப் பெறவும் இதில் பங்கெடுப்போம்.

**54.** திருமுழுக்கு அளித்தலோ திருமுழுக்குத் தொட்டியைப் புனிதப்படுத்தலோ நடைபெறவில்லை எனில், அருள்பணியாளர் நம்பிக்கையாளரைத் தண்ணீருக்கு ஆசி வழங்கும் சடங்குக்கு இட்டுச் சென்று சொல்கின்றார்:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, நம் திருமுழுக்கின் நினைவாக நம்மீது தெளிக்கப்படும் படைப்புப் பொருளான இத்தண்ணீருக்குக் கனிவுடன் ஆசி வழங்க நம் இறைவனாகிய ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம். நாம் பெற்றுக்கொண்ட தூய ஆவியாருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க அவர் நம்மைப் புதுப்பிப்பாராக.

சிறிது நேரம் அமைதியாக மன்றாடியபின், அருள்பணியாளர் தம் கைகளை விரித்து:

ஆண்டவரே எங்கள் இறைவா,
இப்புனிதமிக்க இரவில் கண்விழித்துக் காத்திருக்கும் உம் மக்களுடன்
கனிவாய்த் தங்கியருளும்.
வியத்தகு முறையில் எங்களைப் படைத்தீர் எனவும்
அதிலும் வியத்தகு முறையில் எங்களை மீட்டருளினீர் எனவும்
நினைவுகூரும் எங்களுக்காக
இத்தண்ணீர் மீது உமது ஆசியைக் கனிவுடன் பொழிந்தருளும்.

ஏனெனில் நிலத்தை வளப்படுத்தவும்
எங்கள் உடலுக்குப் புத்துணர்வும் தூய்மையும் தரவும்
இத்தண்ணீரைப் படைத்தீர்;
உமது இரக்கத்தின் கருவியாகவும் இத்தண்ணீரை அமைத்தீர்;

எவ்வாறெனில், தண்ணீரின் வழியாக
உம் மக்களின் அடிமைத்தளையை அகற்றினீர்;
பாலைநிலத்தில் அவர்களது தாகத்தைத் தணித்தீர்.
அதன் வழியாக மனித இனத்தோடு நீர் செய்ய இருந்த
புதிய உடன்படிக்கையை இறைவாக்கினர் முன்னறிவித்தனர்;
இறுதியாக, யோர்தானில் கிறிஸ்து புனிதமாக்கிய தண்ணீரின் வழியாகப்
பாவக் கறை படிந்த எங்கள் மனித இயல்பைப்
புதுப் பிறப்பு அளிக்கும் திருமுழுக்கினால் கழுவிப் புதுப்பித்தீர்.

ஆகவே நாங்கள் பெற்றுக்கொண்ட
திருமுழுக்கின் நினைவாக இத்தண்ணீர் இருப்பதாக.
பாஸ்கா பெருவிழாவில் திருமுழுக்குப் பெற்ற
எங்கள் சகோதரர் சகோதரிகளோடு
நாங்களும் ஒன்றுசேர்ந்து பெருமகிழ்ச்சி கொள்ளச் செய்தருளும். எங்கள்.

**பதில் :** ஆமென்.

## திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல்

### திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பித்தல் முன்னுரை

நாம் குழந்தைகளாக இருந்த பொழுது நம்முடைய பெற்றோரும் ஞானப் பெற்றோரும் நம் சார்பில் நின்று திருமுழுக்கு என்னும் கத்தோலிக்க இறைநம்பிக்கையைப் பெற்றுக் கொடுத்தனர். நம்மை தொடர்ந்து இறைநம்பிக்கையில் வளர்த்தெடுத்தனர். பெற்றுக்கொண்ட விசுவாசத்திற்கு ஏற்ப நாம் வளர நம்மை வழிநடத்தினர். அந்த இறைநம்பிக்கையை நினைவுகூர்ந்து புதுப்பிப்பது, பேணிக்காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாக இருக்கிறது. அந்தக் கடமையை உணர்ந்தவர்களாக திருமுழுக்கு வாக்குறுதிகளை உண்மையான விசுவாசிகளாக முழு ஈடுபாட்டோடு புதுப்பித்துக் கொள்வோம்.

**55.** திருமுழுக்கு (உறுதிப்பூசுதல் ஆகிய) சடங்குகள் முடிந்தபின் அல்லது - அவை இல்லை எனில் - தண்ணீருக்கு ஆசி வழங்கிய பின், பின்வரும் வாக்குறுதிகள் திருமுழுக்குப் பெற்றவரோடு சேர்ந்து புதுப்பிக்கப் படாதிருந்தால், அனைவரும் எழுந்து நின்று, எரியும் திரிகளைப் பிடித்துக்கொண்டு, தம் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிக்கின்றனர் (காண். எண். 49).

அருள்பணியாளர் கீழுள்ளவாறு அல்லது இது போன்று சிற்றுரை ஆற்றுகின்றார்:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, பாஸ்கா மறைநிகழ்வு வழியாக நாம் புது வாழ்வு பெற்றுக் கிறிஸ்துவோடு வாழுமாறு புனிதத் திருமுழுக்கில் நாம் அவரோடு அடக்கம் செய்யப்பட்டுள்ளோம். ஆகவே தவக் காலச் செயல்பாடுகள் முடிவடைந்திருக்கும் இவ்வேளையில் சாத்தானையும் அதன் செயல்களையும் விட்டுவிடுவதாகவும் புனிதக் கத்தோலிக்கத் திரு அவையில் இறைவனுக்கு ஊழியம் புரிவதாகவும் முன்பு திருமுழுக்கின்போது நாம் கொடுத்த வாக்குறுதிகளை இப்போது புதுப்பிப்போம். எனவே,

**அ.ப.** : சாத்தானை விட்டுவிடுகின்றீர்களா?
**எல்.** : விட்டுவிடுகின்றேன்.

**அ.ப.** : அவன் செயல்களை எல்லாம் விட்டுவிடுகின்றீர்களா?
**எல்.** : விட்டுவிடுகின்றேன்.

**அ.ப.** : அவன் ஆரவாரங்களை விட்டுவிடுகின்றீர்களா?
**எல்.** : விட்டுவிடுகின்றேன்.

**அல்லது**

**அ.ப.** : கடவுளின் பிள்ளைகளுக்கு உரிய உரிமையுடன் வாழ நீங்கள் பாவத்தை விட்டுவிடுகின்றீர்களா?
**எல்.** : விட்டுவிடுகின்றேன்.

**அ.ப.** : பாவம் உங்கள் மீது ஆட்சி செலுத்தாதிருக்க, நீங்கள் தீயக் கவர்ச்சிகளை விட்டுவிடுகின்றீர்களா?
**எல்.** : விட்டுவிடுகின்றேன்.

**அ.ப.** : பாவத்திற்குக் காரணனும் தலைவனுமாகிய சாத்தானை விட்டுவிடுகின்றீர்களா?
**எல்.** : விட்டுவிடுகின்றேன்.

தேவையானால் இந்த இரண்டாம் பாடத்தை ஆயர் பேரவை நாட்டுக்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கலாம். பின் அருள்பணியாளர் தொடர்கின்றார்:

**அ.ப.** : விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகின்றீர்களா?
**எல்.** : நம்புகின்றேன்.

**அ.ப.** : அவருடைய ஒரே மகனும், கன்னி மரியாவிடமிருந்து பிறந்து, பாடு பட்டு, அடக்கம் செய்யப்பட்டு, இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து, தந்தையின் வலப் பக்கம் வீற்றிருக்கின்றவருமாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றீர்களா?

**எல்.** : நம்புகின்றேன்.

**அ.ப.** : தூய ஆவியாரையும் புனிதக் கத்தோலிக்கத் திரு அவையையும் புனிதர்களுடைய சமூக உறவையும் பாவ மன்னிப்பையும் உடலின் உயிர்ப்பையும் நிலைவாழ்வையும் நம்புகின்றீர்களா?

**எல்.** : நம்புகின்றேன்.

அருள்பணியாளர் முடிவுரையாகச் சொல்கின்றார்:

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் தந்தையும், தண்ணீராலும் தூய ஆவியாராலும் நமக்குப் புதுப் பிறப்பு அளித்துப் பாவ மன்னிப்பு வழங்கியவரும் எல்லாம் வல்ல தந்தையுமாகிய கடவுளே தமது அருளால் நாம் நிலைவாழ்வு பெறும் பொருட்டு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவில் நம்மைப் பாதுகாப்பாராக.

பதில்: ஆமென்.

**56.** அருள் பணியாளர் மக்கள் மீது புனிதப்படுத்தப்பட்ட நீரைத் தெளிக்கின்றார்; அப்போது அனைவரும் பாடுகின்றனர்:

கோவிலின் வலப்புறமிருந்து தண்ணீர் புறப்படக் கண்டேன், அல்லேலூயா; அந்தத் தண்ணீர் யாரிடம் வந்ததோ அவர்கள் யாவருமே மீட்பினைப் பெற்றுக் கூறுவர்: அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா.

**57.** அதே வேளையில் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள் நம்பிக்கையாளர் மத்தியில் தங்கள் இடங்களுக்குச் செல்வர்.

திருமுழுக்குத் தண்ணீரைத் திருப்பீட முற்றத்தில் புனிதப்படுத்தினால், அதைத் திருத்தொண்டரும் பணியாளர்களும் வணக்கத்தோடு திருமுழுக்குத் தொட்டிக்கு எடுத்துச் செல்கின்றனர்.

திருமுழுக்குத் தொட்டி புனிதப்படுத்தப்படவில்லை எனில், புனித நீர் வசதியான இடத்தில் வைக்கப்படும்.

**58.** புனிதப்படுத்தப்பட்ட நீரைத் தெளித்தபின் அருள்பணியாளர் தமது இருக்கைக்குச் சென்று, பொது மன்றாட்டை நடத்துகின்றார். இதில் புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள் முதன்முறையாகப் பங்குபெறுவர். நம்பிக்கை அறிக்கை சொல்வதில்லை.

**59.** அருள்பணியாளர் பீடத்துக்கு வந்து வழக்கம் போல நற்கருணை வழிபாட்டைத் தொடங்குகின்றார்.

**60.** புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள் அல்லது அவர்கள் குழந்தைகளாயின், பெற்றோர் அல்லது ஞானப் பெற்றோர் அப்பமும் இரசமும் காணிக்கைப் பவனியில் கொண்டு வருவது சிறந்தது.

## 04 நற்கருணை வழிபாடு

**61.** **காணிக்கை மீது மன்றாட்டு**

ஆண்டவரே, உம் மக்கள் ஒப்புக்கொடுக்கும் காணிக்கைகளோடு இவர்களுடைய மன்றாட்டுகளையும் ஏற்றருள உம்மை வேண்டுகின்றோம்: பாஸ்கா மறைநிகழ்வுகளால் தொடங்கப்பெற்றவை உமது செயலாற்றலால் எங்களுக்கு நிலைவாழ்வின் அருமருந்தாய் அமைவனவாக. எங்கள்.

**62.** பாஸ்காவின் தொடக்கவுரை 1: பாஸ்கா மறைநிகழ்வு (இச்சிறப்பான இரவில்), காண். உரோமைத் திருப்பலி நூல். பக். 529.

**63.** திருமுழுக்குப் பெற்றவர்கள், அவர்களுடைய ஞானப் பெற்றோர் ஆகியோரை நற்கருணை மன்றாட்டில் நினைவுகூர்தல், திருப்பலி நூலிலும் உரோமைத்திருச்சடங்கு நூலிலும் ஒவ்வொரு நற்கருணை மன்றாட்டிலும் குறிப்பிட்டுள்ள வாய்பாட்டின்படி இடம்பெறும்.

**64.** புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்களுக்கு, "இதோ, இறைவனின் செம்மறி" என்பதற்குமுன், முதல் நற்கருணை பெறுதல் பற்றியும் புகுமுகச் சடங்குகளின் நிறைவும் கிறிஸ்தவ வாழ்வின் முழுமையும் மையமும் ஆகிய இம்மறைபொருளின் மாண்பு பற்றியும் சுருக்கமாக அருள்பணியாளர் அறிவுரை வழங்கலாம்.

**65.** புதிதாகத் திருமுழுக்குப் பெற்றவர்கள் தங்களது ஞானப் பெற்றோர், பெற்றோர், கத்தோலிக்க வாழ்க்கைத் துணைவர், வேதியர் ஆகியோரோடு இணைந்து இரு வடிவங்களில் நற்கருணை உட்கொள்வது விரும்பத்தக்கது. மறைமாவட்ட ஆயரின் அனுமதியோடு சூழ்நிலைக்கு ஏற்ப, எல்லா நம்பிக்கையாளரும் இரு வடிவங்களிலும் தூய நற்கருணை பெற அனுமதிப்பது முறை ஆகும்.

**66.** திருவிருந்துப் பல்லவி 1 கொரி 5:7-8

நமது பாஸ்காவாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் நேர்மை, உண்மை போன்ற புளிப்பற்ற அப்பத்தோடு கொண்டாடுவோமாக. அல்லேலூயா.

**67.** திருவிருந்துக்குப்பின் மன்றாட்டு

ஆண்டவரே, உமது அன்பின் ஆவியை எங்கள் மீது பொழிந்தருளும்; இவ்வாறு பாஸ்கா அருளடையாளங்களால் நிறைவு பெற்ற நாங்கள் உமது பரிவிரக்கத்தால் ஒருமனப்பட்டிருக்கச் செய்வீராக. எங்கள்.

## 68. சிறப்பு ஆசி

**குரு :** எல்லாம் வல்ல இறைவன்,
இன்றைய பாஸ்கா பெருவிழாவின் கொண்டாட்டத்தால்
உங்களுக்கு ஆசி வழங்கி பாவத்தின்
தாக்குதல்கள் அனைத்திலிருந்தும் இரக்கத்துடன் காப்பாராக.

**பதில் :** ஆமென்.

**குரு :** அவருடைய ஒரே திருமகனின் உயிர்ப்பினால்
நிலைவாழ்வுக்கு உங்களைத் தகுதி பெறச் செய்த இறைவன்,
அழியா வாழ்வின் கொடைகளால் உங்களை நிரப்புவாராக.

**பதில் :** ஆமென்.

**குரு :** ஆண்டவருடைய பாடுகளின் நாள்களுக்குப்பின்
பாஸ்கா விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடும் நீங்கள்
முடி வற்ற விண்ணகப் பாஸ்கா விழாவுக்கு
அக்களிப்புடன் அவரது அருளால் வந்து சேர்வீர்களாக.

**பதில் :** ஆமென்.

**குரு :** எல்லாம் வல்ல இறைவன், தந்தை, மகன், தூய ஆவியாரின் ஆசி உங்கள் மீது இறங்கி என்றும் தங்குவதாக.

**பதில் :** ஆமென்

இறுதி ஆசிக்கான வாய்பாடு வயதுவந்தோர் அல்லது குழந்தைகள் திருமுழுக்குச் சடங்கிலிருந்தும் சூழ்நிலைக்கு ஏற்பப் பயன்படுத்தப்படலாம்.

**69.** திருத்தொண்டர் அல்லது - அவர் இல்லை எனில் - அருள்பணியாளரே பின்வரும் வார்த்தைகளைப் பாடி அல்லது சொல்லி மக்களை அனுப்பி வைக்கின்றார்:

**குரு :** சென்று வாருங்கள், திருப்பலி நிறைவேறிற்று,
அல்லேலூயா, அல்லேலூயா.

**பதில் :** இறைவனுக்கு நன்றி, அல்லேலூயா, அல்லேலூயா.

பாஸ்கா எண்கிழமை முழுவதும் இது கடைப்பிடிக்கப்படும்.

**70.** பாஸ்கா காலத்தில் நடைபெறும் சிறப்புத் திருவழிபாட்டுக் போது பாஸ்கா திரி ஏற்றப்படும்.

# சிலுவைப் பாதையில் பங்கேற்கும் முறை



**முதல்வர்** : தந்தை மகன் தூய ஆவியின் பெயராலே, ஆமென்!
**எல்லோ.** : இரக்கத்தின் ஊற்றே இறைவா, உம் திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் நடந்து சென்ற சிலுவையின் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மைச் சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை இறைஞ்சி மன்றாடுகின்றோம். ஆமென்!

**சுருக்கமான மனத்துயர் மன்றாட்டு**

என் இறைவனாகிய தந்தையே! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவரும் நீரே. என் பாவங்களால் உமது அன்பைப் புறக்கணித்ததற்காகவும் நன்மைகள் செய்யத் தவறியதற்காகவும் மனம் வருந்துகிறேன். உமது அருள் உதவியால் இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும் பாவத்திற்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு விலகுவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

எங்கள் மீட்பர் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக இறைவா என்மேல் இரக்கமாயிரும்.

அன்பு நிறை இயேசுவே! எங்களுக்காகவும் துன்புறு நிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையைத் தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடைய விரும்பி உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.

புனித மரியே! துயர்நிறை அன்னையே! இயேசுவின் பாடுகளின்போது அவரோடு நீர் உடனிருந்து அவருடைய பாடுகளில் பங்கேற்றது போல நாங்களும் எங்கள் அயலார் படுகின்ற துன்பங்களில் அவர்களுடன் இருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற உம் திருமகனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**முதல்** : இறை இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**எல்** : ஏனெனில் புனித சுமையான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

1. இயேசுவைச் சாவுக்குத் தீர்ப்பிடுகிறார்கள்.
2. இயேசுவின் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.
3. இயேசு சிலுவையின் சுமையால் முதல் முறை தரையில் குப்புற விழுகிறார்.
4. இயேசு தமது புனித தாயாரை சந்திக்கிறார்.
5. இயேசு சிலுவையை சுமப்பதற்காக சீமோன் உதவி செய்கிறார்.
6. இயேசுவின் திருமுகத்தை ஒரு பெண் துடைக்கிறார்.
7. இயேசு சிலுவையின் சுமையால் இரண்டாம் முறை தரையில் குப்புற விழுகிறார்.
8. இயேசு யூதப் பெண்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார்.
9. இயேசு சிலுவையின் சுமையால் மூன்றாம் முறை தரையில் குப்புற விழுகிறார்.
10. இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்.
11. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.
12. இயேசு சிலுவையில் இறக்கிறார்.
13. இறந்த இயேசுவை அவர் தாயார் மடியில் வளர்த்துகிறார்கள்.
14. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.

அன்பு நிறை இயேசுவே! சிலுவையிலே நீர் அறையுண்டு சாகத் தீர்ப்பிடப்பட்டதை தியானித்து, நாங்கள் உம்மை வணங்குகிறோம். மிகக் கொடூர தீர்வையிலே நின்று எங்களை மீட்டருளும் – ஒரு விண்.அருள்.திரி.

**முதல்** : எங்கள்மேல் இரக்கமாயிரும் ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**எல்** : இறந்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவனவாக. ஆமென்

**இறுதியில்**

பொறுத்தருளும் ஆண்டவரே....பொறுத்தருளும் ஆண்டவரே,
உமது மக்களின் பாவங்களைப் பொறுத்தருளும்
என்றென்றும் எங்கள் மேல் கோபமாய் இராதேயும் ஆண்டவரே
கனிவாயிரும் ஆண்டவரே கனிவாயிரும்.

**முதல்** : திருத்தந்தையின் வேண்டுதல் கருத்துகள் நிறைவேறவும், துயர்வுறு நிலையிலிருக்கிற ஆன்மாக்களின் இளைப்பாற்றிக்காகவும் வேண்டிக்கொள்வோம்.

**எல்** : விண்... அருள்... தந்தைக்கும்...

# சிலுவைப் பாதை பாடல்கள்



**01. மைந்தனார் சிலுவை மீது மாதுயருடன் வருந்த**
நொந்தழுதாள் தாய் மரி

1. திருமகன் அறையுண்ட சிலுவை அடியில் நின்ற
தேவதாய் நொந்தழுதாள்

2. வேதனை கடலமிழ்ந்த மாதா ஆத்துமம் வதைய
வாள் பாய்ந் தூடுருவிற்று

3. நேய மகனை இழந்த தாய் அனுபவித்த துயர்
தானுரைக்க நாவுண்டோ?

4. அருமையாய் ஈன்ற சுதன் அவஸ்தையை கண்டிளகி
உருகிப் புலம்பினாள்

5. இரட்சகர் திருத்தாயார் இக்கொடிய வாதைப்பட
யார் கண்டழாதிருப்பார்

6. திருமகன் துயரத்தால் உருகும் தாயை கண்டுள்ளம்
கரையாதார் யாருண்டு?

7. அன்புள்ள தம் திருமகன் துன்ப துயர் அவஸ்தையில்
தன் ஜீவன் தரக் கண்டாள்

8. பட்சவூரணி மாதாவே பரிதபித்தே உம்மோடு
பாவி நான் அழச் செய்யும்

9. ஆதி இயேசுவை நேசித்தே யான் அவருக்கினியனாய்
அன்பால் என்னுள்ளம் சுடும்

10. தேவ தாயே தயை செய்து பாவி என்னிருதயத்தில்
இயேசு காயம் பதியும்

11. சிலுவை அடியில் நின்று தேவதாயே உம்மோடு நான்
புலம்ப ஆசிக்கின்றேன்

12. கன்னியர் அரசே தாயே என் கண்ணீரை உம்முடைய
கண்ணீரோ டேற்றருளும்

13. அன்பாம் அக்கினி மூட்டி அடியோரைத் தீர்வை நாளில்
ஆதரிப்பீர் கன்னியே

14. மண் உடல் உயிர் பிரிந்தால் வான் மோட்சத் தாத்துமம் சேர்ந்து
வாழவுஞ் செய்தருளும்

**02. எனக்காக இறைவா எனக்காக**
இடர்பட வந்தீர் எனக்காக
பழிகளை சுமத்தி பரிகசித்தார் – உயிர்
பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார்

1. தாளாச் சிலுவை சுமக்க வைத்தார் – உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார்

2. விழுந்தீர் சிலுவைப் பளுவோடு – மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு

3. தாங்கிட வொண்ணாத் துயருற்றே – உம்மைத்
தாங்கிய அன்னை துயருற்றாள்

4. மறுத்திட முடியா நிலையாலே – சீமோன்
வருத்தினார் தன்னை உம்மோடு

5. நிலையாய் பதிந்தது உம் வதனம் – அன்பின்
விலையாய் மாதின் சிறு துணியில்

6. ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால் – அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும்

7. விழிநீர் பெருக்கிய மகளிருக்கு – அன்பு
மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர்

8. மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் – கால்
ஊன்றி நடந்திடும் நிலை தளர்ந்தீர்

9. உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர் – இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர்

10. பொங்கிய உதரம் வடிந்திடவே – உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே

11. இன்னுயிர் அகன்றது உமை விட்டு – பூமி
இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு

12. துயருற்றுத் துடித்தாள் உளம் நொந்து – அன்னை
உயிரற்ற உடலின் மடிசுமந்து

13. ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு – நீர்
அடங்கிய கல்லறை உமதன்று

**03. நிந்தையும் கொடிய வேதனையும்**
நிறைந்துள்ள உம் திருப்பாடுகளை
சிந்தையில் கொண்டு தியானிக்கவே
தினம் அருள் புரிவீர் ஆண்டவரே
சிலுவையிலேதான் மீட்சியுண்டு தேடும் வானக மாட்சியுண்டு

1. இயேசுவை சிலுவையில் அறையுமென்றோம்
இடியெனக் கூக்குரல் எழுப்பி நின்றோம்
மாசற்ற செம்மறி ஆனவர்க்கு
மரண தண்டனையாம் விதித்து நின்றோம்
அவரோ மௌனம் காத்துநின்றார்
அகமுவந்ததனை ஏற்றுக்கொண்டார் – சிலுவையிலே

2. பாவத்தின் சுமையாம் சிலுவைதனை
பரமனின திருவுளம் நிறைவுறவே
ஆவலாய்த் தோளில் சுமந்து சென்றார்
ஆண்டவர் கல்வாரி மலை நோக்கி
எனைப்பின் செல்பவன் தனை மறுத்து
சிலுவையை எடுத்துப் பின் செல்கவென்றார் –சிலுவையிலே

3. சிலுவையின் பாரம் அழுத்தியதால்
திருமகன் தரையில் விழலானார்
வலுவற்ற அடியோர் எழுந்திடவே
வல்லப தேவா வரமருள்வீர்
எமைப் பலப்படுத்தும் அவராலே
எல்லாம் செய்திடக் கூடுமன்றோ – சிலுவையிலே

4. உதிரம் வியர்வைத் தூசியினால்
உருவிழந்திருந்த தன் மகனை
எதிர்கொண்டு வந்த அன்னை மனம்
இயம்பருந் துயரால் கலங்க வைத்தோம்
அந்நிய காலம் வரையெங்கள்
அடைக்கலமாய் நீ இருந்திடம்மா – சிலுவையிலே

5. உம் திருச்சிலுவையைச் சுமந்து செல்ல
உதவிய சீமோன் போல் யாமும்
எம் அயலார்க்குத் தயங்காமல்
என்றுமே உதவிடச் செய்தருள்வீர்
நிரந்தரமாகப் பிறரன்பில் நிலைத்திடும்
வரம் தர வேண்டுகின்றோம் – சிலுவையிலே

6. துகள்படிந்திருந்த திருமுகத்தைத்
துணிந்து வெரோணிக்காள் துடைக்க வந்தாள்
இகமென்ன சொல்லும் என நினைந்து
இழந்திடலாமா விசுவாசம்
இயேசுவை மனிதர் முன் ஏற்றுக்கொள்வோர்
எய்துவர் அழியாப் பேரின்பம் – சிலுவையிலே

7. மீண்டும் மீண்டும் பாவத்திலே
விழுந்திடும் பாவியை மீட்டிடவோ
ஈடிணையில்லா இறைமகனார்
இவ்விதம் புழுதியில் விழலானார்
நம்மை நிதம் இறைவன் மன்னிப்பதால்
நாமும் பிறரை மன்னிப்போம் – சிலுவையிலே

8. எங்கணும் நன்மை செய்தவர்க்கு
ஏனிந்தக் கோலம் என வருந்திப்
பொங்கிடும் கடல்போல் அழுதரற்றிப்
புண்ணிய மாதரும் புலம்பினரே
அழுகின்ற பேர்கள் பேறுபெற்றோர்
ஏனெனில் ஆறுதல் அடைந்திடுவர் – சிலுவையிலே

9. அறவற்ற களைப்போ பெருந்துயரோ
அடியற்ற மரம்போல் விழலானார்
உளந்தொறும் தாழ்ச்சி தழைத்திடவே
உயர்பரன் அடிமை போல் விழலானார்
தயையுயர்த்திடுவோன் தாழ்வடைவான்
தனைத் தாழ்த்திடுவோன் உயர்வடையவான்– சிலுவையிலே

10. உடையினை சேவகர் பிடித்திழுத்து
உரித்திடும் வேளை காயமெல்லாம்
மடைதிறந்தோடும் வெள்ளமென
மறுபடி உதிரம் சொரிந்ததையோ
அந்நியரும் வழிப்போக்கரும் நாம்
அடக்குவோம் தீய ஆசைகளை – சிலுவையிலே

11. கழுமரம் என்ற சிலுவையிலே
களங்கமில்லாத இறைமகனை
விழுமிய நலம் பல புரிந்தவரை
வெறுத்திருப்பாணியால் அறைந்து வைத்தோம்
ஒரு கணமேனும் இயேசுவேயாம்
உமைப் பிரியாமல் வாழச் செய்வீர் – சிலுவையிலே

12. நண்பனுக்காக தன்னுயிரை
நல்குவதினுமேலான அன்பு
கொண்டவர் யாருமே இல்லையன்றோ?
கொடுத்தார் இயேசு தம் உயிர் நமக்காய்
தலையன்பு செய்தார் நமக்காக
தலைமுழுதும் அவர் கையளித்தார் – சிவவையிலே

13. மண்ணில் கோதுமை மணி விழுந்து
மடிந்தால் தானே பலன் அளிக்கும்
விண்ணில் வாழ்வு நமக்கருள
விருப்புடன் இயேசு உயிர்துறந்தார்
வியாகுல அன்னை மடிவளரும்
மீட்பரே எம்மைக் காத்தருள்வீர் – சிலுவையிலே

14. உலகின் ஒளியாய்த் தோன்றியவர்
ஒரு கல்லறையுள் அடங்கிவிட்டார்
விலகும் மரண இருள் திரையும்
விளங்கும் கிறிஸ்துவின் அருள் ஒளியால்
கிறிஸ்துவே எனக்கு உயிராகும்
மரணம் எனக்கு ஆதாயம் – சிலுவையிலே



இணைந்து பயணிக்கும் வாழ்வின் பாதை
**சிலுவைப் பாதை**

## இணைந்து பயணிக்கும் கூட்டியக்கத் திருஅவை
## திருச்சிலுவைப் பாதை

உறவு ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்திப் பணி ஆகியவற்றை மையமாகக் கொண்டு இணைந்து பயணிக்கும் கூட்டியக்கத் திருஅவையாக உருவாக உலக ஆயர்கள் மாமன்றம் திருத்தந்தை அவர்களால் கூட்டப்பட்டுள்ளது. திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கான கடமையுள்ளவர் என்பதனால் காலத்திற்கு ஏற்ப திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணியில் மாற்றங்களைக் கொண்டுவர அக்டோபர் 2023 இல் நிறைவுபெறும் ஆயர் மாமன்றத்திற்கான தயாரிப்பு அக்டோபர் 2021 அன்றே தொடங்குகிறது. ஆவியாரின் துணைகொண்டு செயல்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் தடைதாண்டி மாற்றங்களைக் கட்டாயம் உருவாக்கும் என்பது படைப்பின் தொடக்கத்திலிருந்து நாம் அறிவோம். அவ்வகையில் உறவு ஒன்றிப்புக்கும், பங்கேற்புக்கும், நற்செய்தி அறிவிப்புக்கும் தடையாக உள்ள அனைத்தையும் கண்டறிந்து அகற்றுவது காலத்தின் கட்டாயம்.

இப்பணியை உலகளாலிய நிலையில் மேற்கொண்டு தடைகளை உடைத்தெறிய வேண்டும் என்பதற்காகவே பலகட்ட தயாரிப்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. உலக அளவில் எல்லா மறைமாவட்டங்களிலும் இப்பணிகள் தொடங்கப்பட்டு சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு தயாரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நம் மறைமாவட்டத்திலும் ஆயர் அவர்களின் வழிநடத்துதலில் சிறப்புக் குழு உருவாக்கப்பட்டு பல நிலைகளில் இத்தயாரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. நமது பங்குகளிலும் ஆயர் மாமன்றத்திற்கான செபத்தை ஒவ்வொரு நாளும் நற்கருணை பெற்ற பின்பு செபிக்கிறோம். திருத்தந்தை வழங்கியுள்ள வழிகாட்டுதலை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்து தெளிவது நமது கடமையாகும். எனவே இணைந்து பயணிக்கும் கூட்டியக்கத் திருஅவையின் சிந்தனைகள் அடிப்படையில் சிலுவைப் பாதை நிலைகளையும், காட்சிகளையும், கதாபாத்திரங்களையும் சிந்தித்து மாற்றத்திற்கான முயற்சியை மேற்கொள்வோம். இணைந்து பயணிப்போம் புதிய பாதைகளை உருவாக்குவோம்.

அருட்தந்தை தே.ஆரோக்கியராஜ்

## முதல் நிலை

## இயேசு இறப்பிற்கு தீர்ப்பிடப்படுகிறார்

**காட்சி : மத்தேயு 27:1-2, 22-24, 26**

திருமுழுக்கு பெற்று தந்தை, ஆவியாரின் உடனிருப்பில் நற்செய்திப் பணியைத் தொடங்கிய இயேசு திருத்தூதர்களைத் தேர்ந்தெடுத்து மூன்று ஆண்டுகள் சிறப்பான பணிகளை ஆற்றுகிறார். ஏழைகள், பாவிகள், ஒடுக்கப்பட்டோர், கைவிடப்பட்டோர், பெண்கள், சிறார்கள் என அனைவரும் கடவுளின் அன்பைப் பெற்று மகிழ்ச்சியடைகிறார்கள். ஆனால் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் என்று சொல்லிக்கொண்ட பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்கள், சதுசேயர்கள் இயேசுவின் நற்செய்தி அறிவிப்புப் பணியில் பொறாமை கொண்டு அவரை எப்படியாவது ஒழித்துவிட வேண்டும் என்று திட்டம் தீட்டி காத்திருக்கிறன்றனர். சிலுவையின் மாட்சியைப் பெறுவதற்கு ஏற்ற நேரத்தை உணர்ந்த இயேசு தம்மை சிலுவைக்குக் கையளிக்க தந்தையிடம் வேண்டிவிட்டு இறங்கியபோது அவரைப் பிடித்து தலைமைக் குருவின் இல்லத்திற்கும், ஆளுநர் மாளிகைக்கும் அழைத்துச் சென்று அலைக்கழித்து இறுதியில் சாவுக்குத் தீர்ப்பிடுகிறார்கள். குற்றமில்லாத இயேசுவை சிலுவையில் அறைய குற்றமுள்ள பரபாவை விடுதலை செய்கிறார்கள்.

### சிந்தனை

இணைந்து பயணிக்கும் கூட்டியக்கத் திருஅவை எந்த முடிவை எடுத்தாலும் காலத்தின் அறிகுறிகளை ஆய்வு செய்யும், ஆவியாருக்குத் திறந்த மனதுடன் செவிமடுக்கும், சந்திக்கும் அறைகூவல்களையும் அதன் விளைவுகளையும் தேர்ந்து தெளியும், தொடர்புடைய அனைவரோடும் வெளிப்படையான கலந்துரையாடல் மேற்கொண்டு ஒட்டுமொத்த மாந்த குடும்பத்தின் நலனைக் கருத்தில் கொண்டு முடிவுகளை எடுக்கும். பிலாத்துவின் தீர்ப்பு தன் பதவியைத் தக்க வைப்பதற்கான தன்னலத் தீர்ப்பு. அவன் கலந்துரையாடிய யூதர்களும் பொறாமை நிறைந்தவர்கள். பல நேரங்களில் நம் குடும்பங்களில், அன்புச் குமுகாயங்களில், பங்கு மேய்ப்புப் பணிக்குழுவில் நம்மை முன்னிலைப் படுத்தி நாம் எடுக்கும் முடிவுகள் அடுத்தவரை காயப்படுத்துவதாகவும், பிறர் நலனுக்கு எதிராகவும் மாறிவிடுகிறது. கூட்டுப்பொறுப்பிற்கு ஆர்வமுடன் வரும் உறுப்பினர்களும் தங்களின் கருத்துதான் கேட்கப்பட வேண்டும் என்று கருதுவதாலும் தவறான தீர்ப்புகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்

### மன்றாடுவோம்

இயேசுவே! பிலாத்துவின் தீர்ப்பு உமக்கு சிலுவையைக் கொடுத்தது. நாங்கள் தன்னலத்தோடு முடிவெடுக்காமல் அடுத்தவரின் நலனுக்கான முடிவுகள் எடுக்க எங்களுக்கு வரம் தாரும். ஆமென்.

# இரண்டாம் நிலை

## இயேசு சிலுவையை ஏற்றுக் கொள்கிறார்

**காட்சி: மத்தேயு 27:27–31**

பிலாத்துவின் அரண்மனையில் படைவீரர்கள் இயேசுவை கொடுமைப்படுத்துகிறார்கள். இயேசுவின் ஆடைகளை உரிந்துவிட்டு கருஞ்சிவப்பு நிறமுள்ள தளர் அங்கியை அவருக்கு அணிவித்து முள்முடியை அவரின் தலையின் மேல் வைத்து, அவரின் வலக்கையில் ஒரு கோலைக் கொடுத்து அவர் முன்பு முழந்தாளிட்டு "யூதரின் அரசரே, வாழ்க!" என்று கேலியும் கிண்டலும் செய்கிறார்கள். படைவீரர்கள் ஒவ்வொருவராக இயேசுவின் மீது துப்பி அவர் கையிலிருந்த கோலை எடுத்து அவரின் தலையில் அடிக்கிறார்கள். முள்முடி கிழித்ததால் இயேசுவின் தலையிலிருந்து இரத்தம் பீறிட்டு வருகிறது. கோலால் அடிபட்ட அவருடைய உடலில் ஆங்காங்கே தழும்புகள் ஏற்படுகின்றன. கயிறுகளால் பின்னப்பட்ட சாட்டையால் அடிக்கிறார்கள். அதன் நுனியில் கோர்க்கப்பட்டிருந்த கூரிய ஊசிகள் அவரின் உடலில் உள்ள தோலை பிய்த்துக் கொண்டு வருகின்றன. இரத்தம் சொட்ட சொட்ட அவர்மீது பளுவான சிலுவையை சுமத்துகிறார்கள்.

### சிந்தனை

தன் மேல் இருக்கும் முட்புதர்கள், தனது கரடு முரடான தன்மைகள் ஆகியவற்றை நீக்க கூர்மையான கலப்பையால் தன் உடலைக் கீறிக்கொள்வதற்கும், கசப்புத் தன்மை வாய்ந்த குப்பைகள் உரங்களை தன்மேல் விழுவதற்கும் ஒப்புதலிப்பதால் ஒரு நிலம் நல்ல நிலமாக மாறுகிறது. அறியாமையாலும் பொறாமையாலும் பகையினாலும் இணைந்து பயணிக்கும் கூட்டியக்கத் திருஅவையில் பொறுப்பேற்கும் தலைவர்கள் இழிவு அடைவதும் காயப்படுத்தப்படுவதும் நிகழலாம். எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்ளும் நிலம்போல இயேசுவின் மனநிலை அமைந்தது போல நாம் சந்திக்கும் இழிவையும் காயங்களையும் ஏற்றுக்கொள்ளும் நல்மனநிலை கூட்டியக்கத் திருஅவைக்கு மிக இன்றியமையாதது. திருஅவையின் உறுப்பினர்கள் தங்களின் கருத்துகள் மறுக்கப்படும் சூழலில் அடுத்தவர்மேல் பகைமை வெறுப்பு சிலுவையை ஏற்றி அவரின் துன்பத்தில் மகிழ்கிறோம். இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! பளுவான சிலுவை உம்மீது ஏற்றி வைக்கப்பட்டதுபோல நாங்களும் எங்களின் அறியாமையாலும் பொறாமையாலும் பலர்மேல் சிலுவையை ஏற்றி வைத்திருக்கிறோம். அடுத்தவரின் துன்பம் தணிக்கின்ற நல்மனதை எங்களுக்குத் தாரும். ஆமென்.

## மூன்றாம் நிலை

## இயேசு முதல் முறை கீழே விழுகிறார்

**காட்சி : புலம்பல் 1:14–17**

பிலாத்துவின் அரண்மனையிலிருந்து கல்வாரி மலைநோக்கிய பயணம் புறப்படுகிறது. சூழ்ந்து நிற்கும் படைவீரர்களும், இவரை எப்படியாவது ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற யூத பெரியவர்களும் கைகொட்டி சிரிக்கும் கீழ்மையானப் பயணம். ஆனால் இயேசுவைப் பொருத்தவரை இது மாட்சிக்கான பயணம். தனது பாடுகள் இறப்பின் மூலமாகவே இவ்வுலகின் மக்களுக்கு மீட்பு வழங்க முடியும் என்பதனால் துன்புறும் மெசியாவாக இப்பயணத்தைத் தொடங்குகிறார். ஆன்மா வலிமையானது ஆனால் உடல் பலவீனமானது என்பதற்கேற்ப இரத்த வியர்வை சிந்தி செபித்ததும், இரவு முழுவதும் அலைக்களிக்கப்பட்டதும், அநீதத் தீர்ப்பும், படைவீரர்களின் துன்புறுத்தல்களும், பளுவான சிலுவையும், சிலுவைப் பயணத்தில் படைவீரர்கள் தொடர்ந்து அடித்து அவமானப் படுத்துவதும் இயேசுவை தளர்ச்சியடையச் செய்தது. இயேசுவின் உடலிலிருந்து இரத்தம் பீறிட்டு கீழே சிந்த மண்ணில் முதல்முறை சாய்கிறார் இயேசு.

**சிந்தனை :**

வெற்றியின் திருஅவை விண்ணிலுள்ள புனிதர்களையும், துன்புறும் திருஅவை துன்புறு நிலையிலிருக்கிற ஆன்மாக்களையும், பயணம் செய்யும் திருஅவை நம் எல்லோரையும் குறித்துக் காட்டுகிறது. பயணம் செய்யும் திருஅவையின் உறுப்பினர்கள் நாம் யாவரும் இணைந்து பயணிக்க வேண்டும் என்பதற்காகவே உலக ஆயர்கள் மாமன்றம் கூட்டப்பட்டுள்ளது. உறவு ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு ஆகியவை முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன. நம் உடன் பிறந்தோர், நண்பர்கள், நம் குமுகாயத்தைச் சார்ந்தோர் கடந்து நமக்கு அறிமுகமாகாதோர், நம்மைப் பகைப்போர், நாம் வெறுப்போர், நம்மை ஏமாற்றியோர், நம் உள்ளத்தில் பெருங்காயத்தை ஏற்படுத்தியோர், நம்மை கீழே விழச் செய்து அதைப் பார்த்து சிரிப்போர் அனைவரோடும் ஒன்றித்து அவர்களின் பங்கேற்பையும் ஏற்றுக்கொள்வதே சிறந்த நற்செய்தி அறிவிப்புப் பணி. பல நேரங்களில் நம்மை விழச் செய்தோரை எப்படியாவது வீழ்த்த வேண்டும் என்று காத்துக்கொண்டிருக்கிறோம். இனிமேல் அவரோடு எந்த உறவும் இல்லை என்று முற்றுப்புள்ளி வைத்து விடுகிறோம். தீயோனைக் கண்டால் தூர விலகு என்பதுபோல அடுத்தவரின் பங்கேற்பை விலக்குகிறோம். இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

**மன்றாடுவோம்**

இயேசுவே! உம்மைப் பற்றி போதிப்பது மட்டும் நற்செய்தி அறிவிப்புப் பணி அல்ல, உம் இறையாட்சி விழுமியங்களை வாழ்ந்து காட்டுவதே உண்மையான நற்செய்தி அறிவிப்புப் பணி என்பதை உணர்ந்து செயல்படுத்த அருள் தாரும். ஆமென்.

## நான்காம் நிலை

## இயேசு தம் அன்னையைச் சந்திக்கிறார்

**காட்சி : புலம்பல் 2:13-18**

கரடு முரடான மலைப் பாதையில் வீழ்ந்து எழுந்து தனது இலட்சியப் பயணத்தைத் தொடரும் நேரம் அவரைத் தேற்றுவதற்காக அவரின் அன்புத் தாய் வருகிறார். துன்புறும் தன் மகனோடு உடன் நிற்கும் வீரத்தாய் அன்னை மரியா. "உம் உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்று சிமியோன் இறைவாக்கினர் சொன்னது இப்போது நிறைவேறும் நேரம். தந்தையின் திட்டத்தை நிறைவேற்ற தாயும் மகனும் போராடும் அற்புத போர்க்களம் இப்பாடுகளின் பாதை. கானாவூர் திருமணத்தில் ஊக்கப்படுத்திய அன்னை, பைத்தியக்காரன் பெருந்தீனிக்காரன் என்று எல்லோரும் பகைத்தபோது வந்து சந்தித்து ஊக்கப்படுத்திய அன்னை இப்போது சிலுவைப் பயணத்தில் கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற ஊக்கப்படுத்துகிறார். இருப்பினும் தாய் என்னும் நிலையில் தன் மகன் இழிவுப்படுத்தப்படும்போது அடையும் வேதனை சொல்லால் வடிக்க இயலாத வேதனையாகும்.

### சிந்தனை

கூட்டியக்கத் திருஅவையில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டியது உணர்வா? இலட்சியமா? என்ற கேள்விக்கு அன்னை மரியின் சந்திப்பு குறிக்கோள் என்னும் பதிலை முன் வைத்தது. மேலான குறிக்கோளிற்காகவே திருஅவையில் எல்லோரும் ஒன்றிணைகிறோம். இதில் சாதிய, சமய, மொழி, இன உணர்வோ, உயர்ந்தோர் தாழ்ந்தோர், ஆண் பெண் என்னும் பிரிவினையோ எழக்கூடாது. எல்லோரும் கடவுளின் பிள்ளைகள், சமமானவர்கள் என்னும் இறையாட்சி விழுமியத்தை மறந்து தனது சாதியைச் சாராதவர்களுக்குப் பங்கு உறுப்பினர் அட்டை வழங்கமாட்டேன் என்று சொல்வதும், தனது சாதியைச் சாராதவர்களுக்குக் கல்லறையில் இடம் கொடுக்க மாட்டேன் என்று சொல்வதும், சாதியை மையப்படுத்தி அன்பியங்களைப் பிரித்துக் கொள்வதும், பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதும், சாதி வாரியாக குருக்கள் கூட்டம் நடத்துவதும், சாதி பார்த்து குருத்துவ மேற்படிப்புக்கு அனுப்புவதும், சாதியைச் சார்ந்த ஆயர்களை விரும்பிக் கேட்பதும், விழாக்களில் செல்வந்தர்கள் முன்னிலைப் படுத்தப்படுவதும், வரிபாக்கி என்று சொல்லி ஏழைகளுக்கு திருஅருளடையாளங்களை மறுப்பதும், படிப்பறிவில்லாதவர்கள் பொறுப்புகளுக்குத் தகுதியற்றவர்கள் என்று ஒதுக்குவதும் அன்னை மரியின் இலட்சிய சந்திப்பை எதிர்த்து உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும். இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! உம் திருத்தாயின் சந்திப்பு இறையாட்சி இலட்சியப் பயணத்திற்கு ஊக்கம் கொடுப்பதாக அமைந்தது. ஆனால் எனது சந்திப்பு பல நேரங்களில் உணர்வுப்பூர்வமாக அமைந்து குறிக்கோளை கெடுப்பதாக அமைந்துவிடுகிறது. நானும் உம்மைப்போல குறிக்கோளில் தெளிவு பெற வரம் தாரும். ஆமென்.

## ஐந்தாம் நிலை

## சீமோன் இயேசுவுக்கு உதவி செய்கிறார்

**காட்சி:** லூக்கா 23:26

கூரிய கற்கள் கால்களைத் துளைக்க, படைவீரர்களின் கொடிய வார்த்தைகள் இதயத்தைத் துளைக்க, கசையடிகள் தோலை கிழிக்க, முள்முடியும் அழுத்த இரத்தம் சொட்டிக்கொண்டே இருக்கிறது. பளுவான சிலுவையை தொடர்ச்சியாக இயேசு சுமந்தால் அவர் கல்வாரி மலையில் அவருக்கென குறிக்கப்பட்ட இடம் வரை உயிரோடு இருக்க மாட்டார் என்பதை உணர்ந்த படைவீரர்கள் வயலிலிருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்த சீரேன் ஊரைச் சார்ந்த சீமோன் என்பவரைக் கட்டாயப்படுத்தி சிலுவை சுமக்க வைக்கிறார்கள். இழிவின் சிலுவையையா நான் சுமக்க வேண்டும், குற்றவாளிக்கு ஏன் உதவ வேண்டும் என்று விருப்பமில்லாமல் வந்த சீமோன் கடவுளின் திருமகனின் அருள்முகத்தைக் கண்டதும் பளுவான சிலுவை சுமக்க விருப்பம் கொள்கிறார்.

**சிந்தனை**

மாமன்ற சின்னத்தில் சிலுவையின் நிழலில் ஆவியின் ஒளியில் 15 நிழல் உருவங்கள் பயணம் செய்கின்றன. இந்நிழல் உருவங்கள் மாந்தரின் அனைத்து வாழ்க்கைச் சூழலையும், தலைமுறையினரையும், பன்முகத் தன்மையையும் குறித்துக் காட்டுகின்றன. இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள், இளம்பருவத்தினர், குழந்தைகள், பொதுநிலையினர், துறவோர், பெற்றோர், கணவன், மனைவி, மாற்றுத் திறனாளிகள், ஆயர் என இணைந்த பயணம் மேற்கொள்கின்றனர். இக்கூட்டுப் பயணத்தில் ஒருவர் மற்றவருக்கு உற்ற துணையாக இருக்கிறார்கள். வலிமையுடையோர் வலிமையற்றோரைத் தாங்குவது, இறையருளை நிரம்பப் பெற்றோர் இறையருளுக்காக வேண்டுவோருக்கு பகிர்ந்தளிப்பது, பொருளாதார உதவிகள் மேற்கொள்வது, உரிமைகளை சமமாகப் பகிர்ந்து கொடுப்பது, தேவையிலிருப்போருக்கு தகுந்த உதவி செய்வது, வீழ்ந்தோரைத் தூக்கிவிடுவது ஆகிய சீமோனின் பணிகளைச் செய்வதற்கு அழைக்கப்படுகிறோம். ஆனால் அன்பியம், பக்த அவைகள், பங்கு மேய்ப்புப் பணிக்குழு என அனைத்து பங்கேற்பு அமைப்புகளிலும் வலிமையுடையோரும், பொருளுடையோரும் மட்டுமே பொறுப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நிலை உள்ளது. தவக்காலத்தின் மூன்று தூண்களுள் ஒன்றாகிய பிறர்அன்புப் பணியை தவக்காலத்தில் மட்டும் செய்தால் போதும் என்றும், அதுவும் எல்லோரும் பார்க்கும் அளவுக்குத் தம்பட்டம் அடித்து அனாதை இல்லங்களுக்குச் சென்று செய்யும் நிலையும் உள்ளது. எனது தெருவில் உள்ள ஏழை எளியோரை கண்டும் காணதவர்களாக பல நேரங்களில் இருந்துள்ளோம். மறைமுகமாக உதவி செய்வோரையும் தடுத்திருக்கிறோம். பங்கேற்பில் சமஉரிமை கொடுக்காமல் அதிகாரம் ஆண்களுக்கு மட்டுமே உள்ளது என்று இருந்திருக்கிறோம். இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! உம்மைக் கண்டதால் சீமோன் தயக்கமின்றி உதவி செய்தார். நாங்கள் ஏழை எளியவரில் உம்மைக் காணாமலும், நற்கருணைப் பந்தியில் அமரும் நாங்கள் அந்நற்கருணை உணர்த்தும் பிறரன்புச் செயல்களைச் செய்யாமலும் இருந்திருக்கிறோம். அடுத்தவரில், குறிப்பாக துன்புறும் அயலாரில் உம் முகம் கண்டு உதவி செய்ய வரம் தாரும். ஆமென்.

## ஆறாம் நிலை

## இயேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைக்கிறார்

**காட்சி : மத்தேயு 25:37-40**

குற்றவாளியாக சிலுவையை சுமந்து செல்லும் இயேசுவைக் கண்டு இழிவுபடுத்துவதற்காக, அவர் மேல் கல் எறிவதற்காக, அவரின் உடலில் எச்சில் துப்புவதற்காக, அவரின் துன்பத்தை இன்னும் அதிகரிப்பதற்காக பெருங்கூட்டம் வழியெங்கும் நிற்கிறது. அக்கூட்டத்திற்கு நடுவே என்ன நடந்தாலும் வேடிக்கைப் பார்ப்பது என்று எப்பக்கமும் சாரா இன்னொரு சிறு கூட்டமும் நிற்கிறது. அதே கூட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒடுக்கப்பட்ட குரல்கள் இயேசுவுக்கு சாய்கலாக அமைதியாக துடித்துக்கொண்டிருக்கின்றன. தனது அமைதியைக் கலைத்து கூட்டத்திற்கு நடுவில் வேகமாக வந்து இயேசுவின் முன் முழந்தாள்படியிட்டு கண்ணீர்விட்டு அழுகிறார் வெரோணிக்கா. ஏழை எளிய மக்களுக்குக் கடவுளின் அன்பைக் கொண்டுவந்த அழகிய முகம் இரத்தக் கறைகளால், காயங்களால் அழகிழந்து காணப்படுவதை உணர்ந்த வெரோணிக்கா பொறுக்க முடியாமல் தான் கொண்டு வந்த துணியால் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறார். இயேசுவின் முகம் அவரது துணியில் அச்சாகப் பதிகிறது. பெருஞ்சுமை சுமந்து சோர்ந்து போயிருந்த மக்கள் இவ்வருள் முகத்தைக் கண்டு தங்களின் துன்பங்களையெல்லாம் மறந்து இளைப்பாறுதல் பெற்றுச் சென்ற முகம் இன்று இழிவால், வேதனையால் சோர்ந்து போயிருந்ததை தனது துணியால் துடைத்து மீண்டும் அருள்முகமாகக் காட்சியளிக்கச் செய்தார். அவரின் அருள்முகத்தைக் கண்டும் கல்மனம் கொண்ட மாந்தர்கள் கூட்டம் தொடர்ந்து அவரை ஏளனம் செய்துகொண்டே இருக்கிறது.

### சிந்தனை

இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்று மலைப்பொழிவில் இயேசு போதித்தார். திருஅவை உலகமெங்கிலும் நடத்தும் கல்வி நிறுவனங்கள், மருத்துவப் பணியகங்கள், கைவிடப்பட்டோர் மற்றும் அனாதை இல்லங்கள் அனைத்தும் இரக்கப் பணிகளுக்கு அடையாளங்கள். திருத்தூதர்களிடமிருந்து திருத்தொண்டர்கள் இவ்விரக்கப் பணிகளை செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது போல இணைந்து பயணிக்கும் திருஅவையில் திருத்தொண்டர்களாக நாமெல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம்.

துன்புறும் மாந்தர்களைத் தேடிச் சென்று ஆறுதல் வழங்கும் வெரோணிக்காவாக, அன்னை தெரசாவாக, நல்ல சமாரியனாக மாறுவது காலத்தின் கட்டாயமாகும். கல்வி நிறுவனங்களும், மருத்துவ மனைகளும், அனாதை இல்லங்களும் பிறரன்புப்பணி மனப்பான்மையிலிருந்து வணிக நோக்கோடு தனி ஆட்களால் நடத்தப்படுகின்றன. வாணிக நோக்கம் உட்புகுந்ததால் திருஅவை நடத்தும் பிறரன்புப்பணி நிறுவனங்கள் பல காரணங்கள் கற்பிக்கப்பட்டு மூடப்படுகின்றன. ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், அனாதைகள் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கிறது. ஏந்து படைத்தோர் வணிக நோக்கோடு செயல்படும் இவ்விடங்களுக்குச் சென்று தங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்; இல்லாதோர் துன்புறுகிறார்கள். இவர்களைத் தேடிச் சென்று உதவி செய்வது இயேசுவுக்குச் செய்யும் உதவியாகும். இப்படிப்பட்ட மாற்றம் உருவாக இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! துன்புறும் மாந்தர்களைத் தேடிச் சென்று உதவி செய்யும் நல்ல சமாரியன் மனநிலையையும், வெரோணிக்கா மனநிலையையும் எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

---

## ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

**காட்சி :** எசாயா 53:3-6

கல்வாரி நோக்கிய பயணத்தில் சுற்றிலும் மக்கள் வெள்ளம் சூழ்ந்திருக்க இயேசு தனி ஆளாக மிகப் பளுவான சிலுவையைச் சுமந்து செல்கிறார். அவரைப் பெற்றெடுத்து பாலூட்டி வளர்த்த அன்னை மரியா வந்து ஊக்கப்படுத்தினார், சீமோன் சிலுவையைத் தாங்கிப் பிடித்தார், வெரோணிக்கா இரத்தக் கறைபடிந்த முகத்தைத் துடைத்தார். இருப்பினும் இரவு முழுவதும் தூங்காமல், பசியோடு துன்பங்கள் பட்டுணர்ந்த இயேசுவால் படைவீரர்களின் சவுக்கடிகளைத் தாங்கிக் கொண்டு அதற்கு மேல் நடக்க முடியாதவராக இரண்டாம் முறையாக சிலுவையோடு கீழே சரிகிறார். தூக்கிவிட யாரும் இல்லாமல், தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்க யாரும் இல்லாமல் பளுவான சிலுவை அழுத்த இழிவுப்படுத்தும் குரல்களுக்கு நடுவே விழுந்து கிடக்கிறார் இயேசு.

### சிந்தனை

ஒப்புரவு அருள்அடையாளத்தின்போது நமது பாவங்களையும் பலவீனங்களையும் நாம் அறிக்கையிடுவோம். நாம் சிறிது முயன்றால் பாவத்திலிருந்து விலக முடியும். ஆனால் நமது முயற்சி பலவீனத்திலிருந்து நம்மை முழுமையாக விடுவிக்க இயலாது. சூழ்நிலைக் கைதிகளாகப் பல நேரங்களில் நாம் மாறிவிடுகிறோம். குடி நோயினால் பாதிக்கப்பட்டோர், போதைப் பழக்கத்திற்கு அடிமையானோர், தவறான பாதையிலிருந்து விலக

முடியாமல் தவிப்போர், சிறைச்சாலைகளில் இருப்போர், கூர்நோக்கு நிலையங்களில் இருப்போர், மனநலம் பாதிக்கப்பட்டு விலங்கிடப்பட்டிருப்போர் அனைவருமே தன் நிலையிலிருந்து வீழ்ந்து எழ முடியாதவர்களாக, பலவீனமானவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் இந்நிலைக்கு ஆளாவதற்கு நாமும் கரணியமாக இருந்திருப்போம். இணைந்து பயணிக்கும் திருஅவையில் இவர்களும் உறுப்பினர்களே. இப்படிப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு கருத்துரைகள் வழங்குவதும், மறு வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதும். அவர்களுக்கு பொருளாதார உதவிகள் செய்வதும், இவர்களின் குடும்பங்களைக் கண்டுகொள்வதும் நமது கடமையாகும். பல நேரங்களில் இவர்களின் நிலையை நாம் வேடிக்கை பார்த்திருப்போம். கைகொட்டி சிரித்து மகிழ்ந்திருப்போம், அல்லது கூடி அமர்ந்து கேலி பேசியிருப்போம், உதவி என்று தேடி வந்தவர்களைப் புறக்கணித்திருப்போம். இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! எங்கள் பாவங்கள் நீர் சிலுவையில் மீண்டும் கீழே விழக் கரணியமாக அமைந்ததுபோல எங்களின் கண்டுகொள்ளாமை குமுகாயத்தில் பலர் மனம்மாறுவதற்குத் தடையாக அமைந்துள்ளது. நாங்கள் அடுத்தவரைக் கண்டுகொண்டு அவர்களுக்கு எங்களால் முடிந்த உதவி செய்ய நல்மனம் தாரும். ஆமென்.

---

## எட்டாம் நிலை

## இயேசு பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

**காட்சி:** லூக்கா 23:27, 28

சிலுவையின் பளுவால் கீழே விழுந்து கிடக்கும் இயேசுவைப் படைவீரர்கள் தொடர்ச்சியாகக் கசையால் அடிக்கிறார்கள். துன்பம் தாங்காமல் மீண்டும் எழுகிறார் இயேசு. சிலுவை மீண்டும் அவர்மீது சுமத்தப்படுகிறது. அடுத்த அடி எடுத்து வைப்பதற்குக் கூட காலில் வலுவில்லை. இருப்பினும் கல்வாரி மலையில் சிலுவையில் அறையப்படுவதே தனது மாட்சி என்ற குறிக்கோளோடு நடக்க தொடங்குகிறார். கூட்டத்தில் அமைதிக் குரலை அதற்கு மேலும் அடக்கிக் கொண்டிருக்க முடியாமல் வெரோணிக்காவைத் தொடர்ந்து பெண்கள் பலர் இயேசுவுக்கு அருகில் சென்று ஆறுதல் சொல்ல வருகிறார்கள். நிலைவாழ்வு கொடுக்கும் பசுமை மரமாகிய இயேசு தனக்கு ஆறுதல் சொல்ல வந்த பட்ட மரங்களுக்கு ஆறுதல் சொல்கிறார். தன் துன்பம் மறந்து ஒடுக்கப்பட்ட அடுத்தவர் துன்பத்தில் ஆறுதல் சொல்கிறார் இயேசு.

### சிந்தனை

இணைந்து பயணிக்கும் கூட்டியக்கத் திருஅவையின் பணிகள் பலவற்றை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதில் இயேசுவின் காலத்திலிருந்து இன்று வரை பெண்களின் பங்கு மிக அதிகம். திருஅவையின் வழிபாடுகள் தொய்வின்றி நடைபெற உதவி செய்வதிலும், அன்புப் பணிகள் நடைபெற

உணர்வுப்பூர்வமாக உதவி செய்வதிலும் பெண்களின் பங்கு அதிகம். ஆனால் அதிகாரப் பகிர்வில் பெண்கள் எப்போதுமே ஓரம் கட்டப்படுகிறார்கள். தமிழக அளவில் அன்பியம் என்றால் அது பெண்பியமாகவே உள்ளது. அதே நேரத்தில் பங்கு மேய்ப்புப் பணிக்குழு என்றால் அதன் துணைத் தலைவர் ஒரு ஆணாகத்தான் இருக்க வேண்டும். கோவில் தூய்மை செய்வது, பூக்கள் அலங்கரிப்பது, வழிபாட்டில் பங்கேற்பது அதோடு பெண்களின் பங்களிப்பு முடிந்துவிட வேண்டும், மேலாண்மை எல்லாம் ஆண்கள் பார்த்துக்கொள்வார்கள் என்னும் மனநிலை பெரும்பான்மையான ஆண்களிடத்தில் உள்ளது. திருஅவையும் இதற்கு விதிவிலக்கல்ல. மேலாண்மை செய்யும் அதிகமான பொறுப்புகள் ஆண்களிடத்தில் மட்டுமே உள்ளன. திருத்தந்தையே பாதம் கழுவும் சடங்கிற்கு பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் பாதங்களைக் கழுவினாலும் பங்குகளில் பங்குத் தந்தையர்களும், பங்கு மேய்ப்புப் பணிக்குழுவும் ஒப்புக்கொள்வதில்லை. பெண் சீடர்கள் இருந்தாலும் திருத்தூதர்கள் அனைவரும் ஆண்களே என்று கரணியம் கற்பிக்கப்படுகிறது. பெண்களுக்கும் பணிக்குருத்துவத்தில் பங்கேற்பு எப்போது வழங்கப்படுகிறதோ அப்போதுதான் இணைந்து பயணிக்கும் திருஅவை தனது பயணத்தை சமத்துவப் பயணமாக மேற்கொள்ள முடியும். இம்மாற்றம் உருவாக இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! படைப்பின் தொடக்கத்திலிருந்தே ஆணும் பெண்ணும் ஒன்றாக இணைந்து குடும்ப வாழ்வைத் தொடங்கும்போது ஒருவர் மற்றவரை நிறைவு செய்கிறார்கள். குடும்பம், குமுகாயம், திருஅவை அனைத்திலும் சமமான பங்கேற்பு உருவாகி நிறைவை ஏற்படுத்த வரம்தாரும். ஆமென்.

---

## ஒன்பதாம் நிலை

## இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

**காட்சி :** திருப்பாடல்கள் 22:1–21

எருசலேம் பெண்கள் கொடுத்த ஆறுதல் இயேசுவுக்கு சற்று வலிமையைக் கொடுக்க அங்கிருந்து மிக ஆர்வமாக சிலுவையில் அறையப்பட நடக்கிறார். நகர தெருக்கள் அனைத்திலும் தண்டோரா மூலம் இயேசுவின் இறப்பு அறிவிக்கப்பட்டதால் அவரின் இறப்பைக் காண்பதற்கு மிகப்பெரும் கூட்டம் ஒன்று கூடுகிறது. முன்செல்லும் படைவீரர்கள் பாதைகளை ஒழுங்குபடுத்துகிறார்கள். இயேசுவுக்கு அருகிலும் பாதையை ஒழுங்குபடுத்த படைவீரர்கள் நிற்கிறார்கள். அவர்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டே கூட்டத்தினரை மகிழ்ச்சிப்படுத்த இயேசுவைத் தொடர்ந்து அடித்துக்கொண்டே வருகிறார்கள். சிலுவையில் அறையப்பட வேண்டிய இடத்திற்கு இன்னும் கொஞ்ச தூரம்தான் இருக்கிறது. அவருக்கு அருகில் அறையப்படுவதற்காக ஏற்கனவே கள்வர்கள் இருவர் முன்னேற்பாட்டோடு இருக்கிறார்கள். இருப்பினும் சோர்வுற்ற இயேஆறைகூவல் அதற்குமேல் நடக்க முடியாமல் சிலுவையோடு மீண்டும் மூன்றாம் முறையாகக் கீழே விழுந்துவிடுகிறார்.

### சிந்தனை

இயேசு தனது விலைமதிப்பற்ற திருஇரத்தத்தைச் சிந்தி ஒரே புனித கத்தோலிக்கத் திருஅவையை உருவாக்கினார். அதிகாரத்தை முதன்மைப்படுத்தி கீழைத் திருஅவை, மேலைத் திருஅவை என்று பிரிந்தது, கோட்பாட்டை முதன்மைப்படுத்தி சீர்திருத்த அவை உருவானது, அதிலிருந்து இன்று புற்றீசல்கள் போன்று பல அவைகள் உருவாகிவிட்டன. எது உண்மையான கிறித்தவ அவை, யார் உண்மையான கிறித்தவர்கள் என்ற குழப்பம் நிலவுகிறது. திருஅவைக்குள் நிலவும் இப்படிப்பட்ட பிளவுகள் இணைந்த பயணம் செய்வதற்கு மிகப்பெரும் தடையாக உள்ளன. ஆவியின் தூண்டலுக்கு முழுமையான ஒத்துழைப்பு கொடுத்த திறந்த மனதுடன் உரையாடல் நிகழ்த்தினால் திருஅவையில் ஒன்றுமை உருவாகும். ஆனால் பல நேரங்களில் யார் பெரியவர், யாருடைய கோட்பாடு சிறந்த கோட்பாடு, யாருடைய வழிபாட்டில் அதிகமான கூட்டம் கூடுகிறது, எங்கே காணிக்கைகள் அதிகம் கிடைக்கின்றன என்பதே முதன்மைப்படுத்தப்படுகிறது. இயேசுவின் காலத்திலும் திருத்தூதர்கள் நடுவில் யார் பெரியவர் என்ற தருக்கம் ஏற்பட்டது, பவுலடியாரின் காலத்தில் அருட்கொடைகளை முதன்மைப்படுத்தி தங்களுக்குள் யார் பெரியவர் என்ற பாகுபாடு ஏற்பட்டது. இன்றும் அது தொடர்கிறது. இப்போட்டிகளும், தருக்கங்களும், மோதல்களும் இயேசுவின் இறையாட்சி விழுமியங்களிலிருந்து நாம் கீழே விழுந்து இன்னும் எழ முடியாதவர்களாக இருக்கிறோம் என்பதை நமக்குக் காட்டுகிறது. இந்நிலை மாறி ஒற்றுமை ஏற்பட இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! நீர் உருவாக்கிய ஒரே திருஅவை இன்று எண்ணிக் கணக்கிட முடியாத அளவிற்குப் பல பிளவுகளைக் கண்டு உமது பெயருக்குக் களங்கம் ஏற்படுத்திவிட்டது. எங்களுக்குள் ஒற்றுமை உருவாகி உமக்குச் சாட்சிகளாக வாழ வரம் தாரும். ஆமென்.

---

## பத்தாம் நிலை

## இயேசுவின் உடைகள் கழற்றப்படுகின்றன

**காட்சி : யோவான் 19:23, 24**

சிலுவை சுமந்த இயேசுவின் கல்வாரிப் பயணம் நிறைவுக்கு வரும் நேரம் வந்துவிட்டது. சிலுவையில் அறையப்பட வேண்டிய இடத்திற்கு இயேசு வந்ததும் அவர் சுமந்து வந்த சிலுவை கீழே வைக்கப்படுகிறது. அதற்கு அடுத்ததாக சிலுவையில் அறையப்படுவதற்கான முன்னேற்பாட்டு வேலைகளைத் தொடங்குகிறார்கள், அதற்கான பணியாளர்கள். பிறந்த உடலுடன் இவ்வுலகின் காற்றை மூச்சுவிட்ட இயேசு மீண்டும் பிறந்த மேனியராய் தனது இறுதி மூச்சை விடுவதற்கு அணியமாக்கப்படுகிறார். இரத்தக் கறைபடிந்த இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன. மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் அவரின் அன்புத் தாய் மரியா நெய்து கொடுத்த ஆடையை இயேசுவின் உடலிலிருந்து களைகிறார்கள். அந்த ஆடையினால்

ஈர்க்கப்பட்ட பணியாளர்கள் அது தனக்கு வேண்டும் என்று ஒருவரோடு ஒருவர் போட்டி போடுகிறார்கள். இயேசுவின் கதையை முடித்துவிட்டு அது யாருக்கு என்று சீட்டுப் போட்டுப் பார்ப்போம் என்று சொல்லி ஆடையை ஓரமாக வைக்கிறார்கள்.

### சிந்தனை

ஆடையில்லாத நிலை முற்றிலும் கைவிடப்பட்ட நிலையை உணர்த்துகிறது. சில நேரங்களில் தெருக்களில் இப்படிப்பட்ட மாந்தர்களைக் கண்டு வேகமாக விலகிச் சென்றிருப்போம். ஒருவேளை இம்மாந்தர் மாந்தத் தன்மையை இழந்திருந்தால் நம்மைக் காயப்படுத்தி விடுவார் என்று பயந்து ஒதுங்கியிருப்போம். இணைந்து பயணிக்கும் திருஅவை இவர்களைக் கண்டுகொள்ள அழைக்கிறது. குறிப்பாக நாடோடிகளுக்கான நற்செய்தி அறிவிப்புப் பணியில் சிறப்புக் கவனம் செலுத்தச் சொல்கிறது. இஸ்ரயேல் குழுகாயம் நாடோடி குழுகமாகவே ஆண்டரால் வழிநடத்தப்பட்டது. தாவீதின் ஆட்சியில் அவர்களுக்கு நிலையான இருப்பிடமும் அமைதியும் கிடைக்கச் செய்தார் ஆண்டவர். தொழிலுக்காக, கல்விக்காக, வாழ்வு சாய்கலுக்காகத் தனது உறவுகள், சொந்த ஊரை விட்டு வெகு தொலைவிற்கு, தொலை நாட்டிற்குச் சென்று பணி செய்வோரையும், ஏதிலிகளாகத் தங்களின் உரிமை இழந்து வாழ்வோரையும் சந்தித்து அவர்களுக்கு உதவி செய்வதும் அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதும் கூட்டியக்கத் திருஅவையின் கடமையாகும். நாடோடிகள், ஏதிலிகளுக்கு இருப்பிடம் அமைத்துக் கொடுத்தல், பிள்ளைகளுக்கு கல்வி வழங்குதல், அருளடையாளங்கள் வழங்குதல், வேலை வாய்ப்பு உருவாக்கிக் கொடுத்தல் ஆகியவையும் திருஅவையின் கடமைகளாகும். பல நேரங்களில் இவர்களின் உருவம், உடை அமைப்பு, பண்பாடு, மொழி ஆகியவற்றை வைத்து கேலிப்பொருளாகவே இவர்களைப் பார்த்திருப்போம், அவர்களை ஒரு பொருட்டாக நினைக்காமல் இருந்திருப்போம். இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! நீர் ஆடையில்லாமல் இருக்கும் நிலைகண்டு உம்மீது பரிவு வருகிறது. ஆனால் எனக்கு அடுத்திருப்பவர், குறிப்பாக நாடோடிகள் மற்றும் அகதிகளில் இந்நிலையைக் கண்டால் இரக்கமற்ற மாந்தனாகவே வாழ்கிறேன். இவர்களுக்கு உரிய மதிப்பு கொடுக்கவும், அவர்களை ஏற்றுக்கொள்ளவும், அவர்களுக்கு உதவவும் நல்மனம் தாரும். ஆமென்.

---

## பதினொன்றாம் நிலை

## இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்

**காட்சி :** யோவான் 19:16-25

உடைகள் களையப்பட்ட இயேசு அவர் சுமந்து வந்த சிலுவைக்கு அருகில் இழுத்துச் செல்லப்படுகிறார். சிலுவையின் குறுக்குக் கம்பு பொருத்தப்பட்டு அதன் மீது இயேசு கிடத்தப்படுகிறார். படைவீரர்கள்

இயேசுவின் உடலை சிலுவையோடு இறுக பிடித்துக்கொண்டு அவரின் வலது கையை வலது பக்க மரத் துண்டோடு இணைத்துக் கூரிய ஆணியால் அறைகிறார்கள். வலியில் இயேசுவின் உடல் முழுவதும் துடிக்கிறது. அதன் பிறகு இடது பக்கக் கையையும் அப்படியே சிலுவையோடு இணைத்து அறைகிறார்கள். பின் அவரது உடலை கீழ் நோக்கி இழுத்து இரு கால்களையும் ஒன்றாக இணைத்து சிலுவையிலிருந்து அவரின் உடல் விலகி விடாதவாறு கால்களிலும் ஆணியை அறைகிறார்கள். எலும்புகள் நொறுக்கப்பட்டு நரம்புகள் வெட்டப்பட்டு வழிநெடுகிலும் சிந்தி மீதமுள்ள இரத்தம் வழிந்தோடுகிறது. இப்போது இயேசுவின் உடலோடு சிலுவையைத் தூக்கி நடுகிறார்கள். வானத்துப் பறவைகளுக்கும், காட்டு விலங்குகளுக்கும் அவர் இரையாக வேண்டும் என்பதற்காக. அவருக்கு இரு பக்கத்திலும் கள்வர்கள் இருவர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவன் இயேசுவைக் கேலி செய்கிறான். இன்னொருவன் தனது பாவத்திற்காக மனம் வருந்துகிறான். இன்றே நீ என்னோடு வான்வீட்டிலிருப்பாய் என்று இறக்கும் வேளையிலும் அடுத்தவருக்கு ஆசி வழங்குகிறார் இயேசு.

## சிந்தனை

இயேசுவின் பணியைத் தொடர்ந்தாற்றும் திருஅவை மாந்தன் தன் வாழ்வின் ஒவ்வொரு பருவத்திலும் இறையருளால் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காக அருளடையாளங்களை வழங்குகிறது. அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தனக்குத் துன்பம் கொடுப்போருக்கும் நன்மையையே இயேசு செய்தது போல திருஅவையும் இப்பணியை ஆற்ற அழைக்கப்படுகிறது. மன்னிப்பு கிறித்தவத்தின் மிக முக்கியப் பண்பு. இவ்வுலகில் மிகப்பெரும் அழிவுகள் நிகழாமல் இருப்பதற்கும், பல இனங்கள் பண்பட்டதற்கும் மன்னிப்பு மிக இன்றியமையாதக் கரணியம் ஆகும். "தந்தையே இவர்களை மன்னியும்" என்று இயேசு சொன்னது வெறும் வாய்ச் சொற்கள் அல்ல. இவை அருளின் சொற்கள். ஒப்புரவு அருளடையாளத்தில் பங்கு பெறும் ஒவ்வொருவரும் குரு வழங்கும் மன்னிப்பின் செபத்தால் கடவுளின் இரக்கத்தையும் அருளையும் பெற்றுச் செல்கிறார். இம்மாபெரும் அருளடையாளத்தை மக்களுக்குத் தேடிச் சென்று வழங்குவதும் அதற்காக மக்களை அணியமாக்குவதும் காலத்தின் கட்டாயமாக அமைகிறது. உறவுகள் சுருங்கிப்போன இக்குமுகாயத்தில் இதயங்களை அடைத்துக்கொள்ளும் மாந்தர்கள் ஏராளம் இருக்கிறார்கள். மன்னிப்பின் திறவுகோலைக் கொண்டு அவர்களின் இதயத்தைத் திறக்க கூட்டியக்கத் திருஅவை தனது அருள்பணியாளர்கள் மட்டுமல்லாமல், உடன் தோள்கொடுக்கும் நல்மாந்தர்கள் பலரை ஈடுபடுத்தி தியானங்கள் மற்றும் வழிகாட்டு பயிற்சிப் பாசறைகள் ஏற்படுத்திக் கொடுத்து கருத்துரைகள் வழங்கலாம். பல நேரங்களில் மன்னிப்பவர்கள் ஏமாளிகளாகப் பார்க்கப்படுகிறார்கள். பழிதீர்ப்பது வெற்றியாகக் கொண்டாடப்படுகிறது. இப்படிப்பட்ட போலிக் கொண்டாட்டங்களை பல நேரங்களில் நாம் ஊக்கப்படுத்தியிருப்போம், மன்னிக்க மறுத்திருப்போம். இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

## மன்றாடுவோம்

இயேசுவே! உம்மை சிலுவையில் அறைந்தவர்களையும் நீர் மன்னித்தீர். ஆனால் நாங்கள் எங்களின் தன்மையில் சிறு பகுதியைத் தொட்டாலும் அவர்களை மன்னிக்க மறுக்கிறோம். உம்மைப்போல் நிபந்தனையற்ற மன்னிப்பை பிறருக்கு வழங்க வரம் தாரும். ஆமென்.

## பன்னிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் உயிர்விடுகிறார்

**காட்சி: மத்தேயு 27:45–54**

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே தனது இரண்டு கரங்களையும் விரித்து கள்வர்களுக்கு நடுவே தொங்கிக் கொண்டிருக்கிறார் இயேசு. அவரின் இறப்பைப் பார்த்து மகிழ்ந்து செல்ல நின்ற கூட்டத்திற்கு மத்தியில், அவர் இறைமகன் என்றால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும் என்று இயேசுவின் இறைத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கும் கூட்டத்தில் இயேசுவின் தாய் மரியாவும், அச்சத்தில் நடுங்கிக்கொண்டிருந்த சீடர்களும் நின்று கொண்டிருக்கிறார்கள். அன்னை மரியாவும், யோவானும் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இயேசுவின் பாதத்தருகில் மெல்ல வருகிறார்கள். தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற சிலுவைப் பாடுகளை ஏற்றுக்கொண்டிருக்கிற தனது மகன் இயேசுவின் முகத்தை உற்றுப் பார்க்கிறார் மரியா. தன் சீடர் குழுவை வழிநடத்தவும், எல்லா மக்களையும் பிள்ளைகளாக ஏற்று வழிநடத்தவும் "அம்மா இதோ உம் மகன்" என்று சொல்லி யோவானை அவரின் பொறுப்பில் ஒப்படைக்கிறார். இயேசுவின் அன்புச் சீடர் யோவானும் இயேசுவின் முகத்தை உற்று நோக்க வெட்கப்பட்டு மெல்ல உற்றுப் பார்க்கிறார் "இவரே உம் தாய்" என்று தன் தாயை யோவானின் பொறுப்பில் ஒப்படைக்கிறார் இயேசு. தந்தையின் கைகளில் தன் ஆவியை ஒப்படைக்கும் நேரம் வந்ததும் என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர் என்னும் திருப்பாடல் பாடிவிட்டு "எல்லாம் நிறைவேறிற்று" என்று உரக்கச் சொல்லி உயிர் துறக்கிறார் இயேசு.

### சிந்தனை

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பலன் கொடுக்க முடியும், நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை என்று இயேசு போதித்ததை அவரே செய்தும் காட்டினார். நாம் மீட்படைய இயேசுவின் சிலுவைச் சாவு கட்டாயம் தேவைப்பட்டது. கடவுளின் அன்பின் அடையாளமாக இயேசுவின் சிலுவை அமைந்தது. இப்படிப்பட்ட உண்மையான ஈக அன்பு கூட்டியக்கத் திருஅவைக்குத் தேவைப்படுகிறது. உண்மையான அன்பு இருந்தால் மட்டுமே கொண்ட கொள்கையில் ஒருவரால் நிலைத்து நிற்க முடியும். திருமண வாழ்வில் கணவன் மனைவியாக இணைந்து குடும்ப வாழ்வைத் தொடங்கும் பலர் இடையில் பிரிந்துவிடுவது உண்மையான அன்பு அவர்களுக்குள் இல்லை என்பதையே உணர்த்துகிறது. தாய்த்திருஅவையிலிருந்து பிரிந்து செல்லும் பலர் உண்மையிலே திருஅவையை அன்பு செய்திருந்தால் பிரிந்து சென்றிருக்க மாட்டார்கள். தொழில் தொடங்கும்போது நட்படிப்படையில் ஒன்றாக இணைந்து தொழில் செய்வோர் இடையில் பிரிந்து விடுவது அவர்கள் நட்பில் உண்மையாக இல்லை என்பதை உணர்த்துகிறது. இணைந்து பயணிக்கும் கூட்டியக்கத் திருஅவை கடவுளைத் தந்தையாகக் கொண்டு இவ்வுலகில் உள்ள அனைத்து மக்களையும் சாதி மதம் இனம் மொழி கடந்து பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளும் சமன்மை உறவை நோக்கி பயணிக்கிறது. இப்பயணத்தில் இயேசுவின் இறையாட்சி விழுமியங்களான உண்மை, அன்பு, நீதி, சமத்துவம். சகோதரத்துவம், பகிர்வு, மன்னிப்பு ஆகியவை சீர்மிகு

வழியாக அமைகின்றன. உண்மையான ஈக அன்பு அதிகார வெறியையும், தன்னல ஆசைகளையும், தாழ்வு மனப்பான்மையையும் வெற்றி கொள்கிறது. இந்நிலை உருவாக இயேசுவிடம் வரம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! எல்லையில்லா அன்பினால் எங்களை மீட்டீர். உம் உயிரை இழப்பதற்குக்கூட நீர் தயக்கம் காட்டவில்லை. கூட்டியக்கத் திருஅவையின் உறுப்பினர்கள் என்னும் நிலையில் எங்களோடு உடன் பயணிக்கும் எல்லாரையும் வரையறையற்ற அன்பால் ஏற்றுக்கொள்ள வரம் தாரும். ஆமென்.

---

## பதின்மூன்றாம் நிலை

## அன்னையின் மடியில் இயேசுவின் உடல்

### காட்சி : யோவான் 19:38-40

இயேசு இறந்ததும் அவரின் இறப்பை வேடிக்கை பார்ப்பதற்கும் இழிவுபடுத்துவதற்கும் வந்த கூட்டம் மெதுவாகக் கலைந்து செல்கிறது. இயேசுவின் உயிரற்ற உடல் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இயேசுவின் மீது அன்பு கொண்டிருந்த பெண்கள் தங்கள் மார்பில் அடித்துப் புலம்பிக்கொண்டே தங்களின் வீடு திரும்புகிறார்கள். பாசுகா விழாவுக்கான ஏற்பாடுகள் அப்பகுதி முழுவதும் நடைபெற்றதனால் உடல்கள் சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது என்பதற்காக இயேசுவுக்கு அருகில் சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வர்களின் கால்களை படைவீரர்கள் முறிக்கிறார்கள். இயேசுவுக்கு அருகில் வந்ததும் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என்பதனால் அவரின் கால்களை முறிக்காமல் திரும்பிச் செல்கிறார்கள். ஆனால் படைவீரன் ஒருவன் இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்துகிறான். அங்கிருந்து இரத்தமும் தண்ணீரும் வழிந்தோடுகிறது. மாந்தனும் இறைவனும் ஒன்றாக இணையும் அருளடையாளங்களின் அருட்கொடைகள் அனைத்திற்கும் ஊற்றாக அது அமைந்தது. அரிமத்தியா ஊரைச் சார்ந்த யோசேப்பு இயேசுவின் உடலை அடக்கம் செய்வதற்கான ஒப்புதலை பிலாத்திடம் பெற்று வருகிறார். இயேசுவின் உடல் சிலுவையிலிருந்து இறக்கப்படுகிறது. இறந்த மகனின் உடலை இயேசுவின் தாய் மரியாவின் மடியில் வைக்கிறார்கள். மாடடை குடிலில் பாலன் இயேசுவை சுமந்த அன்னையின் தாய்மடி உயிரற்ற உடலைத் தாங்குகிறது. துயர்நிறை தாயாய் துன்பத்தைத் தாங்கிக்கொண்டு தன் மகனை முத்தமிடுகிறார் மரியா.

### சிந்தனை

துயருற்று அழுது கொண்டிருக்கும் அன்னை மரியாவைத் தேற்றுவோர் யாருமில்லாத நிலையில் துயர்நிறை தாய் இருக்கிறார். இன்றும் இவரைப்போல ஆறுதல் தேடி ஏங்கிக் கொண்டிருக்கும் பெற்றோர்கள், சாய்காலற்றோர்கள், கைவிடப்பட்டோர் அதிகமானோர் உள்ளார்கள்.

இவர்களுக்கான பணியை ஆற்றுவது பயணம் செய்யும் திருஅவையின் மேன்மையான கடமையாகும். வேகமாக சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகின் வேகத்திற்கு ஈடுகொடுத்து உழைத்தால் மட்டுமே இன்று தங்களின் குடும்பங்களை நடத்த முடியும் என்னும் நிலையை சந்தைப் பொருளாதாரம் உருவாக்கிவிட்டதால் இத்தத்துவத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதால் அடுத்தவருக்கான நேரத்தை ஒதுக்குவது எளிதான ஒன்றாக இல்லை. இதனால் பெற்றோரின் உறவில்லாமல் பிள்ளைகள் வளர்கிறார்கள், வளர்ச்சியை எட்டியபின் பிள்ளைகளின் தொடர்பில்லாமல் பெற்றோர் தவிக்கிறார்கள். குடும்ப வாழ்வுக்கான தொடர் பயிற்சியை திருமணத்திற்குப் பின் கணவன் மனைவியரும் பெற்றோரும் பெறுவது கட்டாயமாக்கப்பட வேண்டும். துன்பத்தில் இருப்போரைக் கண்டு அவர்களுக்கு உதவி செய்யும் நல்ல சமாரியன் அமைப்பு எல்லா பங்குகளிலும் உருவாக்கப்பட வேண்டும். ஆற்றுப்படுத்தும் நிலையங்களும் பாவமன்னிப்பு அருளடையாளமும் அடிக்கடி வழங்கும் நிலையும் பெறும் நிலையும் ஏற்பட வேண்டும். அடுத்தவரின் குறையைக் கேட்பதற்கான நேரம் அதிகமாக ஒதுக்கப்படாததால் மனநல மருத்துவமனைகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே செல்கிறது. அலைபேசிகளுக்கு ஒதுக்கும் நேரத்தை, தொலைக்காட்சிக்கு ஒதுக்கும் நேரத்தை, குழுமாய வலைதளங்களுக்கு ஒதுக்கும் நேரத்தை உறவுகளுக்கு ஒதுக்கினால் பலரின் துயர்கள் குறையும். அடுத்தவரின் துயரத்தில் அவர்களைக் கண்டு விலகிச் செல்லாமல், தனியாகத் தவிக்க விட்டுச் செல்லாமல் அவர்களோடு உடனிருந்து ஆறுதல் கொடுக்கும் நல்மனதை இயேசுவிடம் கேட்போம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! பெருஞ்சுமை சுமந்து சோர்ந்து ஆறுதல் தேடி வந்தவர்கள் எல்லோரையும் அரவணைத்து அவர்களின் குறை கேட்டு நிறை அமைதியை அவர்களுக்கு வழங்கி அனுப்பி வைத்தீர். நாங்கள் துன்பத்தில் உள்ளோரை மட்டுமல்ல உறவில் உள்ளோரையும் கண்டுகொள்ளாமல் எங்களின் தேவைகளை மட்டும் தேடி அலைகிறோம். அடுத்தவரும் இணைந்ததே நாங்கள் என்னும் உணர்வைக் கொடுத்து அடுத்தவருக்கு அருகிலிருந்து ஆறுதல் கொடுக்கும் நல்மனநிலையை எங்களுக்குத் தாரும். ஆமென்.

## பதிநான்காம் நிலை

## இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்

**காட்சி :** யோவான் 19:41,42

அன்னையின் மடியிலிருந்த இயேசுவின் உடல் அடக்கத்திற்கான முன்னேற்பாட்டிற்காக எடுத்துச் செல்லப்படுகிறது. அன்னை மரியாவும், அன்புச் சீடரும், மரியாவின் உறவினரும், இயேசுவை அன்பு செய்த பெண்கள் சிலரும் இயேசுவின் அடக்கச் சடங்கிற்கு அரிமத்தியா யோசேப்போடு இணைந்து செல்கிறார்கள். இயேசுவின் உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக அரிமத்தியா யோசேப்பின் தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு

பாறையில் குடைந்தெடுத்த புதிய கல்லறை ஒன்று இருக்கிறது. யூத சமய முறைமைப்படி இயேசுவின் உடலில் நறுமணத்தைலம் பூசப்படுகிறது. வெள்ளைத் துணி கொண்டு இயேசுவின் உடல் இறுக்கமாகக் கட்டப்படுகிறது. உடல் முழுவதும் மறையும்படி வெள்ளைத் துணியைச் சுற்றி கட்டுகிறார்கள். இப்போது இயேசுவின் உடல் கல்லறைக்குள் வைக்கப்படுகிறது. அன்னை மரியாவும் உறவினர்களும் இயேசுவின் உடலை கல்லறையில் வைத்துவிட்டுத் தங்களின் வீடு நோக்கி உயிர்ப்பின் நம்பிக்கையோடு திரும்பிச் செல்கிறார்கள். அரிமத்தியா யோசேப்பு ஒரு பெரிய கல்லைப் புறட்டி கல்லறையை மூடுகிறார். யூதர்களின் வேண்டுகோளுக்கு இணங்க படைவீரர்கள் கல்லறையைக் காவல் காக்கிறார்கள்.

## சிந்தனை

கடவுளின் உருவிலும் சாயலிலும் படைக்கப்பட்ட மாந்தர்கள் எல்லாரும் மாண்புள்ளவர்கள். உயிரோடு வாழும்போது அவர்கள் மாண்புள்ளவர்களாக மதிக்கப்பட வேண்டும், இறந்த பிறகும் அவ்வுடல் மாண்போடு அடக்கம் செய்யப்பட வேண்டும். இயேசுவின் உடல் மாண்போடு அடக்கம் செய்யப்பட்டது. இயேசு பட்டுணர்ந்த கொடிய பாடுகள் அனைத்தும் அவர் மாண்போடு நடத்தப்படவில்லை என்பதை நமக்குக் காட்டுகின்றன. மாந்த வாழ்வில் நாம் சந்திக்கும் அதிகமான சிக்கல்களுக்கு அடிப்படைக் கரணியம் மதிப்பின்மை. அடுத்தவருக்கு உரிய மதிப்பைக் கொடுக்கும்போது அவர் அமைதியாகிவிடுகிறார். கடவுள் கொடுத்த கட்டளைகள் அனைத்தும் இம்மதிப்பை மையப்படுத்தியே அமைந்திருக்கும். அடுத்தவரின் உடைமையைக்கூட மதிப்போடு கையாள வேண்டும் என்று கடவுள் விரும்புகிறார். இணைந்து பயணிக்கும் திருஅவையில் அடுத்தவரின் குரலுக்கு செவிமடுப்பதும், அடுத்தவரின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுப்பதும், அடுத்தவரின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதும் கட்டாயமாகிறது. பல நேரங்களில் தலைமைப் பொறுப்பில் இருப்போர் ஒருசிலவற்றை தீர்மானித்துவிட்டால் அதைக் கட்டாயம் எல்லாரும் கேட்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதே நேரத்தில் உறுப்பினர்கள் ஒருசில பரிந்துரைகளை முன்வைக்கும்போது அது சரியில்லை, ஏற்றுக்கொள்ள முடியாது என்று முட்டுக்கட்டை போடுகிறார்கள். எளியவர்கள் குரல் எங்கும் எடுபடுவதில்லை என்பது பங்கேற்பு அமைப்புகளிலும் உள்ள நிலையாகும். கணவனின் குரல் மட்டுமே வீட்டில் கேட்கப்பட வேண்டும், மனைவி கணவன் சொல்வதை மட்டுமே கேட்க வேண்டும் என்று ஒடுக்கும் நிலை பல வீடுகளில் உள்ளது. பெரியவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது பெண்களுக்கு என்ன வேலை என்று ஒதுக்கும் நிலை சபைகளில் உள்ளது. இந்நிலை மாற இயேசுவிடம் வரம் கேட்போம்.

## மன்றாடுவோம்

இயேசுவே! நீர் உருவாக்கிய இறையாட்சி குழுமகாயத்தில் அனைவருக்கும் உரிய மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்தீர். எல்லாரும் மாண்புள்ளவர்கள் என்று மதித்து ஏற்றுக்கொண்டீர். உம்மைப்போல நாங்கள் இக் குழுமகாயத்திலுள்ள எல்லாரையும் மாண்போடு நடத்த, குறிப்பாக எளியோர், துன்புறுவோரை மாண்போடு நடத்த நல்மனம் தாரும். ஆமென்.

நம் முன்னேற்றத்தின் பாதை

# சிலுவைப் பாதை



கழுமரம் ஒரு மாந்தனுக்கு இறப்பைத் தருவிக்கும். பரந்த தமிழகத்தில் இதன் வடிவம் ஈட்டி போன்ற வடிவம் கொண்ட கூர் மரமாகும். இதில் இறப்புத் தண்டனைக் குற்றவாளியை அமர வைக்க உடல் கிழிந்து சொல்லொன்னா வேதனையில் துடிதுடித்து இறப்பான். ஆனால் சிலுவை என்பது இதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. இதை நாம் அறிவோம், இயேசுவின் இறப்பால். சிலுவைச் சாவு என்பது அசிரியர்கள், பாபிலோனியர்களின் வழக்கத்தில் சிறிது இருந்தது. பாரசீகத்தை, கிரேக்கப் பேரரசை விரிவடையச்செய்த பேரரசன் அலெக்சாண்டர் நண்ணிலக்கடல் பகுதியில் அறிமுகப்படுத்தினான். கிரேக்கர்களை வென்ற உரோமையர்கள் தனது அடிமை நாட்டுமக்களுக்கு சிலுவைத் தண்டனையையும் குடிமக்களுக்கு (எ.கா புனித பவுல்) தலையை வெட்டியும் இறப்புத் தண்டனையைக் கொடுத்தனர். இயேசுவுக்கு பிலாத்து சிலுவைச் சாவைக் கொடுக்கின்றான். இயேசுவின் தோளில் சிலுவை சுமத்தப்பட்டதும் அது வளர்கின்றது அது இயேசு நிலையான நிறைவான பலியை தந்தைக்கு ஒப்புக்கொடுக்க பலிமேடாகின்றது ஆம் மாந்த குலத்தின் மீட்பின் சின்னமாக உயர்கின்றது இதன் வழியில் நாம் சிலுவைப்பாதை சிந்திப்போமா?

அருட்தந்தை மைக்கிள் செகதீசு

முதல் நிலை

## இயேசுவுக்கு சிலுவைத் தீர்ப்பு

**1 சாமுவேல் 16:11**

சாமுவேல் ஈசாயைப் பார்த்து, "உன் பிள்ளைகள் இத்தனை பேர்தானா?" என்று கேட்க, "இன்னொரு சிறுவன் இருக்கின்றான். அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்" என்று பதிலளித்தார் ஈசாய்.

**நிகழ்வு**

அருமையான கத்தோலிக்கக் கிறித்தவக் குடும்பம். அக்குடும்பத்தில் பனிமலர் என்ற ஒரு சிறுவன். அவனை அக்குடும்பத்தில் "கோம்பாசு, கோம்ப பயலே" என்று கேலி செய்வர். அவனுக்குச் சிறப்புப் பாடம் எடுத்த ஆசிரியர் அவன் தாயிடம், "இனி இவனுக்குப் பாடம் எடுக்க மாட்டேன்" என்றார். ஆனால் இன்று அவர் நன்கு கற்று 2 லட்சத்திற்கு மேல் ஊதியம் எடுக்கின்றார். பல பல இளைஞர்களுக்கு வெளிநாட்டில் வேலையும் பெற்றுக் கொடுத்துள்ளார். ஆம், மாந்தத் தீர்ப்புகள் என்று சரியாக இருந்தன?

**சிந்தனை**

இயேசு ஏழு நடுவண் மன்றங்களில் தீர்ப்பிடப்பட்டார்.

1. இயேசு பிறந்தபோது ஏரோது மன்னனின் மனம் என்ற நடுவர் மன்றத்திலே...
2. பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர்களின் மனமென்ற நடுவர் மன்றத்தில்...
3. அன்னா, கயபா என்ற தலைமைக் குருக்களின் பணத்தாசைப் பிடித்த மனமென்ற நடுவர் மன்றத்திலே...
4. இயேசுவை முத்தமிட்டு காட்டிக் கொடுத்த யூதாசின் எண்ணமென்ற நடுவர் மன்றத்திலே...
5. யூதர்களின் தலைமைச் சங்கமென்ற நடுவர் மன்றத்திலே...
6. உரோமை ஆளுநன் பிலாத்தின் நடுவர் மன்றத்திலே.,.
7. ஆம் இறுதி தீர்ப்பு எழுதியது யார்? நம் மூவொரு கடவுள்தான். யாருக்காக? எல்லாம் நமக்காக. நம் ஆன்ம விடுதலைக்காக. கடவுளின் அன்பு என்னவென்று உனக்கும் எனக்கும் ஏன் உலகுக்கே வெளிக்காட்ட.

உன் தீர்ப்புகள் பிறரை உந்தித் தள்ளுகின்றதா? அல்லது, பனிமலர் போல் மாற்றி சிந்திக்கத் தூண்டுகிறதா? நீ உனக்கிடும் தீர்ப்பென்ன?

**இறைவேண்டல்**

அன்பின் இறைவா! தீர்ப்புக்குள்ளாதபடி தீர்ப்பிடாதே என்றுரைத்தீர். ஆனால் மனிதர்களாகிய எங்களின் ஒவ்வொரு வாக்கியமும் தீர்ப்பிடுகின்றவனாகவே இருக்கின்றன. குறிப்பாக நாங்களையே தாழ்வாக மதிப்பீடு செய்யும் தீர்ப்புகளிலிருந்து விடுவித்தருளும். ஆமென்

இரண்டாம் நிலை

## இயேசுவின் தோள்மீது சிலுவை

### தானியேல் (இ) 2:42-43

சூசன்னா உரத்த குரலில் கதறி, "என்றுமுள இறைவா, மறைவானவற்றை நீர் அறிகிறீர். நிகழும் முன்பே எல்லாம் உமக்குத் தெரியும். இவர்கள் எனக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லியுள்ளனர் என்பதும் உமக்குத் தெரியும். இவர்கள் என் மீது சாட்டிய குற்றம் எதுவும் நான் செய்தறியேன். ஆயினும் இதோ, நான் சாக வேண்டி இருக்கிறதே!" என்று சொன்னார்.

### நிகழ்வு

இனியன் என்ற ஓர் இளைஞன் தன் நன்பனைச் சந்திக்க, நண்பனின் கடைக்குச் சென்றான். நண்பனின் கைவிரலில் ஓர் அழகான தங்க கணையாழியைக் கண்டான். அதனைத் தன் நண்பனிடம் இருந்து கழற்றி வாங்கிப் பார்த்துவிட்டு திருப்பிக் கொடுத்துவிட்டான். மறுநாள் நண்பனிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு. "உன்னை நம்பி கழற்றிக்கொடுத்த கணையாழியைத் திருடி விட்டாயே! நான் காவல்துறையை அணுகப் போகிறேன்" என்றான். இனியன் மறைசாட்சி தேவசகாயத்திடம் வேண்டினான். கடையைப் பெருக்கி பார்க்கச் சொன்னான். அதற்கு நண்பன் நான் பலமுறை கூட்டிப் பெருக்கி விட்டேன். ஒன்றும் காணவில்லை. நீதான் திருடி விட்டாய்" என்றான். இனியன் கடைக்கு விரைந்தான். "இப்பொழுது கூட்டிப் பெருக்கு" என்றான். இனியன் மீது சுமத்தப்பட்ட திருட்டுப் பழி நீங்கியது. நண்பன் முகம் வீழ்ந்தது. இனியன் மறைசாட்சி தேவசகாயத்திற்கு நன்றி சொன்னான்.

### சிந்தனை

தலையில் சுமை இருந்தால் அது சில மணி நேரம். வயிற்றில் சுமை இருந்தால் அது பத்து திங்கள்கள். புத்தகப்பையில் சுமை இருந்தால் அது சில மணித்துளிகள். உள்ளத்தில் சுமை இருந்தால் மாந்தன் என்ன ஆவது? "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்" என்ற நமது சுமைகளின் சுமைதாங்கியான இயேசுவின் தோள்களில் பளுவான சிலுவையைச் சுமத்துகிறார்கள். இச்சிலுவையானது இயேசுவின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளன. ஆம், சூசன்னாவின் மீது பொய்ச்சான்று சுமத்தி இறப்புத் தண்டனையைச் சுமத்தினர். அவளோ ஆண்டவரை நோக்கிக் குரல் எழுப்பினாள். அவள் சுமை இறங்கியது, இனியனின் சுமையைப்போல. ஆனால் இயேசுவின் சிலுவை கல்வாரியில் தானே இறக்கப்பட்டது. ஏன்? ஏன்? எல்லாம் உன் மீட்புக்காக, உன் வளர்ச்சிக்காகத் தானே.

### இறைவேண்டல்

அன்பின் இறைவா! எங்கள் சுமைகளைச் சுமப்பேன் என்றுரைத்தவரே! நாங்கள் எங்கள் மீது பிறர் பழிச்சுமை சுமத்தும் போதும் படிப்பு என்ற சுமை, குடும்பச்சுமை, குமுகாயச் சுமை போன்றவற்றில் சோர்ந்து விழுந்து விடுகின்றோம். அவ்வாறு இல்லாமல் இறைத்துணையுடன் எழ முடியும் என்று குரல் எழுப்பிய சூசன்னா, இனியன் போல வாழ இறைக் கொடையைத் தாரும்.

## மூன்றாம் நிலை

## இயேசு முதன்முறை சிலுவையோடு வீழ்கிறார்

### மத்தேயு 21:28-29

ஒரு மாந்தனுக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். அவர் மூத்தவரிடம் போய், 'மகனே, நீ இன்று கொடிமுந்திரி தோட்டத்திற்குச் சென்று வேலை செய்' என்றார். அவர் மறுமொழியாக, 'நான் விரும்பவில்லை' என்றார். ஆனால் பிறகு தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு போய் வேலை செய்தார்.

### நிகழ்வு

தமிழ் என்ற இளைஞன் தமிழ் வழியில் கற்றவன். ஒரு பொறியியல் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு முடித்திருந்தான். ஆறு பாடங்களில் தோல்வியுற்றிருந்தான். வீட்டில் சொன்னார்கள்: "இனி உனக்குப் புதிய உடைகள் கிடையாது. நான்காம் ஆண்டில் முழுமையாக வெற்றி பெற்றால் உனக்கு வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவோம்" என்று. படிப்பது கடினம் என்ற தனது எண்ணத்தை, முடியும் என்று மாற்றினான். வெற்றியும் பரிசுகளும் பாராட்டுகளும் குவிந்தன.

### சிந்தனை

இயேசு ஓர் ஏழை. இப்பொழுது அவரது உடலும், உணவும் தண்ணீருமின்றி ஓர் ஏழை உடலாக மாறிவிட்டது. சிலுவையின் சுமை தாங்காமல் குன்றியவராக கீழே விழுகிறார். முரடர்கள் மனச்சான்று இல்லாமல் தாக்குகிறார்கள். ஆனால் இயேசு தனது சொந்த முயற்சியால் ஏறுகின்றார். இதுவும் இயேசு நமக்குக் கற்றுத் தருகின்ற ஒரு பாடமாகும். குடிபோதையில் எத்தனையோ பேர் வீழ்ந்து கிடக்கின்றார்கள். அதிலிருந்து விடுபட நம்பிக்கையுடன் முயற்சிக்கின்ற அவர்கள் விடுதலை அடைகின்றனர். பள்ளி, கல்லூரி மாணவர்களில் சிலர் சிறு தோல்விகளிலும் சோர்ந்து விழுந்து விடுகின்றார்கள். நம்மில் எத்தனைப்பேர் தமிழ் இளைஞனைப்போல் தன்னம்பிக்கையுடன் எழுந்து இருக்கின்றோம்? சிந்திப்போம்.

### இறைவேண்டல்

அன்பின் இயேசுவே! நீர் நம்பிக்கையுடன் மாந்தர் வாழ வேண்டும் என்றும், இறை நம்பிக்கையுடன் முயன்றால் வெற்றி உண்டு என்றும் எண்பித்துள்ளீர். நாங்களும் மூத்தமகன் போல "மாட்டேன், முடியாது" என்ற எண்ணத்திலிருந்தும் மனப்பான்மையில் இருந்தும் விடுதலை பெற அருள் புரியும். ஆமென்.

நான்காம் நிலை

## இயேசு தன் தாயைச் சந்திக்கின்றார்

### லூக்கா 1:26

ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது.

### நிகழ்வு

இரண்டு சிறுவர்கள் தாங்கள் திருடிய முட்டைகளைத் தங்கள் அன்னையர்களிடம் கொடுத்தார்கள். தாய் நல்லெண்ணெயில் முட்டைகளைப் பொரித்துக் கொடுத்தார். இன்னொரு தாய் முட்டைகளை வேப்ப எண்ணையில் பொரித்துக் கொடுத்தார். அவனோ தொடக்கத்திலேயே திருந்தி ஒரு பெரிய மாந்தன் ஆனான். மற்றவனோ மிகப்பெரிய திருடனாக, கொலைக் குற்றவாளியாக இறப்புத் தண்டனையைப் பெற்றான். அவன் தனது கடைசி ஆசையாக, தன் தாயைச் சந்தித்தபோது அவரது மூக்கை கடித்துத் துப்பினானாம்.

### சிந்தனை

இயேசுவின் கைதைக் கேள்வியுற்ற அன்னை மரியாள் ஓடோடி வருகின்றார். இங்கே மகன் சிலுவையைச் சுமக்கின்றார். மரியாள் தன் மகனை நன்கு அறிவாள். இயேசு சிலுவை மூலம்தான் உலகை மீட்பார் என்று தனது மகன் சிலுவை வழி வரும் மீட்பை முன்னரே தனக்குத் தந்துவிட்டார் என்பதை அறிந்திருந்தார். எனவே இயேசுவின் சிலுவைப் பாதைக்குத் தடைபோட மரியாள் வரவில்லை. மாறாக, தன் மகனைச் சந்திந்து இறைப்பணி தொடர ஊக்கப்படுத்துகின்றார். நாம் சற்று சிந்திப்போம். நாம் நம் பிள்ளைகள், பொதுப் பணிகளை பிறருக்கு விடுதலையை, வளர்ச்சியைத் தரும் பணிகளைச் செய்யும்போது ஊக்கப் படுத்துகின்றோமா? அல்லது வாழத் தெரியாதவன், பிழைக்கத் தெரியாதவன் என்று வசை கூறுகின்றோமா?

### இறைவேண்டல்

கண்டித்துத் தண்டித்து எம்மைத் திருத்தி நேரிய வழியில் எம்மை நடத்தும் இறைவா! நாங்கள் எங்கள் பிள்ளைகளை உமக்கு உரியவர்களாக வளர்க்க, கண்டித்துத் திருத்தும் மனப்பக்குவத்தை எங்களுக்குத் தாரும். ஆமென்.

ஐந்தாம் நிலை

## சீமோன் உதவி செய்கிறான்

### லூக்கா 10:34

சமாரியன் அவரை அணுகி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டு போய் அவரைக் கவனித்துக் கொண்டார்.

### நிகழ்வு

உலகநாதன் என்ற ஓர் இளைஞன். அவன் சற்று ஏழை. அவனது பெற்றோர் அவனை வெளியூரில் ஒரு கல்லூரியில் படிக்க வைத்தார்கள். அவனோ தனக்குக் கிடைக்கும் சிறிய பணத்தைக் கொண்டும் பிறரின் உதவியுடனும் மிகவும் ஏழைகளான இரு மாணவ மாணவியை தொழில்சார் கல்வியைப் படிக்க வைத்தான். அப்பொழுது அவனது நண்பர்கள் கூறினார்கள்: "நீயே ஏழை! பின் ஏன் இவர்களை உயர்த்த விரும்புகிறாய்?" அதற்கு உலகநாதன் சொன்னான்: "ஆம், நீங்கள் மண்ணகப் பார்வையில் பார்க்கின்றீர்கள். நானோ, விண்ணகப் பார்வையில் பார்க்கின்றேன். கடவுள் எனக்கு அனைத்தையும் தொடர்ந்து தருவார்" என்றார்.

### சிந்தனை

செய்யும் உதவிகள் தலைகாக்கும்; தக்க நேரத்தில் உயிர் காக்கும். இயேசு மத்தேயு நற்செய்தியில் யாருக்கு விண்ணகம் என்று சொல்கிறார்: பிறருக்கு பலன் எதிர்பார்க்காமல் உதவி செய்கின்றவர்களுக்குத் தான் என்கிறார். நல்ல சமாரியன் காயப்பட்டவனுக்கு உதவி செய்யத் துணிந்த போது தனது பயணத்தின் இலக்கைத் துறந்து பிறருக்கு உதவி செய்வதில் மன நிறைவு அடைகின்றான். இச்செயலினால் அவன் இறையாசீரை முழுமையாகப் பெற்றுக் கொள்கிறான். ஆம், உலகநாதன் இன்று நல்ல நிலையில் இருக்கின்றான். சிந்திப்போம். நாம் பிறருக்கு சிறிது உதவி செய்யும் போது இறைவன் நம்மை நூறு மடங்கு உயர்த்துவார்.

### இறைவேண்டல்

அன்பின் இறைவா! நாங்கள் துன்பப்படும் போதும் தேவைகளில் இருக்கும் போதும் பிறர் நமக்கு உதவ மாட்டார்களா என்று ஏங்கித் தவிக்கின்றோம். உதவி கிடைத்தால் மகிழ்கின்றோம். நன்றி மறந்தவர்களாக இருக்கின்றோம். இந்நிலை மாறிட பிறருக்கு உதவிடும் கார்முகில் போல அருள் தாரும்.

## ஆறாம் நிலை

## இயேசுவின் முகத்தைப் பெண் ஒருவர் துடைக்கின்றாள்

### லூக்கா 7:38

இயேசுவுக்குப் பின்னால் கால்மாட்டில் வந்து பாவியான பெண் அழுது கொண்டே நின்றார். அவருடைய காலடிகளை தம் கண்ணீரால் நனைத்து தம் கூந்தலால் துடைத்து தொடர்ந்து முத்தமிட்டு காலடிகளில் நறுமணம் பூசினார்.

### நிகழ்வு

தூய அன்னை தெரசா அவர்கள் மதமாற்றம் செய்கின்றார் என்ற குற்றச்சாட்டானது அவரது வாழ்வில் பல முறைகள் வைக்கப்பட்டன. எனவே இது உண்மையா என்று அறிய பலமுறைகள் பல தலைவர்கள் அவருடைய இல்லங்களைச் சந்தித்துள்ளார்கள். அங்கு அவரும் அவருடைய அருட்சகோதரிகளும் முதியோரைக் குளிக்க வைத்து துப்பரவு செய்து மற்றும் தொழுநோயாளிகளின் புண்களைத் துடைத்து மருந்திடுவதைக் கண்டு, செய்வது மதமாற்றப் பணி அல்ல; மாறாக, மாந்த நேயப் பணி, அன்புப் பணி என்று வியந்து சென்றுள்ளார்கள்.

### சிந்தனை

இயேசு பெருஞ்சுமையான சிலுவையைச் சுமந்து கொண்டு மக்கள் நடமாட்டம் நிறைந்த தெரு வழியாகச் செல்கின்றார். உடல் முழுக்க வியர்வைப்படுகின்றது. முள்முடியும் தடியடியும் ஏற்படுத்திய செந்நீர்க் கழிவுகளால் முகம் குருதியுடன் காய்ந்து பொலிவின்றி காணப்படுகின்றது. அப்பொழுது ஓர் இளம்பெண் அங்கு வந்தாள். ஓர் அழகான துணியால் இயேசுவின் முகத்தை துடைத்துத் தெளிவுறச் செய்கின்றார். இதனால் இயேசுவின் பயணத்தில் முன்னேற்றம். அந்த இளம்பெண் வாழ்விலும் அழியாப்புகழ் வந்து சேருகின்றது. அன்று இயேசுவின் காலடிகளைத் தண்ணீரால் துடைத்துத் தன் கூந்தலால் துடைத்த பெண்ணின் வாழ்விலும் ஒரு மாற்றம், முன்னேற்றம் ஏற்படுகின்றது. தனக்கென வாழ்வோர் வரலாற்றில் நிற்பதில்லை. தூய அன்னை தெரசா போலப் பிறர் வாழப் பணி செய்து வாழ்பவர் என்றுமே வாழ்கின்றனர். சிந்திப்போம்... நாம் எப்படி?

### இறைவேண்டல்

அன்பின் இறைவா! எங்கள் ஊர் திருவிழாக்களிலும் பொது நிகழ்வுகளிலும் எங்களையே நாங்கள் முதன்மைப்படுத்திக் கொள்வதில் மகிழ்கின்றோம். ஒரு நாய் அடிபட்டால் கூட அதற்கு உதவுவது போல நடிக்கிறோம். ஆனால் ஒரு மாந்தனின் துன்பத்தில், திடீர் இடர்களில் உதவ முன்வருவதில்லையே...! இறைவா! ஈழப் படுகொலைகள் போலப் பல இனப்படுகொலைகள் எங்கள் காலத்தில் நடந்தும் அதனைத் தடுக்கும் மாந்த நேயமில்லா தன்மைக்காக எங்களைப் பொறுத்தருளும். ஆமென்.

ஏழாம் நிலை

## இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

### 2 சாமுவேல் 11:14-15

காலையில் தாவீது யோவாபுக்கு ஒரு மடல் எழுதி, அதை உரியாவின் கையில் கொடுத்து அனுப்பினார். அம்மடலில் அவர், "உரியாவைப் போர் கடுமையாக நடக்கும் முன்னிலையில் நிறுத்தி அவனை விட்டுப் பின்வாங்கு. அவன் வெட்டுண்டு மடியட்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

### நிகழ்வு

ஏழைக் கைம்பெண் ஒருவருக்கு ஏழு குழந்தைகள். வறுமை. எனவே பலரின் உதவியை நாடினார். உதவும் உறவுகளும் இல்லை. சற்று கற்றவராக இருந்ததால் நல்ல வேலைக்கு முயன்றார். ஒரு வேலை கூட கிடைக்கவில்லை. ஆனால் மனம் சோர்ந்து விடவில்லை. நீ ஏன் அம்மா அரசு வேலைவாய்ப்புத் தேர்வுகள் எழுதக் கூடாது என்று பங்குப்பணியாளர் நினைவூட்டினார். "தந்தையே! என்னால் முடியுமா?", "ஆம், உன்னால் முடியும்" என்றார். முயன்றார் அப்பெண். சாண் ஏறினால் முழம் வழுக்கியது. ஆனால் தொடர்ந்து முயன்றார். அரசு வேலை பெற்றார்.

### சிந்தனை

இயேசு சிலுவையுடன் நடந்த தூரம் பல புதுகற்கள் தூரம் அல்ல. மாறாக குறைவுதான். மாந்தனுக்கு உணவுகளான தண்ணீர், காற்று, கதிரவனின் ஒளி மற்றும் திட உணவுகள் தேவை. ஆனால் இவற்றில் எதுவுமே இயேசுவுக்கு கடந்த 14 மணிநேரத்தில் கிடைக்கவில்லை. போதாத குறைக்கு செந்நீர் வியர்வை. கெத்சமனி தோட்டத்தில் இயேசுவின் உடல் தளர்கின்றது. மானிட மீட்பு என்ற இலக்கு உந்துகிறது. ஆனாலும் இரண்டாம் முறையாகக் கீழே விழுகிறார். ஆனால் கல்வாரி நோக்கி இயேசு எழுகின்றார். ஆனால் தாவீது உரியாவின் மனைவியுடன் செய்த குற்றத்தை மறைக்க மேலும் மிகப்பெரிய குற்றத்தைச் செய்ய முடிவெடுத்து, அதில் வெற்றியும் பெற்றுவிட்டான். நாம் சற்று சிந்திப்போம். நம் தவறுகளை மறைக்க நாமும் பல குற்றங்களைச் செய்யவில்லையா?

### இறைவேண்டல்

குறிக்கோள் உள்ள உயிர்கள் தோல்வியை ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை. ஆனால் ஆறாம் அறிவு உள்ள மாந்தர்களாகிய நாம் சிறு தோல்வியிலும் சுருண்டு விழுந்து விடுகின்றோம். இந்நேரங்களில் இயேசுவைப்போல எழுவதற்கும் நம்பிக்கையுடன் முயன்ற கைம்பெண் போலவும் வாழ அருள்தாரும் ஆண்டவரே. ஆமென்.

எட்டாம் நிலை

## அழுது பின் வந்த பெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகின்றார்

### லூக்கா 8:2-3

பொல்லாத ஆவிகளினின்றும் நோய்களினின்றும் குணமான பெண்கள் சிலரும் ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மகதலா மரியாவும்....... யோவண்ணாவும் சூசன்னாவும் அவரோடு இருந்தார்கள். இவர்கள் தங்கள் உடைமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

### நிகழ்வு

அருள்பணியாளர் ஒருவர் தனது பங்குத்தளத்தில் தன்னால் முடிந்த அளவு பணி செய்தார். ஒரு ஞாயிறு திருப்பலியில் நன்மை கொடுத்து முடித்தப்பின்பு பொதுவான அறிக்கையைச் சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென ஒரு மாந்தன் பின்னிருந்து கத்திக்கொண்டே பலிமேடையை நோக்கிப் பங்குப் பணியாளருக்கு எதிராகத் திட்டிக் கொண்டே வந்தான். அப்பொழுது ஒரு பெண் அம்மாந்தனுக்கு எதிராகவும், பங்குப்பணியாளருக்கு சாய்கலாகவும் குரல் கொடுத்தார். உடனே பிற பெண்களும் அவ்வாறு செய்ய, பங்குப் பணியாளர் அம்மக்களைத் தேற்றி ஆறுதல் மொழி அருளினார்.

### சிந்தனை

பெண் விடுதலைக்காகப் பலர் பேசியிருக்கலாம். ஆனால் அதனை அவர்கள் கடைப்பிடித்தார்களா? இல்லை என்றே சொல்ல வேண்டும். ஆனால் இயேசு பெண்விடுதலையைத் தன் வாழ்க்கையில் செயல்படுத்தியவர். எனவேதான் பெண்களையும் தனது சீடர்களாகவும், நற்செய்தியின் தூதுவர்களாகவும் ஏற்படுத்தினார். உயிர்ப்புக்குப் பின் மகதலா மரியாவுக்குத் தானே தன்னை முதன்முதலில் வெளிப்படுத்தினார். இதோ தனக்காக வாழாத இறைமகன் இயேசு, தனது கொடிய துன்பத்திலும், அழுகின்ற பெண்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டுகிறார். உலகையே வியப்பில் ஆழ்த்துகிறார். பெண்கள் ஒரு மிகப்பெரிய ஆற்றல். பெண்கள் பங்கேற்காத எந்த ஒரு போராட்டமும் வெற்றி பெறாது. பெண்களின் ஈடுபாடு இல்லாத எந்தக் குடும்பமும் முன்னேறாது. ஆம், பங்குப் பணித்தளத்தில் அடித்தளமே பெண்கள் தானே. ஆண்களே! அன்று மடக்கி நிறுத்தியது அந்தப் பெண்களின் ஒட்டுமொத்த குரல் தானே? இன்று உன் தாய்க்கு, மனைவிக்கு, உடன்பிறப்புகளுக்கு உன்னில் எந்த இடத்தைக் கொடுக்கின்றாய்?

### இறைவேண்டல்

ஆறதலின் ஊற்றே எம் இறைவா! கொடிய வேதனைகளிலும் நீர் பெண்களின் குரல் மதித்தீரே. எம் இயேசுவே! நாங்கள் பெண் விடுதலையை மதிக்கவும், விடுதலைப் பெண்களின் பெண்மையைப் போற்றவும், தமிழர் தம் பண்பாட்டைத் தங்கள் நடை, உடை, செயல்களில் காக்கவும் அருள்தாரும்.

ஒன்பதாம் நிலை

## மூன்றாம் முறை கீழே விழுகிறார்

### மத்தேயு 26:75

"சேவல் கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று இயேசு கூறியதைப் பேதுரு நினைவு கூர்ந்து வெளியே சென்று மனம் நொந்து அழுதார்.

### நிகழ்வு

பங்குத்தந்தை ஒருவர் தனது பழைய பணித்தளத்தைச் சார்ந்த, கற்கும் ஆர்வமுடைய இளம் பெண்ணுக்காக ஒரு கத்தோலிக்க துறவு அவையினர் நடத்தும் கல்லூரியில் முதுகலை ஆங்கிலப் பாடத்தில் ஓர் இடம் கேட்டு, தனது நண்பர் குருவை அழைத்துச் சென்றார். ஒருமுறையல்ல 7 முறைகள். ஏழு முறையும் கல்லூரி முதல்வர் "முடியவே முடியாது" என்றார்கள். கரணியம் அந்த மாணவி இளங்கலையில் வெறும் 49 விழுக்காடு மட்டுமே. இருப்பினும் முன்னாள் பங்குத்தந்தைக்கு வருத்தம். இருப்பினும், கூட வந்த அருள்பணியாளர் அந்தக் கல்லூரி முதல்வரிடம் சொல்வார்: "லூக்கா 18:1-9ல் வரும் கைம்பெண் போல வெற்றி கிட்டும்வரை வருவோம்" என்று. அவர்கள் எட்டாவது முறை சென்ற போது கல்லூரி முடிவுகளையும் மீறி முதுகலை ஆங்கிலம் கொடுத்தார்கள்.

### சிந்தனை

குறிக்கோளில் தெளிவு இருந்தால் வெற்றி உறுதியாகும். அதற்காக, இடையூறுகள் வராது என்று அல்ல; மாறாக, தடைகள் வெற்றியின் படிக்கட்டுகளாக மாறிவிடும். பயணத்தில் தொடக்கம் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் இறுதியிடத்தை நெருங்கும் போது பயணம் கடினமாகத்தான் இருக்கும். இதனை நடை பயணிகள் அனைவரும் நன்கு அறிவார்கள். இறுதி வரை நிலைத்து நிற்பவன் பேறு பெற்றவன் என்று இயேசு கூறுகின்றார். எருசலேம் கோட்டைச் சுவரை இயேசு கடந்துவிட்டார். கண்களை உயர்த்திப் பார்க்கின்றார். கல்வாரி முகடு தெரிகின்றது. இதோ என்பதற்குள் மூன்றாம் முறையாக கீழே சிலுவையுடன் விழுகின்றார். உள்ளம் ஊக்கமுடையதுதான். ஆனால் உடல் வலுவற்றது. ஆம், இயேசுவும் இதற்கு அப்பாற்பட்டவரா? தனது அனைத்து வலுவையும் ஒன்று சேர்க்கின்றார். ஏறுகின்றார். நாம் எப்படி?

### இறைவேண்டல்

அன்பின் இறைவா! எம் ஆண்டவரே! என் இயேசுவே! நீர் கல்வாரியில் உம்மையே பலியாக ஒப்புக் கொடுக்க முன்வந்தபோது, எத்தனைத் தடைகள்? நீர் முயன்றீர். யாருக்காக? எல்லாம் எங்களுக்காகவே! நாங்கள் கத்தோலிக்கப் பள்ளிகளில், கல்லூரிகளில் குறைந்த மதிப்பெண்களுடன் தொடர்ந்து முயன்று வெற்றிப் பெறாமல் துறவிகளைக் குறைகூறுகின்றோம். இந்நிலை எங்களில் மாற அருள்புரியும். ஆமென்.

பத்தாம் நிலை

## இயேசுவின் ஆடைகள் பறிக்கப்படுகின்றன

### லூக்கா 15:22

தந்தை தன் பணியாளரை நோக்கி, 'முதல்தரமான அலைகளைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்துங்கள்; இவனுடைய கைக்கு மோதிரமும் காலுக்கும் மிதியடியும் அணிவியுங்கள்'.

### நிகழ்வு

ஈழத்தில் 18.05.2009ல் ஓயாத அலைகள் போன்ற ஈழத்தின் விடுதலைப் போரை பல நாடுகளின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசு முடிவுக்கு கொண்டு வருகின்றது. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள், இளம் பெண்களைக் காணவில்லை. சில குறுந்தகடுக் காட்சிகள் மற்றும் தனியார் ஊடகங்கள் காண்பித்த காட்சிகள் இளைஞர்கள் ஆடைகள் பறிக்கப்பட்டு கைகள் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்படுகின்றனர். ஓ! கொலைக்கு முன் ஆடை பறிப்பு ஒரு நிகழ்வோ?

### சிந்தனை

கடவுளுக்கு எதிராகக் குற்றம் செய்த ஏவாளும் ஆதாமும் கடவுளின் முன்னிலையில் இருந்து ஒளிந்து கொண்டனர். அவர்கள் தங்களுக்கென்று செய்துகொண்டவை இலை தழையினாலான ஆடைகள். ஆனால் கடவுள் செய்து கொடுத்ததோ அழகான தோல் ஆடைகள். ஊதாரி மகன் அன்று உடுத்தியிருந்தது கந்தல் ஆடை; ஆனால் தந்தை அணிவித்ததோ புத்தாடை. ஆம், கடவுள் நம்மை நல்ல ஆடைகளில் தான் காண வருகின்றார். ஆனால் மாந்தன் இறைமகனைக் கொலை செய்வதற்கு முன் ஆடைகளைப் பறித்துத் தன்மானக் கொலை செய்கின்றார்கள். இயேசுவின் ஆடைகள் பறிக்கப்பட்டதால் வருந்தும் நீ..... உன் பெற்றோருக்கு ஆடை எடுத்துக் கொடுக்கிறாயா? உன் வாழ்நாட்களில் எத்தனை ஏழைகளுக்கு ஆடைகள் வாங்கிக் கொடுத்திருப்பாய்? உன் கண்முன் நடந்த இலங்கையின் முதற்குடியாம் தமிழ் குடிக்கு எதிரான கொடுமையை உன் ஊனக் கண்களால் கண்டாயே, என்ன செய்தாய்?

### இறைவேண்டல்

"நான் ஆடையின்றி இருந்தேன். எனக்கு ஆடை கொடுத்தாய்" என்று விண்ணகத்தைப் பரிசாகக் கொடுத்த என் இயேசுவே! நான் எங்கள் ஆடைகளால் பிறருக்கு இடறலாக இல்லாமலும் அவர்களுக்கு ஆடை தைத்து போடும் நாங்கள் ஏழைகளுக்கு ஆடையாகும் அருள்புரியும். ஆமென்.

பதினொன்றாம் நிலை

## இயேசுவை சிலுவையில் அறைதல்

### லூக்கா 15:29-30

மூத்த மகன் தந்தையிடம், 'பாரும், இத்தனை ஆண்டுகளாக நான் அடிமை போன்று உமக்கு வேலைசெய்து வருகின்றேன். உம் கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை. ஆயினும், என் நண்பரோடு நான் மகிழ்ந்து கொண்டாட ஓர் ஆட்டுக் குட்டியைக்கூட என்றுமே நீர் தந்தது இல்லை. ஆனால் விலை மகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளை எல்லாம் அழித்து விட்ட இந்த உம் மகன் திரும்பி வந்த உடனே, இவனுக்காகக் கொழுத்தக் கன்றை அடித்திருக்கிறீரே!' என்றார்.

### நிகழ்வு

ஒரு நாட்டின் உச்ச நீதிமன்றம் சொல்கின்றது குற்றம் சுமத்தப்பட்டு நீண்ட ஆண்டுகள் தண்டனை பட்டுணர்ந்து விட்ட அவர்களை மாநில அரசு விடுதலை செய்யலாம். அப்படியென்றால் முதலில் அவர்கள் மீது சுமத்தப்பட்டது பொய்க்குற்றமா? இரண்டாவது மாநில முதல்வர்கள் விடுதலை செய்யாதது ஏன்? மூன்றாவது மாநில ஆளுநர் அதன் உண்மையைக் கண்டறியாதது ஏன்? இச்சூழலில் அம்மாந்தர்களின் நிலைதான என்ன?

### சிந்தனை

இயேசுவைச் சிலுவையில் 3 ஆணிகளால் மிகவும் கொடுமையாக அறைகின்றார்கள். இப்போது இயேசுவை ஒரு மானிட உயிராகக் கொலைத் தொழிலாளர்கள் பார்க்கவில்லை. மாறாக ஒரு பொருளாகப் பார்க்கின்றனர். ஒரு கொத்தனார் கட்டிடம் கட்ட, செங்கலை உடைப்பது போல இயேசுவின் உடலையும் உடைத்துத் துளைக்கின்றனர். இயேசுவை இன்று நாம் எவ்வாறு ஆணிகளால் துளைக்கின்றோம், தெரியுமா?

1. ஊதாரி மகன் உவமையில் வரும் மூத்த மகன் போல நாம் நம் பெற்றோரின் அன்பை ஈகத்தை உணராது கொடும் சொற்களை வீசும் போது...

2. அறமற்ற முறைகளில் குற்றம் சாட்டப்பட்டு எளிய மக்கள் சிறையில் அடைக்கப்படும் போது நாம் கண்டும் கண்டுகொள்ளாத போது...

3. கத்தோலிக்கக் கிறித்தவர்களாக இருந்துகொண்டு திருவிவிலியத்தை இன்னமும் ஒரு முறை கூட படிக்காமல் வணிகக் கூட்டத்தோடு சேர்ந்து உன் முன்தலைமுறைக் இறைநம்பிக்கையை கேலிக்கூத்தாக மாற்றும் போதும் நீ இன்று இயேசுவை 3 ஆணிகளால் அறைந்து கொண்டே இருக்கின்றாய்.

### இறைவேண்டல்

அன்பின் இறைவா! உமது இறை அன்பை என் மீது நீ கொண்ட அக்கறையை உணராததற்காகவும் என் பெற்றோரின் நல்லெண்ணத்தை உணராத, இதயமற்றத் தன்மைக்காகவும் கண்ணிருந்தும் குருடர்களாக மாந்தநேயம் இல்லாதவர்களாகவும் வாழ்ந்து வரும் என் குற்றங்களைப் பொறுத்தருள இயேசுவின் ஈகம், உவந்தளிப்பு, அன்பையும் உணர அவரில் வளர அருள்தாரும். ஆமென்.

## பனிரெண்டாம் நிலை

## இயேசு சிலுவையில் உயிர் விடுதல்

### திருத்தூதர் பணிகள் 7:59-60

அவர்கள் ஸ்தேவான் மீது கல்லெறிந்த போது அவர், "ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டார். பின்பு முழந்தாள் படியிட்டு உரத்தக் குரலில், "ஆண்டவரே, இந்தக் குற்றத்தை இவர் மேல் சுமத்தாதேயும்" என்று சொல்லி உயிர்விட்டார்.

### நிகழ்வு

ஈழத்து மண்ணின் மக்களின் படுகொலைகள் உலகம் அறிந்த உண்மை. அனைவரும் தங்களின் சொந்த மண் விடுதலை பெறும் என்ற நம்பிக்கையில்தான், உயிரை போர்க்கருவியாக்கினார்கள். இதுபோல திரு. கிட்லரின் நாசி பாசறைகளில் யூதர்கள் மற்றும் எளிய மக்கள் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டனர். அதில் ஒரு கொடுமை என்னவென்றால் ஒரு கைதி தப்பினால் அதற்காக ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் முகாமில் இருப்பவர்கள் கொல்லப்படுவார்கள். சீட்டு ஒரு குடும்பத் தலைவரின் பெயரில் விழுந்தது. அவன் ஐயோ! எனக்கு மனைவி, மக்கள் உள்ளார்கள். நான் நேர்மையற்ற முறையில் கொல்லப்படுகின்றேனே! எனக் கதறி அழுதான். அப்பொழுது அருட்பணி. மாக்சிமிலியன் கோல்பே "அவரை விடுங்கள்! அவருக்குப் பதில் என்னைக் கொல்லுங்கள்" என்று கூறியதோடு தனது உயிரையும் கொடுத்தார்.

### சிந்தனை

இழப்புகள் இன்றி பெறுதல்களில்லை. மூவொரு இறைவனின் குடும்பத்தில் இரண்டாம் ஆளாகிய இயேசுவையே மாந்த இனத்தின் மீட்புக்காக இறைமைப் பண்பு கொடுத்தது. அதுவும் மாந்தனாகப் பிறந்து அடிமையின் தன்மை பூண்டு நமக்காகத் தானே குருவாகவும் பலிப்பொருளாகவும் சிலுவைப் பலி மேட்டில் ஒப்புக்கொடுத்தார் ஆண்டவர் இயேசு. எதற்காக? எல்லாம் நம் விடுதலை வாழ்வுக்காக. நம் மாந்த மாண்பு மிளிர வேண்டுமென்பதற்காக. அதை நாம் உணர்ந்திருக்கிறோமா? ஒருவன் ஏழையாகப் பிறப்பது அவன் குற்றமில்லை. ஆனால் ஏழையாக இறப்பது அவன் குற்றமாகும். உயிரற்ற பொருள் சிலுவை. அச்சிலுவை இயேசுவை உயர்த்தியது. இயேசுவும் உயிரற்றத் தனது உயிரைக் குடித்த சிலுவையை உயர்த்தினார். நீ உயிர் உள்ளவன். உன் வாழ்வில் எத்தனைப் பேரை உயர்த்தி இருக்கின்றாய்? குறைந்தது நீ உன்னை ஆவது உயர்த்தி இருக்கின்றாயா? சிந்திப்போம்.

### இறைவேண்டல்

அன்பு இறைவா! ஒரு நாட்டின் விடுதலை என்பது பல ஈகிகளின் உயிர் ஈகமே. ஒரு திருமறையின் வளர்ச்சியும் விடுதலை இயல்பும் பல மறைச்சான்றாளர்களின் உயிர் ஈகமே. இதை நாங்கள் உணராமல் இருக்கிறோம். நாங்கள் எங்களையும் உயர்த்தி பிறரையும் உயர்த்தாமல் பிறர் வாழ்வை எடுப்பவர்களாக இருக்கின்றோம். இந்நிலை மாற அருள்தாரும். ஆமென்.

பதிமூன்றாம் நிலை

## தாயின் மடியில் இயேசு

### லூக்கா 11:27

இயேசு இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தபோது, கூட்டத்திலிருந்து பெண்ணொருவர், "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" என்று குரலெழுப்பிக் கூறினார்.

### நிகழ்வு

நெப்போலியன் அட்லாண்டிக் பெருங்கடலில் ஒரு தீவில் சிறை வைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது அவனது தாய் ஒரு மடல் வரைகின்றார். "மகனே, நான் உன்னைக் காண வருகின்றேன்" என்று, அதற்கு நெப்போலியன் மடல் எழுதுகிறார்: "அம்மா, நீங்கள் வரும் முன்னே நான் இறந்து போய்விடலாம். அதனால் வரவேண்டாம்" என்று. அதற்குத் தாய் "உன் இறப்பில் மிக அருகில் வந்து இருப்பேன்" என்று மடல் முடிகிறது. இதுதான் தாய் அன்பு, தாயின் ஈகம் ஆகும்.

### சிந்தனை

இயேசு ஆதரவற்றோர் அல்லது முதியோர் இல்லத்தில் கேட்கவில்லை. மாறாகத் தன்னை அன்பு செய்த அன்புச் சீடரிடம் தான் ஒப்படைக்கிறார். கரணியம், இயேசு தாய்மை என்றால் என்ன? தாயின் ஏக்கம் என்ன? என்று அறிந்திருந்தார். ஆம், இன்பத்தில் பங்காளிகள் பலர் இருப்பார்கள். ஆனால் இழிநிலையில் பங்கெடுக்க உடனிருக்க சிலரே இருப்பர். ஒரு தாய்தான் நம் வளர்ச்சி, நம் புகழ்ச்சி, நம் பெருமை, நாம் வளர ஒவ்வொரு தாயும் எவ்வளவு ஈகங்கள் செய்துள்ளார்கள். இதனை உணர்ந்து இருக்கிறாயா? அன்பான மனைவியின் சொல் கேட்டு பெற்ற தாயை ஒதுக்குகின்றாயே! அது முறையா? இன்று அவர்களுக்கு, நாளை உனக்குத் தானே. மனம் மாறு. உடனடியாக உன் பெற்றோரை உன் வீட்டிற்கு அழைத்து வா. அவர்களின் மடியில் நீ தலை சாய்த்துத் தூங்கு. இயேசு உன்னைத் தன் அருளால் நிரப்புவார்.

### இறைவேண்டல்

அன்பின் இறைவா! எங்கள் அனைவருக்கும் நல்ல பெற்றோரைத் தந்துள்ளீர்கள். நல்ல அன்னையர்களைத் தந்துள்ளீர்கள். அதற்கு நன்றி. ஆனால் அவர்களின் ஈகத்தை இன்று புரியாமல் இருக்கின்றோம். இதனை மாற்றி அன்னையின் அன்பை உணர அருள்தாரும். ஆமென்.

## பதினான்காம் நிலை

## கல்லறையில் அடக்கம்

### தொடக்க நூல் 35:28-29

ஈசாக்கு நூற்றெண்பது ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் வயது முதிர்ந்தவராய் இறந்து தம் மூதாதையருடன் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அவர் புதல்வர்கள் ஏசாவும் யாக்கோபும் அவரை அடக்கம் செய்தனர்.

### நிகழ்வு

மறைசாட்சிகள் புதைக்கப்படுவதில்லை. மாறாக விதைக்கப் படுகிறார்கள் விதையாக. ஒருமுறை கச்சத்தீவுக்குச் சென்றபோது அங்குச் சிலுவைப்பாதை நடைபெற்றது. அதில் ஒரு நிலையில் ஓர் ஈழத்துக் குருவானவர் சிலுவைப்பாதை சிந்தனையில் சொன்னார்: "இந்த சமரில் எம்மக்கள் ஆயிரம் ஆயிரம் பேர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம்; இல்லை இல்லை எரித்து சாம்பலாக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இயேசு உயிர்த்து எழுந்தது போல உயிர்த்தெழுவார்கள். பீனிக்சு பறவையைப் போல எரியூட்டப்பட்ட சாம்பலிலிருந்து மீண்டு வருவார்கள். மீண்டும் சமர் புரிவர். எம் ஈழத்தை மீட்பர்" என்றார். ஆம் ஒரு நல்ல அடக்கத்தை பிறருக்குக் கொடுத்தால் அது உனக்கு ஆசீர்.

### சிந்தனை

"வானத்துப் பறவைகளுக்குக் கூடும் நரிகளுக்கு வளைகளும் உண்டு. ஆனால் மானிட மகனுக்குத் தலை சாய்க்கக் கூட இடமில்லை" என்கிறார் இயேசு. கொல்லப்பட்ட இயேசுவின் உடல் தாயின் மடியிலிருந்து எடுக்கப்பட்டு மாற்றானின் கல்லறையில். அவரை அன்பு செய்த நல்ல உள்ளங்கள் யூத முறைப்படி அடக்கம் செய்து ஏசுவை மகிமைப்படுத்தினார்கள். இல்லை, இயேசுவின் மாந்தத்தன்மைக்கு மாந்த நேயத்திற்குப் பெருமை சேர்த்தார்கள். ஓ கிறித்தவர்களே! உங்கள் பெற்றோரின் அடக்கத்தை எவ்வாறு நிகழ்த்துகின்றீர்கள்? தாயின் கம்மல், மூக்குத்திகளுக்காக சண்டையிடுகின்றீர்களே! அல்லது வாழும்போது படுக்கையில் இருக்கும்போது அவர்களைக் கண்டு கொள்ளாது, இறந்தபின்பு வாண வேடிக்கைகள், தேரில் பவனி நடத்துகின்றீர்களே. அது முறையா? முதிர்ந்த வயதில் பெற்றோருடன் நேரத்தைச் செலவு செய்யுங்கள். அவர்களின் ஆசி பெற்று மகிழுங்கள்.

### இறைவேண்டல்

அன்பின் இறைவா! தோபியா இழிவுபடுத்திக் கொல்லப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு நல்ல அடக்கம் செய்து மாந்தரில் இருக்கும் இறைத்தன்மையின் புனிதத்தைக் காப்பாற்றினார். அதுபோல சிறந்த அடக்கத்தை சாய்கால் அற்றவர்களுக்கு நாங்கள் கொடுத்து மகிழ அருள்தாரும். ஆமென்.



மீட்பின் சிகரம்
# சிலுவைப் பாதை



விவிலியம் மீட்பின் வரலாற்றினை விரிவாகத் தெளிவாகத் தருகிறது. மீட்பின் உச்ச கட்டமாக அமைவது இயேசுவின் வாழ்க்கை வரலாறு. மீட்பின் கொடுமுடியாக நிற்பது இயேசுவின் சிலுவைப் பாடுகள். முப்பது ஆண்டுகள் மறைந்து வாழ்ந்தார், மூன்று ஆண்டுகள் பொது வாழ்வு வாழ்ந்தார், மூன்று மணி நேரம் சிலுவையில் தொங்கினார், மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இந்தச் சிலுவைப் பாடுகள், சிலுவைச்சாவு, உயிர்ப்பு பாஸ்கா மறைபொருள் என அழைக்கப்படுகிறது. இப்பாஸ்கா மறைபொருளை வாழ்ந்தவர் கிறிஸ்து.

இந்தப் பாஸ்கா மறைபொருள்தான் மீட்பின் சிகரம்; சிலுவையின் கொடுமுடி என அழைக்கப்படுகிறது. யோவான் உயிர்ப்பு என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. பதிலாக உயர்த்தப்பட்டார் என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். நானோ உயர்த்தப்பட்டபோது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன் என்கிறார். எனவே இயேசு சிலுவையில் உயிர்த்தார். அதாவது பாடுகளின் நுனிக் கொம்பு உயிர்ப்பு. இதையே யோவான் வானம் திறந்தது (யோவா 1:51) என்று குறிப்பிடுகிறார்.

எனவே நமது சிலுவை வழிபாட்டிலே சிலுவைப் பாதையைக் கல்லறையோடு முடிப்பதில்லை உயிர்ப்போடு முடிக்கிறோம். இவ்வழிபாடும் பாடுகளுடன் உயிர்ப்பையும் இணைத்தே கொண்டாடுகிறது. நாமும் சிலுவையைச் சுமக்கும் பொழுது உயிர்க்கிறோம். இதுதான் கிறிஸ்துவுக்காக வாழும் வாழ்வு. எனவே மீட்பு வரலாறு அதன் கொடுமுடியாகிய சிலுவையின் வரலாற்றோடு முடிகிறது. எனவே சிலுவை வழிபாட்டின் வாயிலாக நம் சிலுவையை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தைப் பெற்று, இறந்து, இயேசுவுக்குள் உயிர்த்து, மீட்பின் சிகரத்தை எட்டிப் பிடித்து நமது மீட்பை உறுதி செய்வோம்.

அருட்தந்தை ஏ.தேவராஜன்

# 1. இயேசுவுக்குத் தீர்ப்பிடுகிறார்கள்

**யோவான் 5: 22-24** தந்தை யாருக்கும் தீர்ப்பு அளிப்பதில்லை. தமக்கு எல்லாரும் மதிப்புக் கொடுப்பதுபோல மகனுக்கும் மதிப்புக்கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் முழுவதையும் அவர் மகனுக்கு அளித்துள்ளார். மகனை மதியாதவர் அவரை அனுப்பிய தந்தையையும் மதிப்பது இல்லை. என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள்; ஏற்கெனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் முழுவதையும் அவர் மகனுக்கு அளித்துள்ளார். புதிய ஏற்பாட்டில் தீர்ப்பு என்று ஓர் அறிவிப்பு. இந்த அறிவிப்பைக் கொண்டு ஒருவர் குற்றமற்றவர் என தண்டனைத் தீர்ப்பிலிருந்து தப்பித்து நிலை வாழ்விற்குள் நுழையும் தகுதி பெறுகிறார். இங்கே தண்டனைத் தீர்ப்பு பெறவேண்டியவர்கள் குற்றமற்றவரைக் குற்றவாளி என அறிவிக்கின்றனர். இயேசுவைக் குற்றவாளி என பிலாத்து அறிவித்தல் ஒரு வரலாற்றுப் பிழை. இதைப்போன்ற தீர்ப்புக்கு உள்ளான சாக்ரடீஸ், மகாத்மா காந்தி, இராபர்ட் கென்னடி போன்றவர்களின் தீர்ப்புக்கள் யாவும் வரலாற்றுப் பிழை என அழைக்கப்படுகின்றன.

உலக வரலாற்றிலே எக்காலமும் சரி செய்ய முடியாத வரலாற்றுப் பிழையாகவே கருதப்படுகின்றன. இந்தத் தீர்ப்பைத்தான் நாம் வழங்க முடியும். ஆனால் இயேசு வழங்கிய தீர்ப்போ மாந்த மீட்பிற்கு வித்திட்டது. பாவிகளை மன்னித்துத் தண்டனையிலிருந்து தப்பித்து நிலை வாழ்வில் நுழையும் தகுதியை அளித்துள்ளது. இத்தீர்ப்பைத்தான் நாம் வழங்க வேண்டும். நாம் கொடுக்கின்ற தீர்ப்பு வரலாற்றுப் பிழையாகப் போகின்றதா? மீட்புக்கு வித்திடப் போகின்றதா? சிந்திப்போம். நம் வாழ்வைச் சீர்படுத்துவோம், வரலாற்றில் மீட்புக்கு வித்திடுவோம்.

## மன்றாடுவோம்

எங்கள் அன்புத் தந்தையே! வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நாங்கள் தீர்ப்பு வழங்கும் கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகிறோம். எங்கள் தீர்ப்பு அழிவிற்கு இட்டுச் செல்லாமல் நிலை வாழ்விற்கு வித்திடுவதாக அமைவதாக. ஆமென்.

# 2. இயேசுவின்மேல் சிலுவையை சுமத்துகிறார்கள்

**மாற்கு 3:1-6** அவர் மீண்டும் தொழுகைக்கூடத்திற்குள் சென்றார். அங்கே கை சூம்பியவர் ஒருவர் இருந்தார். சிலர் இயேசுமீது குற்றம் சுமத்தும் நோக்குடன், ஓய்வுநாளில் அவர் அவரைக் குணப்படுத்துவாரா என்று கூர்ந்து கவனித்துக்கொண்டே இருந்தனர். இயேசு கை சூம்பிவரை நோக்கி, "எழுந்து, நடுவே நில்லும்" என்றார். பின்பு அவர்களிடம், "ஓய்வுநாளில் நன்மை செய்வதா, தீமை செய்வதா? உயிரைக் காப்பதா, அழிப்பதா? எது முறை?" என்று அவர் கேட்டார். அவர்களோ பேசாதிருந்தார்கள். அவர் சினத்துடன் அவர்களைச் சுற்றிலும் திரும்பிப் பார்த்து, அவர்களது பிடிவாத உள்ளத்தைக் கண்டு வருந்தி, கை சூம்பியவரை நோக்கி, "கையை நீட்டும்" என்றார். அவர் நீட்டினார். அவருடைய கை மீண்டும் நலமடைந்தது. உடனே பரிசேயர் வெளியேறி ஏரோதியரோடு சேர்ந்து இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர்.

எப்படி இயேசுவிடம் குற்றம் காணலாம், என்ன பழி சுமத்தலாம் என்று வலிந்து தேடுகின்றனர் பரிசேயர்.

தொடக்கநூலில் ஏவாள் கனியைத் தின்று பாவம் செய்தாள். ஏன் எனக் கேட்டதற்கு பாம்பு வஞ்சித்தது என்றாள். ஆதாம் ஏவாள் என்னை ஏமாற்றி விட்டாள் என்றான். இப்படி ஒவ்வொருவரும் அடுத்தவர்மீது பழி போடுவதிலே கருத்தாயிருக்கிறார்கள். தான் குற்றவாளியாய் இருந்தாலும் நேர்மையாளர் என்றே வாதாடுவர். இதுதான் வழக்கமாக எந்த சராசரி மனிதனும் ஈடுபடும் செயல். குடும்பத்திலும் கூட கணவன் மனைவி மீதும், மனைவி கணவன் மீதும், பெற்றோர் பிள்ளைகள் மீதும், பிள்ளைகள் பெற்றோர் மீதும் குற்றம் சுமத்துவதற்கு அணியமாக இருப்பர்.

ஆனால் இயேசு அப்படி அன்று. மீட்பின் வரலாற்றில் ஒரே நடுவர் தான் "நான்" என்று ஒப்புக் கொள்கின்றார்.

கெத்சமெனித் தோட்டத்தில் இயேசுவைப் பிடிக்க யூதாசு காவலர்களுடனும் விளக்குத் தண்டுகளுடனும் வருகின்றான். பொதுவாக குற்றம் செய்யாமல் தீர்ப்பு வழங்கினால் குற்றவாளி ஓடி ஒளிந்து கொள்வான். இங்கு குற்றமற்ற இயேசு தன்னைத் தேடி வந்தவர்களிடம் "நான் தான்" என்கிறார். குற்றமற்ற அவர் வாழ்வில் எவ்வித அறைகூவலையும் சந்திக்கத் தயாராயிருக்கின்றார், தான் குற்றமற்றவர் என எண்பிக்கிறார்.

## மன்றாடுவோம்

தந்தாய்! உம் திருமகன் எதிரிடையான சூழலிலும் முரண்பாடுகளிலும் வஞ்சகர்களின் சூழ்ச்சிகளிலும் துணிவுடன் நின்று தான் நேர்மையாளர் என்று நிரூபித்ததுபோல, நாங்கள் எந்தச் சூழலையும் எதிர்கொண்டு அதற்கு அடிமையாகாமல் அதை வென்று காட்டுவதற்குப் பலம் தாரும். ஆமென்.

# 3. இயேசு தரையில் விழுகிறார்

**மாற்கு 14:66-72** அப்பொழுது பேதுரு கீழே முற்றத்தில் இருக்க, தலைமைக் குருவின் பணிப் பெண் ஒருவர் வந்து, பேதுரு குளிர்காய்ந்து கொண்டிருக்கக் கண்டு அவரைக் கூர்ந்து நோக்கி, "நீயும் இந்த நாசரேத்து இயேசுவோடு இருந்தவன்தானே" என்றார். அவரோ, "நீர் சொல்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை, புரியவுமில்லை" என்று மறுதலித்து, வெளி முற்றத்திற்குச் சென்றார். (அப்பொழுது சேவல் கூவிற்று). அந்தப் பணிப்பெண் அவரைக் கண்டு சூழ இருந்தவர்களிடம், "இவனும் அவர்களைச் சேர்ந்தவன்தான்" என்று மீண்டும் கூறத் தொடங்கினார். அவர் மீண்டும் மறுதலித்தார். சற்று நேரத்திற்குப்பின் சூழ இருந்தவர்களும், "உண்மையாகவே நீ அவர்களைச் சேர்ந்தவனே. ஏனெனில் நீ ஒரு கலிலேயன்" என்று மீண்டும் பேதுருவிடம் கூறினார்கள். அவரோ, "நீங்கள் குறிப்பிடுகின்ற இந்த மனிதனை எனக்குத் தெரியாது" என்று சொல்லிச் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினார். உடனே இரண்டாம் முறை சேவல் கூவிற்று. அப்பொழுது, "சேவல் இருமுறை கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்" என்று இயேசு தமக்குக் கூறிய சொற்களைப் பேதுரு நினைவு கூர்ந்து மனம் உடைந்து அழுதார்.

பேதுருவின் வீழ்ச்சியை வாசிக்கக் கேட்டோம். இயேசுவின் வீழ்ச்சிக்குப் புறம்பே நாம் எந்த வீழ்ச்சியையும் காண முடியாது. உலக வரலாற்றிலே நடந்தேறிய எத்தனையோ வீழ்ச்சிகளின் ஒட்டு மொத்த அடையாளம் இது. குழந்தை நடக்கத் தொடங்குகிறது அதற்குள் எத்தனையோ முறை வீழ்ந்து எழுகின்றது. வெற்றியின் பாதையிலே எத்தனையோ வீழ்ச்சிகள் குறுக்கிடத்தான் செய்கின்றன. தோல்வியின்றி வெற்றி இல்லை.

வீழ்வது எதற்காக? மண்ணில் உருண்டு புரண்டு அழிந்து போவதற்காக அன்று. பீனிக்ஸ் பறவைபோல மண்ணில் தூசியாகி சாம்பலாகி அதன்பின் மீண்டும் உயிரோடு எழுவதுபோல எழுவதற்கே. நாம் வீழ்ந்து அழிவதற்கல்ல எழுந்து எட்டாத உயரத்திலே பறப்பதற்கு; எவரும் அடைய முடியாத சிகரத்தை எட்டிப் பிடிப்பதற்கு; வெற்றிச் செயல்களைப் புரிந்து எழுந்து ஒளி வீசவே. வீழ்ந்து எழுந்த இயேசு இன்றும் மண்ணிலே மட்கிப் போவதற்காக அல்ல விசும்பில் சிறகடித்துப் பறக்கவே எண்ணற்ற வெற்றிகளைக் குவித்து ஆண்டவருக்குப் புகழ் சேர்க்கவே. நமது வெற்றி இயேசுவின் வெற்றியாக வேண்டும். எத்தனை வெற்றிகளைக் குவித்தாலும் அவை இறைவனுடைய மாட்சிக்கே. மாட்சி எங்களுக்கன்று; உமது திருப்பெயரின் மாட்சிக்கே என்று விழும் பொழுதெல்லாம் எழுந்திருக்க வேண்டும்.

## மன்றாடுவோம்

அன்புத் தந்தையே! தடுமாறி விழுந்த உம் திருமகனை தாங்கிப் பிடித்துக் கொண்டு மீட்பின் வரலாற்றுச் சிகரம் நோக்கி நகர வைத்தீர். வீழ்ந்து கிடக்கும் என்னையும் கைதூக்கிவிட்டு மீட்பின் பாதையில் தொடர்ந்து முன்னேறச் செய்தருளும். ஆமென்.

# 4. இயேசு தம் தாயைச் சந்திக்கிறார்

**மாற்கு 3: 20-22** அதன்பின் இயேசு வீட்டிற்குச் சென்றார். மீண்டும் மக்கள் கூட்டம் வந்து கூடியதால் அவர்கள் உணவு அருந்தவும் முடியவில்லை. அவருடைய உறவினர் இதைக் கேள்விப்பட்டு, அவரைப் பிடித்துக்கொண்டுவரச் சென்றார்கள். ஏனெனில் அவர் மதிமயங்கி இருக்கிறார் என்று மக்கள் பேசிக் கொண்டனர். மேலும், எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர், "இவனைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறது" என்றும் "பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்" என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

சிலுவைப் பாதை, சிலுவைப்பலி. உலகில் எண்ணற்ற பிள்ளைகள் தங்கள் தாயை மதிக்காது, பாதுகாக்காமல், பேணாமல், உண்ண உணவு கூடக் கொடுக்காமல் வீட்டிற்கு வெளியே தள்ளி விடுகின்றனர்.

கணவன் இறந்தபின் நான்கு வீட்டில் ஏனம் தேய்த்து பிள்ளையைப் படிக்க வைக்கிறாள் தாய். அவன் படித்தபின் வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்று விடுகிறான். இப்படி ஒருவன் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்து தன் சிறிய வீட்டையும் விற்று பணத்தைச் சுருட்டிக் கொண்டு தாயை தொடர்வண்டி நிலையத்தில் விட்டு விட்டு அமெரிக்கா சென்று விட்டான். தன்னார்வத் தொண்டர்கள் தங்கள் இல்லத்தில் வைத்துப் பேணுகின்றார்கள்.

என் மகன் வருவான் வருவான் என்று அந்தத் தாய் ஏக்கத்தோடு காத்திருந்ததுபோல எத்தனையோ தாய்மார்கள் இன்று பார்க்காமல் பேணாமல் விடப்படுகிறார்கள். இன்றைய வாசகத்தில் தாயுள்ளம் படும்பாட்டை வாசிக்கக் கேட்டோம். தன் மகனுக்குச் சிறு குறைபாடு கூட ஏற்படக் கூடாது என்று கன்னித்தாய் உள்ளம் பதைக்கின்றார்.

எல்லா பாவங்களையும் கழுவிடவே கிறிஸ்து தன்னை பலியிட்டார். உலக மக்கள் தாய்க்குக் கொடுக்கும் கொடுமைகளுக்குக் கழுவாய் செய்தார். இன்றும் அவர் கழுவாய் செய்து கொண்டிருக்கிறார். நாமும் நம்மால் இயன்ற அளவு செபத்தினாலும் தவத்தினாலும் தாய்மைக்கு இழைக்கும் கொடுமைகளுக்குக் கழுவாய் தேடுவோம்.

## மன்றாடுவோம்

அன்புத் தந்தையே! உம் திருமகன் உலகில் தாய் தந்தையருக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு கழுவாய் செய்தார். நாங்கள் எங்கள் நற்செயலால், சொல்லால் இக்கொடுமைகளுக்கு கழுவாய் செய்யத் தூண்டியருளும். எங்கள் சொல்லாலும் செயலாலும் பெற்றோருக்குக் கொடுமை செய்வதைத் தவிர்க்க அருள் புரியும். ஆமென்.

# 5. இயேசுவுக்கு சீமோன் உதவி செய்கிறான்

**யோவான் 15: 12-17** "நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை. தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள். இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன்; ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன். நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார். நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை."

உலகில் உயர்ந்த உறவு நட்பு. இதற்கு ஈடு இணையே கிடையாது. நண்பன் தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை. உயிர் கொடுத்து உயிர் காப்பான் தோழன். இரத்தத்தை நண்பனுக்கு ஒப்பிடுவார்கள். உடலில் எங்கு புண்பட்டாலும் முதலில் வருவது இரத்தம். அதுபோல நட்புக்குக் குரல் கொடுப்பவன் சிறந்த நண்பன்.

இந்த நட்பை தங்களுடைய சொல்லாலும் செயலாலும் சிலர் கொச்சைப்படுத்துகின்றனர். தனது ஊதியத்திற்காக நட்புடன் உறவாடுகின்றனர். கேட்கும் பொழுதெல்லாம் பொருள் கொடுத்தால் நண்பர்கள்; இல்லையேல் இல்லை. சீசரைக் கொன்ற புரூட்டசு நண்பர்களாக இருக்கத்தான் செய்கிறார்கள். இதனால் நட்பு காய்ந்து போகவில்லை. ஓயாது ஒளியாது நட்பு பெருகிக் கொண்டே இருக்கிறது.

கணவன் மனைவிக்குள் நட்புறவு நீடிப்பதைக் காணலாம். அங்கேயும் உண்மையாக இல்லாது கொலைகள் மணமுறிவுகள் நடக்கத்தான் செய்கின்றன. உலகிலுள்ள எல்லா நட்பின் எதிர்வினைகளுக்கும் கழுவாயாக சீமோன் சிலுவையைச் சுமக்கிறார். நட்பின் உள் மனக்காயங்களை இயேசு தனது இரத்தத்தால் தூயதாக்குகின்றார். இதுபோன்ற நட்புக்கெதிரான எல்லா பாவங்களுக்கும் கழுவாயாக சிலுவைப் பாடுகளை ஒப்புக் கொடுத்தார். உலகில் நட்புக்கெதிரான எல்லா பாவங்களையும் நீக்கினார்.

## மன்றாடுவோம்

எல்லா நட்புக்கும் ஊற்றும் உந்துதலுமாக இருக்கின்ற இறைவா! நான் உமது நட்பிற்கு இலக்கணமாக வாழக் கற்றுத் தாரும். நட்பிற்கு இடையில் வரும் பிணக்குகளை நீரே சரி செய்தருளும். எங்கள் செபதபங்களாலும் நற்செயல்களினாலும் நட்பின் குற்றங்களை நீக்கியருளும். உற்றார் உறவினர் நண்பர்களை அன்போடு ஏற்று அவர்களின் மீட்புக்குத் துணையாய் இருக்க அருள் தாரும். ஆமென்.

## 6. இயேசுவின் முகத்தை வெரோணிக்கா துடைக்கிறாள்

**யோவான் 12: 1-5** பாஸ்கா விழாவுக்கு ஆறு நாளுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்குதான் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்தார். அங்கு அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது. மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்களுடன் இலாசரும் இருந்தார். மரியா இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத்தைலம் ஏறக்குறைய முந்நூற்று இருபது கிராம் கொண்டுவந்து இயேசுவின் காலடிகளில் பூசி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து, "இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான்.

மாந்தர்களை இரு வகையாகப் பிரிப்பர்:

1) உலகைப் புரிந்தவன்
   1) இதுதான் உலகம் என கருதுகிறான்
   2) அதனுள் வாழ்கிறான்
   3) தன்னோடு உலகை உயர்த்துகிறான்
2) உலகைப் புரியாதவன்
   1) உலகை வெறுக்கிறான்
   2) உலகை விட்டு ஒதுங்குகிறான்
   3) உலகில் பதுங்குகிறான்

இந்த மூன்றாவது வகையினர்தான் பரிவு காட்டமாட்டார்கள். துணிவுடன் முன்னேறுவார்கள். யார் என்ன சொல்லுவார் என்று கவலைப்படாதவர்கள். இவர்களே உலகில் வெற்றிச்செயல் படைப்பார்கள். குமுகாயத்தில் தடம் பதிப்பார்கள். வெரோணிக்கா இந்த வகையைச் சார்ந்தவள். துன்புறுபவருக்கு உதவி செய்ய முன் வருகிறாள். இயேசுவால் முகத்தைத் துடைக்க முடியாத பொழுது வெரோணிக்கா துடைத்தாள். இயேசு தம் சாயலை அவளில் பதித்தார். குமுகாயத்திலே அச்சாயலை வெரோணிக்கா பதித்தாள்.

தன்னலமற்ற பணிக்குக் கிடைத்த பரிசு இயேசுவின் சாயல். இதையே உலகினுக்குக் கொடையாக விட்டுச் சென்றாள். நாமும் அஞ்சாது நற்செயல் செய்யும் பொழுது கிறிஸ்துவின் சாயலை உலகிற்கு விடுக்கின்றோம். எந்த ஒரு நற்செயலும் கிறிஸ்துவுக்குப் புறம்பானதல்ல; கிறிஸ்துவின் முகத்தைப் பதிப்பிப்பதாகும்.

### மன்றாடுவோம்

இயேசுவே! வெரோணிக்கா துணிந்து உமக்குப் பணி செய்ததற்காக உம்முடைய சாயலை பரிசாக அளித்தீர். எங்களில் உமது சாயலை ஆழமாகப் பதிப்பித்தீரென்றால் உமது சாயலை செல்லுமிடமெல்லாம் பதிப்பித்துக் கொண்டே இருப்போம். அப்பொழுது மக்கள் எங்களையல்ல உம்மையே காண்பார்கள்.

## 7. இயேசு இரண்டாம் முறை தரையில் விழுகிறார்

**உரோமையர் 5:18-20** ஆகவே ஒருவரின் குற்றம் எல்லா மனிதருக்கும் தண்டனைத் தீர்ப்பாய் அமைந்ததுபோல், ஒரே ஒருவரின் ஏற்புடைய செயல் எல்லா மனிதருக்கும் வாழ்வளிக்கும் விடுதலைத் தீர்ப்பாய் அமைந்தது. ஒரு மனிதரின் கீழ்ப்படியாமையால் பலர் பாவிகளானதுபோல், ஒருவரின் கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள். குற்றம் செய்ய வாய்ப்புப் பெருகும்படி சட்டம் இடையில் நுழைந்தது; ஆனால் பாவம் பெருகிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது.

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பார்கள். நாம் அனுபவத்தில் பார்த்திருக்கிறோம். கால் கல்லில் அடிபட்டு விட்டது இரத்தம் வந்து விட்டது. திரும்பவும் அதே காலில்தான் அடிபடும். இப்படி திரும்பத் திரும்ப வீழ்வதுதான் இயற்கை.

ஆனால் வீழ்ந்தவன் உடனே எழ வேண்டும். அப்படியே வீழ்ந்து கிடக்கக் கூடாது. ஒரு முறையல்ல பல முறை வீழ்ந்தாலும் உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும்.

ஆண்டவர் வீழ்ந்ததில்லை; வீழ்த்தப்பட்டார். சிலுவையின் சுமை தாங்காமல் கீழே விழுந்து கிடக்கிறார். நாமும் நம்முடைய வாழ்க்கையிலே பலரை விழ வைத்திருக்கிறோம். அவருக்குத் தெரியாமல் மிக நுட்பமாகத் திட்டமிட்டு பிறரை விழ வைத்திருக்கிறோம். நாம் வீழ்த்துபவராக இருக்கக் கூடாது. கைவிடுபவராக இருக்காமல் கைதூக்கி விடுபவராக இருக்க வேண்டும்.

குடி நோயாளிகளைப் பார்க்கிறோம். அவர்கள் திரும்பத் திரும்ப செய்த தவற்றையே செய்து மீண்டும் மீண்டும் வீழ்ந்து கிடக்கிறார்கள். இவர்களை மேலும் மேலும் குற்றவாளிகளாக்கி வாழ்வில் எழவே முடியாதவர்களாய் ஆக்கப்படுகிறார்கள். பலவீனமான மாந்தர்கள் எத்தனை முறை வீழ்ந்தாலும் அத்தனை முறையும் கைதூக்கி விடக் கடமை உண்டு. ஏழு முறையல்ல எழுபது முறை ஏழு முறை என்று சொல்லப்படுகிறது. கணக்கற்ற முறை மன்னிக்க வேண்டும். கணக்கற்ற முறை கைதூக்கி விட வேண்டும்.

### மன்றாடுவோம்

இயேசுவே உமமேல் பளுவானச் சிலுவை ஏற்றி திரும்பவும் விழ வைத்தார்கள். நீரே வருத்தப்பட்டுச் சுமை சுமக்கிறவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் இளைப்பாற்றி தருவேன் என்றீர். நாங்களும் எங்களைத் தேடி வருபவர்களுக்கு இளைப்பாறுதல் கொடுக்க உதவியருளும். எம்மிடம் வருபவர் சமாதானத்தைப் பெற்று மகிழ்வார்களாக! ஆமென்.

## 8. எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் அளிக்கிறார்

**லூக்கா 23: 26-32** அவர்கள் இயேசுவை இழுத்துச் சென்று கொண்டிருந்தபோது சிரேன் ஊரைச்சேர்ந்த சீமோன் என்பவர் வயல்வெளியிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்கள் அவரைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து, அவருக்குப்பின் அதைச் சுமந்து கொண்டுபோகச் செய்தார்கள். பெருந்திரளான மக்களும் அவருக்காக மாரடித்துப் புலம்பி ஒப்பாரி வைத்த பெண்களும் அவர் பின்னே சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, "எருசலேம் மகளிரே, நீங்கள் எனக்காக அழவேண்டாம்; மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். ஏனெனில் இதோ, ஒரு காலம் வரும். அப்போது 'மலடிகள் பேறுபெற்றோர்' என்றும் 'பிள்ளை பெறாதோரும் பால் கொடாதோரும் பேறு பெற்றோர்' என்றும் சொல்வார்கள். அப்போது அவர்கள் மலைகளைப் பார்த்து, 'எங்கள் மேல் விழுங்கள' எனவும் குன்றுகளைப் பார்த்து, 'எங்களை மூடிக்கொள்ளுங்கள' எனவும் சொல்வார்கள். பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கிறார்கள் என்றால் பட்ட மரத்துக்கு என்னதான் செய்யமாட்டார்கள்!" என்றார். வேறு இரண்டு குற்றவாளிகளையும் மரணதண்டனைக்காக அவர்கள் அவரோடு கொண்டுசென்றார்கள்.

இன்று பெண்கள் அழுவதற்கு பல கரணியங்கள் உள்ளன. சமன்மை என்று சொல்லுகிறார்கள்; வீட்டிலும் இல்லை, குமுகாயத்திலும் இல்லை. வீட்டில் பெண்கள் அடங்கி நடக்க வேண்டும்; அதிகாரம் பண்ணக் கூடாது; பேச்சு உரிமையில்லை. பொருளாதார உரிமை இல்லை. எல்லா வகையிலும் அவர்கள் உரிமை பறிக்கப்படுகின்றது.

சிறுமிகள் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். வன்கொடுமைக்கு உள்ளாகி கொலை செய்யப்படுகிறார்கள். சிறு பிள்ளைகள் பெண் பிள்ளை என்பதனால் கள்ளிப்பால் ஊற்றி கொலை செய்யப்படுகிறார்கள். கருவில் உருவாகும்பொழுதே பெண் என்றால் கருக்கலைப்பு செய்யப்படுகிறார்கள்.

கணவன் மனைவிக்கு இடையே சிக்கல்கள். கணவன் தவறு செய்தால் ஒன்றுமில்லை. மனைவி தவறு செய்தால் மணவிலக்கு என்கிறார்கள். குடித்து விட்டு வரும் கணவர்கள் மனைவி மக்களை இரவு முழுவதும் தூங்கவிடாது அடித்து உதைத்து கண்ணீர் தான் வாழ்க்கை என்கிற அளவுக்குத் தள்ளுகிறார்கள். இதுபோன்று இன்னும் சொல்ல முடியாத கொடுமைக்கு உள்ளாக்குகிறார்கள்.

ஆண்டவர் சிலுவையில் கணக்கிலடங்கா பாவங்களுக்குப் கழுவாய் செய்துள்ளார். நம்மைச் சுற்றியுள்ளவர்களின் பாவங்களையும் நீக்கியுள்ளார். தன்னுடைய இரத்தத்தினால் தூயதாக்கியுள்ளார்.

### மன்றாடுவோம்

இயேசுவே! நீர் உம்மிடம் வந்த பெண்களிடம் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றீரே, எங்கள் பெண்களுக்கு உரிமையும் தன் மதிப்பீடும் அதிகரிக்க உம்மை வேண்டுகிறோம். அவர்கள் மனதை மாற்றி, பெண்களைச் சமமான துணைவி என்று கருதி எல்லா உரிமைகளையும் கொடுக்கும்படிச் செய்தருளும். ஆமென்.

# 9. இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார்

**எபேசியர் 6:10-13** இறுதியாக, நீங்கள் ஆண்டவரோடு இணைந்து, அவர் தரும் வலிமையாலும் ஆற்றலாலும் வலுவூட்டப் பெறுங்கள். அலகையின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்கும் வலிமை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் அணிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் நாம் மனிதர்களோடு மட்டும் போராடுவதில்லை. ஆட்சிபுரிவோர், அதிகாரம் செலுத்துவோர், இருள் நிறைந்த இவ்வுலகின்மீது ஆற்றல் உடையோர், வான்வெளியிலுள்ள தீய ஆவிகள் ஆகியவற்றோடும் போராடுகிறோம். எனவே பொல்லாத நாள் வரும்போது, எதிர்த்து நின்று, அனைத்தின் மீதும் வெற்றிபெற்று நிலைநிற்க வல்லமைபெறும்படி, கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

வீழ்வது எழுவதற்காக. மீண்டும் மீண்டும் வீழ்வது மாந்த பலவீனத்தையே காட்டுகிறது. திருடுகிறவன் மீண்டும் திருடுகிறான், கொலைகாரன் மீண்டும் மீண்டும் கொலை செய்து விட்டு சிறையில் அடைபட்டுக் கிடக்கிறான். குடி நோயாளிகள் மருத்துவம் பார்க்கிறார்கள்; மறுபடியும் மறுபடியும் குடிக்கு அடிமையாகி தனக்கும் தன் குடும்பத்திற்கும் இழைக்கும் கொடுமைகள் சொல்லி மாளாது.

பாலுறவிற்கு அடிமையானவர்கள் செய்த தவற்றையே மீண்டும் மீண்டும் செய்கிறார்கள். இவர்களுக்கு அறிவு மழுங்கிவிட்டது. பாலுணர்வு கண்களைக் குருடாக்கிவிட்டது. அதனால் பச்சிளங் குழந்தைகளைக் கூட பாலுறவின் பொருளாகப்பார்க்கிறார்கள். குழந்தையின் மாசின்மை கண்களுக்குப் புலப்படவில்லை. பாவத்திலே பல தடவை வீழ்ந்தவர்களுக்கு தூய்மைத் தன்மை புரியாது. இயேசு இவர்களைப் பார்த்துத்தான் அறியாமல் செய்கிறார்கள் என தந்தையிடம் முறையிட்டிருக்கிறார்.

திரும்பத் திரும்ப குற்றம் புரிபவர்கள் வெளியிலிருந்து எவ்வளவு தண்டனை கொடுத்தாலும் அவர்கள் திருந்த மாட்டார்கள். உள்ளத்தின் உள்ளாழத்திலிருந்து மனம் திரும்புதல் நிகழ வேண்டும். சிலுவையோடு இரத்தம் சிந்தி இவர்களுடைய பாவங்களுக்குக் கழுவாய் செய்திருக்கின்றீர். நீர்தான் அவர்களைத் திருத்த வேண்டும்.

## மன்றாடுவோம்

எல்லாம் வல்லவரே, எம் ஆண்டவரே!எங்கள் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும். மீண்டும் மீண்டும் செய்த தவற்றையே செய்கிறவர்களை வல்லமையுள்ள கைகளால் மனம் திருப்பியருளும். நீர் சிந்திய இரத்தம் அவர்களைக் கழுவித் துடைப்பதாக. இதனால் மக்கள் பாவத்தை விலக்கி தூய நன்மையையே நாடுவார்களாக. ஆமென்.

# 10. இயேசுவின் உடைகள் களையப்படுகின்றன

**மத்தேயு 27: 33-36** ‘மண்டையோட்டு இடம்’ என்று பொருள்படும் ‘கொல்கொதா’வுக்கு வந்தார்கள்; இயேசுவுக்குக் கசப்பு கலந்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதைச் சுவை பார்த்தபின் குடிக்க விரும்பவில்லை. அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்த பின்பு குலுக்கல் முறையில் அவருடைய ஆடைகளைப் பங்கிட்டுக்கொண்டார்கள். பின்பு அங்கே உட்கார்ந்து காவல் காத்தார்கள்

வட இந்தியாவிலே ஒரு அருட்பணியாளர் மக்களை மனம் திருப்பினார் என்று அவரை அவமானப்படுத்தினர். ஆடைகளைக் களைந்துவிட்டு அவரை வெற்றுடம்போடு தெருவிலே உலா வரச் செய்தனர். கழுத்திலே செருப்பு மாலை அணிவித்திருந்தனர். அவர்மேல் மாந்த கழிவினை ஊற்றி சாட்டையால் அடித்து அழைத்து வந்தனர்.

இதைப்பற்றி அவரிடம் கேட்ட பொழுது எனக்கு எதுவும் தோன்றவில்லை. நான் ஆண்டவருக்காகப் பாடுபடுகிறேன். என்னுடைய இந்த இழிவு நிலை என்னை வருத்தவில்லை. நான் இயேசுவின் சிலுவைப்பாடுகளில் பங்கு பெறுகிறேன் என்ற உணர்வு மேலோங்கி நின்றது. நற்செய்திக்காக துன்புறும்போது முடிவுறாத இயேசுவின் பாடுகளை நிறைவு செய்கிறேன் என்ற உணர்வு என்னை உந்திக் கொண்டிருந்தது என்று சொன்னார்.

இதைப் போன்று இன்னும் எத்தனையோ பேர் துன்பப்படுகிறார்கள். கன்னியர்களும் கூட கடுமையான துன்பங்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இயேசுவின் பாடுகளோடு தம் பாடுகளையும் இணைத்து, எண்ணற்ற ஆன்மாக்கள் மனந்திரும்ப இவர்கள் ஒப்புக் கொடுக்கிறார்கள். நாமும் இவ்வுலகம் நமக்கு இழைக்கும் கொடுமைகளை பாவிகள் மனம் திரும்புவதற்காக ஒப்புக் கொடுப்போம். வாழ்வில் தோல்விகளும் இழிவுக்குள்ளாகலும் அநீதிகளும் நம்மை நிலைகுலையச் செய்யலாம். ஆனால் இயேசு நமக்கு முன்பு இப்பாடுகளைப் பட்டுணர்ந்திருக்கிறார். அத்துடன் என் வேதனைகளையும் பாவிகள் மனந்திரும்ப ஒப்புக் கொடுக்கிறார் என்று சொல்வோம்.

## மன்றாடுவோம்

எல்லாம் வல்ல இறைவா! நீர் சிலுவையில் பட்ட அவமானங்களும் அவலங்களும் நிந்தைகளும் பாவிகள் மனமாற்றத்திற்குப் பயன்பட்டன. என் வாழ்வில் நான் சந்திக்கும் அதே இழிநிலைகளும்அவமரியாதைகளும் அவமானங்களும் பாவிகள் மனந்திரும்பப் பயன்படுவனவாக. ஆமென்.

# 11. இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்

**யோவா 19:17-22** இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு 'மண்டை ஓட்டு இடம்' என்னுமிடத்திற்குச் சென்றார். அதற்கு எபிரேய மொழியில் கொல்கொதா என்பது பெயர். அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள்; அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள். பிலாத்து குற்ற அறிக்கை ஒன்று எழுதி அதைச் சிலுவையின் மீது வைத்தான். அதில் "நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்" என்று எழுதியிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்துக்கு அருகில் இருந்ததால் யூதருள் பலர் இந்தக் குற்ற அறிக்கையை வாசித்தனர். அது எபிரேயம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. யூதரின் தலைமைக் குருக்கள் பிலாத்திடம், 'யூதரின் அரசன்' என்று எழுத வேண்டாம். மாறாக, 'யூதரின் அரசன் நான்' என்று அவனே சொல்லிக் கொண்டதாக எழுதும்" என்று கேட்டுக்கொண்டார்கள். பிலாத்து அவர்களைப் பார்த்து, "நான் எழுதியது எழுதியதே" என்றான்.

இயேசு சிலுவையில் அறையப்படும் பொழுது உலகின் பாவம், பாவச் சோதனைகள், பிசாசு, சாவு இவைகளைச் சிலுவையில் அறைந்து விட்டார். அவர் அவற்றிற்கு அடிமையாகவில்லை, வெற்றி கொண்டார்.

நாமும் திருமுழுக்கின் போது இயேசுவோடு சிலுவையில் அறையப்படுகிறோம், இயேசுவோடு சிலுவையில் இறக்கிறோம், அவரோடு ஒன்றிணைக்கப்படுகின்றோம். பாவச் சோதனை அனைத்தையும் வெற்றி கொண்ட இயேசுவோடு சிலுவையில் அறையப்படுகிறோம். அவரோடு இறந்தோமாயின் அவரோடு உயிர்ப்போம் என்பதுவே நமது நம்பிக்கை. எனவே நாம் எப்பொழுதும் இயேசுவோடு சிலுவையில் ஒன்றித்திருப்போமாயின் இயேசு பெற்ற வெற்றி நமதாகும். நாமும் பாவத்தையும் பாவச் சோதனையையும் பசாசின் தந்திரங்களையும் இயேசுவுடன் இணைந்து சிலுவையில் அறைய முடியும். இயேசு நமக்காக வெற்றி பெற்றுத் தந்திருப்பதால் சிலுவையின் வெற்றி நமது வெற்றி. எனவே நாம் இனிமேல் பாவத்திற்கும் பாவச் சோதனைக்கும் பசாசுக்கும் அடிமை இல்லை. நாம் வெற்றி பெற்றவர்கள்.

இயேசுவின் வெற்றி நமது வெற்றியாக வேண்டுமெனில் நாம் இயேசுவோடு இணைந்திருக்க வேண்டும். அப்போது இயேசுவின் வல்லமை குறைவின்றி நிறைவாக நம்மில் செயல்படும். அப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாக இயேசுவோடு இணைந்து கடவுளை அப்பா என்று உரிமையோடும் வலிமையோடும் ஆற்றலோடும் அழைக்க முடியும்.

## மன்றாடுவோம்

இயேசுவே! நீர் எமக்காக சிலுவையில் அறையப்பட்டீர். எம்மை வெற்றி வீரராகத் திகழச் செய்தீர். நாங்கள் எங்கள் பலவீனத்திலல்லாமல் உமது வல்லமையில் நம்பிக்கை கொண்டவராய் வாழக் கற்பியும். அப்போது உம்முடன் இணைந்து எப்பொழுதும் வெற்றியைச் சந்திப்போம். ஆமென்.

# 12. இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

**மத்தேயு 27: 45-50** நண்பகல் பன்னிரண்டு மணிமுதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடு முழுவதும் இருள் உண்டாயிற்று. மூன்று மணியளவில் இயேசு, "ஏலி, ஏலி லெமா சபக்தானி?" அதாவது, "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று உரத்த குரலில் கத்தினார். அங்கே நின்று கொண்டிருந்தவர்களுள் சிலர் அதைக் கேட்டு, "இவன் எலியாவைக் கூப்பிடுகிறான்" என்றனர். உடனே அவர்களுள் ஒருவர் ஓடிச் சென்று, கடற்பஞ்சை எடுத்து, புளித்த திராட்சை இரசத்தில் தோய்த்து அதைக் கோலில் மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தார். மற்றவர்களோ, "பொறு, எலியா வந்து இவனை விடுவிப்பாரா என்று பார்ப்போம்" என்றார்கள். இயேசு மீண்டும் உரத்த குரலில் கத்தி உயிர்விட்டார்.

இயேசு உயிர்விட்டார். அத்துடன் அவரது வரலாறு முடிந்ததென எண்ணினர் அவரைச் சிலுவையில் அறைந்தவர்கள். ஆனால் இயேசுவின் மதிப்பீடுகள் அவருடன் அழிந்துவிடவில்லை.

உண்மை, நீதி, சமன்மை, உடன்பிறப்புறவு, ஒற்றுமை, அமைதி, மகிழ்ச்சி போன்ற மதிப்பீடுகள் குமுகாயத்திலே துளிர் விட்டு வளர்ந்தன. இந்த மதிப்பீடுகளுக்காக எண்ணற்றவர் தங்கள் வாழ்வை அர்பணித்தார்கள். அவற்றைக் கடைப்பிடிக்க எந்தத் தியாகத்தையும் செய்ய முன் வந்தனர்.

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே சென்றது. கிறிஸ்தவர்கள் பலியாக்கப்பட்டால் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் குறைந்து விடுவார்கள் என எதிரிகள் எண்ணினர். ஆனால் அவர்கள் எதிர்பார்ப்பிற்கு மேலாக எண்ணிக்கை பெருகியது. மறைச்சான்றாளர்களின் இரத்தம் கிறிஸ்தவ மறையின் வித்து என உணரத் தொடங்கினர். தானாக முன் வந்து துணிவுடன் உயிரைப் பணயம் வைத்து கிறிஸ்தவ மறையைப் பின்பற்றினார்கள். கிறிஸ்தவ மக்கள் தொகை பெருகுவதைக் கண்டவர்கள் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதைக் கைவிட்டனர்.

கிறிஸ்து இறக்கவில்லை, வாழ்கிறார்; கிறிஸ்து மக்களிடையே வாழ்கிறார்; கிறிஸ்தவர்களாக கிறிஸ்தவர்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன்றும் கிறிஸ்தவ மதிப்பீடுகள் மக்கள் நடுவில் உயிரினும் மேலாக மதிக்கப்படுகிறது, வாழ்ந்து காட்டிச் சான்று பகிரப்படுகிறது. நாமும் கிறிஸ்தவர் என்ற பெயருக்கேற்ப கிறிஸ்துவுக்குச் சான்றாளர்களாகத் திகழ வேண்டும். கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்குச் சான்று பகர வேண்டும்.

### மன்றாடுவோம்

அன்பு இயேசுவே! நீர் எனக்காக உயிர் விட்டீர். நான் உயிர் வாழ உம்மையே அழித்துக் கொண்டீர். நாங்களும் பிறர் நல்வாழ்வு வாழ எங்களையே முழுமையாக உவந்தளிக்க அருள் புரிவீராக. ஆமென்.

# 13. இயேசுவின் திருவுடல் அன்னையின் மடியில் கிடத்தப்படுகிறது

**யோவான் 19:25-27** சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், "அம்மா, இவரே உம் மகன்" என்றார். பின்னர் தம் சீடரிடம், "இவரே உம் தாய்" என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்.

இன்று எத்தனையோ தாய்மார்கள் பிள்ளை வேண்டுமென அருளிடங்களுக்குப் பயணம் மேற்கொள்கிறார்கள். இருப்பினும் பலருக்குப் பிள்ளை வரம் எட்டாக் கனியாகவே இருக்கிறது. சில தாய்மார்கள் கருவிலே குழந்தையை அழிக்கிறார்கள். சிலர் பிறந்த குழந்தையைக் கள்ளிப்பால் ஊற்றிக் கொல்கிறார்கள். சிலர் குப்பைத் தொட்டி அல்லது புதர்களுக்குள் போடுகின்றார்கள். சிலர் தங்கள் குழந்தைகளை விலைக்கு விற்றுவிடுகிறார்கள்.

இவை ஒரு பக்கமிருக்க - இன்னொரு பக்கம் பிள்ளைகள் சாலையில் அதிவிரைவாய் வண்டிகளை ஓட்டி திடீர் இடருக்குள்ளாகி அந்த இடத்திலேயே மாண்டு விடுகிறார்கள். சிலர் தாய் அல்லது தந்தை திட்டி விட்டார்கள் என்பதற்காக தற்கொலை செய்து கொள்கிறார்கள். சிலர் கைப்பேசியில் நீலத்திமிங்கலம் என்ற விளையாட்டில் ஈடுபட்டுத் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

பிள்ளையைப் பெற்று வளர்ப்பதற்கு இவ்வளவு துன்பத்தை பட்டுணர்கிறார்கள்.காதல் திருமணம் செய்து கொண்டு இருவரும் உயிர் விடுகிறார்கள். இனம் மாறி திருமணம் செய்வதால் பெற்றோர், உடன்பிறப்புகள் பெண்ணை ஆணவக் கொலை செய்து விடுகிறார்கள். அண்மையில் திருவண்ணாமலையில் உடன்பிறந்தவருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய தருணங்களில் நாம் தாயை வேதனைக்குள்ளாக்குகிறோம். அவள் இப்பாவங்களுக்காகத்தான் சிலுவை அடியில் கழுவாய் செய்தாள். நாமும் செபத்தாலும் தவத்தாலும் இப்பாவங்களுக்குப் கழுவாய் செய்வோம்.

### மன்றாடுவோம்

ஆண்டவரே! எங்கள் பாவங்களினால் சிலுவையில் நீர் அறையப்பட்டதால் உம் அன்னையைக் காயப்படுத்தி விட்டோம். அது ஆறாத வடுவாக இருக்கிறது. எங்கள் பாவங்களினால் நாங்கள் மேலும் காயப்படுத்தாமலிருக்க அருள்புரியும். ஆமென்.

## 14. இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

**யோவான் 19:38-42** அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் இயேசுவின் சீடர்களுள் ஒருவர்; யூதருக்கு அஞ்சியதால் தம்மைச் சீடர் என்று வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாதவர். அவர் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டுபோகப் பிலாத்திடம் அனுமதி கேட்டார். பிலாத்தும் அனுமதி கொடுத்தான். யோசேப்பு வந்து இயேசுவின் சடலத்தை எடுத்துக்கொண்டு போனார். முன்பு ஒருமுறை இரவில் இயேசுவிடம் வந்த நிக்கதேம் என்பவரும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் வெள்ளைப்போளமும் சந்தனத் தூளும் கலந்து ஏறக்குறைய முப்பது கிலோ கிராம் கொண்டுவந்தார். அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடத்தில் ஒருதோட்டம் இருந்தது. அங்கே புதிய கல்லறை ஒன்று இருந்தது. அதில் அதுவரை யாரும் அடக்கம் செய்யப்படவில்லை. அன்று பாஸ்கா விழாவுக்கு ஆயத்த நாளாய் இருந்ததாலும் அக்கல்லறை அருகில் இருந்ததாலும் அவர்கள் இயேசுவை அதில் அடக்கம் செய்தார்கள்.

முன்னோர்கள் இறைவாக்கினரைக் கொன்றார்கள். அவர்கள் பிள்ளைகள் இறந்தவர்களுக்குக் கல்லறைக் கட்டுகிறார்கள். நாங்கள் அக்காலத்தில் இருந்திருந்தால் சிலுவையில் அறைய விட்டிருக்க மாட்டோம் என்கிறார்கள். இன்றளவும் இப்படித்தான் பல கிறிஸ்தவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றும் அன்றுபோல தான் நயன்மை அழிக்கப்படுகிறது. குற்றவாளிகள் நேர்மையாளர்கள் எனத் தீர்ப்பிடப்படுகிறார்கள். நேர்மையாளர் குற்றவாளிகள் என சிறையில் தண்டனை நுகர்ந்துக் கொண்டிருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு அரசியல் பின்னணியில் குற்றமற்றவர்கள் குற்றவாளிகளாக முத்திரையிடப்படுகிறார்கள். ஆயிரம் குற்றவாளிகள் வெளியே வரலாம். ஆனால் ஒரு நேர்தையாளர் தீர்ப்புக்குள்ளாகக் கூடாது என்கிறார்கள். ஆனால் அரசியல் கரணியங்களுக்காக நேர்மையாளர்கள் குற்றவாளிகளாகத் தீர்ப்புப் பெறுகிறார்கள்.

பள்ளியிலே அலுவலகத்திலே குமுகாயத்திலே குற்றவாளிகள் என முத்திரை குத்தப்படுபவர்கள் குற்றவாளிகள் அல்ல. அரசியல் கரணியங்களுக்காகக் குற்றவாளிகள் பெருகிக் கொண்டே இருக்கின்றனர். உண்மை மறைக்கப்படுகிறது பொய் மீண்டும் மீண்டும் உரக்கச் சொல்வதனால் உண்மையாகிவிடுகிறது. பலர் இவ்வாறு செயல்படுவதால் பொய் மீண்டும் வலுப்பெறுகிறது. அத்தனைப் பாவங்களையும் நீர் உம் பாடுகளினால் நீக்கினீர். உமது வல்லமையினால் வாழ்வியலில் குறுக்கிட்டு நயன்மையை நிலைக்கச் செய்யும்.

### மன்றாடுவோம்

ஆண்டவரே! உமது இறப்பினால் அநியாயத் தீர்ப்பு பெற்று மாண்டவர்களுக்காகக் கழுவாய் செய்தீர். நாங்கள் அமைதியாகப் பலியாகாமல் உண்மைக்கும் நயன்மைக்கும் குரல் கொடுக்க பலம் தருவீராக! ஆமென்.

# 15. இயேசு உயிர்த்தார்

**யோவான் 20:1-10** வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார்; கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுருவிடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டனர்; அவரை எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!" என்றார். இதைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைக் கண்டார்; ஆனால் உள்ளே நுழையவில்லை. அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார். நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்றத் துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாகச் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பின்னர், கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீடரும் உள்ளே சென்றார், கண்டார்; நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை. பின்பு சீடர்கள் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

இயேசு உயிர்த்தார். ஆனால் அதை யாரும் பார்க்கவில்லை. காவலர்கள் காவல் காத்தார்கள். இடி முழக்கம் பூகம்பம் ஏற்பட்டதும் அவர்கள் வீழ்ந்தார்கள். கல்லறை திறந்து இயேசு உயிர்த்தார். வெறுமையான கல்லறை தான் இயேசு உயிர்த்தார் என்பதற்குச் சான்று.

உயிர்த்தது இயேசுதான் என்பதைப் புனித தோமையாரின் வாக்கு உறுதிப்படுத்தியது. அதே உடல் அதே காயங்கள் என்பதை தோமையார் தன் விரலால் தொட்டு சான்று பகர்ந்தார். பல சான்றுகள் இயேசுவின் உயிர்ப்பை உறுதி செய்தன. சீடர்களின் சான்று இயேசு உண்மையில் உயிர்த்தார், பேதுருவுக்குத் தோன்றினார் என்பதை மறையுண்மையாகக் கொண்டனர்.

சில இறையியலார் இயேசு உயிர்த்ததைப் பார்க்கவில்லை. ஆனால் இன்றும் இயேசுவைப் பற்றிய நற்செய்தி பறைசாற்றப்படுகிறது. மக்கள் அந்த நற்செய்தியைக் கேட்கின்றனர். இது உயிருள்ள ஒரு சான்றாக இருக்கிறது. எனவே இயேசுவின் நற்செய்தி உரைக்கப்படும் இடங்களிலெல்லாம் மக்கள் நடுவில் உயிர்க்கிறார். இருவர் அல்லது மூவர் இயேசுவின் பெயரால் குழுமியிருக்கின்ற இடத்தில் உயிர்க்கிறார் (மத் 18:21). எனவே இன்று வழிபாட்டில் உயிர்க்கிறார்.

இன்று வழிபாட்டில் இறைவார்த்தை போதிக்கப்படுகின்றது. மறைபொருள் கொண்டாடப்படுகின்றது. எம்மாவுசு சீடர்கள்போல் மறைபொருளைக் கொண்டாடுகையில் நம் உள்ளம் பற்றி எரிகிறது. நாமும் அதே பட்டறிவைப் பெறுகிறோம். இறைநம்பிக்கை கண்கொண்டு நோக்கினால் எல்லாம் புலனாகும்.

## மன்றாடுவோம்

ஆண்டவரே! கிறிஸ்தவர் வாழ்கின்றனர். நீர் அவர்கள் நடுவில் ஒவ்வொரு நொடியும் உயிர்க்கின்றீர். நாங்கள் எங்களுக்கு (பாவங்கள், பசாசின் தந்திரங்கள், சாவின் பிடிகள்) இறக்கும்போது உமக்காக உயிர்க்கிறோம். எனவே எப்போதும் பாவத்திற்கு இறந்து தூய வாழ்விற்கு உயிர்த்து உமது உயிர்ப்பின் சான்றாளர்களாக விளங்கச் செய்தருளும்.



## மழலை மொழியில்

# சிலுவைப் பாதை

சிலுவைப் பாதை - இது இயேசு உலகிற்கு கற்றுக்கொடுத்த மாபெரும் வாழ்க்கைப் பாதை. பயணம் தான் வாழ்வை மீண்டும் மீண்டும் செம்மைப்படுத்துகின்றது என்பதை உரக்கச் சொல்லும் நல் நம்பிக்கைப் பாதை. இயேசுவின் கல்வாரிப் பயணம் அவரது இவ்வுலக வாழ்வில் நடந்த சிறப்புப் பயணம். மனிதருக்கெல்லாம் வாழ்வின் ஊற்றைத் திறந்து வைத்த மேலான பயணம். இயேசு நம் பாவங்களைச் சிலுவையாகச் சுமந்து கொண்டு, பாவியின் கோலத்தில் கொலைக்களம் நோக்கிச் சென்ற பயணம். அந்தப் பயணத்தில் பங்குகொள்ளவே நாம் வந்திருக்கிறோம். இத்திருப்பயணம் நம் அகவாழ்வினை மிக ஆழமாகக் கேள்விக்குட்படுத்திட வேண்டும். நம் வாழ்வுப் பயணத்திற்குத் தேவையான நற்பண்புகளைக் கற்றுத் தந்திட வேண்டும். எப்படியும் வாழலாம் என்பதல்ல இப்பயணத்தின் நோக்கம், மாறாக எவ்வித குறைகளுக்கும் இடம் கொடுக்காமல் நம்மையே கேள்வி கேட்டு அலசி ஆராய்கின்ற பயணம். இப்பயணத்தில் எத்தனையோ பேர் இயேசுவுடன் நடந்து சென்றார்கள். அதில் நான் யாராக அவருடன் செல்கிறேன் எனக் கேள்வி கேட்கும் பயணம். இயேசுவின் கல்வாரிப் பயணத்தில் நான் - இயேசுவைக் குறைகூறும் யூதானா? கோபவெறி கொண்ட பரிசேயனா? கொலைகார படைவீரனா? அவரது துன்பம் கண்டு வருந்தும் செயலற்றவனா? யாரேன்றே தெரியாத இயேசுவுக்கு உதவிய சீமோனா? அல்லது வெரோணிக்காவா? இயேசுவின் துன்பத்தைத் தன் துன்பமாக தாங்கிச் சென்ற அன்னை மரியாவா? இதில் நான் யாராக இயேசுவைப் பின் தொடர்கிறேன் என நம்மை சிந்திக்க அழைக்கும் பயணம். சிறப்பாக இந்தக் கல்வாரிப் பயணத்தில் ஒரு குழந்தை, இயேசுவின் பாடுகளை எவ்வாறு சிந்திக்கிறது என்ற கோணத்தில் நாம் சிந்திப்போம். ஏனென்றால் நீங்கள் குழந்தைகளைப் போல மாறாவிடில் விண்ணரசில் நுழையவே முடியாது என இயேசுவே நமக்கு அறிவுறுத்துகிறார்.

இந்தக் கல்வாரிப் பயணத்தில் இயேசு சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் நம் உள்ளத்தில் உள்ள தீய நாட்டங்களை, பகைமை எண்ணங்களை, வேற்றுமைச் சிந்தனைகளை, நான் என்ற அகந்தையை, அடுத்தவர் வளர்ச்சி கண்டு பொறாமைப்படும் உள்ளத்தை, நம்மை பாவத்தில் விழவைக்கும் பலவீனங்களைக் கழுவட்டும். ஏனென்றால் குழந்தைகளிடம் அவை இல்லை. அவரோடு சேர்ந்து நம் பாவச் சிலுவைகளை நாமும் சுமப்போம். இயேசு சிலுவையில் ஆணிகளால் அறையப்படுகின்ற வேளையில் நம் தீயநாட்டங்களை நாமும் சிலுவையில் அறைவோம். இயேசு கல்லறையில் புதைக்கப்படுகின்ற போது நம்முடைய "நான்" என்ற ஆணவத்தை மண்ணில் புதைப்போம். இயேசுவோடு புதிய மனிதர்களாய் உயிர்த்தெழுவோம். அதற்கு இயேசுவின் இக்கல்வாரிப் பயணம் நம்மைச் செதுக்கட்டும்.

அருட்தந்தை சேசுராஜ்

# I.இயேசு சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிடப்படுகிறார்

இயேசப்பா! நீங்க தானப்பா எங்களுக்கு கடைசில தீர்ப்பு தருவீங்கனு எங்க மறைக்கல்வி ஆசிரியர் சொல்லித் தந்தாங்க. ஆனா இங்க, நீங்க நீதி தீர்ப்புக்காகக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கீங்க. சென்ற இடமெல்லாம் நன்மை செஞ்ச உங்களுக்குத் தீர்ப்பு சிலுவைச் சாவா? இரவும் பகலும் உங்க கூட இருந்து உண்டு உறங்கி வாழ்ந்து வந்த உங்க சீடர்கள் எங்கே இயேசப்பா? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன் என்று சொன்ன பேதுரு எங்கே இயேசப்பா? இதோ தனி மரமாய் அடிகளால் நொறுக்கப்பட்டு, கயிற்றால் இறுக்கப்பட்டு, கள்வனைப் போல் பிலாத்து முன்னிலையில் நிக்குறீங்களே. என்ன குற்றம் செஞ்சீங்க இயேசப்பா? கொலை செஞ்சீங்களா? இல்ல கொள்ளையடித்தீங்களா? என்ன குற்றம் செஞ்சீங்க? இறையரசை அறிவித்தது குற்றமா? நோயாளர்களைக் குணப்படுத்தியது குற்றமா? இறந்தவர்களுக்கு உயிர் கொடுத்தது குற்றமா? ஏழைகள் மீது இரக்கம் காட்டியது குற்றமா? இவ்வளவு நன்மை செய்த உங்களுக்கே சிலுவை தீர்ப்புனா நாங்க செய்ற தப்புக்கெல்லாம் என்ன தண்டனை இயேசப்பா?

இன்னைக்கு நாங்களும் பல நேரத்துல உங்களுக்குச் சிலுவைத் தீர்ப்பு சொன்ன பிலாத்து மாறி, எங்களுக்குத் தண்டனை கிடைக்கக்கூடாது அப்படிங்குறதுக்காக நாங்க செஞ்ச தப்புகளையெல்லாம் அடுத்தவங்க மேல சுமத்துறோம் இயேசப்பா. பள்ளியில யாரு பேசுனதுனு ஆசிரியர் கேக்குறப்ப நாங்க பேசிட்டு அமைதியா இருக்கிற மத்தவங்களை மாட்டி விட்டுறோம். நாங்க என்ன தப்பு செஞ்சாலும் அதை மறைச்சிட்டு, அடுத்தவங்க சின்ன தப்பு பண்ணுனாலும் அதை பெரிசு படுத்தி அவங்களை எல்லார் முன்னாடியும் அவமானப்படுத்துறோம். அந்த நேரத்துலலாம் நாங்களும் உங்களுக்கு தீர்ப்பிடுறோம்னு நினைக்க மறக்கோம் இயேசப்பா. என் கூட இருக்கிற என் நண்பர்கள் செய்யாத தப்புக்குத் தண்டிக்கப்படுறாங்கனு தெரிஞ்சும் நான் அமைதியா இருக்குறப்பலாம் நான் உங்களை தீர்ப்பிடுறேன்னு சிந்திக்க மறக்கேன் இயேசப்பா. வீட்ல நான் வம்பு பண்ணிட்டு என் தம்பி மேல, தங்கச்சி மேல அந்த பழியைப் போடுறப்பலாம் உங்களை தீர்ப்பிடுறேன்னு மறந்துடுறேன் இயேசப்பா. என்னை மன்னியுங்க இயேசப்பா.

## மன்றாடுவோம்

அன்பு இயேசுவே! "தீர்ப்பிடாதே, நீயும் தீர்ப்புக்குள்ளாவாய்" என்று எத்தனையோ முறை எனக்கு அறிவுறுத்துனீங்க ஆனா அதை மறந்து, என் குற்றங்களையெல்லாம் மறைக்க, பிறர் மீது குற்றம் சாட்டியிருக்கிறேன். என் மகிழ்ச்சிகாக அடுத்தவங்க மேல பழி போட்டுருக்கிறேன். என் பெரிய குற்றங்களைப் பற்றி எண்ணாமல், பிறருடைய சிறிய குற்றங்களைக் கூடப் பெரிதுபடுத்தியிருக்கிறேன். என்னை மன்னியுங்க இயேசப்பா. இனிமேல் நான் செய்ற தப்பு மூலமா உங்களை தீர்ப்பிடாம இருக்க வரம் தாங்க - ஆமென்.

## 2. இயேசுவின் மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்

இயேசப்பா! கொலை வெறியோடு உங்கள இழுத்துட்டுப் போயி கல்தூணிலே கட்டி கசையால் அடிக்கிறாங்களே. "யூதர்களின் அரசனே! இதோ உனக்கு அரசமுடி என முள்முடியை உங்க தலையில் வைச்சு அழுத்தி, காறி உமிழ்ந்து, செந்நிற அங்கியை அணிவித்து, எட்டு பேர் சுமக்கக் கூடிய கரடு முரடான மரத்திலே செய்யப்பட்ட சிலுவையை தூக்கி வந்து, இதோ உங்க தோள் மேல் வைத்து வெற்றி முழக்கமிடுகிறார்களே!. ஒரு குற்றமும் செய்யாத உங்க தோளுல பளுவான சிலுவை. இரத்தம் ஆறாய்ப் பெருக, உடலெல்லாம் காயங்களாகி நெருப்பிலிடப்பட்ட புழு போல் உடலும் உள்ளமும் துடிதுடிக்க பளுவானச் சிலுவையைச் சுமக்குறீங்களே இயேசப்பா. எங்க பாவங்களுக்காக நீங்க இந்தப் பாரமான சிலுவையை விரும்பி சுமக்குறீங்கனு நினைக்கிறப்ப அழுகையா வருது இயேசப்பா. "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லாரும் என்னிடம் வாருங்கள்" என அரவணைத்த உங்களுக்கு அவங்க தரும் பரிசு இது தானா?

இயேசப்பா அவங்க மட்டும் இல்லை, இன்னைக்கு நாங்களும் பல நேரம் உங்க மேல சிலுவையை சுமத்திகிட்டு தான் இருக்கோம். எங்கப் பெற்றோருக்குக் கீழ்படியாமல் அவங்கள எதிர்த்துப் பேசுறப்பலாம் உங்க தலைல முள்முடியை அடிக்கிறோம். நாங்க தப்பு செஞ்சுட்டு செய்யலனு பொய் சொல்றப்பலாம் உங்களைக் கசையால அடிக்கிறோம். எங்க கூட படிக்கிறவங்க இயலாமையைச் சுட்டிக்காட்டி அவங்களை கிண்டல் பண்ணி அழ வைக்குறப்பலாம் நாங்க உங்க மேல சிலுவையை சுமத்துறோம். என் சோம்பேறித் தனத்தால் என் கடமையைச் செய்யாமல் அதுக்கு சாக்குப் போக்குச் சொல்றப்பலாம் உங்க மேல சிலுவையை சுமத்துறேன். என்னை நினைத்து என் பெற்றோர் அழுறப்பலாம் உங்களை மிகவும் காயப்படுத்துறேன் இயேசப்பா என்னை மன்னியுங்க.

### மன்றாடுவோம்

எனக்காக சிலுவை சுமந்த இயேசப்பா! நீங்க சிலுவை சுமப்பதைப் பார்த்து கண்ணீர் வடிக்கும் நான், அடுத்தவர் மேல் அதே சிலுவையைப் பல வடிவங்களிலே நான் சுமத்திக் கொண்டிருக்கிறேன் என்பதை நான் நினைத்துப் பார்ப்பதே இல்லை. எங்களுடைய பாவச்சுமைகளையெல்லாம் நீங்க சுமந்தீங்க, ஆனால் நான் என் சுமையைக் கூடச் சுமக்காமல் என் வார்த்தையால, செயல்களால என் பெற்றோருக்கும் என் கூட இருக்கிறவங்களுக்கும் சுமையா இருந்து, உங்க மேல அதை சிலுவையா சுமத்திகிட்டு இருக்கேன். என் அப்பா அம்மாவுக்கு நான் சுமையாக இருக்குறப்பலாம் உங்க மேல சிலுவையை சுமத்துறேன் அப்படிங்குறத என்னை உணரச் செய்யுங்க இயேசப்பா -ஆமேன்

## 3. இயேசு முதன்முறை தரையில் விழுகின்றார்

இயேசப்பா! உங்க அவல நிலைய பார்க்கிறப்ப எனக்கு அழுகையா வருது. உங்க தலையிலிருந்து வழியுற இரத்தம் உங்க கண்களை மறைக்குது. போற பாதை உங்களுக்கு தெரியவில்லை. பளுவானச்சிலுவை தோளை அழுத்த, உடல் காயங்கள் ஓரடி எடுத்து வைக்க முடியாமல் வேதனைப்படுத்த, கால்கள் தடுமாறி கீழே விழுறீங்களே இயேசப்பா. கீழ விழுந்த உங்க மேல சிலுவை கிடக்குறப்ப உங்களுக்கு எவ்வளவு வலிச்சுருக்கும். ஆனா உங்களை தூக்கி விட யாருமே இல்லயே அங்க. பொதிநிறைந்த வண்டியை இழுக்க முடியாமல் கீழே விழுந்த காளைகளை சாட்டையால் அடித்துத் துன்புறுத்தும் வண்டிக்காரன் போல, உதவ யாருமில்லாம தவிக்கும் உங்களை, வீரர்கள் அடிமேல் அடியடித்து துன்புறுத்துறத பாக்குறப்ப கோவம் கோவமா வருது இயேசப்பா. நான் வந்து உங்களை தூக்கி விடணும்னு ஆசையா இருக்கு இயேசப்பா.

உங்களுக்கு உடல் வலியும். தோள் வலியும் அதிகமாக இருந்தாலும், உங்கள கீழ விழ வைத்தது எங்களைப் பற்றிய மன வலி தான்னு நினைக்கேன் இயேசப்பா. நீங்க எவ்வளவோ போதிச்சீங்க ஆனா நாங்க மாறவேயில்லை. எங்க மாறாத நிலையைப் பார்த்து தடுமாறி விழுந்திட்டிங்களாப்பா. உங்களை தூக்கி விட ஆசைப்படுறேன், ஆனா நானே பல நேரத்துல உங்களை கீழ விழ வைக்கிறேன் இயேசப்பா. என் கூடப் படிக்கிற நண்பர்களோடு ஒற்றுமையாக இல்லாம சண்டை போடுறப்பலாம் உங்களை விழ வைக்கிறேன். நல்ல சொற்களைத் தான் பேசனும்னு என் அம்மா அப்பாவும் ஆசிரியர்களும் சொல்லிக் கொடுத்திருந்தாலும், கோவத்தில் கெட்ட சொற்கள் பேசுறப்பலாம் உங்களை கீழ விழ வைக்கிறேன். திருப்பலிக்கு வராமல் தூக்கமே சொர்க்கம் என இருக்குறப்பலாம் உங்களை கீழ விழ வைக்கிறேன். திருப்பலிக்கு வந்தாலும் அமைதியா உங்க கூட பேசாம, பக்கத்துல உள்ளவங்க கூட பேசி மத்தவங்களுக்கு இடையூறா இருக்குறப்பலாம் உங்களை கீழ விழ வைக்கிறேன் இயேசப்பா.

### மன்றாடுவோம்

எங்கள் பாவங்களின் சுமை தாங்காமல் தரையில் விழுந்த இயேசப்பா! நாங்க செய்யுற தவறுகள் தான் உங்களை தரையில் விழ வைக்கிறது என்பதை நாங்க உணரச் செய்யுங்க. இனிமேல் ஒவ்வொரு முறையும் உங்களுக்கு எதிராக நாங்க செய்கின்ற செயல்கள் உங்களை கீழே விழச்செய்யும் அப்படிங்குறது உணர்ந்து, அந்த தவறுகளிலிருந்து நாங்க உடனே எழும்பி வர அருள் தாங்க. அப்படி நாங்க எழுறப்பலாம் உங்களையும் கை தூக்கி விடுகிறோம் என்பதை உணர்ந்து வாழ உங்க அருளைத் தாங்க இயேசப்பா - ஆமென்.

## 4.இயேசு தன் தாயாரைச் சந்திக்கிறார்

இயேசப்பா! எங்களுக்கு வலிச்சா அம்மானு தான் அழுவோம். நீங்களும் இந்த வலில அப்படித்தான கூப்பிட்டு இருப்பீங்க. எங்களுக்கு ஒரு அடி பட்டா, யாராவது எங்களை அடிச்சா அழுதுகிட்டே அம்மாகிட்ட தான் ஓடி போய் அவங்களை கட்டிப்பிடிச்சுக்குவோம். இப்ப உங்களை இவ்வளவு அடி அடிக்காங்க, வலில துடிக்கிங்க. இந்த நிலைமைல உங்க அம்மாவை சந்திக்கிங்க இயேசப்பா. எங்களைப் போல ஓடிப் போய் உங்க அம்மாவ கட்டிப்புடிச்சு ஆறுதல் பெற முடியல. ஆனா உங்க இரண்டு பேரோட சந்திப்பு பல விசயங்களை எங்களுக்கு கற்றுத் தருது. சில சந்திப்புகள் மகிழ்ச்சியைத் தரும். சில சந்திப்புகள் பாசத்தை பன்மடங்காக்கும். சில சந்திப்புகள் ஆறுதலைத் தரும். சில சந்திப்புகள் வலியைச் சுமக்கும் வலிமையைத் தரும். உங்க இரண்டு பேரோட சந்திப்பு மொத்தமா எல்லா வலிமையையும் தந்து நீங்க சிலுவை சுமக்கத் தேவையான ஆற்றலைக் குடுத்திருக்கு இயேசப்பா.

ஒவ்வொரு நாளும் நான் நிறைய பேரை சந்திக்கிறேன் இயேசப்பா. வீட்டுல என் பெற்றோர், உடன்பிறந்தோர். பள்ளியில் என் கூடப் படிக்கின்ற மாணவர்கள், ஆசிரியர்கள். பள்ளிக்கு செல்லும் போதும், திரும்பி வரும் போதும் சந்திக்கின்ற கடைக்காரர்கள், பிச்சைக் கேட்போர், மாலையில் விளையாடும் போது என் நண்பர்கள் இப்படி ஏராளமானவர்களை தினமும் சந்திக்கிறேன் இயேசப்பா. அவங்களை சந்திக்குறப்ப என் புன்சிரிப்பால் அவங்களை மகிழ்விக்காமல், என் சொற்களால் அவங்களை ஆறுதல் படுத்தாமல், முகத்தை தூக்கி வச்சுகிட்டு, கடும் சொற்களை பேசி ஏண்டா சந்திச்சோம்னு அவங்க நினைக்கிற அளவுக்கு நடந்துருக்கேன் இயேசப்பா. என்னை மன்னியுங்க. இனி நான் சந்திக்கின்ற ஒவ்வொருவரும் இனிமேல் எப்போது சந்திப்போம்னு ஆவலாக எனக்காக காத்துக்கிட்டு இருக்கிற மாறி நான் நடக்கனும். என் சந்திப்பு அவங்களுக்கு மகிழ்ச்சியை தரணும் இயேசப்பா.

### மன்றாடுவோம்

அன்பு இயேசுவே! உங்க அம்மா மரியாளின் சந்திப்பு உங்களுக்கு தொடர்ந்து சிலுவையைச் சுமக்கத் தேவையான வலிமையைத் தந்தது. அதே போல என்னுடைய சந்திப்பு என் பெற்றோருக்கு மகிழ்ச்சியையும், என் நண்பர்களுக்கு ஆற்றலையும், துன்பத்தில் இருப்போருக்கு ஆறுதலையும் தர வேண்டும் இயேசப்பா. அப்படிப்பட்ட சந்திப்புகளை நான் ஒவ்வொரு நாளும் உருவாக்கிக் கொள்ள ஆற்றலைத் தாங்க இயேசப்பா -ஆமென்.

# 5. சீமோன் உதவி செய்கிறார்

இயேசப்பா! உங்க உடல் பலம் இழந்து, சக்தியில்லாம பளுவான சிலுவையைச் சுமக்க முடியாம தள்ளாடி தள்ளாடி நடந்து போறீங்க. ஒரு கூட்டம் உங்களை வேடிக்கை பார்க்கிறது. மற்றோரு கூட்டம் பரிதாபமாக உங்களை பார்க்கிறது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை உங்களுக்கு உதவ யாருமே முன் வரல. எவ்வளவு புதுமை செஞ்சீங்க. கானாவூர் திருமணத்தில் தண்ணீரை திராட்சை இரசமா மாத்துனீங்க, குருடருக்கு பார்வை குடுத்தீங்க, இறந்தவருக்கு உயிர் குடுத்தீங்க, உங்களைத் தேடி வந்த எல்லாருக்கும் உதவி செஞ்சீங்க. இந்தக் கூட்டத்தில நிக்குறதுல பல பேருக்கு நீங்க உதவி செய்திருக்கீங்க ஆனா யாருமே உதவ முன் வரல. அந்த நிலைமையில தான் உங்களை யாருனே தெரியாத சீமோன் உங்களுக்கு உதவி செய்ய முன் வருகிறார். அவர் பார்வையில நீங்க செய்த நன்மைகள் எல்லாம் தெரியாவிட்டால் கூட துன்பப்படும் தன்னைப்போன்ற மனிதனுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற நல்ல எண்ணம் சீமோனை உங்களுக்கு உதவி செய்ய வைத்தது.

இயேசப்பா இன்னைக்கு எங்களால உங்களுக்கு நேரடியாக சீமோனைப் போல உதவி செய்ய முடியாவிட்டாலும், "சின்னஞ்சிறிய என் சகோதர சகோதரிகளுக்கு செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" அப்படினு நீங்க சொன்னத நாங்க மறக்காம, எங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு உதவி செய்யும் நல்ல உள்ளத்தை எங்களுக்குத் தாங்க. என் வகுப்பில் பக்கத்தில் இருக்கும் மாணவன் தேவையில் இருக்கிறப்ப, என்னால முடிஞ்ச உதவிய உடனே செய்யணும். என் பெற்றோருக்கு வீட்டு வேலைகளில் சின்ன சின்ன உதவிகளை மனமுவந்து செய்யணும். படிக்க தடுமாறுகிற என் நண்பர்களுக்கு என்னால முடிஞ்சத சொல்லிக் கொடுக்கணும். இப்படி நான் உதவி செய்றப்பலாம் சீமோனாக மாறுகிறேன் என்பதை நான் உணரச் செய்யுங்க இயேசப்பா!

## மன்றாடுவோம்

இயேசப்பா! உங்களுக்கு உதவி செய்ய சீமோன் வந்தது போல எங்களுக்கு உதவி செய்ய எங்கள் பெற்றோர், தாத்தா பாட்டி, ஆசிரியர்கள், உடன்பிறந்தோர், நண்பர்கள் என்று நிறைய பேரை தந்து இருக்கீங்க. இவங்கட்ட இருந்து உதவியைப் பெற்றுக்கொள்கின்ற நான் என்னால் முடிந்த உதவிகளை இவர்களுக்கும், தேவையில் இருக்கின்ற மற்றவர்களுக்கும் எப்போதும் மனமுவந்து செய்யவும், அதன் வழியாக சீமோனாக மாறவும் அருள் தாங்க இயேசப்பா -ஆமென்.

# 6. வெரோணிக்கா இயேசுவின் முகத்தைத் துடைக்கிறார்

இயேசப்பா! உங்க முகமெல்லாம் இரத்தம். உங்க தலைல உள்ள முள்முடி சதையைக் கிழிப்பதால் ஏற்படும் வலி, பஞ்சமில்லாமல் படைவீரர்கள் தரும் சவுக்கடி, மொத்தத்தில் உங்க தோற்றமே மாறிப்போன முகம். பார்த்தாலே அழுகை வர வைக்கும் முகம் உங்க முகம். ஆனா இந்த முகத்த பார்க்கத் தான் அன்றைக்கு சக்கேயு மரத்து மேல ஏறி நின்னாரு. இந்த அழகான முகத்த பார்க்கத் தான் எங்கோ இருந்து மூன்று ஞானிகள் வந்தாங்க. உங்க முகம் எத்தனை பேருக்கு நம்பிக்கையை தந்திருக்கு, எத்தனை பேருக்கு வாழ்வு கொடுத்திருக்கு. "உம் அழகான கண்கள் என்னைக் கண்டதாலே முடிந்ததென்று நினைத்த நான் உயிர் வாழ்கின்றேன்" அப்படினு நாங்க உங்க முகத்தைப் பார்த்து பாடுறோம்னா உங்க முகம் எங்களுக்கு ஆறுதலும், நம்பிக்கையும் தருது இயேசப்பா. ஆனா அந்த அழகான முகம் இப்ப இரத்தம் வழிய தூசி படிஞ்சு எப்படியோ இருக்கே இயேசப்பா. இப்படிப்பட்ட முகத்த காண முடியாம தான் அன்னைக்கு வெரோணிக்கா அக்கா ஓடி வந்து உங்க முகத்தை துடச்சாங்க. யாரை பார்த்தும் பயப்படாம, எல்லாத் தடைகளையும் தாண்டி வந்து தூசியும் இரத்தமும் படிந்த உங்க முகத்தை துணியால் துடைத்து எங்களுக்கு உதாரணமாக இருக்காங்க.

இயேசப்பா ஒவ்வொரு நாளும் நான் எத்தனையோ முகங்களை பார்க்கிறேன். அழுக்குப் படிந்த முகம், சோகமான முகம், வலி நிறைந்த முகம், யாராவது கை தூக்கி விட மாட்டார்களா என ஏங்குகின்ற முகம் இப்படி நான் சந்திக்கின்ற முகங்களை கண்டும் காணாமல் கடந்து சென்று கொண்டிருக்கிறேன். ஆனால் என் முகம் வாடும் போது, ஏங்கும் போது மற்றவர்கள் என்னைக் கண்டு கொள்ள வேண்டும் எனத் தவிக்கின்றேன். என்னை மாற்றும் இயேசப்பா. வெரோணிக்கா அக்கா போல நான் சந்திக்கின்ற முகங்களில் உள்ள சோகத்தை, வலியை, ஏக்கத்தை துடைத்து ஆறுதல் தரும் உம் பிள்ளையாக மாற எனக்கு கற்றுத் தாங்க இயேசப்பா.

## மன்றாடுவோம்

அன்பு இயேசுவே! அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பதை உணர்ந்து உம் அகத்தைப் புரிந்து கொண்டு உம் முகத்தைத் துடைத்த வெரோணிக்கா அக்கா போல நாங்களும், துணிச்சல், கருணை, அன்பு கொண்டவர்களாக மற்றவர்கள் முகம் துடைத்து அகம் மலரச் செய்யத் தேவையான நல்ல உள்ளத்தை எங்களுக்கு எப்பவும் தாங்க இயேசப்பா - ஆமென்

# 7. இயேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்

இயேசப்பா! சுட்டெரிக்கும் சூரியக்கதிர்களின் தாக்கம் ஒரு பக்கம், கொட்டமடிக்கும் படைவீரர்களின் அதட்டல்கள், அடிதடிகள் மறுபக்கம். ஊருக்கெல்லாம் உயிர்ப்பிச்சை தந்த தலைமகன் தன்னைக் காத்துக்கொள்ள முடியாமல் தள்ளாடுகிறாரே என்ற ஊராரின் அவலப் பேச்சு இன்னொரு பக்கம் உங்களை மேலும் மேலும் நிலைகுலையச் செய்கின்றது. உடல் நைந்து, உள்ளம் நொந்து மீண்டும் தலைகுப்புற கீழே விழுந்துட்டீங்களே இயேசப்பா. நீங்க திரும்பவும் கீழே விழுந்ததற்கு சிலுவையும் படைவீரர்களும் தான் காரணமா? இல்ல இயேசப்பா. சிலுவையும் படைவீரர்களும் அன்றைக்கு மட்டும் தான் காரணமாக இருந்தனர். ஆனா நாங்க திரும்பத் திரும்ப செய்கிற தவறுகள் உங்களை திரும்ப திரும்பக் கீழ விழ வைக்குது. இனி மேல் பொய் சொல்ல மாட்டேன், திருட மாட்டேன், கெட்ட சொற்கள் பேச மாட்டேன், சண்டை போட மாட்டேன், கோயிலுக்கு போகாம இருக்க மாட்டேன் இப்படி எத்தனை முறை என் அப்பா அம்மாவிடம், ஆசிரியர்களிடம் சொல்லியிருக்கிறேன். ஆனா அதை அப்பவே மறந்துட்டு திரும்பவும் அதே தப்பை செய்றப்பலாம் உங்களை திரும்பவும் கீழ விழ வைக்கிறேன் இயேசப்பா.

சிலுவையின் சுமையால் கீழ விழுந்த நீங்க உடனே எழுந்து உங்க பணயத்தைத் தொடர ஆரம்பிச்சிட்டீங்க. ஆனா நான் அப்படி இல்ல. விழுந்த கிடக்கிற இடத்துலேயே சுகம் காண்கிறேன். எழும்பி நடக்க மனமில்லாமல் இருக்கிறேன் இயேசப்பா. இல்லனா எழும்பி நடக்க பயந்து விழுந்தே கிடக்கின்றேன். தேர்வுல தோல்வி அடைஞ்சுட்டா அதோட என் வாழ்க்கை முடிஞ்சுதுனு நினைச்சு விழுந்து கிடக்கின்றேன். நான் எடுத்த முயற்சியில கீழ விழுந்திட்டா உடனே எழும்பி திரும்பவும் முயற்சி செய்யாமல் அப்படியே விழுந்து கிடக்கின்றேன். என்னை உங்களைப் போல மாற்றுங்க இயேசப்பா.

## மன்றாடுவோம்

சிலுவைப் பயணத்தில் இரண்டாம் முறை விழுந்தாலும் மீண்டும் எழுந்து நடந்த இயேசப்பா! நாங்கள் தவறு செய்து விழுந்தாலும், வாழ்க்கையில் முயற்சி செய்து விழுந்தாலும் சோர்ந்து விடாமல், அதிலே இன்பம் காணாமல் மீண்டும் எழுந்து நடப்பது தான் கிறிஸ்தவ வாழ்வு, உம் சீடத்துவ வாழ்வு என்பதை உம்மிடமிருந்து கற்றுக்கொண்டு மீண்டும் எழுந்து நடக்க எங்களுக்கு உங்க ஆற்றலைத் தாங்க இயேசப்பா -ஆமென்

## 8. இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார்

இயேசப்பா! நீங்க கீழ விழுந்து எழுந்து நடக்க ஆரம்பிச்சதும் உங்களைப் பின்தொடர்ந்து ஒரு பெரிய கூட்டம் வருது பா. ஒரு வேளை அவங்க உங்களை சிலுவையில இருந்து காப்பாத்துவாங்க அப்படினு நான் நினைச்சுட்டு இருக்கிறப்ப அந்தக் கூட்டம் ஓ னு அழ ஆரம்பிச்சுட்டு. அது தான் எருசலேம் நகரப் பெண்கள். எங்க அம்மா மாறி இருக்குற நிறைய பெண்கள் அதுல நின்னு அழுதுட்டு இருந்தாங்க. இவங்கலாம் உங்க போதனையைக் கேட்டு வியந்து பார்த்தவங்க. இவங்க குழந்தைகளை அன்போடு அரவணைச்சீங்க. இவங்க குழந்தைங்க நோய்களை நீக்கி, பேய்களை ஓட்டி குணம் தந்தீங்க. நீங்க அரசராக வந்தால் நல்லா இருக்கும்னு ஆசைப்பட்ட அப்பாவி பெண்கள். ஆனா இப்ப அது நடக்காம உங்களை சிலுவையில் அறைய கூட்டிட்டுப் போறதப் பார்த்து அழுதுட்டு இருக்காங்க. உங்களுக்கா இந்தப் பரிதாப நிலை அப்படினு நினைச்சு மாரடிச்சு புலம்புறாங்க. இவங்களைப் பார்த்து நீங்க எனக்காக அழுவதில் எந்தப் பயனும் இல்லை, உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்னு சொன்னீங்க. அன்று உங்களுக்கு நடந்த அநீதியைப் பார்த்து கையாலாகாதத்தன்மையில் இருந்த பெண்களைப் பார்த்து ஆறுதல் சொன்னீங்க இயேசப்பா. உங்க துயரத்தைப் போக்க முடியாம வெறும் கண்ணீர் அர்த்தமற்றது என்பதை எங்களுக்குப் புரிய வைச்சீங்க.

இன்றைக்கு நாங்களும் பல நேரத்துல மற்றவர்கள் துன்பப்படும் போது வெறும் பரிதாபம் மட்டும் பட்டு "ஐயோ பாவம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். வெரோணிக்கா அக்கா போல ஓடோடிச் சென்று கைதூக்கி விடுவதில்லை. குறிப்பாக குழந்தைகள் நாங்கள் பல நேரங்களில் எங்கள் பெற்றோரின் கண்ணீருக்குக் காரணமாக இருக்கிறோம். எங்களை மன்னியுங்க இயேசப்பா. என் நண்பர்கள், வகுப்புத் தோழர்கள் திடீர் இடரில் அல்லது துன்பத்தில் இருக்கும் போது வெறுமனே பரிதாப்படாமல் ஓடிச்சென்று உதவக்கூடிய துணிச்சலை எங்களுக்கு தாங்க இயேசப்பா.

### மன்றாடுவோம்

அன்பு இயேசப்பா! உங்களுக்கு ஆறுதல் சொல்ல வந்த எருசலேம் பெண்களிடம், இந்த கண்ணீர் தேவையற்றது, உங்க நிலையை நினைத்து அழுங்கள்னு சொன்னீங்க. இன்றைக்கு நாங்க எங்க தவறான வாழ்க்கையை நினைச்சு அழவும், அதை மாற்றிக் கொள்ளவும், எங்களைச் சுற்றி துன்பப்பட்டுக்கொண்டிருக்கிற மற்றவர்களைப் பார்த்து பரிதாபப்படாமல் அவர்கள் கண்ணீரைத் துடைக்க எங்களால் இயன்ற உதவிகளைச் செய்யவும் நல்ல இதயத்தையும், உள்ளத்தில் துணிச்சலையும் தாங்க இயேசப்பா ___ ஆமென்.

# 9. இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார்

இயேசப்பா! அன்று என்னைப் போன்ற 12 வயது சிறுமியை "சிறுமியே எழுந்திடு" என்று சொல்லி இறந்த சிறுமியை எழுப்பி விட்ட நீங்க இப்ப மூன்றாம் முறை விழுந்து கிடக்கீங்க. நயீன் ஊர் கைம்பெண்ணின் மகன் இறந்தப்ப, பாடையைத் தொட்டு அவனை எழுப்பி விட்ட நீங்க இப்ப விழுந்து கிடக்கீங்க. இறந்த லாசரைப் பார்த்து கல்லறையில் இருந்து எழுந்து வா என்று சொல்லி அவரை எழுப்பி விட்ட நீங்க இப்ப விழுந்து கிடக்கீங்க. எவ்வளவு கொடுமையைத் தான் நீங்க தாங்குவீங்க. குடிப்பதற்கு தண்ணீர் கூட யாரும் கொடுக்காமல் தட்டுத்தடுமாறி, விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்த நீங்க இப்ப மண்ணிலே முகம் புதைத்து விழுந்து கிடக்கீங்க. உங்களைப் பார்க்கும் போது வேதனையா இருக்கு இயேசப்பா. நீங்க இப்ப விழுந்ததற்கு என்ன காரணம் இயேசப்பா. உங்க போதனையைக் கேட்டு உங்களைப் பின்பற்றுகிறேன் அப்படினு சொன்ன கூட்டம் எங்கே போனதுனு நீங்க நினைச்சுருப்பீங்க. 3 ஆண்டுகள் உங்க கூடவே இருந்த சீடர்களைக் காணோமேனு நினைச்சு வேதனைப்பட்டிருப்பீங்க. உங்களைத் தெரியவே தெரியாது என்று சொன்ன பேதுருவை நினைத்து வருத்தப்பட்டிருப்பீங்க. இது எல்லாம் தான் உங்களை மூன்றாம் முறையாக கீழே விழ வைத்ததா இயேசப்பா?

அப்படியென்றால் இன்றைக்கு நாங்களும் உங்களைக் கீழே விழவைத்துக் கொண்டு தானே இருக்கிறோம் இயேசப்பா. புதுநன்மை எடுக்குறப்ப இனிமேல் தினமும் திருப்பலிக்கு வந்து நற்கருணை உட்கொள்வேன் என்று உறுதிமொழி கொடுத்தேன். ஆனால் பல நாட்கள் என் சோம்பேறித் தனத்தால் தூங்கிக் கொண்டிருக்கிறேன். தினமும் விவிலியம் வாசிப்பேன், உங்க பிள்ளையாக நீங்க வாழ்ந்தது போல அடுத்தவங்களுக்கு நன்மை செய்து, உண்மை பேசி வாழ்வேன் என்று உங்கட்ட சொன்னேன் ஆனா நான் அப்படி வாழவில்லை. இதுலாம் உங்களை கீழ விழ வைக்கிறது என்று இப்ப தான் உணருகிறேன் இயேசப்பா. என்னை மன்னியுங்க.

## மன்றாடுவோம்

என் அன்பு இயேசப்பா! நான் செய்த தவறுகளுக்காக நீங்க சிலுவையில் அறையப்பட்டது உண்மையென்றால் என் பாவங்களால் தான் நீங்க இப்ப விழுந்து கிடக்கீங்க அப்படிங்குறதும் உண்மை தான். இதற்காக நான் உங்கட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன் பா. இனி மேல் என் தவறுகள் உங்களை கீழே விழ விடாமல் வைக்க, நான் கொடுத்த வாக்குறுதிகளை உண்மையாக பின்பற்ற எனக்கு ஆற்றல் தாங்க இயேசப்பா. நான் உங்க பிள்ளையா வாழும் போது உங்க வேதனையைக் குறைக்கிறேன், விழுந்து கிடக்கும் உங்களை கை தூக்கி விடுகிறேன் என்பதை நான் மறவாமல் ஒவ்வொரு நாளும் வாழ அருள் தாங்க இயேசப்பா - ஆமென்.

# 10. இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

இயேசப்பா! மனித நாகரீகத்தின் ஒரு முக்கியமான அடையாளம் ஆடை. ஆடையில்லா மனிதன் அரை மனிதன் என்று சொல்வார்கள். அன்று எங்கள் ஆதிப் பெற்றோர் ஆடையில்லாமல் இருந்த போது அவர்களுக்கு தோல் ஆடையைச் செய்து தந்தை இறைவன் அணிவித்தார். ஆனால் இப்ப அவர் மகன் உங்களோட ஆடையை இந்த மனித மிருகங்கள் களைகிறார்கள். தன் அன்பு மகனுக்கு மேலிருந்து கீழ் வரை தையல் இல்லாமல் நெய்யப்பட்ட உடுப்பை அணிவித்து அழகு பாாத்தவா் உங்கள் தாய் மாியாள். ஆனால் இன்று அந்த ஆடையை பிய்த்து எடுக்கிறார்கள் அரக்கர்கள். காட்டு மலர்ச் செடிகளுக்கும் சாலமோன் அரசர் தம் மேன்மையில் கூட அணிந்திராத ஆடைகளால் உடுத்துபவர் இறைவன். ஆனால் இறைமகன் நீர் ஆடையில்லாமல் அவமானப்பட்டு நின்று கொண்டிருக்கிறீர். இதுவரை உங்களை உடல் அளவில் கொடுமைப்படுத்திய வீரர்கள், இப்போது மன அளவிலும் கொடுமைப் படுத்த வேண்டும் என்பதற்காக உங்களை அவமானப்படுத்துவதைப் பார்க்கும் போது அழுகையா வருது இயேசப்பா.

இந்த நேரத்துல நீங்க என்னைப் பார்த்து "இவங்க மட்டும் தான் என் ஆடையை களைந்து என்னை ஆடையற்றவராக ஆக்குகிறார்களா? நீ என்னை அவமானப்படுத்தவில்லையா?" என்று கேட்பது போல இருக்கு இயேசப்பா. என்னைப் போன்ற எத்தனையோ பிள்ளைங்க தினமும் உடுத்துவதற்கு நல்ல உடை இல்லாமல் இருக்கிறப்ப, நான் புதிது புதிதாக ஆடைகள் வாங்கி குவிக்கும் போதும், பழைய ஆடைகளை அப்படியே பத்திரப்படுத்தி வைத்து கரையான் அரிக்க விடுகிற போதும் உங்க ஆடையைக் களைகிறேன் இயேசப்பா. உடுக்க நல்ல உடையில்லாமல் பள்ளிக்கு வரும் பிள்ளைகளை, அவர்களின் கிழிந்த ஆடையை வைத்து கிண்டல் அடிக்கிற போது உண்மையாகவே உங்க ஆடையைக் களைகிறேன் இயேசப்பா. என் பேச்சுகள், நடவடிக்கைகள் மற்றவர்களைக் கூனிக்குறுகி நிற்க வைக்கும் போது நான் உங்க ஆடையைக் களைகிறேன். என்னை மன்னியுங்க இயேசப்பா.

### மன்றாடுவோம்

ஆடைகள் களையப்பட்டு அவமானப்படுத்தப்பட்ட எங்கள் அன்பு இயேசுவே! எங்களிடம் இருக்கும் ஆடைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும், தேவையில்லாமல் ஆடம்பரத்திற்காக ஆடைகள் வாங்கிக் குவிக்கின்ற மனநிலைகளை அகற்றவும், எங்கள் வார்த்தைகளால் செயல்களால் பிறரை அவமானப்படுத்தாமல் இருக்கவும் எங்களுக்கு உங்கள் அருளை நிறைவாகத் தாங்க இயேசப்பா -ஆமென்

## II. இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்

இயேசப்பா! காட்டிலும் மேட்டிலும் பளுவான சிலுவையோடு நடந்து வந்த களைப்பு. வீரர்களின் கசையடி உங்களை மயக்கத்தின் உச்ச நிலைக்கே கொண்டு போய் விட்டது. மயக்கத்தில் இருந்த உங்க உடலை சிலுவைக்கு மேலாகக் கட்டையைப் போல் தூக்கிப் போடுகிறார்கள். நோயாளிகளைத் தொட்டு குணமளித்த உங்க கைகளை கொடிய ஆணி கொண்டு அறைகிறார்கள். நீங்க துடிக்கிறதப் பாக்குறப்ப என்னால தாங்க முடியல இயேசப்பா. கூர்மையான இரும்பாணிகள் உங்க நாடி நரம்புகளையும் சதையையும் பதம் பார்த்து சிலுவை மரத்திலும் ஊடுருவிப் பாய்கிறது. ஆயிரமாயிரம் மக்களுக்கும் எங்களைப் போன்ற குழந்தைகளுக்கும் ஆசியளித்து சுகம் தந்த கைகளையும், ஏழைகள் வாழும் தெருக்களில் எல்லாம் இறங்கி நடந்த கால்களையும் கூரிய ஆணிகள் துளைத்ததால் நீங்க சாவு ஓலமிட்டு கதறுவது யாருக்கும் கேட்கவில்லையா இயேசப்பா.

இன்று இந்தக் குமுகாயம் உங்கள் மரண ஓலத்தைப் பார்த்து கண்ணீர் வடிப்பது நீலிக் கண்ணீர் போல் அல்லாவா இருக்கிறது இயேசப்பா. குழந்தைகள் எங்களுக்கு எதிராக ஒவ்வொரு முறையும் பல்வேறு வன்முறைகளை செய்கின்ற போதெல்லாம் உம்மைத் தான் ஆணிகளால் அறைகிறோம் என்பதை இந்தக் குமுகாயம் உணரவில்லையே இயேசப்பா. கடியப்பட்டணம் போல, பல இடங்களில் எங்களைப் போன்ற அப்பாவிக் குழந்தைகள் பணத்திற்காக. நகைக்காக, உடல் உறுப்புகளுக்காக கடத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும் தொடர்ந்து உம்மைச் சிலுவையில் அறைந்து கொண்டிருக்கிறது. பச்சிளம்குழந்தை என்று கூடப் பாராமல் பாலியல் வன்முறையில் குழந்தைகளைச் சிதைக்கும் போது உமது கைகள் ஆணியால் துளைக்கப்படுகிறது. அன்பு இயேசுவே! எங்களைப் போன்ற குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் தடுக்க வேண்டாம் என்று சொல்லி அன்போடு அரவணைத்தீரே. இன்று இந்த குமுகாயம் உம்மைப் போல் அன்பு இதயம் கொண்டதாக குழந்தைகளை அரவணைத்துக் கொள்ளவும், எங்களுக்கு எதிராக வன்முறைகள் நடக்கும் போது அதனை எதிர்த்து போராடுவதன் மூலம் உமக்கு ஆறுதல் தருகிறார்கள் என்பதை உணரவும் செய்தருளும் இயேசப்பா.

### மன்றாடுவோம்

எமக்காகச் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே! எங்கள் பாவங்களால் உம்மை மீண்டும் மீண்டும் சிலுவையில் அறையாமல் இருக்கவும், உமக்கு ஆறுதல் தரவும் எங்கள் நடுவில் நீர் தந்திருக்கின்ற குழந்தைகளை மாண்போடும், பாதுகாப்போடும் நடத்தவும் தேவையான பக்குவமான மனதை தாரும் இயேசப்பா -ஆமென்.

# 12. இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

இயேசப்பா! மூன்று உலகங்களையும் அரசாளும் நீங்க இப்ப மூன்று ஆணிகளில் தொங்கிக்கொண்டு இருக்கீங்க. அன்பால் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே உறவுப் பாலம் அமைத்த நீங்க, அவற்றுக்கிடையே தொங்கிக்கொண்டு இருக்கீங்க. கொஞ்சம் கொஞ்சமாக உங்க உயிர் போய்க்கிட்டு இருக்கிற அந்த நேரத்தில் கூட உங்களை ஏற்றுக் கொண்ட நல்ல கள்வனுக்கு விண்ணகம் தருவதாக வாக்குறுதி கொடுத்தீங்க. உங்க அம்மா அன்னை மரியாளை எங்களுக்கு அம்மாவா தந்தீங்க. அவ்வளவு வேதனைகளுக்கு மத்தியிலும் இவ்வளவு நன்மை செய்ய உங்களால மட்டும் தான் இயேசப்பா முடியும். நா வறண்டிட, உடல் தளர்ந்திட, கண்கள் இருண்டிட, நாடெங்கும் இருள் உண்டாகிட, திருக்கோயிலின் திரை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்திட, நிலம் நடுங்கிட, பாறைகள் பிளந்திட, கல்லறைகள் திறந்திட என் ஆவியை உங்களுக்காக தருகிறேன், என் சிந்தையெல்லாம் கலந்திருக்கும் உங்களுக்காக என் உயிரையே கையளிக்கிறேன் என்று சொல்லி எங்களுக்காக சிலுவையில் உயிர் விட்டீங்களே இயேசப்பா. உங்களுக்கு நன்றி. எங்களுக்காக, எங்கள் பாவங்களுக்காக உங்க உயிரையே ஈகமாகத் தந்த இயேசப்பா! உங்க இறப்பு எங்களுக்கு மீட்பைத் தருகிறது. அந்த இறப்பு தான் எங்களை கிறிஸ்தவர்களாக மாற்றுகிறது என்பதை நாங்கள் உணரச் செய்யும்.

எங்கள் சொற்கள் மற்றும் செயல்கள் மற்றவர்களுக்கு வாழ்வு தர வேண்டுமே தவிர, மற்றவர்கள் அழிவிற்கு ஒரு போதும் காரணமாக இருக்கக் கூடாது என்பதை உங்க இறப்பு எங்களுக்குக் கற்றுக் கொடுக்குது இயேசப்பா. நாங்கள் உங்க பிள்ளைகள் என்றால் உங்களைப் போல எங்கள் வாழ்வை மற்றவர்களுக்காக ஈகம் செய்யக்கூடிய நல்ல மனதோடு வாழ வேண்டும். குழந்தைகளாகிய நாங்கள் எங்களால் இயன்ற சின்ன சின்ன தியாகங்களை செய்வதன் வழியாக உங்கள் இறப்பை அர்த்தமுள்ளதாக மாற்ற வேண்டும் இயேசப்பா. இறப்பதற்கு முன்னால் சிலுவையில் உங்களைத் துன்புறுத்தியவர்களைக் கூட நீங்க மன்னிச்சீங்க. அது போல நாங்களும் பிறரை மன்னிக்கவும், பகைவரையும் அன்பு செய்யவும் நல்ல இதயத்தைத் தாங்க இயேசப்பா.

## மன்றாடுவோம்

எமக்காய் சிலுவையில் உயிர் நீத்த அன்பு இயேசுவே! நாங்களும் உம்மைப் போல பிறருக்காய் வாழவும், பிறர் நலமாக, மகிழ்ச்சியாக வாழ எங்கள் வாழ்வைக் கையளித்து எங்களால் இயன்ற ஈகங்களைச் செய்ய முன்வரவும் தேவையான ஆற்றலைத் தாங்க இயேசப்பா -ஆமென்.

# 13. தாயின் மடியில் இயேசுவை வளர்த்துகிறார்கள்

அம்மா மரியே! தமிழ்ப் புலவர் திருவள்ளுவர் சொல்லியருக்கிறார் "ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்" என்று. ஆனால் இங்கே உங்க மகன் இயேசுவை "இவரே என் அன்பார்ந்த மகன்" என்று தந்தை கடவுள் சொல்லியும் கூட இந்த மக்கள் கூட்டம் நம்பாமல், அவர் மீது பொய்க்குற்றம் சுமத்தி இதோ சிலுவையில் அறைந்து கொன்று வீட்டது. இறந்த உம் மகனின் உடல் இதோ உம் மடியில் இப்போது. நான் கீழே விழுந்தாலே என் அம்மா பதறிப் போய் விடுவார்கள் தாய் மரியே. ஆனால் இப்போது உங்கள் மகன் இயேசுவின் உயிரற்ற உடல் உங்கள் மடியில். எந்தத் தாய்க்கும் வரக்கூடாத வேதனை இது. இதற்குத் தான் எகிப்திற்கு தூக்கிக் கொண்டு ஓடுனீங்களா அம்மா. இதற்குத் தான் பொத்தி பொத்தி வளர்த்தீங்களா அம்மா. முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் சிமியோன் சொன்ன இறைவாக்கு இன்று நிறைவேறி விட்டதே அம்மா. ஓய்வே அறியாமல் ஓடிக் கொண்டே இருந்த கால்கள், நன்மை செய்து கொண்டே சென்ற கைகள் இப்போது சலனமின்றி உம் மடியில் தூங்குகிறதே அம்மா.

அம்மா மரியே! இந்த நேரத்துல எங்களைப் போல குழந்தைகளின் அம்மாக்களுக்காக உங்ககிட்ட வேண்டுகிறேன் அம்மா. உங்களைப் போல தாங்கள் பெற்ற குழந்தைகளை இந்த குமுகாயத்திற்காக உவந்தளிக்கக்கூடிய ஆற்றலைத் தாங்க. எங்களைக் குமுகாய அக்கறை உள்ள பிள்ளைகளாக வளர்க்க அவங்களுக்குப் பரந்த மனதைத் தாங்க அம்மா. உங்க வாழ்க்கையில் நடந்த எல்லாவற்றையும் இறைத்திருவுளம் என்று ஏற்றுக்கொண்டீங்களே, அப்படிப்பட்ட இதயத்தை எங்க பெற்றோருக்கு தாங்க அம்மா. உங்களுக்கு நேரிட்ட எல்லாக் துன்பங்களையும் பொறுமையோடு தாங்கிகிட்டீங்களே அப்படிப்பட்ட உள்ளத்தை எல்லா பெற்றோருக்கும் கொடுங்க அம்மா. உங்க மகன் இயேசு எந்த தப்புமே செய்யாமல் இருந்தும் சிலுவையில் இறந்து உங்க மடியில் இருக்கிற போதும் கடவுளையோ மற்ற யாரையோ பழிக்காமல் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டீங்களே அந்த நல்ல மனதைத் தாங்க அம்மா.

## மன்றாடுவோம்

அன்பு அம்மா மரியே! உம்மைப் போல எங்கள் பேற்றோரும் தங்கள் குழந்தைகளை பிறரன்புப் பணிகளுக்கும், இறைப்பணிக்கும் மனமுவந்து ஒப்புக்கொடுக்கவும், நீர் கொண்டிருந்த இறையாட்சியின் விழுமியங்களை எம் பெற்றோர் எங்களுக்கு ஊட்டி வளர்க்கவும் தேவையான அருளைத் தாங்க அம்மா -ஆமென்

# 14. இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்

இயேசப்பா! மாட்டுத்தொழுவத்தில் பிறந்த நீங்க, மாற்றான் தோட்டத்து கல்லறையில் அடக்கம் செய்யப்படுறீங்க. அனைத்து உலகங்களையுமே அரசாண்ட நீங்க ஆறடி நிலத்தில் மறைகிறீங்க. ஆணவக்காரார்கள் உங்கள் அடக்கத்தோடு உங்க வாழ்க்கை முடிந்தது என நினைத்து அக்களிக்கிறார்கள். நெஞ்சத்தில் இடம் கேட்ட உங்களுக்குக் கல்லறையில் தான் இடம் கொடுத்திருக்கிறார்கள் இயேசப்பா. மனதில் இடம் கேட்ட உங்களுக்கு மண்ணில் தான் இடம் கிடைத்திருக்கிறது இயேசப்பா. உண்மை ஒரு போதும் உறங்காது, நீங்கள் முன்னறிவித்தபடியே உயிர்தெழுவீர்கள் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் இயேசப்பா. நீங்கள் கல்லறையில் இருந்தாலும் இந்தக் கல்லறை வழியாக இந்த மனுக்குலத்திற்கு மேலான பாடத்தைக் கற்றுக்கொடுக்கீங்க.

அவனியைப் படைத்தாளும் ஆண்டவராகிய உங்களுக்கே ஆறடி நிலம் தான் கிடைத்தது ஆனால் இந்த மனிதர்கள் ஏதோ இந்த உலகத்திலேயே தங்கி விடப் போகிறவர்கள் போல ஆசைப்படுறாங்க இயேசப்பா. பிறக்கும் போது எதையும் கொண்டு வரல, இறக்கும் போதும் எதையும் கொண்டு போகப் போறதில்லனு தெரிஞ்சும் ஏன் இயேசப்பா இப்படி அலையிறாங்க? இன்னைக்கு இந்த மனிதர்கள் அடக்கம் செய்ய வேண்டியது நிறைய இருக்குப்பா. மனிதர்களை ஆட்டிப் படைக்கும் ஆணவத்தை அடக்கம் செய்ய வேண்டும். நான், எனது என்ற தன்நலத்தை அடக்கம் செய்ய வேண்டும். தனக்கு வழக்கறிஞராகவும் மற்றவர்களுக்கு நடுவராகவும் இருக்கும் எதிர்மறை எண்ணங்களை அடக்கம் செய்ய வேண்டும். மற்றவர்களைப் பற்றி எப்போதும் தவறாகப் புறணி பேசுவதை அடக்கம் செய்ய வேண்டும். அலைபேசி, முகநூல், புலனம், தொலைக்காட்சித் தொடர்படம் என ஆன்மாவைத் தொலைக்கும் மெத்தனப்போக்கை அடக்கம் செய்ய வேண்டும். குழந்தைகளாகிய நாங்கள் இத்தகைய எங்களை அழிக்கும் செயல்களில் ஈடுபட்டு எங்கள் குழந்தைத்தனத்தை அடக்கம் செய்து விடாமல் இருக்க எங்களுக்கு ஞானத்தைத் தாங்க இயேசப்பா.

## மன்றாடுவோம்

அன்பு இயேசப்பா! நீங்க கல்லறையில் எங்களுக்காக மூன்று நாள் இருந்தீங்க. அந்தக் கல்லறையில் நாங்களும், எங்களிடம் இருக்கிற தேவையில்லாத எல்லா கெட்ட பண்புகளையும், ஆசைகளையும் அடக்கம் செய்து விட்டு உங்களோடு புதிய மாந்தர்களாய் உயிர்த்தெழுந்து உங்க பிள்ளையா எப்பவும் வாழத் தேவையான அருளையும் ஆற்றலையும் தாங்க இயேசப்பா - ஆமென்.



## இளைஞரின் பாதையில்

# சிலுவைப் பாடுகள்

குழந்தைப் பருவத்திற்கும் முதுமைப் பருவத்திற்கும் இடைப்பட்டதே இளமைப்பருவம். இதனை இரண்டும் கெட்டான் பருவம் என்பர். இளங்கன்று பயமறியாது செய்யும் வெற்றிச்செல்களும் சறுக்கல்களும் இதில் அடங்கும். வயது கோளாறுகளும் அதனால் விளையும் உணர்வுச் சிக்கல்களும் இப்பருவத்தில் அதிகம். தற்கொலைகளும் கொலைகளும் இப்பருவத்தில் தான் தலைதூக்கி நிற்கின்றன. இப்பருவத்தில் உச்சத்தைத் தொட்டவரும் உண்டு. பாதாளத்தில் வீழ்ந்தவரும் உண்டு. இயேசு இளைஞன் தன் மீட்புச் செயலைப் வெளிப்படையாகத் துவங்கியதும் அதனை வெற்றிகரமாக நிறைவு செய்ததும் இப்பருவத்தில் தான் என்பதனை மறக்க வேண்டாம்.

இளமை இன்பகரமானது, விறுவிறுப்பு நிறைந்தது. புதுமைகள் புதைந்தது. அது ஒரு இளவேனிற் காலம். ஆற்றல் நிறைந்த அன்புக் காலம். இளமையில் இருக்கும் பல நற்குணங்கள் முதுமையில் இருப்பதில்லை. இளமை புதியதை நாடும்; பரந்த கண்ணோட்டம் கொள்ளும்; சாதி, சமய, பேதம் கொள்ளாது. நட்பு பாராட்டும்; கூடிமகிழ்ந்து கொண்டாடும்; முன்னேற்றம் காணும்; தடைகளை உடைக்கும்; உண்மையை உரைக்கும்; அறச்சினம் பழகும்; இது இளமையின் இயல்பு. இந்த இளமையின் எதார்த்தங்களை இளைஞன் இயேசுவில் தேடுவதே இச்சிலுவைப்பாதை. ஆம் இச்சிலுவைப் பாதையின் 14 நிலைகளும் இளமையின் 14 உண்மையான குணங்களை உள்ளடக்கியது. இளைஞர் இயேசுவின் ஆற்றலோடு நம் இளைஞர்கள் அதே துடிப்பைப் பெற்றிட இப்புனித நிகழ்வில் பங்கெடுப்போம்.

அருட்தந்தை ஜெபநாதன்



# 01

## முதல் நிலை

## இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

"இறைமகன்" என்று தன்னை அடையாளப் படுத்தியதற்காக இயேசு சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிடப்படுகிறார். தன்னை அடையாளப்படுத்துவது என்பது இன்றைய இளையோரின் முக்கியப் பணியாக உள்ளது. நான் யார்? என ஆய்ந்து தனக்கான ஓர் அடையாளத்தையும் ஒப்புயர்வையும் நிலைநிறுத்த ஒவ்வொரு இளைஞரும் விருப்பம் கொள்வதுண்டு. பெயருக்குப் பின்னால் பட்டங்களைச் சேர்க்கவும், "நான் ஒரு தொழிலதிபர், பொறியாளர், மருத்துவர், அரசியல் பெருமகனார்" இதுபோன்ற பதவிகளில் தன்னை அமர்த்திக் கொள்ளவும் இளையோர் வருந்தி உழைக்கின்றனர்.

இளைஞன் இயேசுவும் "நல்ல போதகர்" என்ற பட்டத்தைப் பெற்றார். தான் "இறைமகன்" எனவும் நிலைநாட்ட முயன்றார். ஆனால் இயேசுவின் அடையாளத்திற்குக் கிடைத்த பரிசு சிலுவைச் சாவு. பட்டங்கள் பெறுவதும் பதவியில் அமர்வதும் எளிதான காரியமல்ல. பாடத்தில் தோற்று தோற்று எழுதியவர்களும் பல்வேறு சிக்கல்கள், இடையூறுகள், இழப்புகள் நடுவில், அவற்றை நிறைவு செய்தாலும் வேலை கிடைக்காமல் திண்டாடியவர்களும் தன் படிப்புக்குத் தொடர்பே இல்லாத துறையில் காலக் கட்டாயத்தினால் அமர்ந்தவர்களும் உண்டு. "போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும்", "ஒரு நாள் நான் என்னை நிலைநிறுத்துவேன்" என்ற எண்ணம் இளமைக்கு உண்டு. "உதவாக்கரை" என இகழப்பட்டவன் உயர்ந்து நிற்பதில்லையா?

"பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பு அளிக்காதீர்கள; அப்போது தான் நீங்களும் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள்" மத் 7:1.

**மன்றாடுவோம் :**

இயேசுவே! எத்தனை தீர்ப்புகள் இளைஞரை மதிப்பற்றவராக்கினாலும் உம்மைப் போல் துணிந்து ஏற்க வரம் தாரும்.



# 02
## இரண்டாம் நிலை

**இயேசுவின் தோளில்**
**பாரச்சிலுவை சுமத்தப்படுகிறது**

படிக்கும் காலங்களில் சீராட்டிப் பாராட்டப்பட்டவர்கள் வாழ்வின் அடுத்தக் கட்டத்தில் காலடி எடுத்து வைக்கும்போது வேலைக்குச் செல்ல வேண்டும், சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற சிலுவைச் சுமையினால் அழுத்தப்படுகின்றனர். இந்த அழுத்தம் நன்மைக்குத் தான் என்றாலும் இது ஒரு கடினமான அல்லது அறைகூவலான காலம் தான். இயேசு பிறருடைய சுமையை சிலுவையாகத் தன் மேல் போட்டுக் கொண்டுள்ளார். அவரைப்போல் பிறருடைய சுமையையும் குழுகாயத்தின் சுமையையும் தன்மேல் போட்டுக் கொள்ளும் பக்குவம் இளமைக்கு உண்டு. நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதும் இளைஞர் மன்றம், சுவைஞர் மன்றம் என அமைத்து பொது நன்மைக்காக குழுகாயப்பணிக்குத் தன்னை உவந்தளிப்பதும் இப்பருவத்திலே தான்.

இளைஞர் இயேசு மனுக்குலத்தின் பாவச் சுமையைச் சிலுவையாகத் தன் தோளில் ஏற்றுக் கொள்கிறார். ஆம், இளமை பிறருடைய சுமையை விரும்பி ஏற்கும். வருந்தி வண்டி இழுக்கும் முதியோரைக் கண்டால் விரைந்து சென்று உதவும் குணம் இளமைக்கு உண்டு. பேருந்தில் நிற்க இயலாதோருக்கு இடமளிப்பது இளையோரே. ஆம்! இளமை இரக்க குணமுடையது. பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக உணரும் இளகிய மனம் படைத்தது. தந்தையை இழந்த குடும்பங்களில் இளமை குடும்ப சுமையை ஏற்று சுமைதாங்கியாக நிற்பது இல்லையா? இளமை சுமையை விரும்பி ஏற்கும்.

"ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்" (கலா 6:2).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! இளைஞரின் வாழ்வில் பிறரின் சுமையை விரும்பி சுமக்கும் உள்ளம் தாரும்.



# 03

## மூன்றாம் நிலை

### இயேசு முதல்முறை தரையில் குப்புற விழுகிறார்

வாழ்க்கைப் பாடங்களை கற்றுக் கொள்ளும் போது வீழ்ச்சி என்பது தவிர்க்க இயலாதது. நடைபழகும் குழந்தை தத்தி தத்தி தவறி விழுவதும் பின் எழுவதும் இயல்பு தானே. அது போல் வாழ்வின் இரண்டாம் கட்டத்தில் அடி வைக்கும் இளைஞனும் சில சறுக்கல்களைச் சந்திக்க நேருகிறது. தோல்வியே அறியாது குழந்தைப்பருவத்தைக் கடந்து வந்தவர்களுக்கு இது பற்றின்மையையும் மனச்சோர்வையும் ஏற்படுத்தும்.

விழுவது இயல்பானதுதான். ஆனால் வீழ்ந்தே கிடப்பது நன்றன்று. சிகரம் தொட நினைப்பவன் சிலந்தி வலையில் சிக்கலாமா? அதனைக் கிழித்தெறிந்து முன்னேற வேண்டும் அல்லவா? இளைஞனைச் சிறைபிடிப்பவை வெறும் சிலந்தி வலைகளே. அவற்றை உதறித் தள்ளிவிட்டு முன்னோக்கிச் சென்றிட இளமைக்கு ஆற்றல் உண்டு.

சிலுவையின் சுமை தாங்காமல் இயேசு தரையில் விழுகிறார். விழுந்தாலும் விரைந்து எழுந்திடும் குணம் இளமைக்கு உண்டு. வாழ்வில் வரும் மேடு பள்ளங்களை ஆய்ந்தறியாது தவறி விழுவதும் பின்பு திருந்தி எழுவதும் இளமையின் பண்பு. தன்னையே திருத்திக் கொள்வதும் மாற்றிக் கொள்வதும் இளமைக்குப் புது ஊக்கம் தருவது. இளைஞர் இயேசு எழுந்தார், நடந்தார். வீழ்ச்சியில் துவழ்வதும், வாழ்வை முடிப்பதும் கோழைத்தனம் என்பதை உணர்ந்து எழுவோம், முன்னேறுவோம்.

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவா 12:24).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! தன் வீழ்ச்சியிலிருந்து இளைஞன் உயர்வு கண்டிட வரம் தாரும்.



# 04
## நான்காம் நிலை

### இயேசு தன் தாயைச் சந்திக்கிறார்

குழந்தைப் பருவத்தில் உடனிருந்தவர்கள், உணவூட்டியவர்கள் இளமையிலும் ஊக்கமூட்டினால் இளையோர் சிறப்பாக முன்னேறுவர். துன்பத்தில் ஆறுதல் அளிக்கும் ஒரு சொல், நான் இருக்கிறேன் என்கிற ஒரு பார்வை, ஒரு கை பார்க்கலாம் இணைந்து செல்வோம் என்னும் ஒரு தோழமை இருந்துவிட்டால் எவ்வளவு கடின அறைகூவல்களையும் எளிதில் இளமை கடந்துவிடும். சில இளையோருக்கு உற்றார் உறவுகள் உறுதுணையாய் இருக்கின்றனர். ஆனால் பலருக்கு அது எட்டாக்கனியாகி விடுகிறது. முட்டி மோதிதான் முன்னேற முடிகிறது. அடிப்படைத் தேவைகளும், கடமைகளும், குடும்பச் சூழல்களும், குமுகாயச் சூழல்களும் கூட இளைஞனை உந்தித் தள்ளும் ஆற்றல்களாகிவிடுகின்றன.

பாடுகளின் நடுவில் பரமனின் கண்கள் தன் தாயைச் சந்திக்கின்றன. சோர்வடைந்த உடலுக்கு ஊக்கமளிக்க தாயின் சந்திப்பு தேவைப்படுகிறது. இளமைக்கு ஊக்கமளிக்க தூண்டுகோல் தேவை. இளைஞனுக்கு உந்து ஆற்றலாகவும் இளைஞர்களை ஊக்குவிக்கவும் சரியான வழிகாட்டி அமைந்துவிட்டால் இமயத்தையும் எளிதில் கடப்பர். அந்த உந்து ஆற்றலாக இருப்பவர்தான் இளைஞர்களின் வாழ்வில் தலைவராக இருப்பார். அந்த உந்துஆற்றல் பெற்றோராகவோ, நண்பராகவோ, ஆசிரியர்களாகவோ உலகத் தலைவர்களாகவோ, ஆற்றலாளர்களாகவோ, விளையாட்டு வீரராகவோ, நடிகர்களாகவோ அல்லது தெய்வநம்பிக்கையாகவோ இருக்கலாம்.

“என் உள்ளத்தில் ஆவி என்னை உந்துகிறது” (யோபு 32:18).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! எனக்கு உந்து ஆற்றலாக இருப்பவர்களை அடிக்கடி சந்தித்து உயர்வடைய வரம் தாரும் - ஆமென்.



# 05
## ஐந்தாம் நிலை

**இயேசுவுக்கு**
**சீமோன் உதவி செய்கிறார்**

மாந்த வாழ்வில் பிறருக்கு உதவுவதும் பிறரிடமிருந்து உதவியைப் பெறுவதும் இயல்பானது. பிறரிடமிருந்து எதையும் பெற மாட்டேன் என்றாலும், பிறருக்கு நான் எந்த உதவியும் செய்யமாட்டேன் என்றாலும் இழப்பு நமக்குத்தான். நம் குமுகாயக் கட்டமைப்பே அண்டை அயலாருடன் கூடி வாழ்வது தான். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை உண்டு. இளமையில் உதவி என்பது இன்றியமையாதது. இளைஞர்கள் முன்னேற வடிகால் அமைத்து தரப்பட வேண்டும். வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். தொடர் ஏமாற்றங்களையோ இழப்புகளையோ எதிர்கொள்ளும் ஆற்றலற்றவர்களாக இன்றைய இளையோர் உள்ளனர். எனவே இளையோருக்கு உதவுதல் சாலச் சிறந்தது.

இறைமகனுக்கு மாந்த உதவி தேவைப்படுகிறது. இயேசுவுக்கு உதவ சீமோன் முன் வருகின்றார். இளையோர் ஏற்றம் பெற உதவி தேவைப்படுகிறது. தங்களது குறிக்கோளை எட்டிப்பிடிக்க, கைகொடுத்து தூக்கிவிட சீமோன்கள் தேவைப்படுகின்றனர். சறுக்கல்களில், பின்னடைவுகளில் உதவிக்கரம் கிடைத்தால் அவ்வுதவி அவனை வெற்றிப் பாதையில் இட்டுச்செல்லும். வகுப்பறையில் ஆசிரியரின் கைகள், இல்லத்தில் பெற்றோரின் கைகள், பணித்தளத்தில் பட்டறிந்தோர் கைகள் எனக் கிடைக்கும் வாய்ப்புகளை பற்றிப் பிடித்து செழித்து வளர வேண்டும் இளமைக் கொடி.

"அன்பர்களே! நாங்கள் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே: சோம்பேறிகளுக்கு அறிவு புகட்டுங்கள்; மனம் தளர்ச்சியுற்றவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள; வலுவற்றோர்க்கு உதவுங்கள்" (1தெச 5:14).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! இளைஞர்களை உயர்த்திட ஊன்றுகோலாயிருக்கும் உதவியாளர்களை இனம் காண வரம் தாரும். ஆமென்.



# 06
## ஆறாம் நிலை

**வெரோணிக்கா இயேசுவின் முகத்தைத் துடைக்கிறார்**

அவரைப் போல் வாழ வேண்டும், இவரைப்போல் வாழ வேண்டும் என்றும், நான் நானாக வாழ வேண்டும் என்ற குறிக்கோள் இல்லாமலும் இளையோர் பலரைப் பின்பற்ற துடிக்கின்றனர். ஒப்பனை இல்லாத உண்மை முகத்தை வெளிக்காட்ட மறுக்கிறது இளைய மனம். இன்னும் கொஞ்சம் நிறமாக தோன்ற வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொள்கின்றனர். தனது மாண்பை குலைக்கின்ற வகையில் கூட அவர்களின் வெளி அலங்காரங்களும் முடி அலங்காரங்களும் சில வேளைகளில் அமைந்து விடுகின்றன. இந்த வெளிவேடங்கள் முகமூடிகள் தேவையற்றவை என இளையோர் உணர்வது எப்போது? முகத்திரை விலக்கி உள்ளத்தை அலங்கரிப்பது எப்போது? யேசுவின் முகம் துடைத்து தனது நல்ல உள்ளத்தை உலகிற்கு காட்டிய வெரோணிக்கா போல் இளையோர் வாழ வேண்டும்.

இயேசுவின் இரத்தக்கறை படிந்த திருமுகத்தை வெரோணிக்கா துடைக்கிறார். அதற்குப் பரிசாக தனது முகச்சாயலை அத்துணியில் பதிக்கிறார் இறைமகன் இயேசு. இளைஞன் தன் முகமூடிகளை களைந்துவிட்டு தனது தனித்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். மாறாக பிறரது நகலாக இருப்பதே போதும் என நிறைவு கொள்கிறான். அலங்காரங்களை கொண்டு தனது உண்மை இறைச்சாயலை மறைத்து வாழ்கிறான். அவனது போலி முகத்திரையை கிழித்து உண்மை இறைச்சாயலை வெளிக்கொணரும் வெரோணிக்காள் யார்?

"கடவுளது சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும் தூய்மையிலும் வெளிப்படும்" (எபே 4:24).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! இளைஞர்கள் போலித்தனங்களை விலக்கி உண்மையாக வாழ வரம் தாரும். ஆமென்.



# 07

## ஏழாம் நிலை

### இயேசு இரண்டாம் முறை
### தரையில் விழுகிறார்

அறியாத வயது; புரியாத பருவம்; இந்த இளமைப் பருவம். கவர்ந்திழுக்கும் எல்லா திசைகளிலும் பயணப்பட துடிக்கும் கால்கள். நல்லது கெட்டது புரியாது சில வேளைகளில் தவறுவதும் உண்டு. முன்னெச்சரிக்கை கிடைத்தாலும் செய்து பார்த்தால் என்ன என்ற அளவிலா துணிவு கொண்டு தவறி தரையில் விழுந்து கிடக்கிறான் இளைஞன். அப்படியே விட்டு விடலாமா? தவறியவனைத் தாங்கிப் பிடிப்போம். மீண்டும் எழுந்திட நல்வழி பயணிக்க தொடர்ந்து உதவுவோம். இளையோரை எதிரிகளாக பாவிப்பதையும், ஓரங்கட்டுவதையும் ஒழிப்போம். இளையோரை சிறைபிடிக்கும் காதல், குடிபோதை, ஊடகம் எதுவாக இருந்தாலும் சொல்லி சொல்லி திருத்துவோம். விழுந்தோரை தூக்கிவிடுவோம்; நல்வழிபடுத்துவோம். உணர்த்திடுவோம், இளமைப் பருவத்தை இன்பமாய் கடந்துவர வழிகாட்டுவோம்.

இயேசு உடல் பலவீனத்தால் இரண்டாம் முறை கீழே விழுகிறார். தவறுவது மாந்த இயல்பு. இளமையில் தவறுதல் இயல்பானதே. இளைஞரின் தவறுகளை முன்னிறுத்தி முத்திரைகுத்தும் இழிச்செயலை தவிர்ப்போம். அவர்கள் மீண்டும் எழுந்து திருந்தி வாழ வாய்ப்பளிப்போம். இளைஞரை விழத்தாட்டும் தடைக்கற்களைக் குறித்து எச்சரிக்கையூட்டுவோம். ஊடக மோகத்தில், குழுகாய வலையில் இளைஞர் சிக்கி சிறைப்பட்டுள்ளனரா? அவர்களது நிகழ்காலம் ஊடக அடிமைத்தனத்தில் செலவிடப்படுகிறதா? தன் சிந்தனையின்றி இன்றைய இளையோர் வீழ்ந்து கிடக்கின்றனரா? துணையிருப்போம், தூக்கிவிடுவோம்.

“நான் புழுதியில் வீழ்ந்து கிடக்கின்றேன்: உம் வாக்கின் படி எனக்கு வாழ்வளித்தருளும்” (திபா 119:25).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! குழுகாய வலை மாயையில் மூழ்கிக் கிடக்கும் இளையோரை மீட்டருளும் - ஆமென்.



# 08
## எட்டாம் நிலை

### எருசலேம் மகளிருக்கு
### இயேசு ஆறுதல் சொல்கிறார்

எதையும் எதிர்பார்க்காமல் உதவும் மனம் கொண்டோர் இளையோர். சாதி, மத, இன, பேதம் கொள்ளாமல் ஒத்த வயதினரோடு தோழமையில் கை கோர்ப்பார்கள். அவர்கள் மனது வைத்தால் இமயமும் இடுப்பளவுதான். திடீர் இடரோ பேரிடரோ எதுவாக இருந்தாலும் களமிறங்குவது இளையோர்தான். பிறர் துன்பத்தில் உதவிக்கைகளை நீட்டுவோரும் அவர்களே. உலகையே தனது குடும்பமாகப் பாவித்து தெருவோரத்தில் கிடப்பவர்கள் மேல் அக்கறை காட்டி அன்றாடம் உணவூட்டுவதும், பிறரன்புச் செயல்களால் நாட்டை வளப்படுத்துவதும் அவர்களே. தன்னிலை பாராது பிறர்நலன் நாடும் அவர்களது நற்செயல்கள் போற்றப்பட வேண்டும். இயேசு தான் பாடுபடும் வேளையிலும் தன்னிலை பாராது தனக்காக அழும் எருசலேம் மகளிர் மேல் பரிவு கொள்கிறார். ஆறுதல் சொற்களால் அவர்களைத் தேற்றுகிறார்.

தனது பரிதாப நிலை கண்டு கலங்கி நிற்கும் எருசலேம் மகளிரிடம், "எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்கிறார் இறைமகன் இயேசு. தன்னலம் நோக்காது, பிறர்நலம் பேணும் குணம் இளமைக்கு உண்டு. இளைஞர்கள் தேவையிலிருப்போருக்கு உதவுவதில் நல்ல சமாரியர்கள். இல்லத்தில் மட்டுமல்ல, தெருவிலும் பிறர் இடுக்கண் களைந்திட துடித்திடும் அவர்கள் நல்உள்ளம். இயற்கைச் சீற்றங்களில் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்திடும் அவர்களது கால்கள். போராளிகளுக்கு தோள் கொடுக்க உயர்ந்திடும் அவர்களது கைகள். இளையோரைச் சரியாகப் புரிந்து கொள்வோம்.

"துயருறுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்." (மத் 5:4).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! எம் இளையோர் நல்ல சமாரியர்களாகிட வரம் தாரும் - ஆமென்.



# 09
## ஒன்பதாம் நிலை

### இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார்

நல்லதை விட தீமை அதிகக் கவர்ச்சி உடையதாய் உள்ளது. விளக்கொளியில் மடியும் விட்டில் போல் சில வேளைகளில் இளையோரின் வாழ்வு அமைந்து விடுகிறது. களவும் கற்று மற என்பது போல் சிறுவயதிலேயே வெண்சுருட்டைப் பிடித்துப் பார்த்தால் தான் என்ன? எப்படி இருக்கும்? என ஆர்வக்கோளாறு ஒருபுறம் தூண்ட, ஆய்வு செய்து பார்க்க நினைக்கின்றான் இளைஞன். இவ்வாறு மது, போதை, மாது என அவனது வட்டம் விரிகிறது. இது தவறு என தெரிந்திருந்தாலும் அதனை விட்டு விலக இயலாத மதி மயங்கிய நிலைக்குச் சென்றுவிடுகின்றான். சிறு களிப்பில் தொடங்கி களியாட்டம் முற்றி காட்டுமிராண்டி நிலைக்கும் அவனைக் கொண்டுபோய் விடுகின்றான். இவர்களைத் தரையில் விழத்தாட்டியவர் யார்? கைகளை நீட்டி தூக்கி மீட்டெடுப்பவர் யார்?

இறைமகன் இயேசு உடல் தளர்ந்தவராய், சுமை தாங்க இயலாமல் மூன்றாம் முறை தரையில் விழுகிறார். இன்று போதையினால் இளமை தெருவில் விழுந்து கிடக்கின்றது; பாதையில் தள்ளாடுகிறது. இங்கு விழுந்து கிடப்பது தனிமனிதனல்ல; நம் நாட்டின் எதிர்காலம். தள்ளாடுவது நமது தேசத் தூண்கள். நம் நாட்டின் எதிர்காலத்தை அழிக்க, அடித்தளத்தை அசைக்க அரசாங்கமே மதுபானங்களை விற்பனை செய்கிறது. அந்தோ! என்னே பரிதாபநிலை! இதனால் இளமையின் வாழ்நாள் திடீர் இடரினாலும் நோயினாலும் குறைந்து வருகின்றதே! இதனை உணர்த்தி இளமையை எழுச்சியடையச் செய்வது யார்?

"திராட்சை இரசம் குடிப்பதில் தீரர்களாகவும், மதுபானம் கலப்பதில் திறமைசாலிகளாகவும் இருப்பவர்களுக்கு ஐயோ கேடு!" (எசா 5:22).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! போதையினால் தள்ளாடும் இளமையைக் காத்தருளும் - ஆமென்.



# 10
## பத்தாம் நிலை

### இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

ஆடை மாந்தனின் மாண்பையும் அவனது வளத்தையும் வெளிக்காட்டும் அடையாளமாக உள்ளது. ஆடையிழந்தவன் மாண்பை இழந்தவன். நவநாகரீகம் என்ற பெயரில் மாண்பிழந்து இளமை தவிக்கின்றது. மனித மாண்புகளைக் குலைக்கும் அவமதிப்புகள், ஒதுக்கப்படுதல், ஓரங்கட்டப்படுதல், கண்டு கொள்ளப்படாமை போன்ற சமயங்களில் மானமிழந்த நிலையே உருவாகிறது. ஒழுக்கமில்லாத வாழ்க்கையும், பண்பாட்டுச் சீரழிவுகளும், ஆடையற்ற மானமிழப்புகளே. எப்படியும் வாழலாம் என்ற இளமைப் போக்கு மாற்றத்திற்கு உட்பட வேண்டும். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறைக்குள் இருந்தால் மட்டுமே அது நாட்டிற்கும் வீட்டிற்கும் பலனளிக்கும். வரையறையற்று ஓடும் காட்டாறு அழிவை விளைவிக்கும். அமைக்கப்பட்ட பாதையில் அழகாய் ஆறு தவழ்ந்தால் தான் இனிமை தரும்.

இயேசுவின் ஆடை உரித்தெடுக்கப்படுகிறது. இங்கு இளமை ஆடையின்றி மானமிழக்கிறது. ஆடை இழந்தவன் அரை மனிதன். மானமிழந்தவன் மனிதனல்லன். இளமை மானமிழந்து நிற்கக் காரணமென்ன? கட்டுப்பாடில்லா வாழ்க்கை முறையா? திருமணத்திற்கு முன் கூடி வாழ்வதும், திருமணத்திற்குப்பின் பிரிந்து வாழ்வதும் ஒழுக்கம் அல்லவே! இந்த இழிநிலைக்குப் பண்பாட்டுச் சீரழிவு காரணமாகுமா? நம் பண்பாடடிற்கேற்ற ஆடை அணிவதும், பண்பாடோடு கூடிய வாழ்க்கை முறையும் இந்த ஏனோ தானோ போக்கை மாற்ற வல்லது.

"ஒழுக்கத்தில் வளர்க்கப்படாமல் இறுமாப்பும் பிடிவாதமும் கொண்ட மக்கள் தங்களின் குலப்பெருமைக்கு அவமானம் கொணர்வார்கள்" (சீஞா 22:8).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! கட்டுப்பாடின்றி திரிய விரும்பும் இளமை மனம் ஒழுக்கத்தைக் கற்றிட வரம் தாரும்.



# 11
## பதினொன்றாம் நிலை

*இயேசு சிலுவையில்*
**அறையப்படுகின்றார்**

மூன்று ஆணிகள் இறைமகனை அசைய விடாமல் கட்டிப்போட்டன. இளையோரை அவர் தம் கடமைகளைச் செய்ய விடாமல் கட்டிப் போடுபவை எவை? இளைஞன் எதற்கு அடிமைப்பட்டு கட்டுண்டு கிடக்கிறான்? இயேசு இறை அன்புக்கும் பிறரன்புக்கும் மட்டுமே கட்டுண்டு கிடந்தார். இன்றைய இளையோரை கைகட்டி வாய்மூடி செயலற்ற நிலையில் வைத்திருப்பது எது? ஊடக உலகில் மயங்கி உள்ளனரா? கற்பனை கோட்டைக்குள் கட்டுண்டு கிடக்கின்றனரா? மது போதைக்குள் மயங்கி விட்டனரா? இளமையின் ஆற்றல் இதையெல்லாம் எளிதில் கடந்து வர வல்லது என இளையோருக்கு புரிய வைக்க வேண்டும். இயேசுவை இறையன்பும் பிறரன்பும் சிலுவையில் கட்டிப்போட்டது. நிறை அன்பைத் தவிர வேறெதுவும் நம் இளையோரை கட்டிப் போடக் கூடாது. தாயன்பும், உடன்பிறப்பின் அன்பும், நண்பர்கள் அன்பும் எவ்வித கட்டுகளையும் உடைத்து இளையோருக்கு விடுதலை அளித்து பாச வலைக்குள் அடக்க வல்லவை.

இயேசு மூன்று ஆணிகளால் சிலுவையில் அறையப்படுகிறார். எழுச்சியுடன் மூன்று ஆண்டுகள் நற்பணி செய்த கைகளுக்கும் கால்களுக்கும் பரிசுகளா இந்த மூன்று ஆணிகள்? இளமை இங்கு சிதைக்கப்படுகிறது. அசைவற்று அடக்கப்படுகிறது. ஜாதி, மத, இன பேதங்களால் இளமை புறந்தள்ளப்படுகிறதா? உயர்வு தாழ்வு பிரிவினை இளமையைக் கட்டுண்டு கிடக்கச் செய்கிறதா? இளமையின் சிறகுகளை உடைத்தவர் யார்? இளமை சிறகடிக்க வேண்டும். அதன் ஆற்றலால் உலகம் மாற்றம் பெற வேண்டும். அன்புப் பணிகள் செய்ய அவர்களது கைகளும் கால்களும் விரைய வேண்டும். தடைகளை உடைக்க அவர்களது கட்டுகள் அவிழ்த்துவிடப்பட வேண்டும்.

"ஆண்டவரே! நான் உண்மையாகவே உம் ஊழியன்; நான் உம் பணியாளன்; உம் அடியாளின் மகன்; என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்." (திபா 116:16).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! இளைஞர்கள் உரிமையோடு தூய மனநிலையோடு செயல்பட வரம் தாரும் -ஆமென்.



# 12

## பனிரெண்டாம் நிலை

### *இயேசு சிலுவையில்* உயிர்விடுகிறார்

மனித உயிர் விலைமதிப்பற்றது என்பதை உயிர்வளிக்காக மருத்துவமனையில் போராடும் நோயாளியிடமிருந்து தெரிந்து கொள்ளலாம். மாந்த உடல் விலைமதிப்பற்றது என்பதை உறுப்பை இழந்து தவிக்கும் ஊனமுற்றவரிடமிருந்து கற்றுக் கொள்ளலாம். ஒருவரது ஆன்மத்தூய்மை எவ்வளவு தேவை என்பதை ஆன்மாவைக் கறைபடுத்தி அமைதியற்று வாழ்வோரிடமிருந்து அறிந்து கொள்ளலாம். உடல், பொருள், ஆவி அனைத்தும் விலைமதிப்பற்றவை. சிறு தொல்லைகளும், சீற்றங்களும், உன்னத வாழ்வை முடித்துக் கொள்ளத் தூண்டுவது முறைதானா? சிறு துன்பங்களையும் ஏற்றுப் பழக வேண்டும். நிந்தனையின் போதும் பொறுமையாகச் சிந்திக்க இளமை பழக வேண்டும். உணர்வின் உந்துதலில் முடிவுகள் எடுப்பதை கைவிட வேண்டும். சிலுவையில் பொறுத்தல் தன்மை காட்டி அனைத்தையும் தாங்கி நின்ற இயேசுவை முன்மாதிரியாக இளையோர் கண்முன் கொண்டிருக்க வேண்டும்.

"தந்தையே ஏன் என்னை கைவிட்டீர்" என்று கதறியபடி உயிர்விடுகிறார் இயேசு. வாழும் வழி அறியாது இளமை பல வழிகளில் உயிரை மாய்க்கத் துடிக்கின்றது. வேலையில்லா திண்டாட்டம், விலை உயர்வு, உணர்வுகளை கையாளத் தெரியாத நிலை இளைஞர்களை கழுமரத்தில் ஏற்றுகின்றன. தொடர் தோல்விகள், புறந்தள்ளப்படுதல், கைவிடப்பட்ட நிலை இளமைக்கு நன்றன்று. அவர்களை தட்டிக் கொடுத்து உற்சாகத்தோடு ஊக்கப்படுத்த ஆட்கள் தேவை. தன்னம்பிக்கை அளிக்க தகைமையாளர்கள் தேவை. தற்கொலைகளால் வீணாகும் இளமையைக் காத்திட வேண்டும்.

"ஏனெனில் மானிடமகன் தொண்டு ஏற்தபதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற் 10:45).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! தற்கொலை என்ற தீய எண்ணம் இளைஞர்களை தாக்காதிருக்க வரம் தாரும்.



# 13

## பதின்மூன்றாம் நிலை

*அன்னை மரியின் மடியில்*

**இயேசுவின் இறந்த உடல்**

அன்பு என்ற நீரூற்றி இளையோர் வளர்க்கப்பட வேண்டும். தாயற்ற குழந்தையின் வாழ்வு சீரழியும். தாலாட்டி சீராட்டி அன்பில் வளர்க்கப்படவில்லை எனில் அக்குழந்தை அன்பிற்காய் ஏங்கும். அன்பற்று வாழும் பெற்றோர் பிள்ளைகளுக்கு நிறை அன்பை எப்படி வழங்க முடியும். பிரிவினையும், வெறுப்பும், பகைமையும் கொண்ட இல்லறம், நல்லறம் பேணுதல் கூடுமோ? அங்கு விளைந்த குழந்தைச் செல்வங்கள் எந்தச் சாயலைத் தாங்கி நிற்பர். அன்பற்ற இதயங்களில் பொறாமை, தன்னலம், வெறுப்பு குடிகொள்ளும். இதன் வெளிப்பாடுகள் தன்னையும் பிறரையும் ஒட்டுமொத்த குமுகாயத்தையும் பாதிக்கும். தாய்மடியில் துவங்கிய இயேசுவின் வாழ்வு தாய் மடியில் முடிவடைந்தது. தாயின் உடனிருப்பு அவருக்கு வாழ்நாள் முழுவதும் இருந்தது. இளையோர் இத்தகைய தன்னலமற்ற தாய் அன்பை கொண்டிருக்க வேண்டும்.

இறந்த இயேசுவின் உடல், அவரது தாயின் மடியில் வளர்த்தப்படுகிறது. அன்னை மரியிடம் தொடங்கிய இறைத்திட்டம் அவரிலேயே முடிவடைகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை தாயின் மடி மாந்தனுக்குத் தேவைப்படுகிறது. உண்மையான அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பும் கிடைத்தால் இளைஞர் தவறுவதற்கு வாய்ப்பேது? இல்லத்தில் அன்பு குறைந்தாலோ, அன்பு வற்றிப்போன குமுகாயத்தில் வாழ்ந்தாலோ இளைஞனின் மனமும் உடலும் தளர்வுறும். அன்பில் பலவகை உண்டு. அவை அனைத்திலும் தாயன்பே உயர்ந்தது. தாயன்பில் வளர்ந்த குழந்தை தவறு புரிவது கடினம். வற்றாதத் தாயன்பில் செழித்து வளர வேண்டும் நம் இளைய குமுகாயம்.

"பிரம்பும் கண்டித்துத் திருத்துதலும் ஞானத்தைப் புகட்டும்; தம் விருப்பம் போல் நடக்கவிடப்பட்ட பிள்ளைகள் தாய்க்கு வெட்கக்கேட்டை வருவிப்பர்." (நீமொ 29:15).

**மன்றாடுவோம் :**

இயேசுவே! இளையோர் தாயன்பில் ஊன்றி வளர வரம் தாரும்.



# 14
## பதினான்காம் நிலை

### இயேசுவின் உடலை அடக்கம் செய்கின்றனர்

தான் விரும்பியது போல் வளர்கின்றது மரம். தான் விரும்பிய திசையில் பறக்கின்றது பறவை. ஆனால் மாந்தன் தான் விரும்பியது போல் வளர்வதில்லை, வாழ்வதில்லை. அவனது விருப்பங்களும் ஆர்வங்களும் கல்லறையில் புதைக்கப்பட்டு மறைக்கப்படுகின்றன. இது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. பள்ளியை, கல்லூரியைத் தேர்வு செய்வது, பிடித்த வேலையைத் தேர்வு செய்வது என எதையும் உரிமையோடுச் செய்ய இளையோர் விடப்படுவதில்லை. பல இடையூறுகள். அது சிறந்ததாக கருதப்பட்டாலும் இளைஞனின் ஆர்வத்தையும் சொந்த விருப்பத்தையும் குழிதோண்டிப் புதைப்பவையாகவே அமைகின்றன. அந்த இழப்புகளின் ஏக்கம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தலைதூக்கிக் கொண்டுதான் இருக்கின்றது. சிலர் முதுமையில் கூட தமது நிறைவேறாத ஆசைகளைத் தேர்வு செய்து படித்துத் தனது ஏக்கத்தை நிறைவு செய்ய விரும்புகின்றனர்.

இறந்த இயேசுவின் உடலைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள். இயேசு கல்லினால் செய்யப்பட்ட அறையில் வைத்து மறைக்கப்படுகிறார். இளையோரின் திறன்கள் மறைக்கப்படுகின்றன. அவர்களின் விருப்பங்கள் மறுக்கப்படுகின்றன. அவர்கள் எண்ணியபடி அவர்களின் வாழ்வு பெரும்பாலும் அமைவதில்லை. குடும்பத்திற்காகவோ பிறருக்காகவோ அவர்கள் தங்களை ஒவ்வொரு கட்டத்திலும் மாற்றிக் கொண்டே வருகின்றனர். தங்களின் இயல்பை இழந்து பிறரின் நகலாக வாழ்கின்றனர். அவர்கள் அவர்களாக இருக்கும்பொழுது அங்கு இருள் இல்லை; ஒளிவீசுவர். இயேசு இளைஞரை மறைத்து வைக்க முடியுமா? இளையோரே நம் முன்மாதிரியாக இயேசுவை நம் உள்ளங்களில் புதைத்து வைப்போம்; ஒளிவீசுவோம்.

"இயேசு அவர்களிடம், "விளக்கைக் கொண்டு வருவது எதற்காக? மரக்காலின் உள்ளேயோ கட்டிலின் கீழேயோ வைப்பதற்காகவா? விளக்குத் தண்டின் மீது வைப்பதற்காக அல்லவா? "(மாற் 4:21).

**மன்றாடுவோம்:** இயேசுவே! இளையோரின் உள்ளங்களில் புதைந்து ஒளிவீசும். ஆமென்.



# இளைஞரின் பாடுகள்

## முடிவுரை

இளையோரின் உள்ள உணர்வுகளையும், நிறை குறைகளையும், அவர்களின் கண்கொண்டும், குமுகாயத்தின் கண்கொண்டும், நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் இச்சிலுவைப் பாதையின் ஒவ்வொரு நிலையிலும் இயேசுவை இளைஞனோடு ஒப்பிட்டு சிந்தித்தோம். இயேசு நல்லவர். இளையோருக்கு நல்ல வாழ்க்கை முன்மாதிரி அவர். இளையோர் இயேசுவைப் பின்பற்றி அவரின் சீடராக வாழ்வில் சிறந்திடல் வேண்டும். இளமையில் முதுமை நன்றன்று. சலிப்பு, வேதனை இளமையில் நிறைந்திருந்தால் அது முதுமையை வெளிக்காட்டும். இயேசு சலிப்புற்றோ வேதனையுற்றோ எப்போதும் காணப்படவில்லை. பாடுகளின் போது இறைத்திருவுளம் நிறைவேற்றவே துடித்து, அனைத்தையும் பொறுத்தார். இறுதியில் எல்லாம் நிறைவேறிற்று என்றார். இளமைத்துடிப்பும் இறைத்திருவுளம் நிறைவேற்றும் தாகமும் கொண்ட அனைவரும் இளைஞரே.

இளமை என்பது ஒரு மனநிலை. இதற்கு அகவை வரம்பு தடையில்லை. புதுமையை நாடுவோர் விழுந்தாலும் தானே எழுந்து நடக்கும் ஊக்கமுடையோர் என்றும் இளைஞரே! இறைமகன் இயேசுவின் பாடுகளின் பாதையில் நேர்மையற்ற தீர்ப்பு, பெருஞ்சுமை, வீழ்ச்சி, வெறுமை, இழப்பு வந்தாலும் அதையெல்லாம் தாண்டி வெற்றிக் கனி சுவைத்து மானுடத்தை மீட்டார். அவரைப் போல் சோதனையைத் தாண்டி வெற்றிக்கனி சுவைக்கும்வரை தளராத இளமை மனம் கொண்டிருப்போம். "இளைஞர் இயேசு நம்மில் வாழட்டும்" -ஆமென்.



## சிலுவைப் பாதை
# புது வாழ்வின் பாதை

பாதைகள் இல்லையென்று பதுங்கி ஒதுங்கி விடாதே; தொடர்ந்து நட, பாதைகள் உருவாகும், பயணமும் நிறைவாகும். உண்மை வாழ்வில் பயணிக்க எத்தனிக்கும் எல்லா மனிதருக்கும் பாதைகள் இலகுவானதல்ல; வழிப்பயணமும் எளிதானதல்ல. ஆம், கல்லும் முள்ளும், கரடும் முரடும், கால் கடுக்கும் பாழ்வெளியும் பாதைகளாய் அமைந்ததால்தான் நிந்தையாய் தெரிந்த பலருடைய வாழ்வும் விந்தையாய் அமைந்துவிட்டிருக்கின்றது.

தனது பிறப்பால் வரலாற்றை இரண்டாய்ப் பிரித்த இறைமகன் இயேசு, தனது பாடுகளின் பயணத்தால், கல்லாய் இறுகிப்போன மானுடத்தின் இருண்ட இதயங்களையும் கசிந்துருகச் செய்த பாதை சிலுவையின் பாதை; தச்சனின் மகன்தானே என்று எகத்தாளம் செய்தவர்களுக்கும் எள்ளி நகையாடியவர்களுக்கும், விமர்சனம் செய்தவர்களுக்கும், நமக்கேன் வம்பு என்று வாழாதிருந்தோர்க்கும், சமூக அவலங்களைக் கண்டும் காணாமல் கடந்து செல்வோருக்கும் மனஉறுதி மிக்க இவருடைய பயணம் மிரட்சியைத் தான் கொண்டு வந்திருக்கும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் சிலுவையின் பாதை என்பது பரவசத்தோடு பறக்க நினைக்கும் பறவையின் சிறகொடிக்கப்பட்ட நிலைதான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆனால், சிலுவைப்பயணத்தை சிந்தனைக்கு உகந்தவிதமாய் சிலிர்ப்பூட்ட ஆங்காங்கே நல்லவர்களும் நன்மைத் தனங்களும் கொட்டிக் கிடக்கின்றன என்பதே உண்மையிலும் உண்மை. ஆம், அநியாயமாய் தீர்ப்பளிக்கும் கயவர்கள்முன் சாந்தசொரூபியாய், சம்மனசாய் காட்சியளிக்கும் இயேசுவின் தனித்துவம், விழுந்தாலும் எழ வேண்டும் என்று அவருக்குள் மேலிட்ட குழந்தைக்குரிய மனப்பாங்கு, சீமோன், வெரோணிக்கா, எருசலேம் நகரத்துப் பெண்கள் போன்று கையறு நிலையிலும் கைகொடுக்கக் காத்திருக்கும் கருணையின் இல்லிடங்கள், இவற்றோடுகூட உள்ளக் கிடக்கையை ஒருசேர முடக்கி வைத்துவிட்டு யாராவது காப்பாற்றிவிட மாட்டார்களா என்ற அங்கலாய்ப்பை மட்டும் வெளிப்படுத்தி கைகட்டி வாய்பொத்தி நின்று கொண்டிருந்த நடுத்தர இன நல்லவர்கள் எல்லாரையும் பார்த்துத் தானே சிலுவையின் பயணம் நிறைவு கண்டிருக்கும்.? அவர்களோடு நாமும் சேர்ந்து பயணிப்போம்.! அவர்கள் சுமந்து சென்று சுட்டிக்காட்டிய நன்மைத் தனங்களோடு நாமும் பயணிப்போம்.

அங்கு நாம் விட்டுச் செல்லுகின்ற பாதைச் சுவடுகளும் தரணியில் மாந்தர் பலருக்கு மகிழ்வூட்டும், ஊக்கமூட்டும், நெஞ்சிலே உரமூட்டும். நமக்கான நல் பாதையை நாம் தேர்ந்து கொள்வோம். அத்தகைய புதிய பாதை எது? இச்சிலுவைப்பாதையின் பதினான்கு நிலைகளும் அவற்றைச் சுட்டிக்காட்டும். நமக்கான நல்பாதையைத் தேர்ந்துகொள்வோம்; வாழ்வுப் பயணத்தைத் தொடருவோம்.

அருட்தந்தை தே.அற்புத சேவியர்



## 1. முதல் நிலை - தீர்ப்பிடுதல்

மனிதா எக்குற்றத்திற்காக எனக்கு மரணதண்டனை விதிக்கிறாய்? படைப்பின் சிகரமாக உன்னைப் படைத்தேனே அதற்காகவா? என்னால் ஆசீர்வதிக்கப்பட்ட பல இறைவாக்கினர்கள் வழியாக உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து மீட்டு வந்தேனே, அக்குற்றத்திற்காகவா? உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற தலைவர்களை உங்களுக்குக் கொடுத்தேனே, அக்குற்றத்திற்காகவா? நீ தவறு செய்யும் போதெல்லாம் மன்னித்து ஏற்றுக்கொண்டேனே, அக்குற்றத்திற்காகவா? உங்களுக்கு இறை வார்த்தையைக் கற்பித்து உங்கள் நோய்நொடிகளையெல்லாம் நீக்கி நலம் தந்தேனே, அக்குற்றத்திற்காகவா? உங்கள் தேவைகளை அறிந்து செயல்பட்டேனே, அதற்காகவா? பின் எதற்காக எனக்கு மரண தண்டனை? சாட்சிகள் வலுவாகத்தான் இருக்கின்றன. நான் செய்த செயல்களைப் பிரதிபலிக்க; ஆனால் ஒன்று, நீதி பிழை செய்யும் காலத்தில் ஊமையாக மெய்யர்கள் பலர் இங்கே சிலுவைகளில் அறையப்படுகின்றனர். நிரூபிக்கப்படா என் குற்றத்திற்கு உச்சந்தொட்டத் தண்டனை சிலுவைச் சாவு.

### என் மகனே! மகளே!

எத்தனை எத்தனையோ பேர் நீ வாழும் குமுகாயத்தில் பொய்க்குற்றம் சுமத்தப்பட்டு, பிறர் முகத்தில் விழிக்கக்கூட திராணியற்று, கூனிக்குறுகி, நிர்க்கதியாய் நின்று கொண்டிருக்கிறார்களே? உங்களால் அவர்கள் இழந்த பெயரை திரும்பத் தர இயலுமா? நீங்கள் திருடன் என்றபோது, உதவாக்கறை என்றபோது, இவன் முகத்தில் விழித்தால் உருப்படாது என்றபோதெல்லாம் அநியாயமாகத் தீர்ப்புகளால் அவர்களைக் கொலை செய்துவிட்டீர்கள் என்பதை உணருங்கள். கொலை செய்யாதிருப்பாயாக என்ற கட்டளை வெறுமனே உடலைக் கொல்வதை மட்டுமல்ல, பெயரைக் கெடுப்பதையும், ஆளுமையைச் சிதைப்பதையும், இல்லாத ஒன்றை இட்டுக் கட்டிச் சொல்லி ஒருவரை இல்லாதொழிப்பதுமே. நாம் அநியாயமாகத் தீர்ப்பிட்டத் தருணங்கள் என்னென்ன?



## 2. இரண்டாம் நிலை - சுமத்தல்

என் மக்கள் எனக்குக் கொடுக்கும் வலிகளை என்னால் சுமக்க முடியும் என்றால் சிலுவை எனக்கொரு சுமையல்ல. நான் இந்த சுமையை சுமப்பதால் என் மக்கள் நல்வாழ்வு பெறுவார்கள் என்றால் சுமையும் எனக்கு சுகமே. மக்களே, நீங்கள் என் அன்பான அழகான சுமைகள். நான் உங்களை சுமப்பது எனக்கு வலியல்ல, வரமே! எனக்கும் சுமைகள் வலித்தன. நீ என்னைவிட்டு விலகிச் செல்லும்போது, என் அன்பை உணராதபோது, நான் உன்னைக் காணத் துடிக்கும்போது, உன்னோடு பேச துடிக்கும்போது, சிறிது துன்பம் வந்தவுடனே, என்னைப் பார்ப்பதில்லை என்று விலகிச் செல்லும்போது, என் இதயம் சுக்குநூறாக உடைந்துபோகும். நீங்கள் என்னை வெறுத்தாலும் நான் உங்களை விரும்புவேன். நீங்கள் என்னைவிட்டு வெகுதூரம் விலகிச் சென்றாலும் நான் உங்கள் அருகில் வருவேன். காலம்தான் என்னிடம் தோற்குமே தவிர நான் உங்கள்மீது கொண்டுள்ள பேரன்பு நிலை சாயாது.

### என் மகனே! மகளே!

தான் பார்க்கும் உலகத்தைத் தன் பிள்ளையும் காணவேண்டும் என்று தாயானவள் இடுப்பிலே தன் பிள்ளையை எடுத்துவைத்திருக்கிறாள்; தான் காணாத உலகத்தையும் தன் பிள்ளை காண வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு தந்தை தன் பிள்ளையைத் தோளில் சுமந்து வருகிறார். ஆம், குழந்தையைச் சுமக்கும் பெற்றோருக்கு அக்குழந்தை ஒரு சுமையேயில்லை; உலகில் வாழ்ந்த தமக்குரியோர் மேல் அன்புகொண்ட கடவுள் அவர்கள்மேல் இறுதிவரை அன்புகூர்ந்தார். அன்புகூர்ந்ததால் சிலுவையும் கூட சுகமாகத்தான் எனக்குத் தென்பட்டது. பொதிகள் அழுத்தினாலும் பாசத்துடன்தான் சுமந்தேன். உலகைச் சுமக்கும் தோள்களிலே சிலுவை ஏற்றப்பட்டுள்ளது. உவகையோடு சுமக்கின்றேன். பிள்ளைகளைச் சுமக்கும் பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளை மட்டும் உவந்து சுமக்கும் நீங்கள் உடன் வாழ்வோரை மட்டும் சுமையென்று கருதி விலகி நடப்பது ஏன்? பொதுநலனிற்காக இணைந்து பயணிப்பதில் மட்டும் இவ்வளவு தயக்கம் காட்டுவது ஏன்? விரும்பி சுமக்கையில் சுமைகூட சுகமாகும்.



## 3. மூன்றாம் நிலை - வீழ்தல்

வீழ்தல் அழகு! எழுவது அழகினும் அழகு! தத்தித் தவழ்வது அழகு! தாவிப் பறப்பதும் அழகு! நான் வீழ்வது வீழ்ச்சியல்ல, உன் வளர்ச்சியின் நீட்சி. என் மக்களே உங்களின் அன்பு என்னோடு இருக்க நான் வீழ்வது எங்ஙனம்? வீழ்வேனா? உங்களை பாவத்திலிருந்து மீட்க என்மீது எத்தனை விமர்சனங்கள் வந்தாலும் தேவையில்லா தருக்கங்கள் வந்தாலும் நான் அதைப் பொருட்படுத்த மாட்டேன். என் மக்களே உங்களை மீட்பதே என் இலக்கு. அதை அடைய நான் எந்தவொரு துன்பத்தையும் அவமானத்தையும் அடைய தயாராக இருக்கிறேன். எத்தனைமுறை நான் கீழே விழுந்தாலும் அடிபட்டாலும் நான் உங்கள்மீது கொண்ட அன்பு மாறாது. காயப்படுத்த பலர் இருந்தாலும் ஆறுதலாக சிலர் இருப்பதாலேயே என் சிலுவைப் பயணம் அடுத்தக் கட்டத்தை நோக்கி நகர்கிறது.

### என் மகனே! மகளே!

விழுவதுதான் வாழ்வின் நியதி என்றால் எழுவதும் தானே வாழ்வின் நியதி. நான் விழுந்தபோது கூட்டத்திலிருந்து எனது காதுகளில் விழுந்த பல்வேறு உணர்வுகளை அசைபோடுகிறேன். ஐயோ! யேசு விழுந்துவிட்டாரே, யாராவது போய் தூக்கி விடமாட்டார்களா? இவனுக்கு இது தேவைதான், ஏன் இந்த வறட்டுப் பிடிவாதம் என்றெல்லாம் எத்தனைஎத்தனையோ விமர்சன அம்புகள் காதுகளைத் துளைக்கத்தான் செய்தன; அவற்றை இதயத்தில் நான் இருத்தவில்லை. குழந்தை ஒன்று தரையில் விழுந்துவிட்டால் சுற்றும்முற்றும் பார்த்து யாராவது தூக்கிவிடமாட்டார்களா? அடிபட்டுச்சோ செல்லம் என்று அனுசரணையாய் கேட்க மாட்டார்களா என்று தவிக்கும்...யாரும் கண்டுகொள்ளவில்லை என்றால் அதுவே எழுந்து சென்றுவிடும். அப்படிப்பட்ட நிலையில்தான் நானும். யாரும் இல்லை. நானே எழுகிறேன்; பயணத்தைத் தொடர்கிறேன்.



## 4. நான்காம் நிலை- சந்தித்தல்

நான்கு கண்கள் சந்தித்தன. இரு இதயங்கள் பேசிக் கொண்டன. அம்மாவின் பாசம் கருணையில் தெரியும் என்பார்கள். தாய்மையின் வலி என்னவென்று தெரியும். அன்பு, அக்கறை, அரவணைப்பு, பாசம், நேசம், தியாகம் என எல்லா உணர்வுகளையும் ஒரே இடத்தில் பார்த்தேன் எனது அன்னையின் சந்திப்பில். எந்த தாய்க்கும் இப்படிப்பட்ட நிலை வரக்கூடாது. அம்மா என்னோடு நீ வா. நீ வந்தால் எத்தனை சோதனைகள், வேதனைகள், இடையூறுகள் வந்தாலும் நான் அதைத் தாங்கிக் கொள்வேன். அம்மா என்னால் உமக்கு எத்தனை வேதனைகள்! கருவில் தாங்கியது முதல் இந்நாள்வரை எத்தனை வாள்கள் உம் இதயத்தை ஊடுருவி இருக்கும். அம்மா, அன்று நீ சொன்னாய் முதல் அற்புதத்தை நிகழ்த்தினேன். இன்று உம் கண்களால் பேசுகிறாய்.. மகனே இதற்காகத் தானே இந்த உலகிற்கு வந்தாய் என்று. ஆம், நீங்கள் வாழ்வு பெறும்பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு நான் வந்துள்ளேன்.

### என் மகனே! மகளே!

‘ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்’ என்ற வள்ளுவரின் வாக்கின்படி மகனின் உயர்வைக் காண்பதில்தான் அன்னையருக்குப் பெருமை. ஆனால், சிலுவை என்ற சிறுமையைச் சுமந்துகொண்டு நிற்கும் அல்லலுற்ற நிலையில், அனாதரவாய் நிற்கும் இழிநிலையில் என் தாய் என்னைச் சந்திக்கின்றார். உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவும் என்ற சிமியோனின் வார்த்தையை என் தாய் நினைத்திருப்பார். ஓ...இந்த அம்மாதான் இவரு தாயா? என்ற ஊரார் பேச்சு அவர் காதில் விழுந்திருந்தபோது துயரத்தில் உறைந்துதான் போயிருப்பார். ஆனால், இலக்கு ஒன்றே! இனத்தின் மீட்பு! என்பதிலே என் தாயும் உறுதியோடுதான் நின்றிருந்தார். கானாவூர் திருமணத்தில் பணியாளர்களுக்கு என்னைச் சுட்டிக்காட்டிய என் தாய், கல்வாரிப்பயணத்தில் எனக்கு இறைத் திட்டத்தைச் சுட்டிக் காட்டி சான்று பகர்கிறார். சான்றோர்களே, உங்கள் பிள்ளைகளையும் உங்களைப்போல் உருவாக்குங்கள்.



# 5. ஐந்தாம் நிலை - பகிர்தல்

அதிகம் உள்ளவர்கள் உணவை இல்லாதவர்க்குப் பகிருங்கள் என்றேன். அன்பைப் பகிருங்கள் மனம் சிறக்கும் என்றேன். இன்பத்தைப் பகிருங்கள் மதி சிறக்கும் என்றேன். மனிதநேயம் பகிர்ந்திட்டால் மண்ணில் சமாதானம் நிலவும் என்றேன். கருணையைப் பகிர்ந்திட்டால் புவியில் என்றும் ஆனந்தம் தங்கும் என்றேன். நான் போகும் வழியிலெல்லாம் நிரம்பி வழிந்தது மக்கள் கூட்டம். ஆனால் என் துன்பத்தை, சுமையைத் தாங்கிக் கொள்ள யாரும் முன்வரவில்லை. மனிதநேயத்தோடு முன்வந்து சற்று தாங்கிக் கொண்டான் சீமோன். ஆம், சீமோனே என் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டான். சீமோனே என் உள்ளத்தில் என்றும் உன்பால் மகிழ்ச்சி உண்டு.

## என் மகனே! மகளே!

உதவி செய்யாவிடினும் கெடுதல் வேண்டாம் என்ற உயரிய நோக்கோடு ஒதுங்கியே நின்றுகொண்டிருந்து கூட்டத்தின் நடுவில் அடிமைபோல் ஒருவன் சிக்கிக் கொண்டான். ஆம், சீமோன் அடிமையென்றால் உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கப்படும் இடமெல்லாம் இந்த சீரேன் நகரத்தானுக்கு நிச்சயம் இடமுண்டு. உடுக்கை இழந்தவன் கைபோல எனக்கு உதவ இவன் நண்பனுமல்ல, தோள் கொடுக்க என் தோழனுமல்ல, ஆனால் உணர்வுள்ள ஒரு மனிதன். அந்த உணர்வுகளின் ஒன்றிப்புதான் உதவியாக வந்து நின்றது. ஓடிவந்து உதவிசெய்யும் போது நம்மைச் சுற்றியிருப்போர் ஏமாளி என்று நகைக்கலாம், ஆதாயமில்லாமலா செய்திருப்பான் என்று அவதூறுகளை அள்ளித் தெளிக்கலாம். தாழ்வில்லை. உங்கள் உதவியில் யாரோ ஒருவர் உளமகிழ்ந்தால் அதுவே உன்னதம்.



## 6. ஆறாம் நிலை - துடைத்தல்

எனக்கென்று யாரும் இருக்கிறார்களா என்று நினைக்கும் போதெல்லாம் நான் இருக்கிறேன் என முன்வந்து நின்றது என் கண்ணீர். என் கண்ணீரை, என் காயத்தைத் துடைக்க யாருமில்லையே என்று ஏங்கினேன். அங்கே வந்தாள் வீரமங்கை வெரோணிக்கா. அத்தனை படைவீரர்கள் மத்தியில் யார் என்னை என்ன செய்ய முடியும்? நான் இயேசுவைக் காண்பேன்; அவர் முகத்தைத் துடைப்பேன் என்று வீரத்தோடு என் அருகில் வந்து அன்போடு என் முகத்தைத் துடைத்தாள். ஆறுதல் அடைந்தேன் அளவுக்கு அதிகமான அன்பும், எல்லையின்றி கொண்டாடப்படும் நம்பிக்கையும் ஒருநாள் கண்ணீரையே தரும். உலகில் உண்மையான பாசத்திற்குக் கிடைக்கும் இறுதிப்பரிசு கண்ணீர் என்று புரிந்துகொண்டேன்.

### என் மகனே! மகளே!

நல்ல செயல் ஒன்றைத் தொடங்கிவிட்டால் அது நன்மையாகவே தொடரும் என்பதுபோலத்தான் வெரோணிக்காவின் செயலும் எனக்குத் தென்படுகிறது. சீமோன் தொடங்கினார், வெரோணிக்கா தொடர்கிறார்... மங்கியிருந்த என் முகத்தினை ஒளிபெறச் செய்கின்றார். ஆம், நல்லவையும், மாற்றுச் சிந்தனையும் ஏதோ ஒரு கணத்தில் தொடங்கவேண்டும் அல்லவா! காலங்காலமாக நம்மைச் சூழ்ந்திருக்கும் அரசியல் தளத்தில் இவனுக்கு அவன் நல்ல கள்ளன் என்ற கண்ணோட்டத்திலே தேர்ந்தெடுக்கின்றோமே.. எப்போது நல்லவர்களைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம். திருடனிடம் வீட்டுச் சாவியை ஒப்படைத்துவிட்டு காவலிருந்து என்ன பயன்? சீமோன் போல நன்மையானவற்றைத் தொடங்க ஒரு கணம் முடிவெடுப்போம்; வெரோணிக்கா போல அது வாழ்வு முழுவதும் நம்மைத் தொடர்ந்துவரும். அப்பொழுதுதான் பிறர் வாழ்வும் ஒளிமயமாகும்.



## 7. ஏழாம் நிலை - சாய்தல்

விழுந்துவிடலாம்... விதையாய்... அருவியாய்... மழையாய்... பின் எழுந்துவிடு... விழுந்த இடத்தில் முளைத்து நிற்கும் விதைகளாய்... என்னை சிலுவைச்சுமை கீழே வீழ்த்தியது என்று நினைத்தீர்களா? இல்லை, உங்கள் பாவச்செயல்கள்தான் என்னை கீழே விழத்தாட்டியது. உங்கள் பாவங்களால் நான் கீழே விழுந்தாலும் மீண்டும் எழுந்து நடக்கிறேன், என் மக்கள் வாழ்வுபெற. உன் பலவீனம் என்னைக் கீழே சாய்த்தது. உங்கள் சுயநலம் என்னைக் கீழே வீழ்த்தியது. உங்கள் தீய இச்சைகள் என்னைக் கீழே சாய்த்தது; உன் பாவங்களால் என்னை மீண்டும் மீண்டும் கீழே சாய்க்கிறாயே? விழுந்த இடத்தில் முளைத்து நிற்கும் விதைகளாய் என்னை நிலைத்து நிற்க வைக்க மாட்டாயா?

### என் மகனே! மகளே!

நான் மீண்டும் விழுகிறேன்; உடல் பலமிழக்கிறது; கால்கள் தள்ளாடுகிறது; மீண்டும் விழுகிறேன்; மீண்டு எழுகிறேன். மழைத்துளி மண்ணில் விழ பசுமை; விதையில் விழ விருட்சம்; சிப்பியில் விழ முத்து. மனிதவாழ்வின் எழுச்சி கூடும் வீழ்தலில் சிறப்புற எழுதலில். ஆம், விழுந்த இடத்தில் பயன்தரும் மழைத்துளிபோல் எனது வீழ்ச்சி என் மக்களுக்கான எழுச்சி. தமஸ்குவிற்குச் செல்கையில் குதிரையிலிருந்து வீழ்ந்த சவுலின் வீழ்ச்சி பவுலின் எழுச்சி. விழுந்த இடத்தில் வெற்றுக் குழிகளை அல்ல; நீர் சுரப்பெடுக்கும் ஊற்றுகளைக் கண்டுபிடியுங்கள். உணர்ச்சிகளில், கவலைகளில், பொறாமையில், முன்சார்பு எண்ணங்களில், தாழ்வு மனப்பான்மையில் விழுகின்றபோதெல்லாம் அதிலிருந்து எழுவதற்கான மனப்பாங்கையும், சென்றவிடங்களில் எல்லாம் நன்மையை மட்டுமே செய்துவிட்டுச் செல்லவும் நம்மால் இயலும். வீழ்தல் விடுத்து எழுதலே புதுமை.



## 8. எட்டாம் நிலை - அழுதல்

எருசலேம் மகளிரே! நான் படைத்த உலகைவிட என் சுக துக்கங்களில் வெளிப்படும் உங்கள் கண்ணீர்த்துளிகள் அழகு. நீ அழும்போது முதலில் ஆறுதல் சொல்வது நீ நேசித்தவராகக் கூட இருக்க மாட்டார்; உன்னை நேசித்தவராகத்தான் இருப்பார். என்ன செய்வது என்று அறியாத எருசலேம் மகளிர் என்மீது கொண்ட அன்பால் தங்களுக்குள் உள்ள துயரங்களை கண்ணீரோடு வெளிப்படுத்துகிறார்கள். எருசலேம் மகளிரே! உங்கள் கண்ணீர்த்துளிகள் மதிப்பானது. எனக்காக அழ வேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். உங்கள் அன்பு இதயத்தைப் பார்த்தேன், அழகாய் தெரிந்தது. சிலுவையைச் சுமக்கச் சொன்னார்கள், சுகமாக சுமக்கிறேன். என் அன்பு மக்களே, உங்கள் கண்களில் வழியும் கண்ணீரைத் துடைக்கச் சொல்கிறீர்களே! என்னால் எப்படி முடியும்? வெரோணிக்கா போன்று அருகிலிருப்பவர்களின் கண்களைத் துடைத்து பார்வையைச் சீர்படுத்த உங்களால் தானே இயலும்!

### என் மகனே! மகளே!

எனது நண்பன் லாசருக்காக அழுதபோது அதில் வெளிப்பட்ட பாசஉணர்வு; எருசலேமுக்காக கண்ணீர்வடித்தபோது அதில் வெளிப்பட்ட ஆதங்கம்; கெத்சமனியிலே ஆவிக்கும் ஊனுடலுக்குமிடையேயான போராட்டத்தில் எனது உடலிலிருந்து வழிந்தோடிய இரத்தத் திவலைகள் எல்லாவற்றையும் விஞ்சி நிற்கிறது எருசலேம் மகளிரின் அழுகுரல். என் பிள்ளையும் இந்தக் கயவர்களின் கூட்டத்தில் இருக்கிறானே என்று விம்மியதன் வெளிப்பாடே இந்த அழுகுரல். சொல்கேளாமல் ஊதாரியாய் திரியும் உங்கள் மகனை நினைத்து அழுங்கள்; அலைபேசி அரக்கனின் கவர்ச்சிக்குள் சிக்கிக் கிடக்கும் உங்கள் மகளை நினைத்து அழுங்கள்; விரும்பியது வேண்டும் இல்லாவிடில் உயிரே வேண்டாம் என்று அடம்பிடிக்க அவர்களை வளர்த்து வைத்துள்ளீர்களே அதற்காக அழுங்கள். கண்ணீர் உள்ளத்து உணர்வுகளின் உன்னத வெளிப்பாடு; அது மகிழ்ச்சிக் கண்ணீராக மட்டுமே அமையட்டுமே.



## 9. ஒன்பதாம் நிலை - தளர்தல்

முன்னோக்கிச் செல்ல எனக்கு ஆற்றல் இல்லை; என் நாடித் துடிப்பெல்லாம் நடுங்குகிறது; என்னால் எழும்பி நிற்க இயலவில்லை. என்னை அடிக்கிறார்கள். என்னால் நடக்க முடியவில்லை. மகனே! மகளே! ஏன் என்னை இவ்வளவு துன்புறுத்துகிறாய்? உனக்கு ஒரு துன்பத்தைக் கொடுத்தவுடனே ஏன் எனக்கு துன்பத்தைக் கொடுக்கிறாய் கடவுளே என்று என்னை நோக்கிக் கதறுகிறாயே? நீ எனக்கு ஒவ்வொரு நொடியும் துன்பத்தைக் கொடுக்கிறாயே? என்னால் எப்படி முன்னோக்கிச் செல்ல முடியும்? இருந்தாலும் நான் சோர்ந்து போகாமல் முன்னோக்கிச் செல்வேன். ஏனெனில், இது எனக்கான தேர்வு. தீர்வு கிடைக்கும்வரை என் பயணம் தொடரும்.

### என் மகனே! மகளே!

கடவுள் தன்மையில் விளங்கிய அவர் அந்நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை என்ற வரியின் உள்ளார்ந்த பொருளை இப்பொழுதுதான் முழுவதுமாக உணர்ந்தநிலை இது. முற்றிலும் வலுவிழந்த ஒரு நிலை; உடலின் உறுப்புகள் அனைத்தும் இயங்கத்துடிக்கின்றன, ஆனால் இயங்க மறுக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் நான் மீண்டும் விழுகிறேன். திரும்பத் திரும்ப குறீப்பிட்ட இயலாமையில் தவறி விழுகின்ற யாவரும் அடைகின்ற அதே வெறுமை என்னையும் சூழ்ந்துகொண்டது. ஒன்று மட்டுமே மாற்றம், நான் எழுந்து விட்டேன். இலக்கு மட்டுமே என் கண்முன் இருப்பதால் நான் நடக்கத் துவங்கிவிட்டேன். படிப்பில், தொழிலில், உடல்சுகத்தில், மகிழ்ச்சியில், ஆன்மீகக் காரியங்களில் இலக்குத் தெளிவோடு பயணிக்கலாமே; எப்படியும் அடைந்துவிடலாம்.



## 10. பத்தாம் நிலை - ஆடை களைதல்

ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள். ஆடையே பாதியாகிப் போனதால் இன்று ஆள் பார்க்க முடியாதவனாய் உங்கள் முன் நிற்கிறேன். உங்கள் மனங்களில் உள்ள தேவையற்ற, கெட்ட சிந்தனைகளை களையச் சொன்னேன். ஆனால் நீங்களோ என் ஆடைகளைக் களைகின்றீர்கள். ஐயோ என் ஆடை உடலிலிருந்து விடைபெறுகின்றது. என் உடலெல்லாம் இரத்தக் காயங்கள்; ஆயிரம் ஆயிரம் கண்கள் என்னை உற்று நோக்குகின்றன. பேச நிறைய வார்த்தைகள் என் நெஞ்சில் கோர்த்து வைத்தேன்; ஆனால் அப்போது என் மௌனம் மட்டும் ஆடையாய் நின்றது. ஆடை இல்லாதவர்களுக்கு ஆடை கொடுங்கள் என்ற குற்றத்திற்காக என் ஆடை உரிக்கப்படுகிறது.

### என் மகனே! மகளே!

உங்கள் உடைகளை அல்ல இதயத்தைக் கிழித்துக் கொள்ளுங்கள் என்ற தந்தையின் வார்த்தைகளை நினைவுகூர்கின்றேன். கிழிந்த ஆடையும், கலங்கிய விழிகளும், கலைந்த தலையும் என்னைக் காண்போரை பதைபதைக்க வைக்கின்றது. ஆனால் அவர்கள் மனங்களில் உண்மை களையப்பட்டிருக்கின்றது; பொய்மை பொலிவாய் உடை உடுத்தியிருக்கின்றது. ஊர் நம்மை நன்றாக நினைக்க வேண்டும், நம் குடும்பத்தைப் பற்றி உயர்வாகச் சொல்ல வேண்டும் என்றெல்லாம் எண்ணி பகட்டாய் வாழ்வு வாழ்ந்து உள்ளே ஒன்று வெளியே மற்றொன்று என்றிருக்கும்போதெல்லாம் நன்றாய் நினைத்துப் பாருங்கள்; உங்கள் உள்ளத்தில் வெறுமையோடு வாழ்வீர்கள். அந்த ஆடையற்ற நிலையைக் களைய வேண்டும் என்பதற்காகத்தான் நான் ஆடையின்றி நிற்கின்றேன். ஆடையில் அல்ல, ஆளில் நிறைவு காண்பதே ஆன்ம முதிர்ச்சி.



## 11. பதினொன்றாம் நிலை - அறைதல்

என்ன ஒரு கருணை நிறைந்த உலகம்! அன்பை மட்டுமே விதைத்த எனக்குக் கொடூரமான சிலுவைச்சாவு. என் கையிலும் காலிலும் ஆணிகள் அறைகின்றனர். நீங்கள் கற்பனை செய்ய இயலாத அளவிற்கு எனக்கு உடல் உள்ள காயங்கள் எல்லாம் யாருக்காக? மனிதா உனக்காக. இனிமையற்ற பாதையில் தனியாய் தவிக்கிறேன் உனக்காக. முள்முடி உனக்காக. திரு இரத்தம் உனக்காக. கசையடிகள் உனக்காக. சிலுவைச்சுமை உனக்காக. இன்னும் புரியவில்லை, ஏன் இத்தனைப் பாடுகள் என்று? உன் மீட்புக்காக மட்டுமே. மனிதா மனம் திரும்பு.

### என் மகனே! மகளே!

என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற நான் கள்ளனைப்போல கழுமரத்தில் அறையப்படுகின்றேன். என் கைகளையும் கால்களையும் துளைத்த ஆணிகளின் கூர்மையைக் காட்டிலும் என்னை இகழ்ந்தவர்களின், என்னை இழிவு செய்தவர்களின் கீழ்த்தரமான பேச்சுகள்தான் என்னை மிகுந்த வன்மமாகவும், கூர்மையாகவும் குத்திக் கிழிக்கின்றது. நன்னீரும் உவர்நீரும் ஒரே ஊற்றிலிருந்து வர இயலுமா? உங்கள் வாய் வார்த்தைகள் இரண்டையும் மாறிமாறி தெளித்துக்கொண்டேதான் இருக்கின்றது? உங்கள் பேச்சு கள்ளமற்றதாகவும் மென்மையாகவும் இருக்க வேண்டாமா? உடலைக் குத்திக் கிழிக்கின்ற ஆணிகளைக் காட்டிலும் உள்ளத்தைக் காயப்படுத்துகின்ற சொற்கள் எவ்வளவு வேதனையானவை! அந்த சொல் வடுக்களுக்கு மருந்திடுவது யாரோ?



## 12. பனிரெண்டாம் நிலை - இறத்தல்

வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய எனக்கு வானத்திலும் இடமில்லை; பூமியிலும் இடமில்லை. இரண்டுக்கும் இடையில் அந்தரத்தில் இரண்டு கள்வர்கள் நடுவில் மூன்று ஆணிகளின் பிடியில் தொங்குகிறேன். என் தாயை உலக மக்கள் அனைவருக்கும் தாயாகக் கொடுத்தேன். என் தாயிடம் உங்களை ஒப்படைத்தேன். என் உடல் முழுவதும் வேதனை. என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றிவிட்டேன் என்பதில் மகிழ்ச்சி. என் இதயம் துடிக்க மறுக்கிறது; என் ஆன்மா இறைவனில் மகிழ்கிறது. நான் இறப்பை உணர்கிறேன். மனிதா! என்நிலை உணர்வாயோ? தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன். என் உயிர் பிரிந்ததும் நான் படைத்த அனைத்தும் தன்னிலை மறந்தன. பாறைகள் பிளந்து கல்லறைகள் திறக்கப்பட்டன. என் சாயலில் படைக்கப்பட்ட மனிதா! உன் நிலை உணர்வாயோ?

### என் மகனே! மகளே!

இழப்பதற்கு ஒன்றுமில்லை! என்னிடம் இழப்பதற்கு அப்போதைக்கு எதுவுமேயில்லை என் உடலோடு உறவாடிக் கொண்டிருந்த உயிரைத் தவிர. என் உடலுக்குள் சிறைப்பட்டுக்கிடக்கும் என் உயிர் ஊசலாடுகிறது; கடைசி நிமிட வேதனையைக் கடக்கிறேன். என் உயிரும் என்னைவிட்டு விடுபட்டுச் செல்கின்றது. இப்போது நான் யாருக்கும் எதிலும் கடன்பட்டவனல்ல; என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற கடன்; இம்மனுக்குலத்தின் மீட்புக்காக தாரை வார்க்க வேண்டும் என்ற கடன்; சிலுவையின் நிறைவைச் சுவைத்துப் பார்க்க வேண்டும் என்ற கடன். அனைத்தையும் நிறைவேற்றிவிட்டேன். நான் பயனற்ற பணியாளன்; செய்ய வேண்டியதைத்தான் செய்தேன் என்ற மனநிறைவு மட்டும் என்னுள் இருந்திருக்க வேண்டும். அதைப் பட்டுணரவும் எனக்குள் உயிர் இல்லை. என்னிடம் இருப்பதை மட்டும் அல்ல, என்னை இழப்பதே சிறப்பு.



## 13. பதிமூன்றாம் நிலை - அரவணைத்தல்

இரக்கமற்ற படைவீரர்கள் ஈட்டியால் என் விலாவில் குத்தினர். குத்துண்ட இடத்தில் இரத்தமும் நீரும் வெளிவந்தன. இவைகளைவிட மிகக் கொடுமையானது; இறந்த என் உடலை என் அன்னையின் மடியில் கிடத்தினார்கள். அன்பாய், ஆறுதலாய், அரவணைப்பாய் எல்லாராலும் இருந்திட முடியாது. அன்னையால் மட்டுமே முடியும். என் அன்னைக்கு என்னால் ஆறுதல் கூறமுடியாநிலை. அம்மா உமக்கு என்னால் ஆறுதல் கூற இயலவில்லை. உன் வலிகளையும் வேதனைகளையும் உணர்ந்ததால். துயர்நிறைத்தாயாய்.. சிலுவையின் அடியில் நின்றவள் என் அன்னை. 33 வயது மகனை துள்ளத்துடிக்க சிலுவையிலே பறிகொடுத்தவள். அதுவும் பொதுவான சாவு அன்று; அடித்து இழுத்து இரத்தக் கறையோடு அவமானப்படுத்தப்பட்டச் சாவு. சிலுவைப் பாதையிலும் என் இறப்பின்போதும் என் அன்னையை எத்தனை வாள்கள் ஊருருவியிருக்கும், உள்ளம் உடைந்திருக்கும்? உயிரற்ற என் உடலை மடிசுமக்கும்போது உயிர் போகும் வலியை என் தாய் உணர்ந்தாள்.

### என் மகனே! மகளே!

ஒன்றிணைந்த இரத்த உறவுகள் ஒருவருக்கொருவர் துடிப்பது இயல்புதானே! என் தாயும் துடிக்கின்றாள். ஆனால், உயிரற்ற உடலையல்லவா சுமந்து கொண்டிருக்கிறாள். எந்த பெற்றோரும் இந்த உலகத்தில் பட்டுணரக்கூடாத துன்பம் உண்டெனில், அது தாங்கள் இருக்கும்போதே பிள்ளைகள் இறந்துபோவது. என் தாய் அத்துயரையும் சேர்த்தே பட்டுணர்ந்துவிட்டாள். யாரிடம் அவர் முறையிடமுடியும்? தீர்ப்பிட்டவனிடமா? கசையால் அடித்தவனிடமா? காறி உமிழ்ந்தவனிடமா? கழுமரத்தில் ஏற்றியவனிடமா? இல்லை அவன் துன்பம் அவன் தாய் பார்த்துக்கொள்வாள் என்று பாராமுகத்தினராய் இருந்தோரிடமா? இல்லை படைத்த பரம்பொருளிடமா? பெற்றோரே, என் பிள்ளைக்கு அதிக பாசம் கொடுக்கிறேன், அவர்கள் அழுதால் தாங்கிக் கொள்ளமாட்டேன், என் பிள்ளை யாருக்கும் பணிந்து போகக்கூடாது என்றெல்லாம் நினைக்கிறீர்களா? நீங்கள் இருக்கும்போதே அவர்களை இழந்துவிடாதீர்கள். ஆம், அவர்கள் உங்களுக்கும் பணியாமல் போகலாம். உயிருள்ளவர்களாய் உங்கள் தாய் மடியில் இளைப்பாறுங்கள் என் அன்புப் பிள்ளைகளே.



# 14. பதினான்காம் நிலை – துயில் கொள்ளல்

உண்மையின் தூதனாக இருந்ததால் உலகால் வெறுக்கப்பட்டேன். பாவத்தை வெறுத்ததால் பளுவானசிலுவையை சுமந்தேன். நீதிக்குக் கிடைத்த பரிசு முள்முடி. முள்முடி மட்டுமா? துணைக்குக் கசையடிகள். அற்புதங்கள் செய்த என் கைகளில் ஆணிகள். சிலுவையில் தொங்கினேன். களைப்பை நீக்க கல்லறைக்குள் செல்லலாம் என்றால் மாற்றான் கல்லறைதான் கிடைத்தது. பத்து மாதங்கள் என் தாயின் கருவறையில் பாதுகாப்போடு இருந்தேன். மனிதா! உனக்காக நான் தோற்றுப் போகிறேன் பூமித் தாயிடம். பூமித்தாயின் மடியில் மூன்றுநாள் உனக்காக துயில் கொள்ளப் போகிறேன். அன்னையின் கருவறையில் இருந்துபுதிதாய் உருப்பெற்றேன்; பூமியில் மடியில் இருந்து முழுதாய் உயிர்த்தெழுவேன்.

## என் மகனே! மகளே!

தாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு செய்து கடவுள் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். ஓய்வில் புலப்படும் ஒரு உன்னதமான நிறைவு. புயலுக்குப்பின்னே அமைதி என்பதுபோல கடந்த சில மணிநேர உயிர்ப்போராட்டத்திற்குப் பின் இதோ அமைதியில் இளைப்பாறுகிறேன். பிறந்தபோதே உறுதியாகிவிட்ட இறப்பு மனித வாழ்வை இன்னும் பொருளுள்ள விதத்தில்தானே வாழ உந்தித்தள்ள வேண்டும். இதோ, இறப்பு என்னைத் தழுவிக்கொள்ளுகின்றது; இருள் பூவுலகைக் கவ்விக் கொள்ளுகின்றது; உயிரற்ற என் உடலினைத் தாங்கிக் கொள்ள சபிக்கப்பட்ட பூமியும் தன்னை புனிதப்படுத்திக்கொள்ளுகின்றது. விழுகின்ற விதைதான் தளிராய் மலரும், இதுதான் உண்மையே. ஆம், விதையாக விழுகிறேன்; பெருமரமாக உயிர்த்தெழுவேன். நல்லவர்களின் உள்ளத்தில் உயிர்க்கிறேன்; நலம் விரும்பிகளின் செயல்களில் உயிர்க்கிறேன்; குமுக அக்கறையுடையோரின் தோழமையில் நாள்தோறும் உயிர்க்கிறேன். உங்கள் வாழ்வு உயிர்ப்பிற்கு சான்று பகரட்டும்.

உண்மையின் ஊர்வலம்

# சிலுவைப் பாதை



இன்று உலகம் வேகம் என்ற வார்த்தையின் அர்த்தத்தையே மாற்றி இன்னும் வேகப்படுத்துமளவிற்கு விரைவாக இயங்கி வருகின்றது. எப்படியோ முன்னேற வேண்டும் என்ற முனைப்பை ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த அவசர உலகம் திணித்து வருகிறது. ஆதலால் எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் பெருமளவில் நம்மிடையே பரவுகின்றது. யார் தான் குற்றவாளி இல்லை என்ற குற்ற உணர்வற்ற மனநிலை கொண்ட மனிதர்களாய் வாழ்கிறோம். உண்மையோடு வாழ்! உண்மையைப் பேசு! உண்மையைச் செய் என்பதைச் சொல்லும்போது வாழத் தெரியாதவர்களின் வார்த்தைகள் இவை என்று கேலி செய்யும் உலகம் தான் நம் உலகம்.

இருப்பினும், இன்றும் இனம் தெரியாதளவிற்கு உண்மையாக வாழும் இயேசுக்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். இவர்கள் வழியாகத்தான் இயேசு சொல்கிறார், உண்மைக்குச் சான்று பகர்வதே எனது பணி. இயேசு காட்டிய, வாழ்ந்த பாதைதான் இன்று உண்மையில் வாழும் இவர்களின் பாதை; உண்மையின் வழியில் நடக்க முயற்சிப்போம். இவர்களோடு நம்மையும் அடையாளம் காட்டிக்கொள்வோம். ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு உண்மைச் சொல்லையோ, செயலையோ வெளிப்படுத்துவோம். உண்மை விடுதலை தரும் என்ற நம்பிக்கையில் இந்த உண்மையின் ஊர்வலத்தில் பயணிப்போம்.

அருட்தந்தை ஜெகன்

## 1. முதல் நிலை : பிலாத்துவின் தீர்ப்பு

"நீங்கள் அளிக்கும் தீர்ப்பையே நீங்களும் பெறுவீர்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ, அதே அளவையாலே உங்களுக்கும் அளக்கப்படும்." (மத் 7-2)

### நடந்தது என்ன?

பொய்கள் பொதுக்கூட்டம் கூட்டிநீதிக்கு தீர்ப்பெழுதின."நானும் உன்னை தீர்ப்பிட மாட்டேன்" என்றவருக்கு எதிராக தீர்ப்பிடுவதற்காக கூட்டம் யூத மரபுப்படி ஒருவரை குற்றவாளி என்று சொல்வதற்கு, அல்லது நிரபராதி என்று சொல்லுவதற்கு தலைமைக்குரு மறைநூல் அறிஞர்கள் பரிசேயர்கள் சதுசேயர்கள் என்று 71 பேர்கள் இருக்க வேண்டும் அல்லது குறைந்தது 23 பேராவது இருக்க வேண்டும். ஆனால் இயேசுவுக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பில் இது முற்றிலும் நிராகரிக்கப்பட்டது. இரண்டாவதாக இணைச்சட்டம் 19:15ல் உள்ளபடி ஒருவரை குற்றவாளி என்று தீர்ப்பிட இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் தனித்தனியாக விசாரிக்கப்பட வேண்டும். இதற்கு நீண்ட நாள்களாகும். ஆனால் இயேசுவுக்கோ ஒரே நாளில் தீர்ப்பிடப்படுகின்றது. மூன்றாவதாக, இயேசு செய்த குற்றம், தன்னை கடவுளின் மகன் என்று சொன்னதும், இறைவனுக்கு இணையாக தன்னை குறித்து சொன்னதுதான் இதற்கு யூத முறைப்படி இயேசுவைக் கல்லால் எறிந்திருக்க வேண்டும். ஆனால் அநியாயத் தீர்ப்பாக உரோமை அரசின் குற்றவாளியாக குற்றம் சுமத்தப்பட்டு சிலுவையில் அறையத் தீர்ப்பிடப்படுகிறார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது இயேசுவுக்கு அளிக்கப்பட்டது அநியாய தீர்ப்பே. எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில், முதுகெலும்பு இல்லா மனிதனைப் போல அவர்கள் முன்னால் இயேசு நிற்கிறார். சிலுவையில் அறையச் சொல்லும் ஒரு கூட்டம், கொல்லத்துடித்து கொக்கரிக்கும் ஒரு கூட்டம். நடுவில் மாசற்ற செம்மறியாய் மானிடமகன் நிற்கிறார்.

### நடப்பது என்ன?

என் இளையமகன் எதர்க்குமே ஆகமாட்டான் என்று தீர்ப்பிடும் தந்தை. இந்தப் பரிட்சை முடிவதற்குள் என் அப்பா அம்மா என்னை கொடுமைப்படுத்தியே கொன்றுவாங்க போல, பார்த்தாலே எனக்கு எரிச்சலாயிருக்கு. இரண்டு பேருமே பிசாசுதான் ஃபாதர் என்று தீர்ப்பிடும் பள்ளி மாணவி. ஒரு நாளில் நமது வீட்டில், எத்தனை கொடூரமான வார்த்தைகள். இவன் செஞ்சியிருப்பான் இவனைப் பற்றி தெரியாதா என்று உத்தேசமாக சொல்லும் வார்த்தைகள் கூட இயேசுவுக்கு எதிரான அநியாயத் தீர்ப்புகள். நாமும் பிலாத்துவோடு இணைந்து கைகழுவுகிறோம். எப்போது நாம் யோசித்து தீர்ப்பாய் பேசுவோம்.

"சொல்லப்பட்டது உனக்கு, புரியவில்லை என்பதற்காக அது தவறு என்று சொல்லிவிடாதே"

### மன்றாடுவோம் :

ஓ இயேசுவே! முறையிடாமல் சாந்தமாயிருந்தவரே! எனது துன்பங்களைப் பணிந்த மனதோடு ஏற்றுக் கொள்ள எனக்குக் கற்பியும்.

## 2. இரண்டாம் நிலை : இயேசு சிலுவையைச் சுமத்தல்

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்." (மாற்கு 8:34)

### நடந்தது என்ன?

சிலுவை அடிமையின் சின்னம். நீங்கள் நிலைவாழ்வு பெறும் பொருட்டே நான் இவ்வுலகிற்கு வந்தேன் என்று சொன்னவரின் கைகளுக்கு அன்பளிப்பாக அடிமை வாழ்வின் சின்னம் கொடுக்கப்படுகிறது. இயேசு சுமந்த சிலுவை பகுதியின் மொத்த எடை 35 கிலோ. இதனை சுமந்து பிலாத்துவின் அரண் மனையிலிருந்து கொல்கத்தா மலையின் உச்சிவரை அவர் செல்ல வேண்டிய தூரம் ஏறக்குறைய 4 கி.மீ. எருசலேமின் வீதிகள் நகரைத் தாண்டி கரடு முரடான பாதைகள் செங்குத்தான கல்வாரி மலையின் பாதை இவைதான் அவர் சிலுவை சுமந்து செல்ல வேண்டிய பாதை. வழியெங்கும் பழிசொல்லும் கூட்டம் கேலி பேசும் கூட்டம் கேவலமாய் பார்க்கும் கூட்டம் அவமானங்களுக்கு இடையே ஆண்டவரின் மகன் சிலுவையை சுமந்து செல்கிறார்.

### நடப்பது என்ன?

தன் பணியில் இருந்து ஓய்வு பெற்ற ஒரு வயதானவர், "சாமி, எனக்கு 7 பிள்ளைகள். எல்லோரும் நல்லா இருக்காங்க. யாருக்கும் எந்தக் குறையும் இல்லை. ஆனால் என் பிள்ளைகளைப் பார்த்து பல வருசம் ஆச்சு சாமி. எப்பவாவது வருவாங்க. என்ன செய்ய? நானும் என் வீட்டுக்காரியும் தான் இருக்கோம். யாரும் வந்து பார்க்கமாட்டாங்க. உள்ளூர்லயே ஒரு மகா இருக்கா. ஒருநாள் கூட வந்து எட்டிப் பார்த்ததே இல்லை. வயசானாலே இந்த நிலைமை தான்! சாமி. புண்ணியத்துக்கு நீங்களாவது வந்து பார்க்குறீங்களே! ரொம்ப சந்தோசஷம் சாமி".

"உன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு நீ பிரச்சனையாய் இராதே! அவர்கள் வாழ்வில் ஒரு பிரச்சனை குறையும்."

### மன்றாடுவோம்

என் இயேசுவே! இந்த சிலுவை உம்முயையதல்ல. என்னுடையதாகத்தான் இருக்க வேண்டும். என் பாவங்களே உம்மை சிலுவையிலறைந்தன.

## 3. மூன்றாம் நிலை : இயேசு முதல் முறை விழுதல்

தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகின்றார். தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கி விடுகின்றார். (திருப்பாடல் 145:14)

### நடந்தது என்ன?

இயேசு முதலில் விழுந்தது. எருசலேம் நகரத்து வீதிகளில் இருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள். கற்கள் பதிக்கப்பட்ட நகரத்து வீதிகள், இதில் கரடுமுரடாக இயேசு இழுக்கப்படுகிறார். இழுக்கப்பட்டதின் இடரல் தான் இயேசுவை கீழே விழச்செய்கிறது. தோல்களில் அழுத்தம் புண்களில் வீக்கம் தலையில் குருதியோட்டம், களைத்துப்போன கால்கள், தளர்ந்துபோன கைகள், முடியாமல் மண்ணை முதன் முறையாக முத்தமிடுகிறார். தடைதாண்டி நடைபயில்வதே இயேசுவின் நடைமுறை.

### நடப்பது என்ன?

உலகம் வேகமாக உருண்டோடிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கை முறை மாறிவிட்டது. குடும்ப பாசமும் குழைந்து விட்டது. சமூக அக்கறையும் சரிந்து விட்டது. தப்பென்று சொல்வதே தவறான வார்த்தை செய்வதெல்லாம் சரிதான், சொல்வதெல்லாம் என்னுரிமை என்று சொல்லும் பிள்ளைகளின் கூட்டம் வீடுகளில் பெருத்துவிட்டது. பெற்றோரின் கனவுகளுக்கு பிள்ளைகள் இடறலாய் இருக்கிறார்கள். எப்போதும் ஜாலியாக இருப்பது தான் எப்போதும் இவர்கள் செய்யும் வேலையாக இருக்கின்றது. இப்படி ஒவ்வொரு முறையும் தங்கள் வாழ்வில் இடறி விழுந்து இருளில் தவிக்கும் இளைஞர்கள் இயேசுவுக்கு இடறல்களை கல்வாரி பாதைக்கற்களே.

"முடியாது என்று முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்காதே. முடியும் என்று துணிச்சலுடன் தொடரத் தயங்காதே"

### மன்றாடுவோம்

ஒ இயேசுவே! முதல் முறை நீர் கீழே விழுந்ததைக் குறித்து நான் ஒருபோதும் சாவான பாவத்தில் விழாதிருக்கத் தயை செய்தருளும்.

## 4. நான்காம் நிலை : அன்னையின் சந்திப்பு

இயேசு அன்னை மரியாளிடம், "அம்மா அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே" என்றார்.
இயேசுவின் தாய் பணியாளரிடம், "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்றார். (யோவான் 2:4,5)

### நடந்தது என்ன?

அன்னை அன்பின் அர்த்தம் இறைவனின் இவ்வுலக வடிவம். உலகிற்கான நிரந்தர சீதனம். ஓடி தேடி காத்த உயிரொன்று, ஊட்டி வளர்த்த உடலோடு வாடி வதங்குவதால் அழுகிறார் அன்னை மரியாள். யூத மரபில் அன்னையின் அன்பு ஆண்டவரின் அன்புக்கு சமமாக போற்றப்பட்டது. அன்னை மரியாள் மாபெரும் தாயாக அன்புக்கு அர்த்தமாக இயேசுவுக்கு இருந்தார், இயேசுவோடு எந்நாளும் இருந்தார். அன்னை மரியாள் கபிரியேல் தூதரை சந்தித்த போது உற்சாகத்தையும் துணிச்சலையும் பெற்றுக்கொண்டார். தான் பெற்ற உற்சாகத்தையும், துணிச்சலையும் எலிசபெத் அம்மாவுக்கு, பகிர்ந்து கொடுத்தார். அதே துணிச்சலையும் குடும்ப பாசத்தையும் தன் மகனை சந்தித்த போது ஆறுதல் சொல்லி அனுப்புகிறார். அம்மா எனது நேரம் வந்துவிட்டது, நான் செல்கிறேன் உன் அன்பையும் ஆறுதலையும் பெற்று உற்சாகத்தோடு செல்கிறேன். தொலைதூரம் என் பயணம் தொடர்ந்து செல்வது கடினம், இருப்பினும் செல்வேன் இதயத்தில் உன் அன்பு இருப்பதால்.

### நடப்பது என்ன?

வீட்டு நாய்களுக்கு கூண்டு உண்டு. விதவிதமாய் உணவு உண்டு. ஊட்டி வளர்த்த தாய்களுக்கோ விரிந்த வீதிகளே உண்டு என்று விரட்டும் பாசப்பிள்ளைகள் இப்படித்தான் தாயின் மேன்மை தாளக்கிடக்கின்றது. இன்று ஒரே ஒரு பிள்ளை, பொத்தி பொத்தி வளர்த்தோம் சாமி, அதனால் ஒன்னும் சொல்றது கிடையாது சாமி என்று தங்கள் தாயின் கடமையை உதறித்தள்ளும் தாய்களும் நம்மிடையே இருக்கின்றார்கள். இப்படிப்பட்ட மகன்களும் தாய்களும் தங்கள் வாழ்க்கை பாடத்தை அன்னை மரியாளிடமும், மைந்தன் இயேசுவிடமும் கற்றுக் கொள்ளட்டும்.

"நல்லவனாய் பிறப்பது சந்தர்ப்பத்தினால் நல்லவனாய் வாழ்வது முயற்சியினால்"

### மன்றாடுவோம்

ஓ இயேசுவே! எந்த மனிதப் பாச பந்தமும் எவ்வளவு நெருங்கியதாய இருப்பினும், நான் சிலுவையின் பாதையில் தொடர்ந்து நடப்பதைத் தடை செய்யாமல் இருப்பதாக.

## 5. ஐந்தாம் நிலை : சீமோன் உதவி

"பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்". (மத்தேயு 7:12)

### நடந்தது என்ன?

தலையெல்லாம் கனம்
கரமெல்லாம் ரணம்
இரட்டிப்பாகிறது இதய துடிப்பு
இன்னலுறுகிறது உயிர் துடிப்பு

பாலைநிலத்தில்
ஒன்றை மரத்து நிழல்போல்
சீமோன் வந்தார்.

கல்வாரி செல்லு முன்பே காலமாகி விடுவாரோ என்று எண்ணியவர்கள் வழியோரம் சென்ற சீரேன் ஊரை சார்ந்த சீமோனை சிலுவை சுமக்க கட்டாயப்படுத்துகிறார்கள். தேடி வரவில்லையெனினும் தேவையில் வந்தவர் சீமோன். இயேசுவுக்கு சிறிது நேரம் கனம் குறைகிறது. உடன் சேர்ந்து சுமக்க ஒருவர், இறுதிவரை எவரும் இல்லையெனினும், இடையில் இவராவது வந்தாரே என்று ஓர் ஆறுதல். உதவி செய்த சீமோனின் உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள் இருக்கலாம், இருப்பினும் உதவியை உடனடியாக, தொடர்ந்து செய்தார்.

### நடப்பது என்ன?

நமது பங்கில் கோடி அற்புதர் புனித அந்தோனியாருக்கு அழகிய ஆலயம் எழுப்பப்பட்டு வருகிறது. அதற்காக அன்பளிப்பாக தன்னால் இயன்ற உதவியை செய்ய ஒரு வயதான தாய் வந்தார். "சாமி, என் வீட்டுக்காரருக்கு தெரியாமல் தான் நான் கோயிலுக்கு வாரேன். ஆஸ்பத்திரிக்கு போறதாக சொல்லி அந்தோனியார் கோயிலுக்கு வாரா வாரம் போயிருவேன். சாமி, இந்தாங்க 30 ரூபாய் என்னால முடிஞ்சது. ஏதாவது ஒரு செங்கல் வைக்கவாவது தேவைப்படும். அந்தோணியார்கிட்ட அந்த செங்கல் எனக்காக செபம் பண்ணிக்கிடும்."

"உன்னால் விளக்கேற்ற முடியவில்லை என்றாலும் எரியும் விளக்குகளையாவது அணைக்காமலிரு"

### மன்றாடுவோம்

அன்பு இயேசு, சிரேனியனான சீமோன், தமது சிலுவையைச் சுமக்க உதவுகிறார். சீமோன் மனமில்லாமல் உமக்கு உதவினார். நான் எதையும் உமக்காகப் பொறுமையுடன் சகித்துக் கொள்வேனாக.

## 6. ஆறாம் நிலை : வெரோணிக்கா வீரம்

வாருங்கள் உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். "நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்; தாகமாய் இருந்தேன், என் தாகத்தை தணித்தீர்கள்; அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்; நான் ஆடையின்றி இருந்தேன், நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்; நோயுற்றிருந்தேன், என்னைக் கவனித்துக்கொண்டீர்கள்;சிறையில் இருந்தேன், என்னைத்தேடி வந்தீர்கள்". (மத்தேயு 25:34-36)

### நடந்தது என்ன?

இரத்தம் சொட்டு சொட்டாயல்ல
இரத்த சுனையாய் வடிந்தது
புழுதியான முகம்
புண்களான தேகம்

அன்று மகதலா மரியா தன் கூந்தலால் யேசுவின் காலடிகளை துடைக்கிறாள், தன் பாவத்தை போக்கி விடுதலை பெற்றாள். இன்று இயேசு முன்பின் பார்த்திராத வெரோணிக்கா என்ற பெண் இயேசுவின் இரத்தமும், புழுதியும் தோய்ந்த திருமுகத்தை துடைக்கிறாள். யாராவது என்னை பிடித்து விடுவார்களோ! கொலைகார கூட்டமும், ஆயுதம் தாங்கியவர்களும் அங்கிருக்க துணிச்சலுடன் அவள் செய்த அன்பு செயலுக்கு இயேசு தன் முகத்தை அந்த துணியில் பதிக்கிறார். துணிவுக்கு இலக்கணமாய் இருந்தாள் என்று இயேசுவே இனம் உயர்த்தி பார்க்கிறார். காறி உமிழப்பட்ட முகத்தை கனிவாய் அப்பெண் துடைத்தாள்.

### நடப்பது என்ன?

"தைரியம் தருவாள் தமிழன்னை" என்கிறது தமிழ் பழமொழி. "யாராவது என் பிள்ளையை தப்பா சொல்லிவிட்டா, என்ன செய்ய?" என்று புலம்பும் சிலர், "கோயில் காரியத்திற்கெல்லாம் அதற்குன்னு ஒரு சில குடும்பத்திற்கு பிள்ளைங்க இருக்காங்க, எங்களை ஆள விடுங்க" என்று விளக்கம் கொடுக்கும் சில பெற்றோர்கள் நமது பங்கில் இருக்கின்றார்கள். அச்சமின்றி ஆண்டவரை அண்டி சென்றாள் வெரோணிக்கா. ஊர் என்ன சொன்னாலும், புரணி பேசினாலும் கவலையில்லை என்ற எண்ணம் அவளிடம் இருந்தது. நம்மிடம் என்ன இருக்கிறது? நம்மில் சிலர் வேடிக்கை கிறிஸ்தவக் குடும்பங்களாகவே கோவிலுக்கு வருகின்றோம், ஈடுபாட்டுடன் ஆலய பணிகளில், பொறுப்புகளிலும் நம்மை இணைத்து கொள்ள அஞ்சுகிறோம். என் குடும்பம் என்பது என் பங்கு தான் என்ற எண்ணம் எப்போது நம்மிடம் வரும்?

"நாட்காட்டியிலுள்ள தேதியைக் கிழிக்க மறந்து விட்டாய் என்பதற்காக நாட்கள் நகராமல் இருப்பதில்லை"

### மன்றாடுவோம்

ஓ இயேசுவே! வெரோணிக்காவின் துகிலில் உமது திருமுகச்சாயலைப் பதியப் பண்ணினீர். என் இதயத்திலும் அதை அழியா முத்திரையிடும்.

## 7. ஏழாம் நிலை : இயேசு இரண்டாம் முறை விழுதல்

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."

"என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது" என்றார். (மத்தேயு: 11:28,30)

### நடந்தது என்ன?

என் தந்தையின் இல்லத்தை கள்வர் குகையாய் மாற்றாதீர் என்ற சாட்டையால் விரட்டி, கோவிலின் புனிதத்தை எடுத்து சொன்ன இறை மகனுக்கு சாட்டையடிகள், தாங்க முடியாமல் தடுக்கி விழுகிறார்.

உட்காரச்சொல்லும் கால்கள்
சோர்வை மெல்லும் தோள்கள்
விழுந்தார் விண்ணக வேந்தர்.

எருசலேம் நகரை தாண்டி கரடு முரடான கற்கள் நிறைந்த பாதை, வெயில் சுட்டெரிக்கிறது, தாகத்தால் நா வறண்டு போனது, மூச்சு மட்டும் அதிகமாகவும், சத்தமாகவும் வருகிறது. சுற்றிலும் கூட்டம், இரக்கத்தோடு சிலர், இனி எழுவாரா என்று சிலர் ஆனால் இயேசு மீண்டும் எழுந்தார். கால்களை ஆழ பதித்து , சோராத உள்ளத்தோடு சுமை தூக்கி பயணம் தொடர்கிறார்.

### நடப்பது என்ன?

இன்று குடும்ப பாசம் - முகத்தில் பூசும் பவுடர் போல நேரம் கழிந்ததும் நிறம் களையும். மனிதாபிமானம் - சுவற்றில் தொங்கும் புகைப்படம் போன்று, நேரம் போகவில்லையேல் அவை பார்க்கப்படும், பொழுதும் போக்கப்படும், கடவுள் பக்தி ___ வாங்க சென்ற கடைப்பொருளை போன்று - இந்த கடையில் இல்லையேல், அடுத்த கடையில் வாங்கலாம் இந்த சபை இன்று, நாளை அடுத்த சபை அழைக்கும் போது அங்கும் ஆஜராகி விடுவது.

இவையெல்லாம் இயேசுவை இன்று விழச் செய்த இடறல்கள், நம் குடும்பத்தில், நம் விசுவாச வாழ்வில் வீழ்ந்து கிடக்கிறோம், யேசுவை விழ செய்கிறோம். அக விழி திறப்பது எப்போது எழுந்து நடப்பது எப்போது?

"தோல்வியின் காரணம் அறிந்தால் அது வெற்றிக்கு அடியெடுத்துக் கொடுக்கும்"

### மன்றாடுவோம்

அன்பான ஆண்டவரே! நீர் இரண்டாம் முறை விழுந்ததைக் குறித்து நான் திரும்ப பாவத்தில் விழாதபடி என்னைக் காப்பாற்றும்.

## 8. எட்டாம் நிலை : மகளிருக்கு ஆறுதல்

"நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்". (யோவான் 14:1)

### நடந்தது என்ன?

அன்று எருசலேம் நகரத்திற்காக கண்ணீர் விட்டார்
தன் நண்பன் லாசருக்காக கண்ணீர் விட்டார்
இன்று வழியோரங்களில்
விழி நீரோடு பெண்கள்
கண் மூடிய இதயங்களுக்கிடையே
கண்ணீர் இரைப்போர் கூட்டம்

ஆறுதல் சொல்லி அன்பு மொழி பேசுகிறார் யேசு, என்னைப்பார்த்து இரக்கப்படாதீர்கள், உங்கள் இதயங்களை பாருங்கள், உங்கள் குடும்பங்களை பாருங்கள் என்று சொல்லுகிறார் யேசு. யாரென்று தன்னை தெரிந்தோ, தெரியாமலோ தனக்காக கண்ணீர் சிந்தும் பெண்கள் - இங்கும் இரக்கம் உள்ள இதயங்கள் இருக்கிறார்கள் என்று யேசு உணர்ந்தார். அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, உங்கள் அன்பினை நான் அறிந்து கொண்டேன், உங்கள் இரக்கம் என் இதயத்திற்கு இதமளிக்கிறது என்று ஆறுதல் சொல்கிறார்.

### நடப்பது என்ன?

மாலை நேரம் ஒரு வீட்டிற்கு சென்றேன். அழுகின்ற குழந்தையின் குரல், ஆங்காங்கே சிதறிய பொருட்களுடன் அலங்கோலமான வீடு வயதான மனிதரின் கூப்பிடும் ஒலி - இத்தனைக்கும் மேலான ஒரு பெரும் சத்தம் அது தான் தொலைக்காட்சியின் சத்தம். தொடர் நாடகத்தில் அழுகின்ற குழந்தையும், கூப்பிடும் வயதானவரையும் அடகு வைத்தோர் அங்கே அமர்ந்திருந்தார். டீவி பெட்டி முன் கண்ணீர் வடிக்கும் கூட்டம் இன்று பெருத்து விட்டது. பொழுதுபோக்கு சாதனங்களை நம் பொழுதை எல்லாம் போக்கின, பின் பிள்ளைகளோடு எப்படி நேரம் செலவழிப்பது? அவர்களுடன் அக்கறையோடு எப்போது பேசுவது? பரிட்சைக்கு படி என்று சொல்லி படம் பார்க்கும் பெற்றோர் தம் குற்றம் உணர்வது எப்போது?

இவர்களுக்கு இயேசு சொல்கிறார்
வாழ்ந்தும் காட்டினேன்
வழியும் காட்டினேன்
விழி திறக்காது உங்கள் குற்றமல்லவா?

"செருப்பில்லையே என வருந்திக் கொண்டிருந்தேன் காலில்லாதவனை நான் காணும் வரை"

### மன்றாடுவோம்

அன்பு இயேசுவே, நீரே எங்கள் குடும்பத்தின் தலைவராக இருந்து எம் வாழ்வு பயணத்தில் உடனிருந்து வழிநடத்துவீராக.

## 9. ஒன்பதாம் நிலை : இயேசு மூன்றாம் முறை விழுதல்

"நல்லவர் ஏழுமுறை விழுந்தாலும் எழுந்து நிற்பார்; பொல்லார் துன்பம் வந்தவுடன் விழுந்து விடுவர்." (நீதிமொழிகள் 24:16)

### நடந்தது என்ன?

தளர்ந்த நடை, நனைந்த உடை, முட்களின் நெருக்கம் உடலில் நடு நடுக்கம். முடியாமல் விழுகிறார், விழுந்ததில் மூட்டுகளில் வீக்கத்தை கூட்டும் உரசல். உடனே கசையடிகளுக்கு கணக்கில்லை, அதட்டல்களுக்கு அளவில்லை, வசைபாடுகளுக்கு வரம்பில்லை. விழுந்தார் விழுப்புண்களோடு, எழுந்தார் எழும் விண்மீனாக. கல்வாரி மலை மனிதர்கள் அடிக்கடி செல்லாத பகுதியாக இருந்தது. பாதையும் செங்குத்தாக இருந்தது, சுமை தூக்கி செல்வது எளிதல்ல, ஆக யேசு இயலாமல் விழுந்தார். "இனி அவ்வளவுதான்" என்றனர் சிலர், "சரி பார்ப்போம் எழுந்திருப்பாரா மாட்டாரா என்று" என்றனர் வேறு சிலர், எவர் என்ன எண்ணினாலும் என் பயணம் இதற்காக வாழ்வு பெறும் பொருட்டே தந்தை என்னை அனுப்பினார், அதை நிறைவேற்ற இதோ எழுகிறேன் என்று தன் சக்தியெல்லாம் திரட்டி யேசு எழுந்து பயணம் தொடர்கிறார்.

### நடப்பது என்ன?

விழுவது வீண் அல்ல
எழுச்சிற்காக ஏற்பாடு அது
விழித்திருப்பதும்
மனம் திறப்பதும் தான்
வீழ்ச்சி விதைத்த பாடங்கள்

நான், எனது, என் குடும்பம் இவை பல குடும்பங்களின் குடும்ப கீதம். "எங்க தாத்தா அப்போவே நம் கோயிலுக்கு பெரிய கதிர் பாத்திரம் வாங்கி தந்தாரு, நாங்க அப்படி வீசுவாசத்துல வளர்ந்தவங்க" என்ற பெருமை பேசியவரிடம் ஒரு கேள்வி கேட்ட பின், அமைதியானார், கேள்வி என்ன? "உங்க தாத்தா வட்டிக்கு பணம் விடும் தொழில்தானே பார்த்தாங்க?" சுயநலமும், வீண் பெருமையும் தான் நம்மை கிறித்தவன் என்ற மேன்மை மிக்க நிலையிலிருந்து தவறி விடுகிறோம். வாழ்க்கை வேறு கோவில் பக்தி வேறல்ல. வழிபாடு தான் வாழ்க்கையின் பாதை. உணர்ந்து வழிபடுவோம்.

"நம்பிக்கை என்பது இன்று தோற்றதில் நாளை வெற்றி பெறுவோம் எனும் உறுதி"

### மன்றாடுவோம்

ஓ இயேசுவே! எனது வாழ்வின் நீண்ட பயணத்தில் நான் களைந்துத் தவிக்கும்போது நீரே எனது பலமாகவும் விடாமுயற்சியாகவும் இருப்பீராக.

## 10. பத்தாம் நிலை : ஆடை களையப்படுதல்

என்னைப் பார்ப்போர் எல்லாரும் ஏளனம் செய்கின்றனர்; உதட்டைப் பிதுக்கித் தலையசைத்து, 'ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்தானே! அவர் இவனை மீட்கட்டும். தாம் அன்பு கூர்ந்த இவனை அவர் விடுவிக்கட்டும்' என்கின்றனர். (திருப்பாடல் 22:7,8)

### நடந்தது என்ன?

கல்வாரி மலை கடவுள் மகனை கரம்விரித்து வரவேற்றது. உரோமையர் வழக்கப்படி கொலைக்களத்தில் நான்கு படைவீரர்கள் குற்றவாளியின் உடைமைகளை பங்கிடுவர். யூத மரபு படி, குற்றவாளி யூதர் எனின் அவருடைய மிதியடி, தலைப்பாகை, இடைக்கச்சை, வெளிஅங்கி, உள்ளாடை ஆகியவற்றை ஆளுக்கொன்று எடுத்து கொள்வர், விலையுயர்ந்த அங்கியை சீட்டு போட்டு பங்கிடுவர் ஆனால் இயேசுவுக்கோ சிவப்பு அங்கி மட்டும் தான் போர்த்தப்பட்டது. அதுவும் உறியப்பட்டது. அவர் இலட்சி வாழ்வை போலவே அவர் உடையும் பிரித்து பிணைக்.கப்பட்டதல்ல. அவமானம் அவர் மேனியை மென்றது, ஆனால் அவர் அடி மனமோ அனைத்தையும் அலட்சியம் செய்தது. வாழ்வு என்பது விழங்குவதற்கே என்ற வாய்ப்பாடு அவர் அடி மனதில் ஒலித்தது.

### நடப்பது என்ன?

ஆடை அவிழ்ப்பு
அவமானம் நமக்கு
அதுவுமோர் தானம்
யேசுவுக்கு!

இன்று நாகரீகம் என்ற பெயரில் உடலுக்கும், கால நிலைக்கும் ஒத்து வராத உடைகள், கோவிலுக்கு உடுத்திவரும் உடைகளை அங்கே நற்கருணை எழுந்தேற்றம் - இங்கே முன்னே இருப்பவரின் சேலை பற்றிய வர்ணிப்பான- தாயுக்கும் மகளுக்கும் இடையே நடக்கும் உரையாடல் யேசுவின் உடையை கிழிக்கின்றன. மிதியடியை கூட கோவிக்கு வெளியே கழற்ற முடியாத தற்பெருமை கொண்ட நாம் எப்படி ஆண்டவரின் வாழ்வையும், அவரை போல அவமானத்தை ஏற்றுக்கொள்ள முடியும்?

வீட்டில் அதிகமான ஆடைகள்
வீதியில் உயர்வான ஆடையுடன் உலா
உடலை அலங்கோலமாக காட்டும் ஆடைகள்
இயேசுவை ஆடை அற்றவராக ஆக்குகின்றன.

"சொல்லிவிட்டு செய்யாமல் இருப்பதை விட செய்து விட்டு சொல்லாமலிரு"

### மன்றாடுவோம்

எனது ஆன்மாவின் மாசற்றத்தனமாகிய ஆடை பறிக்கப்பட்டுவிட்டது. அன்பான இயேசுவே! தபம் ஆழ்ந்த மனவருத்தம் ஆகிய உடையில் என்னை உடுத்தியருளும்.

## 11. இயேசு சிலுவையில் அறையப்படுதல்

அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம். (எசாயா 53:5)

### நடந்தது என்ன?

முள் குத்திய இடத்தில்
ஈட்டி குத்தி பார்க்கும்
வேடிக்கை மனிதர்கள்
சத்தமாயிட்ட சத்தத்தில்
சங்கீத வகை பார்த்த
பாலை வன மக்கள்
ஆணிகளின் குற்றமில்லை
அறைந்தவனின் மேலும் குற்றமில்லை
ஆணையிட்டவன் மேல் கூட குற்றமில்லை - ஆனால்
"ஆமாம்" என்றோரின் குற்றமல்லவா -அனைத்துக்கும்
அமைதி காத்தோரின் குற்றமல்லவா.
தோலை கிழித்து
நரம்பினை அறுத்து
உடலின் புதிய பாகங்களாக
உருவெடுத்தன ஆணிகள்
இயேசுவின் கரத்திலும், பாதத்திலும்

அறையப்பட்ட ஆணிகள் சுமார் 7 ½ இன்ச் நீளம் கொண்ட கூர்மையான தன்மை கொண்டவையாம். இரத்தம் கல்வாரி மண்ணை நனைத்தது. மொத்த உயிரும் போய் வந்த மாதிரி தாங்க முடியாத வலி.

### நடப்பது என்ன?

சந்தேக ஆணிகள்
வார்த்தை ஈட்டிகள்
குடும்பம் என்னும் உடலை சிலுவையில் அறைகின்றன.
"இவர் செய்திருக்கலாம்" என்ற உத்தேசமாக சொல்லும் வார்த்தை கூட
கூர்மையான ஆணிகளே.
சுயநலத்தோடு, பதவி ஆசையோடு, புகழுக்காக
நாம் செய்யும் எல்லாமே இயேசுவுக்கு எதிரான ஆணிகளே
குடும்பத்தோடு செபிக்காத ஒவ்வொரு நாளுமே
கிறிஸ்தவர் நாம் யேசுவை அறைய கொடுக்கும் ஆணிகளே
அறிவது எப்போது?

"காயப்படுத்தினவரையும் அன்பு செய்
அன்பு செய்பவரை காயப்படுத்தாதே"

### மன்றாடுவோம்

என் இறைவா! உமது பகைவர்களை நீர் மன்னித்தீர். எனக்கு இழைக்கப்பட்ட கொடுரங்களை மன்னித்து மறக்க எனக்குக் கற்பியும்.

## 12. இயேசு சிலுவையில் உயிர் விடுதல்

"என் வலிமை ஓடுபோலக் காய்ந்தது; என் நாவு மேலண்ணத்தோடு ஒட்டிக் கொண்டது; என்னைச் சாவின் புழுதியிலே போட்டுவிட்டீர்." (திருப்பாடல் 22:15)

### நடந்தது என்ன?

கல்வாரி மலை மீது உயிர் விடுகிறார் கடவுளின் ஒரே மகன். இழுத்து அடிக்கப்பட்ட ஆணிகளில் தசை இழுப்பு, மூச்சு விடுவது திணறும் சூழல், ஆதலால் சிறு வார்த்தைகளாக ஏழு முறை யேசு பேசுகிறார், ஏனெனில் கைகள் விரிக்கப்பட்ட நிலையில் இதய துடிப்பு மெதுவாக இருக்கும், மூச்சும் பெருமூச்சாக விடுவது எளிதல்ல. தன் தாயை உலகிற்கு அர்ப்பணித்து விட்டு ஆவியை தந்தையிடம் ஒப்படைக்கிறார். உயிர் கொடுத்தவருக்கு உயிர் இல்லா சூழல் இங்கு மட்டுமே.

"வழங்குவதற்காகவே வாழ்வு" இதை யேசுவை விட யார் அர்த்தமுள்ளவாறு சொல்லமுடியும்? வாழத்தான் முடியுமா?

அனைத்தும் நிறை வேறியதென
உயிரின் ஓசையை
நிரந்தரமாக நிறுத்தி கொள்கிறார்

### நடப்பது என்ன?

இது வருத்தப்பட சொன்ன
சாவு அல்ல
வாழ சொன்ன சாவு
வருத்தந்தான்
நியாயம்
நீதிமன்றத்தில்
ஊர்மன்றத்தில்
குடும்பத்தில்
உதாசீனப்படுத்தப்படும்போது
ஏழை மாணவர்களுக்கு
உதவும் ஆசிரியர்கள்- இயேசுவுக்கு உயிர் கொடுக்கிறார். வாழ வைக்கும் போது, இயேசு உயிர் வாழ்கிறார்.

"உன்னை நீ அறிந்தால் உலகம் உனக்கு புரியும்,
உன்னை நீ நம்பினால் உலகம் உன்னை நம்பும்"

### மன்றாடுவோம்

என் இயேசுவே! நீர் உயிர் விடுகிறீர். ஆனால் பாவிகளாகிய உம் மக்களுக்காக உமது திரு இருதயம் இன்னும் அன்பால் துடித்துக் கொண்டிருக்கிறது.

## 13. பதிமூன்றாம் நிலை : மாதா மடியில்

"என்னைக் கருப்பையினின்று வெளிக்கொணர்ந்தவர் நீரே; என் தாயிடம் பால்குடிக்கையிலேயே என்னைப் பாதுகாத்தவரும் நீரே!

கருப்பையிலிருந்தே உம்மைச் சார்ந்திருந்தேன்; நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல் என் இறைவன் நீரே." (திருப்பாடல் 22:9-10)

### நடந்தது என்ன?

பிரியாதே மகனே
எரியாது என் வீட்டு தீபம்
அழுகிறாள் அன்னை மரியா

ஓடி காத்தேன் அன்றொரு நாள்
தேடி பார்க்க வந்தேன் மற்றொரு நாள்
மடியில் உடலை தாங்க வந்தேன் இன்று
இது இறுதி நாளாக போய்விட்டதே

பார்க்க முடியா அவலம்
பகிர முடியா சோகம்
தீர இயலா துன்பம்
அன்னை மடியில் மகனின் உடல்
ஊடுருவிய வாள் இது தானா என்ற கேள்விமட்டும்
அவர் உள்ளத்தில் ஒலிக்கிறது.

### நடப்பது என்ன?

சொத்து பிரிப்பில்
செத்து போன பிள்ளை உறவு
முதுமை தொய்வில்
தொங்கி நிற்கும் பிள்ளை பாசம்
வாழ்வு என்பது என்ன
என்பதற்கு அன்னை விளக்கமளித்தார்.
நல் குடும்பம் என்பதற்கு இவர்கள் குடும்பமே சான்று
பெற்றெடுக்கும் அன்னை
கற்று கொடுக்கும் தந்தை
இவர்களே அன்பின் வித்துக்கள்
நிலையா வாழ்வின் மறையா சொத்துக்கள்.

"உன் உணர்ச்சியை ஆளத்தெரியாவிட்டால் உன்னை அது ஆட்சி செய்யும்"

### மன்றாடுவோம்

ஓ வியாகுல அன்னையே! உமது கரங்களில் ஏற்றுக் கொள்ளும். எனது பாவங்களுக்காக மெய்யான முழுமையான மனஸ்தாபத்தை எனக்குப் பெற்றுத்தாரும்.

## 14. பதினான்காம் நிலை : அடக்கம்

"கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியா விட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால் தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்." (யோவான் :12-24)

### நடந்தது என்ன?

இது நிறைவேறி விட்ட
திரை மறைவு நாடகமல்ல
வீதி நிகழ்வு
இது விதையின் வீழ்ச்சியல்ல
எழுச்சிக்கான ஏற்பாடு
இது அடக்கமல்ல
அடுத்த வாழ்விற்கான தொடக்கம்
இவ்வுலகத்தை இமை பொழிதினில்
இன்னலுற செய்த இலட்சியவாதியின்
இன்னொரு பயணம்
உண்மையின் ஊர்வலம்
நாளைய சமூகத்திற்கு
நம்பிக்கை விதைக்க
புதைக்கப்பட்டார் இயேசு.
அயலான் நிலம் அவருக்கு சுகமானது
இறுதியல் கூட அடக்கமாவதற்காக
அவர் விதைக்கப்படவில்லை
நிலையான நடை பிணங்களை
உயிர்ப்பிக்கவே உறங்கினார்

### நடப்பது என்ன?

எங்கள் வீடுகளில்
கண்ணாடி பெட்டிகளில் இரைச்சல்
பேசா நோன்பை உதடுகள்
பேணிக்காக்கின்றன
வீடுகளில் விதைக்கப்பட்ட அடக்கமிது
வீதியில் உலவ உரிமையில்லை
உழைப்புக்குகந்த தகுதியில்லை
மனிதனென்ற மதிப்பில்லை
சமூகத்தில்
அடக்கப்பட்ட உண்மையிது

"இந்த உயிர் இறைவன் கொடுத்த கடன்
இந்த உடல் இலவசமாக கொடுத்த பரிசு"

### மன்றாடுவோம்

திவ்விய நற்கருணை வழியாக நான் உம்மை என் இதயத்தில் ஏற்றுக் கொள்ளும் போது, ஓ இயேசுவே! உமது ஆராதனைக்குரிய திருவுடல் தங்குவதற்கு ஏற்ற இல்லிடமாக அதை மாற்றியருளும்.

வாருங்கள் நாமும் செல்வோம்

# சிலுவைப் பாதை



இயேசுவின் நெருங்கிய நண்பரான இலாசர் இறந்தபோது இயேசு பெத்தானியாவிற்குச் செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தார். அப்போது சீடர்கள் இயேசுவிடம், "ரபி, இப்போதுதானே யூதர்கள் உம்மேல் கல்லெறிய முயன்றார்கள்; மீண்டும் அங்குப் போகிறீரா?" என்று சொல்லி அவரைத் தடுத்தார்கள் (யோவான் 11:8). ஆனால் தோமாவோ, "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என்று சொல்லி இயேசுவுக்காக எதையும் செய்யத் துணிந்தவராகத் தன்னை வெளிப்படுத்தினார். நெருங்கியவரின் இறப்பு, தன்னலத்தின் வெறுப்பு, பொதுநலனுக்கான துறப்பு... எனப் பல படிமங்கள் இச்சொற்களில் பொதிந்துள்ளன.

கடந்து வந்த கொரோனாக் காலத்தைச் சற்று நினைத்துப் பாருங்கள். தெரிந்தவர்கள், உறவினர்கள், அறிமுகமானவர்கள், அண்டை வீட்டார்கள், கடந்து வந்த செய்திகளில் அறிந்து கொண்டவர்கள் எனப் பலர் இறந்து போயிருக்கிறார்கள். சரியான அடக்க நிகழ்வுகள்கூட நடைபெறவில்லை. கட்டியணைத்து அழவோ ஆறுதல் சொல்லவோ முடியவில்லை. பேரிடர்கள், பெருந்தொற்றுகள், இழப்புகள் மூலம் வாழ்வு நிலையற்றது, சேமிக்கும் திடப்பொருட்கள் எதுவும் உடன் வருவதில்லை என்பதெல்லாம் அடிக்கடி நினைவுப்படுத்தப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இருப்பினும் நமது செயல்பாடுகள் பெரும்பாலும் அனைத்திற்கும் அதிபதி போலும், நம்மையன்றி எதுவும் நடக்காது என்பதுபோலும் தொடர்கின்றன. இந்நிலையில் நம் வாழ்வு என்கிற கொடையைப் பற்றி சற்று சிந்திக்க இயேசுவின் பாதை வழிகாட்டும் என்று நம்புவோம்.

அருட்தந்தை ம. டைட்டஸ் மோகன்

வாழ்வுக்கும் இறப்பிற்கும் இடையிலான போராட்டத்தில் ஒவ்வொரு மாந்தருக்கும் துணிவு தேவை. நாமும் செல்வோம் என்கிற உளவேகம் தேவை. நாம் கடந்து வந்த பெருந்தொற்றின் காலம் இதனை நமக்கு நன்கு உணர்த்தியிருக்கிறது. செல்வதா? தவிர்ப்பதா? தொடுவதா? விடுவதா? அணிவதா? களைவதா? என்கிற போராட்டம் முடிவிற்கு வரும் காலம் வெகுதொலைவில் இல்லை. இத்தகு நம்பிக்கையை விதைக்கும் முயற்சியாக இத்திருச்சிலுவைப் பாதை அமையும் விதமாய், "வாருங்கள் நாமும் செல்வோம்" என்கிற கருப்பொருளில் தியானிப்போம்.

பாதைகளும் பயணங்களும் வாழ்வில் ஏராளம். பயணிக்கும் பாதையில் செம்மையாக வேண்டியது நம் எண்ணங்கள் என்பதில் மாற்றில்லை. நம்பிக்கைத்தரும் நல்லெண்ணங்கள் உள்ளங்களில் கூடு கட்ட தவறுகையில் உறவுகளில் உணர்வுகளில் பிழைகள் ஏற்படுவது தவிர்க்க இயலாது. மீட்பர் என்கிற இறைமகனின் நல்லெண்ணம்தான் அவரது இறப்பால் நம் வாழ்விற்கு பொருள் தந்துள்ளது. சாவிற்கு அவரை இட்டுச்சென்ற சிலுவைப் பயணம்தான் இன்று நமக்கு அருளடையாளக் கருவியாக வழிநடத்துகிறது.

அவ்வகையில் சில மணித்துளிகள் நாம் மேற்கொள்ளும் சிலுவைப்பாதை என்கிற பயணம் புனிதப்பாதை, ஈகப்பாதை, பிறர் வாழ்வுப் பெற தன்னுயிர் தந்த பரமனின் பாதை.

அன்று பாவச்சின்னமான சிலுவையைச் சுமந்து இன்று நம் எல்லோரின் மீட்பின் சின்னமாய் புனிதப்படுத்திய பாதை. கல்லாக, முள்ளாக இருந்த பாவப்பாதையைத் தகர்த்து அன்பு, பரிவு என்ற வாழ்வின் பாதையாகச் செம்மையாக்கினப் பாதை. அன்று சிலுவை சுமந்த இயேசுவுக்காக அழுவதல்ல, இன்று நமது குமுகாயம் வாழ்வு பெற என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்திக்க அழைக்கும் பாதை. நாம் பயணிக்கும் இந்தப் பாதையில் மனமாற்றம் பெற தேவையான நற்சிந்தனைகளுக்காக வேண்டுவோம். "ஆண்டவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள்" என்ற திருமுழுக்கு யோவானின் சொற்களை நெஞ்சில் நிறுத்தி நமது வாழ்வுப் பாதையில் உள்ள பேராசை, செருக்கு, ஆணவம் என்ற பாவக்கறைகளை அகற்றும் வழிகளை இனம் காண்போம். எல்லாரும் வாழ்வும் நலனும் பெற சீமோனாக, வெரோணிக்காவாக வாழ முடிவெடுப்போம்.

## முதல் நிலை

"வெளித்தோற்றத்தின் படி தீர்ப்பளியாதீர்கள். நீதியோடு தீர்ப்பளியுங்கள்" (யோவா 7:24).

## இயேசுவைச் சாவுக்குத் தீர்ப்பிடுகிறார்கள்

தீர்ப்பு - இது குற்றத்திற்கு தண்டனை கொடுக்க எழுதப்பட்ட தீர்ப்பல்ல. பொய்மை நடந்திருக்கிறது என்று உண்மை உரைக்க நிகழ்ந்த தீர்ப்பும் அல்ல. மாறாக, ஒருவரின் நன்மைத்தனத்தைப் பொறுத்துக் கொள்ள இயலா தன்னல வெறுப்பின் தீர்ப்பே. அப்படி இயேசு என்ன செய்துவிட்டார்? கலிலேய தலைமகன் இயேசுவின் பின்னால் எப்போதும் மக்கள் கூட்டம். புதுமைகள் வழி நலம் பெறவும், போதனைகள் வழி ஆறுதல் அடையவும், பகிர்ந்தளித்த உணவில் பங்கு பெற்று நிறைவடையவும் வந்தது மக்கள் கூட்டம். இக்கூட்டத்தோடுதான் இயேசு நகரைச் சுற்றி வந்தார், தன் வாழ்வை வாழ்ந்து வந்தார்.

"ஓசான்னா" பாடி அவரை அரசராக்க முயல்கிறார்கள்; துயர் எது வந்தாலும் உம்மை விட்டு பிரியமாட்டோம் என்று ஊன்றுகோலாய் நிற்கிறார்கள் சீடர்கள். போதாக்குறைக்கு எப்பக்கம் திரும்பினாலும் அவர் பேச்சுதான். யாருக்குத்தான் பொறாமை வராது? இவற்றையெல்லாம் பார்த்த யூதத்தலைவர்கள், அதிகாரம் படைத்தவர்கள், தங்களைத் தாண்டி "இவர் வளர்ந்துவிடுவானோ? இப்படியே விட்டுவிட்டால் நம் கதை என்னவாகுமோ?" என்று அச்சம் கொண்டனர். விளைவு, இயேசுவைக் கொல்லத் திட்டமிட்டு "கலகக்காரன்" எனக் குற்றம் சாட்டி பிலாத்துவின் முன் நிறுத்தினர். பிலாத்துவின் கண்களில் பதவி மகிழ்வு வருடவே கைகளைக் கழுவிக்கொண்டே சிலுவைச் சாவுக்கு இயேசுவை கையளித்துத் தீர்ப்பு எழுதுகிறான்.

### நமது தீர்ப்புகள்?

பிறரின் வளர்ச்சியைக் காண பொறுக்காமல் அவர்கள் மீது நாம் எழுதும் தீர்ப்புகள் எத்தனை, எத்தனை? எப்போதும் மற்றவர் மீது குறைகண்டு, அவர்களது பெயருக்குக் கேடு ஏற்படுத்தும் பொழுதுகள் நமது முன்னேற்றத்திற்கும் தடையாக அமைகின்றன என்கிற உணர்தல் நம்மிடம் உள்ளதா? கெட்ட செயல்களையே பரப்புரைகளாக்கி குளிர்காயும் தருணங்களால் நமது நேரம் வீணாகிறது என்கிற புரிதல் நம்மிடம் உள்ளதா? குடும்ப உறவுகளிடையே போலிக்கடிதங்கள் அல்லது குறுஞ்செய்திகள் மூலம் உறவுகளை சீர்குலைக்கிறோமா? பணம், பதவியை பயன்படுத்தி ஏழை எளியவர்களை முன்னேற விடாமல் அவர்கள் வாழ்வில் தடையாக இருக்கிறோம். சிந்திப்போம்! நம் வாழ்க்கையில் எதுவுமே நிலையானது இல்லை என்பதை உணரத் தொடங்கி விட்டால் நமக்குள் இருக்கும் ஆணவம் காணாமல் போய் விடும்.

### மன்றாடுவோம்

நிலையாமையை உணரச் செய்யும், நிறைவானதை வளரச் செய்யும் இறைவா! - ஆமென்.

## இரண்டாம் நிலை

"துயருறுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்" (மத் 5:4).

### இயேசுவின் தோள்மேல் சிலுவையைச் சுமத்துகிறார்கள்.

சுமைகள் இனிமையாவதும் சுமையாவதும் சுமத்துபவர் நோக்கில் மட்டுமல்ல, சுமப்பவர் எண்ணத்திலும் உள்ளது. சுமைகள் அற்ற வாழ்வு இல்லைதான். ஆனால் எப்படிப்பட்ட சுமைகள்? எதற்கான சுமைகள்? யாரால் சுமைகள்? என்பவைதான் சிந்திக்கப்பட வேண்டிய கேள்விகள். விடுதலை வேள்வியில் சவுக்கடிகளையும் சிறைவாழ்வையும் பட்டுணர்ந்தவர்களுக்கு சுமைகள் மகிழ்வூட்டும் அருமருந்தே! சிலுவையை சுமக்கும் இயேசுவிற்கும் சிலுவை இனிமையே! அதிகாரமும் ஆணவமும் இயேசுவைக் கொலையாளிகளிடம் ஒப்படைத்தது விட்டது.

கடவுளின் படைப்புகளில் எதையும் காயப்படுத்தா மாசற்ற இறைமாந்தன் கொலைக்களத்திற்குச் செல்கிறார். நடந்த இடமெல்லாம் நன்மையே செய்தவர், கடந்த தெருவெல்லாம் விடுதலையை விதைத்தவர், ஒட்டுமொத்த மானுடத்தின் பாவங்களை ஒன்றாகச் சுருட்டியது போல் முள்முடி தரித்துப் போகிறார். சுமைகளை என்னிடம் விட்டுவிட்டு நீங்கள் இனிதாக வாழுங்கள் என்கிற அமைதி மொழியால் ஆறுதல்கூறி விரைகிறார். சுமைதாங்கி இதோ சிலுவை சுமக்கிறார். பாவிகள் பலர் சூழ்ந்திருக்க மீட்பரின் தோளில் சிலுவை. சிலுவையைச் சுமப்பதா? மறுப்பதா? என்கிற கேள்வி ஊறுதியாக உள்ளத்திற்குள் எழுந்திருக்கும். இருப்பினும் அடையும் இறுதியிடம் எதற்காக என்கிற தெளிவு இருப்பதனால் சுமையை மகிழ்வோடு ஏற்கிறார் இயேசு.

#### நமது சிலுவைகள்?

சின்ன சின்ன செயல்களுக்கும் வருந்துவோர் ஆயிரம் பேர் நம் நடுவில் உண்டு. சிறு துன்பம்வரினும் வாழ்வே முடிந்து விட்டதாய்த் தீர்ப்பெழுதும் போக்கும் உண்டு. துன்பங்கள் பற்றிய நமது பார்வையும், துன்பங்கள் கற்பிக்கும் பாடங்களும் நமக்கு எப்பொழுதும் உறுதுணையாய் வரும். நமது துன்பங்களைச் சுமப்பதற்கான வலுவும் வேண்டும், பிறரின் துன்பங்களில் பங்கெடுக்கும் பலமும் வேண்டும். உள்ளதா? சிந்திப்போம். இல்லையெனில் நெருப்பில் புடமிடப்படும் வைரம்போல நம் வாழ்வின் துன்பங்களையும் நம்பிக்கை, குறிக்கோள், துணிவு எனும் ஊன்றுகோல்களால் தாங்கிப் பிடிப்போம். நம் வலியை நாம் உணர்ந்தால் உயிரோடு இருக்கிறோம் என்று பொருள். பிறர் வலியையும் நாம் உணர்ந்தால் மாந்தராக இருக்கின்றோம் என்று பொருள்.

#### மன்றாடுவோம்

வாழ்வின் சுமைகளைச் சுமக்கவும், பிறர்மீதான சுமைகளை இறக்கவும் நல்லெண்ணம் தாரும் இறைவா! - ஆமென்.

## மூன்றாம் நிலை

அவரே நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார் (எசா 53:5).

### இயேசு சிலுவையின் சுமையால் முதல் முறை தரையில் குப்புற விழுகிறார்

விழுதல்களுக்குப் பின்னால் பல்லாயிரம் மூலக்கூறுகள் புதைந்திருக்கின்றன. தானாகவே நிகழும் விழுதல்களைவிட எச்சரிக்கையாய் விழும் விழுதல்களே ஏராளம். இதனை நாம் பெரும்பாலும் கண்டுகொள்வதில்லை. விண்ணையும், மண்ணையும் படைத்த இறைவன் விழுகிறார் மண்ணில் விதையாய்! விழுவது எழுவதற்காய், மடிவது மலர்வதற்காய் என்று விதைகளுக்குத் தெரியும். அங்ஙனமே விழுந்தவர் எழுந்தார் நமக்கு படிப்பினையாக. விழுபவர் உறுதியாக முளைத்து எழ முடியும். எப்பொழுது? எழுவதற்கான தேவை அல்லது நோக்கம் உணரும் போது.

இயேசு தனக்கென எதுவும் இல்லை என்பதைக் காட்ட விழுந்து எழுகிறார். மண்ணாசையால் விழுந்து கிடப்பவர்களுக்கு விண்ணாசையைக் காட்டிட மடிந்து முளைக்கிறார். "என்னோடு எழுந்து நட" என்று குறிக்கோளுடைய வாழ்வுக்கு வழிகாட்ட எழுந்து நடக்கிறார். தீமைகள் மண்ணில் அழிய வேண்டும், நல்லவைகளால் வாழ்வு மலர வேண்டும் என்பதை மாந்தனுக்கு உணர்த்தவே விழுந்து எழுகிறார்.

#### விழுந்தே கிடக்கிறோமே ?

அன்றாட வாழ்வில் நாம் விழுந்து கிடக்கிறோமா? இல்லை வீழ்ந்தே கிடக்கிறோமா? பேராசை என்னும் பேரழிவிற்குள் விழுந்து கிடக்கிறோமா? பதவி மகிழ்வுணர்விற்காய் அதிகாரங்களுக்கு பின்னால் விழுந்து கிடக்கிறோமா? போதை போன்ற சிற்றின்ப ஆசைகளுக்குள் வீழ்ந்தே கிடக்கிறோமா? குடும்பப் பொறுப்புகளில் அக்கறை கொள்ளாமல் ஊதாரித்தனத்தில் விழுந்து கிடக்கிறோமா? பணவெறி மாயையில் உறவுகளை புறந்தள்ளி தனிமரமாய் விழுந்து கிடக்கிறோமா? பரந்து விரிந்த உலகில் வாழ வழியில்லை என்று விழுந்தே கிடப்பவர்கள் கண்டிப்பாக சிந்திக்க வேண்டும். முயற்சி என்னும் செயலால் பலன் பெற எழுந்து நற்பணிகள் செய்திடல் நலம்பயக்கும் தானே!

#### மன்றாடுவோம்

விழுவதிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளவும், விழுந்தே கிடப்பதிலிருந்து மீண்டும் எழவும் அருள்தாரும் இறைவா! - ஆமென்.

## நான்காம் நிலை

பால்குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளைமீது இரக்கம் காட்டாதிருப்பாளோ? (எசா 49:15)

## இயேசு தமது புனித தாயாரை சந்திக்கிறார்

மண்ணை முத்தமிட்டு எழுந்து நடந்த இயேசுவின் பாதங்களை கரடு முரடான கற்கள் கிழித்து விட இரத்தம் நிலமெல்லாம் மடைதிறந்த அணைபோல பெருக்கெடுத்து ஓடுகிறது. மகனைக் கொலையாளர்கள் இழுத்துச் செல்கிறார்கள் என்று அறிந்த தாய் ஓடோடி வருகிறாள். தாயைச் சந்தித்த மகன் ஆறுதலடைகிறார். இறைத்திட்டம் நிறைவேற "ஆகட்டும்" என்றுரைத்த அன்னை இன்று மகனின் சிதைந்த நிலை கண்டு உள்ளம் கலங்கி நிற்கிறாள். குறிக்கோளுடைய தாயல்லவா மரியாள். மகனைத் தன் பார்வையாலேயே "சென்று வா! வென்று வா மகனே!" என்று வழி அனுப்புகிறாள்.

தனக்குப்பின்னரே தன் மகன் அல்லது மகள் சாக வேண்டும் என்று நினைக்கின்ற தாய்மையின் உள்ளத்தில் எத்தகு வாள் ஊடுருவியிருக்கும். கற்பனையில் நாம் நினைப்பதற்கே துயர்நிறைந்ததாக உள்ளது. என்னே தாய்மையின் ஈகம். மகனின் துணிச்சல் ஒருபுறம் என்றால், அன்னையின் உவந்தளிப்பு மறுபுறம். உவந்தளிக்கும் அன்னையர்கள் இருக்கும் வரை குறிக்கோளுடைய பிள்ளைகள் பிறந்து கொண்டே இருப்பார்கள்.

### அர்ப்பண அன்னையர்களா நாம்?

நம் ஒவ்வொருவரின் குடும்பங்களையும் சற்று மனக்கண்முன் நிறுத்தி சிந்தித்துப் பார்ப்போம். நம் குடும்பங்களில் அன்னையர்களின் பங்கு என்ன? அவர்களுக்குரிய மதிப்பு, மாண்பு, முடிவெடுக்கும் உரிமை போன்றவை போதிய அளவிற்கு சிறப்பிடம் பெறுகிறதா? தாய்மைப் பேற்றை பெற்றிருக்கும் தாய்மார்கள் ஒவ்வொருவரும் தங்களது பிள்ளைகளின் எதிர்கால வாழ்விற்காய் எதனைக் கற்றுக் கொடுக்கிறோம்? பிள்ளைகளின் பேராசைகளால் பேரழிவுகளைச் சந்திக்கும் தாய்மார் எத்தனை பேர்? பிள்ளைகளின் நலனும் எதிர்பார்ப்புகளும் என்ற நிலையில் உறவுகளையும், குமுகாய நட்பையும் பிரிந்து வாடும் குடும்பங்கள் எத்தனை? குமுகாயப் பணிகளுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்பி வைக்கும் பெற்றோர் நம்மில் எத்தனை பேர்? குமுகாயப் பணிகளில் ஈடுபடும் பிள்ளைகளைப் பாராட்டும் பெற்றோர் நம்மில் எத்தனை பேர்?

### மன்றாடுவோம்

குறிக்கோளுடைய தாய்மார்களாக நாங்கள் வாழவும், எங்கள் பிள்ளைகளின் வாழ்வு எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமையும் பொதுவான நல்லுணர்வை எங்களில் வளர்க்கவும் வரம்தாரும் இறைவா!- ஆமென்.

## ஐந்தாம் நிலை

நீர் அளிக்கும் விடுதலை குறித்து அகமகிழ்வேன் (திபா 9:14)

### இயேசு சிலுவையை சுமப்பதற்காக சீமோன் உதவி செய்கிறார்

வீரத்தாயைச் சந்தித்த துணிச்சலில் வீரமகன் நடையைத் தொடர்கிறார். தாயைப்போல ஊக்கம்தர தன்னுடன் நடந்த சீடர்களோ, தனது புதுமைகளால் பலன் பெற்ற கூட்டமோ நிற்கிறார்களா என்று சுற்றிலும் தேடுகிறார். ஒருவரையும் காணவில்லை. வேடிக்கை பார்க்கும் கூட்டம் தான் தன்னை சுற்றி நிற்கின்றது. சிலுவையின் சுமை ஒருபுறம் இருக்க உடனிருப்போரின் பாராமுகம் இயேசுவின் உள்ளத்தை நெருடுகிறது. இந்நிலையில்தான் தளர்ந்தவர் கண்களுக்கு அறிமுகமில்லா சீமோன் தென்படுகிறார்.

சீமோன் இயேசுவை இதற்கு முன் பார்த்ததே இல்லை. இயேசுவைப் பார்த்த சீமோனுக்கு தெய்வீக அழைப்பு தெரிகிறது. அவரது எளிய மனம் இயேசுவின் சிலுவைப் பயணத்தில் பங்கெடுக்கச் செய்கிறது. தகுந்த நேரத்தில் கிடைத்த உதவியால் இயேசுவின் மனம் வலுபெற்று பயணத்தைத் தொடர்கிறது.

#### சுமக்க அணியமா நாம்?

நமது பங்களவில் செயல்படும் பணித்திட்டங்கள் வழி உதவி கேட்டு காத்திருப்போர் மனம் அழுவது நம் காதுகளில் கேட்கிறதா? பொதுநலத்திட்டங்களுக்காக உதவி கேட்டு நம் வீடுகளுக்கு வரும் ஆட்களை சொற்களால் வதைக்கிறோமே? எதற்கெடுத்தாலும் ஏழைகள் என்று யாரும் இல்லை என்று நாகூசாமல் நியாயம் கற்பிக்கிறோமா? நாம் வேடிக்கைப் பார்க்கும் கூட்டமாக இல்லாமல் நற்பணிகளை நாம் வாழும் குமுகத்தில் முன்னெடுக்கும் மாந்தர்களாக வலம் வர முயலுவோமா? "சிறியவருள் ஒருவருக்கு செய்வதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இறைவன் குரலைக் கேட்டு செயல்பட முனைவோமா?

#### மன்றாடுவோம்

அன்பு இறைவா! உம் மக்கள் நாங்கள் "கொடுப்பதில் இன்பம்" காணும் நிறைவினைத் தாரும் - ஆமென்

---

## ஆறாம் நிலை

அடுத்திருப்பாரை இகழ்தல் பாவமாகும்; ஏழைக்கு இரங்குகிறவர் இன்பம் துய்ப்பார் (நீமொ 14:21).

### இயேசுவின் திருமுகத்தை ஒரு பெண் துடைக்கிறார்

குற்றவாளியாக்கி கொலைக்களம் நோக்கி பயணித்த பரமனுக்குத் துணையாக ஒருவருமில்லை. அவரோடு உண்டு, உறங்கி, கற்றுத் தெளிந்த சீடர்கள் கூட கொலைவெறியர்களுக்கு அஞ்சி ஓடிவிட்டனர். ஆனால் வெரோணிக்கா என்ற பெண் மட்டும் துணிவோடு அவரது முகம் துடைக்கிறாள். இரத்தம் வடிந்தும், வியர்வையும், மண்ணும் படிந்து, கண்கள் ஒளியிழந்து நடந்து வந்த இயேசுவின் முகத்தை அவள் துடைத்து ஆறுதலளிக்கிறாள். கைமாறு கருதா வெரோணிக்காவின் அன்புச்செயலுக்குப் பரிசாக இயேசு தன் முகத்தை அத்துணியில் பதியவைக்கிறார். பிரதிபலன் அல்லது எதிர்பார்த்து அன்புப்பணி செய்யும் உலகில் வெரோணிக்காவின் வெள்ளை மனம் கடலைவிட பெரியதன்றோ!

### நெஞ்சுரம் வேண்டாமா?

நமது குமுகாயம் பெண்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுதல் கொடுத்து வருகிறது. படிப்பு, வேலை, பதவி, இவற்றில் பெண்கள் மிகவும் முன்னேறி வருகிறார்கள். ஆனாலும் சில நெறிகெட்ட போக்குகள் மிகவும் கண்டிக்கத்தக்கவையாக உள்ளன. படிக்கும் வயதிலிருந்தே பெண் தாழ்த்தப்பட்டவள் என்ற பார்வை மாறவில்லை. திருமணக் கொடை கொடுமையால் மாமியார் - மருமகள் கொடுமைகள் தொடர்கிறது. கருக்கலைப்பு, சிசுக்கொலை முற்றிலும் அழியவில்லை. ஆணாதிக்கம் பெண்களை மாயவலையில் மாள வைக்கிறது. பொதுப்பணி, நலப்பணிகளில் கலந்து கொள்பவர்களை புறங்கூறும் மாந்த கூட்டம் குறையவே இல்லை. இவற்றை எல்லாம் தாண்டி வீரமங்கையாக பிறந்திட மாதவம் செய்திடல் வேண்டும். அதற்கு வெரோணிக்காவின் நெஞ்சம் நமக்கும் வேண்டும்.

### மன்றாடுவோம்

தாயான இறைவா! பெண் குமுகத்திற்கு ஏற்படும் அவலநிலைகளை முற்றிலும் நாங்கள் அகற்றிடவும், பெண்கள் தங்கள் தடைகளைத் தகர்த்து பிறர் வாழ்விற்கு நல்ல விடையாகிட எமக்கு வழிகாட்டும் - ஆமென்.

---

## ஏழாம் நிலை

ஏழு முறை மட்டுமல்ல; எழுபது தடவை ஏழு முறை என நான் உனக்குச் சொல்கிறேன் (மத் 18:22).

### இயேசு சிலுவையின் சுமையால் இரண்டாம் முறை தரையில் குப்புற விழுகிறார்

கொலைவெறியர்களின் சாட்டை அடியால் உடலின் சதைகள் கிழிந்து தொங்க, முள் முடியால் தலை முழுவதும் ஓட்டை விழுந்து இரத்தம் வடிய, கல்லும் முள்ளும் குத்தியதால் பாதங்கள் புண்ணாக, உடல் முழுவதும் காயங்களின் வலி, வெயிலின் கொடூரம், பசியும் தாகமும் களைப்பை ஏற்படுத்த, கண்கள் ஒளியிழக்க, கால் தடுமாற நிலத்தில் இரண்டாம் முறை மாபரன் இயேசு விழுகிறார். பாவத்திலிருந்து, நோயிலிருந்து, பேயிலிருந்து, சாவிலிருந்து எழுந்து நடக்க வைத்தவர் இன்று மண்ணில் விழுந்து

கிடக்கிறார். அவரை அன்பால் எழுப்பி விட ஆளில்லை. கொடூரப் பேச்சாலும், சாட்டை அடியாலும் புரட்டி போடுகின்றனர். சிலுவையை மார்போடு அணைத்தவர் தன் மக்களை மீட்க குறிக்கோளோடு எழும் நம்பிக்கையில் மீண்டும் மண்ணை முத்தமிடுகிறார்.

### விழ வைப்பதிலும் விழுந்து கிடப்பதிலுமா வல்லவர்கள் நாம்

நமது வாழ்வில் நட்பின் உறவை யூதாசைப்போல் பண ஆசையால் விழ வைக்கிறோம். பட்டம், பதவி நாட்டத்தால் உலக ஆசையில் விழுந்து கிடக்கிறோம். நான், எனக்கு என்ற தன்னலப்போக்கால் பிறரை ஏற்றுக்கொள்ளாமல் தனிமையில் விழுந்து கிடக்கிறோம். கெட்ட பேச்சு, கெட்ட செயல்களால் பிறரை வாழவிடாமல் விழச் செய்கிறோம். மந்திரவாதம், பில்லி சூனியம் போன்ற மூடப்பழக்கங்களில் விழுந்து கிடக்கிறோம். சிலுவையின் மகிமையை மறந்து நாகரீக பண்பாடுகளில் மூழ்கிக் கிடக்கிறோம், விழுந்து கிடக்கிறோம் என்கிற உணர்வுநிலை உள்ளதா?

### மன்றாடுவோம்

வீழ்ச்சியிலிருந்து எழுச்சி நோக்கி பயணிக்க அழைக்கும் இறைவா! விழுந்து கிடக்கும் தோல்வியிலிருந்து எழும்பி நடக்க துணிவை தாரும் - ஆமென்

---

## எட்டாம் நிலை

"ஆறுதல் கூறுங்கள்; என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள் என்கிறார் உங்கள் கடவுள்" (எசா 40:1)

### இயேசு யூதப் பெண்களுக்கு ஆறுதல் சொல்லுகிறார்

இயேசுவோடு நட்பை வளர்த்தவர்கள், அவரது புதுமைகளில் மகிழ்ந்தவர்கள், ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வில் விடுதலைத் தர வந்த விடுதலை வீரர் என்று ஆர்ப்பரித்தவர்கள், இயேசுவின் பின்னால் அழுது கொண்டு செல்கின்றனர். இயேசு இல்லாத குமுகம் எப்படி இருக்குமோ? என்று கலங்கி அழுகிறார்கள். இளகிய மனம் அழுது தனது ஆறுதலை வெளிப்படுத்துகிறது.

### அழுகையின் கரணியம் அலசுவோம்

குடும்பங்களில் பட்டினி இருந்து பிள்ளைகளை பட்டப்படிப்பு படிக்க வைக்கும் பெற்றோர் பிள்ளைகளின் தவறானப் போக்கினால் விடும் கண்ணீர்! வரும் வருமானத்தைத் தானே செலவிடும் கணவரின் தொல்லையால் கண்ணீர் விடும் பெண்கள். விலை உயர்வால் நசுக்கப்படும் ஏழைக் குடும்பத்து மக்களின் கண்ணீர். வேலைகள் விலைக்கு விற்கப்படுவதால் படித்த ஏழை இளைஞர்கள் விடும் கண்ணீர். பேரிடர்களிலும், திடீர் இடர்களிலும் சிக்கி அவலச் சாவு ஏற்படும்போது குடும்பங்கள் நிலைகுலைந்து விடும் கண்ணீர். இக்கண்ணீருக்கான கரணியங்களை இனம் கண்டு நாம் களைய முயல வேண்டாமா?

**மன்றாடுவோம்**

ஆறுதலான அன்பு இறைவா! எம் கண்ணீரின் கரணியங்களை இனம் கண்டு அகற்றிடும் நல்லெண்ணம் தாரும் - ஆமென்

## ஒன்பதாம் நிலை

"இந்த ஏழை கூவியழைத்தான்; ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்; அவர் எல்லா நெருக்கடியினின்றும் அவனை விடுவித்துக் காத்தார்" (திபா34:6).

### இயேசு சிலுவையின் சுமையால் மூன்றாம் முறை தரையில் குப்புற விழுகிறார்

பாலைவனத்தில் உலக ஆசைகளைக் காட்டிச் சோதித்த சாத்தானை வென்று விழிப்புடன் நற்செயல்கள் செய்திடத் தன்னை அர்ப்பணித்தவர் இயேசு. காற்றுக்கும் நீருக்கும் கட்டளை இட்டவர், சட்டத்தைத் தோலுரித்துக் காட்டியவர், தீமைகளைக் கடிந்தவர், பாவத்தை வெறுக்கிறேன், பாவிகளை நேசிக்கிறேன் என்று அநீதச் செயலுக்கு குரல் கொடுத்தவர். இதோ மண்ணில் விழுந்து கிடக்கிறார். மாந்த குலத்தின் மொத்த பாவமும் அவரது தோளை அழுத்த மாந்தநேயம் மண்ணில் புரண்டது. உடம்பெல்லாம் சாட்டை அடிகளின் வலி. இரத்தமெல்லாம் வழிந்தோட மூன்றாம் முறையாய் விழுகிறார்.

**நாம் அடுத்தவர்க்குச் சுமையா ? பாலமா?**

சிலுவைப்பாதையில் ஒன்றித்திருக்கும் நாம் சுமையாக, வாழும் இயேசுக்களுக்கு கொடுக்கும் சிலுவைகளை எண்ணிப் பார்ப்போம். நமது சொற்களால் வதைபடும் உயிர்கள் எத்தனை? திரும்ப திரும்ப ஒருவருடைய தவறைச் சுட்டிக்காட்டி குடும்பங்களில் உறவை முறித்து வைப்போர் நம்மில் எத்தனை பேர்? தன்னலம் என்ற சுவற்றினால் பிறர் துன்பம் பார்க்கத் தவறும் நாமும் இயேசுவின் பாதையில் தடைக்கற்கள் தான். சூழ்நிலைக் கைதிகளாக திருமணம் ஆகாமல் வாழ்வைக் கழிக்கும் அப்பாவி பெண்களின் இழிநிலை, இளம் வயதில் கணவனை இழந்த கைம்பெண்களின் வாழ்க்கை நிலை இவற்றை நாம் சரிசெய்ய தவறும்போது இயேசுவின் குறிக்கோளுடையப் பாதையில் சோதனையாளர்களாக வாழ்கிறோம் என்பதை இனியாவது உணர்வோமா?

**மன்றாடுவோம்**

மாந்த வாழ்விற்காக சுமை சுமந்த இயேசுவே! எங்கள் குமுகாயச் சூழலை உணர்ந்து எல்லாரும் இறைச்சாயல் என்ற எண்ணத்துடன் பிறர் நலத்தில் விழிப்போடு வாழ உதவி புரியும் - ஆமென்

## பத்தாம் நிலை

"உடல் பரத்தமைக்கு அல்ல; ஆண்டவருக்கே உரியது. ஆண்டவரும் உடலுக்கே உரியவர்" (1கொரி 6:13).

### இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

பூமியைப் புல்லினால் உடுத்தி அழகு பார்த்தவர், பறவைகளைப் பலவிதமாய் உடுத்தியவர், இதோ ஆடையின்றி நிற்கிறார். கொடிய மனம் கொண்ட கொலை வெறியவர்கள் இயேசுவின் புண்ணான காயங்களை மீண்டும் புண்ணாக்குகிறார்கள். உடலோடு ஒட்டிப்போன ஆடையை உரித்து எடுக்கிறார்கள். 33 வயதான இளைஞர் ஆடையின்றி பொலிவிழந்து, அழகிழந்து நிற்கிறார். யாருக்காக இந்நிலை? மானிடரை முழு மாந்தனாக மாற்ற வந்தவர் ஆடையின்றி நிற்கிறார். தனக்கென்று ஒரு முழத் துணிகூட இல்லை என்று மெய்ப்பித்த அவர் நம்மிடம் கேட்பதென்ன?

**உடை நமக்கு தடையா?**

இன்று ஆடை அரசியலுக்கு இங்கு பஞ்சமில்லை. வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டிய இந்தியா இன்று மதவெறி சாயத்தில் ஆடையற்று நிற்கிறது. ஆள்பாதி, ஆடை பாதி என்பதைப் படிக்கும் நாம் பாதீ ஆடையுடன் அலைகிறோமே? அடுத்தவரின் கமுக்கமான வாழ்வை சந்திச் சிரிக்க வைக்கிறோமே? விளம்பர ஆடையெல்லாம் வீட்டில் வரவேண்டும் என்று விபரீத ஆசைப்படுகிறோமே? ஆபாச உடைதான் அழகு என்று நாகரீக வாழ்க்கை வாழ்கிறோமே? ஒட்டைத் துணியில் உடம்பை மறைக்க நினைக்கும் அபலையை அவமதிக்கிறோமே. துண்டுத் துணியோடு அலையும் மனநோயாளிகளை ஏளனம் செய்கிறோமே' அப்போதெல்லாம் நாமும் அனைத்துலக அரசரை ஆடையின்றி நிற்க வைக்கிறோம் என்று மனம் வருந்துவோம்.

**மன்றாடுவோம்**

படைப்பின் பரம்பொருளே! தூய ஆவியின் இல்லிடமான எமது உடலைப் தூய்மையாய் பேணிப் பாதுகாக்க வேண்டிய அருளாற்றலை எங்களுக்குத் தாரும் - ஆமென்.

---

## பதினொன்றாம் நிலை

ஒருவர் ஆதரவின்றி இருக்கிறாரென்று அவரை நீதிமன்றத்தில் சிறுமைப்படுத்தாதே; ஏனெனில் ஆண்டவர் அவர்களுக்காக வாதாடுவார் (நீமொ 22:22-23).

### இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்

அற்புதங்கள் செய்தவர் அல்லவா? இப்படி எல்லாம் நிகழாது, ஏதாவது புதுமை நடக்கும் என்ற ஆசையில் நின்றவர்களின் காதுகளில் ஆணி

அறையப்படும் ஒலி கேட்கிறது. ஊர் ஊராய் சுற்றி வந்தவர், பாவிகளையும், ஒடுக்கப்பட்டோரையும் தேடி மீட்க வந்தவரின் கால்களுக்கு ஆணி. சிறு குழந்தைகளை அரவணைத்தவர், இறந்தவர்களை உயிர்ப்பித்தவர், அப்பம் பிட்டு பங்கிட்டவர், தந்தையின் தொழிலில் உதவிக்காக தச்சு வேலை செய்தவர், அவரின் கைகளுக்கு ஆணி. மூன்று ஆணிகளுக்குள் முடக்கிவிடுகின்றனர் இயேசுவை. நற்செய்தியின் தலைவருக்குக் கிடைத்த பாராட்டும் பரிசும் மூன்று ஆணிகள். அவர் சுமந்து வந்த சிலுவை அவரைச் சுமக்க மூன்று ஆணிகள். விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில் குற்றுயிராகத் தொங்கும் இயேசு நம்மைப் பார்த்து கேட்கிறார். நானாக வாழும் நீங்கள் என் வலிக்கு மருந்தாக நன்மை செய்வீர்களா? என்று.

### நாமும் அறைகிறோம் ?

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இயேசு சிலுவையில் அறையப்பட்டதை நினைத்து கண்ணீர் விடும் நாம் நமது வாழ்க்கையில் தொடரும் துன்பங்களைக் கண்டு என்ன செய்து கொண்டிருக்கிறோம்? குமுகாயத் தீமைகளை ஒழிக்க குரல் கொடுக்க மறுத்து வீட்டிற்குள் முடங்கும்போது, சோம்பேறியாக சுற்றித் திரிந்து பெற்றோருக்கு மனவருத்தம் கொடுக்கும் போது, நன்மைகள் செய்ய வாய்ப்புகள் இருந்தும் ஊர்வம்பு நமக்கேன் என்று ஒதுங்கும் போது, ஆதரவற்ற ஏழைகள் துன்புறுத்தப்படும் கோர நிகழ்ச்சியைப் பார்த்தும் பரிந்து பேச முன்வராத போது... நாமும் இயேசுவை சிலுவையில் அறைகிறோம். அப்படித்தானே?

### மன்றாடுவோம்

நன்மையே செய்த அன்பு இறைவா! எங்களிடம் உள்ள கெட்ட குணங்களை நீக்கி நற்செயல்களால் உமது அரசில் பங்கேற்க பாதை காட்டும் - ஆமென்.

---

## பன்னிரண்டாம் நிலை

"தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" (யோவா 15:13).

### இயேசு சிலுவையில் இறக்கிறார்

அன்புக் காவியம், அழகிய ஓவியம், புன்னகைப் பேச்சின்றி, மூச்சின்றி மூன்று ஆணிகளின் பரிசோடு தொங்கிக் கொண்டிருக்கிறார். தந்தையின் திட்டத்தை நிறைவேற்றிய மகிழ்வில் தன் பணிவாழ்வை நிறைவோடு முடிக்கிறார். தாகத்திற்குக் கூட தண்ணீர் கொடுக்காத கொலைவெறியர்கள் அவரைக் கொன்றுவிட்ட மமதையில் கொக்கரிக்கின்றனர். "வாழ்விற்கு அழிவில்லை" என்பதை அறியாத அகந்தைக் கூட்டம் அறைகூவல் கூவுகிறது. மாந்தனின் வாழ்வின் காலம் 70, 80 என்றிருக்க 33 வயது இளம் மலர் கருகிச் சிலுவையில் தொங்குகிறது. இக்கொடூர, அநீதக் கொலையைச் செய்தது நானும் நீங்களும் என்பதை உணர்கிறோமா?

### கொலையாளிகளா நாம்?

பசி தாகம், அறிவு தாகம், செப தாகம், நீதிக்கான தாகம், ஏழையின் வாழ்வு தாகம், இல்லாமை தாகம், அரவணைப்பில் தாகம், உறவு தாகம், பிரிவால் தாகம் இவ்வாறாக தாகங்களினால் உலகம் நாவறண்டு கிடக்கிறது. உனக்கு இல்லை என்று நினைக்காதே. உன்னைவிட ஏழை நம் தெருக்களில் புழுதியின் நடுவே வாழ்கின்றனர். நாற்றம் என்று ஒதுங்கிப் போகும் இடங்களையே இருப்பிடமாகக் கொண்டவர் இன்று ஏராளம். இவர்களைக் கண்டும் காணாமல் வாழ்கிறோமே... அப்படியெனில் நாம்தான் கொலையாளிகள். இயேசுவின் சாயலில் எத்தனை எத்தனை பேர் இன்று மனநோயாளிகளாய், கைவிடப்பட்டவர்களாய் தெருக்களில் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வாழ்வு ஏற்றம் பெற பாதை அமைக்கத் தவறும் தருணங்களில் நாமே அவர்களை கொன்றவர்களாகி விடுகிறோம் என்பதனை மறவோம்.

### மன்றாடுவோம்

தாகம் என்றே கூவி உயிர்விட்ட இயேசுவே! எம்மில் வாழும் நலிந்தவர் எழுப்பும் துயரக் குரல்களுக்கு செவிமடுத்து செயல்படும் இதயம் தாரும் - ஆமென்.

---

## பதிமூன்றாம் நிலை

"பால் குடிக்கும் தன் மகவைத் தாய் மறப்பாளோ? கருத்தாங்கினவள் தன் பிள்ளை மீது இரக்கம் காட்டாதிருப்பாளோ?" (எசா 49:15).

### இறந்த இயேசுவை அவர் தாயார் மடியில் வளர்த்துகிறார்கள்

சிலுவையிலிருந்து இறக்கிய உயிரற்ற இயேசுவின் உடல் அன்னை மரியாளின் மடியில் வைக்கப்படுகிறது. சொல்லாய் இருந்த கடவுளின் மகனை உள்ளத்தில் ஏற்றவள், கருவாகத் திருமகனை கருவறையில் தாங்கியவள், பாலனாய் வளர்ந்த அழகு ஓவியத்தைக் கைகளில் ஏந்தியவள், 33 வயது இளைஞனை உயிரற்ற உடலாய் மடியில் தாங்குகிறாள். கலங்காத உள்ளமும் கலங்குமே, அவரது உடலைத் தடவிக் கொடுக்கிறாள் அன்னை. சுருண்ட தலைமுடிகள் முழுக்க இரத்தக்கறை, ஆறுதலளித்தக் கைகளில் ஆணி தந்த புண், பாவிகளுக்காக ஊர் ஊராய் நடந்த கால்கள் அசைவற்றுக் கிடக்க "நானே வாழ்வு" என்றவர் உயிர் மூச்சற்ற உடலாய் தாயின் மடியில். நானும் நீங்களும் அக்கண்ணீரின் உயிர்ப்புகள் தானே. நாம் என்ன ஆறுதல் கொடுக்கப் போகிறோம்?

### சுமைதாங்கிகள் ஆகுவோம்

நீதிமன்றம் கூட நீதித்தேவதையாய் பெண்ணைத்தான் வைத்துள்ளது. மன்னிப்பு என்ற சொல்லும் செயலும் பெண்ணிடம் தான் உள்ளது. தன் பிள்ளை செய்யும் ஒவ்வொரு தவறின் போதும் கண்ணீர் விட்டு அழுவது தாய்தான். இரத்தத்தைப் பாலாக்கி ஊட்டும் போதும், தத்தி தத்தி மகன் நடக்கும் போதும் அக்களிப்பதும் அன்னை தான். அந்த அன்னையை

"அம்மா" என்றழைக்கவே தயங்கும் பிள்ளைகளும் குமுகாயத்தில் இருக்கத்தானே செய்கிறார்கள். மாறுவோம், மாற்றுவோம், அன்னையை மேன்மைப்படுத்துவோம்.

**மன்றாடுவோம்**

அம்மை அப்பனே இறைவா! பூவுலகில் நடமாடும் தெய்வம் தான் அன்னை என்பதனை உணர்ந்து அன்னையரை மதிக்கும் மனம் தாரும் - ஆமென்.

---

## பதினான்காம் நிலை

"மண்ணிலிருந்து வந்ததெல்லாம் மண்ணுக்கே திரும்பும்" (சீரா 41:10).

### 14. இயேசுவைக் கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.

இயேசு பிறந்ததே இரவல் மாட்டிடைக் குடிலில் தான். இறுதி முடிவும் இரவல் கல்லறையில்தான். ஒட்டியே வாழ்ந்த நண்பரெல்லாம் ஓடி ஒழிய தனது பயணத்தில் பங்கெடுத்தவன் அயலானான சீமோன். தனது உடலோடு ஒட்டிய ஆடைகள் உரியப்பட்டு எறியும்போது அமைதியானார். அன்பென்னும் ஆடையை அணிந்ததால். உலகைப் படைத்து புல்பூண்டுகளால் அழகு செய்து பார்த்தவர் தன் உடம்பு வெறுமையாக்கப்பட்ட போதும் நமக்கு கூறுவதென்ன? வெரோணிக்காளின் துணியில் தனது சாயலைப் பதித்தபோது நமக்கு கூறுவதென்ன? மகனே! மகளே! பிறர் வாழ்வு பெற விரும்பினால் நீ எல்லா நன்மைகளும் செய்யலாம். ஏன், உன்னையும் நீ இழக்கலாம்.

**இழக்க அணியமா நாம்?**

பேராசை என்னும் பேய்க்குணத்தால் பொறாமை என்னும் பெரும்பாவம் நம்முள் வளர்ந்துள்ளது. எதுவும் எனக்கு வேண்டும். நான், என் பிள்ளைகள், என் உரிமைகள் என்ற தன்னலப்போக்கு மலிந்து காணப்படுகிறது. பிறர் முன்னேற்றத்தில் பொறாமை கொள்ளும் நாம், பிறர் வளர்ச்சிக்கு களம் கற்பிக்க முனையும் நாம் இயேசுவின் இறப்பை நினைத்துக் கண்ணீர் விடுகிறோம். இது வெளிவேடத்தனம், பரிசேயத்தனம். இனி நாம் அழ வேண்டியது வாழும் இயேசுக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு. அவற்றை அகற்ற வெகுண்டெழ வேண்டிய தருணங்களை திடமாய்த் திட்டமிடுவோம். இயேசு இறக்கவில்லை. உயிர்த்தார். நம்மில், நம் வழியாய் இன்றும் என்றும் வாழ்கிறார். அதற்கு நம்மையே கோதுமை மணியாய் இழக்க அணியமா?

**மன்றாடுவோம்**

அன்பே உருவான இறைவா! நாங்கள் உம்மோடு பயணிக்க உமது குறிக்கோள்களை கடைப்பிடிப்பதே சிறந்த வழி என்பதனை உணர்ந்து வாழும் அருள் தாரும் - ஆமென்.



குடும்ப உறவை வளப்படுத்தும்

# சிலுவைப் பாதை

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்!
குடும்பம் ஒரு கோயில்!
வான்வீட்டிற்குச் செல்வதற்கான பயிற்சி நிலையமே குடும்பம்.
மகிழ்ச்சியின் பிறப்பிடம் குடும்பம்.

குடும்ப உறவுகளில் இன்று பல்வேறு சிக்கல்களை சந்தித்துக் கொண்டிருக்கிறோம். உடைந்த கண்ணாடியைப் போல் குடும்ப உறவை சீர்ப்படுத்த முடியாமல் இருக்கிறோம். வாழ்வின் அடிஓசை குடும்பம். அத்தகைய அடிஓசையாகிய குடும்பத்தைச் சீர்ப்படுத்தாமல் சிலுவைப் பாதையை ஒரு சடங்காக, வாடிக்கையாக, வேடிக்கையாகச் செய்வதில் பொருளில்லை. பாதை நம் குடும்ப உறவை சீர்ப்படுத்துவதற்கான தகுந்த காலமாகவும் நேரமாகவும் உள்ளது. இதுவே தகுந்த காலம். இந்த காலத்தைப் பயன்படுத்துவோம். ஒவ்வொரு சிலுவைப்பாதை நிலையிலும் ஒவ்வொரு குடும்ப உறவைச் சரிப்படுத்த நாம் அழைக்கப்படுகிறோம். நம் உறவை இயேசுவின் பாடுகளோடு இணைத்து குடும்ப உறவை வளப்படுத்துவோம். இந்தச் சிலுவைப் பாதை நம் வாழ்வின் பயணம் ஆகட்டும். உறவுகள் சீர் படட்டும்; வாழ்வு மேம்படட்டும். பயணிப்போம்... வாருங்கள்.

## 1. தீர்ப்பிடும் குழுகாயத்தில் இயேசு

"தீர்ப்பிடாதீர்கள்; தீர்ப்புக்கு உள்ளாவீர்கள்"

### பெண்களைத் தீர்ப்பிடல்

ஒரு பெண் வேலைக்குச் சென்று சற்றுத் தாமதமாகி வந்தால் குடும்பமே அவள் மீது குற்றப் பார்வையோடு நோக்குகிறது. ஒருவேளை அவள் அங்குச் சென்று இருப்பாளோ? ஒருவேளை வேலை சீக்கிரம் முடிந்து வந்தால் யாரோடு வந்தாய்? என கேள்விக்கு மேல் கேள்வி கேட்டு குற்றப் படுத்துகிறது. அன்றாடம் சாப்பிடும் போது உணவில் அது சரியில்லை, இது சரியில்லை, உப்பு இல்லை, காரம் இல்லை என மனநிறைவோடு உண்ணாமல் குறை கூறிக் கொண்டே இருக்கின்றனர். கணவனின் உறவினர் யாரேனும் வீட்டிற்கு வந்தால் உங்க அம்மா வீட்டில் இருந்து வந்தால் மட்டும் விழுந்து விழுந்து கவனிக்கிறாய். ஆனால் என் உடன்பிறப்புகள் வந்தால் அவர்களை நன்கு கவனிப்பது இல்லை என வாழைப்பழத்திற்குள் ஊசி ஏற்றுவது போல, நாசுக்காகச் சொல்லி பெண்களைத் தீர்ப்பிடுவது நியாயமா?

அருட்தந்தை சகாய ராஜ்

### சிந்தனை

உனக்காக நான் இருக்கிறேன், கலங்காதே என்று நம்மைத் தேற்ற வந்த இயேசு, இதோ! குற்றவாளியாகத் தீர்ப்புக்கு உள்ளாகி இருக்கின்றார். ஓ! மானிடா! நீ யாரைத்தான் தீர்ப்பிடாமல் இருந்தாய்? தந்தையின் திருவுளம் நிறைவேற்ற காடு, மலை, பகல், இரவு, பாவிகள், ஏழைகள் என எதையும் பாராமல் இறையாட்சியை விதைக்க வந்தார் இயேசு. ஒவ்வொரு முறையும் நம் வீட்டில் பெண்களை அநியாயமாகத் தீர்ப்பிடும் போது நீங்களே இயேசுவைத் தீர்ப்பிடுகிறீர்கள்.

"நீங்கள் பிறரை தீர்ப்பிட துவங்கினால்
பிறரை அன்பு செய்ய உங்களுக்கு நேரம் இருக்காது"

### மன்றாடுவோம்

அன்பு இயேசுவே பெண்களைத் தீர்ப்பிடாமல் அவர்களை மதித்து நடக்க உம் அருள் தாரும். ஆமென்

## 2. தோளில் பாரமான சிலுவையுடன் இயேசு

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன்
சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்பற்றட்டும்"

### தந்தையின் சுமை

குடும்பப் பொருளாதாரத்தை மேற்கொள்ள எந்த வேலைகளையும் தயங்காமல் செய்யும் ஆண்கள் இந்த குமுகாயத்தில் வாழ்வதால் தான் பொது இடங்கள் தூய்மையாக இருக்கின்றன. வேலை கடினம் தான். ஆனால் குடும்பம் வாழ வேண்டும் என தன் துன்பத்தை யாரிடமும் சொல்லாமல் பாடுபடுகிறார்கள் ஒவ்வொரு குடும்பத் தலைவனும். மாதந்தோறும் வீட்டுத் தேவைகள், பிள்ளைகளின் படிப்பு செலவுகள், பிறந்தநாள், திருநாள் என்றால் புத்தாடைகள், அணிகலன்கள் - மலிவான விலையில் அல்ல, அதிக விலைக்கு வாங்கித் தர வேண்டும். அப்படி வாங்கித் தரவில்லை என்றால் இது கூட வாங்கித் தர முடியாதா என தந்தையை நோக்கி கேள்விக்கணைகள் குவியும். காய்க்கின்ற மரம் கல்லடி படத்தானே செய்யும் என சுமைகளைச் சுமக்கும் ஆண்கள் இன்று ஏராளம்.

### சிந்தனை

தன்னலமற்ற இயேசு தன்னந்தனியே சிலுவையைச் சுமக்க முன் வருகின்றார். எல்லாம் நமக்காக. மணிமுடி சூட வேண்டிய இயேசு, முள் முடி சூட்டி பளுவான சிலுவையைச் சுமக்க வைப்பது எந்த விதத்தில் நியாயம்? ஊரெங்கும் உண்மையை உரக்கச் சொன்னவர் உருக்குலைந்து சிலுவையை சுமக்கிறார். குடும்பப் சுமையைச் சுமக்கும் தந்தையை நாம் கேள்விக் கணைகளால் தொடுக்கும் பளுவான சுமைகள் இயேசுவுக்குக் கொடுக்கும் சிலுவைச் சுமைகளே!

### மன்றாடுவோம்

எனக்காய் சிலுவை சுமந்த இயேசுவே! குடும்ப வாழ்வில் என் தந்தைக்கு, கணவருக்கு சுமைகளைக் கொடுத்துள்ளேன். இனிமேல் சுமைகளைக் கொடுக்காமல் பக்குவமாய் வாழும் வரம் தாரும். ஆமென்.

## 3. சுமை தாங்காமல் பூமியின் பிடியில் முதல் முறை இயேசு

"தாய் உன்னை மறந்தாலும் நான் உன்னை மறக்க மாட்டேன்"

### முதியோரின் சுமை

குடும்பத்தில் ஆறேழு பிள்ளைகளைப் பெற்று வளர்த்த காலம் போய், ஒரு குழந்தை ஒரு குடும்பம் என்றான பிறகுதான், வீட்டில் உள்ள முதியவர்களைப் பார்ப்பது சிக்கலுக்கு உரியதாய் உள்ளது. வழிமரபினர் வேலை தேடி வெளியூர்களுக்குச் சென்றுவிட்ட பிறகு, தன்னுடன் பேசக்கூட ஆளின்றித் தவிக்கும் முதியோர்கள், சாவு எப்போது வரும் என்று நாட்களை எண்ணுகின்றனர். காற்று, மழை, வெயில், பட்டினி என்று பாராமல் பிள்ளைகளுக்காக உழைத்தார்கள். இன்று பிள்ளைகள், முதியோரைத் தொல்லைகள் என்று முதியோர் இல்லங்களுக்கு அனுப்பி விடுகின்றார்கள். மகிழ்வான வாழ்வை விரும்பி, பெற்றோர் வேண்டாம், அவர்கள் சேர்த்து வைத்த சொத்துகள் மட்டும் வேண்டும் என பெற்றவர்களை ஓரம்கட்டுகின்றார்கள். முதியோர் இல்லத்தில் தன் இறுதி நாட்களைக் கண்ணீரோடும், சுமையோடும் உறவுகளால் கைவிடப்பட்ட நிலையை எண்ணி இன்னும் பல ஆண்டுகள் வாழ வேண்டிய சூழலில் மனமுடைந்து குறைந்த ஆண்டுகளிலேயே சாவை எதிர் கொள்கின்றார்கள்.

### சிந்தனை

உங்களை நான் திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்ற இயேசு சுமை தாங்காமல் முதல் முறை கீழே விழுகிறார். அன்பு கட்டளையை தந்தவர், அன்பாய் வாழ சொல்லியவர், யூதரின் அன்பின் முத்தத்தால் காட்டிக் கொடுக்கப்பட்டு, அன்பு செய்ததற்காக சுமை தாங்க சிலுவையை சுமந்து நிலை தடுமாறி விழுகிறார். அன்பு அனைத்தையும் தாங்கிக் கொள்ளும் என்பதை அறிந்தவராய் மீண்டும் எழுந்து பயணிக்கிறார். பெற்றோரின் அன்பைச் சுமையாய்க் கருதி முதியோர் இல்லத்துக்கு அனுப்பும் போதெல்லாம் இயேசு சுமை தாங்காமல் கீழே விழுந்து கொண்டே இருக்கிறார்.

வேர்களை மறந்த விழுதுகள் என்றில்லாமல்
முதுமையைப் போற்றுவோம் முதியோர் இல்லங்களை தவிர்ப்போம்.

### மன்றாடுவோம்

அன்பு இயேசுவே! எங்கள் குடும்பங்களில் முதியோரைச் சுமைகள் என்று கருதாமல், மதித்து, அன்பு செய்து, அவர்களோடு நாங்கள் என்றும் மகிழ்வோடு இணைந்து வாழ வரம் தாரும். ஆமென்.

# 4. அன்பின் தாய் மரியாவோடு கல்வாரி பாடுகளில் இயேசு

"தாயிருக்க அவள் தயவிருக்க
தாழ்வதில்லை நாம் வீழ்வதில்லை"

## தாய் பாசம்

நாம் பார்த்த முதல் முகம் தாயின் கருவறை
நமக்கு தலை வாரிய முதல் சீப்பு தாயின் கைகள்
நாம் படுத்து உறங்கிய முதல் மெத்தை தாயின் மடி
நாம் பேசிய முதல் சொல் அம்மா
நாம் தொழுத முதல் கடவுள் அம்மா
சொல்லில் அடங்கா காவியம், வர்ணத்தில் நிறையா படம் அம்மா.
அம்மாவை விடச் சிறந்த படைப்பு இவ்வுலகில் எதுவும் இல்லை.
தன் இரத்தத்தைப் பாலாக்கி, அழும்போது தியாகத்தின் திரு உருவாய் அன்பின் மொத்த உருவாய் இருப்பவர் அம்மா.
தன் உயிராலும், மெய்யாலும் நமக்கு உயிர் மெய் தந்த அன்னையை அன்னையர் நாளில் மட்டும் அல்லாது வாழ்நாள் முழுவதிலும் போற்ற வேண்டும்.

## சிந்தனை

ஆண்டவரின் திட்டத்தை அன்னை மரியாள் மட்டுமல்ல, அவளின் மகன் இயேசு தன்னை போல் அறிந்து செயல்படுவதையும், அதிலும் கொடூரமானச் சிலுவையை சுமக்க முடியாமல் சுமந்து வருவதையும் காண்கின்றார். இயேசு தன் தாயைக் கண்டவுடன் அம்மா நான் தந்தையின் விருப்பத்தை நீங்கள் சொன்னது போல் நிறைவேற்றியுள்ளேனா? என இரண்டு இதயங்களும் கனத்த இதயத்தோடு பேசிக் கொள்கின்றன. அன்னை மரியும் வீரத்தாய். மகனே, நான் உன்னோடு இருக்கிறேன். நீ இதுவரை மிகச் சிறப்பாக தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினாய். நீ செல்ல வேண்டிய தூரம் இதோ பார். உன் கண் எதிரில் தான் உள்ளது. ஆனால் உன் உடலில் வலுவில்லை. நீ கலங்காதே. என அன்னை தன் மகனுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறார். இயேசுவோ அம்மாவின் சொல்லை விட வலிமை மிக்க, சொல் எதுவும் இல்லை என தன் பயணத்தைத் தொடர்கிறார்.

அன்னையை கவிதை மொழிகளில் வர்ணிக்கும் நாம்
நம் தாயின் சொற்களைக் கேட்கின்றோமா?

## மன்றாடுவோம்

அன்பு இயேசுவே, அன்னை மரியாளின் சொற்கள் உமக்கு இறைத்தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற ஊக்கமளித்ததுபோல என் தாயின் சொற்களை நானும் மதித்து நடக்க அருள்தாரும். ஆமென்.

# 5. சீமோனின் மாந்தநேய உணர்வில் இயேசு

"எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப் படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்."

## மாந்தநேயமிக்க தன்னார்வலர்கள்

கொரோனா கால பொது முடக்கக் காலத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவே மிகக் கடினமாக இருந்தது. ஆனால் அந்தச் சூழலில் எத்தனையோ பணம் படைத்த ஏந்து மிக்கவர்கள் கூட முன்வராத சூழலில் பெற்றோர், பெரியோர் சிலர் தங்கள் பிள்ளைகளைச் குமுகாயத்திற்கு உதவ மனமுவந்து அனுப்பினார்கள். தனக்கு நோய்த்தொற்று வந்தாலும் பரவாயில்லை என்று தன் உயிரைத் துரும்பாகக் கருதி எத்தனையோ தன்னார்வலர்கள் உயிரிழந்தவர்களின் சடலங்களை எடுக்கும் பணிகளில் ஈடுபட்டார்கள். உதவி செய்யப் படிப்பு தேவையில்லை. நல்ல மாந்தநேயம் இருந்தால் போதுமானதே. மேலும் மருத்துவர்கள், செவிலியர்கள், காவலர்கள், தூய்மைப்படுத்தும் தொழிலாளர்கள், 108 வாகன ஓட்டிகள் என இவர்கள் அனைவரும் போற்றத்தக்கவர்களே! இவர்கள் நம் குடும்பங்களில் நல்ல பெற்றோர்களால் வளர்க்கப்பட்டு களத்தில் இறங்கி உதவி செய்ததால் எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

## சிந்தனை

ஐந்து அப்பங்களைக் கொண்டு 5000 பேருக்கு உதவிய இயேசுவுக்கு இன்று உதவி தேவைப்படுகிறது. கல்வாரி அடைய இயேசுவின் உடலில் வலுவில்லை. ஆனால் நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையின் விண்மீனாய் இயேசுவின் சிலுவையைச் சுமக்க சீமோன் மாந்தநேயத்தோடு வருகிறார். சிலுவையைத் தன் தோளில் வைத்தவன் என் இயேசுவே இவ்வளவு பளுவான சிலுவையை எப்படி இவ்வளவு தொலை கடந்து வர முடிந்தது என மனதில் எண்ணி அதைப் பெரும் பேறாகக் கருதி இயேசுவோடு பயணிப்பதை நினைத்து மகிழ்கிறான். இயேசுவோ மகனே நீ செய்த உதவி என்றென்றும் மக்களால் போற்றப்படும். உன் மாந்தநேயமிக்க உதவியோ கைம்மாறு பெறாமல் போகாது என வாக்களிக்கிறார்.

மாந்தநேயமிக்கச் செயல்களை நம் குடும்பங்களிலிருந்து நாம் வளர்த்தெடுக்கும்போது அது குமுகாயத்தில் மிகப்பெரிய ஆற்றலாக உருவெடுக்கிறது. நம் உடனிருப்போருக்கு உதவும்போது நாமும் இயேசுவின் சிலுவையைச் சுமக்க உதவுகிறோம்.

## மன்றாடுவோம்

இயேசுவே, சீமோன் உமக்கு உதவியதுபோல, நாங்களும் மாந்தநேயமிக்கவர்களாக உடனே உதவும் உயர்ந்த உள்ளத்தைத் தாரும். ஆமென்.

## 6. வெரோனிக்காவின் துணியில் இயேசுவின் திருஉருவம்

"உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவரும்
கைம்மாறு பெறாமல் போகார்"

இன்றைய நம் குடும்பங்களில் மணிக்கணக்கில் அலைபேசியில், இணையதளத்தில் நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருக்கும் நம் வீட்டு இளையோர் குமுகாயம், பக்கத்துத் தெருவில் உள்ள கடையில் திடீர்த் தேவைக்கு ஒரு பொருள் வாங்கி வரச் சொன்னவுடன், எனக்கு நேரமாச்சு. என்னால இதைச் செய்ய முடியாது. ஏன் நேற்றே நீங்க வாங்கி வைத்திருக்க வேண்டியது தானே என கூறுகின்றார்கள். சுற்றுலாவில் பல ஆலயங்களுக்குச் சென்று செபிப்பார்கள். ஆனால் உள்ளூரில் நடைபெறும் வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்து கொள்ளாமல் ஆங்காங்கு அரட்டை அடித்து வழிபாடு மற்றும் கோயிலுக்கு செல்பவர்களைப் பார்த்து நகைக்கின்றார்கள். தன் பிள்ளை தப்பு செய்வதைப் பெற்றோர் கண்டிப்பதும் இல்லை. அப்படி யாரேனும் தட்டிக் கேட்டால், அவர்கள் மீதே குற்றம் சுமத்தி நீ யோக்கியனா? என எதிர்வினை தொடுக்கிறார்கள். நாம் எப்போது பிறரது துன்பங்களைத் துடைக்க முன்வருவோம்?

### சிந்தனை

மார்த்தா மரியாவின் துன்பத்தில் பங்கெடுத்த இயேசுவின் அன்பை அன்றே வெரோணிக்கா கேள்விப்பட்டிருந்தாள். இன்று இயேசு தன்னந்தனியே சிலுவையைச் சுமந்து செல்லும் பாதையில் அவரது முகம் இரத்தக் கறை படிந்து இருந்தது கண்டு யாருக்கும் பயப்படாமல் துணிந்து சென்று வெண் துணியால் முகத்தைத் துடைக்கிறார். இயேசுவோ தன் திருமுகத்தைத் துணியில் பதிக்கிறார். அன்பிற்குப் பதில் அன்பு தருகிறார். அன்பே உயர்ந்தது என்று போதித்தவர் அன்பின் வெளிப்பாட்டைத் தன் திருமுகத்தைப் பதித்ததில் வெளிப்படுத்துகிறார். நற்செயல்களை செய்ய முன்வரும் போது நாம் இயேசுவின் சிலுவை பாடுகளில் வெரோணிக்காவைப்போல் வீரத்துடன் முன்வருபவராவோம்.

### மன்றாடுவோம்

இயேசுவே! வீரப்பெண் வெரோனிக்கா போல நல்லது செய்யத் தயங்காத, உடனே வந்து உதவும் தாராள மனதைத் தாரும். ஆமென்.

## 7. சுமையினால் கீழே இரண்டாம் முறை சாயும் இயேசு

"சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லாரும் என்னிடம் வாருங்கள்"

### குடிபோதை – பெரும் சுமை

குடும்பமா? குழந்தைகளா? எனக்கு எப்போதும் வேண்டியது நல்லா குடிக்கணும் அவ்வளவுதான். நான் வேலைக்குப் போகக்கூடாது. அப்படியே போனாலும் பணத்தை வீட்டுக்குக் கொடுக்காமல் குடும்பத் தேவையை

நிறைவு செய்யாமல் நிம்மதியாக குடிக்கணும். மனைவி வேலைக்குப் போனாலும் குடிக்கப் பணம் தரணும். அப்படி இல்லையேல் வீட்டில் உள்ள பொருட்களை விற்றாவது குடிக்கணும். எப்போதும் குடி போதையில் மிதக்கணும். இப்படிப்பட்ட குடிக்கு அடிமையான ஆண்கள் நடுவில் வாழும் மனைவி மற்றும் பிள்ளைகளின் வாழ்வு அன்றாடம் சுமைதான். அந்தக் குடும்பத் தலைவிக்கு கணவன் மிகப்பெரும் சுமையே. பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட தந்தை எந்த மதிப்பீட்டைத் தர முடியும்?

### சிந்தனை

நன்மையே செய்து வந்த இயேசு சுமை தாங்காமல் சிலுவையோடு இரண்டாம் முறை தரையை முத்தமிடுகிறார். மாந்தர்கள் பாவ நிலையிலிருந்து விடுபட அரும்பாடுபட்ட இயேசு, மாந்தர்களாலேயே வீழ்த்தப்படுகின்றார். குடும்பப் பொறுப்பைச் சுமக்க வேண்டிய தந்தை குடிக்கு அடிமையாகிக் குடும்பத்தைக் கவனிக்காத போது மீண்டும் மீண்டும் இயேசுவை விழ வைக்கின்றனர். எப்போது நாம் எழுவது? இயேசுவை எழ வைப்பது?

### மன்றாடுவோம்

பேரன்புள்ள இறைவா! தந்தைக்குரிய கடமைகளை நிறைவேற்றும் பொறுப்புமிக்க குடும்ப உறுப்பினர்களாக குடும்பத் தலைவர்களாக மாற்றும் அருள்தாரும். ஆமென்

## 8. ஆறுதல் சொல்லத் துடிக்கும் பெண்கள் நடுவில் இயேசு

"இரக்கம் உடையவர் பேறுபெற்றோர்; ஏனெனில்
அவர்கள் இரக்கம் பெறுவர்."

### அருகில் வாழும் குடும்ப உறவு

குடும்பத்தோடு இணைந்து சுற்றுலா செல்லலாம் என தீர்மானித்து, பல திட்டங்கள் தீட்டி, ஆயிரக்கணக்கில் பணம் செலவழிக்கின்றனர். தன் அருகே வாழும் குடும்பத்தில் பிள்ளைகளைப் படிக்க வைக்க துன்பப்படுவதைப் பார்த்தும் பாராதது போல் இருக்கின்றனர். தன் குடும்பம், பிள்ளைகள் நன்றாக வாழ்ந்தால் போதும் என எண்ணி பகட்டான உடைகள், பகட்டாக வகை வகையான உணவை வரவழைத்து வாழ்கின்றனர். பல நேரங்களில் இவர்களது பயணம் திடீர் இடர்களில் முடிகிறது. அந்தத் துயரமான சூழலில் உறவினர்களை விட பக்கத்து வீட்டில் உள்ளோரின் உதவிக்கை தான் அதிகம் தேவைப்படுகிறது. பணத்தை விட நல்ல உறவுகளை பலர் சம்பாதிக்க தவறிவிடுகின்றனர். பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் மீது இரக்கமும் நேயமும் கொண்டு வாழும்போது, நமது துன்ப நேரத்தில் அவர்களது ஆறுதலும் உடனிருப்பும் மிகவே நமக்கு நம்பிக்கை தருகிறது.

### சிந்தனை

இயேசுவின் போதனையில் அதிகமாக ஈர்க்கப்பட்டவர்கள் பெண்கள். அக்காலத்தில் பெண்கள் சிறப்பிடம் பெறாதவர்களாக இருந்தாலும் இயேசு இருக்கும் இடங்களில் பெண்கள் கூட்டம் அதிகமாகவே இருந்தது . கல்வாரி

நோக்கி செல்லும் பாதை கல்லும், முள்ளும், கரடும், முரடுமாய் வெயிலின் கொடுமை மிகுந்து வறட்சி மிகுந்த பாதையில் இயேசுவின் மீது கொண்ட அன்பால் குழந்தைகளையும் தூக்கி கொண்டு அரசியலில் பெண்கள் பலர் வருவதைக் கண்டு என்னை நினைத்து கவலைப்படாதீர்கள். என் தாயைப் போன்று நீங்களும் உங்கள் பிள்ளைகளை வளருங்கள் என ஊக்கமூட்டுகிறார் இயேசு.

நமது குடும்ப வாழ்வில் அருகில் உள்ளவர்கள் மீது இரக்கத்தோடும் நடந்து கொள்வோம். எருசலேம் மகளிரைப் போல நமது நற்குணத்தால் இயேசுவோடு உடனிருப்போம்.

### மன்றாடுவோம்

ஆறுதலின் தெய்வமே, எங்கள் அருகில் வாழ்வோரிடம் இரக்கத்தோடு நடந்துகொள்ளும் பிறர்நலக் குணத்தை எப்போதும் எங்களுக்குத் தாரும். ஆமென்.

## 9. மூன்றாம் முறை தரையைத் தொடும் இயேசு

"உங்களில் பெரியவராக இருக்க விரும்புகிறவர்
அனைவருக்கும் தொண்டராக இருக்கட்டும்"

### நாட்டாமை / சாதிய பிரிவு

ஊரில் எங்கள் குடும்பம் தான் தலைமுறை தலைமுறையா பொறுப்புகளை ஏற்று நடத்துவோம் என்று சொல்லிவிட்டு, விழா மற்றும் சிறப்புமிக்க நாட்களில் நான் தான் எல்லாவற்றிலும் முதன்மைப் பெற வேண்டும், எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் தான் சிறப்பானதை வாசிக்க வேண்டும். நாங்கள் சொல்வதை அருள்பணியாளர், அருட்துறவியர் கேட்க வேண்டும் என்று நாட்டாமை பண்ணும் சிலர் அவர்கள் செயல்களுக்கு முன்னுரிமை கொடுப்பர். அடுத்தவர் செயலைப் புறக்கணிப்பவர் ஒரு புறம். மறுபுறமோ, ஊருக்குள் இரண்டு சாதியினர். எங்க கோயிலுக்கு உள்ளே அவர்கள் வரக்கூடாது. வந்தால் இந்த எல்லைக்குள்தான் இருக்க வேண்டும் என்று இந்த காலத்திலும் நாகரிகம் வளர்ந்த பின்னும் சாதி வெறி பிடித்து வாழும் மக்களாக வாழ்கின்றார்கள்.

### சிந்தனை

நல்ல தலைவரான இயேசு எல்லாவற்றிலும் முன்மாதிரி காட்டினார். இங்கு தீமையோ அதை உடனே எடுத்துக் கூறியதோடு அவர்கள் மனமாற்றம் பெற வேண்டும் என போதனைகள், உவமைகள், இயற்கை மூலம் எடுத்துக் காட்டினார். இயேசு மிகப்பெரிய தலைவராக வருவார் என எதிர்பார்த்த மக்களுக்கு இயேசு மூன்றாம் முறை கீழே விழுந்ததைப் பார்த்து இவர் அவ்வளவுதான். எல்லாம் முடிந்து விட்டதா என எண்ணும் சில நொடிகளில் எல்லோரின் அவ நம்பிக்கையை உடைத்து எறிந்து மீண்டுமாய் எழுந்து நடக்கிறார்.

யார் பெரியவர்? எனது சாதி உயர்ந்தது நீ தாழ்ந்தவன் என ஏற்றத்தாழ்வு எப்பொழுதெல்லாம் பார்க்கின்றாயோ, அப்பொழுதெல்லாம் இயேசுவை வீழ்த்திக்கொண்டே இருக்கின்றோம். சாதியும், பணமும் புகழும் உன்னை உயர்ந்த இடத்தில் நிறுத்துவதில்லை.

**மன்றாடுவோம்**

என்னை மீட்க வந்த இயேசுவே நான், நீ என்ற பாகுபாட்டையும், சாதிய மனப்பான்மையையும் விடுத்து, மாந்தப் பண்போடு வாழும் வரம் தாரும். ஆமென்.

## 10. ஆடைகள் உரியபட்ட நிலையில் இயேசு

"ஆடையின்றி இருந்தேன் எனக்கு ஆடை அணிவித்தீர்கள்"

**பெண்களின் உடை**

பல வீடுகளில் அதிக தொகை செலவு செய்வது உடைக்கும் நகைக்கும். அதிலும் உடுத்தும் உடை உடலை மறைக்க வேண்டும். மானத்தைக் காக்க வேண்டும். அது இல்லாமல் அதிக விலை கொடுத்து வாங்கிய உடை அலங்கோலமாக பிறரை கவரும் முறையில் இருப்பது பெண்களை இழிவுபடுத்துவதற்குச் சமம். பிள்ளைகளை நல்ல உடையை உடுத்த வைப்பது பெற்றோரின் கடமை. நீங்கள் உங்கள் பிள்ளைகள் விரும்பும் ஆடைகளை வாங்கிக் கொடுங்கள். ஆனால் அதே ஆடை மானத்தை காக்கும் முறையில் உள்ளதா என பார்த்து, பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்வது பெற்றோரின் கடமையாக வேண்டும். பிள்ளைகளின் குற்றத்திற்கு துணை போகக் கூடாது.

**சிந்தனை**

இயேசு உடுத்திய அழகிய அங்கியையும் சீட்டுப் போட்டு பங்கிட விரும்பும் கூட்டத்தில் இயேசு ஆடையின்றி அவமானப்பட்டு, இதுவும் தந்தையின் விருப்பம் என ஏற்கிறார். ஆடையை அகற்றினால் அவமானம் எனத் தெரிந்தும் அமைதி காக்கிறார். வாய் திறவா செம்மறியாடாய் நிற்கின்றார். விலை உயர்ந்த ஆடையை அரைகுறையாக உடுத்துவதை விட விலை குறைந்த ஆடையை மானம் காக்க உடுத்துவது நல்லது.

**மன்றாடுவோம்**

எனக்காக அனைத்து இழிவையும் ஏற்ற இயேசுவே எனது குடும்பத்தில் நானும் பிறரும் நல்ல ஆடைகளை எப்போதும் உடுத்த வேண்டும் என்ற மனதைத் தாரும். ஆமென்

## 11. கூரிய ஆணிகளால் இயேசு அறையப்படுதல்

"என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்"

### உடன்பிறந்தோர் உறவு

தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும். உறவுகளில் மேன்மை மிக்கதாய் போற்றப்படுவது உடன்பிறப்புகளின் உறவு. இன்று இத்தகைய உடன்பிறப்பு உறவில் விரிசல்கள் ஏற்படுகின்றன. நீதிமன்றங்களில் அன்றாட வழக்காகி விட்டது. அண்ணன், தம்பி, அக்கா, தங்கை என ஐந்து அகவையில் பாசமாய் இருந்து தனக்கென குடும்பம் குழந்தை என்று ஆனபோது பணம், சொத்து, இடம் என பகைமையை வளர்த்து அடித்துக்கொண்டு தருக்கம் முற்றி நீதிமன்றங்களுக்குச் சென்று அமைதியைத் தொலைத்து அன்பை மறந்து பகையை உருவாக்குகின்றார்கள். இந்த உறவுகளை நாம் சரிப்படுத்த வேண்டும்.

### சிந்தனை

இயேசு கூரிய ஆணிகளால் அறையப்பட்டார். அதைவிட அவர் மிகக் கொடூரமாக உணர்ந்தது இரத்த உறவுகள் சண்டையிட்டு நீதிமன்றங்களுக்குச் செல்வது தான். அன்பு முறிந்து பகைமை தலைதூக்கும் போதெல்லாம் இயேசுவை ஆணிகளால் அறைந்து கொண்டு தான் இருக்கிறோம். அன்பு அதிலும் உடன்பிறப்பு அன்பு, இரத்தத்தால் இணைக்கப்பட்ட தொப்புள் கொடி உறவு. பகைமை வேண்டாம் இனியும் பாசக் கைகளாய் மாறுவோம்.

### மன்றாடுவோம்

அன்பு இயேசுவே அன்பு செய்ய கிடைத்த வாய்ப்புகளை மறந்து வாழ்ந்த நேரங்களை மன்னியும். பணம், சொத்தில் மனதை செலுத்தாமல் அன்பு செய்து உறவை வளர்க்க அருள்தாரும். ஆமென்

## 12. இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்

"எல்லாம் நிறைவேறிற்று"

### துறவற அழைப்பு அனுப்புதல்

உங்கள் மூன்றாவது மகள் என்ன படிக்கிறாள்? கொஞ்ச நாளாவே அவளைக் காணோமே? அவளா அருட்துறவியாகப் படிக்கப் போகிறேன். எனக்குப் பணி செய்ய ஆசையா இருக்கென்று ஒரே பிடிவாதமாக இருந்தாள். அதனால் அவளை திருச்சிக்கு அனுப்பி வச்சிருக்கேன். மக்கு... திருமணம் செய்து வைக்க வக்கில்லை... துறவறத்துக்கு அனுப்பி இருக்காளா...

இந்தக் காலத்தில் துறவற பணிசெய்ய இளம்பெண்கள் போவதே மிகவும் கடினமாக இருக்கு. அப்படியே சிலர் விரும்பி போனாலும் குடும்பங்களில் குழப்பத்தை ஏற்படுத்த இது போல ஒரு சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அன்று 3,4 குழந்தைகள் இருந்தன. அதில் ஒரு பிள்ளையை இறைப்பணிக்கும் இராணுவப் பணிக்கும் அனுப்பினார்கள். ஆனால் இன்று இருப்பதே ஒன்றே ஒன்று. எப்படி இறை அழைத்தலுக்கும் நாட்டுப்பணிக்கும் உவந்தளிப்பார்கள்.

### சிந்தனை

இயேசு இறுதி மூச்சுவரை தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றி இவ்வுலகிற்கு, தான் எதற்காக வந்தாரோ அதை முழுமையாக நிறைவேற்றி, தந்தையே! உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன் எனச் சொல்லி உயிர் விடுகிறார். இயேசுவின் உவந்தளிப்பைக் காணும் நாம் நம் பிள்ளைகளை தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தூண்டுவதோடு, நாமும் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் பெற்றோர்களாக இருப்போமா?

அன்பும் உவந்தளிப்பும் ஆன்மீக வாழ்வை வளப்படுத்துகிறது.

### மன்றாடுவோம்

எனக்காய் உயிர் துறந்த இயேசுவே, உம்மைப்போல் இறைத் திருவுளத்தை உணர்ந்து வாழும் வரம் தாரும். ஆமென்

## 13. தாயின் மடியில் இயேசு

"இதோ உன் தாய்"

### பெற்றோரை ஏற்காதப் பிள்ளைகள்

இவர்கள்தான் என் அப்பா, அம்மா இன்று பல பிள்ளைகள் உடன் மாணவர்களிடமும் நண்பர்களிடமும் சொல்லத் தயங்குகிறார்கள். எல்லாவற்றிலும் அழகு, அறிவு, நல்ல நிறத்தைத் தேர்ந்தெடுத்துப் பழகிய இந்த பகட்டான வாழ்வில் பெற்றெடுத்த பெற்றோரை மதிப்பாக, உயர்வாக எதிர்பார்ப்பது இன்றைய இளையோரிடையே தவழ்ந்து வரும் அலையாகி உள்ளது. பல பெற்றோர் பிள்ளைகளுக்காக உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து, பிள்ளை கேட்பதை எல்லாம் வாங்கித் தந்தாலும் பலர் நடுவில் என் அம்மா, என் அப்பா இவர்கள்தான் எனச் சொல்ல தயக்கம் காட்டுகிறார்கள். பார்த்து பார்த்து வளர்க்கும் பெற்றோரை, தாயை உண்மையாக அன்பு செய்தால் எந்த இடத்திலும் பெற்றோரை விட்டுக்கொடுக்க முடியாது. தியாகத்தின் திருஉருவம் பெற்றோரே.

### சிந்தனை

இயேசுவின் வாழ்வில் இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி என எல்லா நிகழ்வுகளிலும் உடன் இருக்கிறார் அன்னை மரியாள். அதனால்தான் தன் தாய் தனியே இருந்து விடக்கூடாது என தன் தாயை, அன்பு சீடரிடம் ஒப்படைத்துச் செல்கிறார். இந்தத் தாயின் மடியில் இறந்த மகனைச் சுமப்பதில்

இதயம் கனத்தாலும், மகன் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றியதைக் கண்டு மகனே உன்னைப் பெற்றெடுத்ததன் பேற்றையும் நான் கண்டுவிட்டேன் என மகனை மடியில் சுமந்து சான்று பகர்கிறார்.

பெற்றோரை மதிக்கும் பிள்ளையும்
பிள்ளைகளை உயர்வாக மதிக்கும் பெற்றோரும் பேறுபெற்றோர்.

**மன்றாடுவோம்**

இயேசுவே எங்கள் தாய் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றும் பிள்ளைகளாக எங்களை மாற்றும். ஆமென்.

## 14. இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்

"யோசேப்பின் கல்லறையில் துணிகளால் சுற்றி
இயேசுவை அடக்கம் செய்தார்கள்"

குடும்ப வாழ்வில் கோபத்தை அடக்கம் செய்தால் நிம்மதி பிறக்கும். பகைமையை அடக்கம் செய்தால் நல்ல அன்பு மலரும். பொறாமையை அடக்கம் செய்தால் நல்ல உறவு மலரும்.
நம் உடலின் உறுப்புகளில் ஒன்று துன்புற்றால் உடல் முழுவதும் துன்புறுவது போல நம் குடும்பத்தில் ஒருவர் செய்யும் சிறு தவறு, துன்பம், குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் பாதிக்கிறது. நமது குடும்பம் திருக்குடும்பமாய் மாற இயேசுவோடு சிலுவைப் பாதையின் 13 நிலைகளிலும் பயணித்த நாம் வேண்டாத விரும்பாத தீய எண்ணங்களை, தீயகுணங்களை அடக்கம் செய்வோம்.

**சிந்தனை**

பூவோடு இணைந்த நாரும் மணம் பெறுவது போல இயேசுவை அடக்கம் செய்யப்பட்ட கல்லறை இயேசுவால் புனிதமாகிறது. அந்தக் கல்லறையோடு இயேசுவின் வாழ்வு மாற்றம் பெறவில்லை. அது புது விடியலைத் தர, மீட்பை தர உயிர்ப்பின் சாட்சியாய் மாற வேண்டுமெனில் நாமும் நம் குடும்பத்தில் வேண்டாத குணங்களை இயேசுவோடு அடக்கம் செய்வோம். விதை மண்ணுக்குள் இருந்து மாற்று ஒரு பெறுவதால் மரமாக கனியாக பலன் கொடுப்பது போல இயேசுவின் உயிர்ப்பு என்ற நற்செய்தியை கொடுக்க அடக்கப்பட்டார்.

தீமைகளை அடக்கம் செய்வோம்
இயேசுவோடு நன்மைகளால் நிறைப்பெற்று உயிர்த்தெழுவோம்.

**மன்றாடுவோம்**

இயேசுவே எங்கள் குடும்பங்களில் குடிகொண்டிருக்கும் தீமைகளை நாங்கள் வேரோடு புதைத்து நன்மைகளால் நிரப்பப்பட அருள்தாரும். ஆமென்

# முடிவுரை

"குடும்பங்களின் மகிழ்வே திருஅவையின் மகிழ்வு" என்கிறார் நம் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசுவின் சிலுவைப் பாடுகளேடு நமது குடும்ப உறவை எவ்வாறு பலப்படுத்தலாம், வளப்படுத்தலாம், சீர்படுத்தலாம் என அறிந்து கொண்டோம்.

சரி செய்து வாழும்போது

நம் ஒவ்வொரு குடும்பமும் பல்கலைக்கழகங்களே!
நம் குடும்பங்கள் கோயில்களே!
நம் குடும்பங்கள் மகிழ்ச்சி குடிகொள்ளும் குவலயமே!
நம் குடும்பங்கள் வான்வீட்டிற்கான பயிற்சி நிலையங்களே!
புதுப்பிப்போம் குடும்ப உறவை!
செம்மைப்படுத்துவோம் நம் குடும்ப உறவை!
வளப்படுத்துவோம் குடும்ப உறவை
பலப்படுத்துவோம் குடும்ப உறவை.

